# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான
ஏழாவது சட்டமன்றப் பேரவையின்
இரண்டாவது கூட்டத்தொடர்

1981 பிப்ரவரி 4, 5, 6, மற்றும் 7 ஆம் நாட்கள்

(தொகுதி XI-எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ்நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.
ல. [illegible] . 2]

SECRETARIAT LIBRARY

..il Nadu Legislative Assembly / ~~Council~~ Debate

1981 Vol. XI S.No 1.4

1981 XI 1.4

for LIBRARIAN.

D
Y211,31'N81
N83-113
121171

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1981 பிப்ரவரி 4, 5, 6, 7 ஆம் நாட்கள். (தொகுதி XI —எண்கள் 1 முதல் 4 வரை)

உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
| --- | --- |
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | — v |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | v—v |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்ள அகரவரிசையில்) | Vii—Kiii |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 176 |
| நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1981 | 360 |
| வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு 1981 | 430—456<br>471—498 |
| வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 176 |
| வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 286 |
| அரசினர் தீர்மானம்— | |
| பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர்கள் மீது நடவடிக்கை | 325—[illegible] |

| | பக்கங்கள் |
|---|---|
| ...க்கல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 163—164 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 121, |
| | 236—237, |
| | 361—362 |
| | 498—499 |
| முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1980-81, விவாதம் | 287—324 |
| | 327—360 |
| வி | |
| வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1—32 |
| | 123—163 |
| | 231—280 |
| | 364—400 |



## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையைப் பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன, துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சடிக்கப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப் பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறு கின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக் களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப் புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்),' 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்) ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப்பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அவை வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள
ல சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்
ள்ளது :—

| | | |
|---|---|---|
| அ. | : | அறிக்கை |
| அறிவி. | : | அறிவிப்பு |
| அ.வி. | : | அரை மணி நேர விவாதம் |
| கு.வி. | : | குறுகிய கால விவாதம் |
| பொ.வி. | : | பொது விவாதம் |
| ஆ.உ. | : | ஆளுநர் உரை |
| உ.பி. | : | உரிமைப் பிரச்சினை |
| ஒ.பி. | : | ஒழுங்குப் பிரச்சினை |
| க.ஈ. | : | கவன ஈர்ப்பு |
| க.ஈ.அ. | : | கவன ஈர்ப்பு அறிக்கை |
| ச.அ.நி. | : | சட்ட முன்வடிவின் அறிமுக நிலை |
| ச.ஆ.நி. | | சட்ட முன்வடிவின் ஆய்வுநிலை— |

இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்.

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்.

(3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம்.

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம்.

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.



| | | |
|---|---|---|
| ச.பிரி.ஆ. | : | சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்தல் |
| ச.பே. | : | சட்டமன்றப் பேரவை |
| ச.மே. | : | சட்டமன்ற மேலவை |
| த.கோ. | : | தகவல் கோரல் |
| த.வி. | : | தன்னிலை விளக்கம் |
| தீ. | : | தீர்மானம் |
| உ.தீ. | : | உரிமைத் தீர்மானம் |
| ஒ.தீ. | : | ஒத்திவைப்புத் தீர்மானம் |
| த.தீ. | : | தனித் தீர்மானம் |
| து.மா.கோ. | : | துணை மானியக் கோரிக்கை |
| மி.மா.கோ. | : | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை |
| பே.அ. | : | பேரவையின் அலுவல் |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது,பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சி பணியாளர்,மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீனளம் பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், சின்திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சினிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சிர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## Governor of Tamil Nadu

## Thiru SADIQ ALI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gram, dhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour — Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minesals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibitton excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for, Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

**பேரவைத் துணைத் தலைவர்.**

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

**குழு அலுவலர்.**

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

**சார்புச் செயலாளர்கள்.**

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

* 21-6-1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23-1-1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. .. | திருவாடானை. |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி. |
| 6 | அரங்கநாதன், திரு. மு. .. | சூனூர் (செ.வ.). |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 8 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம். |
| 9 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 11 | அன்பழகன், திரு க. .. | புரசைவாக்கம். |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி. |
| 16 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.). |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி. |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.). |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 25 | இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம். |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி. |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு). |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர். |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி. |
| 31 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.). |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம். |
| 36 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |

| | தொடர்எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. | .. | இராதாகிருஷ்ண நகர். |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | | தல்லி. |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | | ஆண்டிப்பட்டி. |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | | எழும்பூர் (செ.வ.). |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | | அம்பாசமுத்திரம். |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | | மதுராந்தகம். |
| 43 | உச்சி, திரு. கே. .. | .. | கூடலூர். |
| 44 | உத்திராபதி, திரு. பொ. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 | உமாநாத், திரு. ரா. | .. | நாகை. |
| 46 | கண்ணன், திரு. ம. | .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். | .. | சிதம்பரம். |
| 48 | கணேசன், திரு. இ. .. | .. | இடப்பாடி. |
| 49 | கணேசன், திரு. சி. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | | கிணத்துக்கடவு. |
| 51 | கந்தசாமி, திரு. பி. .. | .. | பொங்கலூர். |
| 52 | கபாலி, திரு. டி. கே. | .. | மைலாப்பூர். |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. | .. | அண்ணாநகர். |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | | பாளையங்கோட்டை. |
| 55 | கருப்பையா, திரு. இரா. | .. | குளித்தலை. |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. | .. | வால்பாறை. |
| 57 | கல்லன், திரு. கே. .. | .. | உதகமண்டலம். |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. | .. | சங்கராபுரம். |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. | .. | மங்களூர் (செ.வ.). |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | | நன்னிலம் (செ.வ.). |
| 61 | காளிமுத்து, திரு. கா. | .. | திருப்பரங்குன்றம். |
| 62 | கிட்டப்பா, திரு. என். | .. | மாயவரம். |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | | காங்கேயம். |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம்விளக்கு. |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | | ஆண்டிமடம். |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | .. | நெல்லிக்குப்பம். |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | .. | சேலம்-1. |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர். |
| 69 | குப்புசாமி, திரு. என். | .. | மொரப்பூர். |
| 70 | குப்புசாமி, திரு. கே... | .. | ஓட்டன்சத்திரம். |
| 71 | குப்புசாமி, திரு. செ. | .. | வந்தவாசி (செ.வ.). |
| 72 | குமரி அனந்தன், திரு. | .. | திருவொற்றியூர். |
| 73 | குருசாமி, திரு. ப. .. | .. | அந்தியூர் (செ.வ.). |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | | திருவரும்பூர். |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. | .. | சிங்காநல்லூர். |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | | வாணியம்பாடி. |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. | .. | உடுமலைப்பேட்டை. |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி... | | திருச்செந்தூர். |
| 79 | கோபால், திரு. சி. .. | .. | சோளிங்கர். |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | | பெரியகுளம். |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. .. | | கம்பம். |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி .. | | வலங்கை. (செ.வ.). |
| 83 | கோவேந்தன், திரு. எம். ஆர். | | பேராஊரணி. |
| 84 | கோவைத்தம்பி, திரு. | .. | பேரூர். |
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். | .. | பொன்னேரி |
| 86 | சங்கரய்யா, திரு. என். | .. | மதுரை (கிழக்கு). |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. கி. | | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. | .. | திருத்தணி. |
| 89 | சண்முகம், திரு. ஏ சி. | .. | ஆரணி. |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. | .. | கடலாடி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | | சோழவந்தான். |
| 92 | சபாபதி, திரு. சி. | .. | அரூர் (செ. வ ). |
| 93 | சமரசம், டாக்டர் சே. | .. | காவேரிப்பட்டணம். |
| 94 | சாகுல்ஹமீது, திரு. ஏ. | .. | கடையநல்லூர். |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. | .. | செங்கம். |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | | திருமங்கலம். |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. | .. | காரைக்குடி. |
| 98 | சிவசாமி, திரு. செ. | .. | இளையான்குடி. |
| 99 | சிவஞானம், திரு. ந. | .. | திருவோணம். |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சி. | | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 101 | சிவபெருமான், திரு. மு. | .. | ஓமலூர். |
| 102 | சிவராமன், திரு. எஸ். | .. | சின்னசேலம். |
| 103 | சின்னசாமி, திரு. எம். | .. | கரூர். |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. | .. | மேல்மலையனூர். |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. | | கிருஷ்ணகிரி. |
| 106 | சின்னராஜ், திரு. எம். | .. | தொண்டமுத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். | .. | குடியாத்தம். |
| 108 | சுந்தரம், திரு. ப. | .. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு. மு. .. | .. | ரிஷிவந்தியம். |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | | முகையூர். |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. | .. | திருமயம். |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | .. | விருதுநகர். |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. | .. | சிவகங்கை. |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | | போடிநாயக்கனூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 | சுவாமிநாதன், திரு. வி வி... | புவனகிரி. |
| 119 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம். |
| 121 | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 122 | செல்வராசன், திரு அ. .. | துறைமுகம். |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. .. | அரவக்குறிச்சி. |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 125 | சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர். |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 127 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர். |
| 128 | சௌந்திரராசன், திரு. கே... | திருச்சி-2. |
| 129 | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 131 | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 133 | தங்கவேலு, திரு பி. .. | செயங்கொண்டான். |
| 134 | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.). |
| 135 | தனபால், திரு ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 136 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகளத்தூர். |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 138 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 139 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 141 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 142 | திருமான், திரு. .. .. | ஏற்காடு (செ.வ.). |
| 143 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 144 | தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 145 | துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 146 | துரைமுருகன், திரு... .. | ராணிப்பேட்டை. |
| 147 | துரைராமசாமி, திரு. .. | வெள்ளக்கோயில். |
| 148 | துரைராஜ், திரு பி. .. | சங்கரநாயினார்கோவில் (செ.வ.). |
| 149 | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 150 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 151 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 152 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 153 | நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு | ஆலங்குளம் |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர். |
| 155 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 156 | நாராயணன், திரு பி. ஜி. .. | பவானி |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி. |
| 158 | நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 159 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம் | கும்பகோணம் |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 162 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 | பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 164 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 166 | பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ வ ) |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செவ.). |
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 | பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம் |
| 180 | புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 181 | பூங்காவனம், திரு. என்.ஏ. | காட்டாடி |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 183 | பெரியசாமி, திரு.ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 184 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 185 | பெருமாள், திரு.ரா.கு. .. | விளாத்திகுளம் |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 187 பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 188 பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 189 மணி, திரு. டி. .. .. | விளவங்கோடு |
| 190 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர் . |
| 191 மாணிக்கம், திரு. எம்,எஸ். | வேதாரண்யம் |
| 192 மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 193 முகமது இஸ்மாயில், திரு.பி. | பத்மநாபபுரம். |
| 194 முசிறிப்புத்தன், திரு. ம. .. | திருச்சி 11 |
| 195 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 197 முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 199 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 முனிரத்தினம், திரு. இரா.சா. | கும்மிடிபூண்டி |
| 201 முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு |
| 202 மூர்த்தி, திரு. ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 203 மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 207 ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 ராமசாமி, திரு.எஸ்.என். .. | சாத்தான்குளம் |
| 210 ராஜமாணிக்கம், திரு. எஸ்.கே. | முசிறி |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 212 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 213 (வெற்றிடம்) | |
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி |
| 215 வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 216 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 218 விஜயரெகுநாத தொண்டமான் | புதுக்கோட்டை |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 219 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 221 வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு |
| 222 வீரானம்பலம், திரு. க.வெ. .. | மேலூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம்,திரு.ப. | காஞ்சி |
| 224 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 225 வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 226 வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 227 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 228 வேலப்பன், திரு. சி.வி. .. | கபிலர் மலை |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 230 ஜான் வின்சென்ட், திரு.மு. | நாங்குனேரி |
| 231 ஜெகதீசன், ஆனூர், திரு.பு.கோ. | செங்கல்பட்டு |
| 232 ஜெயராமன், திரு.வே.இரா. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு.கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு.ஜே. .. | திருவட்டார் |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

### பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ் நாடு சட்டமன்ற பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

---

1981 பிப்ரவரி 4, 5, 6, 7 ஆம் நாட்கள். (தொகுதி XI —எண்கள் 1 முதல் 4 வரை)


பக்கங்கள்

**அ**

**அங்குசாமி, திரு. ச.—**

தொண்டி (முகவை மாவட்டம்), சுற்றுலா மையமாக்கல் 879

**அரங்கநாதன், திரு. எஸ்.—**

தருமபுரி, புதிய பேருந்து நிலையம் அமைத்தல் 150—151

அ.மா.கோ. 1980-81 (முதல்) விவாதம் 327—329

**அரங்கநாயகம், திரு. செ.—**

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) 457, 460—461, 467—468

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவனது மரணம் (ஒ.தீ.) 421—422

இணை மானியக் கோரிக்கை 1980-81 (முதல்), விவாதம் 398 299

**அரங்கராசன், திரு. வெ.—**

[illegible]ப்பூர், புறச்சாலை அமைத்தல் 390

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

**அலுவலகங்கள்—**

துணைக் கருவூலம் ஏற்படுத்துதல், சோழமாதேவி — 132—133

**அலுவலர்கள்—**

அச்சுத்துறை ஊழியர்கள், மருத்துவ விடுப்பு — 30—32

விவசாயத்துறை, துணைத் தலைவர் நியமனம் — 146—147

**அழகர்சாமி, திரு. சோ.—**

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) — 236—237

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) — 459

வெளி கொள்முதல், உற்பத்தியாளரின் பதட்ட நிலைமை (க.ஈ.) — 47, 51

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு 1981 — 431, 471—475

**அன்பழகன், திரு. க.—**

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) — 197—198, 202

உரிமைப் பிரச்சினையை மொழியும்போது விரிவாகப் பேச அனுமதித்தல் (ஒ.பி.) — 32—34, 42—46

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது (உ.பி.) — 403—405

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) — 459—460, 463, 464, [illegible]



அ—தொடர்ச்சி.

பக்கங்கள்

**அன்பழகன், திரு. கி.—**

பொது நிறுவனங்கள் குழு, தமிழ் நாடு மின்சார வாரியம் குறித்து பத்திகளின் மீதான முதலாவது அறிக்கை அளித்தல் — 430

## ஆ

**ஆண்டி அம்பலம், திரு. மெ.—**

வலையர் புனரமைப்பு, சட்டநாதன் குழு பரிந்துரை — 123—127

**ஆறுமுகம், திரு. த.—**

அரியலூர் சிமெண்ட் ஆலை, உற்பத்தியும் விநியோகமும் — 270—277

## இ

**இரங்கல் குறிப்பு—**

ஸ்ரீனிவாசன், திரு. சி., முன்னாள் உறுப்பினர் மறைவு — 363

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

குடிநீர்ப் பஞ்சம், தண்டராம்பட்டு தொகுதி தானிப்பாடி கிராமம் (க.ஈ.அ.) — 281—282

வீடு கட்டக் கடன் (க.ஈ.அ.) — 282—284, 285

வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 — 176

**இராசமாணிக்கம், திரு. இரா—**

குத்தாலம் அரசு உயர்நிலைப்பள்ளி, தேசிய மாணவர் படைப் பிரிவு நிறுத்தப்படுதல் — 261—262

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவனது மரணம் (ஒ.தீ.) — 421

## இ—தொடர்ச்சி.


பக்கங்கள்

...ராம்பாள், திருமதி தா.—
 த.மா.கோ., 1980-81 (முதல்), ... 305—309

இராசு, திரு. ஜே. எஸ்.—
 வெள்ளாற்றின் குறுக்கே பாலம் 387

இராமச்சந்திரன், திரு. ச.—
 ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 83, 84, 95, 99, 100, 104
 உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது (உ.பி.) 403—414
 ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) 461—462, 467
 த.மா.கோ., 1980-81 (முதல்), விவாதம் 298

இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—
 ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 177—237, 62—63, 85, 86, 87, 94, 95, 97, 98, 101, 102, 103, 113—121
 த.மா.கோ. 1980-81 (முதல்), விவாதம் 292
 பேரவைமுன் வைக்கப்பெறும் ஆணைகள் (ஒ.பி.) 165—166

இராமசாமி, திரு. த.—
 இராமேஸ்வரம் பகுதி, மீட்புப் பணி ஏற்படுத்துதல் 127—130

...ராமலிங்கம், திரு. எ.—
 உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 268





பக்கங்கள்

## ஒ

ஒத்திவைப்புத் தீர்மானம் பார்க்க—தலைவர்.

ஒழுங்குப் பிரச்சினை— 14—19

## க

கடன்கள்—
 கூட்டுறவு சங்கங்கள், பினாமி கடன்கள்

கணேசன், திரு. இ—
 இடைப்பாடியில் அண்ணா போக்குவரத்து பணிமனை 152—153
 இடைப்பாடி தொகுதி போடிநாயக்கன்பட்டி, மின் இணைப்பு திட்டம் 278—279
 இடைப்பாடி, பொதுப்பணித்துறை அமைத்தல் 156—157

கருணாநிதி, டாக்டர் மு.—
 ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 61—107, 181, 201, 224, 226, 228, 229, 230, 237
 உரிமைப் பிரச்சினையை மொழியும்போது விரிவாகப் பேச அனுமதித்தல் (ஒ.பி.) 32—34, 43—46, 444
 உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது (உ.பி.)
 ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) 460, 461, 463, 464, 466, 469, 471

உ—தொடர்ச்சி.

பக்கங்கள்


உத்திராபதி, திரு. பொ.—

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தல் (க.ஈ.) 170—171

லெவி கொள்முதல், உற்பத்தியாளரின் பாதிப்படைந்த நிலைமை (க.ஈ.) 47, 53

உமாநாத், திரு. ரா.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 177

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 102

ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) 464, 467, 470

பேரவை முன் வைக்கப்பெறும் அரசாணைகள் (ஒ.பி.) 165

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு 1981 453, 454

உய்விடங்கள்—

கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் மேம்படுத்துதல் 380

உரிமைப் பிரச்சினை—

பார்க்க—தலைவர்

உள்ளாட்சிகள்—

வட்டச் சத்துணவுத் திட்டம், பொனமல்லூரைச் சேர்த்தல் 150

எ

ஏடுகள்—

அவைமுன் வைக்கப் பெற்றவை 121, 238—239, 361—362.




அ—தொடர்ச்சி.

பக்கங்கள்


அய்யாமுகன், திரு. இ.—

பொது நிறுவனங்கள் குழு, தமிழ் நாடு மின்சார வாரியம் குறித்த பத்திகளின் மீதான நடவடிக்கை அறிக்கை அளித்தல் 430

ஆ

ஆண்டி அம்பலம், திரு. மெ.—

வலையர் புனரமைப்பு, சட்டநாதன் குழு பரிந்துரை 123—127

ஆறுமுகம், திரு. த.—

அரியலூர் சிமெண்ட் ஆலை, உற்பத்தியும் விநியோகமும் 270—277

இ

இரங்கல் குறிப்பு—

ஸ்ரீனிவாசன், திரு. சி., முன்னாள் உறுப்பினர் மறைவு 363

இராகவானந்தம், திரு. எஸ்.—

குடிநீர்ப் பஞ்சம், தண்டராம்பட்டு தொகுதி தானிப்பாடி கிராமம் (க.ஈ.அ.) 281—282

வீடு கட்டக் கடன் (க.ஈ.அ.) 282—284, 285

வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 176

இராசமாணிக்கம், திரு. இரா.—

குத்தாலம் அரசு உயர்நிலைப்பள்ளி, தேசிய மாணவர் படைப் பிரிவு நிறுத்தப்படுதல் 261—262

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவனது மரணம் (ஒ.பி.) 421

பக்கங்கள்

க—தொடர்ச்சி.


**கருப்பையா, திரு. இரா.—**

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தல் (க.ஈ.) 167, 169, 170

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.) 54, 56, 61

**கருப்பையா, திரு. ஏ. டி.—**

லெவி கொள்முதல், உற்பத்தியாளரின் பாதிக்கப்பட்ட நிலைமை (க.ஈ.) 47

**கலிதீர்த்தான், திரு. சோ.—**

கல்ராயன் மலை, மூங்கில் வளர்ப்பு [illegible]

**கல்விக்கூடங்கள்—**

அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான ஆய்வுக்கூட கட்டடம், சிவஞானபுரம் 261

கரூர் அரசு கலைக் கல்லூரி, இடம் குறித்து கோர்ட்டு தீர்ப்பு 262—263

குற்றாலம் அரசு உயர்நிலைப்பள்ளி, தேசிய மாணவர்படைப் பிரிவு நிறுத்தப்படுதல் 261—262

கோவை சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி, பெண்களுக்கு தனிப் பள்ளி அமைத்தல் 255—257

**கவன ஈர்ப்புகள்—**

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தல் 167—173

உளுந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் சினிமா தியேட்டர் கட்டப்பெறுதல் 423—427

குடிநீர்ப் பஞ்சம், தண்டராம்பட்டு தொகுதி தானிப்பாடி கிராமம் 281—282

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் காலரா நோய் 427—429




க—தொடர்ச்சி

பக்கங்கள்


**கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.**

திருவில்லிப்புத்தூர் பகுதியில் ஆடுகள் துள்ளு வியாதியால் பாதிக்கப்பெறுவது 173—175

லெவி கொள்முதல், உற்பத்தியாளரின் பாதிக்கப்பட்ட நிலைமை 47—54

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை 54—61

வீடு கட்டக் கடன் 282—285

**காட்டு வளம்—**

கல்ராயன்மலை, மூங்கில் வளர்ப்பு 381—382

**கால்நடைகள்—**

திருவில்லிப்புத்தூர் பகுதியில் ஆடுகள் துள்ளு வியாதியால் பாதிக்கப்பெறுவது (க.ஈ.) 173—175

**காவல்—**

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தல் (க.ஈ.) 167—173

சிலைத் திருட்டு, தடுக்க நடவடிக்கைகள் 133—135

பூம்பாறை கோவிலில் சிலைத் திருட்டு, கொடைக்கானல் 135—137

**காளிமுத்து, திரு. கா.—**

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 286

**கிட்டப்பா, திரு. என்.—**

வீடு கட்டக் கடன் (க.ஈ.) 28[illegible], 284, 285

பக்கங்கள்

க—தொடர்ச்சி


கிருஷ்ணன், திரு. ரா.—

லெவி கொள்கை, [illegible] அரிசி கொடக்காமை (க.ஈ.) 54, 59—60

திருநெல்வேலி மாவட்டம், விவசாயப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஊதியம் 145—146

கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—

து.மா.கோ. 1980-81 (முதல்), விவாதம் 354—356

குடிநீர்—

அபிவிருத்தித் திட்டம், ஆரணி 26

இரைமீன் துறை—நீரோடி பகுதிகளுக்கு திட்டங்கள் 264—265

கலவை பிர்க்காவில் திட்டங்கள் 266

காளப்ப நாயக்கன்பட்டி, சேந்தமங்கலம் திட்டங்கள் 268

குடிநீர்ப் பஞ்சம், தண்டராம்பட்டு தொகுதி தானிப்பாடி கிராமம் (க.ஈ.) 281—282

கூட்டுக் குடிநீர்த் திட்டம், கோபி 21—22

திட்டம் நிறுத்தப்பெறுதல், பேரூரியம்மனூர் 391—393

பற்றாக்குறை, திண்டுக்கல் 19—20

குப்புசாமி, திரு. கே.—

துணை மானியக் கோரிக்கை, 1980-81 (முதல்), விவாதம் 300—305

குப்புசாமி, திரு. செ.—

சுகநதியின் குறுக்கே அணை, வந்தவாசி தொகுதி 269—270

துணை மானியக் கோரிக்கை, 1980-81 (முதல்), விவாதம் 334—336

குமரி அனந்தன், திரு.—

காவிரி நீர், புதிய மின் உற்பத்தி நிலையங்கள் 279—280




பக்கங்கள்

க—தொடர்ச்சி


குழந்தைவேலு, திரு. ப.—

உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது (உ.பி.) 409—411, 412, 413

குழுக்கள்—

பொதுக் கணக்குக் குழு—

பொதுக் கணக்குக் குழு, 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த இரண்டாவது அறிக்கை அளித்தல் 175

பொது நிறுவனங்கள் குழு, தமிழ்நாடு மின்சார வாரியம் குறித்த பகுதியின் மீதான முதலாவது அறிக்கை அளித்தல் 430

கூட்டுறவு—

சங்கங்கள், பினாமி கடன்கள் 14—19

கோபாலகிருஷ்ணன், திரு. கா.—

குண்டாம்பச்சி ஆற்றின் குறுக்கே அணை, கொடைக்கானல் வட்டம் 268—269

பூம்பாறை கோவிலில் சிலைத் திருட்டு 135—137

கோபாலன், திரு. ஆர். டி.—

லோயர் கேம்ப்—குமுளி சாலை, மேம்படுத்தல் 151—152

கோமதி சீனிவாசன், திருமதி—

கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 19[illegible] 176

திருவில்லிப்புத்தூர் பகுதியில் அம்மை நோய் வியாதியால் பாதிக்கப் பெறுவது (க.ஈ.அ.) 173—1[illegible],

சட்ட முன்வடிவுகள்—

கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்) சட்ட முன்வடிவு 1981 (ச.அ.நி.) 176

நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) (ச.அ.நி.) 30…

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981 (ச.ஆ.நி.) 430—4…

ச.பிரி.ஆ., நிறைவேற்றுதல் 471—4…

490—4…

வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.நி.) 176

வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ச.அ.) 186

சமூக நலன்—

அனாதைக் குழந்தைகள், ஆண்டு வருமான வரம்பு சான்றிதழ் 157—159

அனாதைக் குழந்தைகள் இல்லம், விவரம் 159—161

சாலைகள்—

புறச்சாலை அமைத்தல், துறையூர் 390—391

லோயர் கேம்ப்—குமுளி சாலை, மேம்படுத்தல் 151—153

ஐங்கால்பட்டி சாலைப்பணி, நிலக்கோட்டைத் தொகுதி 147—149

சிமெண்ட்—

அரியலூர் ஆலை, உற்பத்தியும் விநியோகமும் 370—377

தொழிற்சாலை அமைத்தல், வேடசந்தூர் தாலுகா 1—4

சுற்றுலா—

பூம்புகார் சுற்றுலா விடுதி, பயன்படுத்தல் 137—139

கொண்டி (முகவை மாவட்டம்), சுற்றுலா மையமாக்கல் 378



ச—தொடர்ச்சி.

சங்கரய்யா, திரு. என்.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 234, 236

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) 458, 461, 466, 468

சட்ட முன்வடிவுக்கான விளக்கங்கள் தமிழில் அளிக்க வேண்டுதல் (ஒ.பி.) 429—430

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981 442—448, 455

சண்முகம், திரு. ஏ. சி.—

ஆரணி, குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 91

சமரசம், டாக்டர் கே.—

திரு. ரகுமான்கான் மீது (உ.பி.) 32—34, 42—46

சாகுல் ஹமீது, திரு. ஏ.—

கடையநல்லூர் நூற்பாலை, சாயத் தொழிற்சாலை தொடங்குதல் 155—156

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981 479—480

சி

சித்தன், திரு. என். எஸ். வி.—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (ஒ.பி.) 400

எட்டையபுரம், பாரதி மணி மண்டபத்தை அழகுபடுத்தல் 139—142

திண்டுக்கல், குடிநீர் பற்றாக்குறை 19—20

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சித்தன், திரு. என். எஸ். வி.—தொடர்ச்சி.

பொதுக் கணக்குக் குழு, 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டு களுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த இரண்டாவது அறிக்கை அளித்தல் 17[illegible]

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.) 54, 57

சிவசாமி, திரு. செ.—

இராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு வீடுகள் 130—132

இராமேஸ்வரம் பயணியர் விடுதிகளை விஸ்தரித்தல் 378

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தல் (க.ஈ.) 172

சிவராமன், திரு. எஸ்.—

உளுந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் சினிமா தியேட்டர் கட்டப் பெறுதல் (க.ஈ.) 423, 426

சின்னசேலம் பகுதி, குளுக்கோஸ் தொழிற்சாலை 29

விவசாயத் துறை, துணைத் தலைவர் நியமனம் 146—147

சிவப்பிரகாசம், திரு. இ.—

காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம் குடிநீர்த் திட்டங்கள் 263

கா.மா.கோ. 1981-81 (முதல்), விவாதம் 316—318

சின்னசாமி, திரு. எம்.—

கரூர் அரசு கலைக் கல்லூரி, இடம் குறித்து கோர்ட்டு தீர்ப்பு 262—26[illegible]

சுந்தரம், திரு. கே. ஆர்.—

வட ஆற்காடு மாவட்டம், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப் பெற்றிருத்தல் [illegible]—2



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுந்தரம், திரு. ப.—

அனாதைக் குழந்தைகள், ஆண்டு வருமான வரம்பு சான்றிதழ் 157—159

சுந்தரராஜ், திரு. நா.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 214, 233—234

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (ஓ.பி.) 401

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஓ.பி.) 458, 465, 469

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. 434—438

சுப்பிரமணியன், திரு. உ.—

உளுந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் சினிமா தியேட்டர் கட்டப் பெறுதல் (க.ஈ.) 423

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.) 54

செங்கோட்டையன், திரு. கு. அ.—

கோபி, கூட்டுக் குடிநீர்த் திட்டம் 21—22

செம்மலை, திரு. செ.—

அச்சுத் துறை ஊழியர்கள், மருத்துவ விடுப்பு 30—32

சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ.—

குடகனாறு அணை, மீண்டும் கட்டும் பணி 24—27

சேதுராமன், திரு. ஏ. எம்.—

கலவை பிர்க்கா, குடிநீர்த் திட்டங்கள் 266

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சொக்கலிங்கம், திரு. கெ.—

செங்கற்பட்டு மாவட்டம், உப்புத் தொழிற்சாலை துவக்கும் திட்டம் 277

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. 481, 483—490

சௌந்திரராசன், திரு. கே.—

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.) 54

சௌரிராஜன், டாக்டர் கே.—

ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்தல் (ஒ.பி.) 172—176

த

தங்கமணி, திரு. கே. எம்.—

உளுந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் சினிமா தியேட்டர் கட்டப்பெறுதல் (க.ஈ.) 433

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவனது மரணம் (ஒ.இ.) [illegible]—480

[illegible]ல்பதி தொழிற்சாலை, திண்டிவனம் பகுதி 4



பக்கங்கள்

த—தொடர்ச்சி

தலைவர்—

அறிவிப்புகள்—

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் நியமனம் 166

அவை அலுவல் 381

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் நியமனம் 160

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசப்பெற்றமை 325

முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1980-81 (ஆ.இ.) 380

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்.

உரிமைப் பிரச்சினைகள்—

உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது—

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தனிக்கட்சி துவங்கப் போவதாக உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் கையெழுத்திட்ட சுற்றறிக்கை பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டது குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது உரிமைப் பிரச்சினை ஒன்றை 7—2—1981 ஆம் நாளன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கொண்டுவந்தார்.

இப் பிரச்சினையின் மீது எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், உள்ளாட்சித் துறை அமைச்சரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தலைவர் தம் தீர்ப்பை பின்னர் * அளிப்பதாகத் தெரிவித்தார் 403—414

* 4—3—1981 ஆம் நாளன்று தீர்ப்பளிக்கப்பெற்றது.

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

செய்தி-அறநிலையைத் துறை அமைச்சர் மீது—

29—1—1981 அன்று உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் 'ரெட்சாண்டர்ஸ்' மர ஏற்றுமதியில் முறைகேடு இருப்பதாகக் கூறி செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார்

இப் பிரச்சினை குறித்து உறுப்பினர் பேசிய பின் செய்தி அறநிலையத்துறை அமைச்சரும் விளக்கமளித்தார்.

பின்னர் 7—2—1981 ஆம் நாளன்று தலைவர் இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக உரிமை மீறல் எதுவும் நடைபெறவில்லை என்று தீர்ப்புரைத்தார்.

திரு. அ. ரகுமான்கான் மீது—

'ரெட்சாண்டர்ஸ்' மர ஏற்றுமதியில் தவறு நடைபெற்றதாக எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் 24—1—1981 அன்று சாட்டிய குற்றச்சாட்டிற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் தகுந்த விளக்கமளித்து குற்றச்சாட்டை மறுத்திருப்பதால் குற்றஞ்சாட்டிய உறுப்பினர் வேண்டுமென்றே அமைச்சர் மீது களங்கம் கற்பிக்கும் வகையிலும், பேரவையை திசை திருப்பும் வகையிலும் தவறான தகவல்களை அவைக்கு தந்து இருக்கிறார் என்றும், இது அவை மீறிய செயலாகும் என்றும் 4—2—1981 அன்று ஓர் உறுப்பினர் அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.

திரு. ரகுமான்கான் அளித்த விளக்கத்தை கேட்ட பிறகு தலைவர் தம் தீர்ப்பைப் பின்னர் * அளிப்பதாகத் தெரிவித்தார் 32—34, 42—46

---

* அன்று தீர்ப்பளிக்கப்பெற்றது.



த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவன் திரு. ஆர். சீனிவாசன் மர்மமான முறையில் இறந்தது பற்றி கல்வி அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் இசைவு மறுக்கப்பெற்றது 417—422

ஒழுங்குப் பிரச்சினைகள்—

அரசாணைகளை பேரவை முன் வைப்பதில் கால தாமதம் ஏற்படுவது குறித்து ஓர் உறுப்பினர் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது, அவையின் அடுத்தக் கூட்டத் தொடர் வரை அவற்றைக் கொடுப்பதற்கு அலுவலர்களுக்கு அவகாசம் இருக்கிறது என்று தலைவர் குறிப்புரைத்தார் 105

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சாட்டிய குற்றச்சாட்டை சம்பந்தப்பட்ட அமைச்சர் மறுத்திருப்பதால் குற்றஞ்சாட்டிய உறுப்பினரின் செயல் அவை உரிமை மீறலாகும் என்ற அடிப்படையில் உரிமைப்பிரச்சினை ஒன்றை ஆளுங்கட்சி உறுப்பினர் கொண்டுவந்து பேசினார்.

"ஓர் உறுப்பினர் அவையில் குறிப்பிட்ட சில கருத்துக்கள் அவை உரிமையை மீறிய செயலாகும்", என வேறோர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கப்படுகிறபோது அவ்வுறுப்பினர் பிரச்சினையை மட்டும் குறிப்பிடாமல், விரிவாக, விவாதமாகப் பேச தலைவர் அனுமதிப்பது சரியா என்பதாக ஒழுங்குப் பிரச்சினையொன்று எழுப்பப்பெற்றபோது தலைவர் பின் வருமாறு குறிப்புரைத்தார் :

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

" இதற்கு முன்னால் நடைபெற்ற சம்பவங்களில் உரிமைப் பிரச்சினைகளில் தனிப்பட்ட சில குற்றச்சாட்டுகள் சொல்லுகிறபோது அந்தப் பிரச்சனைகளில் அப்படிப்பட்ட விவாதங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்தவகைதான் பின்பற்றப்படுகிறதே தவிர இது புது முன்மாதிரி அல்ல ".

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது குறித்து ஆட்சேபணை எழுப்பியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

" ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிற போது அமைச்சர் பதில் சொல்வார். இதற்கிடையில் இந்தப் பிரச்சினை மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவும், சென்னையிலே நடைபெற்ற ஒரு சம்பவமாகவும் இருப்பதால் பொது நன்மையைக் கருதி இந்த அறிக்கை அளிக்க தற்போது அனுமதியளிப்பதில் தவறு இல்லை. ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவரவர் கொண்டு வருகிற பிரச்சினையில் ஆர்வம் அதிகம் இருக்கும். இன்றுள்ள சூழ்நிலையில் நாட்டில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்காக அரசு ஒரு அறிக்கை தர முன் வருமானால் அதை அனுமதிப்பது என்பது மரபாக இந்த அவையின் தலைவராக இருந்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்து இருக்கிறது. நாடாளுமன்றத்திலும் இம்மாதிரி அனுமதிக்கப்பட்டிருக்கிறது ".

கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பக் கூடாது. (வி.வி.)



பக்கங்கள்.

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப்பிரச்சினைகள்—தொடர்ச்சி.

சட்ட முன்வடிவுக்கான விளக்கங்கள் தமிழில் அளிக்கப்பட வேண்டுமென ஓர் உறுப்பினர் கோரியபோது அளிக்கப்படும் என்று தலைவர் குறிப்புரைத்தார் 131

கவன ஈர்ப்பு—

அமைச்சர் அறிக்கை அளித்த பின்னர் உறுப்பினர்கள் சுருக்கமாக கேள்விதான் கேட்க வேண்டும். (க.ஈ.) 51

குறுக்கீடுகள்—

எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது உறுப்பினர்கள் குறுக்கிடுவது வழக்கமல்ல. (ஆ.உ.) 62

குற்றச்சாட்டுகள்—

அவையிலே உறுப்பினர்களாக இல்லாதவர்களைப் பற்றிக் குறிப்பிடக் கூடாது என்பது ஏற்கெனவே ஒரு மரபாக இருந்து வருகிறது. ஏனென்றால் அவர்களுக்கு தம் மீது சுமத்தப்பெற்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பு இல்லை. (ஆ.உ.) 93, 97, 102,103

உறுப்பினர்கள் மற்றொரு உறுப்பினர் மீதோ அல்லது அமைச்சர் மீதோ குற்றம் சாட்டுவதாக இருந்தால், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கோ அல்லது அமைச்சருக்கோ முன்னதாக அறிவிப்புக் கொடுத்து விட்டுத்தான் அவையில் எழுப்ப வேண்டும் என்பது பாராளுமன்ற நடைமுறை. பாராளுமன்ற விதிகள் எவ்வாறு அவையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்றனவோ அவ்வாறே பாராளுமன்ற மரபுகளும் அவையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும். ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுவதற்கு முன்னதாகவே அதுபற்றி அறிவிப்புக் கொடுத்து,

த—தொடர்ச்சி

**தலைவர்—தொடர்ச்சி.**

*தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.*

*குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி.*

[illegible] அனுமதியுடன் [illegible] தான் எழுப்ப வேண்டுமென்று மரபு நமது அவையில் பன்முறைகள் எனக்கு முன்பிருந்த பேரவைத் தலைவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அம்முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அம்முறை கடைப்பிடிக்கப்படாததன் விளைவுதான் இம்மாதிரியான பிரச்சினைகள் வருகின்றன. எனவே, உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்கள் மீதோ அல்லது அமைச்சர்கள் மீதோ தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்ட விரும்பினால் அவர்களுக்கும், பேரவைத் தலைவருக்கும் முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டு அனுமதி அளித்தால் அதன் பின்தான் பேரவையில் எழுப்ப வேண்டுமென்று உள்ள நியதி இனிமேல் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும். (உ.பி.) 416—417

கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது, கேள்வி தான் கேட்க வேண்டும் (வி.வி.) 255

குற்றச்சாட்டை அவையில் சொல்வதற்கு முன் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுச் சொல்ல வேண்டும் (ஆ.உ.) 80

துணை வினா குற்றச்சாட்டின்றி கேட்க வேண்டும் (வி.வி.) 15

*தகவல் கோரல்—*

உறுப்பினர்கள் தாம் கொடுத்த தீர்மானங்கள் பற்றிய தகவல்களை தலைவரின் அறைக்கு வந்துதான் கேட்க வேண்டும்; அவையில் அதுபற்றி எழுப்பக் கூடாது 164

உறுப்பினரொருவர் திடீரென்று ஓர் பிரச்சினையை எழுப்ப முற்பட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :—

“ பிரச்சினைகளை திமர் திடீரென்று உறுப்பினர் கொண்டு வர முடியாது. முறையாக அவையில் அது கொண்டு வரப்படும் நேரத்தில் உறுப்பினர் பேசலாம்.”





த—தொடர்ச்சி

**தலைவர்—தொடர்ச்சி.**

*தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.*

*தகவல் கோரல்—தொடர்ச்சி.*

ஏற்கெனவே விவாதிக்கப்பட்ட உரிமைப் பிரச்சினையின் மீது தலைவர் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று ஓர் உறுப்பினர் கோரியபோது, தலைவர் அது பரிசீலனை செய்து எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்புரைத்தார் (ஓ.பி.) 402

தாம் கொடுத்திருந்த உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினைப்பற்றி ஓர் உறுப்பினர் விளக்கத் தொடங்கிய போது, தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :

“ காலையிலே உறுப்பினர் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை என் பரிசீலனையில் இருக்கிறது. இன்றைக்கே எடுத்துக்கொள்ளவும் இயலாது. என்றைக்கு என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்லவும் முடியாது. அதைப் படித்துப் பார்த்த பின்னர்தான் முடிவு செய்யப்படும் ” 164

*நடைமுறைகள்—*

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படுவதற்கு முன்னால் அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்வது முறையா என ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

“ ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது சட்ட முன்வடிவுகளை அறிமுகப்படுத்துவது முறை தான் ”. 176

த—தொடர்ச்சி

**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

**நீக்கம்—**

உள்நோக்கம் கற்பித்துச் சொல்லப் பெறுவதை அனுமதிக்க முடியாது என தீர்ப்புரைக்கப்பெற்று நீக்கப்பெற்றது. (ஆ.உ.) 91

'பொதுவான குற்றச்சாட்டுகள் அனுமதிக்கப்படுவதில்லை' என நீக்கப்பெற்றது. [illegible]

**நேரம் ஒதுக்குதல்—**

உறுப்பினர்கள் தலைவரை வற்புறுத்தி நேரம் வாங்குவது சரியல்ல. தலைவராகக் கொடுத்தால்தான் சரியாக இருக்கும். (து.மா.கோ.) [illegible]

**பார்வையாளர் மாடம்—**

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசுவதன் மூலம் ஒட்டுமொத்தமாக அவையை அவமதித்தால் எல்லோரையும் அவமதித்தது போல்தான். உறுப்பினர்கள் பரிந்து பேசுவது சரியல்ல. (அ.தி.) 226

**பேசும் முறை—**

உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டு பேசுதல் கூடாது. (து.மா.கோ.) 299

உறுப்பினர்கள் பேசும்போது சுமுகமாகப் பேச வேண்டும். (து.மா.கோ.) 298

**மரபுகள்—**

உரிமைப் பிரச்சினை பற்றி விவாதிக்கும்போது கட்சிக்கு ஒருவர்தான் பேச அனுமதி உண்டு. அந்த மரபை மாற்ற முடியாது. (உ.பி.) 400

போலீஸ் லாக்கப் மரணங்கள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மூலமாக விவாதிக்கும் மரபை மாற்றுகின்ற முறையில் போலீஸ் லாக்கப் மரணம் குறித்து நாம்





த—தொடர்ச்சி

**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

**மரபுகள்—தொடர்ச்சி.**

கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை கவன ஈர்ப்பாக மாற்றுவது சரியா என்று ஒழுங்குப் பிரச்சினை மூலம் ஓர் உறுப்பினர் வினவியபோது, அதுபற்றி உறுப்பினரின் கருத்தை எழுதிக் கொடுத்தால் பரிசீலிக்கலாம் என தலைவர் குறிப்புரைத்தார். (க.ஈ.) 285

**துணைவினாக்கள்—**

கேள்வியை சுருக்கமாகப் போட வேண்டும். (வி.வி.) 125

பிரச்சினையை விளக்கிக்கொண்டு போகக் கூடாது. கேள்வியாக சுருக்கமாகக் கேட்க வேண்டும். (வி.வி.) [illegible]

**விசாரணையில் இருக்கும் பொருள்—**

ஒரு பொருள் பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கும்போது—ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கும்போது—அதைப்பற்றி அவையில் பேசக்கூடாது. (து.மா.கோ.) 306

**விவாதம்—**

உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து பேசும்போது அவை உரிமை மீறல் என்ன என்பதை மட்டும் சொல்ல வேண்டும். (உ.பி.) 405, 407

உரிமைப் பிரச்சினை மீதான விவாதத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் விளக்கம் அளிக்கும்போது உரிமை மீறல் பிரச்சினைக்கு இடமுண்டா, இல்லையா என்பதைப் பற்றிமட்டும் பேச வேண்டும். புது குற்றச்சாட்டுகளை ஆரம்பித்தால் அது திரும்பத் திரும்ப புதுப் பிரச்சினைகளை எழுப்பும். அமைச்சருக்கு வேறு ஏதாவது குற்றச்

## த—தொடர்ச்சி


தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

சாட்டுகள் யார் மீதாவது சொல்ல வேண்டுமென்ற எண்ணமிருந்தால் அதை விதிகளின் அடிப்படையில் வேறு வகையில் இங்கே கொண்டு வரலாம். உரிமைப் பிரச்சினையில் வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசுவது சரியல்ல. (உ.பி.) 409, 411, 412, 413

உறுப்பினர்களின் பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிப்பதுபோல் பேசக் கூடாது. (து.மா.கோ.) 307

எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுகையில் சம்பந்தப் பட்ட கோப்பு ஒன்றின் நோட் பைலிலிருந்து கருத்துக் களை சுட்டிக்காட்டுவது முறையா என்றும் அந்தத் தகவல் எப்படி அவருக்குக் கிடைத்தது என்றும் ஓர் அமைச்சர் கேட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப் புரைத்தார்:

"எதிர்க்கட்சித் தலைவருக்கு அது எப்படி கிடைத்தது என்று என்னிடம் கேட்டுப் பயனில்லை. அந்தத் தகவல் எப்படிக் கிடைத்தது என்று அவர் என்னிடம் சொல்ல வேண்டியதில்லை. இரகசியம் வெளியே போகாது பார்த்துக்கொள்ள வேண்டியது அரசின் கடமை". (ஆ.உ.)

சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தின்போது குறிப் பிட்ட சட்ட முன்வடிவினைப்பற்றி மட்டும் உறுப்பினர் கள் பேச வேண்டும். வேறு பல சட்டங்களைப் பற்றி யெல்லாம் விளக்கிக்கொண்டு இருப்பதற்கு நேரமில்லை. அவை முன் இருக்கின்ற சட்ட முன்வடிவின் நோக்கத் தைப் பற்றி மட்டும் பேச வேண்டும். அதிலிருந்து டிவியேட் செய்யக் கூடாது. (ச.மு.வ.) 482—483






## த—தொடர்ச்சி


தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு பேசக் கூடாது. வேறு ஆதாரங்கள் இருந்தால் கொடுக்கலாம். (ஆ.உ.) 96, 97

விளக்கம்—

கவன ஈர்ப்பின் மீது அமைச்சரின் அறிக்கைக்குப் பின் உறுப்பினர்கள் விளக்கம் கோரும்போது கேள்வியாகக் கேட்க வேண்டும். (க.ஈ.) 426

தாமரைக்கனி, திரு. இரா.—

அண்ணா எழுதிய புத்தகங்கள், மலிவு விலையில் அரசு வெளி யிடுதல் 252—254

இராஜபாளையம் நெடுஞ்சாலைத் துறை இடத்தை குத்த கைக்கு விடுதல் 389

சிலைத் திருட்டு, தடுக்க நடவடிக்கைகள் 133—138

தஞ்சை மாவட்டம் திரு. ஆரூரான் ஆலை, கரும்பு குத்தகைக்கு நிலம் விட்டவர்களுக்கு மீண்டும் நிலம். 258—260

திருச்சிராப்பள்ளி, சர்க்கரை பதுக்கல் 269

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் காலரா நோய் (க.ஈ.) 427,428,429

திருவில்லிபுத்தூர் பகுதியில் ஆடுகள் துள்ளு வியாதியால் பாதிக்கப் பெறுவது (க.ஈ.) 173—178

திருநாவுக்கரசு, திரு. சு.—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (2) 95,96,97

உரிமைப் பிரச்சினையை மொழியும்போது விரிவாகப் பேச அனுமதித்தல் (உ.பி.) 82—84.

பக்கங்கள்

த—தொடர்ச்சி

திருவேங்கடம், திரு. பெ. க.—

சாத்தனூர் அணையில் கிடைக்கும் மீன்கள், வெளிமாநிலங்களுக்கு விற்பனை 396

பயிர்களுக்கு எலிகளால் சேதம் 363

மேல்நிலைப்பள்ளி நூலகங்கள், நூலகர்கள் நியமனம் 251—252

திட்டங்கள்—

தன்னிறைவுத் திட்டம், அமலாக்கப்படும் ஒன்றியங்கள் 399—400

தீர்மானங்கள்—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் 81—121, 177—238

ஒத்திவைப்புத் தீர்மானம்—

பார்க்க தலைவர்

(பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர் மீது நடவடிக்கை) 335

தேர்தல்கள்—

வாக்காளர் பட்டியல், 18 வயதுடையோரைச் சேர்த்தல் 161—163

துரைசாமி, திரு. பி. எஸ்.—

நி. மா. கோ., 1980—81 (முதல்), விவாதம் 339—341

துறைமுகங்கள்—

தூத்துக்குடி, விரிவுபடுத்தல் 397—398

துரைமுருகன், திரு—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் (தீ) 185,186.

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) 457,465—466,

நி. மா. கோ. 1980—81 (முதல்), விவாதம் 297—300, 347—348



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துரைமுருகன், திரு.—தொடர்ச்சி.

லெவி கொள்முதல், உற்பத்தியாளரின் பதட்ட நிலைமை (க.ஈ.) 47

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. 438—442

தொழிற்சாலைகள்—

உரத் தொழிற்சாலை, கடலூர் 4—5

குமரிமாவட்ட முந்திரி ஆலைகள், கச்சாமுந்திரி ஒதுக்கீடு, 374—377

குளுகோஸ் தொழிற்சாலை, ஆத்தூர் வட்டம் (சேலம் மாவட்டம்) 29—30

குளுகோஸ் தொழிற்சாலை, சின்னசேலம் பகுதி 29

கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர் 12

சிமெண்ட் தொழிற்சாலை, வேடசந்தூர் தாலுகா 1—4

தோல் பதனிடும் தொழிற்சாலைகள், வட ஆர்க்காடு மாவட்டம், மூடப்பெற்றிருத்தல் 22—24

நூற்பாலை, சாயத் தொழிற்சாலை, கடையநல்லூரில் தொடங்குதல் 155—156

வனஸ்பதி தொழிற்சாலை, திண்டிவனம் பகுதி 4

தொழிலாளர்கள்—

விதைப் பண்ணைத் தொழிலாளர்க்கு ஊதியம், திருநெல்வேலி மாவட்டம் 145—146

ந

நல்லப்பன், திரு. இ. கா.—

இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்துதல் (க.ஈ.) 171—172

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நவநீதகிருஷ்ணபாண்டியன் திரு. ஆர்.—
ஆலங்குளம் தொகுதி, மின்வெட்டு 277—278

நிதி அலுவல்கள்—
த.மா.கோ., 1980-81 (முதல்), விவாதம், வாக்கெடுப்பு 287—324, 327—359

நிலங்கள்—
தஞ்சை திரு. ஆருரான் சர்க்கரை ஆலை, கரும்பு குத்தகைக்கு நிலம் விட்டவர்களுக்கு மீண்டும் நிலம் 258—260
நெடுஞ்சாலைத் இடத்தை குத்தகைக்கு விடுதல், இராஜ பாளையம் 389—390
மதுரை பொன்மேனி கிராமம், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங் களுக்கு நட்ட ஈடு 266—268

நினைவுச் சின்னங்கள்—
அண்ணா சதுக்கம், மேம்படுத்தல் 142—145
பாரதி மணிமண்டபத்தை அழகுபடுத்துதல், எட்டையபுரம் 139—142

நீக்கம்— 143,161,220, 401,413

நீதிமன்றங்கள்—
சப்கோர்ட், திருப்பூரில் அமைத்தல் 12—14

நூலகங்கள்—
நூலகம் கட்ட ஒதுக்கப்பெற்ற நிலம், சிவகிரி 254—255
மேல்நிலைப்பள்ளி நூலகங்கள், நூலகர்கள் நியமனம் 251—252

நெடுஞ்செழியன் டாக்டர் இரா.—
ஆளுநர் உரை, நன்றி நவிலல் (நி) [illegible] 109, 110,111



பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நெடுஞ்செழியன் டாக்டர் இரா—தொடர்ச்சி.
இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களைத் துன் புறுத்தல் (க.ஈ.அ.) 167—173, 412,413,414
உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது (உ.பி.) 343—357
த. மா. கோ., 1980-81 (முதல்), விவாதம் 360
நிதி ஒதுக்க சட்டமுன் வடிவு, 1981
பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர் மீது நடவடிக்கை (நி) 325,326—327
லெவி கொள்முதல், உற்பத்தியாளரின் பதட்ட நிலைமை (க. ஈ. அ.) 47—54
லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.அ.) 54—61

நெடுமாறன், திரு. ப.— 318-321,352
த. மா. கோ., 1980-81 (முதல்) விவாதம்
மதுரை பொன்மேனி கிராமம், ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங் களுக்கு நட்ட ஈடு 266—268

ப

பலராமன், திரு. இல.— 12
கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர்

பழனிமுத்து, திரு. சி.—
குளுகோஸ் தொழிற்சாலை, ஆத்தூர் வட்டம் (சேலம் மாவட்டம்) [illegible]

பழனியப்பன், திரு. கு. பா.—
[illegible] வரி செலுத்துவதை [illegible] போடுவதைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு, 1981, 430—43

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பழனிவேல், திரு. என்.—**

அனாதைக் குழந்தைகள் இல்லம், விவரம் 159—161

அ. மா. கோ., 1980-81 (முதல்), விவாதம் 312—316

**பாசனம்—**

குடகனாறு அணை, மீண்டும் கட்டும் பணி 24—27

மேல் மாந்தை குளம், தனிக் கால்வாய் அமைப்பு 27

குண்டாம்பாச்சி ஆற்றின் குறுக்கே அணை, கொடைக்கானல் வட்டம் 268—269

சுகநதியின் குறுக்கே அணை, வந்தவாசி தொகுதி 269—270

**பாபு கோவிந்தராசன், திரு—**

உரத் தொழிற்சாலை, கடலூர் 4—5

**பாரமலை, திரு. க.—**

மானாமதுரையிலுள்ள வைகை ஆற்றுப் பாலத்தைப் புதுப்பித்தல், 149

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981 476—479

**பாலகிருஷ்ணன். திரு. ச—**

சிவகிரி, நூலகம் கட்ட ஒதுக்கப்பெற்ற நிலம் 245—255

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் டிராக்டர்கள், வரி விலக்கு 152—155



பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

**பாலசுப்பிரமணியன் திரு. வேடசந்தூர் வி. பி—**

குடகனாறு அணை, மீண்டும் கட்டும் பணி 24—27

கூட்டுறவுச் சங்கங்கள், பினாமி கடன்கள் 14—19

சிமெண்ட் தொழிற்சாலை, வேடசந்தூர் தாலூகா 1—4

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. 481

**பாலங்கள்—**

அடையாறு, தடுப்புச் சுவர் 28—29

வெள்ளாறு, அரியலூர்—திட்டக்குடி பெருவழித்துறை சாலை 387—389

வைகை ஆற்றுப்பாலத்தைப் புதுப்பித்தல், மானாமதுரை 149

**பாலன், திரு. ஏ.—**

உறுப்பிர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த. கோ.) 164

**பிரபாகரன், திரு. ஜே. சி. டி—**

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. 442

**பிற்பட்டோர் நலன்—**

வலையர் புனரமைப்பு, சட்டநாதன் குழு பரிந்துரை 123—127

**புருஷோத்தமன், திரு, து—**

அண்ணா சதுக்கம், மேம்படுத்தல் 142—145

அடையாறு, தடுப்புச் சுவர் அமைத்தல் 28—29

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) 164

தூத்துக்குடி துறைமுகம், விரிவுபடுத்தல் 207

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பூங்காவனம், திரு. என். ஏ.—

அ. மா. கோ., 1980—81, விவாதம் 323—324

பெருமாள், திரு. ரா. கு.—

அ. மா. கோ., 1980—81 (முதல்), விவாதம் 309—312

அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டடம், சிவஞானபுரம் 281

சென்னையிலிருந்து விளாத்திகுளம் வழியாக விரைவுப் பேருந்துகள் 395

மேல் மாந்தை குளம், தளிக்கால்வாய் அமைப்பு 27

விளாத்திக்குளம், அரசு மருத்துவ மனைக் கட்டிடம் 393

பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ்.—

நிலக்கோட்டை தொகுதி ஜங்கல்பட்டி சாலைப்பணி 147—149

போக்குவரத்து—

அண்ணாபோக்குவரத்து பணிமனை, இடைப்பாடி 152—153

புதிய பேருந்து நிலையம் அமைத்தல், தருமபுரி 150—151

சென்னையிலிருந்து விளாத்திக்குளம் வழியாக விரைவுப் பேருந்துகள் 395—397

ம

மணி, திரு. டி.—

இரைமீன்துறை—நீரோடி பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் 264—265

குமரி மாவட்ட முந்திரி ஆலைகள், கச்சா முந்திரி ஒதுக்கீடு 274

மின்வசதி, வெள்ளாம்பிக் காலனி பழங்குடி மக்கள் பகுதி (கன்னியாகுமரி மாவட்டம்) 5—7

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.) 54,60




பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


மணிமாறன், திரு. ஆர்— 12—14

சப்கோர்ட், திருப்பூரில் அமைத்தல்

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தன்னிப்போடு மாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. 448—456

மருத்துவமனைகள்— 393—394

அரசு மருத்துவமனைக் கட்டிடம், விளாத்திகுளம் 394—395

புதிய மருத்துவமனை கட்டுதல் சத்தியமங்கலம் தாலுகா

மாணிக்கம், திரு. எம். என்.— 390

கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் விரிவுபடுத்தல்

மாரிமுத்து, திரு. த.— 330—332

அ. மா. கோ. 1980—81 (முதல்), விவாதம்

மின்சாரம்— 379—380

காவிரி நீர், புதிய மின் உற்பத்தி நிலையங்கள் 7—10

நீர் மின்திட்டங்கள், அம்பாசமுத்திரம் தொகுதி

மின் இணைப்பு திட்டம், இடைப்பாடி தொகுதி போடிநாயக்கன்பட்டி 378—379

மின் வசதி, வெள்ளாம்பிக் காலனி பழங்குடி மக்கள் பகுதி (கன்னியாகுமரி மாவட்டம்) 5—7

மின்வெட்டு, ஆலங்குளம் தொகுதி 277—278

வெள்ளாம்பிரபாணி நீர்மின் திட்டம் 10—12

**பக்கங்கள்**

ம—தொடர்ச்சி.

**மீனளம்—**

இரால் ஏற்றுமதி — 364—366

சாத்தனூர் அணையில் கிடைக்கும் மீன்கள், வெளிமாநிலங்களுக்கு விற்பனை — 366—368

மீட்பு படகு ஏற்படுத்துதல், இராமேஸ்வரம் பகுதி — 127—130

**முத்துக்கிருஷ்ணன், திரு. சு.—**

ஆ. மா. கோ. 1980—81 (முதல்), விவாதம் — 336—339

**மூர்த்தி, திரு. ஜி.—**

ஆ. மா. கோ., 1980—81 (முதல்), விவாதம் — 342—343

**ர**

**ரகுமான்கான், திரு. அ.—**

திரு. ரகுமான்கான் மீது (உ.பி.) — 32—34, 42—46

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் (த.கோ.) — 163—164

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள், (ஒ.பி.) — 401—402

ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது (ஒ.பி.) — 457,465

ஆ. மா. கோ., 1980—81 (முதல்), விவாதம் — 251



**பக்கங்கள்**

ர—தொடர்ச்சி.

**ரகுமான்கான், திரு. அ.—தொடர்ச்சி.**

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன்வடிவு, 1981. — 451,454,455, 480—483

**ரங்கசாமி, திரு. ஆர்.—**

சத்திய மங்கலம் தாலூக்கா, மருத்துவ மனை ஏற்படுத்துதல் — 394

**ரமணி, திரு. கு.—**

குறுவை விளைச்சல் — 385

கோவை சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி, பெண்களுக்கு தனிப் பள்ளி அமைத்தல் — 255—257

லெவி கொள்கை, சந்தையில் அரிசி கிடைக்காமை (க.ஈ.) — 58

**வ**

**வரிகள்—**

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் டிராக்டர்கள், வரி விலக்கு — 153—155

**விசயலட்சுமி, செல்வி வி.—**

சேலம் இரும்பாலைப் பகுதி, குடியிருப்புகளைக் காலி செய்தவர்களுக்கு மாற்று இடம் — 257—258

**விடுதிகள்—**

பொதுப்பணித்துறை விடுதி இடைப்பாடியில் அமைத்தல் — 156—157

இராமேஸ்வரம் பயணியர் விடுதிகளை விஸ்தரித்தல் — 378

**வின்செண்ட், திரு. மி.—**

தன்னிறைவுத் திட்டம், அமலாக்கப்படும் ஒன்றியங்கள் — 399

வாக்காளர் பட்டியல், 18 வயதுடையோரைச் சேர்த்தல் — 161—163

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

**வீட்டு வசதி—**

சேலம் இரும்பாலைப் பகுதி, குடியிருப்புகளைக் காலி செய்தவர்களுக்கு மாற்று இடம் 257—258

மீனவர்களுக்கு வீடுகள், இராமேஸ்வரம் பகுதி 180—182

வீடு கட்டக் கடன் (க.ஈ.) 282—285

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**

உளுந்தூர்ப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் சினிமா தியேட்டர் கட்டப்பெறுதல் (க.ஈ.அ.) 423—425, 426, 427

**வெங்கடேசன், திரு. பி. எம்.—**

பொனமல்லூர் வட்டாரம், ஊட்டச் சத்துணவுத் திட்டம் 150

**வெளியீடுகள்—**

அண்ணா எழுதிய புத்தகங்கள், மலிவு விலையில் அரசு வெளியிடுதல் 252—254

**வெள்ளைச்சாமி, திரு. ஆ.—**

போழியம்மனூர், குடிநீர் வழங்கு திட்டம் 391

**வேணுகோபால், திரு. த.—**

இரால் ஏற்றுமதி 364

குடிநீர்ப் பஞ்சம், தண்டராம்பட்டு தொகுதி தானிப்பாடி கிராமம் (க.ஈ.) 381—383

பூம்புகார் சுற்றுலா விடுதி, பயன்படுத்தல் 137—139

**வேளாண்மை—**

குறுவை விளைச்சல் 385—387

பயிர்களுக்கு எலிகளால் சேதம் 382—385



பக்கங்கள்

ஜ.

**ஜெயராமன், திரு. வே. இரா.—**

து.மா.கோ., 1980-81 (முதல்), விவாதம் 332—334

ஹ.

**ஹெண்டே, டாக்டர் எச். வி.—**

திருவில்லிபுத்தூர் தொகுதியில் காலரா நோய், (க.ஈ.அ.) 427—428, 429

**ஹேமச்சந்திரன், திரு. ஜே.—**

குமரி மாவட்ட முந்திரி ஆலைகள், கச்சா முந்திரி ஒதுக்கீடு 374

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### புதன் கிழமை, 1981 பிப்ரவரி 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற''

ஒரு செயலை அடுத்து வினை என்று சொல்லப்படுவது, ஒருவருடைய உள்ளத்து உறுதியாகும். மற்றவையெல்லாம் இதற்கு அடுத்ததாகவே கொள்ளுதல் வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று முன் தினம் ஒத்திவைக்கப் பெற்ற வினாக்கள் இப்போது எடுத்துக் கொள்ளப் படும்.

### வேடசந்தூர் தாலுகாவில் சிமெண்ட் தொழிற்சாலை.

வினா எண் 158—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வேடசந்தூர் தாலுகாவில் அதிக அளவில் கிடைக்கும் சிமெண்ட் உற்பத்திக்கான மூலப் பொருட்களைக் கொண்டு அப்பகுதியில் அரசுத் தரப்பில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஆம்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையத்தில் தொடங்க இருக்கும் இந்த சிமெண்ட் தொழிற்சாலைக்கு எவ்வளவு மூல

தனம் என்பதையும், எத்தனை பேர்களுக்கு அந்தப் பகுதியிலே வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், வேடசந்தூர் பாளையத்திற்கும், திருச்சி மாவட்டம் வாரணாசிக்கும் இடைப்பட்ட பகுதியில் 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட ஆலை ஒன்று ஏறக்குறைய 32 கோடி ரூபாய் மதிப்பீட்டளவில் நேரடியாக 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற விதத்தில் துவங்குவதற்கான ஆய்வுகள் நடந்து வருகின்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் இப்படி ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதைக் கருத்தில் கொண்டு, அங்கு தனியார் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க அந்தப் பகுதியிலே இருக்கின்ற நிலங்களை விலைக்கு வாங்க முற்படுவது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பிலே துவங்கப்பட இருக்கின்ற தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்ற நிலப்பரப்பு வேறு எந்தத் தனி நபருக்குகோ அல்லது தனி நிறுவனத்திற்கோ வழங்கப்பட மாட்டாது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாளையத்திற்கு ஒட்டினாற்போல் இருக்கும் கிருஷ்ணாபுரம் என்னுடைய தொகுதியாகும். அந்தத் தொகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இந்த அரசு முன் வருமா ? அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு மாவட்டத்திலே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகின்றபோது., அந்த மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலே இருந்துதான் நம்பர்களைக் கேட்டு வேலைக்கு ஆள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அந்த மாவட்டத்திலே உள்ள பகுதிகளிலே உள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பு பெறுகின்ற வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது.





**திரு. என், இட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை ஒன்று மாயவரம் தாலுகாவிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி வேடசந்தூரைப் பற்றியது. திரு. வரதராஜன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, இந்த பாளையம் பகுதி ஒரு பாலைவனம் வேசடந்தூர் வட்டாரத்தில், இப்படிப்பட்ட வறட்சியான காலத்திலே, போன்ற பகுதியாகும். துவக்கினால் அந்த மக்களுக்கு ஆரம்ப வேலைகளை அங்கே எவ்வளவு விரைவிலே இந்தத் திட்டம் உதவியாக இருக்கும். ஆரம்பிக்கப்படும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் முடிந்தவுடன் வெகு விரைவிலே எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை வேடசந்தூர் தாலூகாவிலே, வேலைகள் நடைபெறுவதாக ஆரம்பிப்பதற்கான ஆய்வு கூறினார்கள். திருச்சி மாவட்டத்திலே, அமைச்சர் அவர்கள் ஆரம்பிப்பதற்கான மூலப் இந்த சிமெண்ட் தொழிற்சாலை காரணத்தினாலே.......... பொருள்கள் கிடைக்கின்ற

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இக்கேள்வி வேடசந்தூர் பற்றியது. இட்டப்பா அவர்களுக்கு ஒரு நியதி. உங்களுக்கு ஒரு நியதி அல்ல. உட்காருங்கள்.

**திரு. இரா. கருப்பையா :** வேடசந்தூரில் திருச்சி மாவட்டத்தை ஒட்டிய பகுதியில், பார்டரில் அந்தத் தொழிற்சாலையை அமைப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஏற்கனவே சொன்னேன். மதுரை மாவட்டம் வேடசந்தூர் பாளையத்திற்கும் திருச்சி மாவட்டம் வாரணாசிக்கும் இடைப்பட்ட பகுதியில் கிடைக்கிற சுண்ணாம்புக் கல்லைக் கொண்டு அந்தப் பகுதியில் தொழிற்சாலை ஏற்படும். ஏதாவது ஒரு இடத்தில் தான் ஏற்படுத்த முடியும். சுண்ணாம்புக்கல் இரண்டு மாவட்டத்திலும் எடுக்கப்பட இருக்கிற காரணத்தால் இரண்டு மாவட்டத்திலும் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கிற வகையில் நிச்சயமாக அரசு கவனிக்கும்.

**திரு. என். இட்டப்பா :** வேடசந்தூரில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லப்படுவதைப் போல் ஏற்கனவே மாயூரம் வட்டத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை

ஆரம்பிக்கப்பட இருப்பதாக இதே அவையில் அறிவிக்கப்பட்டதே. அதனுடைய நிலை தற்போது என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

### திண்டிவனம் பகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை.

வினா எண் 159. **திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் அரசு துறையில் வனஸ்பதி தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** வனஸ்பதி தொழிற்சாலை துவக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் தான் அதிக அளவு நிலக்கடலை கிடைக்கிறது. இதற்கு முன்னால் இல்லாவிட்டாலும் இனியாவது அந்த மாதிரி வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களானால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு மக்களுக்குக் குறைந்த விலையில் வனஸ்பதி கிடைக்கும். அரசு இனியாவது அது பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ;** வனஸ்பதி தொழில் பற்றிய மத்திய அரசின் கொள்கையினால் இது அவர்களுடைய புலனாய்வில் இருக்கிறது. தற்போது வனஸ்பதி தொழில் தொடங்குவது பற்றிய விண்ணப்பங்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை. எனவேதான், அது போன்ற திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

### கடலூரில் உரத் தொழிற்சாலை.

**வினா எண். 160—திரு. பாபு கோவிந்தராசன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூரில் மிகப் பெரிய உரத் தொழிற்சாலை துவக்குவதற்கான திட்டம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில் திட்டம் தற்பொழுது எந்நிலையிலுள்ளது? எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

### வெள்ளாம்பிக் காலனி பழங்குடி மக்கள் பகுதிக்கு மின் வசதி

*வினா எண். 161—**திரு. டி. மணி :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் வெள்ளாம்பிக் காலனியில் குடியிருக்கும் பழங்குடி மக்களின் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) மின் வசதி செய்து கொடுக்க நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) வெள்ளாம்பிக் காலனியில் குடியிருக்கும் பழங்குடி மக்களின் குடியிருப்புகளுக்குச் செல்லும் பாதையில் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அவை எரிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

(இ) ஆம். 7 குமிழ் விளக்குகள் போடப்பட்டுள்ளன.

(ஈ) எல்லா விளக்குகளும் தற்போது எரிகின்ற நிலையில் உள்ளது.

**திரு. டி. மணி:** குமரி மாவட்டத்தில் வெள்ளாம்பிக் காலனியில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் பழங்குடி மக்களுக்கு கட்டிக் கொடுத்த குடிசைகளுக்கு மின் விளக்குகள் போடப்படவில்லை,

ஏற்கனவே, வறுமைக் கோட்டின் கீழே இருக்கும் மிகவும் வருமானம் குறைந்த அந்தப் பகுதி மக்களுக்குப் பிரத்தியேகமாக கவனம் செலுத்தி அவர்களது குடிசைகளுக்கு மின் விளக்குப் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தை நாம் இப்போது அமல்படுத்தியிருக்கிறோம். அந்தக் குடியிருப்புகளிலிருந்து அதற்கான மனுக்கள் வந்திருக்கின்றனவா என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மனுக்கள் அனுப்புவார்களானால் உரிய நியதிப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-10)

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாதத்திற்கு முன்னாலே நான் என்னுடைய கேள்வியை அனுப்புகிற நேரத்திலே அந்தச் சாலைகளில் விளக்குகள் சரிவர எரியவில்லை, பல்புகள் தான் இருந்தன, அவைகளின் வெளிச்சம் மிகக் குறைவாக இருப்பதால் அவைகளை மாற்றி குழாய் விளக்குகள் பொருத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு, ஒரு விளக்குத் திட்டம் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு அறிவித்தபடி அரசு கட்டித் தருகின்ற வீடுகள் ஓட்டு வீடுகளாக மாறும் பொழுது குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம் என்பதை வீட்டுக்கு ஒரு விளக்கு என்று அறிவிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்விபோடவும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : விளவங்கோடு, கல்குளம், ஆகிய பகுதிகளிலே மின்சாரம் வருகிறபோது விளக்குகளிலே வெளிச்சம் கம்மியாக இருக்கிறது என்ற காரணத்தினால் குழித்துறையில் ஒரு சப்-ஸ்டேஷன் அமைக்கப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கன்னியாகுமரி மாவட்டத்திலே பொதுவாக மின்சக்தி குறைவழுத்த நிலைமையில் இருப்பதால் கேரளா மாநிலத்திலிருந்து நாம் மின் சக்தியைப் பெறுகிறோம், அதன் மூலம் லோ வோல்டேஜ் பிராப்ளம் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. செ. இராமலிங்கம் : இதற்கு முன்பு வீடு இல்லாத அரிசன மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தை அந்த கான்கிரீட் வீடுகளுக்கும் விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் முன்பே கேட்டார்கள். இது குடிசைக்கு ஒரு விளக்கு. அவர்களே சொன்னார்கள் கான்கிரீட் வீடு, குடிசை வீடுகள் என்று. அவர்களுக்காவது கான்கிரீட் வீடுகளிலே உள்ளவர்களுக்கு ஒரு விளக்காவது தருகின்ற முறையிலே தான் இந்த குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் கொண்டு வரப்படுகிறது.

அம்பாசமுத்திரம் தொகுதியில் நீர்மின் திட்டங்கள்

*வினா எண். 162—திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மணிமுத்தாறு நீர் மின் திட்டம் ஒன்று நிறுவ அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காகும் செலவு என்ன? இதை ஆரம்பிப்பதற்கான ஆய்வுகள் எந்த நிலையில் முடிவடைந்திருக்கின்றன என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்காகும் எஸ்டிமேட்டட் காஸ்ட் 34 கோடி ரூபாய். ஆனால் இந்தத் திட்டத்திலே என்ன பிரச்சினை என்றால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற

காடுகளில் வாழ்கின்ற சிங்கவால் கொண்ட மகால் குரங்கு இனத்திற்கு அழிவு ஏற்படும் நிலைமை இருக்கிறது. ஏற்கனவே அழிந்துவரும் இனம் என்ற காரணத்தினாலே அந்த காடுகளை அழிக்க வேண்டாம் என்று வனத்துறை கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே குரங்குகள் அழிவதைத் தடுத்து பாதுகாப்பதற்காக இந்தத் திட்டம் தயக்கப்படுத்தப்படுகிறது என்றும், வனத்துறை ஆட்சேபிக்கிறது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த வாலில்லா குரங்குகள், இந்த மின் திட்டத்தை ஆரம்பிப்பதால் எங்கேயும் ஓடிவிடாது, அங்கேயே தான் இருக்கும். அதைச் சுட்டிக்காட்டி அதைப்பற்றி மீண்டும் வனத்துறையுடன் பேசி இந்தத் திட்டத்தை விரைவிலே கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சாரத்தை எப்படி வேண்டுமானாலும் உற்பத்தி செய்து கொள்ளலாம், ஆனால் சிங்கவால் கொண்ட மகால் குரங்குகளை நாம் நினைத்தால் உற்பத்தி செய்ய முடியாது.

திரு. வ. சத்தியமூர்த்தி : இந்த மின்சாரத் திட்டத்தின் மின் உற்பத்தி மதிப்பீடு எவ்வளவு ? இதனால் பயன்பெற இருக்கும் பகுதிகள் எவையெவை என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் 65 மெகாவாட் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, மனிதர்களுக்கு மின்சாரம் முக்கியமான தேவையாக இருக்கும் பொழுது அதைவிட குரங்குகள்தான் முக்கியம் என்பதுபோன்று அமைச்சரவர்களின் பதில் எதிரொலிக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குரங்குகள் முக்கியம் என்று அவர்கள் சொல்லவில்லை. குரங்குகளை உற்பத்தி செய்வது கஷ்டம் என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் சொன்ன பதிலையே உறுப்பினரவர்கள் மாற்றிவிடக் கூடாது. அமைச்சரின் பதிலைக் கேட்டுவிட்டு உறுப்பினரவர்கள் கேள்வியைக் கேட்க வேண்டும். உறுப்பினரவர்கள் சொல்வதைப் பார்த்தால் மனிதர்களைவிட குரங்குகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்ற பொருள் வந்துவிடும்.



திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, குரங்குகளை அழிக்கக் கூடாது என்பதற்காகக் காடுகளை அழிக்கக் கூடாது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டில் மின்சாரத் தேவை அதிகமாக இருப்பதால் மின்சாரத்திற்கு முதலிடமும், அதற்கடுத்து குரங்குகளுக்கு இரண்டாவது இடமும் தருமாறு கேட்டு அதற்கு அமைச்சரவர்களின் பதில் என்ன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, 32 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சார உற்பத்தித் திட்டமானது, சிங்கவால் குரங்குக்காக வேண்டி இன்னமும் பரிசீலனை செய்யப்படுகிறது என்று நீண்ட நாட்களாகச் சொல்லப்படுகிறது. சிங்கவால் குரங்குகளை வேண்டுமானால், வேறொரு இடத்தில் சரணாலயம் ஏற்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க ஏற்பாடு செய்து கொள்ளலாம். எனவே, 32 கோடி ரூபாய் திட்டம் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தக் குரங்குகளுக்கும் இருக்கின்ற மற்ற குரங்குகளுக்கும் விசேஷம் அதுதான். இந்தக் குரங்குகள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய களக்காடு சேங்சுரி— அந்தச் சரணாலயத்தில்தான் உயிர் வாழ முடியுமாம். அங்கே இருப்பவைதான் மழைக் காடுகள்— rains fed forest என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அங்கே அமல்படுத்தினால் அந்த அபூர்வ இனத்திற்கு ஆபத்து என்று வனத்துறை மட்டுமல்ல, Department of Environment and Planning என்ற துறையும் கருதுகிறது. நம்முடைய மின்சாரத் துறையும் இது சம்பந்தமாக வனத்துறையோடு ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். மீண்டும், உண்மையிலேயே அந்த இனம் அழிந்துவிடுமா என்பதைப்பற்றி ஒரு தீர்க்கமான முடிவெடுத்து அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை அமல்படுத்தலாமா வேண்டாமா என்பதைப் பற்றி அமைச்சரவை முடிவெடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மணிமுத்தாறு நீர்மின் திட்டப் பகுதியானது அந்த மலையின் மேல் பகுதியாகும். களக்காடு சேங்ச்சுரி கீழப் பகுதியில் இருக்கிறது. கோதையாறு பகுதியில்தான் அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. எனவே, மணிமுத்தாறு நீர் மின் திட்டத்தை அமல்படுத்துவதால் நிச்சயமாக இந்தக் குரங்குகளுக்குப் பாதிப்பு ஏற்படாது என்றே கருதுகிறேன். ஆகவே, இதைப்பற்றி மறுபரிசீலனை செய்து உடனடியாக அதைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பாதிப்பு ஏற்படுமா ஏற்படாதா என்பதைப்பற்றி நிபுணர்களே கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைப்பற்றி நன்றாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இந்த அபூர்வமான குரங்கினம் இந்தத் திட்டத்தால் அழிந்துவிடுமா என்பதைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அதை அங்கே அனுப்பி அந்த இனம் அழியாமல் இருப்பதற்கு ஆலோசனை கூறும்படி செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறைவாகச் சொல்வதாகத் தயவு செய்து கருதக் கூடாது. நம்மைக் கண்டு அந்தக் குரங்குகள் ஓடி விடக் கூடாது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த மணிமுத்தாறு நீர்மின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்துவிட்டதா ? அல்லது இன்னும் அனுமதி கொடுக்கவில்லையா ? அதேபோல, தமிழ்நாட்டிலுள்ள எந்தெந்த நீர் மின் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதியில்லாமல் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது திட்டக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது, திட்டக் குழுவின் பரிசீலனையில் சுமார் பத்து திட்டங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தின் பொழுதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*வினா எண். 163— திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் ஒன்று நிறுவ அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மேல் தாமிரபரணி நீர்மின்திட்டத்திற்கு ஆய்வு செய்யப்பட்ட அடிப்படையில் எஸ்டிமேட் எவ்வளவு ஆகிறது ? ஆய்வு சீக்கிரமாக முடிக்கப்பட்டு, வேலையும் சீக்கிரமாகத் துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டமும் அதே பகுதியிலேதான் வருகிறது. ஆகையினால் அந்தக் கேள்வியிலே கேட்ட துணைக் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் இதற்கும் பொருந்தும். இந்த மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் 165 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடியது; 87.47 கோடி ரூபாய் செலவாகும். இதுவும் திட்டக் கமிஷனின் பரிசீலனையில் இருக்கிறது ?

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விக்குக் கேட்ட துணைக் கேள்விகளுக்கான பதில் இதற்கும் பொருந்தும் என்று அமைச்சர் சொல்லிவிட்ட பிறகு மேலும் துணைக் கேள்விகளுக்கு இடமில்லை. அந்தக் கேள்விக்கு நிறைய துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டு விட்டன. அதற்கே துணைக் கேள்விகள் கேட்டு பதில் சொல்லிக் கொண்டிருந்தால் சபையின் நேரம் வீணாகும்.

[முற்பகல் 9.20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : அவர்கள் சொன்னது வேறு. நான் சொன்னது வேறு. (குறுக்கீடுகள்) இந்த மேற்குத் தாம்பிரபரணி நீர் மின் திட்டம் என்ற பகுதியிலே அந்தக் குரங்கு சரணாலயம் என்பதைப் பற்றி அறிவிக்கவும் இல்லை; அந்தப் பகுதி அதிலே வரவும் இல்லை. ஆகவே, அந்தக் கேள்வி இந்த உப கேள்விக்குப் பொருந்தாது. ஆகவே, அதை அனுதாபத்தோடு பரிசீலனை செய்வதோடு மட்டுமல்லாது, மின் தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்திலே— தற்போது 30 சதவீதம் வெட்டு இருக்கிறது. ஆகவே, அந்த மின் வெட்டைத் தவிர்க்கின்ற வகையிலே, அத் திட்டத்தை அனுதாபத்துடன் பரிசீலித்து, நிறைவேற்றி, மின் வெட்டைத் தவிர்க்க அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, களக்காடு மற்றும் முண்டந்துறை வனவிலங்கு சரணாலயத்திலுள்ள வட்டாரங்களில் எந்தவித ஆய்வுப் பணியும் மேற்கொள்ளக் கூடாதெனவும், மேலும் இவ்வட்டாரங்களில் எதிர்

காலத்தில் எந்தவிதத் திட்டமும் நிறுவுவது முடியாத காரியமெனவும் வனத்துறை கருத்து தெரிவித்துள்ளது. எனவே, முண்டந்துறை வனவிலங்கு சரணாலயமுள்ள இடத்தில் எந்த விதமான ஆய்வுப் பணியும் மேற் கொள்ளக் கூடாதெனவும் மேற்படி இடத்தில் நிறுவக் கருதியுள்ள மேல் தாமிரபரணித் திட்டத்தை மீண்டும் பரிசீலிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 164: 165, 166, 167 ஆகியவை மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர்.

வினா எண். 168—திரு இல. பலராமன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூர் கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிலகம் தனியாருக்கு வாடைகைக்கு விடப்பட்டதா?

(ஆ) எந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டது?

(இ) இதன் வருடாந்திர வாடகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை;

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகள் எழவில்லை;

திருப்பூரில் சப் கோர்ட் அமைத்தல்.

வினா எண் 169—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருபபூர் நகரில் சப்–கோர்ட் அமைக்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திருப்பூர் நகரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.





திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள் அது நீண்டகாலமாக அந்த நகரத்திலே இருந்து வருகிற ஒரு முக்கியமான பிரச்னையாகும். கிட்டத்தட்ட 30 ஆண்டுக் காலமாகக் அந்தக் கோரிக்கை அரசினுடைய பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தும் அது சரியாகக் கவனிக்கப்படாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. கடந்த ஆண்டு முதல்வர் அவர்களைச் சந்தித்த வழக்கறிஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அந்த வினாவைத் தொடுத்த பொழுது, அவர்கள் ஒப்புதல் அளித்து, பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மிக விரைவாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வழக்கறிஞர் சங்கமும், மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்களும் இது குறித்து கொடுத்த கோரிக்கையை உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி வைத்தது. உயர்நீதிமன்றம் இதுகுறித்து பரிந்துரை செய்தது. விரைவிலே இதைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் இதற்கு மறுதலித்ததாக ஒரு வதந்தி இருக்கிறது. அப்படி உயர்நீதிமன்றம் அதை ஒப்புக் கொள்ளவில்லையா என்கிற ஒரு நிலை அங்கே இருக்கிற காரணத்தால், அதனுடைய உண்மை நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் தற்பொழுது இயங்கி வருகின்ற சார்பு நீதிமன்றங்களில் ஏதேனும் ஒன்றைத் திருப்பூருக்கு மாற்றலாமா என்ற ஆலோசனையைக் கேட்ட பொழுது அதற்குத்தான் உயர்நீதிமன்றம் ஒப்புதல் அளிக்கவில்லை. தனியாக திருப்பூரிலே ஒரு சார்புமன்றம் அமைய்பது குறித்து உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது.

திரு. எம். சின்னராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உடுமலைப்பேட்டையில் நிறுவப்பட் சார்பு நீதிமன்றம்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி திருப்பூருக்குக் கோர்ட்டு வேண்டுமென்பதைப் பற்றி, நீங்கள் வழக்கறிஞர் என்பதால் கேள்வி கேட்க அனுமதிக்கிறேன். ஆகவே, அதுபற்றி கேளுங்கள்.

திரு. எம். சின்னராஜ் : அதுதான். ஏற்கனவே உடுமலைப் பேட்டையில் அந்த நீதிமன்றம் செயல்படுவதற்குரிய வழக்குகள் இல்லையென்ற நிலை இருந்து வருகிறது. ஆகவே, அதே நிலை திருப்பூரில் ஒரு சார்பு நீதிமன்றம் ஏற்படும்போதும் ஏற்படும் அல்லவா என்பதையும் அது குறித்த ஆட்சேபணையைக் கோவை மாவட்ட வழக்கறிஞர் மன்றம் தெரிவித்திருக்கிறதா என்பதையும் அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் இல்லையென்ற காரணத்திற்காக உடுமலைப் பேட்டையிலிருந்து சார்பு நீதிமன்றத்தை மாற்றுவோமானால், அங்கேயிருந்தும் வழக்கறிஞர்கள் சங்கங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கும். திருப்பூருக்குத் தனியாக ஒரு சார்புமன்றம் தேவை. கோவை மாவட்டம் பெரிய நகரமாக இருக்கிறது. அங்கு பல்வேறு வழக்குகள் அதிகமாக இருக்கின்றன. அங்கு தேவை என்பதை அரசும் உணர்ந்திருக்கிறது. உயர்நீதிமன்றமும் உணர்ந்திருக்கிறது. தனியாக அங்கு சார்பு மன்றம் நிறுவ விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள பினாமி கடன்கள்.

வினா எண். 170— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவு – சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள எல்லா கூட்டுறவு சங்கங்களிலும் 'பினாமி' கடன்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டு பிடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பினாமிக் கடன்களைக் கண்டுபிடிக்கக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

1. வாணிபப் பயிர் கடன்கள் சரிவர பயன்படுத்தப் பட்டனவா என்பதை சங்கச் செயலாளர்கள் எல்லாக் கடன்களையும் சரிபார்க்கின்றனர். உணவுப் பயிர்க்கடன்களில் 50 சதவீதம் சரிபார்க்கப்படுகின்றன.

2. மத்திய வங்கி அலுவலர்கள் அளவிலும் கடன் சரி பார்த்தல் மேற்கொள்ளப்படுகிறது.

3. கடன்கள் சரிவரப்பயன்படுத்தப்பட்டனவா என்பது பற்றி அறிக்கையின் மீது, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்கின்றது.





4. சரகத் துணைப் பதிவாளர்கள், மாதமொன்றிற்கு 15 சங்கங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ளவும் சில கடன்களை சரிபார்க்கவேண்டும்.

5. சங்கங்களின் கணக்குகளை இறுதி தணிக்கை செய்யும் போது சில கடன்களை தணிக்கையாளர்கள் சரிபார்க்கின்றனர்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைத் தவிர, பயிர் வாரிக் கடன்கள் என்று கொடுக்கிறபோது, அரசு புறம்போக்கு நிலங்களை எல்லாம் பயிர் செய்வதாகக் காண்பித்து, சுடுகடுக்கூட பயிர் செய்வதாகக் காட்டப்பட்டு, அதே போன்று ஜனவரி மாதத்திலே பயிர் வாரி கடனுக்காக மனுக்கள் தயாரிக்கப்படும்போது ஒரு நிலம் காட்டப் பட்டு, அதே நிலம் மார்ச்சு மாதம் சமர்ப்பிக்கப்படும் போதும் அதே நிலம் பயிர் வாரி கடனுக்காக ஜாமீனாக காட்டப்படுகின்ற அளவுக்கு, கிராம அதிகாரிகள் சர்டிபிகேட்டுகள் கொடுக்கப் பட்டு, இப்படி பினாமி நிலங்கள் அங்கெங்கெனாதபடி இல்லாமல் எங்கும் 80 சதவீதம் கூட்டுறவு சங்கங்களில் கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் 1974, 1975, 1976 ஆகிய ஆண்டுகளில் இவை நீக்கமற நிறைந்திருக்கின்றன. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இப்படிப் பட்ட தவறான முறையில் காண்பிக்கப்பட்ட..........

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லாமல், கேள்வி மட்டும்தான் கேட்க வேண்டும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். : நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இப்படி அரசு நிலங்களை பயிர் வாரிக் கடன்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை சுட்டிக் காட்டி அதிகாரிகள் அறிவுறுத்தப்படு வார்களா ? ஒவ்வொரு நிலத்திலேயும் இப்படி தவறான ஆஸ்தி பொறுப்புகள் வழங்கப்படுகிறதா ? என்பதை அறிய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட நிலம் பினாமி நிலமாக காட்டப்படுகிறதா என்பது கிராம அதிகாரிகள் கொடுக்கின்ற அத்தாட்சியின் அடிப்படையில் தான், கூட்டுறவு சங்கம் நடவடிக்கையை மேற்கொள்ளும். இதற்காக புதிய கூட்டுறவுச்

சட்டம் கொண்டு வரக் கூடிய போது கூட செலக்ட் கமிட்டி இது குறித்து தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. அந்த அடிப் படையில் இந்த நிலப்பட்டா அடங்கல், சிட்டா அடங்கல் போன்றவைகூட, அதனுடைய ஒரு நடவடிக்கையாக, வட்டாட்சியாளர்கள் அலுவலகங்களிலிருந்து ஒவ்வொரு பிரதியும் நேரடியாக கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்றுகூட, நடைமுறை விதியிலே கொண்டுவர வேண்டும் என்றும், இதன் மூலமாக இப்படி நடப்பதாகச் சொல்லப்படு கின்ற பினாமி கடன் போன்றவைகள் எல்லாம் தடுக்கப்படு வதற்கு ஏதுவாக இருக்கும் என்றும் முடிவு செய்திருக்கிறோம்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கச் சட்டம் பிரிவு 71-ன் படி. இப்படிப்பட்ட புகார்களை கடன் வழங்கிய 6 ஆண்டுகளுக்குள் விசாரிக்க வேண்டும் என்று இருக்கிறது. குறிப்பாக 1973–74, 1974–75 ஆண்டுகளில் அதிகமான பினாமி கடன் வழங்கப்பட்டி ருப்பதாகத் தெரிகிறது. எனவே இப்படிப்பட்ட தவறுகள் செய் தவர்கள் தப்பித்துக் கொள்ளாத அளவிலே எப்போது வேண்டு மானாலும், விசாரணை நடத்தலாம் என்கின்ற அளவிலே இந்தக் காலக்கெடுவை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 6 ஆண்டு காலம் என்று இருப்பதே அதிகமான காலக் கெடு என்று நான் கருதுகிறேன். இன்னும் அதைக் குறைத்து தீவிர நடவடிக்கையை விரைந்து எடுத்தால்தான், இது போன்ற பிரச் சினைகளை செய்யாமல் இருக்கக் கூடிய உணர்வு குறிப்பாக கிராமப் புறத்திலே வளர ஏதுவாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கிராமப்புறக் கூட்டுறவுக் கடன் சொசைட்டிகள் பெரும்பாலான கிராமப் புறத்திலே இருக்கக் கூடிய நிலப் பிரபுக்களின் கண்ட்ரோலில் இருப்பதால்தான், அவர்கள் இந்த பினாமி கடன்களை பரவலாக வாங்குகின்றார்கள். ஆனால் இவர்கள் அந்த கூட்டுறவு டிப்பார்ட்மெண்டினுடைய முக்கியமான அதிகாரிகளுடைய கொலூஷன் இல்லாமல் வாங்க முடியாது. அப்படி இருக்கும் போது அந்த அதிகாரிகளை விசாரிப்பதற்கு நான் ஏற்பாடு செய் திருக்கிறேன் என்று அமைச்சர் சொன்னால் எப்படி அதை கண்டு பிடிக்க முடியும். எனவே இது குறித்து விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டு மூலம் மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய அந்த சொசைட்டிகளிலே ஒரு தரோ என்கொயரியை நடத்து வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?





[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பினாமி கடன்களுக்கு அத்தாட்சி தருவது கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இல்லை. வருவாய்த் துறையின்கீழ் உள்ள கிராம அதிகாரிகள் மூலம் பெறப்பட்ட அத்தாட்சியின் அடிப்படையில்தான் அந்தக் கூட்டுறவுக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, கூட்டுறவுத் துறைக்கும் அதற்கும் நேரடியாக தொடர்பு இல்லை. நேரடியாக தொடர்பு ஏற்படுத்தும் வகையில் சிட்டா, அடங்கல் ஆகியவற்றின் நகல்களை வட்டாட்சி அலுவலகத்தில் இருந்து நேரடியாகவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பவேண்டும் என்கிற நடைமுறையைக் கொண்டுவரலாமா என்று உத்தேசிக்கப் பட்டு வருகிறது. இதனால் செலவு அதிகப்படியாகும் என்கிற நிலைமை இருந்தாலும், இதுபோன்ற தவறுகளைக் களைவதற்கு இந்த முறையைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டு வருகிறது. செலக்ட் கமிட்டி இந்தப் பிரச்சினையைப் பரிசீலித்து வருகிறது. இதை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் இந்தப் பிரச்னை தீரும் என்று அரசு நம்புகிறது.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வாழ்கிற வசதி படைத்தவர்கள் பணக்காரர்கள், பெரும் நிலச்சுவான்தார்கள், கூட்டுறவுச் சங்கங்கள ல் விவசாயத்திற்காகவும், கிணறு வெட்டுவதற்காகவும் கொடுக்கப்படுகிற கடன்களை பினாமியாக வாங்கிக் கொண்டு அந்தப் பணத்தை அதற்காக உபயோகிக்காமல், கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் குறைந்த வட்டிக்குப் பெற்று அந்தக் கடனை வட்டிக் கடைக்காரர்கள் போல் அதிக வட்டிக்கு விட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? இது சம்பந்த மாக அரசுக்கும் பல மனுக்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அவை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ? இப்படி பினாமியாகக் கடன் வாங்கி, அதை அதிக வட்டிக்கு விட்டு பணம் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்து அவர்கள் பெற்ற பினாமிக் கடனோடு, அவர்கள் வசூலித்த அதிக வட்டியையும் சேர்த்து வசூலிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பினாமிக் கடன் என்பதே 'பினாமி யுடிலைசேஷன்' என்றுதான் பொருள் வரும். பினாமி யாகக் கடன் வாங்கியவர்கள் அவர்களிடம் இல்லாத நிலத்திற்கோ அல்லது மற்றவர்கள் பெயரில் உள்ள நிலத்திற்கோ பயன் படுத்த முடியாது. இப்படிப்பட்ட பினாமிக் கடன்களை வசூலிக்கத்தான் விதிமுறைகளிலேயே 'செல்ப்-செக்கிங் சிஸ்டம்' கொண்டுவரலாமா என்று தற்போது உத்தேசிக்கப்பட்டு வருகிறது.

[1981 பிப்ரவரி 4

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படும் பினாமி முறையை ஒழிப்பதற்காக செலக்ட் கமிட்டி ஒன்று அமைத்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கனவே நடைபெற்ற அந்தக் கூட்டுறவு பினாமி முறைகளை இப்போது கண்டுபிடிப்பதற்காக சில அதிகாரிகளை நியமித்து இருப்பதாக அறிவித்தார்கள். அவர்களுக்குத் துணையாக இருப்பதற்காக அந்தந்த கிராமங்களில் உள்ள நிலைமைகளை ஒட்டுமொத்தமாக அறிந்து இருப்பவர்களை வைத்து, மக்கள் குழு அமைத்து, அந்த மக்கள் குழு மூலம் அந்த ஊழலைக் கண்டுபிடிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, செலக்ட் கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது என்று நான் சொன்னது, கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய ஒரு சட்டம் இயற்றப் பட இருக்கிறது. அதற்காகத்தான் அது அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த செலக்ட் கமிட்டியில் இதுபோன்ற ஊழல் களைத் தவிர்க்க என்னென்ன நடைமுறைகளை விதிகளில் ஏற்படுத்தலாம் என்று ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பினாமிக் கடன்களைக் கண்டுபிடிக்க ஆங்காங்கு மக்கள் குழு அமைக்கலாம் என்பது நல்ல யோசனை. எந்த அளவிற்கு அதை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர் களே, பினாமிக் கடன்களை கிராமத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் அங்கேயுள்ள ஏழை எளிய மக்கள் பெயரால் போட்டு, அவர்கள் அந்தப் பணத்தை உபயோகித்துக் கொள்கிறார்கள் என்று பல ரிப்போர்ட்டுகள் அரசுக்கு அனுப்பப் பட்டு இருக்கின்றன. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ? இனிமேலாவது குழுவை அமைத்து இதுவரையில் வந்துள்ள ரிப்போர்ட்டுகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இதுகுறித்த தகவல் இப்போது இல்லை. ஆனால் இதுபோன்ற தவறுகள், குற்றங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டவுடன், அந்தப் பணத்தை வசூல் செய்வதற்கும், அவர்கள் மீது பெனால்டி போடுவதற்கும், அவர்கள் சங்கப் பணிகளில் ஈடுபடாமல் இருப்பதற்கும் செய்வதற்கான வழிவகைகள் இருக்கின்றன.

டாக்டர் நே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த காலங்களில் இந்த பினாமி கடன் பெற்றவர்கள் யார், யார் ? இந்த பினாமி கடன்களை வழங்கியவர்கள் யார், யார்



1981 பிப்ரவரி 4]

என்ற விவரம் இருக்கிறதா ? இருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : தலைவரவர்களே, இதுகுறித்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் பினாமி கடன் வாங்குவதற்குக் காரணமாக இருந்த வருவாய்த் துறையிலுள்ள கீழ்மட்ட ஊழியர்கள், கிராமக கூட்டுறவுத்துறை அதிகாரிகளின்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### திண்டுக்கல் நகரில் குடிநீர் விநியோகம்

*வினா எண். 171—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டம் திண்டுக்கல் நகரில் குடிநீர்ப் பற்றாக் குறையை நிவர்த்திக்க என்ன முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு, திண்டுக் கல் நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 1975-ம் ஆண்டு ரூ. 14·76 லட்சம் செலவில் திண்டுக்கல்நகரில் செயலிலுள்ள குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்துவதற்கு உத்தரவு அளித்தது. இத்திட்டத்தின்படி, முன்பு சுமார் 1,50,000 மக்களுக்கு நாளொன்றுக்கு அளித்து வந்த 17 லட்சம் காலன்கள் குடி நீரை சுமார் 25 லட்சம் காலன்களாக உயர்த்தி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, திண்டுக்கல் நகரம், மதுரை மாவட்டத்திலேயே மதுரைக்கு அடுத்த பெரிய நகரமாக இருப்பதாலும் அதை இன்னொரு மாவட்டமாக பிரிக்கும் வாய்ப்பு உள்ளதாலும் தற்போது அங்கே குடிநீர் அதிகமாக பற்றாக்குறை இருப்பதால் விரைவிலே இந்த குடிநீர் பற்றாக்குறையைப் போக்க என்ன திட்டத்தை அரசு செயல் படுத்த இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 1962 ஆம் ஆண்டிலே தீட்டிய திட்டத்தின் மூலமாக, கிடைக்கக்கூடிய குடிநீர் போதாது என்று கணக்கிட்டு, 1971ஆம் ஆண்டில் 1,06,000 மக்கட் தொகை இருப்பார்கள் என்று மதிப் பிட்டு, திட்டமிடப்பட்டது. ஆனால் அங்கிருந்த மக்கள் தொகை நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக 1,28,429 பேர்கள் இருக்கிறார் கள். இதை மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். ஆகவேதான் 1975-ம் ஆண்டு திண்டுக்கல் நகருக்கும் வழியிலுள்ள ஆறு கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க 14.76 இலட்சம் ரூபாயில் மேம்பாட்டுத் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[1981 பிப்ரவரி 4

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, தற்போது திண்டுக்கல் நகருக்கு ஆத்தூர் காமராஜ் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டுசெல்லப்படுகிறது. அந்தப் பகுதியிலிருக்கிற விவசாயிகள் அந்தத் தண்ணீர் எங்களுக்குச் சொந்தம் என்று போராடி வருகிறார்கள். இதுகுறித்து அரசு அறியுமா ? என்ன நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றி அரசு அறியாது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, திண்டுக்கல் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக தண்ணீர் அதிகமாக வழங்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த 6 மாத காலமாக இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் விநியோகம் செய்யக்கூடிய கஷ்டநிலை அங்கே இருக்கிறது. அந்த அணைக்கட்டில் இருந்து வரக்கூடிய தண்ணீர் போதுமானது அல்ல என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பல முறை ரிப்போர்ட் அனுப்பி இருக்கிறார்கள். ஆகவே, கொடைக்கானலிலுள்ள பேரிஜம் லேகிலிருந்தும், வைகை அணையிலிருந்தும் இந்த நகருக்கு தண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா ? இப்போது இருக்கிற கஷ்டத்தைப் போக்க வருகிற தண்ணீரை திண்டுக்கல் நகரின் மேட்டுப்பாங்கான இடங்களுக்கும் கொடுக்க 10, 15 பகுதிகளிலே மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் கட்டி, விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய் போட்டு, இப்போது தண்ணீர் தாராளமாகக் கொடுக்க ஏரியில் போதுமான நீர் உள்ளது. ஆனால் மின்வெட்டின் காரணமாக போதுமான அளவுக்கு தண்ணீர் வழங்க முடியவில்லை. அண்மையில் மின் வெட்டு எடுக்கப்பட்டுவிட்டதால் குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்காது என்ற தகவல் என்னிடம் இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, கடந்த ஒரு மாதமாக திண்டுக்கல் நகரில் பெரும்பாலான நாட்களில் இரவு நேரத்தில் மட்டும் தண்ணீர் விடப்படுகிறது. அதை பகலிலே விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, என்னிடம் இருக்கும் தகவல்படி அண்மையில் மின்சார வெட்டு எடுக்கப்பட்டுவிட்டதால் நகரில் இனி தண்ணீர் பற்றாக்குறை இருக்காது.



1981 பிப்ரவரி 4]

## ஆரணி குடிநீர் திட்டம்

*வினா எண். 172—திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

ஆரணிக்கு தச்சூரில் இருந்து குடி தண்ணீர் கொண்டு வரும் திட்டம் எப்போது முடிவு அடையும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆரணி குடிநீர் அபிவிருத்தி திட்டம் டிசம்பர் 1980-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது இன்னும் மூன்று மாதங்களில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 9-40]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு இருக்கின்றது. குறிப்பாக ஆரணி நகரத்திலே குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அங்குள்ள குடிநீர் திட்டத்தில் 20 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் இயந்திரம் 16—8—1980 அன்று பொருத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், 50 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் இயந்திரம் பொருத்தப்படவில்லை. 50 குதிரைத் திறன் கொண்ட நீரேற்றும் இயந்திரத்தைப் பொருத்த வேண்டும் என்பது அவசர அவசியமானது என்ற உணர்வோடு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே கூறியதுபோன்று 3 மாத காலத்தில் இதனை முடிக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோபிச் செட்டிப்பாளையம் தொகுதி ஊராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*வினா எண். 173—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோபி தொகுதியைச் சார்ந்த கலிங்கியம், அயலூர், கொளப்பலூர், சிறுவலூர், கெட்டிச்சேவூர், கோஷணம், தாழ்குனி ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கோபி
ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொளப்பலூர், சிறுவலூர்,
அயலூர், கெட்டிசெயூர், கலிங்கியம், ஆகிய ஊர்களுக்கு கூட்டு
குடிநீர்த் திட்ட மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்
தின் தயாரிப்பில் இருக்கின்றன. நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்
தைச் சார்ந்த கோஷணம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு
தோண்டும் வேலை முடிவடைந்து ஏனைய வேலைகள் நடை
பெற்று வருகின்றன. தாழ்குனி ஊராட்சி 6-வது வகையைச்
சார்ந்த (நல்ல குடிநீர் ஆதாரங்கள் உள்ள சிற்றூர்) ஊராட்சி
யானதால் தற்போது அங்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம்
இல்லை.

(ஆ) தயாரிக்கப்பட்டு வரும் திட்டத்திற்கு தமிழ்நாடு குடி
நீர் வடிகால் வாரியம், தமிழக அரசு ஆகியவற்றின் ஒப்புதல்
கிடைத்தவுடன் திட்ட நிறைவேற்றப் பணிகள் தொடங்கும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, இந்
தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு
அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது இவ்வாறு பல ஆண்டு
காலமாக பரிசீலனையில் இருந்து கொண்டிருப்பதால் அந்தப் பகுதி
யிலே வாழ்கின்ற மக்கள் 100 அடி ஆழம் கிணறு தோண்டினாலும்
தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.
ஆகவே, அரசு உடனடியாக பரிசீலித்து இந்த ஆண்டே இந்தத்
திட்டத்தை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்பு
கின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வரவர்களே, விரைவில் எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்
கிறேன்.

**வடாற்காடு மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள்**

**வினா எண். 174**— திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு
தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆம்பூர்,
பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் உள்ள
தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கடந்த ஒரு மாதமாக
மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?





(ஆ) ஆம் எனில், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்
கணக்கான தொழிலாளர்களையும் தொழிலையும் பாதுகாக்க
அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை,
ஆம்பூர், காட்பாடி, திருவலம், ரத்தினகிரி, ஆகிய இடங்களில்
9 தோல் பதனிடும் நிறுவனங்கள் மூடப்பட்டு சுமார் 300
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த 9 நிறுவனங்
களில், எந்த ஒரு நிறுவனத்திலும் வேலை செய்யும் தொழி
லாளர்களின் எண்ணிக்கை 50க்கும் குறைவானதால் தொழிற்
தகராறு சட்டப்படி மூடுதல் அறிவிப்புக் கொடுக்க வேண்டிய
அவசியமில்லை. மேலும் இரண்டு நிறுவனங்கள் மூடுதல்பற்றிய
பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டபடியாலும், மீதமுள்ள 7 நிறு
வனங்கள் பற்றிய முறையான தொழிற் தகராறு எதுவும் எழுப்பப்
படவில்லையாதலாலும், தொழிற் தகராறு சட்டத்தின்படி
நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே,
மிகவும் ஏழை எளிய மக்கள் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்
பட்டு, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளில் தோல் பதனிடும்
தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றனர். அவர்கள் கடந்த
ஒரு மாத காலமாக பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள்.
ஆகவே அவர்களுக்கு தற்காலிக நிவாரணமாக ஊதியம் தரு
வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே
இப்போது இருக்கக்கூடிய நிலைமை பற்றி மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் முறையீடு செய்வார்களேயானால் அதை இந்த அரசு
கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. குலசேகர பாண்டியன் : தலைவரவர்களே, சில
தோல்பதனிடும் தொழிற்சாலைகளை இவ்வாறு ஆண்டு
தோறும் அதாவது ஆண்டுக்கு இரண்டு மாதங்கள் என்ற அளவில்
மூடிவிடுவது என்ற நிலை இருக்கின்றது. தொடர்ந்து லாபம்
கிடைக்கவில்லை என்ற நோக்கத்தினால் அப்படி மூடிவிடுகின்ற
னர். ஆகவே தொடர்ந்து அவற்றை நடத்துவதற்குரிய வகை
யிலே அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே
ஒரு தொழிற்சாலையை நடத்துவதும், அதனை நடத்தாமல்
இருப்பதும் தொழில் உரிமையாளர்களின் உரிமை என்று இந்தியத்
தலைமை நீதிமன்றமே தீர்ப்பளித்துவிட்டது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 4

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, ஹாக்பிட் டான்ட் தோல்களை ஏற்றுமதி செய்வது என்ற மத்திய அரசின் கொள்கையின் காரணமாகத்தான் வட ஆற்காடு மாவட்டத்தி லும் மற்ற இடங்களிலும் உள்ள தோல் பதனிடும் தொழிற் சாலைகள் மூடப்பட்டு விடுகின்றன என்று சொல்லப்படுகின்றது. ஆகவே மத்திய அரசின் கொள்கையை மாற்ற மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இப்பொழுது தோல்பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு தொழில் தகராறு என்கிற பிரச்னையாக அரசு இதனைக் கருதா மல் தோல் தொழிலில் ஏற்பட்டிருக்கக் கூடிய நிலைமைகளின் காரணமாக மிகவும் பின்தங்கிய பகுதியான, வறட்சிப் பகுதி யான வட ஆற்காடு மாவட்டத்தில் வாழ்கின்ற 10,000-க்கும் அதிகமான பின்தங்கிய மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற கார ணத்தினால், அதையும் கவனத்தில் கொண்டு மத்திய அரசோடு தோல் கொள்கை சம்பந்தமாக விவாதித்து, ஏற்றுமதிக்கு ஆர்டர்கள் பெறுவதற்கு உரிய முறையிலும் இத் தொழிலை வளர்க்கும் வகையிலும் கவனம் செலுத்தி ஆவன செய்வதற்கு இம் மாநில அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் :

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்டிருக் கின்ற கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால் பாதிக்கப் பட்டுள்ள 300 தொழிலாளர்களைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதோ மேஜர் பாலிசி மேட்டர் பற்றியது. அதனால் அதற்குரிய மேஜர் கேள்வியாக தனியாக போடுவாரேயானால், ஏற்ற தகவல்களையும் சேகரித்து பதில் தருவதோடு, ஏற்ற முயற்சியும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடகனாறு அணை

*வினா எண். 175—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. ப.செ. சென்னிமலை என்கிற பி.எஸ். கந்தசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977-ஆம் ஆண்டு வெள்ளத்தில் முழுமையாக உடைந்து விட்ட வேடசந்தூர் தாலுகாவில் உள்ள குடகனாறு அணையை மீண்டும் கட்டும் பணி 1980-81-ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளதா ?



1981 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : குடகனாறு அணை உடைப்பு சம்பந்தமாக விசாரிக்க ஒரு குழுவினை அரசு அமைத் தது. குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடைந்த அணை கட்டப் படுகின்றபோது, வேடசந்தூர் பகுதியில் கூடுதலாக நீர்ப்பாசன வசதி அளிக்கின்ற வகையில் கட்டப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அரசின் பரிசீல னையில் இவைகளெல்லாம் இருக்கின்றன.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணை உடைந்ததற்கே, அந்த அணை கட்டப்பட்டிருக்கிற இடம் முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறதே. ஆகவே அந்த அணையை இடம் மாற்றி லட்சுமணப்பட்டியில் கட்டுவதற்கு அரசு ஆலோசனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அரசு விரைவில் முடிவு எடுக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சிப் பகுதி முழுக்க முழுக்க வறட்சிப் பகுதியாக இருக்கிறது. இந்த அணையைக் கட்டினால், அதன் நீரை அப்படியே குளித்தலைக்குக் கொண்டு செல்லாமல், அரவக் குறிச்சிப் பகுதிக்கு அதிக அளவு தண்ணீர் கொடுப்பதற்கான அளவில் முயற்சிகள் எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் .

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலை வர் அவர்களே, ஒரு அணையைக் கட்டுகிறபோது, அண்மை யிலே இருக்கின்ற வறட்சிப் பகுதிகளையும் கவனத்தில் கொண்டு தான் கட்ட வேண்டும் என்கிற நியதி இருக்கிறது. அரசு நிச்சயமாக இந்த நியதியையும் கவனத்தில் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியில் 1977-ஆம் ஆண்டு வெள்ளத்தில் உடைந்து விட்ட குடகனாறு அணையை மீண்டும் கட்டும் பணி 1980-81-ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளதா என்பது பற்றி. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணை உடைந்ததற்கான விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

ஆகவே முதலில் அந்த அணையை விரைவில் கட்டுவதற்கு வேண்டிய வகையில் அரசு திட்டமிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே ஏற்கெனவே திட்டமிடப்பட்டு கட்டப்பட்ட அணை. அதிலே ஒரு பகுதி உடைந்துள்ளது. அதுகுறித்து குழு விசாரணை நடத்தி அறிக்கை கொடுத்து இருக்கிறது. அந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடகனாறு அணை உடைந்து விட்ட காரணத்தினால், கிருஷ்ணாபுரம் தொகுதி நான் தொடர்ந்து பாதிக்கப்பட்டு பயிர் விளைச்சலே இல்லாமல் வறட்சிப் பகுதியாக மாறி விட்டது. ஆயிரக்கணக்கான ஏக்கர் பாழடைந்து இருக்கின்றன. 1977-ல் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் காரணமாக இந்த நிலை அந்த தொகுதிக்கு ஏற்பட்டது. ஆகவே வருகிற ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசு ஏறக்குறைய 199 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறதே, அந்தத் தொகையை எடுத்தாவது உடனடியாக இந்தக் குடகனாறு அணையைக் கட்டுவதற்கான திட்டத்தை அரசு மேற்கொள்ள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வளவு தொகை இந்தக் குடகனாறு அணைத் திட்டத்திற்குத் தேவை இருக்காது. இதன் பிரச்னைகளே வேறு. இந்த அணை கட்டப்பட்ட விதம், இடம், என்ன காரணத்திற்காக உடைந்தது போன்ற விவரங்களையெல்லாம் குழு அதனுடைய அறிக்கையிலே கொடுத்து இருக்கிறது. அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதிலே இருக்கக் கூடிய தேவைகளின் அடிப்படையிலே அரசியல் நிர்ப்பந்தம் இல்லாமல், வறட்சிப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் வகையில் நிச்சயமாக அரசு நியாயமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, குடகனாறு அணை உடைப்பட்டதற்குப் பின்னர் அதற்கான விசாரணை அறிக்கையும் தரப்பட்டு நீண்டகாலம் ஆகிறது. அந்தக் குடகனாறு அணை கட்டப்பட்டதிலே தவறு ஒன்றும் இல்லை என்றும், திடீர் என்று ஏற்பட்ட பெரிய வெள்ளத்தின் காரணமாகத்தான் உடைப்பு ஏற்பட்டதாகவும் அறிக்கையின் முந்த சாரணங்களோடு சொல்லப்பட்டிருப்பதாக நானும் அறிகிறேன். ஆகவே அப்படிப்பட்ட அணை கட்டப்பட்டிருக்கையிலேயே இவ்வளவு சேதம் என்றால் கட்டப்படாத நிலையில் இருக்கும்போது, திடீர் வெள்ளம் பெரிய அளவில் ஏற்படும் காலத்தில் இன்னும் பெரிய அளவில் சேதங்கள்



ஏற்படக் கூடும். எனவே அதை அரசாங்கம் அறியுமா, அந்த வகையிலும் பயனுள்ள விதத்தில் அந்த அணையை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : குடகனாறு சம்பந்தமாக இரண்டுவிதமான அறிக்கைகளை குழு கொடுத்திருக்கிறது. ஒன்று, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக அணை உடைந்திருக்கிறது, அதற்கான காரணம் பற்றிய அறிக்கை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அந்த அறிக்கையில் இருக்கக்கூடிய சில கருத்துக்களைக் கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இரண்டாவது அறிக்கை, இந்தத் திட்டம் சம்பந்தமாக மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. அதில் முக்கியமானதொன்று, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளம் எதிர்பாராதவிதமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படக் கூடிய வெள்ளம் என்று அந்தக் குழு கருத்து தெரிவித்திருக்கிறது. எனவே மீண்டும் இன்னும் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்படி வெள்ளம் வந்தால் என்ன செய்வது என்ற வகையில் சிந்தித்து அணை கட்டுவது என்றால் கூடுதலாக பல கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கும். எனவே இன்னும் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் அது சரியாக இருக்குமா, உடனடியாக சில தேவைகளை நிறைவேற்ற என்ன செய்யலாம் என்பதில் அரசாங்கம் இரண்டாவது விஷயத்தை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

## மேல்மாந்தை குளத்திற்குக் கால்வாய்

*வினா எண். 176—திரு. ரா. கே. பெருமாள் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் ஒன்றியம் ஆத்தங்கரை அணைக்கட்டிலிருந்து மேல்மாந்தை நீர்ப்பாசனக் குளத்திற்கு தனிக் கால்வாய் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1981 பிப்ரவரி 4

## அடையாற்றுக்குத் தடுப்புச் சுவர்

* வினா எண். 177—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சைதாப்பேட்டையிலுள்ள அடையாற்றின் கரையோரமாக தடுப்புச் சுவர் அமைத்து நிரந்தர நிவாரணம் அளிக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஆம்.

திரு. து. புருஷோத்தமன் : சைதாப்பேட்டையிலுள்ள அடையாறு கரையோரப் பகுதிகள் வெள்ளம் காரணமாக நிரந்தரமாகப் பாதிக்கப்படாமல் இருக்க திட்டமுள்ளது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது எப்போது ஆரம்பிக்கப்படும் ? அடுத்த மழை வருவதற்குமுன் ஆரம்பிக்கப்படுமா ? வெள்ளம் காரணமாக அதிகமான நிவாரணப் பணிகளை அரசும் மாநகராட்சியும் செய்ய அதிமாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக இந்தத் தடுப்புச் சுவர் பணி ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்த வெள்ளச் சேத தடுப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டம் மிக முக்கியமாக கோட்டூர்புரம் பகுதியில் அந்தப் பகுதியைச் சுற்றி ஏற்கெனவே கரை அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கரை அமைக்கும் பணி தொடர்கிறது. இரண்டாவது கட்டமாக பரங்கிமலை போரூர் பாலத்திலிருந்து அடையாறு பாலம் வரை அடையாற்றில் இருமருங்கும் வெள்ளத் தடுப்புக் கரைகள் ஏற்படுத்த வேண்டுமென்று செலவில் 130 இலட்சம் ரூபாய் மதிப்பீடும் செயற்குறிப்பும் தலைமைப் பொறியாளரால் (பாசனத்துறை) அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளர் செயற்குறிப்பு மீது எம்.எம்.டி.ஏ. குறிப்புரை கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் கரைகள் அமைக்கிற பணி அடுத்த கட்டமாகத் துவங்கும். மூன்றாவது கட்டமாக தடுப்புச் சுவர் அமைக்கும் பணி துவங்கும்.

திரு. து. வ. புருஷோத்தமன்: ஏற்கெனவே சென்ற அரசு பல இடங்களில் அதிகமாகப் பாதிக்கப்படுகிற கோட்டூர்புரம், ஆற்றுச்சேரி, திடீர் நகர் போன்ற பகுதிகளில் ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணியில் ஈடுபட்டால் நிச்சயமாக வெள்ளத்தால் பாதிக்கப்படுவது குறைவாகயிருக்கும்



981 பிப்ரவரி 4]

தனால் அரசுக்கும் மாநகராட்சிக்கும் ஏற்படும் பணச் செலவும் றையும். ஆகவே உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : விரைவில் பணி தொடர்வது பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

## குளுகோஸ் தொழிற்சாலைகள்.

* வினா எண். 178—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் பகுதியில் குளுக்கோஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

* வினா எண். 179—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் '' குளுக்கோஸ் '' தொழிற்சாலை நிறுவும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. பழனிமுத்து : இந்த குளுக்கோஸ் தொழிற்சாலையை ஆத்தூரில் ஏற்படுத்த வேண்டுமென்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும், தொழில் மைய இயக்குநரும் சிபாரிசு செய்து அனுப்பியுள்ளார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் இடங்களைக் கூடப் பார்த்து கல்பனூரில் ஐந்து ஏக்கர்

புறம்போக்கு நிலம் இருக்கிறது என்றும் அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்கலாம் என்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்து அனுப்பியுள்ளார் என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே பெருமளவில் விளைகின்ற மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்துகின்ற விதத்திலே தமிழ்நாட்டிலே குளுக்கோஸ் தொழிற்சாலை, அதாவது குளுக்கோஸ் காம்ப்ளெக்ஸ் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை 'டிட்கோ' தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சேலம் மாவட்டத்திலே எந்தத் தாலுக்காவிலே துவங்குவது என்பது, இந்த ஆய்வு முடிந்ததற்குப் பின்னாலே முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசு அச்சுத்துறை ஊழியர்களுக்கு மருத்துவ விடுப்பு

வினா எண். 180—திரு. செ. செம்மலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் மற்றத்துறை ஊழியர்களுக்கு அவர்களுடைய பணிக்காலம் முழுமைக்குமாக 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு அனுமதிக்கப்பட்டு இருக்கும்போது அரசினர் எழுதுபொருள், அச்சுத்துறையின் நுட்பப் பணியாளர்களுக்கு மட்டும் ( Technical Employees ) 12 மாதம் அனுமதிக்கப்பட்டிருப்பதின் காரணம் என்ன ?

(ஆ) அவர்களுக்கும் 18 மாதங்கள் அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :—

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கென விதிக்கப்பட்டுள்ள விடுமுறை விதிகளின்படி, அவர்களுக்கு 12 மாதங்களே மருத்துவ விடுப்பு உண்டு. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, தொழில் வகையைச் சார்ந்ததா அல்லது அரசுத் துறைவகையைச் சார்ந்ததா என்னும் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளதால், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை மேற்குறித்த கேள்வியின்மீது ஏற்படும் முடிவுக்குப் பின்னரே பரிசீலிக்க இயலும்.



திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினிஸ்டீரியல் சர்வீசிலே உள்ளவர்களுக்கு 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு என்றும், டெக்னிகல் எம்பிளாய்சுக்கு 12 மாதங்கள் மருத்துவ விடுப்பு என்றும் இருப்பது ஏதோ ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதுபோல் தோன்றுகிறது. எனவே, டெக்னிகல் எம்பிளாய்சுக்கு ஏதாவது சிறப்பு விடுப்பு கொடுக்க அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும், அரசுப் பணியாளர்களுக்கும் தனித்தனியான விடுப்பு விதிமுறைகள் உண்டு. அந்த விதிமுறைகளின்படி தொழில்நுட்பப் பணியாளர்கள் என்ற முறையில் அவர்களுக்கான வேறு சில சலுகைகள் வழங்கப்படுகின்றன. அண்டர் தி ஓர்க்மென்ஸ் காம்பென்சேஷன் ஆக்ட், இவர்களுக்காகப் பணி நேரத்தின்போது ஏற்படும் விபத்தை பொருட்படுத்தி, இவர்களுக்குப் பாதி சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட்டு வருகின்றது. தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு ஒரு விபத்தின்போது 2 ஆண்டுகள் அல்லது 5 ஆண்டுகள் அல்லது அவர்களுடைய மொத்த பணிக் காலத்திற்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் மற்ற ஊழியர்களுக்குக் கிடைப்பதுபோல், அரசு எழுதுபொருள் அச்சக தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் 18 மாதங்கள் மருத்துவ விடுப்ப கொடுப்பதில்லை. ஆனால், அதுபற்றி பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவர்களுக்கும், எழுதுபொருள் அச்சகத் துறையிலே உள்ள பணியாளர்களுக்கும் மற்ற அரசுத் துறைகளிலே உள்ளவர்களுக்கு கொடுப்பதுபோல் 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு கொடுப்பதற்கு சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனைக்குப் பிறகுதான் முடிவெடுக்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் எழுப்பிய அதே வினாவில் அடங்கிய பொருள்பற்றி கடந்த நிதிநிலை அறிக்கையின்மீது நான் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியதற்குப் பிறகு தொடர் நடவடிக்கையாக அரசு சில முடிவுகளை எடுப்பது வழக்கம். ஆனால், 7, 8 மாதங்கள் ஆகியும் இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக, ஆலோசனையில் இருப்பதாக

அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஆலோசனையை விரைவுபடுத்தி, சீக்கிரமாக முடிவெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

2. உரிமைப் பிரச்சினை.

திரு. ரகுமான்கான் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு டாக்டர் சமரசம் அவர்கள் 246-வது விதியின்கீழ் அவை உரிமை மீறல் பற்றிய அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். இந்தப் பிரச்சி னையை எழுப்ப நான் அனுமதியளிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 247-ன் கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினை எழுப்ப, பேரவைத் தலைவர் அவர்களின் இசைவைக் கோருகிறேன்.

கடந்த ஜனவரி 24 ஆம் தேதியன்று இந்த அவையில்
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆளுநர்
உரையின் மீதான விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசுகையில்
வன இலாக்கா சம்பந்தமாக 'ரெட் சான்டல்ஸ்' மர ஏற்றுமதியில்
ஒரு பெரிய தவறு அல்லது ஊழல் அரசுக்குத் தெரிந்து வேண்டு
மென்றே நடைபெற்றதாக பகிரங்கமாக குற்றம் சாட்டும் வகை
யில் கூறி அதற்கான ஆதாரத்தை அவர் தரத் தயாராக இருப்ப
தாகக் கூறி, மேலும் அரசினால் அதன் மீது போடப்பட்ட
வழக்குகளும், அதற்கான பொறுப்பு வகிக்கும் அமைச்சரால்
அரசாணை வெளியிடப்பட்டு, அந்த அரசாணையும் கையில்
வைத்திருப்பதாகக் கூறினார். மாண்புமிகு அமைச்சர் திரு
ஆர். எம். வீரப்பன் அவர்கள் விளக்கமாக ஒரு தன்னிலை விளக்
கத்தினை அறிவித்துள்ளார்கள். இதனால் மாண்புமிகு உறுப்
பினர் ரகுமான்கான் அவர்கள் வேண்டுமென்றே இந்த
அவைக்கு பொறுப்பான அமைச்சர் மீது களங்கம் கற்பிக்கும்



வகையிலும், பேரவையை திசை திருப்பும் வகையிலும் தெரிந்
திருந்தும் வேண்டுமென்றே தவறான தகவல்களை, குற்றச்
சாட்டுகளை அவை முன் வைத்து, பேரவையில் பேசும் உரிமை
மையை தவறாகப் பயன்படுத்தி பேரவையின் கண்ணியத்
தைக் குறைக்கும் வகையில் பேசியுள்ளார். பேரவைக்குக்
களங்கம் ஏற்படுத்தியுள்ளார் என்பதால் பேரவை உரிமை மீறல்
குற்றத்திற்கு ஆளாகின்றார். எனவே, இப் பிரச்சினை அவை
உரிமை மீறிய பிரச்சினை ஆகும். எனவே, இப்பிரச்சினை
குறித்து எழுப்ப பேரவைத் தலைவர் இசைவு கொடுத்து இப்
பிரச்சினையைத் தீர ஆராய்வதற்கு பேரவை உரிமைக் குழுவிற்கு
அனுப்ப வேண்டுமென்பதற்கான அறிவிப்பைக் கொடுத்திருக்
கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான்
அவர்கள் இந்தச் சட்டப்பேரவையில் கடந்த ஜனவரி 24-ஆம்
தேதி பேசுகின்றபோது அவர் பல குற்றச்சாட்டுகளை இந்த
அரசின்மீது கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கிறபோது
அதிலே மிக முக்கியமாக குறிப்பிட்டுச் சொன்ன குற்றச்சாட்டுகள்
பல. அவர் பேசிய நேரம் ஏறத்தாழ 40 நிமிஷம். பேசிய
உரையின் பக்கங்கள் சுமார் 30. அதிலே ஒரு பக்கத்திலுள்ள
விஷயத்தில் பத்து குற்றச்சாட்டுகளை இந்த அரசின் மீது கொடுத்
திருக்கிறார்கள். அதிலே முக்கியமான குற்றச்சாட்டு என்று
சொல்லக்கூடியதில் ஒன்று—'' பாரஸ்ட் ஆக்டின்படி அந்த மரங்
களை யாரும் வெட்டக்கூடாது, விற்கக் கூடாது '' என்று
சொல்லுகிறார். எங்கே இருக்கிறது அந்த ஆக்ட் ? அதைக்
கொண்டு வந்து சபாநாயகரிடம் காட்டட்டும். இரண்டாவது
குற்றச்சாட்டு—60 இலட்சம் பெறுமானமுள்ள ரெட் சான்டல்
மரங்கள் பாரஸ்ட் ஆக்டுக்கு விரோதமாக வெட்டப்பட்டன என்
கிறார். 60 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள மரங்கள் எங்கே
வெட்டப்பட்டன ? 60 இலட்சம் ரூபாய் மதிப்பு என்று போட்
டவர்கள் யார் ? அதைப் பற்றிய விளக்கங்களை பேரவைத்
தலைவர் அவர்களிடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமர்ப்
பிக்க வேண்டும்.

அடுத்து, 60 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ரெட் சாண்
டல் மரங்கள் வெட்டப்பட்டு, சில வியாபாரிகள் மெட்ராஸ்
ஹார்பரில் இருந்து ஜப்பானுக்கு கப்பல் மூலம் ஏற்றுமதி செய்து
அனுப்புகிறார்கள் என்ற குற்றச்சாட்டு. யார் அந்த வியாபாரி ?
பெயர் என்ன ? விவரம் அறிவிக்க வேண்டும்.

அடுத்து '' அதிகாரிகள் அதைக் கண்டு பிடித்து அவர்கள்மீது
வழக்குப் போடுகிறார்கள் '' என்கிறார். யார் அந்த அதிகாரி
கள் ? போட்ட வழக்குகள் என்ன ? கிரிமினல் கேசா ? கோர்ட்
டில் பெண்டிங்காக இருக்கிறது என்றால் எந்தக் கோர்ட்டில்

பெண்டிங்காக இருக்கிறது? "திடீரென்று அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படுகிறது" என்கிறார். இப்படி போடப்பட்ட வழக்கு எப்போது வாபஸ் ஆனது?

"இந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட வேண்டுமென்று உத்தரவு போடுவது யார் தெரியுமா? நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர்" என்று சொல்லுகிறார். அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டார்கள் என்றால் உத்தரவு எங்கே? எப்போது வாபஸ் வாங்கினார் என்பதைப் பற்றி பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் கொடுக்க வேண்டும்.

உறுப்பினர் அவர்கள், "உத்தரவுகளைக் கையில் வைத்திருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். பேசிய குற்றச்சாட்டுகளுக்கு கையில் ஆதாரம் வைத்திருப்பதாக அவர் சொன்னார். அதை உடனடியாக அவர் பேரவைத் தலைவரிடத்தில் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினால் அவருக்குள்ள உரிமையை, உறுப்பினர் என்ற உரிமையை பேரவையைப் பாதிக்கும் அளவுக்கு திசை திருப்பக்கூடிய வகையில் கூறியிருக்கும் கருத்துக்கள் இந்த அவை மரபை மீறி கொண்டு வந்திருக்கிற காரணத்தால் அவர் உறுப்பினர் பொறுப்பையே கூட இழக்க வேண்டிய அளவுக்குப் பாதிக்கும்.

1882 ஆவது வருஷ வனச் சட்டம் இயற்றப்படுகிறது. 1979 இல் ஆக்ட் 45-இல் திருத்த வனச் சட்டம் வருகிறது. செப்டம்பர் 5, 1979-இல் ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கிறார். 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ஆம் நாள் அன்று தமிழ்நாடு கெஜட்டில் வெளியாகியிருக்கிறது. இரண்டாவது பிரிவில் "ஷெட்யூல்டு மரங்கள்" என்று சொல்லக்கூடிய வகையில் ஆறுவகை மரங்கள் இருக்கின்றன. அந்த மரங்களை எப்படி எப்படி வெட்டுவது என்பதற்கான அதிகாரங்களை 56 இ பிரிவின்படி அரசாங்கம் தன் கையில் வைத்திருக்கிறது. இந்த அளவில் நிலைமை இருக்கும்போது உறுப்பினர் அந்தச் சட்டத்தைக் கையில் வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதன் மீது தகுந்த ஆதாரங்களை அவர்கள் கொண்டுவருவார்களானால் அவற்றை உரிமைக் குழுவிற்கு அனுப்பி அதன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### உரிமைப் பிரச்சினை

### (3) ஒழுங்குப் பிரச்சினையை மொழியும்போது விரிவாகப் பேச அனுமதித்தல்.

***திரு. க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், தாங்கள் இருக்கிற மிகப் பெரிய சபாநாயகர் பொறுப்பிலேயிருந்து, உரிமைப் பிரச்சினை என்ற பெய



ரால் விவாதத்திற்கு சொல்ல வேண்டிய பதில் விவாதத்திலே சொல்ல வேண்டிய பதில் ஆகியவற்றை உள்ளடக்கி பேசுவதற்கு தங்கள் அனுமதி தந்திருப்பது ஒரு தவறான முன் மாதிரி ஆகும், என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். குற்றச்சாட்டுகள் உண்மையா அல்லவா என்பதை எதிர்க்கட்சியோ ஆளுங்கட்சியோ சொல்வதற்கு உரிமை படைத்தவை. சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டு உண்மையல்ல என்பதும், அது முடிவான செய்தியாகிவிட்டது என்ற நிலைமையும் இன்றைக்கும் இல்லை. உரிமைப் பிரச்சினையை எழுப்புகிற மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கருத்தை மட்டும் கூறினால் அது வேறு—அப்போதுகூட அது உரிமைப் பிரச்சினையா என்பது கேள்விக்கு உரியது—சட்டமன்றத்திலே எழுப்பப்படுகிற பிரச்சினைக்கு பதில் அளிக்கக் கூடிய உரிமை இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை, பதில் அளிக்க வேண்டிய அமைச்சர் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறார். தன்னிலை விளக்கம் என்ற பெயரால். அது தன்னிலை விளக்கத்திற்கு உட்பட்டதா என்பதும் அவர் அமைச்சர் பொறுப்பிலே இருக்கிற காரணத்தினால் அதுவும் கேள்விக்குரியது. தன்னிலை விளக்கமும் தன் பேச்சை ஒட்டியும் மாற்றுக் கட்சியினர் பேசிய பேச்சை ஒட்டியும் எடுத்துச் சொன்ன காரணத்தினால் அது முழு விவாதத்திற்கும் பதில் ஆகும். ஆளுங் கட்சி, விவாதத்திற்குப் பதில் அளிப்பதன் மூலம் குற்றச்சாட்டை நிராகரிக்கிற மறுக்கிற வகையில் அதிலே உள்ள குறைகளை எடுத்துக்காட்ட உரிமை இருக்கிறது. கவர்னர் உரையிலே விவாதம் நடைபெறுகிறபோது பொதுவான குற்றச்சாட்டுகள் வருவது இயற்கை. அந்தக் குற்றச்சாட்டை சொன்ன முறை சரியில்லை என்றால் இன்னும் தெளிவாகச் சொல்ல எதிர்க்கட்சிக்கு வாய்ப்புக்கிடைக்கிறபோது சொல்லக்கூடும். ஆனால், குற்றச்சாட்டு என்ற பெயரை வைத்துக்கொண்டு சட்டமன்ற உறுப்பினர் இந்த விவாதத்திலே பேசிய பேச்சிலே தங்களுக்கு மாறுபாடு இருக்கிற காரணத்தினாலே, உரிமைப் பிரச்சினை என்று எழுப்ப ஆரம்பித்தால் ஒவ்வொரு அமைச்சருடைய பேச்சிலும் இடையிலே வருகிற வார்த்தைகளை வைத்துக்கொண்டு உரிமைப்பிரச்சினை எழ நேரிடும். ஆகவே, தவறான முன்மாதிரியாக இதை தாங்கள் ஆக்கிவிட மாட்டீர்கள் என்று நம்புகிறேன். (குறுக்கீடு). இது ஒரு தவறான முன் மாதிரி ஆவதை தாங்கள் எப்படியோ, அறிந்தோ அறியாமலோ அதை முறை என்று எடுத்துக்கொண்டோ அனுமதித்தால், விவாதத்திற்குத் தேவையான கருத்துக்களை எல்லாம் பதில் சொல்வதற்குத் தேவையான கருத்துக்களையெல்லாம் தாங்கள் அனுமதித்தால், தாங்கள் தவறான முன்மாதிரியை முறை என்று ஏற்றுக்கொண்டால் பின்னர் அதே முறை தொடரும் என்பதை நான் பணிவோடு தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேராசிரியர் ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார். இதற்கு முன்னாலே நடைபெற்ற சம்பவங்களில், உரிமைப் பிரச்சினைகளில், தனிப்பட்ட

சில குற்றச்சாட்டுகள் சொல்லுகிறபோது அந்தப் பிரச்சினைகளில் அப்படிப்பட்ட விவாதங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகைதான் பின்பற்றப்படுகிறதே தவிர இது புது முன்மாதிரி அல்ல.

**திரு. க. அன்பழகன் :** உரிமைப் பிரச்சினை ஒன்றை இந்த அவையிலே சொல்வதற்கு அனுமதித்த பின்னர், தாங்கள் அனுமதி அளித்திருக்கிறீர்கள் என்று உறுப்பினரும் சொன்னதற்குப் பின்னர் அது இந்த அவையினுடைய உரிமை ஆகிவிடுகிறது. சட்டமன்ற உறுப்பினர் அவர் பாதிக்கப்படுவதற்காக அவர் சொல்லலாம் என்றாலும் ஒரு அவையிலே இந்த உரிமைப் பிரச்சினை வரலாமா என்பது அவையிலே இருக்கிற ஒவ்வொரு உறுப்பினருடைய கடமை உணர்வோடு கலந்த ஒரு பிரச்சினை. ஆகவேதான் நான் குறுக்கிட்டு என்னுடைய வேண்டுகோளைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உரிமை மீறல் பிரச்சினை பற்றி அவர்கள் இரண்டு பேரும்தான் பேசலாம். அவர் சொல்லி, பிறகு இவர் பேசி அதற்குப் பிறகு தீர்ப்புதான். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னதால் நான் அவர்களை அனுமதித்தேன்.

**Dr. K. SOURIRAJAN :** On a point of order, Sir. Can the allegations of an hon. Member become the subject-matter of privilege issue. I want your ruling on this. Then nobody can raise any allegation at all.

அப்படியானால் குற்றச்சாட்டுகளை அவையிலே உறுப்பினர்கள் சொல்லவே முடியாது. குற்றச்சாட்டு என்பது பிரிவிலேஜ் இஷ்யூவினுடைய சப்ஜெக்ட் மேட்டராக வருமானால் சபையிலே யாரும் குற்றச்சாட்டு சொல்லவே முடியாது.

[முற்பகல் 10–10]

*** டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, பொதுவாக அவையில் இப்படிப் பல குற்றச்சாட்டுகள் வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், ஒரு போலீஸ் லாக்கப்பில் யாரோ ஒருவர் இறந்துவிடுகிறார் ; அதை வைத்து எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அவர் போலீஸ் லாக்கப்பில் அடித்துக் கொல்லப்பட்டார் என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, அதற்கு அமைச்சரவர்கள் எழுந்து விளக்கம் சொல்லுகின்றபொழுது. உறுப்பினர் சொல்வது தவறு, அடித்துக் கொல்லப்படவில்லை, தற்கொலைதான் செய்து கொண்டார் என்று போலீஸ் தரப்பிலேயிருந்து பெற்ற தகவலைக் கொண்டு அமைச்சர் பதில் சொல்கிறார். மறுநாளே, போலீஸ் லாக்கப்பில் அடித்துக் கொல்லப்பட்டார் என்று சொன்ன உறுப்பினர் மீது உரிமைப் பிரச்சனை கொண்டு வருவது எப்படிச் சரியாகும் ?





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடித்துக் கொல்லப்பட் டார் என்று பொதுவாகச் சொல்வது வேறு விஷயம். ஆனால், அதே நேரத்தில் அது சம்பந்தப்பட்ட இலாக்காவை வைத்திருக் கின்ற அமைச்சர் சொல்லித்தான் அடித்துக் கொல்லப்பட்டார் என்று சொன்னால் அப்பொழுதுதான் பிரச்னை வருகிறது. எனவே, இது தனிப்பட்ட ஒரு குற்றச்சாட்டாக வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தனிப் பட்ட குற்றச்சாட்டை அமைச்சர் மீது சொன்னதைப்பற்றித்தான் உரிமைப் பிரச்னை வந்திருக்கிறது. இதுபோல் முன்பு பேசப் பட்டு தீர்ப்பெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது ; அவைக் குறிப் பிலே இருக்கிறது. அமைச்சர் மீது தனிப்பட்ட ஒரு குற்றச் சாட்டாக இருப்பதால் இந்த விவாதம் வருகிறதே தவிர இல்லா விட்டால் இந்தப் பிரச்சினை வராது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, சாதாரணமாக ஒரு குற்றச்சாட்டைச்சொல்லி, அதற்கு அமைச்சர் பதில் சொல்வதற்கு முன்னால், குற்றச்சாட்டு சொன்னதற்காக உரிமை மீறல் பிரச்னை கொண்டுவரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார் ; அரசுத் தரப் பிலேயிருந்து அமைச்சரவர்களும் பதில் சொன்னார். ஆனால், அந்தப் பதில் தவறு, உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறார் என்ற உரிமைப் பிரச்சினையை, யார் குற்றச்சாட்டை சுமத் தினாரோ அந்த உறுப்பினரே அமைச்சர் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார். பிறகு அதற்கும் அமைச்சர் பதில் சொன் னார். இரண்டாவது தடவையும் வேண்டுமென்றே அவர் கொண்டுவந்தார் என்று சொல்லி, தகுந்த ஆதாரங்கள், அவர் சொன்ன ஜீ.ஓ. அதெல்லாம், இல்லை, எனவே, வேண்டுமென்றே கொண்டு வந்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொண்டு வந்தார். இது நான்காவது தடவையாக வருகிறது. சப்சிகுண்டாகக் குற்றச்சாட்டுச் சொல்லி, அதற்கு அமைச்சர் பதில் சொல்லி, ஆகவே, ஏன் குற்றச்சாட்டு சொன்னார் என்று அவர் மீது கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்னை அல்ல இது. அமைச்சர் பதில் சொல்லி, அப்படி அமைச்சர் சொன்ன பதில் தவறு என்று மீண்டும் அமைச்சர் மீது ஒரு உரிமை மீறல் பிரச் னையைக் கொண்டு வந்து என்னிடத்திலே ஆதாரம் இருக்கிறது. ஜீ.ஓ. காப்பி இருக்கிறது என்றெல்லாம் அவர் சொன்னார். அப்படி அவர் சொன்னதற்குப் பின்னாலேதான் மீண்டும் ஒரு தவறான தகவலை உறுப்பினர் கொடுத்திருக்கிறார் ; வேண்டு மென்றே மூன்றாவது தடவையும் அமைச்சர் மீது குற்றஞ்சாட்டி உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார் என்று உறுப்பினரவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, சாதாரண மாகக் குற்றச் சாட்டே சொல்லக்கூடாதா ? குற்றச்சாட்டு சொன் னால் உரிமை மீறல் பிரச்னையா என்ற வாதம் சம்பந்தப்பட்ட இந்த பிரச்னைக்குப் பொருந்தாது என்று மாண்புமிகு தலைவ ரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 4

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குற்றச்சாட்டு எதையோ சொல்கிறார். அமைச்சர் அந்தக் குற்றச்சாட்டில் சொல்லப்பட்ட கருத்துக்களை மறுத்து தான் ஏற்கெனவே தெரிவித்த கருத்துக்களுக்கு விளக்கம் அளிக்கிறார்கள். அந்த விளக்கம் அளிக்கிற பொழுது அவர் தெரிவித்த உண்மை, ஏற்கெனவே தெரிவித்த உண்மைக்கு முரண்படுகின்றது என்ற அடிப்படையில், பேசப்பட்ட வாதத்தின் மீது உரிமைப் பிரச்சினை எழுகிறது. அப்படி எழுகிற பொழுது முன்பு சொன்னது வேறு, இப்பொழுது சொல்வது வேறு என்ற உரிமைப் பிரச்சினை எழுகிறது. அதில் உரிமைப் பிரச்சினை உண்டா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் மூலக் குற்றச்சாட்டுக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லிய பிறகு, அதில் சில பகுதிகள் ஏற்றுக் கொள்ளப்படும், சில பகுதிகள் உண்மைக்கு மாறானவை என்றும் உரிமைப் பிரச்சினை வருகிறபொழுது, மூலக் குற்றச்சாட்டே தப்பு என்று உரிமைப் பிரச்சினை எழுப்பப்படுமேயானால் வழக்குக்கு பதில் வழக்கு என்ற வழக்காகுமே தவிர இது வழக்காக நிற்கக் கூடியது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். தனிப்பட்ட முறையிலே குற்றச் சாட்டைக் கூறியதால்தான் உரிமைப் பிரச்சினையை எழுப்பி, அந்தப் பிரச்சினைக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறார் டாக்டர் சமரசம் அவர்கள்.

திரு. க. அன்பழகன் : மன்னிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களிலே குறுக்கிடுவதாக நினைக்க வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இந்த அவையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது..........

திரு. க. அன்பழகன் : இப்பொழுது நான் கொஞ்சம் விளக்கமாகப் பேசினாலும் மன்னித்துக் கொள்ளுங்கள். திரு. ரகுமான் கான் சில குற்றச்சாட்டை, சரியோ, தவறோ, இந்த அவையிலே சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சர் ஒரு பதில் தந்து தன்னிலை விளக்கம் தந்தார். அந்தத் தன்னிலை விளக்கம் தந்த அமைச்சருடைய கருத்தின் அடிப்படையிலே ஒரு உரிமை எழுகிறது. அதில் உரிமை மீறல் உண்டா. இல்லையா என்று இன்னும் நீங்கள் தீர்மானிக்கவே இல்லை. அந்த உரிமைப் பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டதே தவிர, உண்டா, அல்லவா என்று இன்னும் தாங்கள் தீர்மானிக்கவில்லை. அதற்கு மேல் ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத்தான் மறுபடியும் வாதம் வந்து ஒரு உரிமைப் பிரச்சினை வரலாமே தவிர, ஆனால் அதுவே விவாதத்திலே இருக்கும்போது, அதற்கு முன்னாலே சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு, இப்பொழுது உரிமைப் பிரச்சினை வருவது



1981 பிப்ரவரி 4] [திரு. க. அன்பழகன்]

என்பது நியாயமா, அவசியமா ? அப்படியானால், வாதங்கள் நடைபெற முடியுமா ? அதையும் தாங்கள் தயவு செய்து எண்ணிப் பார்த்து பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சமரசம், இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா ? (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. திருநாவுக்கரசு என்ன சொல்ல வேண்டுமென்று நினைக்கிறீர்கள். உறுப்பினர் பேசி முடித்து விட்டாரா, இல்லையா, என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேனே ?............

டாக்டர் கே. சமரசம் : நான் பதில் சொல்லி விடுகிறேன். (கூச்சல்-குழப்பம்) என்னைப் பேச விடுங்கள், ஏன் ஆத்திரப்பட வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்ற பொழுது பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் அப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருந்து, அதற்கு அமைச்சர் பதில் சொல்லியிருந்தால் அது பற்றி பிரச்சினை. இல்லை. ஆனால், அது ஸ்பெசிபிக் என்று அவர் பேசுகின்ற பொழுது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது, நான் சொல்வதை அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கவனமாக, ஆத்திரப்படாமல் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சருக்காகவே,...... (கூச்சல்-குழப்பம்).

திரு. ஜே. எஸ். இராசு : அவர் ஏற்கெனவே பேசி முடித்து விட்டார். முடித்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசி முடித்து விட்டேன் என்று அவர் அல்லவா சொல்ல வேண்டும். பேசி முடித்து விட்ட தாக, நீங்கள் அடி எடுத்துக் கொடுத்தால் எப்படி ?

திரு. அன்பில் தர்மலிங்கம் : அவர் பேசி முடித்து விட்டதாகச் சொல்லிவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசிக் கொண்டிருக்கும்போது, பேராசிரியர் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்.

[1981 பிப்ரவரி 4

திரு. ஜே. எஸ். இராசு : பேசி முடித்து விட்டதாக அவரே சொல்லிவிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரே, தான் பேசி முடிக்கவில்லையென்று சொல்லும்போது, என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்).

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கூட நான் எழுப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டரிலே, அவர் எழுந்து மறுபடியும் ஒரு பிரச்னையைப் பற்றி பேசுவதாக இருந்தால் பேசலாமே தவிர, அவர் பேசி முடித்ததற்குப் பின்னால்தான் நான் தங்கள் அனுமதி பெற்று பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று இந்தப் பிரச்னையை எழுப்பியுள்ளேன். அவர் பேசும்பொழுது நான் குறுக்கிடவில்லை. நான் பேசியதிலே அவர் ஒரு நியாயம் சொல்ல வேண்டிய அவசியம் வந்து, பாயின்ட் ஆஃப் ஆர்டர் சொல்ல வேண்டுமானால் சொல்லலாமே தவிர, முதலிலே அவர் பேசிய பேச்சு முடியவில்லையென்ற அடிப்படையிலே தாங்கள் அழைப்பது என்பது நடைபெற்ற நிகழ்ச்சிக்கு முரணானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சமரசம். எதிர்க் கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டரிலே ஏதாவது விளக்கம் அளிக்க வேண்டியிருந்தால் அதுபற்றி மட்டும் சொல்லுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்றபொழுது, பொதுவாக ஒரு அரசு மீது சொன்னால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னது சரிதான். ஆனால், தனியாக, ஸ்பெசிபிக் என்று நோட் செய்து, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபொழுது, முதலமைச்சருக்காகவே ஆதாரத்தோடு கொண்டு வந்திருக்கிறேன்; ஆதாரத்தைக் கையில் வைத்திருக்கிறேன் என்று சொல்லி, ஜி.ஓ. எல்லாம் இங்கே காட்டினார். என்னிடத்திலேயும் ஜி.ஓ. இருக்கிறது. அவர் எந்த ஜி.ஓ. வைக் காட்டியிருக்கிறாரோ, அந்த ஜி.ஓ. வை நானும் கூட வைத்துக் கொண்டு பேசுகிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சமரசம், அது பேராசிரியர் சொன்னது அல்ல. நீங்கள் வாதப் பிரதிவாதங்களுக்குப் போகாதீர்கள். திரு. ரகுமான்கான் பதில் சொல்லட்டும்.

டாக்டர் கே. சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்பளிக்கவேண்டும்.



1981 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் ஒரு குற்றச்சாட்டு சொல்லி, மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். திரு. சமரசம் ஒரு குற்றச்சாட்டு சொல்லி அதற்கு திரு. ரகுமான்கான் பதில் சொன்ன பிறகுதான் தீர்ப்பு வழங்கப்படும்.

(முற்பகல் 10-20)

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுகோள், ரகுமான்கான் அவர்களுடைய உரிமைப் பிரச்சினைப் பற்றியோ, அல்லது திரு. சமரசம் அவர்களுடைய உரிமைப் பிரச்சினைப் பற்றியோ அல்ல. அதிலே குறுக்கிடவில்லை. யார் சொல்லுகிற குற்றச்சாட்டு சரி என்கிற வாதத்திலே நான் இறங்கவில்லை. அவர் இந்தக் கருத்துக்களைச் சொல்லலாமா என்று கூட நான் கேட்கவில்லை. திரு. சமரசம் அவர்களுடைய பேச்சிலேயே அவர் ஒரு உரிமையை மீறினார் என்றுதான் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்புவதாகக் குறிப்பிட்டார். அது அவர் பேச்சிலேயே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரண்டு பேருடைய கருத்துக்களையும் கேட்டாக வேண்டும். அப்படிக் கேட்பதை நான் தவிர்ப்பதற்கில்லை. அதுதான் முறை. கேட்டதற்குப் பின்னர் தான் நான் முடிவு சொல்ல வேண்டும்.

டாக்டர் கே. சௌந்திரராஜன் : I want a ruling from the Chair.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, என்றைக்கு இந்த உரிமைப் பிரச்சினையை டாக்டர் சமரசம் அவர்கள் கொடுத்தாரோ, அன்றைக்கே அந்த உரிமை மீறலை திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துக் கொள்ளச் சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அன்றைக்கே எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள். இன்றைக்கு எடுத்துக் கொண்டு விட்டீர்கள். எடுத்துக் கொண்டதற்குப் பின்னாலே பதில் சொல்வதுதான் முறை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் மறுக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதை எல்லாம் இந்த அவை செய்யும் என்று சொன்னால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இங்கு உள்ள பிரச்சினை, இந்த உரிமைப் பிரச்சினையாக எழுப்பலாமா என்ற கேள்வியை நான் கேட்கிறேன். அது அவையின் நலனைக் கருதியே தவிர, கட்சி நலனுக்காக நான் கேட்கவில்லை. ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன்னால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு, ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, அது இன்னும் எடுத்துக் கொள்ளப்படாத ஒரு உரிமைப் பிரச்சினையாக இந்த அவையிலே

[திரு. க. அன்பழகன்] [1981 பிப்ரவரி 4

இருக்கிறது. இந்த நிலையிலே அந்த உரிமைப் பிரச்சினையைத் தழுவி அதற்கு முன்னாலே பேசப்பட்ட பேச்சுகட்கு, மறுபடியும் ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பப்படுவதை, உரிமைப் பிரச்சினை என்ற பெயராலே தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? அல்லது ஏற்பட்ட உரிமைப் பிரச்சினையிலே இத்தனை பிரச்சினைகளை யும் கலந்து பேசுவதற்கான வாய்ப்பை நீங்கள் அளிக்கப் போகிறீர் களா என்பதே எனது கேள்வியாகும். (கூச்சல்-குழப்பம்).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, டாக்டர் சமரசம் அவர்கள் பேசியதன் பேரிலே நான் ஒரு உரிமைப் பிரச் சினையை நாளைக்குக் கொண்டு வரலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொண்டு வரலாம். கொண்டு வாருங்கள்.

Dr. K. SOURIRAJAN : I want your ruling Sir.

Mr. SPEAKER: The ruling will not be given now. The Hon. Member may please patiently hear what the Hon. Member Thiru Rahman Khan has to say.

2. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

ரகுமான்கான் மீது

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சமரசம் அவர்கள் என்மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24-ம் தேதியன்று இந்தப் பேரவையிலே ரெட் சான்டர்ஸ் என்ற சிகப்பு சந்தன மரத்தை செட்யூல் ஆப் டிம்பரிலிருந்து நீக்கப்பட்டு, அரசு உத்தரவின் மூலமாக ஊழல் நடைபெற்றதாக நான் குறிப்பிட்டேன். இது சம்பந்தமாக எனக்கு கிடைத்த தகவல்களைப் பரிசீலனைசெய்து அந்தத் தகவல்கள் சரியான தகவல்கள்தான் என்ற நம்பிக்கை யோடு அந்தத் தகவல்களை பரிசீலனை செய்ததற்குப் பிறகு தான் இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். ரெட் சான்டர்ஸ் மரங்கள் சட்ட விரோதமாக வெட்டப்பட்டு சென்னைத் துறைமுகத்தின் வழியாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது என்று நான் இந்த அவையிலே சொன்ன தக வல்கள் [illegible] மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார் மறுக்கவில்லை. அந்தத் தகவல் உண்மை என்று ஏற்றும் கொண்டிருக்கிறார்கள்.



1981 பிப்ரவரி 4] [திரு. அ. ரகுமான்கான்]

இரண்டாவது, இந்த ரெட் சான்டர்ஸ் மரங்கள் ஜப்பானுக்கு
ஏற்றுமதி செய்யப்பட்டது சம்பந்தமாக வழக்குகள் இருப்பதை
யும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு
இருக்கிறார்கள். அவருடைய தன்னிலை விளக்கத்திலேயே
'ரிட் அப்பீல்' பெண்டிங்காக இருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். அதைப்போலவே, 'ரெட் சான்டர்ஸ் எக்ஸ்போர்ட்
அசோசியேஷன்' அரசுக்கு மனு கொடுத்தது—என்ற தகவலை
நான் இங்கே சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் ஒப்புக்
கொண்டு இருக்கிறார். மறுக்கவில்லை. அதைப்போலவே,
ரெட் சான்டர்ஸ் அசோசியேஷன் தன்னுடைய மனுவில் ஜப்பான்
எக்ஸ்போர்ட் சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும்,
கிரிமினல் நடவடிக்கைகள் உள்பட, இவைகளையெல்லாம் அதி
காரிகள் திரும்பப் பெறவேண்டும் என்றும், ரெட் சான்டர்ஸ்—
சிகப்பு சந்தன மரத்தை ஷெட்யூல் ஆப் டிம்பர் லிஸ்டிலிருந்து
நீக்க வேண்டும் என்றும், அரசுக்கு அந்த வியாபாரிகள் சங்கம்
மனு கொடுத்தது. அமைச்சர் அவர்களும் அப்படிப்பட்ட
கோரிக்கை இருந்தது என்றும் இந்த அவையிலே சொன்னார்கள்.
அதுவும் உண்மைதான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நான் தந்த தகவல்களை ஒப்புக்கொண்டு இருக்கிறார். மறுக்க
வில்லை. ஆக, நான் அவையில் கொடுத்த அனைத்துத் தகவல்
களும் உண்மை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னு
டைய தன்னிலை விளக்கத்திலே ஒப்புக்கொண்டு இருக்கிறார்.
அவைக் குறிப்பிலும் இருக்கிறது. (குறுக்கிடு) கொஞ்சம் பொறு
மையாக இருங்கள். எல்லாவற்றையும் நான் சொல்லிவிடுகிறேன்.

ஆனால் இதிலே மாண்புமிகு அமைச்சர் ஒப்புக்கொள்ளாத
சில தகவல்கள் இருக்கின்றன. அந்த தகவல்கள் தான் இன்று
— டிஸ்பியூட்டபிள் மேட்டராக—விவாதத்திற்குரிய விஷயங்
களாக—எங்களால் உண்மையென்றும், மாண்புமிகு அமைச்ச
ரால் உண்மை அல்ல என்றும் இருக்கும் பகுதிகள். அதாவது,
ரெட் சான்டர்ஸ் மரங்கள் ஷெட்யூல் ஆப் டிம்பரிலிருந்து நீக்கு
வதற்கு ரெட் சான்டர்ஸ் எக்ஸ்போர்ட் அசோசியேஷன் கோரிக்
கைக்கு இணங்கத்தான் அது செய்யப்பட்டது என்று நான்
சொன்னேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அப்படி அல்ல, சொல்லப்பட்ட தகவல் தவறானது. 'ஜென
ரல் ஓபன் லைசென்சு' என்ற மத்திய அரசின் ஆணைக்கிணங்
கத்தான் இது போடப்பட்டது என்றும் குறிப்பிட்டார். அது
அவைக் குறிப்பிலும் இருக்கிறது. ஆனால், அந்த ஷெட்யூல்
ஆப் டிம்பரிலிருந்து இந்த ரெட் சான்டர்ஸ் மரத்தை நீக்கியதற்
குக் காரணம், ரெட் சான்டர்ஸ் எக்ஸ்போர்ட் அசோசியேஷன்
வேண்டுகோளை ஏற்று, அதற்கு இணங்கத்தான் உத்தரவு
போடப்பட்டது என்று நான் இந்த அவையிலே சொல்லியதற்கான
ஆதாரமான அரசாணை [illegible] நெம்பர் 1384, [illegible] தேதி:
28—10—1980. அந்த ஆணை இருப்பதுதான் [illegible]

இப்போதும் இருக்கிறது. அதையும் உங்களுக்குத் தரத் தயாராக இருக்கிறேன். அந்த ஆணையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று கேட்டால்—அந்த ஆணையில் இருப்பதை நான் படிக்கிறேன்.

Government have examined the representation of the Association mentioned in para 2 above.

இரண்டாவது பாராவில் அந்த வியாபாரிகள் சங்கத்தின் கோரிக்கைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

At present origin certificates are not insisted for export of red sanders as per G.O.

இந்த ஆரிஜின் சர்டிபிகேட் என்று சொல்லப்படுவது எங்கேயிருந்து மரங்கள் வெட்டப்பட்டன, எப்படி வெட்டப்பட்டன—திருட்டுத்தனமாக வெட்டப்பட்டதா, கள்ளத்தனமாக வெட்டப்பட்டதா, லைசென்சு பெற்று வெட்டப்பட்டதா—இதைப் போன்ற விவரங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று அந்த உத்தரவிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த ஆணையில் முக்கியமான பகுதி இதுதான்.

Government consider that inclusion of red sanders wood in the schedule of valuable timber is leading to unnecessary difficulties as represented by the Association. :

வியாபாரிகள் சங்கத்திற்கு இந்த ஷெட்யூல் ஆப் டிம்பர் லிஸ்ட்டில் இந்த ரெட் சான்டர்ஸ் மரம் இணைக்கப்பட்டதால் அந்த வியாபாரிகளுக்கு ஏகப்பட்ட சிரமங்கள் இருக்கின்றன. ஏகப்பட்ட தொந்தரவுகள் இருக்கின்றன. அதை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. ஆகவே, 'ஆஸ் ரெப்ரசென்டட் பை தி அசோசியேஷன்'—வியாபாரிகள் சங்க கோரிக்கையின்படி அந்த ஆணையில் எடுத்துச் சொல்வது—

Government have accordingly decided to omit red sanders from the schedule of timber.

எனவே, அவர்கள் கோரிக்கையை ஏற்று, அவர்கள் சிரமங்களைப் பரிசீலித்து, இந்தச் சர்க்கார் அந்த வியாபாரிகள் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க,

"Government have accordingly decided to omit red sanders from the schedule of timber.

சிகப்பு மரத்தை நாங்கள் நீக்குகிறோம் என்று உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. அந்த உத்தரவின் அடிப்படையில் தான். அதை ஆதாரமாகக் கொண்டுதான் அந்தத் தகவலை நான் சொன்



னேன். இந்த ஆணையில் 'ஜெனரல் ஓப்பன் லைசென்சு' என்ற மத்திய அரசின் ஆணையில் அடிப்படையில்தான் ரெட் சேன்டர்ஸ்—சிகப்பு சந்தன மரங்களை—ஷெட்யூல் ஆப் டிம்பரிலிருந்து நீக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்பதுதான் என்னுடைய வாதத்தின் மையோட்டம். ஆகவே, நான் தந்த தகவல் அரசு ஆணையின் அடிப்படையில் தான். இதைப் போலவே வழக்குகள் சம்பந்தமான என்னுடைய தகவல்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள். இது இரண்டாவது டிஸ்பியூட். இதிலே முதலிலே ஜப்பானுக்கு ரெட்சான்டர்ஸ் மரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது சம்பந்தமாக வழக்குகள் இருக்கின்றன. குறிப்பாக 'ரிட் அப்பீல்' வழக்கு இருக்கிறது. நீதிமன்றத்தில் இருந்தாலும் இன்றைக்கு அவைகளின் நிலைமை என்ன ?

முற்பகல் 10-30

நான் இந்த சட்டமன்றத்தில் கேட்டேன். அமைச்சர் சரியான விளக்கம் தரவில்லை. இது சம்பந்தமாக கிரிமினல் வழக்கு இருப்பதாகச் சொன்னார். அது என்ன என்று தெரியாது. அமைச்சர் அதற்கும் விளக்கம் தரவில்லை. பொதுவான நிலைமை இந்த ஷெட்யூல்டு ஆப் டிம்பரில் மரங்கள் சேர்க்கப்பட்டால் வழக்கு உண்டு ; ஷெட்யூல்டு ஆப் டிம்பரில் மரங்கள் ஓமிட் செய்யப்பட்டால் வழக்கு கிடையாது ; அதற்கு உயிர் இல்லாமல் போய்விடும். ஆகையால்தான் வழக்குகள் சம்பந்தமாக அந்தக் கருத்தைச் சொன்னேன். அதுவுங்கூட நம்முடைய அமைச்சரவர்கள் இந்த வழக்கு சம்பந்தமாக ரிட் அப்பீல் போடப்பட்டது என்று சொன்னார்கள். அது என்ன நிலைமையில் இருக்கிறது ? கிரிமினல் வழக்கு போடப்பட்டிருக்கிறதா ? எந்த செக்ஷனில் போடப்பட்டிருக்கிறது ? அதற்கு என்ன பைன் ? என்ன அபராதம் ? என்ன சிறைத் தண்டனை என்பதற்கும் இந்த அவையிலே ரிக்கார்டுகள் வைக்கப்படுமானால், அது சம்பந்தமாக கோப்புகள் வைக்கப்படுமானால் என்னுடைய அந்தக் குற்றச்சாட்டை தப்பு நடந்திருக்கிறது, தவறு நடந்திருக்கிறது, ஊழல் நடந்திருக்கிறது என்பதை இன்னும் தெளிவாகச் சொல்ல முடியும். ஆகவே, நான் கேட்டுக் கொள்ளவதெல்லாம், சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சனையை நீங்கள் தாராளமாக உரிமைக் குழுவுக்கு அனுப்புங்கள் ; அமைச்சரையும் அங்கே வரச் சொல்லுங்கள் ; கோப்புகளையும் அங்கே வையுங்கள் ; அப்போதுதான் உண்மை ஊருக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைசியாக நம்முடைய சமரசம் அவர்கள் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டுக்கு மட்டும் இரண்டு நிமிடங்களில் நான் பதில் சொல்லிவிடுகிறேன். ஒன்று, மரங்கள் வெட்டப்பட்டன. யாரால் வெட்டப்பட்டது ? எப்போது வெட்டப்பட்டது ? அதனுடைய மதிப்பு 60 இலட்சம்

ரூபாய் என்று யார் சொல்லியது என்று கேட்டிருக்கிறார்கள். நான் பேசியது அவைக் குறிப்பிலே இருக்கிறது; வேண்டுமானால் புரட்டிப் பாருங்கள். நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எனக்கு அந்தத் தகவல் தெரியாது; யார் வெட்டியது என்று தெரியாது; எப்படி வெட்டப்பட்டது என்று தெரியாது என்று சொல்லியிருக்கிறேன். நான் சொல்லியிருப்பது தெளிவாக அவைக் குறிப்பேட்டில் இருக்கிறது. நான் சொல்லி இருப்பது இதுதான். பாரஸ்ட் ஆக்டுக்கு விரோதமாக மரங்கள் வெட்டப் பட்டு, சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சந்தன மரங்கள் சென்னை துறைமுகத்தின் வழியாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்று சொல்லித்தான் என்னுடைய குற்றச் சாட்டு ஆரம்பமாகிறது. அதுவும் உத்ரவ அடிப்படையாக வைத்து. ஆக நான் சொல்லாத ஒன்றை சொல்லியதாக எழுப்பு வதும், அல்லது அது யார் என்று கேள்விகேட்பதும் உரிமைப் பிரச்சனைக்குள்ளே வராது.

அடுத்து, பாரஸ்ட் ஆக்டின்படி மரங்களை வெட்டக்கூடாது என்று இருக்கிறதா என்ற ஒரு சட்டப் பிரச்சனையை வழக் கறிஞராகிய என்னைப் பார்த்து டாக்டராகிய சமரசம் கேட்கிறார். மெத்த சந்தோஷம்; மெத்த மகிழ்ச்சி. நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். சட்ட லாங்வேஜ் என்று ஒன்று இருக்கிறது. சாதாரண மக்களுக்குப் புரிகிற மொழி 'காமன் பார்லன்ஸ்' என்று ஒன்று இருக்கிறது. அந்த அடிப்படையில் மட்டும் ஒரு சிறு விளக்கத்தைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த ஷெட்யூல்டு ஆப் டிம்பரை எக்ஸ்போர்ட் செய்யக்கூடாது, சேல்ஸ் செய்யக்கூடாது, பர்ச்சஸ் செய்யக்கூடாது என்று சொன்னால் அதை வெட்டக்கூடாது என்றுதான் அர்த்தம். அதைத்தான் 'காமன் பார்லன்சில்' சொல்லியிருக்கிறேன். ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்தப் பிரச்ச னையை நம்முடைய உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென் றும்; என்னையும் அனுப்ப வேண்டுமென்றும், அமைச்சரையும் அனுப்ப வேண்டுமென்றும்; கோப்புகள் வரவேண்டும் என்றும் அப்போது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியும் என்றும் சொல்லுகிற அதே நேரத்தில் நான் சொல்லியிருக்கிற தகவல் களை ஜி.ஓ. அடிப்படையில்தான் சொல்லியிருக்கிறேன்; சரியான நோக்கத்தோடு சொல்லியிருக்கிறேன்; அவையை திசை திருப்பும் நோக்கத்தோடு சொல்லவில்லை என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சனை குறித்த தீர்ப்பு பின்னர் அளிக்கப்படும்.



## 4. கவன ஈர்ப்புகள்

### அ. லெவி கொள்முதலினால் உற்பத்தியாளரிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைப் பற்றித் திருவாளர்கள் சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, ஏ. டி. கருப்பையா, துரைமுருகன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, "தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நெல் லெவி கொள்முதல் காரணமாக நெல் உற்பத்தியாளர்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவை முன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கையினை வைக்கிறேன்.

#### அறிக்கை.

1976 ஆம் ஆண்டில் தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்ட உடன், தமிழகத்தில் பொது விநியோகத்திட்டத்திற்குத் தேவைப் படும் நெல், அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு மொத்த வணி கர்கள் வாங்கும் நெல் அரிசி மீது 40 விழுக்காடு லெவி விதிக்கப் பட்டது. இந்த லெவி, போக்குவரத்துக் கட்டுப்பாடு இருந்த எல்லையோரப் பகுதிகளைத் தவிர மாநிலம் முழுவதும் எல்லா மொத்த வணிகர்கள் மீதும் அமல்படுத்தப்பட்டது.

நாடு முழுவதும் ஒரே உணவு மண்டலமாக 1977 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தவுடன் நெல்/அரிசி கொள்முதல் செய் வதற்கு வர்த்தக லெவியுடன் அரிசி ஆலை லெவியும் அமல் படுத்தப்பட்டது. நெல், அரிசி மொத்த வியாபார உரிமம் பெற்ற வணிகர்கள் தாங்கள் கொள்முதல் செய்த நெல்லில் 20 சத விகிதமும், அரிசியில் 10 சதவிகிதமும் வர்த்தகர் லெவியாக அரசுக்கு செலுத்த வேண்டும். இந்த வர்த்தகர் லெவி மாநிலம் முழுவதற்கும் பொருந்தும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 4

மாநிலம் முழுவதற்கும் வர்த்தகர் லெவி பொருந்தும் என்றாலும்கூட அரசு, வர்த்தகர் லெவியை உபரி மாவட்டங்களாகிய தஞ்சாவூர், வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மட்டும் நவம்பர் 1977 முதல் செயல்படுத்தியது. அத்துடன் மாநிலத்தை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசியின் மீதும் வர்த்தகர் லெவி வசூலிக்கப்பட்டது.

இந்த வர்த்தகர் லெவித் திட்டத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் நெல், அரிசிக்கு விலக்கு அளிக்கப்பட்டது. அதே போன்று சில்லறை வர்த்தகர்கள் செய்யும் வணிகத்திற்கும் லெவி செலுத்த வேண்டியதில்லை. சொந்த தேவைக்காக இந்த மாநிலத்தை விட்டோ அல்லது உபரி மாவட்டங்களிலிருந்தோ எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசி மீதும் லெவி விதிக்கப்படவில்லை. லெவி ஏய்ப்பைத் தடுப்பதற்கும், வர்த்தகர்கள் லெவியைச் செலுத்திவிட்டார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மாநிலத்தின் எல்லையோரங்களிலும், உபரி மாவட்டங்களின் எல்லையோரங்களிலும் லெவி சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டு இருந்தன. அவற்றின் மூலம் இந்த மாநிலத்திலிருந்து அல்லது உபரி மாவட்டங்களிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல், அரிசிக்கு லெவி செலுத்தப்பட்டது என்பதை உறுதி செய்து கொண்ட பின்பே அவை வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

சென்னை நகரத்திற்கு, பெரும்பாலும் செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களிலிருந்து அரிசி வந்து கொண்டிருந்த காரணத்தால் செங்கல்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு எடுத்துச் செல்லப்படும் நெல் அரிசிக்கு விலக்கு அளிக்கப்பட்டது. அதேபோன்று மேற்குறிப்பிட்ட 4 உபரி மாவட்டங்களின் தேவைக்கு வர்த்தகர்கள் வாங்கும் நெல் அரிசிக்கு லெவியினின்றும் விலக்கு அளிக்கப்பட்டது. அதாவது, உபரி மாவட்டங்களை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்படும் நெல் அரிசிக்குத்தான் லெவி விதிக்கப்பட்டது. சென்னைக்கு இதர மாநிலங்களிலிருந்து வர்த்தகர்கள் வாங்கி வந்த நெல் அரிசிக்கு லெவியினின்றும் விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், சென்னையிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கோ அல்லது பிற மாநிலங்களுக்கோ எடுத்துச் செல்லப்படும் நெல் அரிசி மீது லெவி வசூலிக்கப்பட்டது.

ஒரு மொத்த வணிகர் அதே மாவட்டத்தில் மற்றொரு மொத்த வணிகர்களுக்கு வியாபாரம் செய்யலாமென அனுமதிக்கப்பட்டது. சில்லறை வியாபாரிகளும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யலாமென அனுமதிக்கப்பட்டது.

ஒரு மொத்த வணிகர், சில்லறை வணிகராகவும் செயல்படக் கூடாதென்று தடை தொடரப்பட்டது.



1981 பிப்ரவரி 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நெல், அரிசி மீதான லெவியை 50 சதவிகிதமாக மார்ச் 1978-இல் உயர்த்தப்பட்டது. 1978-ஆம் ஆண்டு மே திங்கள் 11-ஆம் நாள் முதல் தமிழகத்திற்குள் வர்த்தகர் லெவி மற்றும் ஆலை லெவி அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. அதன்பின், தமிழகத்தை விட்டு வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல் மீது 20 சதவிகிதமும், அரிசி மீது 10 சதவிகிதமும் லெவியாக 1979-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் நாள் முதல் விதிக்கப்பட்டது. ஜூன் 1979 முதல் இந்த லெவியும் நீக்கப்பட்டுவிட்டது.

தமிழகத்திற்குள் வர்த்தகர் லெவியை நீக்கியதையொட்டி, 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், ஒரு மொத்த வணிகர் மற்றொரு மொத்த வணிகருக்கு விற்பனை செய்யலாமென அனுமதிக்கப்பட்டது. 1979-ஆம் ஆண்டு அரசிடம் ஏறத்தாழ $3\frac{1}{2}$ இலட்சம் டன் அரிசி கையிருப்பில் இருந்தது. மேலும், அரிசியைத் தீவிரமாகக் கொள்முதல் செய்தால் கையிருப்பு அதிகமாகி அரிசி கெட்டுவிடக் கூடும் என்ற காரணத்தினாலும், பொது விநியோக முறையில் மக்கள் வாங்கும் அரிசியின் அளவு குறைந்து விட்டதாலும் லெவிமுறை நிறுத்தி வைக்கப்பட்டது.

இவ்வாண்டு சாதாரணமாக உபரி மாவட்டங்களான வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பருவமழை தவறி வறட்சி நிலை ஏற்பட்டு உற்பத்தி பெருமளவில் குறைந்துவிட்டது. அரசிடம் இருந்த கையிருப்பும் ஓரளவு குறைந்து விட்டது. 1980-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 14-ஆம் நாள் அன்று இறுதியில் அரசிடம் ஏறத்தாழ 50,684 டன்கள் அரிசியும், 50,921 டன்கள் நெல்லும்தான் கையிருப்பில் இருந்தது. நேரடிக் கொள்முதல் நிலையங்களிலும் அரிசியின் வரத்து அதிகமாக இல்லை. கடந்த குறுவைப் பருவத்தில் ஏறத்தாழ 85,000 டன்கள் நெல் வாங்கப்பட்டது. நெல்லை உடனடியாக அரைப்பதற்குப் போதுமான அறைவை ஆலை வசதியும் இல்லை. இந்த நிலையில் பொது விநியோக முறையில் அரிசி வாங்குவதும் அதிகரித்தது.

கடந்த ஆண்டு மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து 1,91,000 டன்கள் அரிசி ஒதுக்கீடு செய்தது. இந்த அரிசியை வழங்க வேண்டிய பொறுப்பு இந்திய உணவுக் கழகத்தைச் சார்ந்தது. தமிழ் நாட்டில் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து நல்ல அரிசி முழுவதும் எடுக்கப்பட்டுவிட்டது. எஞ்சிய அரிசியை ஆந்திர மாநிலத்திலிருந்து அக்கழகம் கொண்டு வந்து தர வேண்டும். ஆனால், இரயில்வே வேகன்கள் கிடைக்காத காரணத்தினால் அக்கழகத்தால் ஆந்திராவிலிருந்து அதிக அளவு அரிசியைக் கொண்டு வந்து தர முடிய

வில்லை. டிசம்பர் மாத இறுதிவரையில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த அரிசியில் ஏறத்தாழ 70,000 டன்கள்தான் எடுக்க முடிந்தது. அதிக அளவில் வகன்கள் ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டது. தற்போது நிலைமையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தில் மத்திய வேளாண்மை அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் 1977-ஆம் ஆண்டில் இருந்த அரிசி ஆலை லெவி, வர்த்தக லெவி இரண்டையும் மீண்டும் புகுத்தும்படி எழுதியிருந்தார். மத்திய அரசு, லெவி புகுத்த வேண்டியதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தது. இனி, மத்தியத் தொகுப்பிலிருந்து மாநிலத்திற்குத் தேவையான அரிசியைப் பெறக் கூடிய வாய்ப்பு இல்லை என்பதையும் மத்திய அரசு கூறியது. இந்தச் சூழ்நிலையில் அரசிற்கு வர்த்தகர்கள் மீது லெவி விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்த லெவியும் தமிழ்நாட்டிற்குப் புதியதல்ல. 1976-இல் செயல் படுத்தப்பட்ட அதே அளவு லெவி தான் இப்போதும் விதிக்கப்பட்டு, அப்போது கடைப்பிடிக்கப்பட்ட முறையே இப்போதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இப்போது விதிக்கப்பட்டுள்ள 40 சதவிகிதம் வர்தத்கர் லெவி 1981-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20-ஆம் நாள் முதல் அமல் செய்யப்படுகிறது. அத்தேதிக்குப் பிறகு மொத்த வியாபாரிகள் வாங்கும் நெல்/அரிசிக்கு 40 சதவிகிதம் லெவி தரவேண்டும். தமிழகத்தில் முதல் முறையாக வாங்கப்படும் நெல்/அரிசிக்கு மட்டுமே லெவி கொடுக்கவேண்டும். ஒருமுறை லெவி கொடுத்துவிட்டால், அதற்குப்பிறகு இரண்டாவது முறையாக அதே அரிசியை வாங்கப் படும்போது லெவி கிடையாது. சில்லறை வியாபாரிகள், கூட்டுறவுச் சங்கங்கள் சொந்தத்திற்காக எடுத்துச் செல்லும் நெல்/அரிசி, வேறு மாநிலத்தில் லெவி கொடுத்து கொண்டுவரும் நெல்/அரிசிக்கு லெவி கிடையாது. ஆனால், இந்த நெல்/அரிசியை மறுபடியும் மொத்த வியாபாரிகளுக்கே விற்றால் லெவி உண்டு. ஆலை வசதி பெற்றுள்ள மொத்த வியாபாரிகள் தங்கள் மாவட்டத்திலேயே கொள்முதல் செய்த நெல்லுக்கு அரிசியாகத்தான் லெவி செலுத்த வேண்டும். ஆனால், தங்கள் மாவட்டத்தை விட்டு வேறு மாவட்டத்திற்குச் சென்று நெல் கொள்முதல் செய்தால் கொள்முதல் செய்யப்பட்ட மாவட்டத்திலேயே நெல்லாக லெவி தர வேண்டும். மொத்த வியாபாரிகள் மாநிலத்தை விட்டு எடுத்துச் செல்லும் நெல்/அரிசிக்கு முதலிலேயே லெவி வாங்கி விடுவதால் மீண்டும் லெவி கொடுக்கத் தேவையில்லை. லெவிக்கு அளக்கும் நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகள் தான் தரப்படும். மாநில அரசு அறிவித்துள்ள அதிக விலைகள் கொடுக்கப்படமாட்டாது.



வர்த்தகர் லெவியினால் விவசாயிகள் பாதிக்கப்படவழியில்லை மொத்த வியாபாரிகள் நெல் வாங்காமல் நெல் அவர்களிடத்திலேயே தங்கி தேங்கி நின்று நஷ்டம் ஏற்படுமோ என்று பீதி அடையத் தேவையில்லை. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயிகள் எவ்வளவு நெல் கொண்டு வந்து கொடுத்தாலும் மாநில அரசு அறிவித்துள்ள அதிக விலைகளான சாதாரண ரகத்திற்கு குவிண்டால் ரூபாய் 115 சன்ன ரகத்திற்கு ரூபாய் 119, மிகச் சன்னரகத்திற்கு ரூபாய் 125 என்ற விலைகளில் வாங்கிக் கொள்ளும். விவசாயிகள் அதிக அளவில் நெல்லை நேரடிக் கொள்முதல் நிலையங்களில் விற்றுப் பயன் அடைவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது. மேலே கூறிய காரணங்களால், லெவியின் காரணமாக நெல் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் பீதி அடைவதற்குக் காரணமே இல்லை.

திரு. சே. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் வைத்திருக்கிற அறிக்கையில் 4 காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் முக்கியமான காரணம், 1976-ஆம் ஆண்டிலிருந்தே இந்த லெவி முறை இருந்து வருகிறது என்றும், இபபோது இடைக்காலத்திலே நீக்கப்பட்டு, திரும்பவும் இப்போது கொண்டுவர வேண்டியதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக மத்திய அரசு விரைவாக, கடுமையாக வசூலிக்கச் சொல்கிறது என்ற கருத்தைக் கூறி, பொது விநியோகத்திற்கு அதிகமான ஸ்டாக் இல்லை, அதனால் இந்த நிலை என்று சொல்லக்கூடிய நேரத்தில் இதனால் உற்பத்தியாளர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த லெவிக் கொள்கையை அறிவிப்பதற்கு முன்னால் தஞ்சை மாவட்டத்திலே நெல் உற்பத்தியாளர்கள் 57 கிலோ கொண்ட ஒரு மூட்டை நெல்லை 80 ரூபாய்க்கும், 85 ரூபாய்க்கும் விற்றுக் கொண்டிருந்தார்கள். இந்த அறிவிப்பு வந்ததற்குப் பின்னால் அந்த ஒரு மூட்டை நெல்லை 60 ரூபாய்க்கும், 65 ரூபாய்க்கும்தான் வியாபாரிகள் அவர்களிடமிருந்து வாங்குகிறார்கள். ஆகவே தற்போதைய லெவிக் கொள்கையின் காரணமாக நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு மூட்டைக்கு 20 ரூபாய் குறைகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட கடுமையான நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே இந்த லெவியை..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும்,

திரு. சே. அழகர்சாமி : இந்த லெவி அறிவிப்பின் காரணமாக நெல் உற்பத்தியாளர்களுக்கும் மூட்டை 20 ரூபாய் என்ற அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் உபயோகிப்பாளர்களும் ஒரு கிலோ அரிசிக்கு ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டி இருக்கின்றது. அந்த அளவுக்கு விலை உயர்ந்துவிட்டது. ஆகவே அரசாங்கம் தற்போது அறிவித்திருக்கின்ற லெவி கொள்கைக்கு மாறாக உற்பத்தி செய்யக்கூடிய அத்தனை நெல்லையும் அரசாங்கமே நியாயமான விலையில் கொள்முதல் செய்து அதாவது குவிண்டால் 140 ரூபாய் என்ற அளவிலே கொள்முதல் செய்து பொது விநியோகத்தைச் சீராக்குகின்ற வகையில் ஒரு சரியான கொள்கையைக் கடைப்பிடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வியாபாரிகளிடமிருந்து லெவி வாங்குவதன் மூலமாகத்தான் உற்பத்தியாளர்களுக்கு விலை குறைகின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் லெவி என்பது இப்போதுதான் போடப்படுகின்ற ஒன்றல்ல. அவ்வப்போது நெருக்கடி நிலை ஏற்படும் போதெல்லாம் அதாவது பொது விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டபோதெல்லாம் இந்த லெவி முறையினை விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அவ்வப்போது விதிப்பதும், அவ்வப்போது தளர்த்துவதும் என்ற நிலை முன்பே இருந்திருக்கின்றது. 1976-ம் ஆண்டு எந்த நிலையிலே லெவி விதிக்கப்பட்டதோ அந்த நிலையிலேதான் இப்போதும் லெவி விதிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது மத்திய அரசின் கொள்கை. ஆனால் சாதாரண ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு 115 ரூபாய் என்றும் சன்ன ரகத்திற்கு 119 ரூபாய் என்றும், மிகச் சன்ன ரகத்திற்கு 125 ரூபாய் என்றும் விலை கொடுத்து மாநில அரசு சார்பாக வாங்குவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம். ஆகவே விவசாயிகள் வியாபாரிகளிடத்தில் விற்காவிட்டாலும் நேரடியாக நுகர் பொருள் வாணிபக் கழகத்திலேயோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களிடத்திலோ 115 ரூபாய், 119 ரூபாய், 125 ரூபாய் என்ற அளவிலே விற்கலாம். மேலும் அவ்வப்போது பொது விநியோகத்திலே நெருக்கடி ஏற்படுகின்றபோதுதான் லெவி விதிக்கப்படுகின்றது. இன்னும் ஓரிரு திங்கள்களில் அந்த நெருக்கடி தீர்ந்துவிட்டது என்றால் அது எடுக்கப்பட்டுவிடும். ஆகவே அவ்வப்போது விதிப்பதும் எடுப்பதுமாகத்தான் நடைமுறை இருந்து வருகின்றது. மேலும் நெல் உற்பத்தியாளர்கள் நேரடியாக அரசினிடத்தில் விற்பனை செய்வதற்குரிய வழிவகைகள் இருக்கின்றன. ஆகவே அந்த வகையில் அவர்கள் விற்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நெல் லெவிக் கொள்முதல் சம்பந்தமாக 1976 ஆம் ஆண்டிலே என்ன நடந்தது என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் நமது மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரியும். நேற்று முன்தினம் கூட நான் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றிருந்தேன். இப்போது லெவி விதிக்கப்பட்டிருப்பதால் இப்போது விற்கின்றவர்கள் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை இருக்கின்றது. ஆனால் சற்று வசதி படைத்தவர்கள் கொஞ்சகாலம் கழித்து அதாவது லெவிக் கொள்கை தளர்த்தப்பட்ட பிறகு அதிக விலைக்கு விற்பார்கள். ஆகவே இப்போது விற்பவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால் இப்போது நெல் பூராவும் தேக்க நிலையில் இருக்கின்றது. ஆகவே உற்பத்தி செய்யப்படுகின்ற நெல் முழுவதையும் அரசாங்கமே கொள்முதல் செய்து விநியோகம் செய்தால்தான் உற்பத்தியாளர்களுக்கும் போதிய விலை கிடைக்கும், வாங்கிச் சாப்பிடுகின்றவர்களுக்கும் குறைந்த விலையில் அரிசி வினியோகம் செய்ய முடியும். ஆகவே மத்திய அரசு கூறுகின்ற அந்த நிலையை ஏற்றுக் கொண்டு தமிழ் நாட்டில் நெல்உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குப் பாதகம் விளைவிப்பது சரியல்ல. ஆகவே குவிண்டால் ஒன்றுக்கு 140 ரூபாய் என்ற வகையில் அரசாங்கமே கொள்முதல் செய்தால் ஒரு கிலோ அரிசி ரூபாய் 2–50-க்காவது வினியோகம் செய்ய முடியும். ஆனால் இன்றைக்கு அரிசியின் விலை கிலோவுக்கு 3 ரூபாய்க்கு மேல் போய்க் கொண்டிருக்கின்றது. ஆகவே அரசாங்கமே எல்லா நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10–40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. அதனால்தான் தொடர்ந்து அதைச் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆனால் இப்பொழுதும் அரசு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் நெல்லை வாங்கிக் கொண்டுதான் இருக்கிறது. மத்திய அரசு நெல்லின் விலையை 105 ரூபாய் என்று விதித்தும் கூட நாம் 115 ரூபாய் என்று மாற்றியிருக்கிறோம். அதற்குக் கூட அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை. எதிர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் நான் ஏற்கெனவே சொன்னவாறு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் 115 ரூபாய், 119 ரூபாய், 125 ரூபாய் என்ற விகிதத்தில் மாநில அரசு வாங்கிக் கொண்டுதான் இருக்கிறது. பற்றாக்குறை ஏற்படும்போது மத்திய அரசிடமிருந்து வாங்கு[illegible]ம். மத்திய அரசிடம் கையிருப்பு சரியாக இல்லை என்ற

காரணத்தினால்தான் இந்த லெவியை விதித்து இருக்கிறார்கள். லெவி கட்டாயமாக விதித்தாக வேண்டும் என்றும் உபரியாக இருக்கும் ஆந்திர மாநிலத்தில் கூட விதித்திருக்கிறார்களே, நீங்கள் ஏன் இன்னும் விதிக்கவில்லை என்று கட்டாயப்படுத்தியதின் காரணமாகத்தான் இந்த லெவி விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே கூட சில்லறை வியாபாரிகளுக்கு லெவி இல்லை. மொத்தமாக வாங்கும் வகையில் கூட சில்லறை வியாபாரிகளுக்கு லெவி கிடையாது. ஒரு மொத்த வியாபாரி விவசாயியிடமிருந்தோ அல்லது இன்னொரு மொத்த வியாபாரியிடமோ தமிழ் நாட்டில் முதன் முதலில் வாங்கும்போதுதான் லெவி முறைகள் வருகின்றன. நமக்குத் தேவையான இருப்பு இருக்க வேண்டும், தட்டுப்பாடு ஏற்படக்கூடாது என்ற வகையில்தான் இந்த முறைகள் கையாளப்படுகின்றன.

(ஆ) லெவிக் கொள்கை காரணமாக சந்தையில் அரிசி கிடைக்காத நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசின் லெவிக் கொள்கையின் காரணமாக திருச்சி மார்க்கெட்டிலும், வெளிச் சந்தையிலும் அரிசி கிடைக்காததால் அங்குள்ள பொது மக்களிடம் நிலவும் பதட்டநிலை பற்றிய திருவாளர்கள் இரா. கருப்பையா, என். எஸ். வி. சித்தன், உ. சுப்பிரமணியன், கே. சௌந்திரராசன், கு. ரமணி, ரா. கிருஷ்ணன், டி. மணி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. இரா. கருப்பையா.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, ''அரசின் லெவிக் கொள்கையின் காரணமாக திருச்சி மார்க்கெட்டிலும், வெளிச் சந்தையிலும் அரிசி கிடைக்காததால் அங்குள்ள பொது மக்களிடம் நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கையினை வைக்கிறேன்.

அறிக்கை

நெல், அரிசிமீது வர்த்தகர் லெவி விதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட சூழ்நிலையை விளக்கியும், அது எவ்வாறு செயல் படுத்தப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமியும் மற்ற உறுப்பினர்களும் கொடுத்திருந்த கவன



ஈர்ப்பு அறிவிப்புக்கு வெளியிட்ட அறிக்கையில் விளக்கி இருந்தேன். இப்போது லெவி விதிப்பின் காரணமாக திருச்சி மார்க்கெட்டில் அரிசி கிடைக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

திருச்சி நகரில் பலஇடங்களில் 28–1–1981 முதல் 31–1–1981 வரை வியாபாரிகளிடமிருந்த கையிருப்பு சரி பார்க்கப்பட்டது. எல்லாச் சில்லறை வணிகர்களும், மொத்த வணிகர்களும் அரிசி கையிருப்பு வைத்திருந்தனர். அவர்கள் வைத்திருந்த அரிசியின் கையிருப்பையும், விற்ற அரிசியின் கணக்கையும் பார்த்த பொழுது பலர் கணிசமான அளவு அரிசியை 28, 29, 30 தேதிகளில் விற்றிருப்பது தெரிய வருகிறது. வெளிச் சந்தையில் அரிசி கிடைக்கவில்லை என்று பொதுமக்களிடமிருந்து புகார் ஏதும் வரவில்லை. அவர்களிடம் விசாரித்துப் பார்த்ததில் அவர்களுக்குத் தேவையான அரிசியைக் கஷ்டம் ஏதுமின்றி பெறுவதாகக் கூறினர்.

அநேகமாக எல்லா வியாபாரிகளும் இப்போது லெவி விதிப்பதற்கு முன்பு வைத்திருந்த அரிசியை விற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவ்வாறு விற்கவிருக்கும் அரிசியை அந்தந்த இடத்திலேயே விற்று விடுமாறு வியாபாரிகளுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

லெவி விதித்தவுடன் மந்த நிலையில் இருந்த வியாபாரம், இப்போது தஞ்சாவூர் நெல்லை லெவி கொடுத்து வாங்கி வருவதால் சுறுசுறுப்பு அடைந்து உள்ளது. திருச்சி மாவட்டத்தில் அறுவடையும் ஆரம்பமாகியுள்ளது. வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து அதிக அளவு நெல்லை வாங்கி அரிசியாக்கி விற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களும் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிறது.

லெவி விதித்தவுடன், 23–1–1981 அன்று ஐ. ஆர். 20 அரிசியின் விலை வெளிச் சந்தையில் கிலோ ரூ. 2-50-லிருந்து ரூ. 2-60 ஆக 10 காசு உயர்ந்தது. 27–1–1981 முதல் அது மீண்டும் கிலோ ரூ. 2-50 என்ற விலையில் விற்கிறது. பொன்னி அரிசி கிலோ ரூ. 2-90–க்கும் நடுத்தர ரக அரிசியான சி.ஓ. 25 அரிசி ரூ. 2-50–க்கும் 22–1–1981 முதல் விற்கிறது. விலை உயர்வு ஏதுமில்லை.

மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி கிடைக்க வேண்டுமென்பதற்காகப் பொது விநியோக முறையில் அரிசி வழங்கப்படுகிறது. திருச்சி நகரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும் குடும்ப அட்டைக்கு அரிசி விற்கிறது. இவைகளில் அரிசி கணிசமான அளவு வாங்கப்படுகிறது.

திருச்சி நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வெளிச் சந்தையில் அரிசி எப்போதும் போலவும் போதுமான அளவும கிடைக்கிறது. வெளிச் சந்தை விலை உயராமைவத் தடுக்கும் பொருட்டு பொது விநியோக முறையில் அரிசி வழங்குவதும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் இந்த லெவிக் கொள்கையின் காரணமாக, திருச்சி நகரத்திலும் சுற்றுப் புறங்களிலும் உள்ள பெரும் வியாபாரிகள் அவர்களிடத்திலே விற்பனைக்காக வைத்திருந்த அரிசியையும் மற்ற நெல்களையும் வெளி மாநிலங்களிலுள்ள வியாபாரிகளுக்குக் கொள்முதல் செய்து விட்டார்கள். அந்த நேரத்தில் திருச்சி நகரத்திலே இருக்கிற சில்லறை வியாபாரிகளுக்கு அரிசி விற்பனைக்குக் கிடைக்கவில்லை. இதன் காரணமாக திருச்சி நகரத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் இருக்கக் கூடிய பொது மக்களுக்கு அரிசி கிடைக்காத நிலைமை ஏற்பட்டு, சென்ற ஜனவரி 29 ஆம் தேதியன்று அந்தப் பகுதி மக்கள் அரிசி வாங்கக் கடைக்குச் சென்றால் வெறும் கையோடு திரும்பி வரக் கூடிய நிலைமை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 3.70 ஆக உயர்ந்தது மட்டும் அல்லாமல், இன்னும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் இந்த லெவிக் கொள்கையினால் விலைவாசிகள் ஏறியுள்ளன. வாங்கிச் சாப்பிடக் கூடிய மக்களைப் பாதிக்கக் கூடிய முறையிலும் இருக்கின்றன. ஆகவே அந்தக் கொள்கையைப் புனர் ஆலோசனை செய்து அந்தக்கொள்கையைக் கைவிட முன் வருவார்களா என்று அறியவிரும்புகிறேன். அப்படிச் செய்வதோடு மட்டுமல்லாமல் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அல்லது புட் கார்ப்பரேஷன் மூலமாக மொத்த நெல்லையும் அல்லது அரிசியையும் கொள் முதல் செய்து, குறைந்த விலையில் மக்கள் உணவுப் பொருளை வாங்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயே விரிவாகச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் அரசாங்கத்தின் மூலமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் 115 ரூபாய், 119 ரூபாய், 125 ரூபாய் என்ற வீதத்தில் மாநில அரசு வாங்கிக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பில் இருக்கிறபடி திருச்சி நகரில் பல இடங்களில் 28–1–1981 முதல் 31–1–1981 வரை வியாபாரிகளிடமிருந்து கையிருப்பு சரி பார்க்கப்பட்டது. எல்லா சில்லறை வணிகர்களும் மொத்த வணிகர்களும் அரிசி கையிருப்பு வைத்திருந்தனர். அவர்கள் வைத்திருந்த அரிசியின் கையிருப்பையும்



விற்ற அரிசியின் கணக்கையும் பார்த்த பொழுது பலர் கணிசமான அளவு அரிசியை 28, 29, 30 தேதிகளில் விற்றிருப்பதும் தெரிய வருகிறது.

வெளிச் சந்தையில் அரிசி கிடைக்கவில்லை என்று பொது மக்களிடமிருந்து புகார் எதுவும் வரவில்லை. இப்படி ஒரு நெருக்கடி ஏற்படுமானால் அந்த மாவட்டத்திற்கு அரிசி விநியோகிக்கிற முயற்சியை நுகர் பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் மேற் கொள்ளும். இப்போது லெவியை கைவிட்டுவிட்டால் பின்னால் வருகிற ஜூன், ஜூலை மாதங்களில் கடுமையான அளவிற்கு நான்கு ரூபாய், ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று விற்கப்படுமோ என்ற அச்சம் காரணமாக இப்போது கையிருப்பு வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே வியாபாரிகள் வாங்க முன் வராவிட்டாலும் கூட, குறைந்த விலைக்கு கேட்கிறார்கள் என்று வருவார்களானால் அரசாங்கம் நுகர் பொருள் வாணிபக் கழகம் மூலம் கொள்முதல் செய்ய ஆயத்தமாக இருக்கிறது. லெவி விதித்து 12 நாட்களாகின்றன. இருக்கிற சூழ்நிலையை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இதில் எந்தளவிற்கும் பொது மக்களுக்கு கஷ்டம் ஏற்படாமல், சில்லறை வியாபாரிகளுக்கு கஷ்டம் ஏற்படாமல், உற்பத்தியாளர்களுக்கு கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிற முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகிறது.

*திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த லெவி கொள்முதல் வந்தவுடன் ஆந்திராவிலிருந்து தினசரி 200 லாரிகள் வரை வந்து கொண்டிருந்த அரிசி, நெல் போன்றவை தற்போது கணிசமான அளவிற்கு குறைந்து விட்ட காரணத்தால் அரசாங்கம் வருகிற மாதங்களில், "Lean Month" என்று சொல்வார்களே அப்போது விலை வாசி கடுமையாக கூடுகிற காரணத்தாலும் உபரி மாநிலங்களான ஆந்திரா, ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்து அதிக அளவிற்கு கொள்முதல் செய்யும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்றதொரு முயற்சியை நுகர் பொருள் வாணிபக் கழகமும் ஆந்திரா நுகர் பொருள் வாணிபக் கழகத்தோடு தொடர்பு கொண்டுள்ளது. இங்கே கொண்டு வந்து சேர்ப்பதில் வாகனங்கள் மற்றவை சரியான அளவிற்கு வருவதில்லை. இப்போது ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், நாம் எண்ணிய அளவிற்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கான வாய்ப்பு வசதிகள் செய்ய இயலவில்லை. ஆந்திராவிலிருந்து இங்கே நெல், அரிசி வருவதற்கு, இங்கு விரும்புகிறவர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆந்திராவில் நெல்லுக்கு

லெவி இல்லை. அதனால் இங்கு வரும் நெல்லுக்கு லெவி வாங்கலாம். அரிசியைப் பொறுத்த வரையில் ஆந்திராவில் லெவி இருப்பதால் இங்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளன. அவை ஆராயப்பட்டு வருகின்றன. செங்கல்பட்டு மற்றப் பகுதிகளில் உள்ள வியாபாரிகள் குறைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதை இந்தத் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. நாம் என்ன செய்தால் இம்மாநிலத்தில் உள்ள பொது மக்களுக்கு ஏற்றதாக இருக்கும் என்று துறை ஆராய்ந்து வருகிறது. ஆராய்ந்து தக்க முடிவினை எடுக்கும்.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, வெளிச்சந்தையில் அரிசி விலை கொஞ்சம் ஏறி அதற்குப் பிறகு அது குறைந்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் வைத்துள்ள அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல் சரியானதல்ல என்று முதன் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொன்னி அரிசி மூட்டை ஒன்றுக்கு ரூ. 300 என்று விற்கப்படுகிறது. ஈரோடு நகரிலும் கோவை நகரிலும் அந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ அரிசி ரூ. 4 என்றளவிற்கு வருகிறது. ஆகவே ரூ. 2–75 அல்லது ரூ. 3–க்கோ அரிசி கிடைப்பதில்லை. இந்த நிலைக்குக் காரணம், இன்று போதிய அளவிற்கு ஸ்டாக் இல்லை. இந்த நிலை குறுவை அறுவடை காலத்தில் அரசாங்கம் ஏராளமாக கொள்முதல் செய்து, இந்த நிலையை எதிர்பார்த்து கொள்முதல் செய்து வைக்காத காரணத்தால்தான் வந்தது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தக் குறையை நீக்க வியாபாரிகளிடமிருந்து 40 சதவிகிதம் வாங்கிவிடுவது என்று சொன்னால் அவர்கள் பகிரங்கமாகச் சொல்கிறார்கள் அரசாங்கம் தன்னுடைய விலையான ரூ. 105–க்கு கேட்கிறார்கள், அந்தளவிற்கு வாங்கும் போது, சர்க்கார் அந்தவிலை கொடுத்து வாங்கினால் எங்களுக்கு ஏற்படும் நஷ்டம் பொதுமக்கள் மீதுதான் போடப்படும் என்று பகிரங்கமாகக் கூறும் நிலையில் வெளிச்சந்தையில் இருக்கிற விலை உயர்வைத் தடுக்கும் பொருட்டு பொது விநியோக முறையில் அரசு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கப் பக்கத்திலிருந்து சொல்லப்படுகிறது. அப்படியானால் பெரியநகரங்களிலும் மற்றப் பகுதிகளிலும் பெல்ட் ஏரியாக்களிலும் அரிசி விலை கிலோ நான்கு ரூபாய் அளவிற்குப் போய்விட்டதால் இப்போதுள்ளநியாயவிலைக் கடைகளைவிட அதிகப்படியான கடைகளை அரசு திறந்து அங்கே அரிசி கொடுக்க உத்தரவாதம் தரப்படுமா? அதற்கான ஸ்டாக் வைக்க அரசு என்ன உத்தரவாதம் செய்யப் போகிறது. ஸ்டாக் இல்லாமல் இதைச் செய்ய முடியாது. இதற்கு என்ன பதில் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இங்கே கேட்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்கள் திருச்சி மாவட்டத்தைப் பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவையில்





...ள்ள நிலை பற்றிக் கேட்கிறார்கள். திருச்சி பற்றிய நிலைதான்
...ரப்பட்டிருக்கிறது. நான் முதலில் குறிப்பிட்டபடி, 1976 ல்
... சதவீத லெவி விதிக்கப்பட்டது, 1979 மார்ச்சில் 50 சதவீத
...லெவி விதிக்க வேண்டிய அவசியம் வந்து நான்கு ஐந்து
...ாதங்கள் கூட இருக்க வேண்டி வந்தது. லெவி விதிக்கும் போது
அரசாங்கம் விதிக்கிற விலைக்கு கொடுக்க வேண்டுமென்று
சொல்லும் போது கூடுதல் விலைக்கு வாங்கப்பட்டு அதையும்
சேர்த்து விற்க வேண்டிய தன்மை ஏற்படும்.

[முற்பகல் 10–50]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று, நியாய
விலைக் கடைகளின் மூலம் பொது விநியோகம் செய்கின்ற முறை
யிலே குறைந்த விலை கொடுக்கின்ற போது, அந்த பொது
விநியோக முறையிலே அதிகமான பேர்கள் வாங்குகின்ற சூழ்
நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலே, நமக்கு இருப்பு அதிகமாகத்
தேவைப் படுகின்றது. அதிகமாகத் தேவைப்படுகின்றபோது
கொள்முதல் செய்கிறோம். கொள்முதல் செய்கின்ற காலத்திலே
அவர்களாகவே கொடுப்பதற்கு முன்வருவதில்லை. இந்த இக்கட்
டான சூழ்நிலைக்கு வருகின்றபோது, அதற்குப் .பிறகு லெவி .
விதிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆலைகளுக்கு இந்த
லெவியை விதித்தால், தொல்லைகள் வரும் என்பதற்காக வியா
பாரிகளிடத்திலே லெவிவிதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்
கிறது. பிறகு நியாயவிலைக் கடைகளில் பகிர்ந்து கொடுக்க
வேண்டிய பொறுப்பு இருப்பதன் காரணமாக நம்மிடத்திலே
அரிசி அதிகமாக கையிருப்பு இருக்க வேண்டும். அந்த அரிசி
போதுமான அளவிற்கு வைத்துக் கொண்டு சரிகட்டிவிட்டால்
பிறகு இது பற்றி யோசிக்கலாம். மேலும், இந்த லெவி விதித்து
13,14 நாட்கள் ஆகின்றது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலே
இருந்து ஏற்படும் சங்கடங்கள் இப்போது வந்துகொண்டிருக்
கின்றன. அவைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும்
10, 15 தினங்களுக்குப் பிறகு இந்த நிலைமைகளையெல்லாம்
ஆராய்ந்து, எந்தெந்த கஷ்டங்களை , சங்கடங்களை நீக்கலாம்
என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அப்போது மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூறிய குறைபாடுகளை எந்த அளவுக்கு
நீக்கலாம் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே,
இப்போது அறுவடைக் காலம், இந்த அறுவடைக் காலத்திலே
கூட திருநெல்வேலி மாவட்டத்திலே கிலோ 3.50–க்கு அரிசி
விற்கப்படுகிறது. இப்படிப்பட்ட சீசனிலே இந்தமாதிரி கிடைக்
கிறது. இங்கே இருக்கக்கூடிய அறிக்கையிலே திருச்சியிலே தட்டுப்
பாடு இல்லை என்ற அடிப்படையிலே சொல்லப்பட்டிருக்கிறது,
ஆனால் பல பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன.
அதை நாம் படித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே தான்

இந்தக் கேள்வி போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நெல்லை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, சிவில் சப்ளைஸ் மூலமாக கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், இப்போது சிறு விவசாயிகள் தான் நெல்லை விற்கிறார்கள். ஆனால் நிலச்சுவான்தார்கள் 2, 3 மாதங்களுக்குப் பிறகுதான் ஸ்டாக் வைத்துக் கொண்டு அதிக விலைக்கு விற்கக்கூடிய நிலைமை உருவாகும். எனவே இப்போது சிறு விவசாயிகளிடமிருந்து வாங்கக்கூடிய நெல்லுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகவோ அல்லது கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ நெல்லுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும், அதற்குப் பிறகு தட்டுப்பாடு இல்லாமல் வரக்கூடிய 2, 3 மாதங்கள் கழித்து உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் :** இப்போது பெரிய வியாபாரிகளிடமிருந்து தான் லெவி விதிக்கப்பட்டு நெல்லை வாங்குகிறோம். சிறு விவசாயிகள் நேரடியாகவே விற்பதற்கு உரிமை இருக்கிறது. சிறு விவசாயிகள் அப்படி விற்பதற்கும், அதை வாங்குவதற்கும் உரிமை இருக்கிறது. ஆனால் இங்கே லெவி என்று வருகின்ற போது அதை நான் விளக்க வேண்டியவனாக இருக்கிறேன். அப்படி லெவி விதிக்கப் படுகின்றபோது, சில சங்கடங்கள் எல்லாம் ஏற்படுகிறது. ஒவ்வொரு முறையும் லெவி விதிக்கும் போது இப்படிப்பட்ட சங்கடங்களையெல்லாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த 10, 15 தினங்களுக்குப் பிறகு இருக்கின்ற சூழ்நிலையின் அடிப்படையில் என்னென்ன மாற்றங்களை, எதை எதைச் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு முடிவு செய்யும்.

***திரு. டி. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! அரசின் லெவிக் கொள்கையின் காரணமாக திருச்சி மாவட்டத்திலே நகரப் பகுதிகளிலேயும் இதைப் போல் வேறு பல மாவட்டங்களிலும், முக்கியமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே நகரப் பகுதிகளிலே அரிசி கிடைப்பதே அரிதாக இருக்கின்றது என்றும் ஒரு கிலோ கிட்டத்தட்ட ரூ. 3–10, ரூ. 3–50–க்கு வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் வழியாகத்தான் கேரள மாநிலத்திற்கு அதிகமான அரிசியை, நெல்லை எடுத்துச் செல்கிறார்கள். ஆகவே, வெளி மாநிலங்களுக்கு அரிசி எடுத்துச்செல்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது விரைவிலே அது பற்றி முடிவெடுக்கப்படும்.



**திரு. இரா. க[illegible]யா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்திலே ரூ. 2.50, ரூ. 2.60 க்கு விற்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு காலையிலே கூட, திருச்சி நகரத்திலே இருந்து இங்கே வந்திருக்கிறார்கள். அங்கே கிலோ. ரூ. 3.70 க்கு விற்கப்படுவதாக என்னிடத்திலே நேரடியாகவே அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் விளைவாக, கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்களுக்கு விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, எல்லோருக்கும் நியாயமான விலையிலே கிடைக்கின்ற முறையிலே, இந்த உணவு வர்த்தகத்தை அரசே நேரடியாக எடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் றிப்பிட்டபடி திருச்சி நகரத்தைப் பற்றிச் சொன்னேன். னக்குக் கிடைத்திருக்கும் தகவலை வைத்துத்தான் சொன்னன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற நிலைமை இருக்குமானால் ஆராய்ந்து பார்த்து என்ன நடவடிக்கை எடுக்க வண்டுமோ அதை எடுக்க அரசு முயற்சிக்கும்.

## (5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை இந்த அவையில் எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த உரையின் மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்களைச் சேர்ந்த சிலர் மிக முக்கியமாக இந்த அவையிலே எதிர்க்கட்சித் தலைவரை மாற்ற வேண்டுமென்று தங்களுடைய தணியாத விழைவு ஒன்றினைத் தெரிவித்தார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்குக் கண்ணியம் வேண்டும், பெருந்தன்மை வேண்டும், விரக்தி நிலையிலிருந்து மாறியவராக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் மாற்றப்பட வேண்டும். அதற்கு இந்த அவையிலுள்ள உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று விவாதத்தை ஆரம்பித்து வைத்த ஆளும் கட்சி உறுப்பினர் இங்கு திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்கள்.

எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்கு என்ன தகுதிகள் வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து அண்ணா திராவிட முன்னேற்

றக் கழகத்திற்குச் சென்று, அதற்குப் பிறகு இந்திரா காங்கிரசுக்குச் சென்று, அதற்குப் பிறகு ஜனதா கட்சிக்குச் சென்று அதற்குப் பிறகு மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து இப்படிப்பட்ட பயங்கரமான பாய்ச்சல்களை நடத்திக் கொண்டிருக்கிற ஒருவர்தான் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்குத் தகுதியானவர் என்று அந்த அருமை நண்பர் எண்ணுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. கோ. விஸ்வநாதன் :** * * * * *

(கூச்சல் குழப்பம்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் உட்கார வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது குறுக்கிடுவது வழக்கமல்ல.

**திரு. கோ. விஸ்வநாதன் :** * * * * *

(முற்பகல் 11–00.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. உறுப்பினர்கள் உட்கார வேண்டும் நான்சொல்வதை கேளுங்கள். குறுக்கீடுகளை இன்றைக்கு அனுமதிக்கவில்லை அநேகமாக. அநேகமாக என்று நான் சொல்லியிருக்கிறேன். அவசியம் இல்லாததை அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடு). அவர்தான் அந்த விவாதத்தைத் தொடங்கி வைத்தார்.

**திரு. கோ. விஸ்வநாதன் :** தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** திட்டமிட்டு அப்ஸ்டரக்ஷன் பண்ணுவதற்காக ரெடியாக வந்திருக்கிறார்கள் என்றுதான் தெரிகிறது (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விஸ்வநாதனை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) திரு. விஸ்வநாதன் பேசியது எல்லாம் அவைக் குறிப்பிலே ஏறாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இன்றைய தினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் நானும் பேசவேண்டியிருக்கிறது. அவர்களுடைய பேச்சுக்கும் மற்றவர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அவைக் குறிப்பிலிருந்து [illegible]





களுடைய கருத்துகளுக்கும் பதில் சொல்வது என்ற முடிவில் இன்றைய கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. யாருக்காவது, ...வர் சொல்லாததை இங்கே சொல்லிப் பேசியதாக இருந்...ால் அதைப்பற்றி தனியாகப் பேசுவதற்கு வாய்ப்பு எடுத்துக...ாண்டு எதிர்க்கட்சித்தலைவர் பேசி முடித்தபிறகு அவருடைய ...ருத்தைச் சொல்வதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கட்டுக்...காள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** ஆளுநருடைய உரை கூட்டம் ...மிழகத்திலே எத்தகைய சூழ்நிலையிலே இந்த அவையிலே கூட்...ப்பட்டிருக்கிறது என்பதனை இந்த மாமன்றத்திலே பேசிய ...ல கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் உறுப்பினர்களும் மிக ...ிளக்கமாக எடுத்துக் கூறினார்கள். விவசாயிகளுடைய கிளர்ச்சி ...ஏறத்தாழ 10 பேர் சுட்டுக் ...டைபெற்று அந்தக் கிளர்ச்சியிலே ...அத்தகைய ஒரு உச்சகட்ட ...கொல்லப்படுகிற சூழ்நிலை உருவாகி ...காவல் துறையினுடைய கட்டுக் ...அசம்பாவிதத்திற்குப் பிறகும், ...குக்கிராமங்களிலே ...டங்காத அட்டூழியம் கிராமப்புறங்களிலே, ...இடங்களிலே தொடர்ந்து ...விவசாயப்பெருங்குடி மக்கள்வாழ்கின்ற ...கொண்டும் இருக்கின் ...நடைபெற்றதும், நடைபெற்றுக் ...சுட்டிக்காட்டப்பட வேண்டிய ...றன என்பதும் வேதனையோடு ...ஒன்று ஆகும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அருமை நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். திருவேங்கடம்-குறிஞ்சாகுளம் பகுதியிலே தேவையில்லாமல் தவிர்க்கக்கூடிய சூழ்நிலை இருந்தும் தவிர்க்கப்படாமல் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆளுங்கட்சியினுடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஏதோ எதிர்க் கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே குற்றச்சாட்டை சுமத்துகிறார்கள் என்று சொல்லி அந்தக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலாமல் தோழமைக் கட்சியின் சார்பாக எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை இந்த அரசு சீர் தூக்கிப் பார்க்க வேண்டுமென்று வலியுறுத்துவது என்னுடைய கடமையாகிறது. விவசாயிகள் கிளர்ச்சி, முழு அடைப்பு, வேலை நிறுத்தம் என்ற பெயரால் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது நெல்லை மாவட்டம் திருவேங்கடம் பகுதியிலேயும், செங்கற்பட்டு மாவட்டத்திலே திருத்தணி பகுதியிலேயும் தென் ஆற்காடு பகுதியிலே பண்ருட்டியிலேயும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன.

அதிலே குறிப்பாக, திருவேங்கடத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில், அங்கே பேருந்து செல்வதற்கான வழித்தடங்கள் அடைக்கப்பட்டன என்ற உண்மைக்கு மாறான ஒரு தகவலை அவர்களே உருவாக்கிக் கொண்டு, மாலை நான்கு மணி

யளவில், ஏறத்தாழ முழு அடைப்பு முற்றுப் பெறுகின்ற நேரத்
தில், காவல்துறையினர் பலர் அணியணியாக அந்த ஊருக்குச்
சென்று, செல்கிற நேரத்திலே வழியிலே உள்ள தானியங்களைக்
கொளுத்தி, சீர்குலைத்து, அழித்து, கிராமத்திற்குள்ளே நுழைந்த
பொழுது, அந்தக் கிராமத்திலுள்ள விவசாயிகளினுடைய சங்
கத்தின் தலைவராகவும், அந்தக் கிராமத்து மக்களால் பெரிதும்
மதிக்கத்தக்கவராயும் இருந்த ஒரு முதியவர் தன்னுடைய கரங்
களைக் கூப்பி தொழுதவாறு, போலீசாருக்கு முன்னால் வந்து,
முழு அடைப்பு அமைதியாக நடைபெற்று முடிந்து விட்டது;
இங்கு பொதுவாகவே பேருந்துகள் அதிகமாகச் செல்வதில்லை;
எனவே நாங்கள் அவைகளைத் தடுக்க வேண்டிய அவசியம்கூட
எங்களுக்கு ஏற்படவில்லை; இரண்டொரு தனியார் பஸ்கள்
தான் இங்கே செல்லும், அவைகள்கூட இன்றைக்கு வரவில்லை,
எனவே நீங்கள் இங்கே வரத் தேவையில்லை என்று சொல்லிக்
கொண்டு கைகூப்பித் தொழுது முறையீட்டைச் செய்து கொண்டி
ருக்கும்பொழுதே, அவருடைய நெஞ்சைப் பிளக்கிற அளவிற்குத்
துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று, தொடர்ந்து நடைபெற்ற
அமளியிலே ஐந்து பேர் அங்கே கொல்லப்பட்டார்கள். அதிலும்
பெரிய கொடுமை, துப்பாக்கிப் பிரயோகத்தால் மாத்திரம் அவர்
கள் கொல்லப்படவில்லை. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு
ஆளான ஓரிருவரை அவர்கள் சாகாமல் இருக்கும்பொழுது
போலீஸ் லாரியிலே தூக்கிப் போட்டு அந்த ஊர் மக்களுக்கு
நேராகவே போலீசார் மிதித்துக் கொன்றார்கள். துப்பாக்கிப்
பிரயோகத்திலே சாகவில்லை; எனவே சாகடிக்க வேண்டு
மென்பதற்காக மிதித்துக் கொன்றார்கள் என்கின்ற இந்தச்
செய்திகளெல்லாம் தமிழகத்திலே உள்ள கிராமக் பகுதிகளில் எவ்
வளவு வேதனையான, விபரீதமான செய்திகள் என்பதை நாம்
மறந்து விடுவதற்கில்லை.

விவசாயிகளினுடைய பிரச்னை இன்னும் தீர்க்கப்படாத பிரச்
னையாக இருந்து வருகிறது. அதிலே, அவர்களுடைய கடன்
கள் அனைத்தையும் ரத்து செய்கிறேன் ஐந்தாண்டுக் காலத்
திலே என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சட்ட
மன்றத் தேர்தலையொட்டி வாக்குறுதிகளை வழங்கினார்கள்.
விவசாயச் சங்கத் தலைவருடைய இல்லத்திற்கே சென்று அத்
தகைய உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. பிறகு நிதிநிலை
அறிக்கையிலே 40 கோடி ரூபாய் அல்லது 42 கோடி ரூபாய்
அளவிற்குக் கடன்கள் ரத்து என்று ஒரு குழப்பமான சூழ்நிலை
யில், தெளிவற்ற நிலையில் ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது.
அதிலும் பயனடைந்தவர்கள் யார்? உண்மையிலேயே பயன்
பெற வேண்டியவர்கள் பயன் அடைந்தார்களா என்ற சந்தே
கத்தை யெல்லாம் தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்களே
இங்கே எடுத்துக் காட்டி இருக்கின்றார்கள்.



அதன் பின்னர் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள்
சிலகூட்டங்களில் இந்த 42 கோடி, அதோடு சேர்ந்த 16 கோடி
தக்காவிக் கடன்கள் இவைகளைத் தவிர வேறு கடன்களை இந்த
அரசு ரத்து செய்யாது என்று திட்டவட்டமாகக் கூறி ஏடுகளிலே
வெளிவந்தன; அது வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது.
அதைத் தொடர்ந்து செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் நடை
பெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழா
வில் அண்ணா சாலையிலே, அண்ணா சிலைக்கு அருகாமையிலே
நடைபெற்ற கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் 240
கோடி ரூபாயையும், ஐந்தாண்டுக் காலத்திலே இந்த அரசு
ரத்து செய்யும் என்ற உறுதிமொழியினைத் தந்தார்கள்.

ஆனால், இந்த உறுதிமொழிகள் அனைத்தும் காப்பாற்றப்
படாத, காற்றிலே பறக்க விடப்பட்ட, நிறைவேறும் என்கின்ற
ஒரு நம்பிக்கையைக் கூட விவசாயிகளுக்கு அளிக்காத ஒரு
சூழ்நிலையில் மின்வெட்டுக்கள், இன்னும் பல தொல்லை
களுக்கு விவசாயிகள் ஆளாக்கப்பட்டு, இந்தக் கிளர்ச்சி குமுறி
எழுந்தது என்பதும், அது இன்னும் அடங்கியபாடில்லை, இன்னும்
அது நீறுபூத்த நெருப்பாகத்தான் இருக்கிறது என்பதும் இந்த
அவையிலே உள்ள நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அதற்கு
என்ன பரிகாரங்களைச் செய்யப் போகிறோம் என்பதற்கான
திட்டவட்டமான முடிவுகள், தமிழகத்திலே மிக முக்கியமான
தொழிலாக இருக்கின்ற வேளாண்மைத் தொழில், அதிலே ஈடு
பட்டிருக்கின்ற உழவர் பெருங்குடி மக்கள், அவர்களுக்கு ஏற்
பட்டுள்ள உபத்திரவங்கள் இவைகளை நீக்குவதற்கு என்ன திட்ட
வட்டமான காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று தெளி
வுரையாக இந்த ஆளுநர் உரை இல்லை என்பதுதான் எனக்குள்ள
மெத்த வருத்தம் என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில் பக்கிங்ஹாம் அன்ட் கர்நாட்டிக் மில்
தொழிலாளர்கள் 13,000 பேர் இந்தியாவிலே மிகப் பெரிய ஆலை
என்ற பேரும் புகழும் பெற்று, மிகப் பெரிய தொழிற்சங்கம்
மற்றத் தொழிற் சங்கங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக
விளங்குகின்ற தொழிற்சங்கம் என்கின்ற சிறப்புப் பெற்று,
மிகப்பெரும் தலைவர்களெல்லாம் அதனுடைய தலைமைப்
பொறுப்பை ஏற்றிருந்தார்கள் என்கின்ற கீர்த்தி பெற்று
விளங்கும் பி அன்ட் சி மில் ஆலை மூடப்பட்ட காரணத்தி
னால் இன்றைக்கு 13,000 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை
இழந்து, இன்னும் சில நாட்களுக்குப் பிறகு நடுத்தெருவிலே நிற்க
வேண்டிய நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இது
குறித்து மத்திய அரசோடு கலந்து பேசவோ அல்லது மாநில
அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவோ தயக்கம் காட்டியது,
தாமதம் காட்டியது. அதற்கான அவசரம் காட்டப்படவில்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1981 பிப்ரவரி 4

(முற்பகல் 11-10)

**அது அவசியமான** பிரச்னையாகவும் **உணரப்படவில்லை என்பதும** நான் இங்கே எடுத்து வைக்கின்ற மிக முக்கியமான குற்றச்சாட்டாகும்.

அவசரக் கோலம் அள்ளித் தெளி என்பதைப்போல், கிராமப்புறத்திலே கிராம அதிகாரிகளுடைய நிர்வாகத்திலே சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட கருததானாலுங்கூட, அந்தக் கருத்தை நிறைவேற்றுவதிலே, முறைப்படி மாற்றுத் திட்டங்களை ஆராய்ந்து அதைச் செயல்படுத்துகின்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், திடீரென ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக 24,000 கிராம அதிகாரிகளை, வீட்டுக்கு அனுப்பிவிட்டு, மற்ற மாநிலங்களிலே அந்தக் கிராம அதிகாரிகளுக்கு எத்தகைய இழப்பீடுகள் தந்திருக்கிறார்கள். எத்தகைய நிவாரணங்கள், துயர் துடைப்புகள தந்திருக்கிறார்கள் என்பதை யெல்லாம் எண்ணிப் பார்க்காமல் அவர்களை சமஸ்தானாதிபதிகளைப் போல் வர்ணித்து, அவர்கள் மீது இல்லாத, பொல்லாத, இழிவான பழியை யெல்லாம் சுமத்தி, வீட்டுக்கு அனுப்பி இருக்கின்ற அந்தச் செயல் கண்டிக்கத்தக்க செயலாகும். அதற்கான மறுபரிசீலனை நடைபெறும் என்ற நம்பிக்கை சொலகூட ஆளுநர் உரையிலே இடம் பெறாமல், அதற்கான சட்டம் நிறைவேற்றப்படும் என்ற அளவிலேதான் இந்த அரசு தன்னுடைய நடவடிக்கையிலே மேலும் பிடிவாதமாக இருக்கின்றது எனபதை நான் எடுத்துக் காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஆளுநர் உரையிலே அண்மையிலே நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடு பற்றிய குறிப்பு இருக்கிறது. உலகத் தமிழ் மாநாட்டிற்காக, தொடக்கத்திலே ஒரு பொது நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. அப்படி அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவினுடைய கூட்டம் எப்பொழுது கூடியது என்பதுதான் வேடிக்கையானது வேதனையானது. பொது நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டதும், உடனடியாகக் கூடி, அந்த மாநாட்டை எப்படியெல்லாம் நடத்தலாம் என்று திட்டங்களைத் தீட்டி, எந்த வகையிலே அது சிறப்பாக அமைய வழி வகுக்கலாம் என்ற சீரிய யோசனைகளைப் பெற்று அந்த மாநாட்டுக்கான நடவடிக்கையிலே இறங்காத இந்த அரசு ஆளுநர் உரையிலே மாத்திரம் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறது. "....நன்கு உருவாக்கப்பட்ட சீரிய திட்டத்தினை வகுக்க இந்தஅரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மை நிலை என்னவென்றால், மாநாடு நடைபெறுவதற்கு 20 நாட்களுக்கு முன்புதான், அதாவது 13—12—1980, டிசம்பர் 13-ஆம் தேதிதான் சென்னை மாநகரத்திலே அந்தப் பொது நிர்வாகக் குழுவினுடைய கூட்டமே கூடி, என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசனை கேட்கவில்லை; என்னென்ன



1981 பிப்ரவரி 4] [டாக்டர் மு. கருணாநிதி]

செய்திருக்கிறோம், என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை தாங்கள் ஏற்கெனவே அறிவித்த திட்டங்களை ஒரு 'இன்பர்மேஷன்', ஒரு செய்தியாக அந்தக் குழுவுக்குத் தரப்படுகிறதே அல்லாமல், முறைப்படி திட்டங்கள் எதுவும் அங்கே நடத்தப்படவில்லை, யோசிக்கப்படவில்லை. அதனால்தான் அந்த மாநாடு, எந்த அளவிற்கு அவசரக் கோலமாக நடத்தப்பட்டது என்பதற்கு ஒரு துளி உதாரணத்தைத் தரவேண்டுமானால், வைக்கப்பட்ட சிலைகளிலே கூடக் கோளாறு. ஒன்றிரண்டு சிலைகள்தான் ஒரு அரை உருவச் சிலை, அல்லது முழு உருவச் சிலையாக வைக்கப்பட்டது.

திரு. க. அன்பழகன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்
* * * * * (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **இவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவார்கள்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாட்டில், மதுரை மாநகரத்திலே திட்டமிட்டு அல்லது திட்டமிட்ட செயல்முறைகள் வகுக்கப்பட்டு காரியங்கள்நடைபெறாத காரணத்தினால் எந்த அளவுக்கு அலங்கோலங்கள் ஏற்பட்டன என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை முதலிலே நான் உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். பிறகு 15 நாள் 10 நாள் கழித்து அந்தத் தவறுகள் தீர்க்கப்பட்டதாக அறிகிறேன். அங்கே சிலைகள் வைக்கப்பட்டன, வைக்கப்பட்ட சிலைகள், சென்னையிலே அண்ணா அவர்கள் காலத்திலே வைக்கப்பட்டது போன்று முழு உருவச் சிலைகள் அல்ல. இதிலே ஒன்றிரண்டு சிலைகளைத் தவிர, அத்தனையும் சிலைகள் அல்ல. வெறும் தலைகள்தான் வைக்கப்பட்டன. அப்படி வைக்கப்பட்டதிலே கூட ராபர்ட் டி. நொபிலி-யின் தலை ஒன்றை சிலையாகவைத்து, அதற்குக் கீழே வைக்கப்பட்ட கல்வெட்டிலே, வீராமாமுனிவர் திருஉருவச் சிலை என்று எழுதப்பட்டு, அதனுடைய தலைவர் மாண்புமிகு விஜயசாரதி என்றும், திறப்பாளர் மாண்புமிகு இராமச்சந்திரன் என்கின்ற அடிக்கல்—நொபிலியினுடைய சிலைக்கு வைக்க வேண்டிய அடிக்கல்லை—வீரமா முனிவர் சிலைக்கும், வீராமா முனிவர் சிலைக்கு வைக்க வேண்டிய அடிக்கல்லை, நொபிலியினுடைய சிலைக்குக் கீழேயும் வைத்தார்கள்.

(முற்பகல் 11-20)

அதைப்போலவே, வீரமாமுனிவர் சிலையை வைத்துவிட்டு, அந்தச் சிலைக்குக் கீழே—இது ராபர்ட் நொபிலியினுடைய சிலை என்று எழுதினார்கள். எனக்குள்ள வருத்தம் எல்லாம் உலகத்தில்

---

*மாண்புமிகுபேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருந்து வந்திருந்த தமிழர்கள் எல்லாம் அதைப் பார்த்து விட்டு, தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களுக்கு வீரமாமுனிவர் யார், ராபர்ட் நொபிலி யார் என்கிற வித்தியாசம் கூடத் தெரியாமல் போய்விட்டது என்று கேலி செய்து இருப்பார்களே என்ற வருத்தம்தான். எனவே, திட்டமிட்டு இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறவில்லை. முறையாகச் செயல்கள் வகுக்கப்படவில்லை என்பதற்கு இது ஒரு ஆதாரமாகும்.

சுற்றுலாத் துறை சார்பாக மதுரையிலே ஒரு ஓட்டல்—ஒரு விடுதி ஏறத்தாழ ரூபாய் 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, 20—25 ஆயிர ரூபாய் செலவில் அந்த ஓட்டலுக்கு ராஜராஜன் என்ற பெயர் சூட்டப்பெற்று, எழுதப்பெற்று, அந்தப் பலகை வைக்கப்பட்டு, "இந்து" போன்ற பத்திரிக்கைகளில் எல்லாம் கூட அந்த ஓட்டலின் திறப்பு விழாவுக்கு விளம்பரங்கள் வெளியிடப்பெற்று, அப்படி வெளியிடப் பெற்ற விளம்பரத்தில் ஆளுநர் வாழ்த்து, முதலமைச்சரின் வாழ்த்து, மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் வாழ்த்து இவைகள் எல்லாம் இடம் பெற்று, சோழ மன்னன் ராஜராஜனின் பெயரால் இந்த விடுதி விளங்கும் என்று சோழமாணின் கீர்த்திக்கும் புகழ்பாடப்பெற்று, இத்தனைக்கும் பிறகு திடீரென்று ராஜராஜனின் பெயரால் அமைந்த அந்த விடுதியின் பெயரை ஒரே உத்தரவின் மூலம் மாற்றி அல்லது முதலமைச்சர் அங்கே சென்றவுடன் மாற்றி, "ஓட்டல் தமிழ்நாடு" என்கிற பெயரை வைத்து விட்டார்கள். ஓட்டல் தமிழ்நாடு என்று பெயர் வைத்ததிலே எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. வருத்தமும் இல்லை. நான் கேட்பது எல்லாம், அதையே கொஞ்சம் ஆர, அமர சிந்தித்து முதலிலேயே "ஓட்டல் தமிழ் நாடு" என்று பெயர் வைத்து இருந்தால் என்ன? அதை விட்டு விட்டு, முதலில் ராஜராஜன் என்று பெயர் வைப்பானேன்? அந்தப் பெயரை வைத்துவிட்டு, பிறகு அந்தப் பெயரை மாற்றுவானேன்? இது ஒரு பெரிய மாமன்னனுக்கு அவமானம் என்றுதான் தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரையில் கருதுகிறார்கள் என்கிற ஆணித்தரமான குற்றச்சாட்டை இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

அங்கே வெளியிடப்பட்ட மலர் குறித்து காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும், என்னுடைய அருமை நண்பருமான திரு. சுந்தரராஜ் அவர்கள் இங்கே ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். அதிலே வெளியிடப்பட்டுள்ள ஒரு கட்டுரை 174 ஆம் பக்கம் முதல் 177 ஆம் பக்கம் வரையில் ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறது. அதில் மறவர் குல பெருமக்கள் இழிவுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் விளக்கம் அளிக்கும் போது சொன்னார்கள் மறவர் என்றால் வீரர் என்ற பொருள் அந்தப் பொருளிலேதான் அது கையாளப்பட்டு



இருக்கக்கூடும் என்று சொன்னார்கள். ஆனால் சம்பல் நதிப் பள்ளத்தாக்கில் இருப்பவர்கள் வீரர்கள் என்று அழைக்கப்பட வில்லை. கொள்ளைக்காரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அந்தக் கொள்ளைக்காரர்களை வீரர்கள் என்று அழைப்பது தவறு. மறவர் என்றால் வீரர், அந்த மறவர் என்கிற அடை மொழியை கொள்ளைக்காரர்கள்—கொள்ளைக்கார மறவர்கள் அல்லது கொடும் மறவர்கள் என்கிற பெயரால் அழைப்பது உள்ளபடியே அந்தக் குலத்தை இழிவுபடுத்துகின்ற ஒரு காரியமாகும்.

நாவலர் அவர்களோ அல்லது மற்றவர்களோ அன்றைக்கு ஒரே வரியிலே பதில் சொல்லியிருக்கலாம். அந்தக் கட்டுரையில் அந்தத் தவறு நேர்ந்து விட்டமைக்காக வருந்துகிறோம் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் வாதத்திற்கு வாதம் எடுத்து வைத்து, அவர்களுடைய பிடிவாதத்தை இங்கே காட்டினார்களே அல்லாமல், ஏதோ தவறு நேர்ந்து விட்டது, அந்த மலர் ஒரு வேளை அடுத்து பதிப்பு என்று வெளியிடுவதாக இருந்தால், அதிலே வராமல் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்கலாம். அதற்குப் பதிலாக, அதுதான் சரி. அது சங்க இலக்கியத்தில் இருக்கிறது. எனவே, தவறு இல்லை என்று சொன்னார்கள்.

இதே கருத்தைத்தான் முன்பொருமுறை கழக ஆட்சியிலே நான் முதலமைச்சராகவும், நாவலர் அவர்கள் கல்வியமைச்சராகவும் பொறுப்பேற்று இருந்த நேரத்தில், பாடப் புத்தகத்திலே இப்படி மறவர்களை இழிவுபடுத்தும் சொல் வந்துவிட்டது என்று அன்று இருந்த பார்வார்ட் பிளாக் கட்சித் தோழர்கள் எடுத்துக் காட்டியபோது, நாவலர் அவர்கள் இலக்கியத்தில் இருக்கிறது என்று வாதிட்டார்கள். என்றாலும்கூட, அவர்கள் மனதைப் புண்படுத்துமேயானால், அதை எடுத்து விடலாம் என்று சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, பாடப் புத்தகத்திலே இருந்து அது அகற்றப்பட்டது.

இப்போது நாவலர் அவர்கள் எடுத்து வைத்த வாதம்—இலக்கியத்தில் இருக்கிறது என்ன செய்ய என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன் நானும், நாவலர் அவர்களும், நம்முடைய பேராசிரியர் அவர்களும் அமைச்சர் பொறுப்பில் இந்த அவையிலே இருந்த காலத்தில் "நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கெழில் ஒழுகும், சீராரும் வதனமெனத் திகழ் பரதக் கண்டமதில்", என்ற மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளையினுடைய பாடலை "தமிழ்த்தாய் வாழ்த்து" அரசு நிகழ்ச்சிகளில் பாடவேண்டும் என்று ஆணை பிறப்பித்தோம். அந்தப் பாடலிலே "ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்" என்ற அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டோம். ஏனென்றால் ஒரு வாழ்த்து பாடப்படுகின்ற

நேரத்திலே 'அழிந்து, ஒழிந்து' என்கின்ற இந்த சொற்களோ
அல்லது இன்னொரு மொழியைக் கேலி செய்கின்ற அளவு 'ஆரியம்
போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து' என்று இருக்கின்ற
சொற்களோ இடம்பெற வேண்டாம் என்பதற்காகத்தான்
அன்றைக்கு '' ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து ''
என்கின்ற அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டோம். மனோன்
மணீயம் சுந்தரம்பிள்ளை பாடியிருக்கிறாரே, இருந்தால் என்ன
என்று நாங்கள் கேட்கவில்லை ; அப்படி வைக்கவும் இல்லை.
அதைப்போல நான் எழுதிய சிலப்பதிகார நாடகக் காப்பியம்.
அந்த நாடகக் காப்பியத்திலே கூட சிலம்பு திருடியவர்கள் ஒரு
குறிப்பிட்ட வகுப்பார் என்று இளங்கோவடிகள் எழுதியதை கூட
மாற்றி, அது ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மனத்தைப் புண்படுத்தும்
என்ற காரணத்தால் அரண்மனையிலுள்ள ஒரு அதிகாரிதான்
அந்தக் காரியத்தைச் செய்தார் என்று கதையை மாற்றி, அப்படி
எழுதிவிட்டு, அந்த நாடக இலக்கியத்திற்கு பேரறிஞர் அண்ணா
அவர்கள் முன்னுரை தந்து, நம்முடைய நாவலர் அவர்களும்
அந்தப் புத்தகத்தை வெளியிட்ட விழாவிலேயும் சரி, அந்தப் படம்
வெளியீட்டு விழாவிலேயும் சரி அதைப் பாராட்டிப் பேசியிருக்
கிறார்கள். எனவே சிலப்பதிகாரத்திலே இருக்கிறதே, இன்னார்
தான் சிலம்பு திருடினார் என்று வைத்தால் என்ன என்று நாம்
அப்போது வாதிடவில்லை; யாரையும் புன்படுத்தாமல் இருக்கட்
டும் என்பதற்காக.

நான் கேள்விப்பட்டேன். மதுரை மாநாட்டிலே கூட

''காவா நாவிற் கனகனும் விஜயனும்
விருந்தின் மன்னர் தம்மொடு கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலராகி
செப்பிய மொழிகளை சேரனுக்கு உணர்த்துவேன்''.

என்று கனக விஜயர் தமிழ் மன்னர்களை இகழ்ந்துரைத்தார்
என்ற செய்தியை சேர மன்னனுக்குச் சொல்ல, செங்குட்டுவன்
சீறியெழுந்து படைகொண்டு சென்று, வடபுலம் வரையிலே
சென்று ஆங்காங்கே மன்னர்களை வென்று, குயிலாலுவம்
என்கின்ற இடத்திலே கனக விஜயரை சிறைப்பிடித்து, அவர்
களுடைய தலையிலே கல்லேற்றி, கண்ணகிக்குச் சிலை வடிக்க
தமிழகத்திற்குக் கொண்டுவந்தான் ; வஞ்சி மூதூரில் சிலை
நாட்டினான் என்ற அந்த வரலாற்றை மதுரையிலே பிரதமர்
இந்திராகாந்தி அவர்கள் வருகின்ற காலத்திலே ஊர்வலத்திலே
அலங்கார வண்டிகளிலே ஒரு வண்டியாக சேர்க்கப்பட்டிருந்தது.
அந்த வண்டி இடம்பெறுமா என்று நம்முடைய வருவாய்த் துறை
அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்களிடம் நிருபர்கள் கேட்டபோது;
'' இடம்பெறும் '' என்று அவர்கள் சிரித்துக் கொண்டே பதில்



சொன்னார்கள் என்ற செய்திகள் எல்லாம் பத்திரிகைகளிலே
வந்து, கடைசி நேரத்திலே அந்த வண்டி நிறுத்தப்பட்டுவிட்டது.
ஏன் நிறுத்தப்பட்டது என்று நான் கேட்கவில்லை. நிறுத்தப்பட்ட
வண்டி இலக்கியத்தில் இருக்கிறது ; எனவே இருந்தால் என்ன
என்று அப்போது நாவலர் வாதிடவில்லை. இருந்தாலும் கூட
இது யாரையாவது புண்படுத்தக்கூடும் என்ற காரணத்தால் அந்த
வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. இலக்கியத்திலே உள்ள வர
லாற்று உண்மை. கனக விஜயன் தலையிலே கல்லேற்றி வந்தது
வரலாற்று உண்மை. அந்த வண்டி நிறுத்தப்பட்டிருக்
கிறது.

அரிச்சந்திரா நாடகம் பழைய இலக்கியம்தான் ; இதிகாசம்
தான். அதிலே தாழ்த்தப்பட்ட மக்கள் இழிவுபடுத்தப்படுகிறார்
கள் என்பதற்காக ஒரு போராட்டமே நடைபெற்று நடத்தப்
பட்டு, முன்பு இருந்த அரசாலே அன்றைக்கு தடை விதிக்கப்
பட்டது. அது இலக்கியத்திலே இருக்கிறது ; இதிகாசத்திலே
இருக்கிறது ; ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களை இழிவுபடுத்துவது
தவறு இல்லை என்று யாரும் வாதிடவில்லை. நண்பர் இளைய
பெருமாள் போன்றவர்களுக்கு எல்லாம் நன்கு தெரியும். எனவே
தான் இப்படி யாரையும் இழிவுபடுத்தக்கூடிய அளவுக்கு, புண்
படுத்தக்கூடிய அளவுக்கு ஏதாவது இருக்குமானால் அவைகளை
நாம் ஓரளவுக்கு கவனத்திற்கு கொண்டுவராமல் இருப்பது நல்லது
என்ற முடிவை கழக அரசும் சரி, அண்ணா தி.மு.க. அரசும்
சரி மேற்கொண்டிருக்கும்போது இந்த விவகாரத்தில் மாத்திரம்
நான் சொன்னேன் என்பதற்காக அல்லது காங்கிரஸ் கட்சியின்
சார்பிலே திரு. சுந்தரராஜ் சொன்னார் என்பதற்காக ஒரு பிடி
வாதத்தை மேற்கொள்வது நல்லதல்ல. ஒரே வரியிலே,
அன்றைக்கு எழுந்தவுடன் நம்முடைய முதலமைச்சரோ அல்லது
நிதி அமைச்சரோ சொல்லியிருக்கலாம். எப்படியோ தவறு
நேர்ந்துவிட்டது ; அது எதிர்காலத்தில் திருத்திக் கொள்ளப்படும்
என்று சொல்லியிருக்கலாம். எனவேதான் நீங்கள் வாதங்களை
வைப்பதிலே போட்டி போடுகிறீர்களே அல்லாமல், இப்படிபட்ட
காரியங்களில் பிடிவாதமாக இருக்கிறீர்கள் என்கின்ற குற்றத்தை
நான் உங்கள்மீது சுமத்த தவிர்க்க முடியாத சூழ்நிலையிலே
கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஜெகத்குரு சங்கராச்சாரியார்
அவர்களுடைய ஆசியும் பெறப்பட்டது என்ற செய்தியும் நம்
முடைய முதலமைச்சரால் வெளியிடப்பட்டது. நான் அதுபற்றி
எத்தகைய விமரிசனங்களையோ கருத்து மாறுபாடுகளையோ
எடுத்துகூற விரும்பவில்லை. உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஆசி
அளித்த ஜெகத்குரு சங்கராச்சாரியார் அவர்கள் தமிழ்நாட்டிலே
ஆண்டவனுக்கு, ஆலயங்களில் இருக்கிற விக்கரகங்களுக்கு தமிழி
லேயே அர்ச்சனை நடத்துவதற்கும் அனுமதி அளிப்பாரேயானால்

[டாக்டர் மு. கருணாநிதி] [1981 பிப்ரவரி 4

உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஆசி அளித்ததைவிட அதிகப் பாராட்டுதலை நான் சங்கராச்சாரியார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருப்பேன். சங்கராச்சாரியாரோடு நெருக்கம் கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அத்தகைய ஒரு அனுமதியை, இருக்கின்ற தடையை நீக்குகின்ற ஒரு நிலையை, சங்கராச்சாரியாரோடு கலந்து பேசி எதிர்காலத்திலே தமிழ்நாட்டு ஆலயங்களிலே எங்களுடைய தமிழ் கடவுள்களுக்கு தமிழ்தான் புரியும்; பிற மொழி புரியாது; எனவே தமிழில் அர்ச்சனை செய்ய சங்கராச்சாரியார் அவர்களே முன் நின்று, வலிய வந்து அவர்களே அதை அனுமதிக்கிற அளவுக்கு, நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்கு, ஒரு ஆலயத்திலே அவர்களே அதற்கு தொடக்க விழாவினை நடத்துகின்ற அளவுக்கு அனுமதித்து, முன்வருவார்களேயானால் நான் உள்ளபடியே மெத்த மகிழ்ச்சியடைவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அந்த மாநாட்டில் நம்முடைய தமிழ்நாட்டின் உரிமைகள் சிலவற்றை நம்முடைய முதலமைச்சரவர்கள் விட்டுக்கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்கோ, இந்த நாட்டினுடைய கவனத்திற்கோ கூட அல்ல, மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கண்காட்சி தொடக்க விழாவை நடத்த வந்த கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. குண்டுராவ் அவர்கள் '' இரண்டு மாநிலங்களுக்கிடையே பிரச்சினைகள் உள்ளது உண்மைதான், ஆனால் பரிவு உணர்வுடன் அணுகினால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் '' என்று அவர் பேச—நான் தினமணியின் மதுரைப் பதிப்பில் 6—1—1981-லே வெளியிடப்பட்ட செய்தியைத் தான் படிக்கிறேன்—எம். ஜி. ஆர். அவர்கள்,—அதிலே எம். ஜி. ஆர். என்று இருக்கின்றது, எனவே ஏன் முதலமைச்சர் என்று சொல்லவில்லை என்று யாரும் கோபித்துக்கொள்ள வேண்டாம்—'' தலைமை வகித்துப் பேசிய எம்.ஜி.ஆர். காவிரி நதி இரு மாநிலங்களிலும் பாய்வது பற்றி கர்நாடக முதல்வர் பேசியதைப் பற்றி குறிப்பிட்டு, இது நாசுக்கான பிரச்சினை என்றும் காவிரி நதியிலிருந்து கர்நாடகம் அதிகபட்ச பலனை பெறுவதில் தமிழகம் குறுக்கே நிற்காது என்றும் கூறினார். '' இது மதுரை தினமணியில் வெளியாகி இருக்கின்றது. இதற்கு இதுவரையில் அரசின் சார்பிலே மறுப்பு வரவில்லை. காவிரி நதியிலிருந்து கர்நாடகம் அதிகபட்ச பலனைப் பெறுதவதில் தமிழகம் குறுக்கே நிற்காது என்று கூறுவது தமிழ்நாட்டு மக்களுக்கு மிக மிக ஆபத்தான விவகாரம். என்ன சொல்லி இருக்க வேண்டும் என்றால் தமிழக ஆயக்கட்டுகளுக்கு குந்தகம் வராத வகையில் கர்நாடக



1981 பிப்ரவரி 4] [டாக்டர் திரு. மு. கருணாநிதி]

மாநில மக்களும் பயனடைவதில் நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம் என்று சொல்லியிருந்தால் தமிழ்நாட்டு மக்களுக்கும் பாதகம் இல்லை. கர்நாடக மக்களுக்கும் பாதகம் இல்லாத ஒரு செய்தியாக இருந்திருக்கும். ஆனால் அதற்கு மாறாக காவிரியிலிருந்து கர்நாடகம் அதிகபட்ச பலனைப் பெறுவதில் தமிழகம் குறுக்கே நிற்காது என்று கூறியிருப்பது தமிழ்நாட்டு மக்களுக்கும், தமிழ்நாட்டிலே உள்ள பழம்பெரும் ஆயக்கட்டுகளைப் பெற்றிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பேரபாயத்தை உண்டாகக்கூடிய ஒரு செய்தியாகும்.

இன்னொன்று. இந்தக் காவிரி பிரச்சினை பற்றிப் பேசும் போது நான் குறிப்பிடுவது மிக மிக அவசியம். கடந்த செப்டம்பர் திங்கள் டெல்லியிலே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு நம்முடைய முதலமைச்சர், கேரளத்தினுடைய முதலமைச்சர், புதுவை மாநிலத்தினுடைய முதலமைச்சர் ஆகிய இவர்கள் எல்லாம் சென்று இருக்கும்போது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வருகிறார்—இதிலே வேடிக்கை, விபரீதம் என்னவென்றால் கர்நாடக மாநிலத்தின் சார்பாக பேச்சுவார்த்தைக்கு வந்த முதலமைச்சர் குண்டுராவ் அவர்களோடு கர்நாடக மாநிலத்தினுடைய முன்னாள் அமைச்சர், இப்போது எந்தப் பதவியிலும் இல்லாத எச். எம். சென்னபாசப்பா அவர்கள் இடம் பெற்று பெரும்பான்மையான வாதங்களை அந்த முதலமைச்சர்களின் மாநாட்டில் திரு சென்னபாசப்பா அவர்கள் நடத்தி இருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்திலே எந்தப் பதவிப் பொறுப்பிலும் இல்லாத ஒருவர் மத்திய அரசு கூட்டிய அந்த முதலமைச்சர்களுடைய மாநாட்டு நிகழ்ச்சியில், காவிரி பிரச்சினை பற்றிய விவாதங்களை நீண்டநேரம் நிகழ்ச்சியில் அதிகப்படியான விவாதங்களை அந்தத் தமிழக அரசின் சார்பிலே தடுக்கவில்லை. அது கூடாது என்று மறுக்கவில்லை என்பதும் உள்ளபடியே நம்முடைய துரதிருஷ்டமாகும். என்றால் தமிழ்நாட்டுக்கு அதிகமான அளவுக்கு காவிரி தண்ணீர் தரக்கூடாது என்றும், தமிழ்நாடு ஏன் முப்போக சாகுபடியைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் கேள்வி கேட்ட பதிலே அழுத்தந்திருத்தமான எண்ணம் கொண்டவர் சென்னபாசப்பா. அவர் அப்படிப்பட்ட விவாதங்களில் கலந்துகொள்கிற நேரத்தில் தமிழ்நாட்டுக்கு நன்மைகள் கிடைக்கக்கூடிய முடிவு என்ன நிச்சயமாக நாம் எதிர்பார்க்க முடியாது.

உலகத் தமிழ் மாநாட்டிலே இந்தித் திணிப்பு பிரச்சினையில் நம்முடைய இந்திய திருநாட்டினுடைய தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உறுதிமொழியைத் தந்ததை ... ஆளுநர் உரையிலே அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார் ... அதிலே இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ... அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும், தங்களுடைய ... மற்றுமுள்ள கட்சியின் தலைவர்களும்

விவாதங்களை எடுத்து வைத்த நேரத்தில் வேறுபல கருத்துக் களை அதாவது இன்னும் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள் ஆனால் உலகத் தமிழ் மாநாட்டிலேதான் இந்தக் கருத்தை இந்தியப் பிரதமர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்று இல்லை. அவர்கள் இந்தியப் பிரதமராக வருவதற்கு முன்பு கூட அதாவது இரண்டாவது முறையாக வருவதற்கு முன்பு கூட 1979-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள், சென்னை கடற்கரையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடத்தப்பட்ட பெரியார் அண்ணா பிறந்தநாள் விழாவில் அவர் கள் பேசும்போது, அவர்களுக்கு முன்பு நான் பேசிய நேரத்திலே குறிப்பிட்டதைத் தொடர்ந்து அவர்கள் சொன்னார்கள் "என் னுடைய தந்தை அளித்த உறுதிமொழியை நான் காப்பாற்று வேன், இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும்" என்று. அந்த உறுதிமொழியை அம்மையார் அவர் கள் தந்தார்கள்.

பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு பிரதமராகப் பொறுப் பெற்றுக்கொண்ட பிறகும் சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் அவர்கள் இங்கே வந்தபோதெல்லாம் அந்த உறுதி மொழியைத் தரத் தவறவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர்—சட்ட மன்றத் தேர்தல் நேரத்தில் அப்போது முதலமைச்சராகஇல்லை— வாக்காளர்களைச் சந்திக்கும்போதெல்லாம் பிரதமர் அவர்களு டைய உறுதிமொழியை நம்பக்கூடாது என்ற கருத் தின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக மும், காங்கிரஸ் கட்சியும் கூட்டு சேர்ந்து இங்கே ஆட்சியை அமைப்பார்களேயானால் அண்ணா அவர்கள் கொண்டுவந்த இருமொழித் திட்டத்திற்கே ஆபத்து ஏற்படும் என்றும் மீண்டும் மும்மொழித் திட்டம் வந்துவிடும் என்றும் ஒருபீதியை மக்களிடத்திலே எழுப்பினார்கள். அப்பொழுது நாங்கள் விளக்கம் அளித்தோம். 68 ஆம் ஆண்டு, அண்ணா அவர்கள் இந்த அவையிலே இரு மொழித் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, இந்திரா காந்தி அம்மையார் தான் டெல்லியிலே பிரதமராக இருந்தார். அவர் அதை தடுக்க வில்லை, எனவே, இப்பொழுது இங்கே ஒரு கூட்டணி ஆட்சி அமைவதானாலும் கூட நிச்சயமாக இரு மொழித் திட்டத்திற்கு எந்த ஆபத்தும் வராது என்று சொல்லியும் கூட, ஏதோ தேர் தலுக்காக கருணாநிதியும், மற்றவர்களும் சொல்கிறார்கள் என்று என்னுடைய அன்புக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு சொன்னார்களே அல்லாமல் வேறு அல்ல.

ஆனால் இன்றைக்கு முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டிலே இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அளித்த இந்த உறுதி மொழியே நமக்கு போதுமானது என்றும், கேரளத்தினுடைய முதல் அமைச்சர் நாயனார் அவர்கள் அதை அழுத்தம் திருத்தமாகப் பேசும்போது கூட, "அவர்கள் நிச்சயமாக





இந்தியைத் திணிக்க மாட்டார்கள்" என்று கேரள முதலமைச்சர் நாயனார் அவர்களுக்குத் ஆறுதல் கூறுகிற அளவிற்கும் பேசி இருப்பது, தேர்தலுக்கு தேர்தல் நிலைமைகள் மாறுகின்றன என்பதே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த உறுதி மொழி நிலையானதாக ஆக்கப்பட வேண்டும் என்பதிலே அழுத்தம் திருத்தமான கருத்தோடு இருக்கிறோம்.

அப்படி நிலையானதாக ஆக்கப்படுவதற்கு அது அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டும். நேருவினுடைய உறுதி மொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டும். அதுவும் எப்படி இடம் பெற வேண்டும் என்றால், தமிழ் உள்ளிட்ட, இந்தியாவிலே இருக்கக் கூடிய தேசிய மொழிகள் அனைத்தும் மத்திய அரசினுடைய அலுவல் மொழியாக ஆக்கப்பெற வேண்டும் என்கிற குறிக்கோளோடு— இந்த வகையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய மொழிப் போர் இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே, எல்லா மொழிகளுக்கும் ஒரு சமத்துவ நிலைமை மத்திய அரசிலே ஏற் பட்டாக வேண்டும். இந்தித் திணிப்பு என்டது இருக்கவே கூடாது. அதற்கு முதல் கட்டமாக, தற்காலிக ஆறுதலாக நேருவினுடைய உறுதி மொழி இந்திரா காந்தி அவர்களால் காப்பாற்றப்படும் என்று சொல்லப்பட்டாலும் கூட—நான் விரும்பவும் இல்லை, அப்படி நேரக் கூடாது என்றும் விரும்புகிறேன், ஆனால் இயற் கையினுடைய வலிமையை யாரும் எதிர்த்து வெற்றி அடைந்து விட முடியாது, அந்த வகையிலே எதிர்காலத்தில் இந்திரா காந்தி அம்மையாருக்குப் பிறகு வருபவர்கள் தமிழை, தமிழரை வாட்டி எடுக்கிறவர்களாக இரண்டாம் தர குடி மக்களாக ஆக்கிவிடுபவர்களாக இருந்தால் என்ன செய்வது என்ற அச்சத்தின் காரணமாகத்தான், நேருவினுடைய உறுதி மொழி அரசியல் சட்டத்திலே இடம் பெற்றாக வேண்டும் என்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் அழுத்தம் திருத்த மான கருத்தைக் கொண்டிருக்கிறது.

ஆளுநருடைய உரையில் 6-வது 5 ஆண்டு திட்டம் குறித்து சொல்லப்பட்ட செய்தியில், தமிழ் நாட்டின் 6—வது 5 ஆண்டு திட்டத்தின் அளவு அண்மையில் 3,150 கோடி ரூபாய் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும், வெளியிலே இருக்கிற ஆளும் கட்சியைச் சார்ந்துள்ள அல்லது சேர்ந்துள்ள ஏடுகளும் [illegible] அது பற்றிக் குறிப்பிட்டு வரலாறு காணாத நிகழ்ச்சி என்றெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். 6-வது 5 ஆண்டுத் திட்டத்திற்கு தமிழக அரசு மத்திய அரசிடம் கோரிய ஒப்புதல் முதலிலே 3,960 கோடி ரூபாய் என்பதை மறந்து விடக் கூடாது. இப்பொழுது [illegible] இந்தியாக மத்திய அரசு ஒப்புதல் அளித்து இருப்பது

[டாக்டர் திரு. மு. கருணாநிதி] [1981 பிப்ரவரி 4

3,150 கோடி ரூபாய்தான். அதாவது தமிழ் நாட்டினுடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டில் நீங்கள் இவ்வளவு கோடி ரூபாய்க்கு திட்டங்கள் நிறைவேற்ற நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம் என்பதுதான் அதற்குப் பொருளே தவிர வேறு அல்ல. ஏதோ 3,150 கோடி ரூபாயை மத்திய அரசு தமிழகத்திற்கு மானியமாகக் கொடுத்து விட்டதைப் போன்று பேசுவது சரியல்ல.

நம்முடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு நிறைவேற்ற இருக்கிற திட்டங்களுக்கு நாம் வகுத்து அளித்திருக்கிற 'டிராப்டை' அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் பொருள். திட்டத்திற்கு மத்தியிலே இருந்து பணம் வாங்குவது என்பது வேறு. ஒப்புதல் வாங்குவது என்பது வேறு. இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் புரிந்துக் கொண்டால், அதன் அடிப்படையில் பார்த்து மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டிய அளவிற்குத் தேவையான அல்லது உரிய உரிமை படைத்த தொகையை வாங்கியிருக்கிறோமா என்று பார்த்தால் — இல்லை. முதலிலே மத்திய அரசு 6-வது 5 ஆண்டுத் திட்டத்திற்கென ஒப்புக் கொண்டது 2,400 கோடி ரூபாய் தான். அப்படி 2,400 கோடி ரூபாய்க்கு ஒப்புக் கொண்ட போது, மத்திய அரசினுடைய மானியமாக, அல்லது உதவியாக—'சென்டர்—அஸிஸ்டென்ஸ்' 612 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். இதை மிகவும் கவனம் வைத்துக் கொள்ள வேண்டும். 2,400 கோடி ரூபாய் முதலிலே அளிக்கப்பட்ட போது, 6-வது 5 ஆண்டு திட்டத்திற்கென மத்திய அரசின் உதவித் தொகையாக 612 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதாவது 2,400 கோடியில் 612 கோடி ரூபாய் என்பது சுமார் 25 சதவீதம் என்பதை மறந்து விடக் கூடாது.

[முற்பகல் 11.40]

இப்போது திட்டத்தின் அளவு ரூபாய் 2,400 கோடியிலிருந்து 750 கோடி அதிகப்படுத்தி 3,150 கோடியாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஒப்புதல் கிடைத்திருக்கிறது. இதிலே ஒன்றை மறந்து விடக்கூடாது. ரூ. 2,400 கோடிக்கு 612 கோடி மத்திய அரசு உதவி என்றால் அது சுமார் 25 சதவீதம் என்றால் இப்போது 3,150 கோடி என்று திட்டம் உயர்த்தப்பட்ட பிறகு மத்திய அரசினுடைய உதவி 802 கோடி ரூபாய் நாம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நாம் பெற்றிருப்பது எவ்வளவு என்றால் 661 கோடி ரூபாய்தான். அதாவது 20 சதவீதம்தான். 2,400 கோடிக்கு மத்திய உதவி சுமார் 25 சதவீதம் என்று இருக்க 3,150 கோடியாக திட்டத் தொகை உயர்த்தப்பட்ட பிறகு 25 சதவீதம் என்பது குறைந்து 21 சதவீதம் ஆக ஆகியிருக்கிறது. "இதில் எனக்குத் திருப்திதான்" என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது தமிழ்நாட்டிற்கு பாதகமானது தமிழ்



[டாக்டர் மு. கருணாநிதி]

1981 பிப்ரவரி 4]

நாட்டுக்குக் கிடைக்கக்வேண்டியதை நாமே வலுவில் சென்று இழந்துவிடக்கூடிய ஒரு நிலை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

"மனம் திறந்து பேசுக" என்ற ஒரு
கவர்னர் உரையில் "நாங்கள் கடை திறந்து வைக்கவா வேண்
சொற்றொடர். உள்ளது "நாங்கள் கடை திறந்து வைக்கவா வேண்
டாமா" என்று மாண்புமிகு உறுப்பினர்களே 'மனம் திறந்து
பேசுக' என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கவர்னர்
வாயிலாகக் கேட்டிருக்கிறார்கள். 'நாங்கள் மனம் திறந்து
பேசுவதை விட நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மனம்
திறந்து இதைப்பற்றி என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்
பதை நினைவு கூறுவது மிக முக்கியமாகும். 1973-ம் ஆண்டு
ஜனவரி திங்கள் 2-ம் நாள் அன்று திருவல்லிக்கேணியில் நடை
பெற்ற ராஜாஜி இரங்கற் கூட்டத்தில் நமது முதல் அமைச்சர்
அவர்கள், அன்றைக்கு முதல் அமைச்சர் பொறுப்பில் இல்லாத
நேரத்தில், பேசினார்கள். மதுவிலக்குத் தத்துவம் பேரறிஞர்
அண்ணா அவர்களின் உயிர்க் கொள்கைகளில் ஒன்று. அதில்
முழு மூச்சான நம்பிக்கை கொண்டவர் ராஜாஜி. எனவே,
அண்ணா அவர்கள் புனிதமாகக் கருதிய மதுவிலக்குக் கொள்கை
யை இந்த நாட்டில் நிலைபெற வழிகோலியவர் ராஜாஜி.
இந்த மதுவிலக்கை திரும்பவும் கொண்டுவர எல்லோரும் ஒத்
துழைக்க வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
ஈடுபட்டு உழைக்கும், முழு ஒத்துழைப்பு தரும் என்று 1973-ல்
மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இரங்கற் கூட்டத்தில் நம்முடைய
இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள்.
பிறகு ஜுன் திங்கள் 7-ம் தேதி அவர் பேசிய பேச்சு அன்றிருந்த
அந்த கட்சியின் அதிகாரபூர்வமான ஏடான தென்னகத்தில்.
வெளிவருகிறது. அவர்கள் பேசியிருக்கிறார்கள். 1973 செப்
டம்பர் திங்கள் அ.தி.மு.க. மாநாடு நடைபெற இருக்கிறது.
அதற்குள் கட்சித் தேர்தல்கள் முடிவடையும். தேர்ந்தெடுக்கப்
பட்ட பொறுப்பாளர்கள் மாநாட்டில் அறிமுகம் செய்யப்
படுவார்கள். (நான் அந்தப் பிரச்னைக்குள் செல்லவில்லை.
முடிவு அடைந்ததா இல்லையா 1973-ல் என்று. "1973 செப்டம்
பர் திங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாநாடு
நடைபெறுகிறது. அதற்குள் கட்சித் தேர்தல்கள் முடிவடை
யும். தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் மாநாட்டில் உரு
அறிமுகம் செய்யப்படுவார்கள். அந்த மாநாட்டில் இதற்கு
வாக்கப்பட்ட சட்ட திட்டங்கள் வெளியாகும்". "தாய்மார்களையே முழு
பிறகுதான் முக்கியமான விஷயம். அமல் நடத்தப்பட வேண்டும்,
மையாகக் கொண்டு மதுவிலக்கு அந்த மாநாட்டில் அறிவிப்பேன்".
போராட்டத்திற்கான தேதியை அந்த மாநாட்டில் அறிவிப்பேன்".
என்று திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர்த்து
மதுவிலக்கை முழுமையாகக் கொண்டுவர, அமல் நடத்தப்பட
தாய்மார்களையே முழுமையாகக் கொண்ட ஒரு போராட்
டத்தை அந்த மாநாட்டில் அறிவிப்பேன் என்று 1973-ம் ஆண்டு

ஜூன் திங்கள் 7-ம் தேதி இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் அன்றைக்கு மிக வீரமாக மிக உறுதியாகக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்கள் முதல் அமைச்சரான பிறகு பேசி இன்று அதிகாரபூர்வமாக அவர்கள் ஏடாக விளங்குகிற அண்ணா இதழில் ஒரு பேச்சு வெளி வந்திருக்கிறது. அதில் என்ன பேசியிருக்கிறார்கள் என்றால், மது அருந்துபவர்கள் தங்கள் வாழ்வை பாழடித்துக்கொள்கிறார்கள். மதுவிலக்கை அமல்படுத்துவதில் குறுக்கிட்டு நெருக்கடி ஏற்படுத்தினால் எவ்வளவு விபரீதம் என்பதை சிந்திக்கவேண்டும். என் உயிர் இருக்கும்வரை நான் பதவியில் இருந்தாலும் சரி பதவியில் இல்லா விட்டாலும் சரி பதவியில் வேறு ஒருவரை உட்கார வைத்து நான் ஓய்வு எடுத்துக்கொண்டாலும்சரி காந்தியடிகள், ராஜாஜி, பேரறிஞர் அண்ணா கொள்கையைப் பின்பற்றி நடப்பேன். இறுதி மூச்சு வரை மதுவிலக்கை நிறைவேற்றுவேன், என்னைப் பெற்ற அன்னையின் மீது உறுதி எடுத்துக்கொள்கிறேன்," என்று இவ்வளவு வீரமாக அன்னையின் மீது ஆணையிட்டுச் சொன்ன பிறகு, இவ்வளவு உறுதியாக இருக்கிற நீங்கள் எங்களிடத்தில் இதைப்பற்றி மனம் திறந்து பேசுங்கள் என்று கேட்பானேன். நாங்கள் மனம் திறந்து பேசிய நேரத்தில் எல்லாம் எங்களுடைய சொல் இந்த அரசின் செவிகளில் விழுந்ததா? திராவிட முன்னேற்றக் கழக அரசு மதுவிலக்கை ஒத்திவைத்து அதனால் இளைய தலைமுறை தன்னை பாழாக்கிக்கொண்டது. என்ற குற்றச்சாட்டை நண்பர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் எடுத்துச்சொன்னார்கள்.

அவர்கள் சொல்லும்போது இளைய தலைமுறையினர் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், குடித்துவிட்டு வீணாகப் போகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், புள்ளி விவரங்களைப் பார்க்கின்றபோது, காங்கிரஸ் ஆட்சி காலத்திலே முன்பு தி.மு.க. ஆட்சி காலத்திலே முன்பும், மதுவிலக்கு ஒத்தி வைக்கப்படுவதற்கு முன்பேகூட ஆண்டுதோறும் சிறைச்சாலைகளிலே இருந்த சாராய கைதிகளின் எண்ணிக்கை 3 இலட்சம் 3½ இலட்சம், 4 இலட்சம் என்றிருந்திருக்கிறது. மதுவிலக்கு அமுலில் இருந்து, இடையிலே ஒத்திவைக்கப்பட்ட காலத்திலேதான் இப்படி எல்லாம் இருந்திருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 200 பேர்கள் வார்னிஷைக் குடித்துவிட்டுச் செத்தார்கள். அதிலே ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் உட்பட 200 பேர்கள் வார்னிஷைக் குடித்துவிட்டுச் செத்தார்கள் என்ற செய்தியை நாம் மறந்திருக்க முடியாது. எனவே இளம் தலைமுறையினர் குடித்துவிட்டுக் கெடுவது கழக ஆட்சிக்குப் பிறகுதான், அதை ஒத்திவைத்தப் பிறகுதான் என்று சொல்லக்கூடிய குற்றச்சாட்டு தவறு. அன்றைக்கு விக்டோரியா ஆஸ்டலில் போலீசார் நுழைந்து 100 பாட்டில்களைக் கைப்பற்றினார்கள் என்கின்ற செய்தி வந்திருக்கிறது. எனவே, தி.மு.க. அதன்





ஒத்திவைத்ததால்தான் ஏதோ தீங்கு ஏற்பட்டுவிட்டது என்றும், இப்போது மீண்டும் அதை ஒத்தி வைக்கவேண்டும் என்றும் ஒரு திட்டத்தை மனதிலே வைத்துக்கொண்டு, இந்தப் பழியை அவை உறுப்பினர்கள் மீது சுமத்தி விடலாம் என்ற வகையில் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்கிறேன் என்ற விதத்தில் இது தந்திரமாகக் கடைபிடிக்கப்பட்டிருக்குமானால், நான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசியதை ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இந்தச் சட்டம் சரியாக அமுல்படுத்தப்பட்டாலும், அன்றைக்கு முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் பாக்கியுள்ள எல்லாக் கட்சிகளும் வாதாடி, நீங்கள் கொண்டுவரும் இந்தக் கறுப்புச் சட்டம் தவறான சட்டம், அது தேவையில்லை; நாடு கடத்தப்படுகின்ற அந்தச் சட்டம், ஊரை விட்டு ஓட்டுகின்ற சட்டம் தேவையில்லை என்று சொன்ன போது, பிடிவாதமாக இருந்தது இந்த அரசுதான். இப்படி இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்குக் காரணம் ‘தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக’ என்று முதல்வர் அவர்கள் விளக்கம் கூறினார்கள். பின்னர் ரூ. 25 கொடுத்து விட்டு யார் வேண்டுமானாலும் ‘லைசன்ஸ்’ பெறலாம் என்று வந்தபோது, அப்போதும் ‘தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக’ என்று சொன்னார்கள். ஆனால் இப்போது எங்களுடைய அபிப்பிராயத்தை, ‘மனம் திறந்து பேசுங்கள்’ என்று கேட்கிறார்கள். மனம் திறந்து பேச என்ன இருக்கிறது? மதுவிலக்கை ரத்து செய்யலாம் என்று கருதுகிறீர்களா? நான் கேட்கிறேன், இன்னும் ரத்து செய்ய என்ன இருக்கிறது? கிட்டத்தட்ட எங்கு பார்த்தாலும் சாராயம் பெருக்கெடுத்து ஓடும் காட்சியை தமிழ்நாட்டின் தெருக்களிலே பார்க்க முடிகின்றது.

இந்தச் சமயத்திலே பட்டினப் பாலை நிகழ்ச்சி ஒன்று என் நினைவுக்கு வருகிறது. சோழ நாட்டு வளத்தைக் கூறுவதற்காக ‘வடித்த சோற்றுக் கஞ்சி தெருக்களிலே எல்லாம் ஓடிற்று’ என்று பட்டினப் பாலையிலே படித்ததாக நினைவு. நாவலர் அவர்களுக்கு அந்தப் பாட்டே நினைவிலே இருக்கும். ஏனென்றால், நான் 10வது படித்தவன்தான். அவர்கள் நிரம்பப் படித்தவர்கள்; எனவே, அதிகமாக நினைவிருக்கும். அப்படிப் பட்டினப் பாலையிலே ‘வடித்த சோற்றுக் கஞ்சி தெருக்களிலே எல்லாம் ஓடியதைப் போல, தமிழகத்திலே இன்று சாராயம், கள்ளச் சாராயம் தெருக்களிலே பெருக்கெடுத்து ஓடுகின்ற காட்சியைக் காண்கிறோம். இந்த நேரத்திலே மதுவிலக்கை ரத்து செய்யலாமா அல்லது ரத்து செய்யலாமா என்று மனம் திறந்து பேசுங்கள் என்று கூறுவது, [illegible] வகையிலே, பொருந்தும் என்று எனக்குப் புரியவில்லை. [illegible] வகையிலே முதலமைச்சர் அவர்கள் கருத்திற்கே விட்டு [illegible], இதை [illegible] [illegible]றேன்.

[டாக்டர் திரு. மு. கருணாநிதி] [i981 பிப்ரவரி 4

இந்த ஆளுநர் அவர்கள் உரையின் எல்லாப் பக்கங்களையும், எல்லா வரிகளையும் நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். வழக்கமாக ஆளுநர் உரையிலேயும், நிதி நிலை அறிக்கையிலேயும் இந்த் அரசு ஊழலற்ற அரசு, ஊழலற்ற நிர்வாகத்தை நடத்தி வருகின்றது என்ற செய்தி பெருமைபட பேசப்பட்டிருக்கும். ஆனால், இந்த உரையிலே மனச்சாட்சி உறுத்திய காரணத்தினாலேயோ என்னவோ அந்த வார்த்தைகள் இடம் பெறவில்லை. இந்த அரசின்மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவைகளில் இரண்டொன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மற்றவைகளை அடுத்தடுத்து வருகின்ற சட்டமன்ற நிகழ்ச்சிகளில், நான் எடுத்துக்காட்டமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே ஒன்று, பீ.டி.எஸ். என்ற பல் வைத்தியப் பட்டப் படிப்பு இருக்கிறது. இந்தப் பல்வைத்தியப் பட்டப் படிப்பிற்கு மொத்த இடங்கள் 40 என்று கேள்விப்படுகிறேன். அதிலே, இதுவரை நிரப்பப்பட்ட இடங்கள் 35 என்றும் காலியாக உள்ளவை 5 என்றும் கேள்விப்படுகிறேன். மொத்த 40 இடங்களில், தமிழ்நாட்டு கோட்டா தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தரவேண்டியது 34. மத்திய அரசு கோட்டா 1, எக்ஸ்-சர்வீஸ்மென்களுக்கு 1, வெளிநாட்டு மாணவருக்கு 1, தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட 34 இடங்களில், 4 இடங்கள் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது எனக்கு வந்துள்ள தகவலாகும்.

[முற்பகல் 11–50.]

அவர்களுடைய பெயர்கள்கூட எனக்குத் தரப்பட்டுள்ளன. அந்த நான்கு பேரும்—34 இடம் தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தரப்பட வேண்டிய இடத்தை எடுத்து வெளிமாநில மாணவர்களுக்குத் தந்துள்ள இடம்.— சுப்பிரியா பூஞ்சா, ரிஜிஸ்டர் நம்பர் 31; ராமநாத குருப்பிரசாத், ரிஜிஸ்டர் நம்பர் 165; அன்னு கோஷி, ரிஜிஸ்டர் நம்பர் 91; மொய்தீன் ஹசானா ரிஜிஸ்டர் நம்பர் 3033. இதிலே சுப்பிரியா பூஞ்சா என்ற மாணவர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். அவர் சென்னையில் இருப்பதாக முகவரியிட்டு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார், இவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். அடுத்து, மொய்தீன் ஹசானா என்பவரும் அன்னு கோஷி என்பவரும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மலையாளத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். அடுத்து பம்பாயைச் சேர்ந்த பிரபல கிளாஸ்கோ கம்பெனி அதிபர் ஒருவருடைய மகன் ராமநாத் குருப்பிரசாத்—20 ஆண்டுகளாக பம்பாயிலே வசிப்பவர், ஈரோடு, கோபிச் செட்டிப்பாளையத்தில் இருப்பதாகக் கொடுத்து விண்ணப்பம் செய்திருக்கிறார். [illegible]



198] பிப்ரவரி 4] [டாக்டர் மு. கருணாநிதி]

அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தகவல்.
இதிலே, ராமநாத் குருப்பிரசாத், அன்னுகோஷி, மொய்தீன்
ஹசானா ஆகிய மூவரும் வெயிட்டிங் லிஸ்டில் இருந்து சேர்க்கப்
பட்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தகவல். இது உண்மை
யாக இருக்குமானால் இது மிகப் பெரிய முறைகேடு என்பதை
இந்த அவையில் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த அரசுத் தமிழ் பண்பாட்டு மையம் என்ற ஒரு
அமைப்பை 1978 ஆம் ஆண்டு ஏற்படுத்தி அதற்கு மொழி
பெயர்ப்புத் துறையில் இருந்த ஒருவரை—டிரான்ஸ்லேஷன் டிப்
பார்ட்மென்ட்—அதிலிருந்த ஒருவரை இயக்குநராகவும் நியமி
த்து. அரசு கல்வித்துறை மூலமாக ஆணை எண். 393,
13–3–1979-ன்படி 5,03,624 ரூபாய்க்கு ஒரு 'செக்' காசோலை
வழங்கியதன் பேரில் இயக்குநர் அந்தத் தொகையை வாங்கி
சிண்டிகேட் வங்கியில் டெபாசிட் செய்தார். ஆனால் இது
நாள் வரை அந்தத் தொகைக்கானச் செலவினங்கள் பில்கள்
மூலமோ, வவுச்சர்கள் மூலமோ சரி செய்யப்படவில்லை. எதற்
காகத் தொகை ஒதுக்கப்பட்டதோ அந்தக் காரணங்களுக்காகத்
தொகை செலவழிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. வங்கி
யிலிருந்து எந்தக் காரணமும் இல்லாமல் 14–3–1979 அன்று
இருபதாயிரம் ரூபாயும், 31–3–1979 அன்று ஐம்பதாயிரம்
ரூபாயும் அந்தத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் இயக்
குநர் வாங்கியிருக்கிறார். வீடியோ டேப் ரெக்கார்டர் வாங்கு
வதற்கு ஒரு இலட்சம் ரூபாய் எடுத்து அண்ணா சாலை அன்சா
கம்பெனியில் 96,000 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு அதற்குண்
டான ரசீதையும் பெற்றுக் கொண்டிருக்கிறார். பிறகு இரண்டு
மாதங்கள் கழித்து அதே கம்பெனி இவருக்கு இருபதாயிரம்
ரூபாய்க்கான 'செக்' ஒன்றைத் தந்திருக்கிறது. மேலும் இவர்
அந்தக் கருவியை திரு. அஜீத் குமார் என்பவரிடமிருந்து வாங்
கியது போலவும் அதன் விலை 1,40,000 ரூபாய் என்பது போல
வும் பேப்பர்களைத் தயார் செய்திருக்கிறார். இதன் மூலம்
மாத்திரம் நாற்பதாயிரத்திற்கு மேல் இயக்குநர் ஊழல்
செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதிலுள்ள அருங்காட்சியகத்திற்கு வாங்க வேண்டிய
பொருள்கள் பற்றி முடிவு எடுப்பதற்காக நான்கு பேர்கள்
கொண்ட குழு ஒன்று இருந்த போதிலும் அவர்களுக்குத் தெரி
யாமல் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் தவறான வவுச்சர்
களைத் தயார் செய்து இயக்குநர் பொருள்களை வாங்கியிருக்கி
றார். அலுவலகத்திற்கு என்று வாங்கிய பொருள்களை எல்
லாம் இயக்குநர் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிட்டார் என்ற
புகார் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட புகார்கள் அடங்கிய
மனு ஒன்றின்மீது முன்னாள் நிதித்துறைச் செயலாளர்—பெயர்
[illegible] வதில் தவறு இல்லையென்று கருதுகிறேன்—முன்னாள்

நீதித் துறைச் செயலாளர் திரு.கே. வெங்கடேசன் அவர்கள் 1–2–1980ஆம் தேதியன்று ஒரு குறிப்பை எழுதி கல்வித்துறைச் செயலாளர் பார்வைக்கு இந்தப் புகார்களை எல்லாம் தொகுத்து அனுப்புகிறார். கல்வித் துறை சம்பந்தப்பட்ட கோப்பில் தன்னுடைய தெளிவான கருத்தைத் தெரிவிக்கிறது—என்ன கருத்து? 'முன்னாள் கல்வித் துறைச் செயலாளர், மையம் சரியான பாதையில் நன்றாகச் செயல்பட வேண்டி இயக்குநருக்கு யோசனை கூறி வழிகாட்ட எவ்வளவோ முயன்றும், அவருக்கு மையத்தை எங்ஙனம் நடத்திச் செல்லவேண்டுமென்ற சரியான நோக்கமே புலப்படவில்லை. எல்லாவற்றையும் விட அடிப்படையான நிர்வாக விஷயங்களை, நிதி, செலவு, விதிமுறைகள், கோட்பாடுகள் ஆகியவையும் தனக்குக் கொஞ்சமும் ஒத்துவராது போன்று அவற்றுக்கு விரோத மனப்பான்மையை அவர் காட்டி நடந்து வருவது அஞ்சத்தக்கதாக உள்ளது. மொத்தத்தில் அவர் அப்பதவிக்கு முற்றிலும் பொருத்தமற்றவராக இருக்கிறார். இவ்வாறு கல்வித் துறை குறிப்பு எழுதுகிறது. அது மாத்திரமல்ல. அரசு ஆணை எண் 1849 நாள் 13–10–1978-ன் படி இயக்குநர் ஓராண்டு காலத்திற்குத்தான் பதவி வகிக்க இயலும். அதற்குப் பிறகு 16–10–1979-ல் இந்தப் பதவியை நீடித்து அரசு ஆணை பிறப்பித்திருக்க வேண்டும். அப்படி ஆணை பிறப்பிக்கப்படவே இல்லை. எனவே அரசாணை இல்லாமல் பதவி சாங்ஷன் செய்யப்படாமல் இவர் இந்தப் பதவியில் தொடர்ந்து இருந்திருக்கிறார். இந்த அரசு செய்த மிகப் பெரிய தவறு இது என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அவர் செய்த தவறுகளின் காரணமாக அவரை தாய்த் துறைக்கு—'பேரன்ட் டிப்பார்ட்மெண்டிற்கு'—மொழி பெயர்ப்பு இயக்குநராகவே திருப்பி அனுப்ப முடிவுசெய்து அரசு ஆணை பிறப்பிக்கிறது. இந்த ஆணையை மீறி அந்த இயக்குநர் கோர்ட்டிற்குச் சென்று இடைக்காலத் தடை வாங்குகிறார். அரசு மேல் முறையீடு செய்து இடைக்கால தடை உத்திரவை நீக்கச் செய்கிறது.மேலும் இயக்குநர் ஒருமாத காலத்திற்குள் தமதுபொறுப்புக்களையும் கணக்குகளையும் ஒப்படைக்க வேண்டுமென்று உயர்நீதி மன்றமே உத்திரவிடுகிறது. ஒரு மாத காலம், 31—5—1980 உடன் முடிகிறது. அதற்குள் அவர் பொறுப்புக்களை ஒப்படைக்கவில்லை. நீதி மன்றத்திலே வழக்கு இன்னும் முடிவு செய்யப்படவில்லை. சட்டத் துறைக்கு கோப்பு அனுப்பப்பட்ட பொழுது அவரைத் தாய்த் துறைக்குத் திரும்ப அனுப்பினாலும் கூட கூறப்பட்டுள்ள குறைகளின்பேரில் அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகளை அரசாங்கம் தொடர முடியும். அவரை மீண்டும் இயக்குநராக நியமித்து ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான யோசனையோ அல்லது மையத்திற்குப் புதிய இயக்குநர்





யோசனையோ நிறைவேற்றுவதற்கும்
ருவரை நியமிப்பதற்கான யோசனையோ இல்லை. அதாவது நீதி மன்றத்
ட சட்டப்படி ஆட்சேபணை இல்லை. காரணத்தினால் எந்த நடவடிக்கையும்
லே வழக்கு இருக்கிற என்பதாக சட்டத் துறை
டுக்கலாம். ஆட்சேபணையில்லை நிர்வாகத் துறையில்
றிப்பு எழுதுகிறது. இது முற்றிலும் நிறுத்தி வைப்பு ஆணை
ர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை. தெரிவிக்கப்பட்டுள்ள
த்து செய்யப்பட்டுவிட்டதால் மேலே நிறைவேற்றுவதற்காக
மூன்று யோசனைகளில் எந்த ஒன்றையும் பேராணை மனு நடப்பில்
உயர்நீதி மன்றத்தின் முன் நீதிப் சட்டத்துறை கருத்து தெரிவிக்
இருப்பது ஒரு தடையாகாது என்று தவறு இல்லை என்று சொல்
இறது. நடவடிக்கை எடுப்பதால் நடவடிக்கையிலே அந்த
இறது. நிர்வாகத் துறை எடுக்கிற இதையெல்லாம் அலசி
வழக்கு குறுக்கிடாது என்று கூறுகிறது. தெரிவிக்கும்போது
ஆராய்ந்து தலைமைச் செயலாளர் கருத்துத் இலாகாவிற்குத் திருப்பி
அவரை, அந்த இயக்குநரை, தன் சொந்த துறைக்குத் திருப்பியனுப்பி
அனுப்பிவிட்டு, மொழி பெயர்ப்புத் அவர்மீது இலாகாபூர்வமாக
விட்டு அவர் செய்துள்ள தவறுக்காக 2—1—1981 அன்று தலைமைச்
நடவடிக்கை எடுக்கலாம் என்று கோப்பு கல்வித் துறைக்கு
செயலாளர் கருத்து எழுதுகிறார். என்ன எழுதுகிறார் என்றால்
அனுப்பப்படுகிறது. கல்வியமைச்சர் இயக்குநராகவே அவரை நீடிக்க
தமிழ்ப் பண்பாட்டு மைய தவறுகளைச் செய்தவரை, நீதி
அனுமதித்துவிட்டு—இவ்வளவு சென்ற ஒருவரை, சட்டத் துறையிலே
மன்றம் வரையிலும் தலைமைச் செயலாளர் சொந்த இலாகா
கருத்துப் பெற்ற பிறகு, அவரை அனுப்பிவிடலாம்,
வுக்கு பேரன்ட் டிபார்ட்மென்டிற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்று
அவர்மீது இலாகா பூர்வமாக எழுதுகிற குறிப்பிலே தமிழ்ப்
எழுதிவிட்ட பிறகு, கல்வியமைச்சர் நீடிக்க அவரை அனுமதித்து
பண்பாட்டு மைய இயக்குநராக எடுக்கலாம் என்று
விட்டு—குறைகள் மீது நடவடிக்கை பிறப்பிக்கப்படுகிறது. இவைகள்
12—1—1981 இல் ஆணை குற்றம் செய்வோர்களின். . .
எல்லாம் ஊழல் புரிவோர்களின்,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
தலைவர் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கிடுவதற்குப் பொறுத்தருள
அவர்கள் குறிப்பாக நான் எழுப்புவது ஒரு ஒழுங்குப்
வேண்டுகிறேன். அமைச்சரவைக்கு அல்லது அரசுத் துறைச்
பிரச்சினையாகும். கோப்புகள் பரிமாறப்படுவதிலே இரண்டு
செயலாளர்களிடையே ஒன்று கரன்ட் பைல், இன்னொன்றை
வகைக் குறிப்புகள் உண்டு. ஒரு செயலாளரோ அல்லது அமைச்
நோட் பைல் என்பார்கள். நோட் பைல் என்பதாகும். ஆணை
சரோ எழுதுகிற குறிப்புகள் கரன்ட் பைல் என்பதிலே வரும்.
யிடப்படுகிற அந்த விவரங்கள் சட்டம் என்று சொல்லு
அரசாங்க இரகசியங்களை பாதுகாக்கிற விவரங்கள் அபிஷியல்
றபோது நோட் பைலிலே இருக்கிற அப்படியிருக்கிறபோது மாண்பு
க்ரெட்ஸ் ஆக்டின் கீழே வரும். அவர்கள் சில விவரங்களைச் சொல்
மிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களிடம் சொன்னாரா? அல்லது
ஆரார்கள். அதைப்பற்றித்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 4

நோட் பைலைக் காட்டினாரா நோட் பைலிலே உள்ளது எப்படி
எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே வந்திருக்கிறது என்பதைத்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவருக்கு
அது எப்படிக் கிடைத்தது என்று என்னிடம் கேட்டுப்
பயனில்லை.

**Hon. Thiru S. Ramachandran :** The point is the Hon. Leader of the Oposition is quating.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த தகவல் எப்படிக்
கிடைத்தது என்று அவர் என்னிடம் சொல்வேண்டியதில்லை.

**Hon. Thiru S. Ramachandran :** This is very important. The Hon. Leader of the Opposition is quoting from the Note File. Note File is a secret thing. When such is the case how can the Leader of the Opposition have access to this file ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரகசியம் வெளியே போகாது
பார்த்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவரிடம் இருப்பது
சரியா என்று பார்க்க வேண்டியது நம்முடைய கடமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நீங்கள் பார்க்க
லாம், கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது.

[நண்பகல் 12-00].

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பார்ப்பதற்கு
முன்னால் இங்கே எப்படிப் பேசலாம் ? நாளைக்கு அது சரி
யில்லை என்று ஆகிவிட்டது என்றால் . . . .

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அடுத்து இன்
னொன்று. அதிகாரிகள் சில தனிப்பட்ட அறக்கட்டளைகளுக்
காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் தலைவரவர்கள்
தயவு செய்து கல்வியமைச்சர் எழுதிய அந்தக் குறிப்பை இங்கே
படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, தலைமைச்
செயலாளர் எழுதியது, இவரைத் தன் சொந்த இலாகாவுக்குத்
திருப்பி அனுப்பிவிட்டு இவர் செய்துள்ள தவறுகளுக்காக அவர்
மீது இலாக்கா பூர்வமாக நடவடிக்கை தொடரலாம். இது
2—1—1981. கல்வியமைச்சர் எழுதியது, தமிழ்ப் பண்பாட்டு
மைய இயக்குநராக நீடிக்க அனுமதித்து விட்டு குறைகள் மீது
நடவடிக்கை எடுக்கலாம். இது 12—1—1981.



1981 பிப்ரவரி 4]

**அடுத்து,** சில அறக்கட்டளைகளுக்கு அதிகாரிகள் பயன்
படுத்தப்பட்டிருக்கின்றார்கள். வசூல் செய்வதற்காக என்பது
என்னுடைய குற்றச்சாட்டு. சத்யா எஜுகேஷனல் டிரஸ்ட் என்ற
பெயரால் ஒரு டிரஸ்ட். நான் அந்தப் பெயருக்குரியவர்களிடத்
தில் அதிக மரியாதை உள்ளவன், மதிப்புள்ளவன், அன்புள்ளவன்,
பாசம் உள்ளவன். எப்படி நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு
என்னுடைய அன்னையாரிடத்திலே அன்பும் பாசமும் உண்டோ
அதுபோல உள்ளவன்.

ஆனால், சத்யா எஜுகேஷனல் டிரஸ்ட் என்ற பெயரால்
மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமும்,
பொதுப்பணித்துறை, வணிகவரித்துறை, உணவு வழங்குதுறை
அதிகாரிகள் மூலமும், ஆங்காங்கு இசை நிகழ்ச்சிகள், கலை
நிகழ்ச்சிகள் இவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.
நுழைவுக் கட்டணச் சீட்டுக்கள் 100 ரூபாய், 250 ரூபாய்,
500 ரூபாய் என்றெல்லாம் அச்சடிக்கப்பட்டு வியாபாரிகள் நிர்ப்
பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நிதி கொடுக்க விரும்பாத
வியாபாரிகளுடைய கடைகள் சோதனை செய்யப்பட்டிருக்கின்றன
திருச்சியிலே உள்ள, வியாபாரிகள் சங்கத்தினுடைய
தலைவர், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பர்,
அவரிடத்திலே 2,000 ரூபாய் தர வேண்டுமென்று கேட்டு...

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவரவர்கள் படிக்கின்ற குறிப்பு உங்களுக்கு முன்னதாகவே
காண்பிக்கப்பட்டதா ? எனக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை.
பதில் நாங்கள் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் பேசி முடித்த
வுடன் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்
களே, என்னுடைய கேள்வி, முன்னறிவிப்பு இல்லாமல், நாங்கள்
பதில் சொல்வதற்கு வாய்ப்புத் தராமல் இப்படி இங்கே படிப்பது
சரிதானா ? அது சட்டப்படி முறையா என்பதைத் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் குறிப்
பாகத்தான் சொல்கிறேன், எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வியாபாரிகள் நிர்ப்பந்
திக்கப்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த வியாபாரி
என்று சொன்னால் பரவாயில்லை.

**டாக்டர் மு. கருணாநிதி :** திருச்சியிலே, ஞானராஜ் என்ற
வியாபாரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஞானராஜை இந்தக்
குழுவே பார்க்கவில்லை. நான் அதற்காகத்தான் சொல்கிறேன்,
அந்தக் குழு அவரைச் சந்திக்கவே இல்லை. அப்படிப்பட்ட

குற்றச்சாட்டுகள் இருக்கிற பொழுது என்னிடத்தில் காட்டினால் நானே சொல்லியிருப்பேன், ஞானராஜுக்கும் இதற்கும் சம்பந் தமே இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி : நான் குழுவையே சொல்லவில்லை. குழு போய் வற்புறுத்தியதாகச் சொல்லவில்லை. குழுவின் சார்பாக அதிகாரிகள் வற்புறுத்தி இருக்கின்றார்கள். அதைத் தான் சொல்கிறேன். ஞானராஜ் என்னிடத்திலே சொன்னார், என்னிடத்திலே வந்து முறையிட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஞானராஜ் ஊரிலேயே இல்லை. அதைப்பற்றி விவாதம் தனியாக வைத்துக் கொள்ள லாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்வது ஒவ்வொருவரும் எழுந்து என்னிடம் சொன்னார்கள், என்னிடம் சொன்னார்கள் என்று சொல்லிக்கொண்டே இருந்தால் இதற்கு என்ன முடிவு என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. (குறுக்கீடு)

ஏதாவது சொல்ல வேண்டுமென்று விரும்புகின்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச வேண்டும். அல்லது அவர்களுடைய தலைவரி டத்தில் சொல்லிச் சொல்லட்டும். உட்கார்ந்து கொண்டே பேசு வது மரபு இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சத்யா அறக்கட்டளை பற்றி என்னிடத்திலே காட்டிவிட்டு இன்னார்தான் என்று சொல்லி யிருந்தால் நானே சொல்லியிருப்பேன். அதைத் தவிர மீதி யெல்லாம் பேசுங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எல்லாக் குற்றச்சாட்டுகளையும் முன்னாலேயே சொல்லிவிட்டு, முதல் நாள் ஒத்திகை பார்த்து விட்டு மறுநாள் சட்டசபைக்குக் கொண்டு வர முடியாது. முதல் நாள் ஒத்திகை பார்த்து விட்டு மறுநாள் சட்டசபைக்கு வர முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திகை பார்க்க வேண்டு மென்று நான் சொல்லவே இல்லை. சில பிரச்னைகள் இருக்கும் பொழுது அது சம்பந்தமாக ஆளுங்கட்சியும் தயார் செய்து கொள்ள வேண்டுமல்லவா ? (கூச்சல், குழப்பம்)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இன்றைக்குச் சொன்னால், நாளைக்குப் பதில் சொல்லுங்கள். உங்களிடம் எப்படிக் காட்ட முடியும் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலே இருக்கிற நாங்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்புத் தர வேண்டும் என்று கேட்பது தப்பா ?



THIRU V. KRISHNAMURTHI : Hon. Chief Minister can take his own time to reply.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். இப்படிக் குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கொண்டே இருப்பதும் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் நேரம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதும், வெளியிலே போய் வாய்தா கேட்கிறேன் என்று சொல்வதும், அது நாகரீகமான பண்பாடல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதிகாரி கள் துஷ்பிரயோகம் என்பதைத்தான் முதலமைச்சருடைய கவனத் திற்கு நான் கொண்டு வந்தேன். அதை அவர்கள் விசாரித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவும், அது அவருடைய நன்மைக்காக வும்—ஒரு எடுக்கேஷனல் டிரஸ்டுக்கு அதிகாரிகள் மற்றவர்களைத் துன்பப்படுத்தி இருக்கிறார்கள் என்பது பரவலாக, பல இடங்களில் நடைபெற்றிருக்கிற விவகாரமாக இருப்பதால், அதை முதலமைச் சரே விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இந்தப் பிரச்னையை இந்த அளவோடு நான் நிறுத்துகிறேன்.

அடுத்து ஒன்று. நம்முடைய மாநிலத்தில், ஏன் நாடு முழு வதும் மிகப் பரவலாக பேசப்படுகின்ற எரி சாராய ஊழல் பற்றி சில விவரங்களை நான் இங்கே தர விரும்புகிறேன். பல கோடி ரூபாய்க்கு எரி சாராயத்திலே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற செய்திகள் நாள்தோறும் வந்தவண்ணம் இருக்கின்றன. அதை ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் முதன் முதலாக—அந்தத் தகவலைக் கண்டு பிடித்து, அதை—வெளியிட்டு, அந்த ஊழல் புகாரை மக்கள் முன்னால் வைத்தது என்பதைவிட தமிழ்நாட் டிலே உள்ள பத்திரிகைகள், கேரளாவிலே உள்ள பத்திரிகைகள், இவைகளில் எல்லாம் அந்தச் செய்திகள் மிகப் பெரிய அளவிலே வெளியிடப்பட்டு, அதற்குப் பிறகு, தமிழகத்திலே உள்ள ஒரு தலையாய எதிர்க்கட்சி என்ற முறையில், அதைப் பற்றி ஆராய்ந்து எங்களுடைய கருத்துக்களை நாங்கள் எடுத்துச் சொல்ல வேண் டிய அவசியத்திற்கு ஆளாகி இருக்கிறோம். ஏதோ, இந்தப் பல கோடி ரூபாய் எரி சாராய ஊழல் திடீரென்று மின்னல் போல நடைபெற்று விடவில்லை.

என்னுடைய நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே வெளி மாநிலங்களுக்கு எரிசாராயத்தை அனுப்பும்பொழுது ரெவினியூ இன்ஸ்பெக்டர்களை அனுப்பத் தேவையில்லையென்று நீக்கப்பட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள், நான்கூட எண்ணி னேன், அப்படியும் நீக்கியிருப்பார்களா என்று எண்ணினேன். ஆனால், நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆதாரம் இல்லாமல் அதைப் பேசவில்லையென்பதை நான் புரிந்து கொண்டேன். எரி சாராயத் தயாரிப்பாளர்கள் அரசாங்கத்திடத்திலே ஒரு முறை யீட்டை வைக்கிறார்கள். எப்பொழுது? 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 8—6—1979-ல் என்ன முறையீடு? அந்த முறையீட்டின்

அடிப்படையிலே பிறப்பிக்கப்பட்ட ஆணை என்ன? முறையீடு ஜூன் 8 ஆம் தேதி, அந்த முறையீட்டின் அடிப்படையிலே பிரகடனப்படுத்தப்பட்ட ஆணை, ஜூன் 26 ஆம் தேதி. 8-6-1979-ல் எரி சாராயத் தொழில் அதிபர்கள் வைத்த முறையீட்டை அரசு அவசரம், அவசரமாகக் கவனித்து, 26-6-1979-ல் ஆணை பிறப்பித்திருக்கிறது.

During the distillers meeting held at the Chambers of the Commissioner, P. & E. Prohibition and Excise, Madras, the Distillers pleaded that it was difficult to secure the presence of the Police escort and the Revenue Inspector together at the time lorries were available for inter State transport and it causes practical difficulties.

இப்படித் தெரிவிக்கிறார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரை யும் போலீசாரையும் வெளி மாநிலங்களுக்கு, எரி சாராயத்தை அனுப்பும்பொழுது, லாரிகளில் அழைத்துச் செல்வது இயலாத தாக இருக்கிறது என்று எரி சாராயத் தொழில் அதிபர்கள் மது விலக்கு கலால் அதிகாரிகளிடத்திலே தங்களுடைய முறை யீட்டைச் சொல்கிறார்கள். உடனடியாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவிலே,

The Board has examined the above request of the Distillers and hereby orders that the system of providing Revenue Escorts be withdrawn. Police escorts alone need accompany the consignments which are transported outside the State. Collectors Tiruchirappalli, Coimbatore and South Arcot are therefore requested to stop deputing Revenue Inspectors to accompany the consignments of alcohol to other States and to report compliance by return of post on the disbandment of the posts of Revenue Inspectors wherever special sanction to the posts exist.

அதாவது, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிற எரி சாரா யத்தோடு ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும், அனுப்புவது சம்பந்த மாக எரி சாராயத் தொழில் அதிபர்கள் முறையிட்டதன் பேரில் ரெவின்யூ அதிகாரிகள் எரி சாராய வண்டிகளுடன் அனுப்பப் படுவதைத் திரும்பப் பெற்றுக்கொள்வது என்றும், போலீசார் மட்டும் உடன் சென்றால் போதும் என்றும் திருச்சி, கோவை, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மற்ற மாநிலங் களுக்கு எரி சாராயம் செல்லும்போது, ரெவின்யூ இன்ஸ்பெக் டர்களை நிறுத்திவிட வேண்டுமென்றும் அதற்காக என்று இருக் கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் பதவிகளை நீக்கிவிட வேண்டு மென்றும் ஆணை பிறப்பித்திருக்கிறது.

[பிற்பகல் 12-10]

எவ்வளவு தாராளம் பாருங்கள். ரெவின்யூ இன்ஸ்பெக் டர்களை எரி சாராய வண்டிகளோடு வெளி மாநிலங்களுக்கு சாராயம் எடுத்துச் செல்லும்போது, அனுப்பத் தேவையில்லை



என்று தொழிலதிபர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க— வேறு எந்தப் பிரச்சினைக்கும் காட்டாத ஆர்வம், அக்கறை, அவசரமும் காட்டப்பட்டு—உடனடியாக அந்தப் பதவிகளையே கேன்சல் செய்து, அவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்ப உத் தரவு பிறப்பிக்கப்படுகிறது. இது எரி சாராய அதிபர்களுக்கு மிகத் தோதான உத்தரவாகப் போடப்பட்டிருக்கிறது என்பது தான் என்னுடைய முதல் குற்றச்சாட்டு.

அடுத்து மதுவிலக்குக் கலால் துறை, புரொகிபிஷன் அண்டு எக்சைஸ் டிபுடி கமிஷனர் இருக்கிறாரே அவர் ஒரு ஆணை பிறப்பிக்கிறார். அந்த ஆணை எண். பி. 6642/80 படி ஜூலை 4, 1980 லிருந்து எரி சாராயம் வெளி மாநிலங்களுக்குச் செல்வது தடுக்கப்படுகிறது. சாராயம் வெளி மாநிலங்களுக்கு ஜூலை 4, 1980 முதல் செல்வது தடுக்கப்படுகிறது என்று உத்தரவு. தடை போடப்படுகிறது. இப்படித் தடை போடப் பட்டதன் நோக்கம் என்ன? தடை போட்டால் ஏற்றுமதி யாளர்கள் தங்களை அணுகுவார்கள் என்று எதிர்பார்க்கப்படு கிறது. எதிர்பார்த்தபடியே நடக்கிறது. அவர்கள் அணுகு கிறார்கள். அதனுடைய விளைவு, அதே புரொகிபிஷன் அண்ட் எக் சைஸ் டெபுடி கமிஷனர் ஆகஸ்டு 28, 1980-ல் ஆணையிடுகி றார். அதாவது ஜூலை, மாதம் தடை, ஆகஸ்டு 28-ந் தேதி ஒரு ஆணை. 'வெரி அர்ஜன்ட்'—சாதாரண அர்ஜன்ட் கூட அல்ல—வெரி அர்ஜன்ட்.

The Board has since relaxed the ban on the export of Alcohol to other States and has commenced issue of permits to export.

அதாவது, ஜூலை 1980-ல் தடை. ஆகஸ்டிலே தடை நீக் கப்படுகிறது. இப்படித் தடை போடுவதும், நீக்குவதும் இந்த அரசிலே வாராந்திர விழாக்களாக மாறி காட்சி அளித்துக்கொண்டி ருக்கின்றன. ஆகஸ்ட் இறுதியிலே தடை நீக்கம். செப்டம்பர் மாதத்திலே யார் யாருக்குக் கொடுத்தார்களோ தெரியாது எனக்கு. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் தென்னிந்திய வர்த்தக சபையிலே அக்டோபரிலே பேசுகிறார். ஜூலையில் தடை, ஆகஸ்டிலே தடை நீக்கம், அக்டோபரிலே தென்னிந்திய வர்த்தக சபையிலே, சேம்பர் ஆப் காமர்ஸிலே அக்டோபர் 12-ந் தேதி பேசும்போது குறிப்பிடுகிறார்கள். அவ ருடைய பேச்சு பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. என்ன அது? "தமிழ்நாட்டிலேயிருந்து 10 இலட்சம் லிட்டர் எரி சாரா யம் வேறு மாநிலத்திற்கு அனுமதி கொடுத்தால், மேலும் 5 இலட்சம் லிட்டர் எரி சாராயத்தை அனுப்பினால் எப்படி? பிளாக்கில் பணம் வாங்கிக்கொண்டு இப்படிச் செய்தால் அது எப்படி நியாயமாகும். இப்படிப்பட்டவர்கள் மீது ஏன் நட வடிக்கை எடுத்து மக்கள் மத்தியிலே கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். அவ்வளவு எச்சரிக்கை இல்லாமலா அவர் கள் தொழிலைச் செய்கிறார்கள்"—ஆமாம், ரெவின்யூ இன்ஸ் பெக்டர்களையே மாற்றியாகி விட்டதே—அவ்வளவு எச்சரிக்கை இல்லாமலா இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். "எவ்வளவு

அனுமதி தரப்படுகிறதோ அவ்வளவு அனுப்புங்கள். 10 இலட்சம் அனுமதி கொடுத்தால் 20 இலட்சம் அனுப்புவது நிச்சயமாக நாட்டுக்குச் செய்யும் நல்லதல்ல '' என்று முதலமைச்சர் அவர்கள் சேம்பர் ஆப் காமர்சில் பேசுகிறார். மறந்து விடக் கூடாது. ஜூலையிலே தடை. ஆகஸ்டிலே தடை நீக்கம். அக்டோபர் 12-ந் தேதி பேசுகிறார், 10 இலட்சம் லிட்டர் அனுமதி கொடுத்தால் 15 இலட்சம் லிட்டர் எடுத்துப் போய் விட்டார்கள் என்று.

அப்படிப் பேசிய பேச்சு, உள்ளபடியே ஒரு நேர்மையான நாணயமான நிலையை அரசுக்கு உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலே பேசப்பட்டிருக்குமானால், அப்படிக் கடத்திச் சென்ற நபர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இது வரையில் அந்த நபர்கள் யார் என்றாவது கூறப்பட்டதா, அந்த நடவடிக்கை என்ன என்றாவது விளக்கப்பட்டதா? அது மாத்திரம் அல்ல. இதேபோல பலபேர்களுக்குத் தொடர்ந்து கேரள மன்னம் கோவாபரேடிவ் சுகர்ஸ் அண்டு டிஸ்டிலரிஸ்-க்கு 9.96 இலட்சம் அனுப்பியது மாத்திரமல்ல, கேரளாவில் மெக்டோல் கம்பெனிக்கு—அது தனியார் கம்பெனி—10 இலட்சம் லிட்டர் எடுத்துச் செல்லவும் அனுமதி தரப்பட்டது. இப்படிப் பல தனியார் கம்பெனிகளுக்கு, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அத்தியாவசியமான மருந்து போன்றவைகள் தயாரிப்பதற்குத் தேவையான எரி சாராயம் பிற மாநிலங்களுக்குத் தரப்படாமல், மது வகைகள் தயாரிப்பதற்குப் பிற மாநிலத் தனியார்களுக்குத் தரப்பட்டது.

நான் ஒன்றை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் உள்ள 'கெம்பிளாஸ்ட்' (கெமிகல்ஸ் அன்ட் பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட்) மேனேஜிங் டைரக்டர், திரு. என். சங்கரன் அவர்கள் ஒரு கருத்தரங்கில் பேசும்போது குறிப்பிடுகிறார்.

CHEMPLAST-Managing Director, Mr. N. Sankar has stated:

" The PVC Plant in the State was facing closure due to reduced availability of Industrial Alcohol "

அதாவது, தன்னுடைய தொழிற்சாலை மூடவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானதற்குக் காரணம் அதனுடைய தேவைக்குரிய இன்டஸ்ரியல் ஆல்கஹால் அதற்குத் தரப்படாததே என்று இங்கே இருக்கும் மேனேஜிங் டைரக்டர்— கெம்பிளாஸ்ட் சங்கர் பேசுகிறார்.

ஆனால் அத்தியாவசியமான மருந்துப் பொருள்கள் போன்றவற்றைத் தயாரிக்கவும், தமிழ் நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் உள்ள பற்றாக்குறையை நிவர்த்திக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ளாத அரசு மது வகைகள் தயாரிப்பதற்காக பிற மாநிலங்களுக்கு எரிசாராயத்தை அனுப்புவதற்குத் தடைபோடுவதும், தடை நீக்குவதும், மறுபடியும் தடையைப் போடுவதும், மறுபடியும் தடையை நீக்குவதுமான இந்த வாராந்திர விழாக்களை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.



மத்திய அரசில் மொலாசிஸ் போர்ட் என்று ஒன்று இருக்கிறது. அந்த 'போர்ட்' நாடு முழுவதிலும் எந்தெந்த மாநிலத்தில் உபரி எரி சாராயம் இருக்கிறது, எந்தெந்த மாநிலத்தில் எரி சாராயம் பற்றாக்குறையாக இருக்கிறது என்று கண்டறிந்து: தேவையான மாநிலங்களுக்கு உபரி மாநிலத்தில் இருந்து அங்கே அனுப்புங்கள் என்று சிபார்சு செய்யும். சிபார்சு செய்யும் உரிமைதான் அதற்கு உண்டே தவிர அனுப்புங்கள் என்று ஆணை பிறப்பிக்கும் உரிமை அந்த மத்திய மோலாசிஸ போர்டுக்குக் கிடையாது. அப்படி சென்ற மோலாசிஸ் ஆண்டு— நவம்பர் டு நவம்பர், மோலாசிஸ் ஆண்டு என்று சொல்வார்கள் ஆந்திர அரசுக்கு 60 இலட்சம் லிட்டர் எரி சாராயம் மருந்து தயாரிக்கும் காரியத்திற்காக அனுப்புங்கள் என்று மோலாசிஸ் போர்ட் தமிழ் நாடு அரசுக்கு சிபார்சு செய்தது. ஆனால், இந்த அரசு கொடுத்தது 24 இலட்சம் லிட்டர் எரி சாராயம்தான். மீதி ஆந்திராவில் உள்ள தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறதே அல்லாமல், ஆந்திர அரசுக்கு அனுப்புங்கள் என்று சொன்ன 60 இலட்சம் லிட்டர் அனுப்பப்படவில்லை, இதிலும் எல்லாத் தனியாருக்கும் கொடுத்தார்களா என்றால் இல்லை. இதோ ஒரு தனியார். அவருக்கு அவர்கள் கேட்டதை அவர் தரவில்லையோ என்னவோ எனக்குத் தெரியாது— இந்த அரசிலிருந்து என்ன பதில் எழுதுகிறார்கள் தெரியுமா? அந்தத் தனியார் பெயர்.—

Managing Director, M.L.R. Drinks Private Limited 1476, White House, Palace Road, Kuppam, Andhra Pradesh.

அவர்களுக்கு இங்கே இருக்கிற

Joint Secretary to Government, Thiru Ramachandran, I.A.S.

அவர்கள் பதில் எழுதுகிறார்கள். அக்டோபர் மாதம் 15-ம் தேதி. அந்த பதிலில் சப்ஜெக்ட் போடுகிறபோது

Subject : Prohibition and Excise - Allotment of rectified spirit, silent spirit for manufacture of Rum liquor for supply to Defence Services, Regarding.

என்று போடுகிறார்கள். ராணுவ சர்வீசுக்கு ரம் தயாரிக்கத் தேவையான எரி சாராயம் கேட்டபோது, இங்கேயிருந்து அவருக்கு அனுப்பப்பட்ட பதில் :

" I am directed to state that the Government have not yet lifted the ban on the export of Alcohol to the other States and Foreign countries ".

ஜூலையிலே தடை, ஆகஸ்ட் மாதத்திலே தடை நீக்கம். அக்டோபரிலே தடை என்று மறுபடியும் எழுதுகிறார்கள். சரி: இல்லையிலே தான் 10 லட்சம் லிட்டர் கொடுத்ததற்கு 15 லட்சம்

லிட்டர் வேறு தனியாருக்குப் போய் இருக்கிறது. இதற்கடுத்து, ராணுவத்திற்கு ரம் தயாரிக்கின்ற அந்தக் காரியத்திற்காக வேண்டுமென்று தனியார் எழுதுகிறார்கள். அப்போது சொல்கிறார்கள் மீண்டும் தடை என்று. ஆகவே, அதற்குப் பிறகு தான் மீண்டும் தடை அதாவது 15–10–1980-ல் எழுதிய பிறகுதான் மன்னத்திற்கும், அஹமத்கானுக்கும் இங்கே இருந்து எரி சாராயம் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது.

மத்திய மோலாசிஸ் போர்ட் சிபார்சுப்படி ஆந்திரா அரசுக்கு மருந்து தயாரிக்கத் தேவையான 60 லட்சம் லிட்டர் தராமல், 25 லட்சம் லிட்டர் தரப்படுகிறது. ராணுவத்தினர் சர்வீசுக்கு ரம் தயாரிக்க வேண்டும் என்று ஒரு தனியார் கம்பெனி கேட்கிற போது தர மறுக்கிறார்கள். ஆனால் கேரளா மன்னம் சுகர்ஸ்க்கு கொடுக்கிறார்கள். அஹமத்கான் கும்பல் சென்னை வருகிறது. 5 நட்சத்திர ஓட்டல்களில் தங்குகிறது. பேரம் நடைபெறுகிறது. பல கோடி ரூபாய் ஊழலுக்கு வித்திடப்பட்டதே இந்தத் தமிழ் நாட்டிலே தான் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். கேரள மாநிலத்தைப் பற்றிப் பேசப்பட்டாலும்கூட, இதற்கு வித்திட்ட மாநிலம் தமிழ்நாடுதான்.

அஹமத்கானுக்கு மட்டும் எப்படி பர்மிட் தரலாம். அந்த அஹமத் கான் இங்கேயுள்ள எக்சைஸ் அமைச்சரகத்திற்கு எழுதியதாக ஒரு கடிதம் எல்லா மலையாளப் பத்திரிகைகளிலும் வெளிவந்து இருக்கிறது. நான் கடிதத்தைப் படிக்கப் போவது இல்லை. ஆனால் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருப்பதைச் சொல்கிறேன். எரி சாராயக் தலையிலே நடுநாயகமாக விளங்கும் அஹமத்கான் என்ன குறிப்பிடுகிறார் என்றால்—'தமிழ் நாடு அரசிடமிருந்து இந்தப் பர்மிட்டை வாங்குவதற்கு பகீரதப் பிரயத்தனமும், பெரும் அளவிற்குத் தொகையும் செலவழித்ததற்குப் பிறகு தான் இந்த எரி சாராயம் நமக்குக் கிடைத்தது என்பதை உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்' என்று கேரள எக்சைஸ் துறை அமைச்சருக்கு அவர் எழுதுகிறார்.

[பிற்பகல் 12.20]

ஒதுக்கீட்டை, அலாட்மென்டை பெறுவதற்கும் அவைகளை ஏற்ற லாரிகளை ஏற்பாடு செய்வதற்கும் ஒரு மிகப் பெரும் தொகையை நான் செலவு செய்திருக்கிறேன். ஆகவே எனக்கு அளிக்க வேண்டிய சலுகைகளை நீங்கள் அளிக்க வேண்டுமென்று அங்குள்ள அமைச்சர்களைக் கேட்கிறார் என்றால் செலவு இங்கே செய்திருக்கிறார்; அதிகப்படியாகச் செலவு செய்த விவரம், அரசாங்கத்திற்கு, அதிகாரிகளுக்கு செலவு செய்திருக்கிறேன் என்று அஹமத்கான் எழுதிய கடிதத்திலே குறிப்பிட்



டிருக்கிறார். ஆனால் தனியார் யார், யாரோ பிடிபடுகிறார்கள்,
இங்கே கூட லைசன்ஸ் ரத்து என்றெல்லாம் செய்தி வந்ததே
தவிர எந்த பாக்டரிக்கு லைசென்ஸ் ரத்து என்கின்ற விவரங்கள்
எதுவும் தெரியவில்லை. ஆனால் செய்திகள் வந்தவுடன், உட
னேயே லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது என்று பத்திரிகையிலே
செய்திகள் கொட்டை எழுத்திலே வந்தன. போலீசார் எல்லாம்
கைது செய்யப்பட்டார்கள் என்று வந்தது. அவர்களுடைய
நிலை என்ன? அவர்கள் மீது என்ன விசாரணை? உள்ளபடியே
லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டிருக்கிறதா என்ற விவரங்கள்
எல்லாம் அவைக்கு அளிக்கப்பட வேண்டிய விவரங்கள்.
யார் யாரையோ பிடிக்கிறார்கள். இதிலே கிளிகள் பிடிபடு
கின்றன; புறாக்கள் பிடிபடுகின்றன; மயில்கள் பிடிபடு
கின்றன. யார் யாரோ பிடிபடுகிறார்கள். ஏதோ வேடிக்கைக்
காக சொல்லவில்லை. அன்றைக்குக் கூட இந்த அவையிலே
பல மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

பல்கேரியா கப்பல் ஊழல் விவகாரத்தில் தொடர்பு பற்றி * *
இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட . . . . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, ஒரு உண்மையை வெளிக்குக் கொணர்வதற்காக
ஆதாரங்களைச் சொல்வது அரசுக்கு உதவியாக இருக்கிறது என்
றாலும் இங்கே பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிற
வர்களைப்பற்றி கடிதங்கள் வரும்போது, அதை காண்பித்து
அவர்களிடமிருந்து பதிலைப்பெற்று இங்கே பதில் சொல்ல வாய்ப்
புத்தந்திருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இப்படிப்பட்ட
ஒரு பிரச்சனையை இங்கே எழுப்புவது சரிதானா என்பதை
நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆதாரங்கள்
இருக்கின்றன. உங்களிடத்திலே அவைகளைப்பற்றி சொல்லி
விட்டுத்தான் இங்கே நான்பேசுகிறேன். எரி சாராயக் கடத்தல்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே
உறுப்பினர்களாக இல்லாதவர்களைப்பற்றிக் குறிப்பிடக்
கூடாது என்பது ஏற்கனவே ஒரு மரபாக இருந்து வருகிறது.
(குறுக்கீடுகள்). ஏனென்றால் அவர்களுக்கு தம்மீது சுமத்தப்
பெற்ற குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பு இந்த
அவையில் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1981 பிப்ரவரி 4

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, பல்கேரியா ஊழல் பற்றி குறிப்பிடும்போது * * பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்களுடைய பெயரும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அவர்களுக்கு என்ன தொடர்பு என்பதுபற்றி பல்கேரியா ஊழல் பற்றி பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்தக் கடிதத்தினுடைய வாசகத்தை தயவுசெய்து இன்னொரு தடவை படித்தால் அதனுடைய நோக்கத்தை நீங்களே புரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவரவர்களே, Reference is different from defamation

நீங்கள் வெளியிலே இருக்கிறவர்களைப் பற்றி டெபமேஷனோ அல்லது அவர்கள் மீது அவதூரோ சொல்வதை இந்த அவையிலே அனுமதிக்கப் போகிறீர்களா? இந்த மாமன்றத்திலே உள்ளவரைப்பற்றி குறிப்பிடுவதில் தவறு இல்லை. ஆனால் வெளியில் உள்ளவர்கள் மீது இங்கே குற்றச் சாட்டு அவதூறு என்று கொண்டு வருவது நிச்சயமாக இந்த அவைக்கு ஏற்றது அல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே ஒரு லெட்டர் எழுதி, அந்த லெட்டரில் இந்த அரசாங்கத்திற்குத் தாம் செலவு செய்திருப்பதாக யாரோ தனி நபர் ஒருவர் அந்த அரசுக்கு எழுதியதாகச் சொல்கிறார்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள். அந்தக் கடிதம் அவரிடம் இருக்கிறதா ? அல்லது அந்தக் கடிதத்தின் நகல் இருக்கிறதா ? ஏதாவது பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் பத்திரிகையில் வேண்டுமென்று கூடச்சொல்லலாம். அதையெல்லாம் எப்படிஆதாரமாகக் காட்ட முடியும்? குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பதில் சொல்லட்டும். அது வேறு விவகாரம். இந்த அரசுக்குச் செலவு செய்தோம் என்று ஒருவர் கேரள அரசுக்கு அல்லது அமைச்சர்களுக்கு ஏதோ கடிதம் எழுதினார் என்று பத்திரிகையிலே செய்தி வந்தது என்று சொல்வதாக இருந்தால் அதற்கு என்ன ஆதாரம் ? அவர் எழுதிய கடிதம் இருக்கிறதா ? அல்லது அதன் நகல் இருக்கிறதா? அல்லது கேரள அமைச்சர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்களா? எப்படி ஆதாரம் வந்தது? எப்படி அவர்கள் சொல்லலாம் ?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



[981 பிப்ரவரி 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகையில் வந்ததைச் சொல்லும்போது சொன்னார்கள். எதிர்கட்சித் தலைவர் சொல்கிறார். அதற்கு பொறுப்பேற்றுக் கொண்டுதான்

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தங்களிடம் அதைக் காண்பித்தாரா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுகின்றவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டுதான் பேச வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, எதிர் கட்சித் தவறு நடந்தது என்று குற்றம் சாட்டுவதற்கு அதற்கு நாங்கள் தலைவர் அவர்களுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால் இந்த பதில் சொல்கிறோம். அது வேறு பிரச்சினை. என்று கேரள அரசாங்கத்திற்குச் செலவு செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்களே அமைச்சருக்கு ஒருவர் எழுதி இருக்கிறார் அல்லது அப்படி எழுதியவர் அந்தக் கடிதம் இருக்கிறதா ? அவர்களுக்கு எழுதி இருக்கிறாரா ? எதிர் கட்சித் தலைவர் இருக்கிறதா ? அந்தக் கடிதத்தின் நகல்

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அதற்கு நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய கருத்து இதுதான் : ஒருவர் தவறு செய்து விட்டதாக, அதுவும் ஏதோ தான் பணம் செல விட்டிருப்பதாக ஒத்துக்கொண்டு கடிதம் எழுதி இருப்பதாக ஒருவர் சொல்லி அதே நபர் இங்கே இருக்கின்ற ஒருவருக்கு 'நீங்கள் உதவி செய்ததற்கு நன்றி' என்று சொன்னது போன்ற வாசகங்களைச் சேர்த்து இங்கே படித்தால் அதனுடைய பொருள் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்தக் கடி தத்தைப் பொறுத்தவரையில் தங்களுடைய வீட்டு விழா நிகழ்ச்சிக்கு வந்தவர்களுக்கு இரண்டு பேருமாகக் கையெழுத்துப் போட்டு நன்றி தெரிவித்தார்கள். ஆகவே ஒரு குடும்பம் என்ப தற்காகச் சொன்ன செய்தியே தவிர அதிலே ஒன்றும் குற்றச் சாட்டு இல்லை. அது ஒரு இன்டைரக்ட் ரெபரன்ஸ். அவ்வளவு தான்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, பத்திரிகையிலே வந்தது பற்றியும் கடிதம் வந்தது பற்றியும், சொன்னார்கள் அல்லவா ? அதிலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர் கட்சித் தலைவர்
அவர்கள் எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்றுக்கொண்டு பேசு
கிறோம் என்பதை உணர்ந்து பேசவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உங்களிடத்
திலே ஆதாரங்கள் எல்லாம் காட்டிப் பேசப்போகிறேன்
என்று சொன்னபோது பொறுப்பேற்றுக்கொண்டு தான் பேசு
கிறேன் என்பதைச் சொல்லிவிட்டுத்தான் பேசுகிறேன்.
எரி சாராயக் கடத்தலை ஒட்டி மத்திய அரசின்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்பிலே நான் குறிக்கிட
வில்லை. ஒரே ஒரு விளக்கத்தைத்தான் நான் கேட்க விரும்பு
கிறேன். இங்கே அவர் படிக்கின்றபோது இந்த அவையிலே
இல்லாதவரைப் பற்றிப் படித்ததற்கு தங்களுடைய தீர்ப்பு என்ன
என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்......(குறுக்கீடு)
......மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
உட்கார்ந்துகொண்டே பேசுகிறாரே, அது என்ன முறை
என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைச் செய்திகளை
ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசக் கூடாது. பத்திரிகைகளில்
ஒவ்வொரு வரும் ஒவ்வொரு மாதிரி கருத்துக்களைச் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே,
பத்திரிகைகளிலே அவரவர்களுடைய கருத்தை எழுதலாம்.
ஆகவே பத்திரிகைகளிலே யாரோ சொன்னார், யாரோ எழுதி
னார் என்று சொல்லி அதை எப்படி இங்கே பேச முடியும்?

(பிற்பகல் 12-30).

திரு. க. அன்பழகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி உள் நோக்கம்
கற்பித்துச் சொல்லப் பெறுவதை அனுமதிக்க முடியாது.
பேரவைக் குறிப்பேட்டிலிருந்து அவற்றை நீக்கிவிட ஆணை
யிடுகிறேன். (கூச்சல், குழப்பம்)

திரு. க. அன்பழகன் : நான் உள்நோக்கம் வைத்தோ,
அமைச்சர் அவர்களைக் குற்றம் சாட்டியோ எதையும் சொல்ல
வில்லை. என்னுடைய கருத்து என்னவென்றால், இந்தப்

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப் பெற்றது.





பிரச்னை முதன் முதலில் பத்திரிகைகளிலே தான் வந்தது.
இந்த விஷயத்தை பத்திரிகைகளில் பார்த்துத்தான் நாங்களே
தெரிந்து கொண்டோம். முன்பும் பத்திரிகையில் வந்துள்ளதை
வைத்துத்தான் முதல்வர் அவர்களும் பேசியிருக்கிறார்கள்.
எனவே தொடக்கமே பத்திரிகையிலே இருந்துதான் ஆரம்
பித்தது. ஆகவே அரசுக்கு உதவி செய்வதற்காகவே அதை
வைத்து இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அரசுக்கு
உதவி செய்வதற்கு அவர்கள் தரும் உழைப்பைப் பற்றியோ,
மேன்மையான நோக்கத்தைப் பற்றியோ குறை கூறவில்லை.
பத்திரிகை செய்திகளை வைத்துக் கொண்டு, வேறு ஆதாரம்
எதுவுமின்றி, இப்பேரவையில் இல்லாதவர்களைப் பற்றி இங்கே
குற்றஞ்சாட்டுவது எப்படிச் சரியாகும் ? அவற்றுக்கு யார்
பதில் சொல்வது ? சில ரெவின்யூ அதிகாரிகளின் பதவிகளை
எடுத்தது பற்றிக் கூடச் சொன்னார்கள். அது போன்று
அரசாங்கத்தைப் பற்றிச் சொல்வதற்கு பதில் சொல்லவேண்டியது
என்னுடைய பொறுப்பு. எந்த அடிப்படையில் அப்படிச் செய்
தார்கள் என்பதையெல்லாம் இந்த அவைக்கு விளக்கிச் சொல்ல
நான் தயாராக இருக்கிறேன். ஆனால் வெளியில் உள்ளவர்
களைப் பற்றியெல்லாம் குற்றஞ்சாட்டி குறிப்பிட்டுப் பேசுவது
எல்லாம் முறைதானா ? அதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்று
அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரிவித்து கொள்கிறேன். ஆளும் கட்சிக்கு ஆதர
வான பத்திரிகைகளும் உண்டு. ஆளும் கட்சிக்கு எதிரான
பத்திரிகைகளும் உண்டு. இப்படி இந்தியா பூராவும் இருக்கிறது.
ஆகவே பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளை வைத்துக்
கொண்டு வளர்த்துக் கொண்டே போக முடியாது. வேறு
ஆதாரங்கள் இருந்தால் கொடுக்கவேண்டும். வெளியில்
உள்ளவர்களின் பெயர்களை இங்கே குறிப்பிட்டு குற்றஞ்சாட்டி
பேசுவதையும் அனுமதிப்பதில்லை. எனவே, எதிர் கட்சித்
தலைவர் * * * என்று குறிப்பிட்டுச் சொன்ன பெயரை
அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

(கூச்சல், குழப்பம்)

டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பேரம் நடப்பதற்கு
உதவி செய்திருக்கிறார் என்பது என் குற்றச்சாட்டு.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டுகள் சொல்வதிலோ அல்லது இந்த அரசு அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவதிலோ எங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அச்சமும், இல்லை. ஏனென்றால் மடியில் கனம் இருந்தால்தானே வெளியில் பயம் ஏற்படும். (கரவொலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி ஒரு தெளிவான வரைமுறைகள் வைத்து நீங்கள் தீர்ப்பு வழங்க வேண்டியது முக்கியமானதொன்று. இங்கே இரண்டு பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஒன்று பத்திரிகைகளில் வருவதை வைத்து இங்கே பேசலாமா என்பதாகும். தங்கள் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வருகிறேன். இதே மன்றத்தில் 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி நடந்த விவாதத்தில் பத்திரிகைகளில் வந்த செய்திகளை வைத்துக் கொண்டு பேசக் கூடாது என்று யார் தெரிவித்திருக்கிறார்கள் என்றால் அன்றைய தினம் முதல் அமைச்சராக இருந்த இன்றைய தினம் எதிர்கட்சித் தலைவராக இருக்கிற டாக்டர் கலைஞரே தான் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள், பத்திரிகைகளிலே வந்தசெய்திகளை ஆதாரமாக வைத்துப் பேசக் கூடாது என்று.

இரண்டாவதாக நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், வெளியே உள்ளவர்களைப் பற்றி குறிப்பிடலாமா ? வெளியே இருக்கிறவர்களைப் பற்றிக் குறிப்பிடலாம், ஆனால் அவர்கள் மீது அவதூறாக குற்றஞ்சாட்டிச் சொல்கிற போது அவர்கள் தங்களுக்குப் பாதுகாப்புத தேடிக்கொள்ள வழி இல்லை. வெளியே பேசினால் நீதி மன்றத்திற்குப் போகலாம். ஆனால் சட்டமன்றத்தில் வெளியே இருக்கிற ஒருவரைப் பற்றி தவறாக, அவதூறாகப் பேசுகிற போது அவருக்கு தன்னுடைய நியாயத்தை வற்புறுத்த வழியே இல்லை. ஆகவேதான் நம்முடைய விதிமுறைகளைத் தெளிவாக வைத்துக் கொண்டிருக்கிறோம். வெளியே இருக்கிறவர்களைப் பற்றி அவதூறாகப் பேசக் கூடாது என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அவதூறாகப் பேசியிருக்கிறார்கள். அது மரபுக்கு முரணானது. அதை தாங்கள் நீக்குவதுதான் இந்த மரபைக் காப்பாற்றுகிற ஒரே வழி. ஆகவே அது சம்பந்தமாகவும் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற நடைமுறைப்படி இந்தியாவிலோ அல்லது தமிழ் நாட்டிலோ ஒருவர் தவறு செய்திருக்கிறார்கள் என்றால் இன்னார் தவறு செய்திருக்கிறார் என்று சொன்னதற்குப் பிறகுதான் அரசாங்கம் அதன் பேரில் விசாரணை



தொடங்குவதற்கு முடியும். ஆகவே இன்னார் என்றே சொல்லக் கூடாது என்றால் அதற்கப்புறம் இங்கே எப்படி 'பங்க்ஷன்' செய்வது. ஆகவே அதை நீக்குவதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, யார் மீதாவது சந்தேகம் இருந்தால் அதைப் பற்றி இங்கே வெளியிடுவதில் தவறு இல்லைதான். இன்னார் செய்தார்கள் என்று கண்டிப்பாகச் சொல்லும் போது அவர்கள் இங்கே பதில் சொல்வதற்கு இருக்க வேண்டும். இந்த அவையில் இருப்பவர்கள் பதில் சொல்வதற்குத் தயாராயிருக்கிறோம். எல்லோரையும் உள்ளிட்டுத்தான் சொல்கிறேன். ஆனால் வெளியே இருக்கிறவர்கள் பற்றிச் சொல்லி, பத்திரிகைகளில் வந்திருக்கிறது என்று சொன்னால், இதை விசாரிப்பதற்கு சொல்கிற எண்ணமாகத் தெரியவில்லை. எங்களுக்குக் கடிதம் எழுதலாம், நேரடியாகச் சொல்லலாம், இதை விசாரித்துச் சொல்ல வேண்டும், இவ்வளவு நாட்களுக்குள்ளாக நீங்கள் சொல்லியாக வேண்டும் என்று எழுதுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை பற்றி பத்திரிகைகளில் வந்தது என்று நாங்கள் சொன்னாலும் கூட, அமைச்சர்களே இப்படி சாராயம் கடத்தப்பட்டது பற்றி பல கருத்துக்களை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறார்கள். அமைச்சருடைய கருத்துக்கள் மூலமாக இது வெளியிடப்பட்டிருக்கிறது. கடத்தல் ஊழல் நடைபெற்றதென்றால், பல்வேறு வகைகளில் எந்த இடத்தில் யார் எப்படி என்று வேண்டுமானால் அரசாங்கத்தின் மூலம் ஆராய்ந்து அல்லது எந்தெந்த அளவிற்கு யார் யார் பொறுப்பு என்று தீர்மானிக்க வேண்டும். இன்னும் முழுமையான அளவிற்கு விசாரிக்கப்படவில்லை. விசாரிக்கப்பட்டு முடிந்துவிடவில்லை என்ற நிலையில் இருக்கிறபோது ஒரு விசாரணைக்கு உரிய நிகழ்ச்சிகளில் யார் யார் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அரசாங்கம் தான் விசாரிக்கக்கூடிய நிலையில் சம்பந்தப்படவில்லை என்று சொல்லலாமே தவிர தரக்கூடிய செய்திகளை, இங்கே சொல்லப்பட்ட காரணத்தால் ஒரு குற்றச்சாட்டு முழு உருவம் எடுத்து அது முழு குற்றச்சாட்டாக ஆகிவிடுவதில்லை. குற்றச்சாட்டு சொல்லப்பட்டாலும் கூட ஒரு அமைச்சர் அந்தக் குற்றச்சாட்டுக்கு எங்களிடம் ஆதாரம் இல்லை என்று சொன்னாலும் கூட அது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுதான். ஆனால், விசாரிக்கப்பட்டு ஒரு முடிவு எடுப்பது ஒரு தொடர்கதை போல் பல நிகழ்ச்சிகள் இருக்கிறபோது இடையில் சில பேர்களை விட்டுவிட்டுச் சென்றால் நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஆராய வாய்ப்பிருக்காது. ஒரு குற்றச்சாட்டை ஆராய்வதற்காக சொல்லக்

கடமைப் பட்டிருக்கிற நிலையில் சூழ்நிலை காரணமாக வருகிற செய்திகளை வைத்து இங்கே சொல்லப்படுகிறதே தவிர நீங்கள் அதற்குப்பதில் சொல்வதன் மூலம் அரசுக்கு யார் மீதும் எந்தக் குற்றமும் இல்லை என்று சொல்லக் கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே சில கருத்துக்களை வைத்திருக்கிறோம். வெளியார் களைப் பற்றியே வரக் கூடாது என்றால் இங்கிருக்கிறவர்களைப் பற்றித்தான் குற்றம் சொல்ல முடியும்.

(பிற்பகல் 12-40.)

ஆகவே, இங்கே இருக்கின்ற 234 உறுப்பினர்கள் மீதுதான் குற்றச்சாட்டுகள் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசுவது தவறு. * * இந்தச் சபைக்கும், எந்தச் சம்பந்தமும் கிடையாது. * * இல்லை. எனவே, அவர்களைப் பற்றிப் பேசக் கூடாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அது உண்மை என்று தெரிந்த பிறகு, அதை வெளியிடலாம் என்று சொன்னார்கள். ஆனால், பதில் சொல்வதற்கு அவர் இந்த அவையிலே இல்லை. இன்னொரு முக்கியமான அடிப்படைக் காரணமும் இதற்கு இருக்கிறது. வெளியில் சொன்னால், சம்பந்தப்பட்டவர் அது குறித்து வழக்கு மன்றத்திற்குப் போக பாதுகாப்பு இருக்கிறது. இங்கே சட்டமன்றத்திலே சொல்லி, அதற்குப் பிறகு பத்திரிகையிலே அது வெளிவருகிறபோது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்பதுதான் அடிப்படை. ஆகவே தான் சொல்ல வேண்டியவைகளை வெளியிலே சொல்லட்டும். எங்களைப் பற்றி, ஆட்சிப்பற்றி நிர்வாகத்தைப்பற்றி நிர்வாகத்திலே உள்ளவர்களைப் பற்றி, யாரைப் பற்றி வேண்டுமானாலும், அதிகாரிகளைப் பற்றி வேண்டுமானாலும் வெளியிலே சொல்வதற்கு உரிமை இருக்கிறது. தாராளமாகச் சொல்லுங்கள். அதற்கு பதில் சொல்ல நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால், வெளியிலே இருப்பவர்களைப் பற்றி சட்டமன்றத்திலே சொல்லி, பிறகு அது பத்திரிகைகளிலே செய்தியாக வந்தால் — சட்ட மன்றத்திலே பேசப்பட்டது என்று சொல்லி பாதுகாப்புத் தேடிக் கொள்ள முடியும் — அது மக்களுக்கு ஆபத்தானது.

(குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்டவர்களை சம்மன் மூலமாக அழைக்க இது கோர்ட்டு அல்ல; இது சட்ட மன்றம். (குறுக்கீடு) இப்போது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொன்னார். அகமத்கான் என்ற ஒருவர் கேரளத்தில் உள்ள அமைச்சர் ஒருவருக்கு கடிதம் எழுதியதாக பத்திரிகையில் வந்ததை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள். அதே போல் * * பற்றியும் குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார்கள். இரண்டு பேர்களும் இந்த அவையிலே இல்லாதவர்கள். அவர்களால் வாதாட முடியாது ; பேச முடியாது. முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி, அவர்கள் இதைப் பற்றி வழக்கு மன்றத்திற்குச் செல்லவும் உரிமையில்லை ; வாதாடவும் முடியாது. எனவே, இவைகளை எல்லாம் அவைக் குறிப்பிலே இடம் பெறச் செய்வது என்பது இயலாத காரியம். இதைத்தான் ஏற்கனவே மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பத்திரிகைச் செய்திகளை ஆதாரங்களாக வைத்துப் பேசக் கூடாது என்று ஏற்கனவே முதல்வராக இருந்தவரும், இன்றைய எதிர்க் கட்சித் தலைவரும் சொல்லியிருக்கிறார்கள் என்று மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் (குறுக்கீடு).

டாக்டர் மு. கருணாநிதி : பத்திரிக்கைச் செய்திகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு பேசினால் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தேக விளக்கம் ஒன்றை மீண்டும் கேட்கிறேன். இங்கே பேசி விட்டு, பத்திரிகையிலே வந்தால், யார் மீது குற்றம் சுமத்தப்படுகிறதோ, அவர் வழக்கு மன்றத்திற்குப் போக இயலாது. ஆகவே, அவருக்குப் பாதுகாப்பு கிடையாது. அவர்கள் வெளியிலே சொல்லட்டும் [illegible] சம்பந்தப் பட்டவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போக முடியும். ஆனால் இங்கே பதில் சொல்ல முடியாமல் இருப்பவர்களைப் பற்றிப் பேசுவது நீதி ஆகாது.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே பேசிய பல்கேரிய ஊழலுக்குக் கூட வழக்கு மன்றத்திற்கு அழைத்தவர்கள் போயிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திற்கு வருவார்கள் என்று ஏன் வராமல் இருக்கிறார்கள்? எப்போது [illegible] ஆகவே வழக்கு ஆவலில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மன்றத்தைப் பற்றி ஒன்றும் பயப்படவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பல்கேரிய கப்பல் எங்கு போயிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இங்கே இந்த விவாதம் நடத்தியதன் விளைவாக அவர்களுக்கு 40 இலட்சம் டாலருக்கு வெளியே விற்பனையாகியிருக்கிறது. அந்தவிட [illegible]கம் இப்போது வாங்க வேண்டுமென்றால்

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வழக்கு மன்றத்திற்குப் போயிருப்பவர்கள் பத்திரிகையிலே எழுதியதை வைத்துப் பேசியிருக்கிறார்களே தவிர, சட்டமன்றத்தில் பேசினார்கள் என்பதற்காகப் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** While the Members had freedom of speech, they should not infringe on that freedom. It has to be based on certain rules and regulations. It has been held :—

'Baseless allegations should not be made. It was not in order for a Member to refer in the House to what was spoken in Mount Road.'

It is wrong to make serious allegations without any basis.'

'Observing that it was not in keeping with Parliamentary traditions to make allegations without basis, the Speaker ordered the expunction of certain allegations made by a member in view of the Minister's denial of the allegations on the ground that they were made without any basis,'

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** It is not related to this issue. பேரவைத் தலைவர் தீர்ப்பில் வளையக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பில் வளைய வேண்டிய நிலை எனக்கு இல்லை.

It has been stated in 'Practice and Procedure of Parliament by Kaul and Shakdher ' as follows :

'It was aginst the rules of parliamentary debate and decorum to make defamatory statements or allegations of incriminatory nature against any person andthe position was rather worse if such allegations were made against persons who were not in a position to defend themselves on the floor of the House. The House should not be made a forum where the conduct and character of personsshould be brought into disrepute, as the person against whom allegations were made had no remedy against a speech made on the floor of the House which was privileged'

இது "பிராக்டிஸ் அண்டு ப்ரொஜீசர் இன் பார்லிமெண்ட்" என்பதில் இருக்கிறது. கவுல் & ஷக்தர் விளக்கி எழுதியிருக்கிறார்கள்.

ஆகவே, வெளியே இருப்பவர்களைப் பற்றிய குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் கூறினால் அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. பத்திரிக்கைகளில் வந்ததை ஆதாரமாக வைத்துப் பேசுவது சரியல்ல.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பொறுத்த வரை அதில் ஈடுபட்டவர்கள் பற்றி குற்றச்சாட்டுகள் சொல்லி வருகிற நிகழ்ச்சியோடு தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுப்பிய பிரச்சினை—குறிப்பிட்ட இன்னார் என்று சொல்லுகிறபோது அவர்கள் நாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்க இந்த அவையில் வாய்ப்பில்லை. இங்கே பேசினார்கள் என்று வழக்குத் தொடர இயலுமா என்றால் வழக்குத் தொடர இயலாது. சட்டமன்றத்திற்குள் பேசிய பேச்சை வைத்துக்கொண்டு வெளியிலிருப்பவர்கள் வழக்குத் தொடுக்க முடியாது. தொடர்பாக இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டுச் சொல்லுவதில் தவறு இல்லை. இன்னின்ன குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று சொல்லலாம். இதைத் தான் மாண்புமிகு முதல்வர் அவர்களும் குறிப்பிட்டார்கள், இன்னின்ன குற்றங்கள், குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லலாம். பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் பெயரைக் குறிப்பிட்டு முதலமைச்சருக்கு எழுதலாம். தாங்கள் முதலமைச்சருக்கு எழுதுகிறபோது பத்திரிக்கையில் வர நியாயம் இல்லை. ஆகவே, பொதுவாகக் குற்றச் சாட்டுக்களைக் குறிப்பிட்டு பெயர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியனுப்புவதன் மூலம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வழி தேடலாம்.

[பிற்பகல் 12-50].

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * என்ற வரிகளை நீக்கி விடுகிறேன். மற்றபடி நாவலர் அவர்கள் சொன்ன மாதிரி குற்றச் சாட்டுகளைப் பற்றிப் பேசுவதிலே எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வசதியற்ற உறுப்பினர் அல்லாதவர்களைப் பற்றி வேண்டாம். நாராயணசாமி நாயுடு பற்றிப் பேசலாமா என்று கேட்டார்கள். அது ஆட்சி மன்றத்திற்குள்ளே வேறு வகையிலே வந்தது (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியே உள்ளவர்களைப்பற்றிச் சொல்லக்கூடாது என்பதல்ல, ரெபரன்ஸ் பண்ணலாம். அவர்களைப் பற்றி விமர்சனம் வரலாம், ஆனால் அவர்களைப் பற்றி அல்லிகேஷன் என்று வரும்போது தான் ப்ராப்ளம் வருகிறதே தவிர அவர்களைப் பற்றிச் சொல்லவே கூடாது என்று சொல்லவில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவே ** என்பதை மாத்திரம் நீக்குகிறேன்.

மற்றவைகளை பார்த்து நீக்க வேண்டியிருந்தால் பார்த்து நீக்குகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த எரி சாராயக் கடத்தலைப்பற்றி செய்திகள் வந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே மத்திய அரசினுடைய கலால் துறை ஒரு சாராய தொழிற்சாலையை திடீரென்று சோதனையிடுகிறது. அதிலே மொலசஸ் நிரம்பியிருக்க வேண்டிய டாங்குகளில் மொலாசஸுக்குப் பதிலாக வெறும் தண்ணீர் மாத்திரம் தான் நிரப்பப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்படுகிறது. 800 டன் மொலாசஸ் கடத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக அந்த டாங்குகளில் தண்ணீர் நிரப்பப்பட்டிருகிறது. அந்த 800 டன் மொலாசஸிலிருந்து 1 லட்சத்து 80 ஆயிரம் லிட்டர் எரி சாராயம் தயார் செய்யப்பட முடியும் என்று கணக்கிடப்படுகிறது. அதனுடைய விலை மாத்திரம் 60 லட்சம் ரூபாய். மத்திய அரசு கலால் துறை கண்டுபிடிக்கும் வரை மாநில அரசு கலால் துறை என்ன செய்து கொண்டிருந்தது என்று நமக்குத் தெரியவில்லை. ஒரு வேளை சோதனையிடக் கூடாது என்று அரசுத் தரப்பிலே அறிவிக்கப்பட்டதோ அதுவும் தெரியவில்லை. எப்படி தொழிலதிபர்களுடைய முறையீட்டைக் கேட்டு உடனடியாக ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை நிறுத்தியது மாத்திரமல்ல, அந்தப் பதவியே வேண்டாம் போ என்று அந்தப் பதவியையே இல்லாமல் ஆக்கிவிட்டார்களோ அதைப்போல் அந்த எரி சாராய தொழிலதிபர்களுக்கு இவ்வளவு உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, பல கோடி ரூபாய் மதிப்புள்ள எரிசாராய கடத்தல் விவகாரம் கலால் துறை, காவல் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கும் தெரியாமல் நடந்திருக்க முடியாது என்பதும் இந்தத் தொழிலில் முழு நடவடிக்கைகளையும் மொலாசஸ் கொள்முதலிலிருந்து எரி சாராய உற்பத்தி அனுமதி அளிப்பது, கொண்டு செல்வது ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அரசின் முத்திரை இல்லாமல் இந்தத் தொழிலில் எதுவும் நகரக் கூட முடியாது என்பதும் இதிலே ஊழல் இருக்கிறது என்று சொல்லப்படுமேயானால் அதற்குப் பொருள் என்ன வென்றால் இந்த அரசு லஞ்சத்தைச் சட்டபூர்வமாக்கி விட்டது என்று தான் நான் குற்றம் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கறப்பெற்றது.





ஏற் கனவே இந்தமாமன்றத்திலே பல்கேரியாகப்பல் ஊழலைப் பற்றி நான் எடுத்துச் சொன்னேன். அப்போது சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குத் தயார் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அப்போதிருந்த பிரதமர் சரண்சிங்கை கேட்டோம். அவர் இயலாது என்று கூறிவிட்டார் அல்லது அங்கிருந்து கடிதம் அனுப்பிவிட்டார்கள் என்ற அளவோடு நிறுத்திக்கொண்டார்கள். அதற்குப் பிறகு, பிரதமரை, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களை மாநாட்டுக்கு அழைக்க இரண்டு முறை, 3 முறை சென்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த பல்கேரியா கப்பல் ஊழல் விவகாரத்திற்கு முன்பிருந்த அரசு, சரண்சிங்கினுடைய அரசு உச்ச நீதிமன்ற நீதிபதியை அனுப்ப மறுத்து விட்டது, அம்மையார் அவர்களே தாங்களே தயவு செய்து எங்களுக்கு ஒரு உச்ச நீதிமன்ற நீதிபதியை அனுப்பி உதவுங்கள் என்று கேட்டிருக்கலாம். கேட்கவில்லை. பல்கேரியா கப்பல் ஊழல் விவகாரத்தைப்பற்றி இங்கே பேசிய நேரத்திலே கடிதம் எல்லாம் படித்துக் காட்டப்பட்டிருக்கிறது. டெலக்ஸ் மெஸேஜ் எல்லாம் படித்துக் காட்டப்பட்டிருக்கிறது. 20-க்கு மேற்பட்ட ஆதாரங்கள் இந்த அவையிலே எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய மேனேஜிங் டைரக்டர் என்ன செய்தார், திரு ராமகிருஷ்ணன் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினுடைய மேனேஜிங் டைரக்டராக இருந்தார். இந்த அரசிலே அவரை சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென்டிலே கொண்டுபோய்த் தள்ளினார்கள். அவர் சில விஷயங்களைத் தடுத்தார். ஊழல் நடைபெறாமல் தடுப்பதற்கு முன் நின்றார் என்ற காரணத்திற்காக அவருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது. அவைகளை யெல்லாம் நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்ட பிறகு சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென்ட்டிலே அவரைக் கொண்டுபோய் தள்ளிய பிறகு அவர் வேலைக்கே வராமல் லீவ் போட்டுக் கொண்டு இருந்தார். பிறகு ஆட்சி, பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு கலைக்கப்பட்டவுடன் அவர் தலைமை செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்; அந்தக் கடிதத்திலே குறிப்பிடுகிறார்; நேர்மையாகவும், நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட விடாத அ.தி.மு.க அரசின் ஆணைகளை நான் நடைமுறைப் படுத்த விரும்பவில்லை என்பதால் விடுப்பிலேயே இதுவரையில் இருந்தேன். அந்த அரசு கவிழ்க்கப்பட்டு விட்ட காரணத்தால் இப்போது மீண்டும் வேலையிலே சேருகிறேன் என்று சீப் செக்ரட்டரிக்குக் கடிதம் எழுதுகின்றார் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் என்றால் இந்த அரசினுடைய நேர்மையும் நியாயமும் எவ்வளவு என்பதை அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மடியிலே கனம் இல்லைவழியிலே பயமில்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி அவர்கள் சொன்னார்கள். இதையெல்லாம் நீங்கள் மடியிலே வைத்துக்கொண்டிருக்க மாட்டீர்கள், எனக்கு நன்றாகத் தெரியும். எனவே இதிலே

பயமில்லை என்று சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. நான் இவர் களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த 12 கோடி எரி சாராய ஊழலுக்கு மாநில போலீஸ் விசாரணை போதாது என் பதும், நீங்களே ஒரு வழி கண்டு பிடியுங்கள்; ஏற்கனவே பல் கேரியா கப்பல் ஊழலுக்கு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வருகிறார் வருகி றார் என்று சொன்னீர்களே, அதைப்போல சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வேண்டுமா? அதை நீங்களே முடிவு செய்யுங்கள் அல்லது சி.பி.ஐ. விசாரணையா? மாநில அரசிலே சி.பி.ஐ. விசாரணை வரலாமா, அது சுயாட்சிக்குப் பங்கம் அல்லவா என்றால் நீங்களே விரும்பிக் கேட்டு சி.பி.ஐ விசாரணையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. எந்த முறையிலே உங்களை நிரபராதிகளாக ஆக்கிக் கொள்ள வேண்டு மென்று விரும்புகிறீர்களோ அந்த முறைகளை நீங்கள் கண்டுப் பிடிப்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

நான் ஏதோ அரசுக்கு உதவிகரமாகப் பலபேரைக் குற்றம் சாட்டினேன் என்று யாரும் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். நான் அரசையே குற்றஞ்சாட்டுகிறேன். முதல மைச்சரையே குற்றஞ்சாட்டுகிறேன்; அத்தனைபேரும் சேர்ந் துதான் இந்த ஊழல் நடைபெற்றிருக்கிறது. எனவே இந்த ஊழல் அரசின் சார்பாகப் படிக்கப்பட்ட கவர்னர் உரையை நான் ஏற்றுக்கொள்வதற்கு இயலாது என்று கூறி அமைகிறேன்.

திரு கோ. விஸ்வநாதன்: தலைவரவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசு கிறபொழுது நான் கவர்னர் உரைக்கு முன்மொழிந்து பேசியதைப் பற்றிக் குறிப்பிட்டு, என்னுடைய கருத்துக்களுக்குப் பதில் சொல்வதற்குப் பதிலாக என்னைப்பற்றித் தனிப்பட்ட முறை யிலே பேசினார்கள். அதிலே வேகம் இருந்ததே தவிர, விவேகம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அல்ல, மாண்புமிகு உறுப் பினரைப் பற்றித் தனியாகக் குறிப்பிடவே இல்லை. தனிப் பட்ட முறையிலே பெயரைச் சொல்லிக் குறிப்பிடவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் என்ன சொன்னேன் என்று நீங்கள் மீண்டும் ஒரு முறை புரிந்து கொண் டால் அவருக்குப் பதில் அளிக்க உங்களுக்கு வாய்ப்பாக இருக் கும். நான் சொன்னது, இங்கே விவாதத்தைத் தொடங்கி வைத்த ஆளுங்கட்சி உறுப்பினர், பெருந்தன்மை உள்ள ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்; இவர் விரக்தி உள்ளவராக இருக்கிறார், இப் பொழுதுள்ள எதிர்க்கட்சித் தலைவர், ஆகவே, பெருந்தன்மை யான ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக ஆக்க வேண்டும்,



என்று அதற்கு இந்த அவையிலே உள்ள உறுப்பினர்களெல்லாம் ஒத்து ழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நான் அதைக் குறிப்பிட்டேன். குறிப்பிட்டு விட்டு, பெருந்தன்மையுள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்றால் என்ன கருதுகிறார் என்று தெரியவில்லை, பல கட்சி மாறியவராக இருக்க வேண்டுமா? அவர் தி.மு.க. விலிருந்து அ.தி.மு.க. வுக்குச் சென்று, அங்கி ருந்து காங்கிரசுக்குச் சென்று, ஜனதாவுக்குச் சென்று பிறகு அ.தி.மு.கவுக்கு வருகின்ற இப்படிப் பல கட்சி மாறியவராக இருக்க வேண்டுமா, அதுதான் பெருந்தன்மையா, அதுதான் பொருத்தமா எதிர்க்கட்சித் தலைவருக்கு என்று கேட்டேன். இதிலே திரு விஸ்வநாதனைப் பற்றி நான் ஒன்றும் குறிப்பிட வில்லை.

திரு. கோ. விஸ்வநாதன்: நேற்று முன் தினம் அவையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விஸ்வநாதனைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லிவிட்டார்கள்.

திரு எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லுகின்றபொழுது குறிப்பிட்டு என் பெயரைச் சொன்னதற்காக நான் தங்கள் வாயி லாகத் தன்னிலை விளக்கம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்குறிப்பிலே வராத வார்த்தைகளைத் திருப்பிச் சபையிலே சொல்லி அவைக்குறிப்பிலே ஏற்றிப் பிரச்சினையாக்க வேண்டாம். அது அவைக் குறிப்பிலே ஏறக்கூடாது.

THIRU L. ILAYAPERUMAL: I want a clarification from the hon. Leader of the Opposition, who has mentioned my name. Now I am representing that community and it is my duty to plead their cause.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் தங்கள் சமுதாயத்தைப் பற்றிப் பேசலாம்; ஆனால் அதிலே சொல் லப்பட்ட வார்த்தைகளையெல்லாம் இங்கே சொல்லி, நாட் டிலே வழங்கக்கூடாத சொற்கள் அவைக் குறிப்பிலே வரக் கூடாது. அவைகள் அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.

THIRU L. ILAYAPERUMAL : You cannot move the word, I have no objection. Only I want a clarification from the Hon. Leader of the Opposition.

அந்த வார்த்தையின் விளக்கம் உங்களுக்குத் தெரிய வேண்டுமென்று சொல்கிறேன். 1972 ஆம் ஆண்டு அன்று முதலமைச்சராக இருந்தவர்களிடம் எழுத்து மூலமாகவும் கொடுத்தோம்; நேரிலும் கொடுத்தோம். அவர்கள் மிகக் கருணையோடு அந்த வார்த்தை வராது என்று சொன்னாலும்கூட அது சட்டமாக்கப்படவில்லை, அரசாங்க உத்தரவாக்கப்படவில்லை.

[பிற்பகல் 1–00].

இன்று வரையிலும் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அரிச்சந்திர நாடகத்திலே மயான காண்டத்திலே மிகக் கேவலமாக பேசப்பட்டும் இழிய முறையில் எடுத்து காட்டப்பட்டுக் கொண்டும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, தென் ஜில்லாக்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பரவலாக இருக்கின்றன. அன்றைய தி.மு.க. ஆட்சிக்கும், இன்றைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கும் சொல்லியும், 1955 ஆம் ஆண்டு மத்திய அரசிடம் இதை எடுத்துக் கூறியும்கூட, இன்று வரை அரசு ஒழுங்காக உத்தரவு போடவில்லை; ஆவன செய்யவில்லை என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் பின் தங்கிய சமுதாயத்திற்குச் சொந்தக்காரரும், தாழ்த்தப்பட்ட மக்களுடைய சம்பந்தியாகவும் இருப்பவருக்கு அந்த விளக்கத்தைச் சொல்லிக் கொண்டு இனியாவது இம்மக்களை அழைத்து வரும் இழிவு வார்த்தையை நீக்கிவிடச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறுக்கிட வேண்டாமென்று சொன்னதன் காரணமாகக் குறுக்கிடவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்னையை மீண்டும் கிளப்பியிருப்பதன் காரணமாக, மீண்டும் விளக்கம் தர வேண்டிய அவசியத்திற்கு நான் ஆளாகியிருக்கிறேன். மறவர்களைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்றே தெளிவுபடுத்தினேன். "ஆற்றல் மிகு புதினக் கலை" என்கின்ற கட்டுரையைத் திருமதி ராஜம் கிருஷ்ணன் என்ற அம்மையார் எழுதியிருக்கிறார்கள். நான் அன்றே சொன்னேன். அதிலே ஒன்றும் பிடிவாதமே இல்லை. பிடிவாதத்தின் காரணமாக எந்த வாதத்தையும் இங்கே எடுத்து வைக்கவில்லை. திருமதி ராஜம் கிருஷ்ணன் என்கின்ற ஒரு எழுத்தாளர் எழுதியிருக்கிறார்கள். ஒரு மலரிலே வருகின்றபொழுது, எழுத்தாளருடைய உரிமையிலே நாம் தலையிட முடியாது. ஆனால், ஏதாவது





ஒரு விளைவை ஏற்படுத்துமேயானால், அந்த விளைவை ஏற்படுத்துகிறதா என்று நாம் ஆராய வேண்டும். அன்றே நான் தெளிவுபட எடுத்துச் சொன்னேன். அவர் ஆற்றல்மிகு புதினக் கலையைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். வருகின்ற இடத்திலே, 1971–72 ஆம் ஆண்டுகளில் பாரத நாட்டின் வரலாற்று சிறப்புடைய நிகழ்ச்சி ஒன்று நடந்தது என்று சொல்லிவிட்டு, வட மேற்கு மைய பாரதத்தில் சம்பல் ஆற்றின் கரைகளில் இடைவிடாத மண்ணரிப்பினால் தோன்றிய மிக விந்தையான நிலப்பகுதிகள் பரவியிருக்கின்றன. வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக் கொடிய குற்றங்களைப் புரிந்து, ஒளி காணா உலகில் தலைமறைவாக வாழ்ந்த மறவர்களும் மனம் திருந்தி அன்பு வழியில் மாறிடலாம் என்ற தத்துவத்தைச் செயல் முறையாக்கத் துணிந்த நிகழ்ச்சி அது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இங்கே தமிழகத்திலே இருக்கின்ற, தென் மாவட்டங்களில் இருக்கிற மறவர்களைப் பற்றிக் குறிப்பிட்ட குறிப்பு அல்ல. இவர்களை இழிவுபடுத்துகின்ற. . . .

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, நான் ஒன்றே ஒன்று சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் சொல்லி முடித்துவிடுகிறேன். எப்படி அவர் பேசுகிறவரை நான் பொறுத்திருந்தேனோ, அதுமாதிரி தயவுசெய்து நான் பேசி முடிக்கிறவரை மாண்புமிகு உறுப்பினரும் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, நான் சொன்னது, இந்தக் குறிப்பிட்ட பகுதியிலே இருக்கின்றவர்களைப் பற்றி அவர்கள் சொல்லவில்லை. மறவர் என்று வருகின்றபொழுது, மறம் என்றால் வீரம் என்று பொருள். தமிழிலே அறத்திற்கு மாறுபட்ட ஒரு சொல்லும் மறம் என்று ஆகும். ஆகவேதான் மறவர் என்று சொல்லுக்கு வீரர்கள் என்ற பொருளும் உண்டு. நான் 58 ஆதாரங்கள் வைத்திருக்கிறேன் என்று எடுத்துச் சொன்னேன். அதிலே வீரர்கள் என்ற பொருளும் உண்டு. ஆனால் அறத்திற்கு மாறுபட்ட மறம் என்று வருகின்ற பொழுது சங்க இலக்கியங்களிலே கடிவினை மறவர் வில்லிடைத் துறந்தோர் என்று வருகின்ற பொழுது கொடிய கொலைத் தொழிலுடைய மறவர்கள் என்றும் குறிப்பு வருகிறது. அதே மாதிரி, கொலை, வெண், கொள்ளை, கொடுந்தொழில் மறவர் என்று வருகின்ற பொழுது கொலை செய்து பொருளைக் கொள்ளை கொள்ளும் கொடிய கோட்பாடாகிய தீவினை செய் ஆறலைக் கள்வராகிய மறவர் என்று வருகிறது. அதே மாதிரி, அக்குளிப்புவீ இசையமைந்து நோன்சிலை செவ்வாய்ப்பகழி செய்ர்தீர் நோன்கடவர் என்றும் அங்கே ஆறலைக் கள்வராக இருந்து, கொலை, கொள்ளை

இவைகளிலே ஈடுபடுகின்ற மறவர் என்றும் வருகின்றது. மறம் வீரத்திற்கும் பொருந்தும், மறம் என்பது அறத்திற்கு மாறுபட்ட ஒன்று. ஆனால், இவர்கள் குறிப்பிடுவது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, தமிழகத்தில் இருக்கிற, தேவர் குலமக்களாக வழங்குகின்ற மறவர்களைப் பற்றி அல்லவே அல்ல. ஆகவே, மறத்திற்கு இந்த வீரர் என்ற சொல்லைத் தருகின்ற பொருளிலே அவர்கள் குறிப்பிடவில்லை. அங்கே கொடிய கொள்ளையிலே ஈடுபட்டு பொருளைத் தேடுகின்ற அந்த மறவர் என்கின்ற சொல்லைத் தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, இங்கே இருப்பவர்களை இழிவுபடுத்தவோ, இங்கே இருக்கிற ஒரு சமுதாயத்தை இழிவு படுத்தவோ அல்ல. ஆகவே, அந்த வகையிலேதான் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி எழுதியிருப்பதிலே ஓர் ஆசிரியர் தன்னுடைய சொற்களைப் பயன்படுத்துகின்றபொழுது, ஒரு சொல்லுக்கே பல பொருள்கள் உண்டு. ஆனால் இடம் நோக்கி, அவர் எழுதுகின்ற நோக்கம் கருதி, அந்தச் சொல்லை எந்தப் பொருளிலே வைத்திருக்கிறார் என்பதுதான் நோக்கம். இங்கே அந்த அம்மையார் சொல்லியிருப்பது, மறவர் என்ற சொல்லுக்கு இருக்கிற பல பொருள்களிலே கொள்ளை அடிப்பவர்கள், கொலை புரிபவர்கள் என்று வருகின்ற சங்க இலக்கியச் சான்றுகளுடைய அடிப்படையில் அந்தப் பொருளைத்தான் அங்கே வைத்திருக்கிறார்களே தவிர, இங்கே இருக்கிற மறவர்களை அல்ல என்பதுதான் இதிலே பிடிவாதம் எதுவுமே அல்ல. இருக்கிற நிலைமைதான் விளக்கப்பட்டது. இதிலே தவறு இல்லையென்பதுதான் என்னுடைய கருத்து.

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் மறுபடியும் இலக்கியத்திலே மறவர்களைப் பற்றி என்னென்ன இழிவாக இருக்கிறதோ, அவைகளையெல்லாம் மறுபடியும் இங்கே சொன்னதற்காக ரொம்ப வருந்துகிறேன். ஏனென்றால், இலக்கியத்திலே இருப்பவர்களைக்கூட நாம் சில நிலைமைகளைக் கேட்டு யாருடைய மனமும் புண்படவேண்டாமென்பதற்காக விட்டுவிடுகிறோம். அதற்குத்தான் பல உதாரணங்களைச் சொன்னேன். 'ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்' என்ற பாடலை—சுந்தரம் பிள்ளை பாடலைக்கூட தமிழக அரசு எடுத்துவிட்டிருக்கிறது. அதைப் போலத்தான் கனக விசயர் தலையிலே கல்லேற்றி வருகின்ற அந்தக் காட்சியை, இப்பொழுது, மதுரை மகாநாட்டிலே, முதலில் செய்த அலங்கார வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறது.

அதைப் போலத்தான் பல விவகாரங்கள். பூம்புகாரிலே நாம் ஒரு குலத்தை இழிவு படுத்துகின்ற அளவுக்கு இருந்த கதையையே மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றெல்லாம் சொன்னேன். அதைப்போல இதை ஏன் மாற்றியிருக்கக்கூடாது என்பது. அது மாத்திரம் அல்ல. உங்களுடைய கவனத்திற்கு



வராமலேயேகூட அச்சாகி இருக்கலாம். வந்திருந்தால் உங்களுக்குப் பழைய ஞாபகம்கூட வந்திருக்கும். முன்பு ஒரு முறை இப்படி வந்து அவர்களெல்லாம் கிளர்ச்சி செய்து, பாடப் புத்தகத்திலே இருந்து எடுத்த ஞாபகம் வந்திருக்கும். உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை. இனிமேல் மறுபதிப்பிலே வராமல் பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னால் போதும். அதைவிட்டுவிட்டு, மறவர் என்பதற்கு இலக்கியத்தில் இத்தனை பதங்கள் இருக்கின்றன என்று சொல்லி மீண்டும் மறவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, யாரையும் புண்படுத்துகின்ற செயலே அல்ல, தமிழகத்திலே இருக்கிற மறவர்களைப் பற்றியே அல்ல. சங்க இலக்கியத்திலே வந்திருக்கின்ற அந்த வீரர்கள், மறவர்கள் எல்லாம் தமிழகத்திலே இருப்பவர்களைப் பற்றி குறிப்பிட்டதே தவிர, தமிழகப் பாலை நிலத்திலே இருந்த மறவர்கள் பற்றிய குறிப்புகள் தான் அவைகள். அதைக் கொள்ளலாமா, வேண்டாமா என்பதும், '' ஆரியம் போல உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்..'' என்பதை எடுப்பதும் வைப்பதும் அவரவர்களுடைய விருப்பம். ஆகவே அதை நாம் கட்டுப்படுத்துவதற்கு இல்லை. திருமதி ராஜம் கிருஷ்ணன் என்ற அம்மையார் தவிர, மாண்புமிகு கலைஞர் அவர்கள் அந்தக் கட்டுரையை எழுதி இருந்தால், இந்தச் செயலைச் செய்யாமல் இருக்கலாம். வேறு யாராவது எழுதியிருந்தால் அவரவர்கள் விருப்பப்படி எழுதி இருக்கக்கூடும். எழுதி இருப்பது இங்கே இருப்பவர்களை இழிவு படுத்துகிற நோக்கத்தில் அல்ல. இங்கே இருப்பவர்களை தாழ்வு படுத்துகிற நோக்கமும் அல்ல என்கின்ற கருத்தைத்தான் நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அவை முன்னவர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மறவர்கள் என்றால் வீரர்கள் என்ற பொருளிலே நீங்கள் எழுதியிருக்கிறீர்கள் என்று சொன்னாலும், அது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைப் பற்றிப் பெரிய விவாதத்திற்கு வந்ததற்குப் பின்னால், மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போன்று அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தின் நலன் கருதி அப்படி எழுதப்பட்டு இருந்தாலும் அதை அந்த சமுதாயத்தைப் புண்படுத்துகிற காரணத்தால் அவை முன்னவர் அவர்கள் அடுத்த பதிப்பிலே இருந்து அது வராது என்ற உத்திரவாதத்தைக் கொடுப்பதன் மூலம், அந்தப் பெரிய சமுதாயத்திற்கு ஒரு உத்திரவாதம் வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறவர்கள் என்றால் வீரர்கள், களத்திலே இருந்து போராடுகின்றவர்கள் என்ற பொருளிலே

[இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 4

தான் தமிழகத்திலே இருக்கிற மறவர்கள் அந்தணைபேர்களையும் நான் மதிக்கிறேன், சொல்கிறேன் என்பதை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொல்கின்ற கருத்தை இந்தக் கட்டுரை எழுதிய அம்மையார் அவர்களுக்கு இந்தக் கருத்துக்களைத் தெரிவித்து அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க அதை எடுப்பதைப் பற்றி ஒரு ஆட்சேபணை இருந்தே தீரவேண்டும் என்று நான் வாதாடவில்லை. இருப்பதிலே தவறில்லை என்பதுதான் என்னுடைய வாதமே தவிர, எடுக்கக்கூடாது என்று நான் சொல்லவே இல்லை. இருப்பதிலே தவறில்லை. அந்த தவறான எண்ணத்தை உருவாக்குமானால் அதை எடுப்பதைப் பற்றியும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எடுப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்த மாமன்றத்திலே இருக்கிற பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்களும், பிரதிநிதிகளும் தங்களுடைய மனதிலே தோன்றிய கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக வெளியிட முனைந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்தாலும் அதை எப்படியாவது சரி செய்து அவர்கள் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்ற நிலையில், தமிழக அரசின் சார்பாகவும், ஆளுநர் சார்பாகவும் நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தப் பேரவையிலே ஆளுநர் உரையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் நான் முதலமைச்சர் என்ற பொறுப்பில் கலந்து கொண்டு மூன்று, நான்கு முறை பேசும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். இப்போதும் அந்த வாய்ப்பினைப் பெற்று, கருத்துக்களை வெளியிட நான் உங்களால் அனுமதிக்கப்பட்டிருக் கிறேன்.

[பிற்பகல் 1-10]

ஆளுநர் உரையில் என்னென்ன இல்லை என்பதைப் பற்றி இங்கே கருத்துக்களை வெளியிட்டவர்கள், அதிலே சொல்லியிருப்பதைப் பற்றி எந்த அளவிற்குத் திறனாய்வு செய்து விளக்கங்கள் கூற முனைந்தார்கள் என்பதையும் கவனித்ததில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இல்லை என்று சொன்னவர்கள் எந்தெந்த வகையில் கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதைப் பற்றி நான் என்ன எண்ணுகிறேன் என்று கருத்து வெளியிடுவது என்னுடைய மாபெரும் கடமையாகும்.



1981 பிப்ரவரி 4] [மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன்]

இந்த மாநிலத்திலே உள்ள மக்களில் வறுமைக் கோட்டுக்குக்
கீழேயுள்ள மக்கள், நடுத்தர மக்கள், ஓரளவு வசதியோடு வாழ்
கிற மக்கள், மிக வசதியோடு வாழ்கிற பணக்காரர்கள், முதலாளி
கள், ஏகபோக முதலாளிகள் ஆகியோரைப் பற்றி ஒட்டுமொத்த
மாகக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. என்னென்ன தேவை
என்பதைப் பற்றி 10—15 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒருவர்
என்னென்ன சொல்லியிருந்தாரோ. அல்லது 10 ஆண்டுகளுக்கு
முன்பு என்னென்ன சொல்லப்பட்டு இருந்தனவோ, சொல்லப்
பட்டு வந்தனவோ, அவைகளையே மேலும் தொடர்ந்து பேசு
கின்ற வகையில் கருத்துக்கள் இருந்தன என்பதையும் நான்
இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

எப்படிப்பட்ட வசதிகள் மக்களுக்கு இல்லை என்று எடுத்
துரைத்தவர்கள் தங்களுடைய அல்லது தான் பொறுப்பேற்றுக்
கொண்டு இருக்கிற தொகுதியின் மக்களின் கருத்தையும்,
அதோடு தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நலனைப் பற்றியும்,
அது மட்டுமல்லாமல் தங்களுடைய கட்சியின் கொள்கைக்கு
ஏற்ப என்னென்ன செய்து இருக்கிறார்கள், இல்லை என்பதைப்
பற்றியும் கொஞ்சம் விளக்கமாகவேகூட சிலர் பேசி இருக்கிறார்
கள் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அப்படி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு
கட்சிக்கும் அவர்களுக்கென்றே இருக்கும் கொள்கைகள், அதோடு
இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன் எந்த மக்களால் அவர்
கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த மக்களுக்காகத் தங்கள்
கட்சியின் சார்பாக, தங்களுடைய தனித்தன்மையோடும் கூடிய
நிலைமையில், என்னென்ன உறுதிமொழிகள் தந்து இருக்கி
றோமோ அவைகளை எப்படி நிறைவேற்றி இருக்கிறது அல்லது
நிறைவேற்றப்படாமல் விடப்பட்டு இருக்கிறது. எப்படி நிறை
வேற்றப்பட வேண்டும், என்கின்ற எண்ணத்தை உள்ளடக்கி
இங்கே கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

ஆனால் ஆளுநர் உரையின் மீது சொல்லப்பட்ட கருத்துக்கள்,
முதலாவதாக விவசாயிகளைப் பற்றியும், இப்போது பேசினார்
களே, இறுதியில் எரிசாராயத்தைப் பற்றியும், அதைப்போலவே,
ஆசிரியர்கள் பற்றியும், மாணவர்களைப் பற்றியும், கிராம
அதிகாரிகளைப் பற்றியும், கல்வி நிலையங்களைப் பற்றியும்
தொழிலாளர்களைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் அதே
நேரத்தில் நான் எப்படி எல்லாம் என் கொள்கைகளை மாற்றிக்
கொண்டு வருகிறேன். என்பதைப் பற்றியும், திரு. உமாநாத்
போன்றவர்கள் மிகக் காரமாகவும், வேகமாகவும் வழக்கம்போல்
சிரித்துக்கொண்டே பேசி, நம்மையும் சிரிக்கவைத்துப் பேசினார்
கள் என்பதை எல்லாம் நான் என் உள்ளத்தில் பதியவைத்துக்
கொண்டு இருக்கிறேன்.

[மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 4

ஒரு கட்சி தன்னைப் பொறுத்தவரையில் ஒரு கொள்கையை உருவாக்கிக் கொள்கிறது அல்லது ஒரு கொள்கைக்கு தன்னைச் சொந்தமாக்கிக் கொளகிறது. அந்த வகையில் தன்னுடைய கொளகைகளை நிறைவேறற மேவண்டும் என்றும், எந்த நோக்கங்களோடு மக்களிடையே சென்று அவைகளை யெல்லாம் சொல்லி, நீங்கள் ஒரு வாய்ப்புத்தாருங்கள்என்று கேட்டு அவர்கள் ஆதரவோடு இங்கே வருகிறோம். அந்த வகையில் நாங்கள் கொள்கையைச் சொல்லி, மக்கள் அதை நம்பி, மீண்டும் இந்த ஆட்சியில் நாங்கள் உட்கார அனுமதிக்கப்பட்டு இருக்கிறோம். அந்த வகையில் எங்களுடைய எண்ணத்தை இப்போது செய லாற்ற முயன்று கொண்டு இருக்கிறோம.

உலகத் தமிழ மாநாடு பற்றி இங்கேயுள்ள பல தலைவர்களும், உறுப்பினர்களும் பாராட்டவும் செய்தார்கள், சிலர் குறைகளை யும் சொன்னார்கள். தனி மனிதன் முழுமையாக, குறை அற்றவனாக இந்த உலகத்திலே யாருமே இல்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறைவு உடையவர்கள்தான் மனிதர்களாக இருக்கின்றோம். அது மட்டுமல்ல. நிறை தன்மை அதிகமாக இருந்தால், அதைச் செய்தோம் என்றால் இங்கே மாமன்றம் என்ற ஒன்று வேண் டுமா என்ற கேள்வியே எழுந்துவிடும். ஆக, தனி மனிதன் தவறு செய்யக்கூடும். நாங்கள் தவறு செய்வோம். தவறு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதைத் தட்டிக் கேட்கக் கூடிய வர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் எதிர்க்கட்சி களை மக்கள் தெரிந்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

உலகத் தமிழ் மாநாட்டைப் பொறுத்தவரையில் எந்த அள வுக்குப் பெருமையாக இந்தத் தமிழ் நாட்டிற்கு அமைந்தது என்று நான் சொல்ல விரும்பவில்லை. என்றாலும் சிறுமை ஏற்பட வில்லை என்று கொஞ்சம் துணிச்சலோடு சொல்வேன். யாரும் தலை குனிய வேண்டிய அளவுக்கு, தமிழ்மக்கள் வெட்கப்பட வேண்டிய அளவுக்கு எந்தக் காரியமும் அந்த உலகத் தமிழ் மாநாட்டிலே நடைபெறவில்லை ; நிகழவில்லை என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, அதோடு பலர் பாராட்டுகிறார்கள். இங்கே கலந்துகொண்டு பாராட்டியவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்ற பிறகு ஏதோ அறிக்கைகள் வெளியிடுகிறார்கள். யாரையும் நாங்கள் கவனிக்கவில்லை ; வசதி செய்து கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நேரிலே பார்க்கும் போது இப்படி ஒரு மாநாட்டை நாங்கள் பார்த்ததே இல்லை ; இப்படிப்பட்ட ஒரு மக்கள் வெள்ளத்தை நாங்கள் கண்டதே இல்லை என்று சொல்கிறார்கள். எந்தவிதமான குற்றமும்



1981 பிப்ரவரி 4] [ திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அங்கே நடைபெறாமல் யாருக்கும் தொல்லை ஏற்படாமல், பெண்
கள், தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள், இளம் பெண்கள்,
புதிதாகத் திருமணம் ஆனவர்கள், திருமணம் ஆகாதவர்கள் அத்
தனை பேர்களும் அங்கே போலீஸ் எவ்வளவு குறைந்த அளவில்
இருந்தாலும் எந்தத் தீமைக்கும் ஆளாகாமல், எந்தக் குற்றமும்
எந்தத் தாக்குதலும் நிகழாமல், எந்தக் குற்றத்திற்கும் ஆளாகா
மல் அவர்கள் மானத்தோடு அந்த விழாவிலே கலந்துகொண்டு
எந்தக் குற்றச்சாட்டுக்கும் இடமில்லாமல் அவர்கள் எல்லாம்
தங்கள் ஊருக்கு, இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள் என்
பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிடக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய நிலையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு
நடைபெற்றிருக்க, சரியான முறையில் செய்யவில்லை என்று
குற்றஞ்சாட்டி இங்கே எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார்.
பலர் இன்னும் சிறப்பாகச் செய்வதற்குரிய நிலைமைகளைச் செய்
திருக்க முடியாதா என்ற அளவுக்குக கருத்துக்களை வெளியிட்
டார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு
வேளை எதிர்க்கட்சித் தலைவரவர்களைப் போன்ற அனுபவ
மிக்கவர்கள் எங்களோடு இருந்து ஒத்துழைத்து, உதவி செய்தி
ருந்தால் இந்தக் குறைகள் எல்லாம்கூட வராமல் இருந்திருக்
குமோ என்று நினைக்கிறேன். தட்டிக் கேட்பதற்கு ஆள்
இல்லை என்றல்ல. வந்தார்கள்; கலந்து கொண்டார்கள். எந்த
அளவுக்கு நாங்கள் அதை நிறைவேற்ற முடியுமோ அந்த அள
வுக்கு அதை நிறைவேற்ற முனைந்தோம். எங்கள் நோக்கத்
தில் களங்கம் இல்லை என்பதை ஒவ்வொருவரும் உணர்வார்
கள் என்று நம்புகிறேன்.

முழு உருவில் சிலை வைக்கவில்லை; பாதிதான் வைத்தி
ருக்கிறார்கள். ஏதோ பெயர் பலகையில் மாற்றிப் எழுதிவிட்
டார்கள் என்றெல்லாம் கூறினார்கள். அவ்வளவு பெரிய நிகழ்ச்
சியில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான் அதற்கு ஆதாரமாக்
கிடைத்திருக்கிறது என்று எண்ணும்போது உண்மையிலேயே நான்
பெருமைப்படுகிறேன். எத்தனையோ தவறு நேர்ந்திருக்க
லாம். ஆனால் வீரமாமுனிவர் என்னும் அந்தப் பெயரைக்
கூடச் சரியாக எழுதி வைக்கவில்லை என்றும் சொன்னார்கள்.
வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்ன நினைப்பார்கள் என்
பதை எண்ணிப் பார்க்க நாங்கள் தயங்கவில்லை. கவனக்
குறைவுதான் காரணம். அந்தக் கவனக் குறைவு எங்கே ஏற்
பட்டிருந்தாலும் அது பாராட்டக்கூடியது அல்ல என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

ஆனால் அதிகாரிகள் அங்கே தங்களுடைய பணிகளைச் செய்த போது, எவ்வளவு அக்கறையோடு, எவ்வளவு பொறுப்பு உணர் வோடு, யாருடைய மனத்திலும் எந்தவிதமான குறையும் ஏற் படாமல் அதை நிறைவேற்ற தங்களுடைய சொந்த வீட்டிலே நடக்கின்ற தங்கள் பெண் குழந்தைக்கு காலாகாலமாகக் காத் திருந்து, திருமணம் செய்ய முடியாமல் இருந்த நேரத்தில் நல்ல கணவன் வந்து சேர்கிறான் என்ற மகிழ்ச்சியில் எப்படியோ இரவு பகலாகப் பாடுபட்டு, அந்தத் திருமணத்தை மிகப் பெருமையாக மதிப்போடு நடத்த வேண்டுமென்று ஒரு தந்தை விரும்புவது போல அந்த அலுவலர்கள், சாதாரணப் பணியாளர்கள், கடை நிலை ஊழியர்கள் என்று சொல்லக்கூடிய அளவிலுள்ள ஊழி யர்கள் அத்தனை பேர்களும் ஒன்றுசேர்ந்து எவ்வளவு செம்மை யாக அந்தப் பணியைச் செய்தார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1–20]

அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தின் சார்பாகவும் அரசின் சார்பாகவும் நன்றி கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். காவல் துறையைச் சேர்ந்த வர்கள் கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேர்கள்கூட அங்கே இல்லை. அங்கே வந்தவர்களுக்குத்தான் இது தெரியும். 20 இலட்சம் பேர்களுக்கு மேல் கூடி இருக்கக்கூடிய அந்த இடத்தில் நமக் கிருக்கின்ற காவல் துறையினரை வைத்துக்கொண்டு அப்படிப் பட்ட ஒரு மாநாட்டை நடத்த முடியுமா என்ற கேள்வி எழுந் தால் வன்முறையில் நம்பிக்கை வைத்து இந்த நாட்டையே ஒரு சீரான பாதையிலிருந்து மாற்றி வேறு பாதைக்கு இழுத்துச் செல் லக்கூடியவர்கள் ஆங்காங்கே இருந்தாலும்கூட எந்தவிதமான தவறுகளும் நேராத வண்ணம் காவல் துறையினரும் சொந்த உணர்வோடும், பாசத்தோடும் நடந்து அதேபோல் கட்டுப்பாட் டோடும், அக்கறையோடும், மிகவும் எச்சரிக்கையுடனும் செயல் பட்டார்கள் என்பதை இங்கே நான் சொல்லிக் கொண்டு அவர் களுக்கும் இந்த மாமன்றத்தின் சார்பாக நம்முடைய நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சாரணர் இயக்கம் போன்ற பல்வேறு இயக் கங்களைச் சேர்ந்த இளைஞர்களும், பள்ளி, கல்லூரி போன்ற வற்றில் படிக்கின்ற மாணவர்களும் அங்கே வலிய வந்து " இந்த மாநாட்டுக்கு நாங்கள் உழைக்க வேண்டும், வேடிக்கை பார்ப் பதற்காக வரவில்லை, இதிலே கட்டுப்பாட்டைக் காக்கவேண்டும், இது எங்களுடைய கடமை " என்ற வகையில் அவர்கள் எல் லாம் சேர்ந்து ஜாதி மத பேதங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, எந்தக் கட்சி என்ற உணர்வுகளை எல்லாம் கூ· ' தூக்கி எறிந்து





[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அங்கே பணி
விட்டு ஒரே மனத்தினராக தமிழக மக்களுக்காக அங்கே பணி
யாற்றி இந்த 5-வது உலகத் தமிழ் மாநாட்டை எல்லோரும்
பாராட்டுகின்ற அளவுக்கு உதவிசெய்தார்கள் என்பதை எண்ணும்
போது அப்படிப்பட்ட அனைவருக்கும், மின் துறையைச்
சார்ந்தவர்களுக்கும், மாநகராட்சியைச் சேர்ந்த அதிகாரிகள் மற்
றும் அத்தனை பேருக்கும் இந்த மாமன்றத்தின் சார்பாக நம்
அனைவருடைய நன்றியினையும் பாராட்டுரையையும் இங்கே
தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உலகத் தமிழ் மாநாட்
டில் அதிகாரிகளினுடைய பரிந்துரையின் பேரில் நாங்கள்
விரும்பியதைச் சொல்லி இப்படி இப்படி இருக்க வேண்டும் என்
பதை எல்லாம் சொல்லி அதை நிறைவேற்றுவதற்காகச் செல
வழித்த பணத்தைப் பற்றி வெளியே எழுதுகின்ற போது பணம்
விரயமாக்கப்பட்டது என்றும், சரியாகச் செலவழிக்கப்படவில்லை
என்றும் எழுதி அதற்கும் ஒரு ஊழல் பட்டத்தை அடைமொழி
யாகச் சேர்த்துச் சொல்லி இருக்கிறார்கள். இங்கே சொல்லப்
படுவது ஒரு பங்கு என்றால் வெளியே இலட்சம் பங்கு பேசுகி
றார்கள், எழுதுகிறார்கள் என்பதை நான் இந்த அவையின்
கவனத்திற்குக் கொண்டுவரும்போது ஒருசில குறிப்புகளை
அதாவது என்னென்ன நடந்தது என்பதைச் சொல்ல வேண்டி
யது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அங்கே செல
வழித்த பணம் எவ்வளவு என்பதை இறுதியில் சொல்கிறேன்.
என்னென்ன, எதற்காகச் செலவழித்தோம் என்பதை மட்டும்
சொல்லி என்னுடைய பணியைத் தொடங்குகிறேன்.

240 இலட்சம் ரூபாய்.
சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு
கட்டணக்கழிப்பிடங்கள் மற்றும் சாதாரணக்கழிப்பிடங்கள் கட்டு
வதற்கு 94 இலட்சம் ரூபாய். தெரு விளக்குகள் அமைத்தலுக்கு
35 இலட்சத்து 25 ஆயிரம். மாநகராட்சியின் சுற்றுலா மாளி
கைக் கட்டிடத்தில் கூடுதல் அறைகள் கட்டுவதற்கு 10.70 இலட்
சம் ரூபாய். மரம் நடும் திட்டத்திற்கு 2 இலட்சம் ரூபாய்.
வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டத்திற்கு 10 இலட்சம்
ரூபாய். தமுக்கம் திடலைச் சீர்படுத்தி நுழைவாயில் அமைத்
தலுக்கு 3.40 இலட்சம் ரூபாய். நகர எல்லையில் நுழை
வாயில் அமைத்தலுக்கு 3.80 இலட்சம் ரூபாய். குடிசை வாழ்
பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 3·17 இலட்சம் ரூபாய். குடி
நீர்த் திட்டத்திற்கு 53.65 இலட்சம் ரூபாய். இவையெல்லாம்
மதுரையிலே நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்
காகவும், அங்கே வருகின்ற மக்களுக்காவும் ஏற்படுத்தப்பட்டி
ருக்கின்ற நிரந்தரமான திட்டங்கள்.

இதோடு சுற்றுலா மாளிகையில் கூடுதல் அறைகள் கட்டு
வதற்காக 1.50 இலட்சம் ரூபாய், குடிசை மாற்று வாரியத்
திட்டத்திற்கு அதாவது அவர்கள் மூலமாகச் செய்யப்பட்டதற்கு
105.13 இலட்ச ரூபாய். மாரியம்மன் தெப்பக்குளம் சீரமைப்
புத் திட்டத்திற்கு 6.31 இலட்சம் ரூபாய். தமிழ்நாடு சுற்றுலா

வாரியத்தில் கூடுதல் தங்கும் விடுதி கட்டுவதற்கு 40 இலட்சம்
ரூபாய். திருமலை நாயக்கர் மஹாலில் ஒலி, ஒளிக் காட்சி
அமைப்பதற்காக 30.77 இலட்சம் ரூபாய். மதுரை காம
ராஜ் பல்கலைக் கழகத்திற்கு நிரந்தரமாகப் பயன்படுகின்ற வகை
யில் பேராசிரியர் விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு 9 இலட்சம்
ரூபாய். விருந்தினர் விடுதியில் தேவையான கட்டில், மெத்தை,
நாற்காலி ஆகியவை வாங்குவதற்காக 6 இலட்சம் ரூபாய். பல்கலை
கழகத்திலுள்ள சாலைகளுக்குத் தார் தளமிடுதலுக்கு 1.25 இலட்சம்
ரூபாய். ஆழ் குழாய்களுக்கு என்று செலவழிக்கப்பட்டது 80,000.
மொத்தம் நிரந்தரப்பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை
9,66,50,000 (ஒன்பது கோடியே அறுபத்தாறு லட்சத்து ஐம்ப
தாயிரம்) என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
பல்கலைக் கழக விளாகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிக் கருத்
தரங்கத்திற்காக 25.50 லட்சம், பொதுக் கருத்தரங்குகளுக்காக
10.0 லட்சம், ஊர்வலத்திற்காக 12·60 லட்சம், கண்காட்சிக்காக
49 லட்சம், கலை நிகழ்ச்சிகளுக்காக 4.30 லட்சம், பண்பாடு
சுற்றுலா 6 லட்சம், மலர் வெளியீட்டிற்காக 6.50 லட்சம்,
தபால் தந்தி செலவினங்களுக்காக 10 லட்சம், விளம்பரங்
களுக்காக 2.50 லட்சம், திரைப்படம் எடுத்ததில் 3 லட்சம்
செலவு செய்யப்பட்டிருக்கிறது. திரைப்படத்திற்காக 15 லட்சம்
செலவழித்து விட்டோம், 25 லட்சம் செலவழித்து விட்டோம்
என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். எனக்கு வந்திருக்கிற
குறிப்பின்படி இதற்காக 3 லட்சம் தான் செலவழிக்கப்பட்ட
தாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து சாலைகள் அமைத்தல் செலவுகளுக்காக 4 லட்சம்,
நகரப் பொது சுகாதாரத்திற்காக—இது நிரந்தரப்பணி—இதற்காக
24 லட்சத்து 29 ஆயிரம். ஆக நிரந்தரப்பணிகளுக்காக, மதுரை
மாநகராட்சி மூலமாகவும், பல்கலைக் கழகத்தின் மூலமாகவும்
மொத்தம் 9,66,50,000. அதேபோல் மாநாட்டில் பல்வேறு
நிகழ்ச்சிகளுக்காக 1,58,19,000 ஆக மொத்தம் 11,24,69,000
ரூபாய் மாநாட்டுப் பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்டு, கணக்கு
கள் முடிக்கப்பட்டு தகுந்த தணிக்கைக்கும் உள்ளாக்கப்படும்.
அதை நான் இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அதற்கு
முக்கிய காரணம் ஊழல் நடந்திருக்கும் என்ற குற்றச்சாட்டு
சொல்லப்பட்டுக் கொண்டேயிருக்கிறது—அதுதான் காரணம்.
அதைத் தணிக்கை செய்த பிறகு மன்றத்தில் வைக்கப்பட்ட பின்
ஊழல் இருக்கிறது என்று சொல்லப்படுமானால், விசாரணை
நடத்தப்பட வேண்டும் என்று சொன்னால், இந்த அரசு நிச்சய
மாக அதைஏற்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்
லிக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
மடியில் கனம் இருந்தால்தான் வழியில் பயம் என்று பழமையான





பழமொழி ஒன்று சொல்வார்கள். எங்கள் மடியில் கனம்
இல்லை. சிலர் பெட்டியில் வைத்திருக்கலாம், சிங்கப்பூரிலே
வைத்திருக்கலாம், மலேசியாவில் வைத்திருக்கலாம், எங்கு
வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். (மேசையைத் தட்டும்
ஒலி) ஆனால் எங்கள் மடி சிறியது. கொடுக்கப்படுகிற சம்ப
ளத்தை வாங்கி அதில் வைத்துக் கொண்டிருக்கிறோம். எங்கள்
பணியினையும் முடிந்த அளவு செய்கிறோம்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல
அப்படிப்பட்டவர்களை வேண்டுமானால் எல்லோரும் சேர்ந்து
கண்டு பிடித்து எங்கே வைத்திருக்கிறார்கள் என்று கேட்டு
அதையும் நமக்கு—அரசுக்குச் சொந்தமாக்கிக் கொண்டால்,
நிச்சயமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே
செய்ய வேண்டும் என்று கேட்கிற பணிகளைச் செய்து முடிக்கப்
பயன் உள்ளதாக இருக்கும். ஆனால் எங்களைப் பொறுத்த வரை
யில் நாங்கள் உண்மையைச் சொல்கிறோம். அப்படி இல்லை
என்றால் எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்ற வகையில்
அச்சமே இல்லாமல் எங்களால் இருக்க முடியாது. எனவே,
எங்களுக்கு அச்சமே இல்லை. அடுத்து விவசாயிகளைப் பற்றி
நான் ஒன்று கூற விரும்புகிறேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதி
யோடு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கும் வரை அவையின்
நேரத்தை நீட்டிக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு விவரங்களைப்
பற்றி தனிப்பட்ட முறையில் இந்த மன்றத்தில் இருக்கிற ஒவ்
வொருவரும் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அத்
துணை பேருக்கும் நான் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.
சென்ற முறை இதேபோன்ற பிரச்சினை வந்தபோது 3/4 மணி
நேரம் பேசி முடித்து வைத்துச் சென்றேன். அது போன்று
இப்பொழுது அல்ல. நேரம் நிறையத் தேவைப்படுகிறது.

[பிற்பகல் 1-30]

ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, இவைகளையெல்
லாம் நான் நிச்சயமாக இந்த முறை வெளியிடவேண்டும். எதி
சாராயம் பற்றி என்னைப்பற்றியும் நேரடியாக எதிர்க்கட்சித்
தலைவர் அந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.
ஆகவே, யார் என்ன செய்தார்கள், முன்னால் இருந்த திராவிட
முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது, நாங்கள் என்ன செய்
தோம், என்ன உத்திரவிட்டோம், எதனால் அதிகாரிகள் பணி
மாற்றப்பட்டது, எந்தெந்த வகையில் முன்னால் இருந்தவர்கள்
எதை எதைச் செய்தார்கள், எப்படிச் செய்து மக்களுக்கு

நன்மை செய்தார்கள், நாங்கள் எப்படிச் செய்கிறோம் என்பதை யெல்லாம் புள்ளிவிவரங்களோடு நான் சொல்ல வேண்டும். அந்தக் கோப்புக்களை நான் படித்துக் காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். (குறுக்கீடு).

**திரு. என். சங்கரய்யா :** விவாதத்தை நாளைக் காலை தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஒரே ஒரு வேண்டுகோள். எரிசாராயம் போன்றவற்றைப் பற்றி உண்மைக்கு மாறாக இங்கே செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டும். நாளைய தினம் நான் பேசி முடிக்கிறவரை எனக்கு வாய்ப்புத் தரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (5-2-1981) 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

186. அலுவலகப் பணியாளர் தொகுதியிலுள்ள கிராம நிர்வாக அலுவலர் பதவிகளை அரசுத் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது தொடர்பாக தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் [பணியாளரமைப்பு-M) 15—12—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1224 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

9

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### வியாழக் கிழமை, 1981 பிப்ரவரி 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

தலைவரைச் சார்ந்தவர்கள் விருப்பத்தோடு அவர் கேட்கக் கூடிய பயனுள்ள செய்திகளை எடுத்துரைக்க வேண்டும். பயன் அற்ற செய்திகளை தலைவரே சொல்லும்படி கேட்டாலும் சொல்லாதிருத்தலே சிறப்பாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### வலையர் புனரமைப்புத் திட்டம்.

*வினா எண் 181 —திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—கள்ளர் புனரமைப்பு போன்று வலையர் புனரமைப்பு

(அ) கள்ளர் புனரமைப்பு சட்டநாதன் குழுவின் பரிந்துரையை அமைக்க வேண்டும் என்ற சட்டநாதன் குழுவின் பரிந்துரையை அரசு நிறைவேற்ற முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) இந்தப் பரிந்துரையை அரசு ஏற்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** சட்டநாதன் குழுவின் பரிந்துரையை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்ததா ? நலிந்து கிடக்கும் இந்தச் சமுதாயத்தினருக்காக கள்ளர் ரெக்ளமேஷன் போல் கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார் போட்டு அரசு முன்னுரிமை கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த வலையர் என்ற சமூகத்தினருக்கு மதுரை மாவட்ட கள்ளர் போன்று. திருநெல்வேலி மாவட்ட மறவர், இராமநாதபுரம் மாவட்ட மறவர் போன்று தனித் திட்டம்

[1981 பிப்ரவரி 5]

செயல்படுத்த வேண்டுமென்ற பரிந்துரையை சட்டநாதன் குழு வினர் கூறியிருந்தார்கள், அது 1973 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப் பட்டது ; 1977 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டது ; 979 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் இதற்கென்று தனியாக ஒரு அமைப்பு தேவையில்லை என்ற முடிவுக்கு அரசு வந்தது. மத்திய அரசு நிதி ஒதுக்கிடும் இதற்கு தரப்படவில்லை. பிற் பட்டோர் நலக் குழுவின் பரிந்துரையை ஏற்க இயலாத நிலைமை யில் அரசு இருக்கிறது. ஆனாலும்கூட மிகவும் பிற்பட்டோருக்கு என்னென்ன சலுகைகள் செய்யப்படுகின்றனவோ அந்தச் சலுகை கள் எல்லாம் தரப்படுகின்றன, மதுரை மாவட்ட கள்ளர்களுக்கு தனி அமைப்பு தொடர்ந்து இருந்து வருகிறது. அதைப் போல் மற்றவர்களுக்குச் செய்ய இயலாத நிலையிலேயே வலையர் களுக்கு தனி அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் குற்ற மரபினர் பட்டியல்களில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப் படும் சலுகைகள் இவர்களுக்கு தகுதி உடையவர்களுக்கு தரப்பட்டு வருகிறது. குடியிருப்பு வீடு கட்ட அவர் களுக்கு 3,225 ரூபாய் மானியமாகத் தரப்படுகிறது. 1,075 ரூபாய் பொருளாகவும், உழைப்பாகவும், பணமாகவும் அவர்கள் தரவேண்டும். அதே போன்று வலையர்களைப் பொறுத்தவரை யிலும் 3,225 ரூபாய் வழங்கலாம் என்ற சலுகை தரப்படுகிறது. பாசனக் கிணறு வெட்ட அவர்களுக்கு 2,500 ரூபாய் மானியம் வழங்கலாம் என்று இருக்கிறது. அந்தச் சலுகை இவர்களுக்கும் வழங்கலாம் என்ற முறையில் வழங்கப்படுகிறது. தனியாக அந்தச் சமூகத்தினரைக் கருதி சீரமைப்புத் திட்டம் இயற்றப்பெற வேண்டுமென்பதை மத்திய அரசு விரும்பவில்லை. ஆகவே, இது பற்றி மூன்று தடவை பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் ; இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் அமைச்சர் அவர்கள் கூடப் பதில் சொன்னார்கள். இந்த நலிந்து கிடக்கும் சமுதாயத்தினரில் 18 பிரிவுகள் இருக் கின்றன. எல்லோரும் ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் இவர்களில் 95 சதவிகிதத்தினருக்கு பிற்பட்ட சமுதாயத்தினருக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கிடைக்கவில்லை. ஐந்து சதவிகிதத்தினருக்குத்தான் கிடைக் கிறது. இந்த 18 பிரிவினருக்கும் சலுகை கிடைக்கும் வகையில் மறுபடியும் கள்ளர் ரெக்ளமேஷன் போன்று இவர்களுக்கும் தனியாகச் செய்ய அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனி சீர மைப்புத் திட்டம் என்ற பெயரில் வைக்கின்ற நிலைமை சரியாக வராது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற பல்வேறு பிரிவினருக்கும் சலுகைகள் பெற வேண்டுமென்ற முறையில் நலிந்திருப்பார்களானால் அவ்வாறு தனிச் சலுகை அளிக்க வேண்டுமென்ற முறையில் கோரிக்கை அளிக்கப்படுமானால், அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.



[1981 பிப்ரவரி 5]

திரு. எஸ். ஆண்டித் தேவர் : கள்ளர் சீரமைப்பு என்பது குற்றப்பரம்பரையில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்காக கொடுக் கப்படுவதாகச் சொன்னார்கள். அதைப் போன்று இராமநாத புரம் திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றப்பரம்பரை பட்டி யலிலிருந்து நீக்கப்பட்ட மறவர்களுக்கு சீரமைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அது உடனடியாக நிறைவேற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். சட்டநாதன் குழுவினால் அவ்வளவு பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. அரசு 1973 இல் ஆராய்ந்தது, 1977 இல் ஆராய்ந்தது, 1979 இல் ஆராய்ந்தது. அதிலே ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனி யாக வைப்பது சாத்தியமல்ல என்ற முடிவுக்கு வந்தது மட்டு மல்ல, தனித்தனியாக வைக்கிற கருத்தை மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை, அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. ஆகவே அவரவர்களின் நிலைமைகளைப் பற்றி அரசாங்கத்திற்கு எழுதுவார்களானால் சலுகைகளைத் தருவதற்கு மட்டும் வைக்கலாம், தனியாக ஒவ்வொரு பிரிவினருக்கும் சீரமைப்புத் திட்டம் என்று வைப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : அவைத் தலைவர் அவர் களே, இங்கே குறிப்பிட்டதைப்போல் கள்ளர் ரெக்ளமேஷன் என்ற அடிப்படையிலே மதுரை மாவட்டத்திலே வாழ்கிற கள்ளர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகளைப்போல தி.மு.க. ஆட்சியில் முகவை மாவட்டத்திலே உள்ள மறவர் சமுதாயத் திற்கு சலுகைகள் செய்யப்பட வேண்டுமென்ற முறையிலே சட்டம் செய்யப்பட்டதாகக் கேள்விப்படுகிறோம். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வில்லை என்று சொல்கிறார்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருக்கக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகப் போட வேண்டும்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : பின்தங்கிய சமுதாயத் தினருக்கு அதேமாதிரி திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குற்றப் பரம்பரையினர் என்ற நிலைமை 1952 ஆவது ஆண்டு நீக்கப் பட்டது. அதிலே பெரும்பாலோர் தேவர் வகுப்பினர்கள் 21 வகுப்பினர்கள் நீக்கப்பட்டனர். பெரும்பான்மையாகள் இடம் பெற்றோர் கள்ளர், மறவர் ஆவார்கள். அந்தப் பட்டியலில் உள்ள பிற வகுப்பினர் தஞ்சாவூர், திருச்சி மாவட்டத்தில் கள்ள

பந்தமாக உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இராமேஸ்வரம் பகுதியில் உள்ள மீன் துறையினிடத்தில், மீனவர்களைக் கண்டுபிடிக்கும் அதிக சக்தி வாய்ந்த படகுகளைக் கொடுக்க அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வி இயந்திரம் பொருத்திய விசைப்படகு ஒன்றை ஏற்படுத்தித்தரும் உத்தேசம் உண்டா என்பது. எனவே, அதுபற்றிய குறிப்புகள்தான் என்னிடத்தில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்ற விவரங்கள் பற்றி தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களைத் தனியாகத் தருகிறேன்.

**திரு. த. இராமசாமி :** தலைவரவர்களே, கடந்த 16—12—1980 அன்று இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மூன்று விசைப் படகுகள் மீன்பிடிக்கச் சென்றது. அந்த மூன்று விசைப் படகுகளும் இதுநாள் வரையில் திரும்பி வரவில்லை. அதில் சென்ற மீனவத் தொழிலாளர்களின் நிலை என்ன என்பது இது நாள் வரையில் தெரியாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட தகவல்கள் அமைச்சருக்கு வந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்து அந்த விவரங்கள் இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் அதுபற்றிய கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதால் அப்பொழுது அதுபற்றிய விவரங்கள் அளிக்கப்படும்.

**திரு. ஏ. சாகுல் ஹமீது :** தலைவரவர்களே, அடிக்கடி மீனவர்கள் காணாமல்போகும் நிலை தமிழகத்தில் இருப்பதால் அவர்களைக் கண்டுபிடிக்க அரசு ஹெலிகாப்டர் வாங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர் மூலம் மேலேயிருந்து கீழே எங்கேயிருக்கிறார்கள் என்றுதான் கண்டுபிடிக்க முடியுமே தவிர மீட்பதற்கு பயன்படாது ஆனால், இப்பொழுது நாம் உருவாக்குகின்ற இரண்டு படகுகள் மீனவர்களோ அல்லது காணாமல் போன படகுகளையும், மீனவர்களையும் தேடுவதற்குப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், வேறு பல வகைகளுக்கும் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தினுடைய அடிப்படையில்தான் பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இரண்டு படகுகள் கட்டப்படுகின்றன. அதிலே இந்திய-இலங்கை கடல் எல்லை ஒப்பந்தத்தை மீனவர்கள் மீறாமல் இருக்க இந்திய கடல் எல்லைப் பகுதிகளில் கண்காணித்து ரோந்து புரிவதற்கு இந்தப் படகுகள் பயன்படுத்தப்படும்.





தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் கட்டுமர மீனவர்களுக்கும் விசைப் படகு மீனவர்களுக்கும் மீன் பிடிப்பதில் தகராறு ஏற்படாத வகையில் ரோந்து புரிவதற்கும் இது பயன்படுத்தப்படும்.

அண்டை மாநிலங்களில் உள்ள கடலில் மீன் பிடிப்புத் தொழில் செய்யும்போது துறையினரால் வழங்கப்பட்ட விசைப் படகுகள் பறிமுதல் செய்யும்பொழுது தப்பித்து ஓடுவதைக் கண்டுபிடிப்பதற்கும் இது பயன்படுத்தப்படும்.

தவணை முறையில் வாங்கப்பட்ட விசைப்படகுகளுக்கான தவணை செலுத்தாமல் அண்டை மாநிலங்களில் சென்று தங்கி தொழில்படும் படகுகளைக் கண்டுபிடிப்பதற்கும் இவைகள் பயன்படுத்தப்படும்.

மற்றக் காலங்களில் நாட்டுப் படகுகளையும், கட்டுமரங்களையும் கடலில் ஆழமான பகுதியிலுள்ள மீன் இடத்திற்கு இழுத்துச் சென்று மீன் பிடிப்பதற்கும் அவைகள் மீன் பிடித்த பின் கரைக்குக் கொண்டு வருவதற்கும் பயன்படுத்தப்படும்.

இப்படி பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுதான் இந்த இரண்டு படகுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவை கட்டி முடிந்ததற்குப் பிறகு இந்தப் பணிகளுக்கெல்லாம் அவை பயன்படுத்தப்படும்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இராமேஸ்வரம் கடற்பகுதியிலே சிலோனுக்கும் நமது நாட்டிற்கும் உள்ள கடல் பகுதியினுடைய எல்லை சரியாக இல்லாத காரணத்தால், மீனவர்களுக்குத் தெரியாத காரணத்தால், சிலோனுடைய கப்பற் படையினர் வந்து நமது மீனவர்களை அடித்து, வலையைப் பறித்துச் செல்வது அரசுக்குத் தெரியுமா? அந்த எல்லைக் கோட்டை நிர்ணயிக்கின்ற அளவுக்கு மிதப்புகள் ஏதாவது விட்டு, நமது கடலுடைய எல்லையை மீனவர்களுக்கு அறிவிக்கின்ற அளவுக்கு இந்த அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்களை நமது மீனளத் துறையினரும், முகவை மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறையினரும் அவ்வப்போது மத்திய அரசுக்குத் தெரிவித்துக் கொண்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய கடற்படையைச் சேர்ந்த பிரிவுதான் இப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்றன. இப்பொழுது தற்காலிகமாக ஏற்பாடுகள் செய்வதை நாம் நிரந்தரமாக்கவே, இந்திய கப்பற் படையினுடைய பிரிவு ரோந்து செய்கின்ற தன்மைகள் வரவேண்டுமென்றும் அவர்களுடைய எல்லையைக் குறிப்பிட்டுக் காட்டுகிற அளவுக்கு

இருந்தால்தான் அவர்கள் அந்த எல்லைக்கு அப்பால் இருப்பார்கள், இங்கேயிருப்பவர்கள் அந்த எல்லைக்கு அப்பால் போகாமல் இருப்பார்கள் என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்காக மத்திய அரசே ஒரு சட்டம் கொண்டு வருவதாகவும், அதை உருவாக்கிக் கொண்டிருப்பதாகவும், விரைவிலே அது இயற்றப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. ஆனால் நிலையாக மத்திய அரசாங்கத்திலுடைய கடற்படையைச் சேர்ந்த ரோந்து சுற்றுகின்ற கப்பல்கள் அந்தப் பகுதிகளில் என்றென்றும் இருக்க வேண்டும், அடிக்கடி தகராறுகள் அந்தப் பகுதியில்தான் வருகின்றன என்று இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்து இருக்கிறது. மத்திய அரசு அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

## இராமேஸ்வரம் பகுதியில் மீனவர்களுக்கு குடியிருப்புகள்.

* வினா எண் 183—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் தீவுப் பகுதியாகிய பாம்பன், தங்கச்சி மடம், காரையூர், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் மீனவர்களுக்கு இந்த ஆண்டில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) அப்படியானால் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் தீவுப் பகுதியாகிய பாம்பன், தங்கச்சிமடம், காரையூர், இராமேஸ்வரம் போன்ற இடங்களிலே பல ஆயிரக் கணக்கான மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மேம்படாத நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுடைய மேம்பாட்டிற்காக வேண்டித்தான் இங்கே இருக்கிறோம் என்று பலமுறை நம்முடைய கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது திட்டத்திலே இல்லையென்று சொல்லப்படுகிறது. அதை மீண்டும் பரிசீலனை செய்து, வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊர்களைப் பொறுத்த வரை இல்லை என்றேன். ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தைப்



பொறுத்தவரையிலே 1168 வீடுகள் கட்டுவதற்கு இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன.

தேவிப்பட்டணத்திலே 104 வீடுகளும், ஏர்வாடியிலே 60 வீடுகளும், நம்புதாளையில் 150 வீடுகளும், தொண்டியில் 150 வீடுகளும், கீழமுண்டலம் என்ற இடத்தில் 50 வீடுகளும், முடிவீரப்பட்டணத்தில் 34 வீடுகளும், காசிப்பட்டணத்தில் 50 வீடுகளும், திருப்பாலைக்குடியில் 250 வீடுகளும், முள்ளிமுனையில் 50 வீடுகளும், கண்கொள்ளாப்பட்டணத்தில் 50 வீடுகளும், பாம்பனில் 100 வீடுகளும், வாலிநோக்கத்தில் 120 வீடுகளும், ஆக 1.168 வீடுகள் கட்டுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 400 வீடுகள் கட்டப்பட்டு விட்டன. 768 வீடுகள் கட்டுமான நிலையில் பல்வேறு நிலையில் இருக்கின்றன. அவைகள் எல்லாம் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

திரு செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பாலைக்குடி, கண்கொள்ளாப்பட்டணம், தேவிப்பட்டணம் போன்ற இடங்களிலே வீடுகள் கட்டப்படுகின்றன என்று சொல்கிறார்கள். எந்த அளவிற்கு திட்டமிடப்பட்டதோ, அந்த அளவு திட்டமிடப்பட்டு வீடுகளைக் கட்டாமல் 40 வீடுகள், 20 வீடுகள்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. வேகமாக நடவடிக்கை எடுத்து, ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வேகமாக அரசால் செய்யப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி 400 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன, 640 வீடுகள் முடிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. பல்வேறு நிலைகளில் கூரை வேயப்பட்ட நிலையிலும், உத்திரம் வரை வந்த நிலையிலும், ஜன்னல் வரை வந்த நிலையிலும், தரை வரை வந்த நிலையிலும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று விரைவிலே முடிக்க வேண்டுமென்றுதான் ஆணையிட்டிருக்கிறோம். அடுத்தடுத்து நாம் ஆண்டுக்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதன் காரணமாக, ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட வீடுகளைக் கட்டி முடிப்பதில் காலம் தாழ்த்தாத அளவுக்குச் செய்ய வேண்டுமென்று நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். விரைவிலே முடிப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, மீனவர்கள் அதிகமாக வாழ்கின்ற இராமேஸ்வரம், தங்கச்சிமடம், காரையூர் போன்ற பகுதிகளில் வருகின்ற ஆண்டுகளிலாவது அந்தப் பகுதிகளில் அதிகமான வீடுகளை மீனவர்களுக்குக் கட்டித்தர உத்தேசம் உண்டா என்று அறிய விருப்புகிறேன்.

[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டுக்கான திட்டங்களை நாம் தீட்டி வருகின்றோம். அடுத்த ஆண்டுத் திட்டத்திலே அந்தப் பகுதிகள் அடங்கியிருக்கின்றனவா, இல்லையா என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. அடுத்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு மீனளத் துறை எந்த எந்த இடங்களை சிபாரிசு செய்கிறார்கள், எவை எவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

சேரன்மாதேவி துணைக் கருவூலம்.

* வினா எண் 184—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற க. சொர்ணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேரன்மாதேவியில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கருவூலத்திற்கு எந்தெந்த கிராமங்களை அரசு ஒதுக்கியுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சேரன்மாதேவி வட்டத்தில் பாப்பாக்குடி, முக்கூடல், சேரன்மாதேவி மற்றும் மேலச்செவல் என்ற நான்கு உள்வட்டத்திலுள்ள கிராமங்கள் அடங்கும். சேரன்மாதேவி துணைக் கருவூலம் மேற்கூறிய நான்கு உள்வட்டத்திலுள்ள கிராமங்களில் வாழும் பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்களின் தேவைகளைக் கவனித்து வருகிறது.

[முற்பகல் 9–20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சேரன்மாதேவி கருவூலத்திற்கு அனுமதிக்கப்பட்ட அந்த கிராமங்கள், பிர்காக்கள் ஏற்கனவே அம்பாசமுத்திரத்தில் இருந்தது. பக்கத்திலே இருந்ததால் அந்தப் பகுதி மக்களுக்கு நலமாக இருந்தது, அதைப் பிரித்து சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு நன்றி. ஆனால் அம்பாசமுத்திரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற சாட்டுப்பத்து, பனஞ்சாடி, பள்ளாக்கால், பொதுக்குடி போன்ற கிராமங்கள் அம்பாசமுத்திரத்திற்கு அப்பால் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அம்பாசமுத்திரத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்லிடைக்குறிச்சி மற்றும் சில கிராமங்கள் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் 20 கி. மீட்டர் தூரம் கடந்து செல்லும் நிலை இருக்கிறது. இந்த நிலை தவறாக ஏற்பட்டிருக்கிறதல்லவா ? அப்படியானால் அந்தத் தவறை நிவர்த்தி



1981 பிப்ரவரி 5]

செய்து அம்பாசமுத்திரத்தில் உள்ள கருவூலத்துடன் அதை இணைக்க ஏற்பாடு செய்வதோடு, அந்தத் தவறை திருத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் துணைக் கருவூலத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய நிலை வந்தது. காரணம் அம்பாசமுத்திரத்தில் வேலை மிகுதியாக இருப்பதன் காரணமாக அதை இரண்டாகப் பிரித்து சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம் கருவூலங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஏற்கனவே அம்பாசமுத்திரம் கருவூலத்தில் எந்தெந்தப் பகுதிகள் கவனிக்கப்பட்டு வந்தனவோ அதை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதி அம்பாசமுத்திரம் கருவூலத்திலும், மறு பகுதி சேரன்மாதேவி கருவூலத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருவூலத்தைப் பிரிப்பதிலே ஏற்பட்டுள்ள சங்கடங்களை இடர்பாடுகளை மனு மூலம் எடுத்துச் சொல்வார்களேயானால், மறுபடியும் வேண்டுமானால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளவர்களைக் கலந்து அவர்களுடைய யோசனையைக் கேட்டு, கருவூலத் துறை இயக்குனர் இதை ஆராயலாம். ஆகவே எந்தெந்தப் பகுதி அம்பாசமுத்திரத்திலும், எந்தெந்தப் பகுதி சேரன்மாதேவியிலும் இருக்கலாம் என்ற விவரக் குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் தருவார்களானால் அதுபற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

சிலைகள் திருடு போவதைத் தடுத்தல்.

* வினா எண் 185—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சிலைகள் திருடு போவதைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்தச் சிலைகளைத் திருடி வெளிநாட்டுக்கு கடத்துகின்றவர்கள், நாட்டையும் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு மரண தண்டனை போன்ற தண்டனைகளை

*240-244-ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

விதிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோன்று சிலைகளை உலோகத்தில் செய்வதற்கு தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திருட்டுக் குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்று குற்றவியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது. இன்னொரு கேள்வியில் இப்படிப்பட்ட உலோகங்களில் இந்தச் சிலைகளைச் செய்வது தடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்த உரிமைக்குள்ளே நாம் தலையிட முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுக் கோவில்களிலே உள்ள மொத்தச் சிலைகள் எத்தனை? அவைகளில் எவ்வளவு சிலைகள் வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? எவ்வளவு சிலைகள் உள்நாட்டில் ஸ்டாக்கில் இருக்கின்றன என்பதை அறிய இயலுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்லாயிரக்கணக்கான கோவில்களும், அதற்குமேல் பல்லாயிரக்கணக்கான சிலைகளும் இருக்கிற காரணத்தால், முழுமையான விவரத்தை தர இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சிலைகள் திருடு போவதைத் தடுக்க அரசு வகுத்துள்ள நடவடிக்கைகள் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கனவே பல நூற்றுக்கணக்கான சிலைகள் திருடு போய், அவைகள் வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கேயுள்ள மியூசியத்திலேயும் தனியார் வீடுகளிலேயும் வைக்கப்பட்டுள்ளன. அவைகளை மீட்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விவரமான விடையை இங்கே அவையிலே நான் வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடந்து முடிந்து இருக்கிற பல்வேறு தகவல்களைக் கேட்டிருக்கிறார்கள், அதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால், அது இந்திய அரசு தொடர்பான சம்பவங்களாக இருக்கிற காரணத்தால், விவரங்களைச் சேகரித்துத் தரமுடியும்.

**திரு. ஏ. சி. சண்முகம் ;** பேரவைத் தலைவர் அவர்களே, சில சிலைகள் உள்நாட்டில் இருந்து வெளிநாட்டிற்கு கடத்தப்பட்டு இருக்கின்றன. சில சிலைகள் வெளிநாட்டில் இருந்து





உள்நாட்டுக்கு கடத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் இருந்து லிங்கன் சிலை தமிழ் நாட்டிற்கு வந்து இருப்பதாக அறிகிறேன். அதைப் பற்றி இந்த அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி கோவில்களில் உள்ள சிலைகளைப் பற்றியதாகும். லிங்கன் சிலை கோவிலில் வைப்பது இல்லை.

* வினா எண். 186— **திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலூக்கா, பூம்பாறையில் அருள்மிகு குழந்தைவேலப்பர் கோவிலில் இருந்த சிலைகள் 1977-ல் திருடு போய் விட்டனவா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(இ) அந்தச் சிலைகளை மீண்டும் கோயிலில் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) (ஆ) மற்றும் (இ) : கொடைக்கானல் தாலூக்கா பூம்பாறையிலுள்ள அருள்மிகு குழந்தைவேலப்பர் கோவிலில் பார்வதி, பரமசிவன், வள்ளியம்மன், தெய்வானை, அப்பர், சுந்தரர் ஆகிய ஆறு ஐம்பொன் சிலைகள் 9—8—1977 அன்று இரவு திருடு போய்விட்டன. மேற்படி களவு குறித்து கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு, 11—2—1978 அன்று ஆறு பேர்களை காவல் துறையினர் கைது செய்து மேற்படி சிலைகளையும் கைப்பற்றியுள்ளனர். குற்றவாளிகள்மீது மதுரை மாவட்ட மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்கு முடிந்த பிறகு சிலைகளை மீண்டும் கோவிலில் வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பழமையானதும் சேர மன்னனால் கட்டப்பட்டதுமான அந்த மிகப்பழமையான கோவிலில் இருந்து களவாடப்பட்டுச் சென்ற சிலையின் மதிப்பு என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, களவுபோன சிலையைப் பற்றிய மதிப்பை தொல்பொருள் ஆய்வுத் துறை தோராயமாக சுமார் 4 இலட்சம் ரூபாய் இருக்கும் என்று மதிப்பீட்டு இருக்கிறது.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** தலைவர் அவர்களே, கடல் கடந்து சென்ற நடராஜர் சிலையை மீண்டும் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

[1981 பிப்ரவரி 5

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் முன்பே பதில் அளித்து இருக்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல்வேறு கோவில்களில் இப்படிப்பட்ட திருட்டுகள் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம் கோவில்களில் இருக்கும் கதவுகள் சரியாக இல்லை. அதனால் அவைகளுக்கு சரியான பாதுகாப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கோவில்களுக்கு சரியான பாதுகாப்பு அளிக்கும் வகையில் பலமான கதவுகளை புதிதாக அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு எழுப்பப்பட்ட மூலக்கேள்விக்கு தெளிவான முறையில் பதில்களை அச்சிட்டு உறுப்பினர்களுக்குத் தந்து இருக்கிறேன். அதை அவர்கள் படித்துப் பார்த்தால் எடுத்து இருக்கும் நடவடிக்கை தெரியும். அவர் கேட்ட கேள்விக்கும் பதில் அதிலே இருக்கிறது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, சிலை திருடியவர்களையும் கைது செய்து, சிலையையும் கைது செய்து இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிலையை எந்த செக்ஷனில் கைது செய்து இருக்கிறீர்கள்? எந்த லாக்கப்பில் அதை சிறை வைத்து இருக்கிறீர்கள்?

THIRU N. S. V. CHITHAN : May I know how you are allowing this question ?

MR. SPEAKER : For the sake of humour.

**திரு. ரா. உமாநாத் :** அப்படிக் கேட்பதில் என்ன தவறு? ஹவுஸ் 'போர்' அடித்துப் போக வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கேள்வியை சீரியஸ்ஸாகக் கேட்கவில்லை. கேள்வி சீரியஸ்ஸாக இல்லாததால் விடையும் சீரியஸ்ஸாக இருக்காது. இதற்கு பதில் அளிக்க வேண்டியது இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** பெரியார் படம் இந்த மன்றத்தில் இருக்கிறது. என்னுடைய கேள்வி பெரியார் கொள்கையை ஒட்டித்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியார் எந்த செக்ஷனில் சிலைகளைக் கைது செய்தீர்கள் என்று கேட்டது இல்லை. நான் பெரியாரின் செயலாளராக இருந்தவன்.



1981 பிப்ரவரி 5]

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, களவுபோன சிலை பம்பாயிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிகிறது. பம்பாயில் அந்தச் சிலை யாரிடத்தில் இருந்தது? அந்த பம்பாய் நபர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, எங்கே இருந்து மீட்கப்பட்டது என்கிற தகவல் இல்லை. அது சம்பந்தமாக 6 பேர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று இருக்கிறது. அதிலே இரண்டு பேர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 4 பேர்கள் மீது வழக்கு நடைபெற்று வருகிறது. அதிலே ஒருவர் தலைமறைவாக இருக்கிறார். இந்தத் தகவல்தான் இருக்கிறது. எந்த இடத்தில் இருந்து எந்த மாநிலத்தில் இருந்து மீட்கப்பட்டது என்ற தகவல் இல்லை.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, அந்தக் களவு போன சிலை பின்னப்பட்டு அல்லது சேதப்பட்டு மீட்கப்பட்டதாக அறிகிறேன். அது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டுள்ள தகவலில் இருந்து அப்படி பின்னப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை.

### பூம்புகார் சுற்றுலா விடுதி

* வினா எண்.—187 **திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பூம்புகாரில் கட்டப்பெற்றுள்ள தங்கும் விடுதிகள் பொது மக்கள் பயனுக்கு இன்னும் திறந்து விடாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் இருந்து அந்த நிலை இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ) : பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி (Dormitory) சங்கு, சிப்பி வடிவ குடில்கள் முறையே 20—11—1976, 28—2—1980 முதல் திறந்து விடப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவை சுற்றுலாத் துறையின் பொறுப்பில் உள்ளன.

[1981 பிப்ரவரி 5

[முற்பகல் 9–30]

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள அந்த தங்கும் விடுதிகள் எப்போது, எந்த ஆண்டில் கட்டப்பட்டன? அவை ஏன் இவ்வளவு காலதாமதமான பிறகு திறந்து வைக்கப்பட்டன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த அரசு முதலாவது பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலே—அதாவது 1977 ஆம் ஆண்டுக்கு முன்னாலே அவை கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போல 1976 ஆம் ஆண்டு அந்த 'டார்மிட்டரி' துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு அங்கே எழுப்பப்பட்ட, சங்கு, சிப்பி வடிவத்தில் அமைக்கப்பட்ட குடில்களை ஒட்டி முறையாக தண்ணீர் வசதி, மற்ற பல வசதிகள், மழைக் காலத்தில் தண்ணீர் வந்து தேங்கினால் அதைப் போக்குவதற்கு போக்கிட வசதிகள் போன்ற வசதிகளைச் செய்து, அவைகள் எல்லாம் சீர்செய்யப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டு அதன் பிறகு பொதுமக்கள் வசதிக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, கட்டப்பட்ட விடுதிகள் 4 ஆண்டுகள் ஆனபிறகு திறந்து வைக்கப்பட்டதாகவும், அங்கு பல வசதிகள் செய்யப்பட்ட பிறகு திறக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்கள். விடுதிகள் கட்டப்பட்டு 4 ஆண்டுகள் ஆனபிறகுதான் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடைக்காலத்தில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய, இப்படிப்பட்ட காலதாமதத்திற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, முன்னால் பொறுப்பிலே இருந்தவர்கள் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டு போயிருக்கிறார்கள். ஆகவே, யார்மீது இந்தக் குற்றத்தைச் சுமத்தி, அதற்கான நிதியை வசூல் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதன் பிறகு அந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள சங்கு, சிப்பி வடிவ குடில்கள் பொதுமக்கள் வசதிக்குப் பல நாட்களுக்குப் பின்னால்தான் திறந்துவிடப்பட்டதாகச் சொன்னார்கள். அங்கே போதிய வசதிகள் இல்லாத காரணத்தால், தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்றவை இல்லாத காரணத்தால் அவைகளைச் சரிவர செய்துகொடுக்க அரசு ஆராயுமா? சரியான முறையில் அவை பராமரிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? சரியான முறையில் பராமரித்து, போதிய வசதிகள் செய்துகொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன் : தலைவரவர்களே, இதை அமைத்தவர்கள் சங்கு போன்றும், சிப்பி போன்றும் நல்ல கலை நுணுக்கத்தோடு அமைக்க வேண்டுமென்ற விருப்பத்தில்



1981 பிப்ரவரி 5]

அமைத்ததால் அப்படிப்பட்ட விடுதிகள் தங்குவதற்கு ஏற்றவகையில் இருக்கிறதா என்று பரிசீலித்ததாகத் தெரியவில்லை. அதனால்தான் இதிலே பல சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. அதுவும் அமைக்கப்பட்ட இடங்கள் தாழ்வான இடங்களாக இருப்பதனால் தண்ணீர் தேங்குவது மட்டுமல்லாமல், குடிநீர் போன்ற இப்படிப்பட்ட வசதிகள் செய்ய முடியாத சூழ்நிலையும் இருந்ததால் பல சங்கடங்களுக்கிடையே அந்த குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு, பொதுமக்களுக்கு இப்போது வாடகைக்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றன. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்ற குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அப்படி வந்தால் அதுவும் நிவர்த்திசெய்யப்பட அரசு முயற்சி செய்யும்.

## பாரதி மணி மண்டபம்

*வினா எண் 188— திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எட்டையபுரம் பாரதி மணிமண்டபத்தை மேலும் அழகுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் ஆக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : எட்டையபுரத்தில் உள்ள பாரதி மணி மண்டபத்தை அரசு எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, சுதந்திர வேட்கை பற்றியும், மறுமலர்ச்சி காணவும் பாட்டுத் துறையிலே எழுச்சிபெறச் செய்த சுப்பிரமணிய பாரதியாரின் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாடலின் அடிப்படையிலே கட்டப்பட்ட மணிமண்டபம் இது. இன்றைய தினம் இது சரியான முறையில் பராமரிக்கப்படாமல் ஏகப்பட்ட குப்பைக் கூளங்கள் சூழ்ந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? இதை அரசே பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ள முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, காலம் சென்ற அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் முயற்சியால் அந்த மண்டபம் கட்டப்பட்டு இப்போது அதை தனியார் குழு ஒன்று நிர்வகித்து வருகின்றது. அரசு அதை எடுத்துக்கொண்டால் அதைச் சிறப்பாக நிர்வகிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி அரசு அந்த மண்டபத்தை ஏற்றுக்கொண்டு நல்ல முறையிலே பராமரிக்கின்ற ஒரு திட்டம் பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 5

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, பாரதி விழா ஆண்டுதோறும் இந்த அரசாங்கத்தால் கொண்டாடப்படுகின்றது. வருகிற பாரதியார் நூற்றாண்டு விழாவினை இன்னும் சிறப்பான முறையிலே நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். தலைவரவர்களே, ஆண்டுதோறும் நடைபெறுகின்ற பாரதியார் விழாவினை இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மிகச் சிறப்பாகத்தான் எட்டாயாபுரத்திலேயும் மற்றும் பல்வேறு இடங்களிலும் நடத்திக்கொண்டு வருகின்றது. அதை இன்னும் சிறப்பாகக் கொண்டாடுவதற்குரிய முயற்சியினை அரசு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் பாரதியாருடைய நூற்றாண்டு விழா இந்த ஆண்டு வருகின்றது. அதை மிகச் சிறந்த முறையிலே பாரதியாருக்கு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பெருமை சேர்க்கின்ற வகையிலே கொண்டாடுவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகின்றது என்பதையும், அதற்கென்று ஒரு விழாக் குழுவினையும் அரசு அமைக்க இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, சுதந்திரப் போராட்டத்திலே முன்னணியில் நின்ற மகாகவி பாரதியாருடைய அந்த மணி மண்டபம் சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு அரசு அதை எடுத்துக்கொள்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. மேலும் பாரதி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்த இடத்தை அரசு எடுத்துக் கொள்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மகாகவி பாரதி பிறந்த அந்த இடத்திற்கு வெளிநாடுகளிலிருந்து கூடப் பலர் வருகிறார்கள். அப்படி வருகின்றவர்கள் அந்த மணிமண்டபம் சீராக இல்லை என்று மன வேதனை அடைகிறார்கள். ஆகவே இந்த ஆண்டு நடைபெற இருக்கின்ற பாரதியாரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி சென்னையிலே வள்ளுவர் கோட்டம் அமைத்திருப்பதுபோன்று பாரதியாரின் நினைவாகவும் ஒரு கோட்டம் அமைத்து அதில் அவருடைய சிறந்த கவிதைகள் அனைத்தையும் பொறித்து வைப்பதற்குரிய முயற்சியை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, பாரதியார் நூற்றாண்டு விழா என்று கொண்டாடுகின்ற திட்டங்களிலே பாரதி மணி மண்டபம் ஒன்றை மிகச் சிறந்த முறையிலே நிறுவ வேண்டும் என்பது அந்த விழாவிலே நிறைவேற்ற இருக்கின்ற பல்வேறு திட்டங்களிலே இந்த திட்டமும் அடங்கும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 5]

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாரதியார் மண்டபத்தை அரசு எடுத்துக்கொள்ள இருப்பதற்கு நன்றி. இருந்தாலும் தற்சமயம் அங்கே காவலர்களும், லைப்ரரியும் இல்லாத காரணத்தால் அந்த மண்டபத்திலே இருந்து எந்தவிதமான சூழ்நிலைகளையும் தெரிந்துகொள்ள வகையில்லை. ஆகவே உடனடியாக அங்கே காவலர் ஒருவரை நிரந்தரமாக ஏற்படுத்தி, பத்திரிகைகளையும் வாங்கிப் போடுவதற்குரிய நடவடிக்கையை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இங்கே எனக்குத் தந்திருக்கின்ற தகவலின்படி அங்கே ஒரு நூலகரும், ஒரு காவலரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருவேளை அதனைத் தனியார் குழு நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் அதனுடைய நிர்வாகம் சரியாக இல்லையோ என்பது எங்களுக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கருத்தின் மீது அரசு உடனடியாகப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாரதியார் மண்டபத்தையும், வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த இடத்தையும் பார்ப்பதற்கு பல்வேறு இடங்களிலிருந்தும் ஆட்கள் வருகிறார்கள். அப்படி வருகின்றவர்கள் தங்குவதற்கேற்ற வகையில் தங்கும் விடுதியைக் கட்ட சுற்றுலா வாரியம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே பாரதியாரின் நினைவு மண்டபத்தைச் சிறப்புடையதாக ஆக்கிவிட்டுப் பிறகு அதைப் பார்க்க வருகின்றவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வது பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே பாரதியார் அவர்கள் தேசிய உணர்வோடு தீண்டாமை ஒழிப்பு, ஜாதி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதிய கவிதைகளைத் தொகுத்தெடுத்து மாணவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னதுபோல, மகாகவி பாரதியாருடைய முழு உருவமும் இந்த நாட்டில் இன்னும் தெரிந்து கொள்ளப்படவில்லை என்பது உண்மைதான். அவருடைய

ஆற்றல் மிகுந்த கவிதைகளை, பல்வேறு பொருள்களில் ஆற்றியிருக்கிற பலதரப்பட்ட கவிதைகளை இதுவரை புத்தகங்களாக வெளியிடவில்லை என்பதும் உண்மைதான். அந்த முயற்சியை இந்த நூற்றாண்டு விழாவினையொட்டி அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி, அவருக்கு அமைக்கப்படவிருக்கும் நினைவு மண்டபத்தில் ஒலி—ஒளிக் காட்சியையும் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே பாரதியாரைப் பற்றி ஒலி—ஒளி அரங்கக் காட்சி அமைத்து நடத்தப்பட்டுள்ளது. மீண்டும் வருகிற நூற்றாண்டு விழாவினையொட்டி, தந்தை பெரியார் அவர்களுக்கு அமைத்து நடத்தியதைப் போன்று ஒலி—ஒளி அரங்க காட்சி ஒன்றினை நடத்தத் திட்டம் இருக்கிறது.

அண்ணா சதுக்கம்.

* வினா எண் 189—திரு. து. புருஷோத்தமன் :: திரு. ஜே. எஸ். இராசு மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா சதுக்கத்தை மேம்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கம் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் அதிகமாக வந்து அஞ்சலி செலுத்தும் இடம். அங்கே பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், அரசியல் நிகழ்ச்சிகள் போன்ற நினைவு நிகழ்ச்சிகள் அனைத்தையும் புகைப்படங்களடங்கிய கண்காட்சியாக வைக்க அரசு முன் வருமா ? அண்ணா அவர்கள் இயற்றிய பாடல்களையும், கொள்கைப் பாடல்களையும் மெல்லோடியஸ்ஸாக—அதாவது மெல்லிசையாக ஒலி பரப்ப ஏற்பாடு செய்யப்படுமா ? அங்கே வண்ண விளக்குகளைக் கொண்டு அலங்கரித்து மேலும் அந்த இடத்தை அழகு படுத்தும் உத்தேசம் உண்டா ? அங்கே பணியாற்றுகிற பணியாளர்களை, அண்ணா சதுக்கத்தில் பணி புரிகிறார்கள் என்பதற்காகவே நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கத்தின் முன் பக்கத்தில், வலப்புறத்தில் ஒரு கட்டிடம் எழுப்பி அதிலே புத்தக விற்பனை





நிலையம் ஒன்றை வைக்கவும், அண்ணாவினுடைய திருமுகச்சிலை மற்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று அவர்களுடைய வாழ்க்கையின் முக்கியப் புகைப் படங்கள் எல்லாம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஏற்கெனவே இருக்கிறது. மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்று அங்கே இசையை ஒலிக்கச் செய்கிற அந்த முறையைக் கடைப்பிடிப்பதற்கு இல்லை. அமைதியான வணக்கத்திற்குரிய அப்படிபட்ட இடங்களிலே இசை ஒலிபரப்பினால் அந்த உணர்வை ஏற்படுத்த இயலாமல் போய்விடக் கூடும்· ஆனால் அதற்குப் பதிலாக அண்ணா அவர்களின் சொற்பொழிவுகள். அவருடைய பேச்சுக்கள், பல்வேறு இடங்களிலே அவர்கள் ஆற்றிய உரைகள் அனைத்தும், அவருடைய குரல் எங்கும் கேட்கும் விகத்தில், எங்கிருந்து அவருடைய குரல் ஒலிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாத வகையில் பதிவு செய்யப்பட்டு ஒலிக்க வைக்கிற ஒரு முறையை அமுல்படுத்த வேண்டியதற்கான ஏற்பாடும திட்டத்தில் இருக்கிறது.

அடுத்து, பல்வேறு வண்ண விளக்குகளைப் போட்டு அலங்கரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த இடம் வருகிறவர்கள் மரியாதையோடு வணங்க வேண்டிய இடம். வெறும் அலங்கார இடமாக மாற்றி விட்டால், களிப்பிற்குரிய இடமாக மாறிவிடக் கூடும் என்ற கவலையும் கவனமும் அரசின் கருத்தில் இருக்கிறது. எனவே அதனை ஒட்டியும் தீர்மானங்கள் எடுக்கப் பட விருக்கிறது. அடுத்து, அங்கே இருக்கிறவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்ற வேண்டும் என்கிற கேள்வியை கேட்டிருக்கிறார். அதை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கேட்டால், அதற்கான விடையைத் தருவார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பணியாற்றுபவர்களை நிரந்தரமாக்குவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படும்.

* * * *

திரு. ஜே. எஸ். இராசு :

* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராசு அவர்கள் அவையில் ஒரு முன்மாதிரியை உருவாக்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சந்தேகங்கள் இருந்தால் எனக்கு எழுதிக் கேட்கலாம். திரு. இராசு அவர்கள் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்கு நான் கட்டுப்படுகிறேன். அண்ணா சதுக்கம் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இருண்டு கிடந்ததைப் பார்த்துத்தான்

---

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நான் அந்த வினாவை எழுப்பினேன். இப்போது அங்கே விளக்குகள் பொருத்தப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்படுவதைக் கண்டு மகிழ்கிறேன். மேற்கொண்டு அண்ணா சதுக்கத்தின் அருகில் அண்ணா அவர்களின் நூல்களைக் கொண்ட ஒரு நூலகம் அமைத்து மற்றும் அண்ணாவின் வரலாற்றுச் சொற்பொழிவுகள், இலக்கியச் சொற்பொழிவுகள், உலகத் தமிழ் மாநாடு சொற்பொழிவுகள் போன்றவற்றை எல்லோரும் கேட்கத்தக்க வகையில் நிரந்தரமாக அமைக்கப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே இதற்கு விடையளித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியில் ஒரு பகுதிக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும். இருண்டு கிடந்தது என்று தெரிவித்தார்கள். அதற்கான காரணத்தைத் தெரிவித்து விட்டால் இனிமேல் உறுப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ளலாம் எனறு சொல்கிறேன். கடந்த சில மாதங்களுக்கு முன்னால் விவசாயிகள் ஊர்வலம் நடைபெற்றபோது அந்த விவசாயிகள் எல்லாம் அண்ணா சதுக்கத்தில், அண்ணா மீது இருக்கிற பக்தியாலோ என்னவோ உள்ளே நுழைந்தார்கள். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவசாயிகள் என்று பொதுப்படையாகச் சொல்வதில் தவறு இல்லை.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அங்கு கூடிய கூட்டத்தின் செயலின் விளைவாக அங்கிருந்த விளக்குகள் எல்லாம் உடைக்கப்பட்டு சின்னாபின்னப்படுத்தியதையொட்டி அதைச் சீர்திருத்துவதற்கான அந்த இடைக்காலத்தில் அது இருண்டு கிடந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம் :** உலகத் தலைவர்களில் ஒருவரான அண்ணா அவர்களுக்கு பம்பாயில் மணிராம்பக்ரி நிறுவியுள்ள காந்தி நினைவாலயம் போல் அண்ணா அவர்கள் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் அண்ணா சதுக்கத்தை மேம்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அண்ணா அவர்களுக்கு நினைவாலயம் ஒன்றை காஞ்சியில் அவர்கள் பிறந்த இல்லத்தில் உருவாக்கியிருக்கிறோம். இங்கே அவர்கள் நீங்காத் துயில் கொள்கிற அந்தச் சதுக்கத்தை எந்த அளவிற்கு நாம் நினைவாலயமாக மாற்றுவது என்பதுதான் இப்போதுள்ள கேள்வியும் பதிலும்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கத்தை மேம்பாடு செய்வதற்காகச் சில ஆலோசனைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அண்ணாவின் நூல்கள் கொண்ட ஒரு நூலகத்தை அங்கே ஏற்படுத்துவதற்காக அண்ணா சதுக்கத்தின் ஒரு பகுதியில் ஒரு கட்டடம் கட்டப்படும் என்றார்கள். நோக்கத்தில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், அந்தக் கட்டடம் கட்டும்போது அண்ணா சதுக்கத்தின் எழில் தோற்றம்—அங்கே உருவாக்கியிருக்கிற அமைப்பு சூழ்நிலையின் தன்மையோடு சேர்ந்துதான் உருவாகிறது. அந்தச் சூழ்நிலை அமைப்புகள்—ஆர்க்கிடெக்ச்சுவரல் ப்யூட்டி என்று சொல்லக்கூடிய ஒரு சிறப்பு இழந்து விடாதவாறு அரசு பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா சதுக்கம் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அதன் எழில், அதன் மதிப்பு குறையாமல் இந்த அரசு கவனித்துக் கொள்ளும். அதே நேரத்தில் பகலில் மக்கள் உள்ளே போக முடியவில்லை· அந்தச் சூடு தாங்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்காக அதற்குரிய அமைப்பை ஏற்படுத்த வசதி செய்வது என்பது அரசின் நோக்கம்.

### திருநெல்வேலி மாவட்ட விதைப் பண்ணைத் தொழிலாளர் ஊதியம்.

*வினா எண் 190—**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு வித்துப் பண்ணைகளில் பணியாற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி கூலி வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட நிலை நீக்கப்பட்டு, கீழ்க்கண்ட தேதிகளிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விதைப் பண்ணைகளில் அரசு நிர்ணயித்தபடி குறைந்தபட்சக் கூலி வழங்கப்பட்டு வருகிறது :—

| | | |
|---|---|---|
| மேல் அகரம். | கரையிருப்பு. | கிள்ளிகுளம். |
| 13—7—1980. | 2—12—1979. | 27—6—1980. |

(முற்பகல் 9–50)

**திரு. ரா. கிருஷ்ணன் :** சமீப காலத்தில் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு முன்பு பல்வேறு இயக்கங்கள் நடத்தப்பட்டு அதன் பேரில் ஜி.ஓ. போடப்பட்டு போட்ட நாளிலிருந்து குறைந்த பட்சக் கூலி கொடுக்க வேண்டியிருக்க பாக்கி வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதுபற்றித் தகவல் இல்லை. அரசாணை இட்ட நாளிலிருந்து வழங்கப்படவில்லை என்றால் விளக்கம் கேட்கப்பட்டு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** ஆண்—பெண் வித்தியாசம் இல்லாது சமநிலையில் மேற்படி கூலி கொடுக்கப்படுமா ? 240 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்தவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்படுமா ? விவசாயிகளுக்குத் தேவையான தொழிற் கருவிகள் வழங்கப்படுவதில்லை, அதுபற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** : அரசாணை எதுவோ அதையொட்டி நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** விவசாயத் துறையின் கீழ் உள்ள அரசுப் பண்ணைகளில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்த ஊதியம் தரப்படாததன் காரணமாகப் பல இடங்களில் போராட்டம் நடைபெற்று வருகிறது. நாம் நிர்ணயித்த கூலியை முன்னுதாரணமாக நாம் கொடுப்பதோடு அவர்களுடைய கோரிக்கைகளை நியாயமாக ஏற்று அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நியாயமான கோரிக்கைகள் எப்போதும் நிச்சயமாக ஏற்கப்படும்.

## விவசாயத்துறைத் தலைவர் பதவி

*வினா எண் 191—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயத்துறையில் அத்தொழில் வல்லுனரையே துணைத் தலைவராக நியமிக்க அரசு ஏதும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இல்லை.



**திரு. எஸ். சிவராமன் :** விவசாயத் துறையில் அந்தத் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் நியமிக்கப்படுவார்களா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக டெக்னிகல் லைனில் இருக்கக்கூடியவர்களை மருத்துவம், கால்நடைத் துறை ஆகியவற்றில் இயக்குநர்களாக, துறையின் செயலாளர்களாக ஆக்கினால் அவர்களுக்கு அந்தத் துறையைப் பற்றி நன்றாகத் தெரியும் என்ற முறையில் நன்றாகச் செயல்பட முடியும். ஆகவே, அவ்வாறு நியமிக்கப்பட அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** வேளாண்மைத் துறை இயக்குநர் பொறுப்பு பதவி இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அலுவலரால் பொதுத்துறையில் இருந்து நியமிக்கப்படுகிறது. துறை வல்லுநரை நியமிக்க வேண்டுமென்ற பிரச்சினை இப்போது எழவில்லை.

**திரு. எஸ். சிவராமன் :** மத்திய அரசு பொறுப்பில் இருந்து நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். மாநில அரசு அதை மாற்றியமைக்க சிபாரிசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இல்லை.

## ஜங்கால்பட்டி சாலை.

*வினா எண். 192—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி ஜக்கயநாயக்கனூர், ஜங்கால்பட்டி (வழி) அழகன்பட்டி ரோடு ஆர். ஆர். ஸ்கீமிலிருந்து எப்போது அனுமதிக்கப்பட்டது ?

(ஆ) இதுவரை எவ்வளவு வேலை முடிக்கப்பட்டிருக்கின்றது ?

(இ) வேலை சுணக்கமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—**

(அ) 1—4—1977-ல்.

(ஆ) 3 கி. மீட்டர்.

(இ) சில பட்டாதாரர்கள் தங்கள் நிலங்களை சாலை அமைக்க கொடுப்பதற்கு மறுப்பதுடன் அவர்கள் தங்களுடைய நிலங்களில் எந்த வேலையும் செய்யக்கூடாது என் ஆட்சேபணை தெரிவிப்பதால் சாலை அமைக்கும் பணியின் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது.

[1981 பிப்ரவரி 5

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :** இது 1977-ல் சாங்ஷன் செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் முடிந்து அய்ந்தாவது ஆண்டு ஆரம்பமாகி விட்டது. நம்முடைய அரசு தீவிரமாகப் பல நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய சூழநிலையில் இருக்கும்போது என்னுடைய சொந்த ஊரான அழகன்பட்டியில் அந்த ரோட்டை உடனடியாகப் போட்டுக் கொடுக்க முனவருவார்களா? அந்த ரோடு போடும் பகுதி நத்தம் புறம்போக்கில் தான் இருக்கிறது. தனி மனிதரிடம் இல்லை. அந்த இடத்தில் ரோடு போடுவதை யாரும் தடுக்க முடியாது, உரிமை கிடையாது என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்களா? ஆகவே, சட்டப் பேரவைக் கூட்டம் முடிவதற்குள்ளாக பாக்கி ரோட்டை போட்டுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** ரோடெல்லாம் நான்கு நாட்களில் போட முடியாது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இதிலே நத்தம் புறம்போக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், தனிப் பட்ட நபர்களுடைய நிலங்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இந்தத் தடை. அந்த நிலங்களைக் கையகப்படுத்த ஏற்கனவே 4 (1) நோட்டிபிகேஷன் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ம் தேதியில் கொடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் கையகப் படுத்துகிற நிலத்திற்கு முன் பணமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிற காரணத்தால் சட்ட ரீதியாக அவைகளை எடுக்கின்ற நிலைமையில் சிறு தடை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாகக் கூடிய சீக்கிரத்திலே வெகு விரைவிலே அந்தச் சாலை அமைத்துத் தரப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, அங்கே நத்தம் புறம்போக்கு உள்ளது. என் ஊர் அது. நான் குடியிருக்கிறேன். ஆகவே நத்தம் புறம்போக்கில் உடனடியாக வேலையை முடித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளில் நத்தம் புறம்போக்கு என்று இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் வெகு இலகுவாக வேலையை முடிக்க முடியும்.

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவர் அவர்களே. கிராமங்களுக்கு ரோடு போடக்கூடிய நேரத்திலே பல இடங் களிலே ரோடு போடக்கூடிய இடங்களைத் தனியார்கள் வைத் துக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் அரசினுடைய வேலைக்கு



1981 பிப்ரவரி 5]

அது இடைஞ்சலாக இருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதில் கறாராக இருந்து ரோடு போடுவதற்கு வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனாலும் பதில் சொல்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

### மானாமதுரையில் வைகை ஆற்றுப் பாலம்

*வினா எண். 193— **திரு. க. பாரமலை :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை நகரில் வைகை ஆற்றின்மீது கட்டப் பட்டிருக்கின்ற பாலத்தைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆம்—1980-81-ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் இப்பணிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**திரு. க. பாரமலை ;** பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி வழங்கியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன். மானாமதுரை மிக வேகமாக வளர்ந்து வருகிற நகரம். சிப்காட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட் டிருக்கிறது, பி.ஆர்.சி. ஓர்க்ஷாப்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆகவே தேவையான நடவடிக்கைகளை எடுத்து விரைவாக நிறைவேற்ற அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வைகை ஆற்றின் குறுக்கே அந்தப் பாலம் இருக்கிறது, அது மிகக் குறுகியதாகவும், பலவீனமானதாகவும் இருப்பதால் இந்தப் பாலத்தை 60 லட்ச ரூபாய் செலவிலே கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது, அதற்கான ஆணை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9-ம் தேதியில் வழங்கப்பட்டு இருக்கிறது. கூடிய சீக்கிரத்திலே வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, அந்தப் பாலம் காசி-இராமேஸ்வரத்தை இணைக்கக்கூடிய முறையிலே தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய நிலையிலே இருக் கிறது, ஆகவே அதைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

[1981 பிப்ரவரி 5

பெரணமல்லூர் வட்டாரத்தில் ஊட்டச் சத்துணவுத் திட்டம்.

*வினா எண். 194—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டச் சத்துணவுத் திட்டத்தில் பெரணமல் லூர் வட்டாரம் இடம் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, பெரணமல் லூர் வட்டாரம் ஏற்கெனவே வளர்ச்சியற்ற வட் டாரம். இனியாவது உடனடியாக ஊட்டச் சத்துணவுத் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன்.

தர்மபுரி பேருந்து நிலையம்

*வினா எண். 195—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை- யளிப்பாரா—

(அ) தர்மபுரியில் தற்காலிகப் பேருந்து நிலையத்தில் மழை காரணமாக சகதி ஏற்பட்டு பயணிகள் அவதிப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) புதிய பேருந்து நிலையம் அமைக்க ஆரம்பித்து ஓராண்டு காலமாகியும் திறக்கப்படாமல் இருக்கக் காரண மென்ன ?

(இ) உடனே திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ), (ஆ) மற்றும் (இ) ; புதிய பேருந்து நிலையம் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ந் தேதி அன்று மாண்பு மிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



1981 பிப்ரவரி 5]

திரு. எஸ். அரங்கநாதன் : தலைவர் அவர்களே, பேருந்து நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத் தார்கள், அதிலே ஒரு பகுதி மாத்திரம் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது, அது ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே ஆரம்பிக்கப்படும், சீக்கிரம் முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபையின் முன் அனுமதி யோடு கேள்விநேரம் நீட்டிக்கப்படுகிறது.

லோயர் கேம்ப்—குமுளி மலைச்சாலை.

*வினா எண் 196—திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை உள்ள மலைப் பாதையை அகலப்படுத்தி சாலையை புதிதாகப் போடவும் தடுப்புச்சுவர் கட்டவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை உள்ள மலைப் பாதையை அகலப்படுத்தி சாலையை புதிதாகப் போடவும் தடுப்புச் சுவர் போடவும் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால், குறிப்பிட்டுள்ள மலைச்சாலையில் கி. மீ. 74/6-ல் பழுதடைந்திருந்த தடுப்புச்சுவரை ரூ. 52,000 செலவில் பராமரிப்பு நிதியிலிருந்து பழுதுபார்க்கும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள்முடியும் தறுவாயில் உள்ளன.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவரவர்களே, லோயர் கேம்பிலிருந்து குமுளி வரை செல்லும் பாதை மிகவும் முக்கியமான பாதை. அங்கே சுற்றுலாப் பயணிகள் அடிக்கடி வந்த வண்ணம் இருக்கின்றனர். அந்தச் சாலை மிகவும் மோசமாக இருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழகத்திலுள்ள அத்தனை மலைச் சாலைகளும் நல்லமுறையில் இருக்கின்ற பொழுது இந்த மலைச் சாலை மட்டும் மோசமான நிலையில் இருப்பதை உணர்ந்து மற்ற மலைச் சாலைகளைப் போன்று இதையும் பராமரிப்பதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மலைப் பகுதி முழுவதையும் போட தற்போது ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப் போல கிலோ மீட்டர் 74/6-இல் பழுது அடைந்திருந்த தடுப்புச் சுவரை பழுது பார்க்க 52,000 ரூபாய் ஏற்கனவே ஒதுக்கப் பட்டு வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தேக்கடி சுற்றுலா இடமாக அமைக்கப் பட்டிருக்கிறது. அங்கே இரவிலே செல்லுகின்ற வாகனங்கள் மஞ்சு மூட்டத்தினால் பாதை சரியாக இல்லாத காரணத்தால் சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே, இரவு 12 மணியிலிருந்து விடியற்காலை 6 மணி வரையில் அந்தச் சாலையிலே பஸ் மற்றும் கார் போன்ற வாகனங்கள் போவதற்குத் தடை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

இடைப்பாடி நகரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*வினா எண் 38—திரு இ. கணேசன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி நகரில் அண்ணா போக்குவரத்துக் கழக "பணிமனை" ஒன்று கட்ட அனுமதி கேட்டு அரசுக்குச் செயற்குறிப்பு வந்துள்ளது ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ரூபாய் செலவில் செய்ய திட்ட வரைவுவந்துள்ளது ?

(இ) அந்த விண்ணப்பத்தின் மீது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) பணிமனை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கிறது.

(இ) பணிமனைக்கான நிலத்தைக் கையகப்படுத்தும் பணி நடந்து வருகின்றது. நிலம் கையகப்படுத்தப்பட்டு நிலத்தை சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் அண்ணா போக்கு வரத்துக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டபின், கட்டிட வேலைகள் மேற்கொள்ளப்படும்.



1981 பிப்ரவரி 5]

திரு. இ. கணேசன் :—பேரவைத் தலைவரவர்களே, பணி மனை இல்லாமல் இன்னும் பல கிராமங்களுக்கும் பல பெரு நகரங்களுக்கும், புதிய வழித்தடங்கள் விடப்படாமல் இருக் கின்றன. அதனால் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதை அரசு உணருமா? உடனடியாக அந்தப் பணிமனையை நடப்பாண்டில் கட்டுவதற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர் களே, பணிமனை வேலைகள் விரைவாக முடிக்கப்பட்டு, அங்கே புதிதாகப் போக்குவரத்து வசதி இல்லாத கிராமங் களுக்கு அந்த வசதி ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன்: பேரவைத் தலைவரவர்களே, இடைப்பாடி அண்ணா போக்குவரத்துக் கழகம் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டது. அங்கே இரவு நேரங்களில் வண்டிகள் நிற்கக்கூட முடியாமல் பாதையிலே நிறுத்தப்பட்டு, தொழி லாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் செய்து வருகிறார்கள் ஆகவே உடனடியாக அந்த வேலைகளைச் செய்ய டெப் போவைக் கட்டி முடிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 15 பேருந்துகள் இருக்கின்றன என்றும் அவைகளை நிறுத்துவதற்கு இடம் இல்லாத காரணத்தால்தான் அரசாங்கம் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை யும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவாக அந்த வேலை முடிககப்படும்.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் டிராக்டர்களுக்கு வரி விலக்கு.

*வினா எண் 39—திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகின்ற டிராக்டர் களுக்கு டோக்கன் காலாண்டுக்கு ஒரு முறை வாங்கும் முறையை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது ரத்து செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) விவாயத் திற்காகப் பயன்படுத்தப்படும் டிராக்டர்-டிரெயிலர் வண்டிகள் [illegible] செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. அத்தகைய [illegible]

வண்டிகளில்சொந்த விவசாயத்திற்காகப் பயன் படுத்தப்படுகின் வண்டிகளுக்கு ஆண்டுக்கொரு முறை இலவச வரி வில்லைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படும் வாடகை வண்டிகளுக்கு ஆறு மாதத்திற்கொரு முறை இலவச வில்லைக ள்வழங்கப்படவேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்காகப் பயன்படுத்துகின்ற டிராக்டர்களுக்கு எ ப் சி. பெற வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. அதனால், விவசாயிகளுக்குப் பெரிய தொல்லைகளும், இடைஞ்சல்களும் உண்டாகின்றன. அந்தச் சட்டத்திலிருந்து அவர்களுக்கு விதி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : விவசாயத்திற்குப் பயன் படுத்துகின்ற டிராக்டர்களுக்கு எஃப்.சி. பெற வேண்டுமென்றிருப்பது அரசாங்கத்தினுடைய நன்மையைக் கருதி அல்ல, விவசாயிகளுடைய நன்மையைக் கருதித்தான். டிராக்டர்களைப் பயன்படுத்தும்போது, அது சரியில்லாமல், அதன்காரணமாக விவசாயிகளுக்கு ஆபத்துக்கள் வரக் கூடாது என்பதற்காகத் தான், அது சரியாக இருக்கிறதா என்று பார்த்து அதைப் பயன்படுத்த வேண்டுமென்று இருக்கிறது. ஓராண்டுக்கு ஒரு முறைதான் அதைச் செய்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதைத் தவிர்க்கத்தானே ஒழிய அரசாங்கத்திற்கு எந்தவிதமான நன்மையும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர் களே, மோட்டார் வாகன வரிச் சட்டத்தின்கீழ், விவசாயத் திற்காக மட்டும் என்ற சலுகையைப் பெற்றுக்கொண்டு, டிராக்டர்களை பொதுப் பார உந்து வண்டியாகப் பயன்படுத்து வதைத் தடுக்க அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பயன்படுத்தக் கூடாது என்ற விதி இருக் கிறது. கடுமையாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இப்படி யாராவது பயன் படுத்துவார்களானால், அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சபாநாயகர் அவர்களே, டிராக் டர்களை விவசாயிகள் பயன்படுத்துகின்ற நேரத்தில், ஒரு விவசாயி. மற்றொரு விவசாயிக்கு உதவுகின்ற வகையில் டிராக் டர்களை அவர்களே கொடுக்கவும். அல்லது , பயன்படுத்தவும் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அதை வாடகைக்கு விடுகிறார்கள் என்ற அடிப்படையில் அவர் களுக்கு இப்பொழுது 1 ஆண்டுக்கு ஒரு தடவை வரி விதிப்





பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலை மையை மாற்றி விவசாயத்திற்குப் பயன்படக் கூடிய எல்லா டிராக்டர்களுக்கும் ஆண்டுக்கொரு முறைதான் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையையும், அந்த வரியை வசூலிக்கின்ற முறையை அறவே ரத்து செய்யவும் அரசாங்கம் முன் வருமா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குப் பயன்படுத்த-கூடிய சொந்த வண்டியாக இருந்தாலும், வாடகை வண்டியாக இருந்தாலும், வரியே இல்லை. அந்த வரியை ரத்து செய்திருக்கிறோம். ஆனால் 6 மாதத்திற்கு ஒரு முறை வில்லைகள் வாங்க வேண்டு மென்று சொல்லியிருப்பதற்குக் காரணம் அந்த வண்டிகள் தனி யாரால் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், வாடகைக்கு அதைப் பயன்படுத்துகின்றபொழுது, நிறைய வேலைகள் அதற்கு இருக்கிற காரணத்தால், 6 மாதத்திற்கு ஒரு முறையாவது அதிகாரிகள் பார்த்து நல்லமுறையில் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை வைத்திருக்கிறோமேயொழிய வேறு எதற்காகவும் இல்லை.

### கடையநல்லூரில் நூற்பு மற்றும் சாயத் தொழிற்சாலை.

*வினா எண். 197— திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கடையநல்லூரில் ஒரு நூற்பாலையும், சாயத் தொழிற் சாலையும் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள் ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :—

இல்லை.

திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதி கைத்தறி நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதி. ஏறக்குறைய 6,000 தறிகள் அங்கேயிருக்கின்றன. அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏறத்தாழ 7,000 தறிகள் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு நூற்பாலை அமைக்கப்படுமா ? அதே நேரத்திலே, சாயம் போடுகின்ற தொழில் அங்கே அதிக மாக் நடைபெறுகின்ற காரணத்தால், சாயத் தொழிற்சாலை ஒன்று அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில்தான் பேட்டை [illegible] நல்ல சாயத் தொழிற்சாலை ஒன்று திறந்து விடப்பட்டிருக்

[1981 பிப்ரவரி 5

கிறது. நூற்பாலை சம்பந்தமாக நாசரத்திலும், பேட்டை யிலும் ஏற்கனவே இரண்டு மில்கள் இயங்கி வருகின்றன. அவை தற்போதைய நெசவாளர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. பேட்டையில் இன்னும் அதிகமாக தேவை என்ற நிலை ஏற்பட்டால், சி பிரிவு ஒன்றையும் சரியான இடத்தில் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்து வரும் என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

இடைப்பாடி நகரில் பொதுப்பணித் துறை தங்கும் விடுதி.

*வினா எண். 198— திரு. இ. கணேசன் : மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் இடைப்பாடி தொகுதி, இடைப் பாடி நகரில், பொதுப்பணித்துறையின் பொறுப்பில் புதிய 'தங்கும் விடுதி' கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள் ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-10]

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இடைப்பாடி தொகுதியிலே 3 ஒன்றிய பஞ்சாயத்து களும் 500-க்கும் மேற்பட்ட ஜனத் தொகை இருக்கின்ற நகர சபையும் இருக்கிற காரணத்தாலும், பல அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தாலும் அங்கே இருக்கக்கூடிய ஒரு சிறிய பயணர் விடுதி அங்கே வரக்கூடிய அதிகாரிகள் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றது. அந்தக் கருத்திலே கொண்டு ஒரு புதிய பயண விடுதியைக்கட்ட அரசு மறு பரிசீலனை செய் யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே., இடைப்பாடியிலே பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஒய்வு இல்லம் இல்லை. இருப்பினும் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒய்வு இல்லம், 2 அறைகள் கொண்ட இல்லம் இருக்கின்றது. அது நல்ல நிலை யில் உள்ளது. அந்த ஒய்வு இல்லம் அங்கே வரக்கூடிய அதிகாரி களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இடைப்பாடிக்கு



1981 பிப்ரவரி 5]

15 கி.மீ. தொலைவில் உள்ள சங்கரியில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு ஒய்வு இல்லமும், இடைப்பாடிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓமலூரில் நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ஒரு ஒய்வு இல்லமும் இருக்கின்றன. அவைகள் அந்த வட்டாரத்தில் வருகின்ற அதிகாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற காரணத்தால், மேற்கொண்டு ஒரு புதிய ஒய்வு இல்லத்தை இடைப்பாடியில் கட்டும் உத்தேசம் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, இடைப்பாடி யிலே பல அலுவலகங்கள் இருக்கின்றன. அதனால் பல அதி காரிகள் வந்து தங்குகின்றனர். அவர்களுக்கு வசதிகள் இல்லை. டெலிபோன் வசதிகூட அந்த பயணர் விடுதியிலே இல்லை. அதை ஏற்படுத்தித் தர இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடுதியே இல்லை, பின்னர் டெலிபோன் எதற்கு, விடுதி கட்டியதற்குப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

அனாதை இல்லங்கள்.

*வினா எண். 199— திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனாதை குழந்தைகள் என்று சொல்லுவதற்காக அவர்களுக்கு வழங்கும் சர்டிபிகேட்டிற் காக ரூபாய் 300 என்று உறுதிபடுத்தியிருக்கும் தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இந்த திட்டம் எப்பொழுது செயல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தமிழகத்தில் அனாதைக் குழந்தைகள் என சான்றிதழ் வழங்குவதற்காக நிர்ணயம் செய்யப்பட்ட ஆண்டு வருமானம் ரூபாய் 300-ஐ ரூபாய் 1,200 என்று உயர்த்தி ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(ஆ) உயர்த்தப்பட்ட ஆண்டு வருமான வரம்பு இனி குழந்தைகளை அனாதை இல்லங்களில் சேர்க்கும் பொழுது பின் பற்றப்படும்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எப் போது உயர்த்தப்பட்டது. அதை விரைவிலே செயல் முறைக்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ் வருமான வரம்பு 300 ரூபாய் என்பது 1955 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்பதாலேயும் இக்குறைந்த வருமான வரம்பினால் பல அனாதைக் குழந்தைகள் சான்றிதழ் பெற முடியவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதனால், உலக குழந்தைகள் ஆண்டினை ஒட்டி, சமூக நல இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் பரிந்துரையை ஏற்று, அனாதைக் குழந்தைகள் சான்றிதழ் பெறுவதற்கான ஆண்டு வருமானத்தை 1,200 ரூபாயாக உயர்த்தி 10—7—1980 நாளிட்ட அரசு ஆணை 553-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் அனாதை என்பதற்கு 300 ரூபாய் வருமானம் இருக்கிறது. குழந்தைகளே அனாதைகள், அவர்களுக்கு வருமானம் எங்கிருந்து எப்படி வரும். ஆகவே அனாதை குழந்தைகள், தாய் தகப்பன் இல்லாத காரணத்தால், மற்ற சொந்தக்காரர்கள் இல்லாத காரணத்தாலும் அதை முன்னிட்டு இந்த நிலையில் இருந்து அது தளர்த்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் என்றால் தாய் தகப்பன் இருந்தும் பராமரிக்க முடியாமல் இருக்கும் குழந்தைகள்தான். சில பேர்களுக்குத் தாய் மட்டும் இருக்கலாம், தகப்பன் இருக்க மாட்டார். '' விடோட் சில்ரன் '' அப்படி இருந்தாலும் காப்பாற்ற முடியாத நிலையில் இருக்கலாம். அப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகள் எல்லாம் அனாதைக் குழந்தைகள் எண்ணிக்கையில் வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்கிற வகையில் அதற்கான வருமான வரம்பு ரூ. 1,200 என்று உயர்த்தப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். ஆனால், வருமானச் சான்றிதழ்கள் பெறுவதில் சிலர் நல்ல வருமானம் உள்ளவர்களாக இருந்தாலும், வருமானம் இல்லை என்று சான்றிதழ்கள் வாங்க வாய்ப்புள்ளது. ஆகவே, இந்த அனாதைக் குழந்தைகள் சான்றிதழ்கள் வழங்குவதற்கு முன்பு அதனை ஊராட்சி மக்கள் குழுக்கள் பரிசீலனை செய்து, பின்னர் அதன் மூலம் வழங்கும் வகையில் நடைமுறையைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அது பற்றி அரசு ஆவன செய்யும்.





திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது அனாதைக் குழந்தைகள் என்று அழைக்கப்படுபவர்களை பராமரிக்கும் இல்லங்களுக்கு ஏற்கனவே டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் '' கருணை இல்லங்கள் '' என்ற பெயரால் அழைக்கப்பட்டன. அதை மாற்றுவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரம் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத காரணத்தால், தனிக் கேள்வி போடவும்.

* வினா எண். 200—திரு. என். பழனிவேல் மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனாதை குழந்தைகளை பாதுகாக்கும் இல்லங்கள் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அதில் பராமரிக்கப்பட்டு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அரசு அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு உதவி செய்கிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) சென்னை, மதுரை கன்னியாகுமரி மற்றும் சேலம், ஆகிய மாவட்டங்களில் சமூக நலத்துறையால் நடத்தப் படுகின்றன. இதைத் தவிர தனியாரால் 94 இல்லங்கள் அனாதை குழந்தைகளுக்கென நடத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| (ஆ) .. .. .. .. | 165 |
| சென்னை .. .. .. .. | 157 |
| மதுரை .. .. .. .. | 54 |
| கன்னியாகுமரி .. .. .. .. | 111 |
| சேலம் .. .. .. .. | |

தனியாரால் நடத்தப்படும் இல்லங்கள் 94, அவற்றில் குழந்தைகளின் எண்ணிக்கை 5,185. அது பற்றிய (விவரமான அறிக்கை தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*[243—249ம் பக்கத்தில் இணைப்பு 2 ஆக அச்சிடப்பெற்று உள்ளது].

[198. பிப்ரவரி 5

(இ) ஒரு குழந்தைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 487 செல வழிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அதாவது உணவு | .. .. | ரூ. 36 ஒரு மாதம். |
| உடை | .. .. | ரூ. 35 ஆண்டுக்கு. |
| படுக்கை | .. .. | ரூ. 20 ஆண்டுக்கு. |

இதைத் தவிர கல்வி வசதி 5-ம் வகுப்பு வரை இல்லத்திலும் 6-ம் வகுப்பிலிருந்து அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளுக்கு அனுப்பியும், மற்றும் மருத்துவ வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

*(தனியார் நடத்தும் அனாதை இல்லங்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை பற்றிய விவரமான அறிக்கை தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் அனாதைக் குழந்தைகளுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கிறார்கள் என்ற லிஸ்டை அமைச்சரவர்கள் இங்கே கொடுத்து இருக்கிறார்கள். அதில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் இன்று தனியார் இல்லத்தில் இருக்கிறார்கள் என்கிற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தனியார்கள் அவர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகையிலேதான்—அதாவது அவர்களுக்கு அளிக்கப்படுகிற ரூ. 36-லே தான் எல்லாச் செலவுகளையும் செய்கிறார்களா? அல்லது அவர்கள் ஏதேனும் தொகை போடுகிறார்களா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தனியாருக்கு எவ்வளவு தரப்படுகிறது என்கிற விவரத்தை அறிக்கையாக அவைமுன் வைத்து இருக்கிறேன். அதைக் கண்டறிந்து கொள்ளலாம்.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பாதுகாப்பு இல்லங்களில் பராமரிக்கப்படுகிறவர்கள் எந்த வயது வரை பராமரிக்கப்படுகிறார்கள்? அந்தப் பாதுகாப்பு இல்லங்களில் படித்த பிறகு, மேலும் படிப்பதற்கு வேண்டிய வசதிகள், ஏதாவது வேலை வாய்ப்புக்கள் ஆகியவற்றிற்கு வசதிகள் செய்து தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் சிறு குழந்தைகளாக இருக்கும் போது எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். நான் முன்பே பதிலில் குறிப்பிட்டபடி அவர்களுக்கு 5 ஆம் வகுப்பு வரை இல்லத்திலேயும், 6 ஆம் வகுப்பிற்கு மேல் மாநகராட்சி அல்லது அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பியும் அவர்களை நல்ல முறையில் படிக்க வைக்கிறோம். அவர்களுக்கு வேலை வாய்ப்பும் தகுந்த முறையில் ஏற்பாடு செய்து கொடுப்போம்.

---

*249-250 ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்றுள்ளது].



1981 பிப்ரவரி 5]

[முற்பகல் 10-20].

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, 36 ரூபாய் மாதத்திற்கு கொடுத்தால் அவர்களை எப்படி நன்றாக படிக்க வைக்க முடியும் அவர்களுடைய சாப்பாட்டுக்கே, இன்றைய விலைவாசியில், அது போதுமா? ஆகையால் தான் தனியார் ஏதாவது ஒரு பகுதி அதோடு போடுகிறார்களா என்று கேட்டேன். அமைச்சரவர்கள் அதற்கு விளக்கக் குறிப்பைப் பார்க்கச் சொன்னார்கள். அதில் இது பற்றி ஒன்றும் இல்லை. ஆகவே அதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ஜே. எஸ். இராசு : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான ஒரு குற்றச் சாட்டாக இருப்பதால் அனுமதிப்பதற்கில்லை ; அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

## வாக்காளர் பட்டியல்.

* குறுகிய கால வினா எண். 4—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18 வயதானவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி முடிந்து விட்டதா?

(ஆ) எவ்வளவு வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்?

(இ) நகரப் பகுதிகளில் உள்ள 18 வயது அடைந்தவர்களும் இதில் சேர்க்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 36,17,036.

(இ) இல்லை.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. மி. வின்சென்ட் :** தலைவரவர்களே, 21 வயதடைந்த வாக்காளர்கள் எவ்வளவு பேர் ? இப்போது எவ்வளவு உயர்ந்திருக்கிறது ? நகரப் பகுதிகளில் உள்ள 18 வயது அடைந்த வாக்காளர்களைச் சேர்க்கும் பணி எப்போது தொடங்கும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாளில் வாக்காளர்களைச் சேர்க்கும் பணி தொடங்கி, கணக்கிடப்பட்டபடி 21 வயது வந்தவர்களும் அதற்கு மேற்பட்டவர்களுமான வாக்காளர் எண்ணிக்கை 2,07,84,260. இப்போது 18 வயது வந்தவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் சேர்க்கப்பட்ட பிறகு 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் நாள் வாக்காளர் பட்டியல்படி 36,17,036 புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. மி. வின்சென்ட் :** தலைவரவர்களே, தேர்தல் முறை சீர்திருத்தம் குறித்து மத்திய சட்டம், நீதி, கம்பெனி விவகாரங்கள் அமைச்சர் மாண்புமிகு சிவசங்கர் அவர்கள் நேற்றைய தினம் பனாஜீயில் நடைபெற்ற அமைச்சகத்தின் ஆலோசனைக் குழு கூட்டத்தில் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் வயதை 21-லிருந்து 18 ஆக குறைக்க மாநில அரசுகளுடன் கலந்து முடிவெடுக்க இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார். ஆகையால் உள்ளாட்சித் தேர்தலுக்கு 18 வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிப்பதைப் போல பொதுத் தேர்தலிலும் வாக்குரிமை அளிக்க மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, 18 வயது வந்தவர்களுக்கும் பொதுத் தேர்தலில் வாக்கு அளிக்கின்ற உரிமையை கொடுக்கின்ற அதிகாரம் நம்மிடம் இல்லை. ஆனால் மத்திய அரசு அதுபற்றிய குறிப்பை இதுவரை அனுப்பவில்லை ; அனுப்பினால் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, 18 வயது வந்தவர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி நடைபெறும்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்தவர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. அப்படி விடுபட்டவர்களுடைய பெயர்களை மீண்டும் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி, 18 வயது வந்தவர்களைச் சேர்க்கும் பணி பற்றியது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, இந்த பட்டியல் ஏற்கெனவே ஊராட்சிகளுடைய மக்கள் குழுவினர்களும் கோட்ட அளவில் அரசு அமைத்த சட்டமன்ற உறுப்பி





னர்கள் அடங்கிய குழுவினாலும் பரிசீலித்து, 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் நாள் அன்று அரசு வெளியிட்டிருக்கிறது. திருத்தம் செய்வதற்கான காலக்கெடு குறிப்பிட்டு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலத்திற்குள் வந்தால் நிச்சயமாக சேர்க்கப்படும்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவரவர்களே, வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, மாம்பலம் காவல் நிலையத்தில் போலீஸ் லாக் அப்பில் ஒருவர் கொல்லப் பட்டிருக்கிறார். அதுகுறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மட்டும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை அவையில் எழுப்பக் கூடாது. பலர் கொடுக்கவில்லை.

**திரு. ஏ. இராமலிங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, ஒரு வார காலத்திற்கு முன்னாலே வகுப்பிலேயே ஒரு மாணவன் பரிதாபமான முறையில் சாகடிக்கப்பட்டிருக்கிறான். அது குறித்து......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்படிப் பல பிரச்சினைகள்பற்றி பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்றார்கள். சபையினுடைய நேரத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்குத் தகுந்த மாதிரிதான் பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. தினசரி இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக்

கொண்டதற்கிணங்க அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேலும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்தால் அதை எடுத்துக் கொள்வதுபற்றியும் யோசிக்கப்படுகின்றன.

**திரு. து. புருஷோத்தமன் :** தலைவரவர்களே, நானும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுபற்றியெல்லாம் என்னிடம் அறைக்கு வந்து கேட்க வேண்டும். அவையில் எழுப்பக் கூடாது.

**திரு. வெ. இராஜசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்பதைப்பற்றி கடந்த 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ஆம் நாள் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள்......................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்குக் காலையிலே 8¾ மணிக்கு மாண்புமிகு உறுப்பினர் இராஜசேகரன் அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை என்னிடம் கொடுத்தார்கள். அது என் பரிசீலனையில் இருக்கிறது.

[முற்பகல் 10.30.]

**திரு. வெ. இராஜசேகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்னால் நடந்த பிரச்னை. விளக்கம் அளிக்க எனக்குச் சந்தர்ப்பம் தந்தாக வேண்டும்.

(மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் படித்துப் பார்த்த பிறகுதான் சொல்ல முடியும். என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. இன்றைக்கே எடுத்துக் கொள்ளவும் இயலாது. என்றைக்கு என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்லவும் முடியாது. படித்துப் பார்த்து பின்னர் முடிவு செய்யப்படும். நீங்கள் கொடுத்திருப்பதை அவைக்குத் தெரிவித்து விட்டீர்கள். அது போதும். உட்காருங்கள்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்காம் கர்நாடிக் மில் மூடப்பட்டிருக்கிறது. அங்கே தொழிலாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வந்தது. அவர்கள் இப்போது பட்டினி கிடக்கிறார்கள்............. (மணியடிக்கப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பிரச்னைகளை திடீர் படீர் என்று நீங்கள் கொண்டு வர முடியாது. அவைகள் முறையாக அவையில் கொண்டு வரப்படும் நேரத்தில் நீங்கள் பேசலாம்.



## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) பேரவை முன் வைக்கப்பெறும் அரசாணைகள்.

**திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் 'பேப்பர்ஸ் டு பி லெய்ட் ஆன் தி டேபிள்'' என்று ஒன்று இருக்கிறது. கவர்ன் மெண்ட் ஜி.ஓ.க்கள் பாஸ் பண்ணி பப்ளிஷ் ஆன உடனேயே அசெம்பிளி டேபிள்மீது உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்க வேண்டும். ஆனால் இங்கே மிகவும் அநியாயம் நடக்கிறது. 1979ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் நாளிலே பாஸ் பண்ணிய ஜி.ஓ.வை 81வது ஆண்டு 22ஆம் தேதி கொண்டு வந்து வைக்கிறார்கள். அப்படி வைத்தால் இந்த அவைக்கு என்ன மதிப்பு இருக்கிறது? அலுவலர்களுக்கு இந்த ஹவுஸ் என்றால் பயம் இருக்க வேண்டாமா? அமைச்சர்களும் தங்கள் தங்கள் துறை சம்பந்தப்பட்ட விஷயங்கள் அனைத்தும் டிலே ஆகாமல் வைக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டாமா? இது நான் என்னுடைய கடமையை செய்வதிலிருந்தும் தடுக்கிறதே. 79-லே பாஸ் ஆனதைக் கொண்டு வந்து 81-லே வைத்தால் மாடிபி கேஷன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் எப்படிக் கொடுப்பது இப்போது ஆரம்பிக்கப்பட்ட அவைத் தொடரின் காலமும் முடியப் போகிறது. எப்படி மாடிபிகேஷன் கொடுப்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கூட்டத் தொடர் வரை கொடுப்பதற்கு அலுவலர்களுக்கு அவகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது.........

**திரு. ரா. உமாநாத் :** 19—11—1979 அன்று தந்தை பெரியார் அண்ணா யூனிவர்சிட்டீஸ் சர்வீஸ் ரூல்ஸ் சம்பந்தமான பேப்பர்கள் 9—7—1980-லே அவையிலே வைக்கப்பட்டது. அதற்கு 10—7—1980-லே மாடிபிகேஷன் கொடுத்தேன். இன்று வரையில் வரவில்லை. Why don't they keep it before the House at the next Session. Can the department take us for a ride? அதிகாரிகள் அந்த அளவில் இருக்கிறார்கள். அமைச்சர்களும் இதை கவனிக்க வேண்டாமா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது வழி காண வேண்டும். அரசாங்கத்தின் சார்பாக இதற்கு பொறுப்பேற்று ஏதாவது சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒட்டு மொத்தமான அவையின் பிரச்னை. ஆபீசர்கள் இந்த அவை உறுப்பினர்களான நம்மை டாமினேட் செய்ய விடக் கூடாது? இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் நம்மை கட்டுப்படுத்துகிறார்கள் என்கிற எண்ணத்தை தயவுசெய்து

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்ளக் கூடாது. அப்படிப்பட்ட நிலைமையில் அரசும் இல்லை, நீங்களும் இல்லை, நானும் இல்லை. ஆகவே, இந்த விஷயத்தைப் பற்றி நிச்சயமாக பரிசீலித்து சரியான முறையில் நடக்க வேண்டியவைகள் நடக்க முயற்சிகள் மேற்கொள்கிறோம். வேண்டுமென்றே இது இப்படிச் செய்யப்பட்டதாகத் தெரிந்தால், அதை எப்படித் தடுக்க வேண்டுமோ அப்படித் தடுக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்.

### சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு—நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு கீழ்க்கண்ட அறுவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன.

1. திரு. துரைமுருகன்
2. திரு. சி. பழனிமுத்து
3. திரு. ஏ. சி. சண்முகம்
4. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
5. திரு. க. பாலசுப்பிரமணியன்
6. டாக்டர் கே. பி. இராமலிங்கம்

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட அறுவரும் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

### ஆ. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு— நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு கீழ்க்கண்ட மூவரின் பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன: —

1. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
2. திரு. ஏ. சின்னதுரை
3. திரு. கே. எம். தங்கமணி

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்கள் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் மேற்கண்ட மூவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்





## 5. கவன ஈர்ப்புகள்.

### அ. இலங்கை கடற் படையினர் தமிழக மீனவர்களைத் துன்புறுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : '' கச்ச தீவிற்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழகத்து மீனவர்களை ஸ்ரீ இலங்கா கடற்படையினர் தாக்கியதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மீனவர் இறந்தது குறித்து '' திருவாளர்கள் இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் திரு. இரா. கருப்பையா இதை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, '' கச்சத் தீவிற்கு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழகத்து மீனவர்களை ஸ்ரீ இலங்கா கடற்படையினர் தாக்கியதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு மீனவர் இறந்தது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள கச்சத் தீவு இந்திய உடைமையாக இருந்தது. 1974 ஜூன் திங்களில் இந்திய அரசு இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கச்சத் தீவு இலங்கைக்கு உடைமையாக்கப்பட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லைகள் குறிக்கப்பட்டன. இவ்வெல்லைகள் மீண்டும் 1976 மார்ச்சு திங்களில் செய்து கொள்ளப்பட்ட மறு ஒப்பந்தப்படி வரையறுக்கப்பட்டன. இவ்வொப்பந்தங்களின்படி தமிழ்நாட்டு மீனவர்களைப் பொறுத்தவரை கச்சத்தீவிற்குத் திருவிழாக் காலங்களிலும் மற்றும் வலைகள் உலர்த்துதல் போன்ற காரணத்திற்காகவும் முன் அனுமதிச் சீட்டு ஏதுமின்றி வழக்கம் போல் சென்று வரவும் இந்தியக் கடல் எல்லைக்குள் மட்டும் மீன் பிடித்துக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியக் கடல் எல்லை இராமேஸ்வரம் தீவிலிருந்து சுமார் 11 மைல் வரையிலும் தனுஷ்கோடி முனையிலிருந்து சுமார் 6 மைல் வரையிலும் உள்ள கடல் பரப்பாகும். கச்சத் தீவு, இந்த இந்திய எல்லைக்கு அப்பால் இரண்டு மைல் தொலைவில்

இருக்கிறது. எல்லையைக் குறிப்பதற்கான அடையாளம் ஏதும் கடலில் இடப்படவில்லையாதலாலும், மற்றும் நீரோட்டம் காரணமாகவும், கச்சத் தீவைச்சுற்றி இறால் மீன் பாடு அதிகமிருக்கின்ற காரணத்தினாலும் இந்திய மீனவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ, இந்தியக் கடல் எல்லைக்கப்பால் சென்றுவிட நேரிடுகிறது. எல்லை தாண்டியதாகக் கூறி இலங்கைக் கடற்படையினர் தமிழ் நாட்டு மீனவர்களின் வலைகள், படகுகள், பிடிபட்ட, இறால் ஆகியவற்றைப் பறிமுதல் செய்துவிடுவதாகவும் இந்திய மீனவர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறதெனவும் புகார் அவ்வப்போது பெறப்படுகின்றன.

8—2—1979 அன்று இராமேஸ்வரத்திலிருந்து "டாப்கோ ஐ. பி. 264 விசைப் படகு" ஐந்து மீனவருடன் கச்சத்தீவு அருகே மீன் பிடிக்கச் சென்றது. இராமேஸ்வரத்திலிருந்து 7 மைல் தொலைவில் மீன் பிடித்ததாக அவர்கள் தெரிவித்தார்கள். ஆயினும் 9—2—1979 காலை 4 மணியளவில் இலங்கைக் கடற்படையினர் 23 என் கொண்ட பெரும் படகில் வந்து தமிழ்நாட்டு படகை நோக்கிச் சுட்டதில் ஒருவருக்கு நெற்றியிலும் மற்றொருவருக்குத் தொடையிலும் காயம் ஏற்பட்டு இருவரும் மயக்கமுற்றனர். பின்னர் வலைகளைக் கைப்பற்றிச் சென்றனர். சுடப்பட்ட இரு மீனவர்களுக்கும் இராமேஸ்வரம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இது சம்பந்தமாக இராமேஸ்வரம் காவல் துறையில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

5—3—1980 அன்று கச்சத் தீவுத் திருவிழாவின் போது தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 60 மீன்பிடி படகுகள் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு பின்னர் இந்தியக் கடற் பாதுகாப்புப் படையினர் தலையீட்டின் பேரில் இரு படகுகள் தவிர கைப்பற்றப்பட்ட மற்ற படகுகள் யாவும் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டன. தொடர்ந்து இலங்கைக் கடலில் மீன் பிடிப்பவை என்று காரணம் காட்டி இரு படகுகளை இலங்கை கடற் படையினர் இலங்கைக்கு கொண்டு சென்றனர். ஒரு படகு மூழ்கிவிட்டமையால் அப்படகின் மீனவர்களையும் மற்ற படகில் ஏற்றி தமிழ்நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவிட்டனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு மீன் துறை இயக்குநர் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைப் பற்றி விரிவாக மீனவர்களுக்கு எடுத்துரைக்கும்படி கேட்கப்பட்டுள்ளார். அவ்வாறே இது குறித்து இராமேஸ்வரம் கடலோர மீனவர்களுக்கு எல்லாம் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் 13—1—1981-ல் கச்சத்தீவு அருகே இந்திய விசைப் படகு டாப்கோ ஐ. பி. 232-ன் மீது இலங்கைக் கடற் படைக் கப்பல் மிக வேகமாக மோதியதால் இந்தியப் படகு சேதமுற்று மூழ்கியது. படகிலிருந்த ஐந்து மீனவர்களுள் ஒருவர் என்ன ஆனார் என்பது தெரியவில்லை. மற்ற நால்வரையும்



இலங்கைக்கு கொண்டு சென்று பின்னர் இந்திய தூதரக வேண்டுகோளுக்கிணங்க நான்கு மீனவர்களும் இராமேஸ்வரத்திற்கு 17—1—1981 அன்று அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த நிகழ்வு பற்றி இந்திய தூதரகம் மூலம் விசாரணை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இராமேஸ்வரம் பகுதியில் இது குறித்து விசாரித்து விவரமான ஒரு அறிக்கை அனுப்புமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அந்த அறிக்கை வந்தபின் இலங்கை அரசுக்கு விபரங்கள் தெரிவிக்கப்படும். நம் மீனவர்களுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு ஈடு இலங்கை அரசிடமிருந்து கேட்கப்படும்.

காணாமல் போன மீனவர் இறந்து விட்டார் என்று நிரூபணமானால் அவரது குடும்பத்தாருக்கு ரூ. 5,000 கருணை மானியம் வழங்கப்படும். அதோடு மட்டுமில்லாமல் அவரது குழந்தைகள் வாழ்க்கைத் தொழில் கற்பதற்கு ஏற்ற வகையில் கூடுதலாக ரூ. 5,000 வழங்கப்படும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, இந்த கச்சத் தீவு தமிழ்நாட்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு இலங்கைக்கு மத்திய அரசால் மாற்றப்பட்டது. தமிழ்நாட்டிலிருந்து அந்தக் காலத்தில் அதற்கு ஆட்சேபனையும் இருந்தது. இருந்தும் அப்படி அது மாற்றப்பட்டது. கடற்படை ரோந்து இந்தப் பகுதியில் இல்லாததன் காரணமாக நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இம்மாதிரி அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். உயிரை இழக்க வேண்டிய ஆபத்தும் ஏற்படுகிறது. ஆகவே இது சம்பந்தமாக மத்திய அரசின் கவனத்திற்கு நம் மாநில அரசு கொண்டு சென்று இம்மாதிரி ஒரு கடற்கரை ரோந்துப்படையை இந்தப் பகுதியில் நிரந்தரமாக வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த நிலைபற்றி அவ்வப்போது மத்திய அரசுக்கு நாங்கள் தெரிவித்துக் கொண்டு வருகிறோம். மத்திய அரசினுடைய கடற்படை பாதுகாப்பு நிலையைக் கொண்டவர்கள் அங்கே நிலையாக இருந்து ரோந்து புரிந்தால்தான் இப்படி இலங்கையிலிருந்து வருகிற கடற் படையினருக்கும் நம் மீனவர்களுக்கும் தகராறுகள் ஏற்படாமலிருக்கும். மேற்கொண்டு எல்லை வரம்பு தெரியாததன் காரணமாக அறிந்தோ அறியாமலோ நம் மீனவர்கள் எல்லை கடந்து சென்று விடுகிறார்கள். அதற்காக அவர்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து சுட்டுத் தள்ளுவது போன்றவைகளில் இலங்கை கடற் படையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். இலங்கை கடற் படையினருக்கும் நம் மீனவர்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 5

களுக்கும் தகராறு ஏற்படும்போது நாம் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் மூலமாகவும் இந்திய அரசின் மூலமாவும்தான் நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வருகிறது. ஆகவே நிரந்தரமான ஒரு ரோந்து சுற்றுகிற படை ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் மீனவர்களுக்கு எல்லை வரம்பை சுட்டிக்காட்டுகிற அளவிற்கு எல்லை நிர்ணயிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை நாம் வற்புறுத்துகிறோம்.

[முற்பகல் 10-40]

திரு. இரா. கருப்பையா : பாகிஸ்தான் சீனா போன்ற நாட்டுக் கப்பல்கள் நம்முடைய எல்லைக்கு மீறி வந்தால் அதை ஆக்கிரமிப்பு என்று சொல்லுகிறோம். அதே மாதிரி ஸ்ரீலங்கா கடற் படையினர் நம்முடைய கடலோரப் பகுதிக்குள் இம்மாதிரி அடிக்கடி வருவது காரணமாக நம்முடைய நாட்டின் சுதந்திரத்திற்கே அச்சுறுத்தல் ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக மாநில அரசு மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாகிஸ்தான், சீனா என்பதல்ல. எந்த நாடு நம்முடைய எல்லைக்குள் வந்தாலும் நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்போது ஏற்பட்டிருக்கக் கூடிய பிரச்சினை நம்முடைய மீனவர்கள் நம்முடைய எல்லையைத்தாண்டி அவர்களுடைய எல்லைக்கு வந்தார்கள். ஒப்பந்தத்தை மீறி கச்சத் தீவுக்கு வந்ததாகச் சொல்லுகிறார்கள். குற்றம் நம்முடைய மீனவர்களைச் சார்ந்தது இல்லையென்றும், இதை வரையறுக்க வேண்டுமென்றும் இதைப்பற்றி நடவடிக்கையை இந்திய அரசு எடுக்க வேண்டுமென்றும், இந்திய அரசு கவனத்திற்குக் கொண்டு வருவதன் மூலம் நிரந்தரமாக ரோந்து சுற்றும் படை இருக்குமானால் நம்முடைய மீனவர்களுக்கு எச்சரிக்கை செய்யவும் பயன்படும் இலங்கைப்படையினரைத் தடுத்து நிறுத்தவும் பயன்படும். அதற்காக எல்லையை நிர்ணயித்து அடையாளக் குறிகள் கடலில் இட்டு ரோந்துப் படையினரை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இதுபற்றி ஆலோசித்து வருகிறது.

திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைப் சேர்ந்த மீனவர்கள் ஐந்து பேரில் ஒருவர் இறந்து விட்ட விவரத்தைக் கூட அளிப்பதற்கு அதிகாரிகள் சுறு சுறுப்பாகப் பணியாற்றவில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. தமிழகத்தைச்சுற்றி கடலோரப் பகுதிகள் இருக்கின்றன. சென்ற ஆண்டில்கூட ஜப்பானிலிருந்து வந்து மீன் பிடிக்கும் போது நம்முடைய அதிகாரிகள் சென்று அந்த அளவு தூரத்திற்குச் செல்வதற்கான படகு இல்லையென்று சொல்லக்



1981 பிப்ரவரி 5] [திரு. பொ. உத்திராபதி]

கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. இந்த ஆபத்தை
யெல்லாம் நீக்கக் கூடிய அளவுக்கு உடனடியாக மத்திய அரசு
இந்தக் கடலோரப் பகுதியில் வரக் கூடிய ஆபத்தைத் தடுக்க துரித
நடவடிக்கை எடுக்க தமிழக அரசு துரிதமான நடவடிக்கை
எடுப்பார்களா ? 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம்
நாளில் கச்சத் தீவு அருகில் ஒரு மீனவர் இறந்தாரா உயிரோடு
இருக்கிறாரா என்ற விவரத்தை 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம்
17ஆம் நாள் வரை அதிகாரிகள் அறிவிக்கவில்லை. இன்றைய
தேதிவரை அவர் இறந்தாரா இல்லையா என்ற விவரம் தெரிய
வில்லை. 22 தினங்கள் ஆகின்றன. இறந்தவர் குடும்பத்திற்கு
ஐயாயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று சொல்லியிருக்
கிறார்கள். குறிப்பாக மற்றத் தரப்பினர் இறந்தால் பத்தாயிரம்
ரூபாய்வரை வழங்கப்படுகிறது. வெளிநாட்டுச் செலவாணியை
ஈட்டித் தருகிற இந்த மீனவர்களுக்கும் பத்தாயிரம் ரூபாய்
மானியம் வழங்க தமிழக அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1981ஆம்
ஆண்டு ஜனவரி மாதம் 13ஆம் தேதியன்று கச்சத் தீவு அருகே
இந்திய விசைப்படகு டாப்கோ ஐ.பி.232ன்மீது இலங்கைக் கடற்
படைக் கப்பல் மிக வேகமாக மோதியதால் இந்தியப் படகு சேத
முற்று மூழ்கியது. ஐந்து மீனவர்களுள் ஒருவர் என்ன ஆனார்
என்பது தெரியவில்லை. அவர் இறந்தாரா அல்லது காணாமல்
போனாரா என்று தெரியவில்லை. மற்ற நான்கு பேரையும்
பிடித்துக் கொண்டு போய் இலங்கையில் வைத்தார்கள். அது
பற்றி இந்திய தூதரகத்திற்கு முறையிடப்பட்டு 1981ஆம் ஆண்டு
ஜனவரி மாதம் 17ஆம் நாள் அன்று அந்த நான்கு பேரை இராமேஸ்
வரத்திற்குத் திருப்பியனுப்பி விட்டார்கள். ஒருவரைத் தேடித்
தேடிப் பார்த்துச் சடலம் கூட கிடைக்கவில்லை. மற்ற நான்கு
பேருக்கும் அவரைப்பற்றி விவரக் குறிப்பு சொல்ல முடியவில்லை.
அவர் இறந்து விட்டார் என்று நிருபணம் ஆனால் உடனேயே
அவருடைய குடும்பத்திற்கு ஐயாயிரம் ரூபாய் மானியமாக வழங்க
அரசு ஆயத்தமாக இருக்கிறது. அவர்களுடைய குழந்தைகள்
வாழ்க்கைத் தொழில் கற்பதற்கு ஏற்ற வகையில் கூடுதலாக
ஐயாயிரம் ரூபாய் வழங்கப்படும். அந்த முறையில் பத்தாயிரம்
ரூபாய் கிடைக்கும். சில நாட்கள் பார்த்து அவர் இறந்து
விட்டார் என்ற முடிவுக்கு வருமானால் இந்த உதவி தரப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1974ம் ஆண்டு வரையறுக்கப்பட்டதன் காரணமாக
இலங்கைக்கு இந்தத் தீவை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.
1976ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கச்சத்தீவுக்குச் சென்று வலையை
உலர்த்தவும் திருவிழாக் காலங்களிலே செல்லவும் வழிவகை
இருக்கிறது. இப்படிப்பட்ட ஒப்பந்தத்தின் விளக்கங்கள் மீன்
[illegible] கூடிய மீனவர்களுக்கு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளதா

[திரு. தி. கா. நல்லப்பன்] [1981 பிப்ரவரி 5

அவர்களுக்கு அவைகளைப்பற்றி முழுமையாகத் தெரியுமா ? மேலும் இம்மாதிரிச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த ஒப்பந்தத்தைப் பற்றிய முழுக் கருத்துக்களும் அதனுடைய நிலைமைகளும் அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசும் அடிக்கடி சொல்லி வருகிறது. மீனளத்துறையின் சார்பாகவும், ஆங்காங்கு அவர்களோடு தொடர்பு கொள்ளப்பட்டு அச்சடித்த தாள்கள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. எல்லை வரம்பைத் தாண்டி, மீனவர்கள் தெரிந்தோ தெரியாமலோ போய்விடுகிற நிலைமையில் தான் இப்படிப்பட்ட நிலமைகள் ஏற்படுகின்றன. மீனளத் துறையின் சார்பாக இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் மற்றவைகள் எல்லாம் தெளிவாக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சிவசாமி : பரம்பரை பரம்பரையாக நம்மிடத்திலே இருந்த தீவை இலங்கைக்கு தானம் செய்ததன் காரணமாக இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. நம்முடைய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது, அதிலே குறிப்பாக அந்தப் பகுதியிலே மீன்களை உலர்த்திக் கொள்வதற்கும் சர்வ சாதாரணமாக திருவிழாக் காலங்களிலே போய் வரவும் 4, 5 ஷரத்துக்கள் போடப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும்கூட திருவிழாக் காலங்களிலே சில பேர்களை கைது செய்து இருக்கிறார்கள். ஆட்கள்மீது போட்களை மோத விட்டு கொல்வதற்கு முயற்சி செய்து இருக்கிறார்கள். 1974ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இது நடந்து வருகிறது. இப்படி நடக்கிறபோது கேரள மாநிலத்திலே உள்ள கொச்சிககு நாம் தகவல் கொடுத்து கடற்படை வந்து அதற்குப் பின்னாலே தான் நடவடிக்கை எடுத்து நம்முடைய மீனவர்கள் காப்பாற்றப்படக் கூடிய அவல நிலைமை இருக்கிறது. மீனவர்கள் நண்பராக இருக்கக் கூடிய முதலமைச்சர் அவர்கள் இதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு உடனடியாக ஏற்பாடு செய்வதோடு மீனவர்கள் கடலில் இறந்து விட்டால் எப்படி இறந்தார் யார் இறந்தது என்ன ஏற்பட்டது என்பதை புரூப் பண்ண முடியாத நிலைமை ஏற்படுகிறபோது 10 ஆயிரம் கிடைக்காமல் இருக்கிறது. அது மட்டுமல்ல காலதாமதம் ஆகிறது. அப்படி கால தாமதம் இல்லாமல் கொடுப்பதற்கு, பல மனுக்கள் இன்னும் பைசல் செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் உடனடியாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் சங்கடமான நிலைமைகள் அத்தனையையும் நாம் மத்திய



1981 பிப்ரவரி 5] [டாக்டர் இரா நெடுஞ்செழியன்]

அரசுக்குத் தெரிவித்துக் கொண்டு வருகிறோம். நான் முதலி
லேயே குறிப்பிட்டேன். இந்தியாவுக்கும் இலங்கைக்கும்
ஏற்பட்ட ஒப்பந்தமாக இருப்பதால் மத்திய அரசுதான்
நடவடிக்கை எடுக்க வேண்டும். கச்சதீவைப்பற்றிச்
சொன்னார்கள். 1974ஆம் ஆண்டிலேயே அதைப்பற்றி எல்லா
அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்த பிறகுதான்
இந்த ஒப்பந்தம் ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற
நிலைமை ஏற்பட்டது. இப்போது நாம் ஒப்பந்தத்திற்கு மதிப்பு
அளிக்கக் கூடிய கட்டத்திலே இருக்கிறோம். 60 பேர்களை கைது
செய்தார்கள். அவர்களில் இரண்டு பேர்களைத் தவிர மற்றவர்
களையெல்லாம் விட்டு விட்டார்கள். அவ்வப்போது இந்தப்
பிரச்சினை குறித்து மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக்
கொண்டு வருகிறோம். எப்படி இறந்துபட்டார், இறந்து
பட்டாரா இல்லையா என்று தெளிவாக்கப்பட வேண்டிய
நிலைமை இருக்கிறது. காரணம் ஒருவேளை உயிரோடு இருந்தால்
என்ன ஆகும் என்று தான் அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

[முற்பகல் 10-50]

தெளிவான நிலைமை ஏற்பட்டதற்கு பிறகு அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரண நிதி வழங்கப்படும். ஆனால் மற்றவைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அவற்றைப் பற்றித் தனியாகக் கேட்டால்அதுபற்றி விவரங்கள் அளிக்கப்படும்.

(ஆ) திருவில்லிப்புத்தூர் பகுதியில் ஆடுகள் துள்ளு வியாதியால் பாதிக்கப்பெறுவது.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, " திருவில்லிபுத்தூர் தொகுதி சுந்தர பாண்டியம் கிராமத்தில் நூற்றுக் கணக்கான ஆடுகள் இறக்கக் காரணமான துள்ளு வியாதியை (என்ட்ரோடாக்சிமியா) ஒழிக்க வேண்டிய அவசியம் குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

என்ட்ரோடாக்சீமியா (Enterotoxemia) என்னும் நோய் திருவில்லிபுத்தூரில் உள்ள குன்னூரில் தோன்று ஆடுகளிடைய வதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட ஆடுகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறையினர் சிகிச்சையளித்து மேற்படி நோயால் பாதிக்கப்படக்கூடிய ஆடுகளுக்கு தடுப்பூசி போட்டதன் விளைவாக தற்போது மேற்படி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 15—11—1980-க்குப் பிறகு இந்நோயால் ஆடுகள் ஏதும் இறக்கவில்லை.

ஆடுகளுடன் ஆடு மேய்ப்பவர்கள் இடம் விட்டு இடம் மேய்ச்சலுக்காகச் செல்வது வழக்கம். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி பகுதிகளில் இருந்த ஆடுகள் 1980 ஆம் ஆண்டில் அக்டோபர்—நவம்பர் மாதங்களில் திருவில்லிபுத்தூரில் உள்ள குன்னூர் பகுதிகளில் மேய்ந்து கொண்டிருந்தன. இவ்வாடுகளில் மிகச் சொற்பமான அளவில் கீழ்க்கண்ட கிராமங்களில் இறந்துவிட்டன. அவையாவன :—குன்னூர், சக்கம்பட்டி, செம்பத்தையன்கால், சுந்தரபாண்டியம் மற்றும் கிருஷ்ணன் கோவில்.

இவ்விபரம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 14—11—1980 அன்று தெரிவிக்கப்பட்டது. குன்னூரைச் சார்ந்த உதவி கால்நடை மருந்துவர் மற்றும் உதவி கால்நடை இயக்நர் ஆகியோர்கள் இவ்வியாதிகளை ஆய்வு செய்யும் பொருட்டு மேற்படி இடங்களைப் பார்வையிட்டு தேவையான விபரங்களைச் சேகரித்து இறந்துவிட்ட ஆடுகளை பரிசோதனை செய்து மேற்படி வியாதியினை என்ட்ரோடாக்சீமியா என முடிவு செய்தனர். மேற்படி நோயால் பாதிக்கப்பட்டு உயிருடன இருக்கும் ஆடுகளுக்கு சிகிச்சை செய்து மற்ற ஆடுகளுக்கு இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

என்ட்ரோடாக்சீமியா என்ற வியாதியால் பாதிக்கப்பட்ட 18 ஆடுகளில் 14 ஆடுகள் இறந்துவிட்டன. சிகிச்சைக்குப் பின்னர் மற்ற 4 ஆடுகள் முழுவதும் குணமடைந்துவிட்டன.

1,300 ஆடுகளுக்கு நவம்பர் 1980-யில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 15—11—1980-க்குப் பிறகு இந்நோயால் ஆடுகள் ஏதும் இறக்கவில்லை. மேற்கொண்டும் தடுப்பூசிகள் போடுவதற்காக 30—12—1980-ல் இராணிப்பேட்டையிலிருந்து 9,000 டோசஸ் தடுப்பூசி மருந்துகள் வரவழைக்கப்பட்டன. தீவிர முறையில் ஆடுகளுக்குச் சிகிச்சையளிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு ஆடுகளை மேய்ச்சலுக்காக விடும் நேரத்தைக் குறைக்கும்படி ஆட்டுச் சொந்தக்காரர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சரியான நேர சிகிச்சையும் நோய் தடுப்பு ஊசியும் போடப்பட்டதால் நோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளது.



(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பில் இந்தத் துள்ளு வியாதியால் பாதிக்கப்பட்ட 18 ஆடுகளில், 14 ஆடுகள் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இது கிட்டத்தட்ட 80 விழுக்காடு ஆகும். இந்த வேகத்தில் போனால் ஆட்டு இனமே அழிந்து போய்விடுமே. இது பெரிய இழப்பு ஆயிற்றே. அதற்கு தடுப்பு ஊசி போடப்பட்டதா அல்லது மருந்து கண்டுபிடிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆடுகள், குறிப்பாக இளம் ஆடுகள் புரதச் சத்து மிக்க தீவனம் அதிகப்படியாகச் சாப்பிடுவதால் இரைப்பையில் சுரக்கும் அமிலங்கள் மிதப்பட்டு வியாதிக்கான நுண் கிருமிகள் மிக அதிகமாகப் பெருகி, அவைகள் வெளிப்படுத்தும் நச்சுப் பொருள்கள் ரத்தத்தில் கலந்து மிக விரைவில் மரணம் ஏற்படுகிறது. ஆகையால், இந்தத் துள்ளு வியாதி தொத்து நோய் அல்ல ; அது அதிகமாகச் சாப்பிடுவதன் வாயிலாகத்தான் இந்த நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் வருவதற்கு முன் தடுப்பு ஊசிகள் போட முடியாது. மற்ற ஆடுகளுக்குப் பரவுவதற்கு முன் மற்ற ஆடுகளுக்கும தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

6. அறிக்கை அளித்தல்.

பொது கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, " 1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (இரண்டாவது அறிக்கை) " அளிக்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் உரைமீதான விவாதம் நடைபெறுகையில் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் சட்ட முன்வடிவுகள் அறிமுகம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படுவதற்கு முன்னால் இப்படி அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்வது முறையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நாங்கள் யாராவது பல தடவை இப்படி நடந்து விட்டது.

இந்தப் பிரச்சினையை எழுப்புவோம் என்று நீங்கள் எதிர்பார்த்திருந்தீர்களோ என்னவோ என்று நினைத்தேன். நன்றி அறிவிக்கும் தீர்மானம் தோற்றுப் போனால் என்ன நிலைமை ஏற்படும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது அறிமுகப்படுத்துவது முறைதான்.

### 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

#### அ. வீட்டு வசதி வாரிய (திருத்தச்) சட்ட முன்வடிவு 1981.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவைப்" பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது.

#### (ஆ) கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



### (8) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்.

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என் கட்சியின் சார்பாகச் சொல்ல விரும்புகிறேன். நேற்று நடந்த விவாதத்தில், என்னுடைய கட்சி சம்பந்தமாக இருப்பதால் தான், பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபொழுது கேரள மாநில மாண்புமிகு எக்சைஸ் மினிஸ்டர் அவர்களுக்கு ஒரு கடிதம் போனதாகவும் அந்தக் கடிதத்தில் தமிழக அரசிற்கும் அதனுடைய அதிகாரிகளுக்கும் ஏராளமான பணம் செலவு செய்துதான் நான் அதைப் பெற்றிருக்கிறேன் என்றெல்லாம் குறிப்பிட்டதாகவும், அவர் குறிப்பிட்டார். எக்சைஸ் மினிஸ்டர் என் பார்ட்டியைச் சேர்ந்திருக்கிறவர். என் பார்ட்டி லீடர் அங்கே. ஆகவே, இந்த விஷயத்தில், இந்தக் குறிப்பிட்ட பாய்ன்ட்டில் மட்டும் தெளிவு படுத்த வேண்டுமென்பதற்காக நான் நேற்று நைட்டு மாண்புமிகு அமைச்சர் கிருஷ்ணன் அவர்களிடம் தொடர்பு கொண்டேன் நேரிலேயே. அப்படி ஏதாவது, ஒரு கடிதம், இப்படி குறிப்பிட்டு உங்களுக்கு வந்திருக்கிறதா என்று கேட்டேன், அப்படிப்பட்ட எந்தக் கடிதமும் எனக்கு வரவில்லை என்று அவர் கூறிவிட்டார்; தன்னுடைய செயலகத்திற்கும் வரவில்லையென்று கூறிவிட்டார். அரசு செயலகத்திதிற்கும் வரவில்லையென்று கூறிவிட்டார். அந்த மறுப்புச் செய்தியை கேரளாவிலே இருக்கிற பத்திரிக்கைகளுக்கும் கொடுத்திருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பர்சனல் எக்ஸ்பிளனேஷனிலே வராது.

**திரு. ரா. உமாநாத்:** இது பார்ட்டி எக்ஸ்பிளனேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்கு, அளிக்கப் பெற்ற தகவலே தவிர பர்சனல், எக்ஸ்பிளனேஷனில் வராது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் பேசுவதற்கு நேரம் இல்லையென்ற வகையிலே இன்னும் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி கூறுகிறேன். விவசாயிகளுடைய பிரச்சினை பற்றியும், விவசாயச் சங்கத் தலைவர்கள் எந்த அளவில் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செயல் படுகிறார்கள் என்பதைப் பற்றியும் அவர்களுடைய போராட்டங்களின் விளைவாக தமிழகத்திலே என்ன நிலைமை உருவாயிற்று என்பதையும் இங்கே பல்வேறு மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் நான் ஒரு விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டவன்; இந்தப் பிரச்சினை

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகியிருந்தாலும் குறிப்பிடத்தக்க வகையில் இந்தப் பிரச்சினை எப்பொழுது தொடங்கிற்று, அதுவும், வேகமாக எந்த அடிப்படையில் என்பதை இங்கே நான் குறிப்பிட வேண்டும். பின்னாலே நான் சொல்ல இருக்கிற விளக்கத்திற்கு அது உதவிகரமாக அமையும் என்பதை எண்ணி நான் அவைகளைச் சொல்லக் கடமைபட்டிருக்கிறேன்.

உழவர்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 8.25 காசு வீதத்தில் முன்பு கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. இது ஓராண்டில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு பயன் திறனுக்கும் ஆண்டுக் குறைந்த கட்டணத் தொகையாக 17.50 செலுத்த வெண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டது. இந்தக் கட்டண விகிதம் 23—12—1969-ஆம் நாளில் பொதுப் பணித் துறையில் வெளியான 2304-ஆம் எண்ணுள்ள அரசாணையில் பிறப்பித்த உத்தரவுகளின்படி, யூனிட் ஒன்றுக்கு 10 காசுகளாகத் திருத்தி அமைக்கப்பட்டது.

[முற்பகல் 11.00]

திருத்தப்பட்டக் கட்டண விகிதம் 1—1—1970 ஆம் நாளில் இருந்து அமலுக்கு வந்தது. யூனிட்டு ஒன்றுக்கு 1.75 காசு கட்டண உயர்வும், 20 சதவிகித வரிவிதிப்பும் செய்யப்பபட்டிருப்பதை கோயம்புத்தூர் மாவட்ட விவசாயச் சங்கம் எதிர்த்தது. இது தொடர்பாக அரசுக்கு முறையீடு வந்ததன் பேரில், அரசு பொதுப் பணித் துறையில் 7—5—1970 ஆம் நாளிட்ட 845 ஆம் எண்ணுள்ள அரசாணையில் கீழ்க்காணும் கட்டண விகிதங்களை அறிவித்தது. 75 அடியும் அதற்கு மேற்பட்டும் ஆழமுடைய கிணறுகளிலிருந்து நீர் விசை ஏற்றம் செய்வதற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட்டு ஒன்றுக்கு 9 காசு. ஏனையவற்றிற்கு யூனிட் ஒன்றுக்கு 10 காசு என்று உயர்த்தப்பட்டது. இப்படி உயர்த்தப்பட்டதன் விளைவாக ஆங்காங்கே பிரச்சினைகள் வெவ்வேறு வகையில் உருவாயின என்பதைச் சொல்லி, உழவர்களிடம் இருந்து மேலும் முறையீடு வந்ததன் பேரில் முன்னாள் முதல் அமைச்சர் இன்னாள் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் 21—5—1970-ஆம் நாளில் கோயம்புத்தூர் மாவட்ட விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதுபற்றி 'இந்து' நாளிதழில் வெளியாகிய செய்திகளும் இங்கே இணைக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அதை நான் இங்கே குறிப்பிடவில்லை.

அதனை அடுத்து பொதுப்பணித் துறையில் 2—7—1970 நாள் 1818 எண் உள்ள அரசாணையில் குறிப்பிட்ட உத்தரவின் மூலம் மின் இணைப்பு வழங்கியுள்ள கிணறுகளின் ஆழத்தைக் கருதிப்பாராமல் எல்லா கிணறுகளுக்கும் யூனிட்டு ஒன்றுக்கு 9 காசு என கட்டண விகிதம் வரையறுக்கப்பட்டது 1—1—1972 ஆம் நாள் முதல் விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டணம்





மேலும் உயர்த்தப்பட்டது. அதாவது யூனிட் ஒன்றுக்கு 9 காசும் மின் பயன் வரி 1.8 காசு, ஆக 10.8 காசு விதிக்கப்பட்டது. அதாவது யூனிட்டு ஒன்றுக்கு விதிக்கப்படும் கட்டணம் 10.8 காசிலிருந்து 12 காசு ஆக உயர்த்தப்பட்ட உடன், செலுத்தப்பட வேண்டிய ஆண்டு குறைந்த கட்டண தொகையும் 17.50 லிருந்து 20 ஆக உயர்த்தப்பட்டது.

இது தொடர்பாக விவசாயிகள் பரவலாகப் போராட்டம் நடத்தினார்கள். குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் போராட்டம் பெருமளவில் நடைபெற்றது. அங்கே மாட்டு வண்டிகளை வைத்து முற்றுகை போராட்டம் நடத்தினார்கள். அதன் பின்னர் 1—8—1972 நாளிட்ட, 1556 எண்ணுள்ள அரசாணையில் பிறபிக்கப்பட்ட உத்தரவின்படி மின் கட்டணம் திருத்தி அமைக்கப்பட்டு அது 1—1—1972 நாள் முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்படி திருத்தப்பட்ட கட்டண விகிதம் மாதம் ஒன்றுக்கு, முதல் 100 யூனிட்டுகளுக்கு, யூனிட்டு ஒன்றுக்கு 15 காசு எனவும், 100க்கு மேற்பட்ட எல்லா அளவுக்கும், யூனிட்டு ஒன்றுக்கு 11 காசு எனவும் கட்டணம் விதிக்கப்பட்டது. 1974 அக்டோபர் முதல், இந்தக் கட்டண விகிதம் மேலும் திருத்தி அமைக்கப்பட்டு பயன் கொள்ளும் அளவுக்கும் யூனிட்டு ஒன்றுக்கு 12 காசு என்று விதிக்கப்பட்டது. 1975 செப்டம்பரில் இருந்து இந்தக் கட்டண விகிதம் மேலும் திருத்தி பயன்கொள்ளும் எல்லா அளவுக்கும், யூனிட்டு ஒன்றுக்கு 16 காசு என்று விதிக்கப்பட்டது. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு செலுத்தும் குறைந்த அளவு கட்டண விகிதம் மாற்றப்படாமல் ரூ. 20 என்றே, அதே விகிதத்தில் இருந்தது.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தப்பட வேண்டிய நிலையில், அதிகப்படுத்திய பிறகு, அவர்களுடைய தேவைக்கேற்ப இந்தக் கட்டண விகிதம் இல்லை என்கிற வகையில் போராட்டம் தொடங்கியதும், அதன் விளைவாக என்னென்ன நிலைமைகள் உருவாயிற்று, என் நாட்டு மக்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டன என்பதை இங்கே நான் குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறேன். அதிலே ஒன்று, இன்றைய தினம் யார் யார் இந்த விவசாயப் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்க வில்லையோ அவர்கள் எல்லாம் அன்றைக்கு ஆதரவு கொடுத்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

அந்த நிலையில் மின் கட்டணத்தைப் பற்றி மாறுதல் இல்லை என்பதை இங்கே எடுத்த கூறியதற்குப் பிறகு, போராட்டங்கள் உச்ச கட்டத்தை அடைந்தது என்பதையும், மன்றாடியார் தலைமையிலே அச்சங்கத்தின் பிரதிநிதிகளுடன் மூன்றாவதாக ஒரு சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றபோது கூட, முதல் அமைச்சராக இருந்த டாக்டர் கருணாநிதி தலைமையில் [illegible]

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

நிலையை விளக்கினார். விவாதத்தின்போது, அமைச்சர்கள் திருவாளர்கள் மாதவன், சாதிக்பாட்சா, ஓ. பி. இராமன் போன்ற அமைச்சர்களும் அங்கே இருந்தனர்.

செய்தியாளர்களிடையே பேசுகையில் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மின் கட்டணத்தில் மாறுதல் செய்ய அரசுக்கு இயலாது என்று சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்து விட்டதாகக் கூறியிருக்கிறார்கள். தேவைப்பட்டால் மின் கட்டணம் செலுத்தாமல் பாக்கி வைத்து இருப்பவர்கள் 1 மாதத்திற்குள்ளாக யூனிட் ஒன்றுக்கு 9 காசு வீதத்தில் அதைச் செலுத்தி விடலாம். இதற்கிடையில் அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிகாரிகளிடத்தில் மனு செய்து கொண்டால், அந்த மாவட்டத்தில் எந்தெந்தக் கிணறுகளில் 75 அடி ஆழத்திற்கு மேற்பட்டு விசையேற்றம் செய்யப்படுகிறது என்பதைக் குறித்த கணக்கை அதிகாரிகள் எடுப்பார்கள் என்றும் கூறினார்கள்.

சங்கத்தின் கோரிக்கைகளை அரசு ஒட்டு மொத்தமாகத் தள்ளி விடவில்லை என்று அந்தப் பிரதிநிதிகளிடம் கூறியதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், மின்சார வாரியத்திற்கு என்று பெரும் செலவு ஏற்பட்டு இருப்பதாலும், அதிலும் குறிப்பாக சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியப் பட்டியலில் தொகை கூடுதலாக உயர்ந்து விட்ட பின்னர் அரசு விவசாயச் சங்கக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு நெருக்கடியான நிலையில் உள்ளது என்றும் அவர்கள் தெளிவாக்கியுள்ளார்கள். மேலும் தற்போது விதிக்கப்பட்டுள்ள மின் கட்டணம் இன்னும் ஒரு ஆண்டுக்கு செயலில் இருக்கும் என்றும், அதற்குப் பிறகு சங்கத்தின் கோரிக்கைகளை அரசு பரிசீலிக்கும் என்றும், அன்று இருந்த முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் அதை வெளியிட்டார்கள்.

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், இப்போதுள்ள பிரச்சினை இன்று நேற்று தொடங்கியது அல்ல. பல ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக விரிவு அடைந்து கோயம்புத்தூர் மாவட்ட விவசாயச் சங்க போராட்டம் என்பது போய் தமிழ் நாடு விவசாயச் சங்க போராட்டம் என்கிற வகையில் ஒட்டு மொத்தமாக விரிவடைந்து பெருகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அந்தப் போராட்டத்தில் யார் யார் பங்கு கொண்டு இருந்தார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டியது என்னுடைய பொறுப்பு. ஏனெனில் இன்றைய தினம் அவர்களிலே பல பேர் அதிலே இல்லை. குறிப்பாக எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருந்தார்கள் என்று குறிப்பிடுவது ... அவசியம் என்றுதான் கருதுகிறேன்.



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

திரு. சி. நாராயணசாமி நாயுடு—கன்வீனர்.

மாநில விவசாயப் போராட்டக் குழு. அதற்குப் பெயர் அப்படி வைத்து இருந்தார்கள்.

மறைந்த............ யார் யார் இருந்தார்கள் என்பதை நான் இப்போது வெளியிட விரும்பவில்லை. ஆனால் இப்போது இருப்பவர்கள் என்கிற வகையில் நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. பி. கக்கன்—ஸ்தாபனக் காங்கிரஸ்.

திரு. எம். கல்யாணசுந்தரம், எம்.பி.,—இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

திரு. தீர்த்தகிரி கவுண்டர்,—தேசிய காங்கிரஸ்.

திரு. எச். வி. ஹாண்டே—சுதந்திரா.

திரு. சின்னசாமி கவுண்டர்—தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கம்.

திரு. கே. ஆர். நல்லசிவம்—சோசலிஸ்ட்.

திரு. வேலுசாமி—கோவை விவசாயிகள் சங்கம்.

திரு. பொன்னுலிங்கம்—கோவை விவசாயிகள் சங்கம்.

திரு. ஆதிமூலம்—செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்.

திரு. கே. என். குமாரசுவாமி, எம்.எல்.சி.—எச்.எம்.எஸ்.

திரு. பி. எஸ். சுப்பையா—ஐ.என்.டி.யு.சி.

திரு. பி. கே. ராமசாமி—ஏ.ஐ.டி.யு.சி.

திரு. பி. என் சின்னதுரை—அகில இந்திய பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம்.

திரு. கே. பி. கருப்புசாமி, இந்திய தொழிற்சங்கம்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அந்த அறிக்கையைப் படிக்கிறபோது மறைந்த என்று சொல்லி, அதோடு விட்டு விட்டார்கள். அதையும் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் அவைகளைப் பற்றி நாம் இங்கே விமர்சனம் செய்வது சரியல்ல. ஏனென்றால் மறைந்த போனவர் வெளியிட விரும்பவில்லை. அதனால் நான் அதைச் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் பதில் சொல்ல முடியாது. பிறகு 12 கோரிக்கைகளை அவர்கள் வைத்து இருந்தார்கள். இப்போது 9 கோரிக்கைகளோடு நின்று ... பிறகு ... கோரிக்கை ...

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்பதைப் பற்றி இங்கே நான்
சொல்ல விரும்புகிறேன். கோரிக்கைகள்—மின் கட்டண உயர்வை
ரத்து செய்ய வேண்டும், மின் இணைப்புத் துண்டிப்பதைக் கை
விட வேண்டும். வறண்ட கிணறுகளுக்கு மினிமம் சார்ஜ் போட்டு
இருப்பதை நீக்கிட வேண்டும், அரசாங்கக் கடன், கூட்டுறவுக்
கடன், நிலவள வங்கிக் கடன் உள்பட சகல கடன் பாக்கிகளை
யும் வஜா செய்ய வேண்டும். மோட்டார் பம்ப் செட்டுகள்,
கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வது உடனடி
யாக நிறுத்த வேண்டும்.

(முற்பகல் 11–10)

விவசாயப் பண்டங்களுக்கு நம் பிரதிநிதிகளும் சர்க்கார்
பிரதிநிதிகளும் சேர்ந்து விலை நிர்ணயம் செய்து, அரசாங்கமே
கொள்முதல் பொறுப்பை ஏற்று, விற்பனை செய்ய வேண்டும்.
பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான
வரியை கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்ட நிலவரி,
செஸ் வரி, கைவிடப்பட வேண்டும். விவசாயப் பம்பு செட்டுக்
கும் இரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து
செய்ய வேண்டும். வாகனக் கட்டுப் பாட்டை நீக்கி, தண்டத்
தீர்வை போடுவதை கைவிட வேண்டும். பாசனமற்ற பகுதி
களுக்கு உடனடியாக நீர்ப்பாசனத்திற்கு உத்தரவாதம் கொடுக்க
வேண்டும். அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக
பிரகடனப்படுத்த வேண்டும். விவசாய கால்நடைகள், பயிர்
களுக்கு பாதுகாப்பு அதாவது இன்ஷூரன்ஸ் செய்யப்பட வேண்
டும். இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் தகுந்த திருத்தங்கள்
செய்து, இனாம் நிலங்களை உழுது கொண்டிருக்கும் விவசாயி
களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டும். சென்ற தேர்தல்
காலத்தில் விவசாயிகள் பேரில் போடப்பட்டுள்ள சகல பொய்
வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும். விவசாய வேலைகளில்
பாதிக்கப்பட்டவர்களுக்கும், மரணம் அடைந்தவர்கள் குடும்பங்
களுக்கும் சர்க்கார் நிவாரணம் அளிக்க வேண்டும். விவசாயத்
தொழிலாளர்களுக்கும், கிராமப்புற ஏழை மக்களுக்கும் அரசு
செலவிலேயே குடியிருப்பு நிலங்கள், மனைகள் வாங்கி வீடு கட்டிக்
கொடுக்க வேண்டும். மாநிலம் பூராவும் உள்ள விவசாயத் தொழி
லாளர்களுக்கு கூலி நிர்ணய சட்டம் வேண்டும். வன தரிசு, புறம்
போக்கு நிலங்களை அந்தந்தப் பகுதியிலுள்ள விவசாயத் தொழி
லாளர்களுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை அவர்கள் முன் வைத்திருந்தார்கள்.
இவைகளைப் பெற அவர்களால் முடிந்ததா என்றால் இயல
வில்லை. காரணம் எந்த ஒரு அரசும் இத்தனை பிரச்சினைகளை
யும் உள்ளடக்கிய கோரிக்கைகளை, குறைந்த காலத்தில் இவ்
வளவு செலவுக்கு, நிதிநிலையிலே, வருமானத்திலே ஏற்பாடு
செய்திருந்தாலும் கூட இவைகளைச் செய்து கொடுக்க முடியாத
நிலையில் நிறைவேற்றப்படவில்லை; நிறைவேற்றப்பட முடி



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

யாமல் இருந்தது என்பதைத் தவிர வேறல்ல. இன்றும் அந்தப்
பிரச்சினைகள் தொடர்ந்து இருக்கின்றன என்பதை இந்த மன்
றத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏதோ எங்கள் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு புதிதாக நாங்கள்
போட்ட வரி அல்லது நாங்கள் விட்டுக் கொடுக்காத நிலைமை,
வசதி செய்து கொடுக்க முடியாத காரணத்தால் அல்லது செய்யப்
படாத காரணத்தால் தொல்லைப்படுகிறார்கள் என்று யாரும்
குறை கூற முடியாத அளவுக்கு எத்தனையோ ஆண்டுகளாகத்
தொடர்ந்து பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. விருப்
பத்தைத் தெரிவித்தது மட்டுமல்ல; கோரிக்கை என்று சொல்லி
இன்றைய தினம் உரிமைப் போராட்டம் என்ற வகையில் நடந்து
கொண்டிருக்கிறது என்பதை உங்கள் உள்ளத்தில் பதிய வைப்ப
தற்குக் காரணம் இந்த அரசு என்னென்ன செய்தது என்பதைப்
பற்றி நான் சொன்னாலும், விடுபட்டவைகள் சில இருந்தாலும்
அதை இங்கே சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை எல்லாம்
நாங்கள் எப்படி சந்தித்தோம்? ஒன்பது அம்சத் திட்டம் என்று
சொல்கிறார்களே, அதை எப்படி எல்லாம் நிறைவேற்ற நாங்கள்
முன்வந்தோம் என்பதை இந்த மாமன்றத்திலே இருப்பவர்கள்
தெரிந்திருந்தாலும்கூட நினைவுபடுத்துவதன் மூலம் இந்தப்
பிரச்சினைப்பற்றி நாங்கள் எங்களுடைய நிலைமைகளை
விளக்கும்போது எங்களுக்கு சாதகமான உணர்வு உங்களிடம்
உருவாகும் என்று நம்புகிறேன்.

இதுபற்றி முன்னால் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்
ஒரு அறிவிப்பு செய்தார்கள். 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள்
19 ஆம் நாளன்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்த டாக்டர்
கலைஞர் அவர்கள் மின் கட்டண சலுகைப் பற்றி கீழ்க்கண்ட
வாறு அறிவித்தார்கள். "சென்ற ஏப்ரல் மாத கடைசி வாரத்தில்
கோவை மாவட்டத்தில் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்
களையும், விவசாயப் பெருமக்களையும் நான் சந்தித்தபோது
பரிசீலிப்பதாக உறுதியளித்தவாறும், சென்ற வாரம் நான் குறிப்
பிட்ட அறிக்கையில் கூறியபடியும் 'ஸ்லாப் ஸிஸ்டம்' அடிப்
படையில் மின் கட்டணச் சலுகை வசதிகளையும், விவசாய
வருமான வரிக் கணக்கு வைக்கும் சிக்கலை தவிர்க்கும்படியும்
கீழ்க்கண்ட முடிவுகளை அறிவிக்கிறேன். 5 எச்.பி. (குதிரைவேகம்)
பம்பு செட்டுகளைப் பயன்படுத்துகின்ற சிறு விவசாயிகளுக்கு
மாதம் 200 யூனிட்டுக்கு 12 காசும், 200 யூனிட்டுக்குமேல் பழைய
கட்டணமான 10.8 காசும்" என்று அறிவித்தார்கள்.

இரண்டாவதாக 5 எச்.பி.-க்கு மேல் உள்ள இயந்திரங்களுக்கு,
மின்சாரம் உபயோகிக்கின்ற விவசாயிகளுக்கு மாதம் செலவா
கின்ற மின்சாரத்தில் முதல் 400 யூனிட்டுகளுக்கு 12 காசும்
400 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள யூனிட்டுகளுக்கு பழைய கட்
டணமாகிய 10.8 காசும் வசூலிக்கப்படும். இந்தக் கட்டணம்
ஜூன் மாதம் இருந்திருந்து அமலுக்கு வரும். விவசாய வரு

மான வரியில் இப்போது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையில் காம்பவுண்டிங் முறையில் வரி கட்டலாம் என்று இருப்பதை இனிமேல் ஏக்கரா வரம்பு எதுவுமின்றி காம்பவுண்டிங் செய்து கொள்ள சலுகை அளிக்கப்படும். நான் முன்பே கூறியிருப்பது போல் மசோதா சட்டசபையிலே வரும். இந்த ஏற்பாட்டின் மூலம் கட்டாயமாகக் கணக்கு காட்ட வேண்டும் என்பது இல்லை. கணக்கு வைத்து காட்ட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் கணக்குக் காட்டலாம். ஆகவே இந்த முடிவின் மூலம் கணக்கு காட்ட வேண்டும் என்ற சிக்கல் நீக்கப்பட்டுள்ளது.

அடுத்து கேள்வி :— இந்தச் சலுகை கோவை மாவட்டத்திற்கு மட்டுமா ? அல்லது எல்லா மாவட்டங்களுக்குமா ? எல்லா மாவட்டங்களுக்கும் என்றால் தமிழ்நாடு முழுவதுக்குமா ? இதன் மூலம் ஏற்படுகின்ற நஷ்டம் எவ்வளவு ?

பதில் :— 12 காசாக இருக்கும்போதே மின்சார வாரியத் துக்கு ஏறத்தாழ 14 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகின்றது. இந்தச் சலுகையால் மேலும் நஷ்டம் ஏற்படும்.

கேள்வி :—கடன் சுமை நிவாரணம் வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதே ?

எங்கெங்கு வறட்சி பிரதேசம் உள்ளதோ அங்கெல்லாம் ஏற் கெனவே கடன்களுக்கான தவணை அளிப்பு, வஜா செய்வது போன்ற காரியங்களில் அரசு அனுதாபத்தோடு அக்கறை காட்டி வருகின்றது என்று பதில் கூறி இருக்கிறார்கள். இப்படி பத்திரி கைகளுக்கு ஏதாவது ஒன்றை நாங்கள் சொன்னால் 'விவசாயிகள் மேல் எங்களுக்கு அக்கறை இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். அல்லது அலட்சியம் காட்டுகிறோம் என்று சொல்லிவிடுகிறார்கள்' என்று பதில் கூறப்பட்டிருக்கின்றது. சிலர் கேட்கலாம். '' நாங்கள் இருக்கும் போதுதான் தவறு செய்தோம், நீங்களும் அதே தவறைச் செய்ய வேண்டுமா ? ' அந்தத் தவறையே நீங்களும் செய்வதற்காகவா நாங்கள் உங்களுக்கு வாக்களித் தோம் ' என்று மக்கள் கேட்க மாட்டார்களா '' என்று கூட கேட்கலாம். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் : இதைக் கொள்கைப் பிரச்சினை போல நாங்கள் சந்திக்க வேண்டி இருக்கின்றது. இது அன்றாடப் பிரச்சினை மட்டுமல்ல, அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமைக்கேற்ப அதாவது மழை யின்மை, வறட்சி போன்றவைகளுக்காக செய்ய வேண்டி இருக் கின்றது. இப்போது என்ன செய்யப் போகின்றீர்கள் என்று கேட்டால் இன்றைய நிலைமைக்கு நாங்கள் இதைச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பு என்ன செய் தார்களோ அதே அளவுக்குத்தான் கிணறு வெட்டுவோம், முன்பு என்ன செய்தார்களோ அதே அளவுக்குத்தான் நாங்கள் செய்கிறோம். அந்த வகையில்தான் நாங்கள் பதில் சொல்வோம் என்று சொன்னால் அது நிச்சயமாக [illegible] பதிலா





தான் இருக்கும். ஆகவே அதைப்போன்ற நிலைமைகளில் அன்று 500 என்றால், இன்று ஆயிரம் கிணறுகள் தேவைப்படுகின்றது என்றால் அதை நாங்கள் செய்ய வேண்டும். அதிலே மாற்றம் தேவைதான்.

ஆனால் கடனை ரத்து செய்ய முடியுமா ? ரத்து செய்ய வேண்டுமா வேண்டாமா என்ற கேள்விக்கு என்ன பதில் என்ப தைத்தான் நான் இங்கே படித்தேன். ஆனால் எங்களைப் பார்த்து ' நீங்கள் தேர்தலிலே வாக்குறுதி கொடுக்கவில் லையா ?' என்று கேட்கிறார்கள். நேற்றையதினம் கூட எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் '' 5 ஆண்டுகளில் கடனைத் தீர்ப் பேன் என்று சொன்னீர்களே, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வில்லையே '' என்று சொன்னார்கள். கடன் ரத்து என்பதை 42 கோடி என்று அறிவித்துவிட்டு அது இன்றைய தினம் 73 கோடி அளவிற்கு வந்து நிற்கின்றது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு கணக்குப் போட்டு 'இத்தனை கோடி ரூபாயை இந்த அரசு நிவாரணமாகக் கொடுக்கும் என்று நாங்கள் பதவி ஏற்றவுடன் ஜூன் மாதத் திலே நாங்கள் சொன்னோம். 6 மாதம் கழிந்த பிறகும் சொன் னோம். மத்திய அரசினுடைய பட்ஜெட்டை அங்கே கொண்டு வந்ததற்குப் பிறகு மீதியுள்ள 6 மாத காலங்களில் சொல்லும் போதும் சொன்னோம். ஆனால் அதை நாங்கள் நிறைவேற்றிய போது 73 கோடிக்கு அது வந்து நிற்கின்றது என்பதை இங்கே நான் சொல்வதில் வெட்கப்படவில்லை, மகிழ்ச்சியும் பெருமை யும் அடைகிறோம். நாம் இங்கே புள்ளி விவரம் போட்டுப் பார்த்தால் அதாவது ஆண்டுக்கு 50 கோடி என்று குறைந்தால் கூட— அவ்வாறு குறைப்பதற்கு மத்திய அரசு ஒத்துக் கொண்டு குறைத்தால் கூட, அல்லது எந்தப் பிரச்சினை வந்தாலும் நாங்கள் எங்கள் கையிலே இருந்து கொடுக்கிறோம் என்ற அள விலே நாங்கள் துணிந்து செய்தாலும் கூட — இன்றைக்கு இருக் கின்ற கடனை ஏறத்தாழ 240 கோடி ரூபாயையும் நிவாரணமாக அளிப்பதற்கு வழி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1972 ஆம் ஆண்டிலே இருந்து நீண்ட வரலாற்றைச் சொல்கிறார்கள். ஆனால் நான் அவர்களிடத் திலே தெரிந்து கொள்ள விரும்புவது : இது எல்லாம் நடந்து முடிந்த கதை. அதற்குப் பிறகு நாங்களும் தேர்தலிலே தோற் றோம். நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். ஆனால் இப்போது இருக்கின்ற பிரச்சினை ' மத்திய சர்க்காரே ஒத்துக் கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் நாங்களே [illegible] [illegible] கடன் அத்தனையையும் ரத்து [illegible]வோம் ' என்று [illegible]யிருக்கிறீர்கள். ஆகவே அந்த கடன் நிவாரணத்தை [illegible]வீர்களா இல்லையா என்பதைத்தான் தாங்கள் [illegible] வேண்டுமே தவிர பழைய கதை எதற்காக ?

[1981 பிப்ரவரி 5

[முற்பகல் 11-20]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர்
அவர்களே, வயது அளவிலே மாண்புமிகு உறுப்பினர் துரை
முருகன் அவர்கள் என்னை விட சிறியவராக இருந்தாலும்,
என்னை விட அதிகம் படித்தவர், பி.ஏ., பி.எல்., படித்தவர்.
எனக்கு அந்த வாய்ப்பு இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் 10ஆம்
வகுப்பு படித்திருக்கிறார். அவரும் என்னைவிட அதிகம் படித்
தவர்.

**திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறைத்துச் சொல்லி
விட்டார். எம்.ஏ., பி.எல்., படித்தவன் நான்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மகிழ்ச்சி.
வாழ்த்துக்கள். இன்னும் பல பட்டங்களைப் பெற வேண்டும்.
நீண்டநாட்கள் தொடர்பு விட்டு விட்டதால் மறந்திருப்பேன்.
எம்.ஏ., பி.எல்., என்று சொல்வதில் மிக்க மகிழ்ச்சி.

5 ஆண்டுகளில் கடன் தீர்க்கப்பட வேண்டும் என்று சொன்
னார்களே, ஏன் நிறைவேற்றவில்லை என்று கேட்கிறார்கள்.
இந்த 6 மாதங்களை, 5 ஆண்டுக் காலம் என்று ஏன் கணக்கிடு
கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. முதல் வருட ஆரம்
பத்தில் 6 மாதங்கள் தான் சென்றிருக்கின்றன. இந்த 6 மாதத்
தில் 73 கோடி ரூபாயை நாங்கள் பொறுப்பேற்றிருக்கிறோம்.
ஆட்சியிலே இருந்தபோது, மக்கள் தந்த வரிப்பணத்தை ஏற்று
இந்தக் கடன்களைத் தீர்ப்பதற்கு நாங்கள் வழி வகை செய்
திருக்கிறோம். ஆனால் அன்று இந்த அரசைக் கேலி செய்தார்
கள். நான் கூட அன்று சொன்னேன், நாங்கள் எங்கே போய்
விட்டோம், நீங்கள் எங்களைக் கேள்வி கேட்க மாட்டீர்களா
என்று கூடச் சொன்னேன். அந்த அளவுக்கு ஒரு ஆண்டுக்குக்
கூட அல்ல, 6 மாதங்களில் 73 கோடி ரூபாயை நாங்கள் எங்களு
டைய பொறுப்பில் ஏற்று இந்தக் கடனை ரத்து செய்திருக்கிற
நேரத்தில், நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள் என்று சொன்னால்,
கேட்டால், எப்படிச் சரியாகும் ? (குறுக்கீடு)

என்னுடைய நிலைமைகளை விவரிக்க எனக்கு வாய்ப்பு
வேண்டும். சந்தேகம் இருந்தால் கடைசியில் கேளுங்கள், விடை
யளிக்கிறேன். ஐந்தாண்டுகள் காலத்தில் மைய அரசு உதவி
னாலும், உதவாவிட்டாலும் தமிழக அரசினுடைய நிதியிலிருந்து
சிறு விவசாயிகளுடைய கடனைத் தீர்ப்போம் என்று பேரறிஞர்
அண்ணாவின் பிறந்தநாள் அன்று, அண்ணா சாலையில் உள்ள
பேரறிஞர் அண்ணா சிலைக்கு முன்பு சொன்னதை, நேற்றைய
தினம் கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே நினைவு
படுத்தினார்கள். அதற்கெல்லாம் நன்றி கூற வேண்டியதுதான்.
ஏனென்றால் நாங்கள் எதையும் மறந்துவிடக் கூடாது. சொன்ன
வார்த்தைகளை நிறைவேற்றியாக வேண்டும்.



1981 பிப்ரவரி 5] [மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால் ஏதோ நடந்து முடிந்த கதை. நடந்து முடிந்து
விட்டது, அதை ஏன் கிளப்ப வேண்டும் என்று சொன்னால் அது
நியாயம் அல்ல. நாம் வந்த வழியைத் திரும்பிப் பார்க்க
வேண்டும். எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். எந்த இடத்தில்
இருக்கிறோம். ஒழுங்கான பாதையில்தான் வந்தோமா ? பாதை
தவறி விட்டோமா என்று திரும்பிப் பார்க்க வேண்டும்.
(மேசையைத் தட்டும் ஒலி) முன்னால் சென்றவர்கள் பாதை
யினை பின்பற்றியதில் ஏதாவது தவறு செய்து விட்டோமா ?
அல்லது அதிலிருந்தும் அதிக நன்மைகளைச் செய்திருக்கி
றோமா என்று சிந்தித்தால்தான் யாரும் வளர முடியும்;
முன்னேற முடியும், மற்றவர்களையும் முன்னேற்ற முடியும்.

இங்கே நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களைப்
பற்றி எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். என்னென்ன
துன்பங்களை அவர்கள் அடைந்தார்கள் என்றெல்லாம் சொன்
னார்கள். நானும் கூடச் சொல்வேன். எனக்கும் நினைவு
இருக்கிறது. அதே அழகர்சாமி அவர்களை கையில் விலங்கு
போட்டு முன்பு நடந்த விவசாயப் போராட்டத்தில் இழுத்துச்
சென்றிருக்கிறார்கள். நண்பர் அழகர்சாமி அவர்கள் கூட
3 நாட்கள் உண்ணா நோன்பு இருந்தார்கள். அவர்களுக்குக்
கூட அது நினைவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுவும்
அந்தக் காலத்தில் நடந்தது. ஆனால் நாங்கள் அதையெல்லாம்
செய்யவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் அப்போது
இருந்த நிலைமை எப்படி இருந்தது என்பதை என்னால் சொல்ல
முடியாது. இப்போதிருக்கும் நிலையை என்னால் சொல்ல
முடியும்.

இதுபோல பல்வேறு விஷயங்களை பிரச்சினைகளாக எடுத்துச்
சொல்ல முடியும். அடுத்து, 1972-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள்
19-ஆம் நாளன்று தமிழ்நாடு விவசாயிகளின் போராட்ட
இயக்கம் நடைபெற்றது. அன்று இரவே சமரசப் பேச்சு வார்த்
தைகளும் நடைபெற்றன. முடிவில், மின் கட்டண உயர்வை
ரத்து செய்ய வேண்டும். மின் இணைப்புத் துண்டிப்பை ரத்து
செய்ய வேண்டும்—அதாவது கைவிட வேண்டும், வறண்ட
கிணறுகளுக்கு மின்சார சார்ஜ்—சர்-சார்ஜ் போட்டிருப்பதை நீக்க
வேண்டும். இப்படிப் பல கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. ஆம்
போது. 100 யூனிட்டுகள் வரையில், 1 யூனிட்டுக்கு 12 பைசா
என்றும், 100 யூனிட்டுக்கு மேல் வந்தால், 1 யூனிட்டுக்கு 12
பைசா என்றும் மின் கட்டணம் அப்போது நிர்ணயம் செய்யப்
பட்டது. இதை விவசாயிகள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.
இன்று நாம் எல்லாவற்றிற்கும் 12 பைசா என்று சொன்னால்
அதையும் வருகிறது. அன்றைய தினம் ஒத்துக் கொண்டிருக்
கிறார்கள்.

[மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

அடுத்தபடியாக கோரிக்கை எண் 2. அரசாங்கக் கடன்கள், கூட்டுறவு நிறுவனங்கள் நிலுவை, நிலவள வங்கிக் கடன்கள் உட்பட சகல கடன் பாக்கிகளையும் வஜா செய்ய வேண்டும். மோட்டார் பம்ப் செட்டுகள், கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் வறட்சி நிலை இருக்கிறதோ அங்கெல்லாம் கடன் வசூலிப்பதில் பிறப்பித்துள்ள கடுமையான நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று ஏற்கெனவே அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. அது தொடர்ந்து அமல் நடத்தப்படும். மேலும் வறட்சிப் பகுதிகளைக் கணக்கெடுப்பதற்கு ரெவின்யூ போர்ட் மெம்பர் மாவட்ட வாரியாக ஆராய்ந்து அந்த அடிப்படையில் விளைச்சல் இல்லாத பகுதிகளில் கடன் பாக்கிகளை தவணைகளில் வசூலிப்பதைப் போன்ற சலுகைகள் அளிக்கப்படும். இதற்கிடையில் ஏற்கெனவே பிறப்பித்துள்ள அரசாங்க ஆணைப்படி அதிகாரிகள் ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். கிணறு வெட்டுவதற்கு வாங்கிய கடன்கள் பலன் அளிக்காத கிணறுகளைப் பரிசீலித்து கடன் நிவாரணம் அளிப்பது பற்றி ரிசர்வ் வங்கியிடம் எடுத்துக் கூறி ஆவன செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களில் பினாமி கடன்கள் மூலமும் வேறு வகையிலும் தவறு செய்தவர்கள் மீதும் இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும்.

இங்கே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதை நாம் எந்தளவிற்கு மாற்றியமைத்திருக்கிறோம் என்பதையும்— கிணறுகள் பயனபடாது போய்விட்டால் அந்தக் கடன்களை வசூலிக்கக் கூடாது என்பதையும் அதுபோன்ற நிலையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் பினாமியாக கடன்கள் மூலமும் வேறு வகையிலும் தவறு செய்தவர்கள் மீதும் இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையை நாங்கள் நிறுத்தி அந்தப் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நாங்கள் அதைக் கொண்டுபோய் புகுத்தாமல் இருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்ல விழைகிறேன். இதில் கண்டிப்பாக இருந்ததை இப்போது போராடுகிற சங்கத் தலைவர்கள் எல்லாம் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதை ஒத்துக் கொள்வதில்லை. இதை நான் இங்கே குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறேன். இதையெல்லாம் மக்களுக்கும், இங்கே இருக்கிறவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். இது அவர்களுக்கு நினைவிருக்க நியாயம் இல்லை. இவ்வளவு ஆண்டுகள் என்பதை வைத்து அவர்கள் ஏதோ பரிந்துரை பேசுவதுபோல் குற்றஞ் சாட்டுகிறேன் என்று தவறாக அந்த நிலை என் உள்ளத்தில் இருக்கிறது என்று கருதக் கூடாது. உண்மையைச் சொல்லப் போனால், ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரால் கையெழுத்துப் போட்டிருக்கிற கோப்புகளில் நான் என்ன எழுதியிருக்கிறேன்



1981 பிப்ரவரி 5] [மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்று கூப்பிட்டு அந்தக் கோப்புகளை பார்க்க வேண்டி இருக்கிறது. மறந்து விடுகிறேன். அதுபோல் மறந்திருக்கலாம். ஆனால், இந்தப் பிரச்சினை எப்படி இருந்திருக்கிறது, எதற்கெல்லாம் ஒத்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும் எப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொண்டால்தான் இந்தப் பிரச்சினை இப்போது எந்த அளவிற்குச் செல்கிறது, ஏன் அப்படிச் செல்கிறது, எந்தச் சூழ்நிலை இழுத்துச் செல்கிறது எனபதை நாம் அனைவரும் உணர முடியும் என்று கருதுகிறேன்.

அந்த வகையில் நான் இன்னொன்றையும் கூறுவேன். விவசாயப் பண்டங்களுக்கு அவர்கள் பிரதிநிதிகளும், சர்க்கார் பிரதிநிதிகளும் சேர்ந்து விலை நிர்ணயம் செய்து அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று விற்பனை செய்ய வேண்டும். முடிவு விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கம் கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் நிறுவுவது என்பதைக் கொள்கையளவில் அரசாங்கம் ஏற்று பரிசீலிக்கும். இன்று நிலைமை என்ன? ஏறக்குறைய நாங்கள் விநியோகிக்கிறோம். அன்று பரிசீலிக்கப்படும் என்று அதற்கு ஒத்துக் கொண்டார்கள். இதை வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஒத்துழைப்பு இல்லை. தயவு செய்து மாமன்ற உறுப்பினர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். விவசாய விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக விவசாயப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கமிட்டி ஒன்றை அமைப்பது பற்றி பரிசீலிப்பதோடு தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றை கொள்முதல் செய்வது பற்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏன் அங்கே மத்திய அரசுக்குப் போகிறார்கள்? ஏன் போக வேண்டியிருந்தது? நம் நிலைமை அப்படித்தான். இதை நான் குறிப்பிடுவதற்கு காரணம் மத்திய அரசோடு கலந்து செய்ய வேண்டிய நிலையில்தான் நிதி நிலைமை இருக்கிறது. அதற்குரிய நமது தகுதியும் இருக்கிறது என்று சட்டம் செய்து விட்டார்கள். அதுதான் இருக்கிற நிலைமை. அவைகளிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை. நமக்கு அந்த உரிமையும் தரப்படவில்லை. அந்த நிதியையும் நாம் சேர்த்துக் கொளவதற்குரிய பல்வேறு வகைகளில் அந்தத் தகுதியை நமக்கு தந்து விடவில்லை. அந்த அதிகாரம் தரவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11–30)

இப்போது நாங்கள் சொன்னால், மத்திய அரசோடு கலந்து செய்கிறோம் என்று சொன்னால், மத்திய அரசிடம் சொல்லுகிறோம் என்றால், ஏன் அங்கே போகிறீர்கள், நீங்கள் மக்களுக்குச் சொல்ல வில்லையா என்று கேட்கிறார்கள். கடன்களைத் தீர்க்க வேண்டியதுதான். ஏழை சிறு விவசாயிகள் கடன்களைத்

கொடுக்கக் கூடிய நிலைமையில் நிலைமை இல்லை. எப்போது? 1970, 1972, 1974 ஆண்டுகளில், வறட்சி நிலவிய ஆண்டுகளில் அந்த நிலை இருந்தது. அதற்குப் பிறகு, இத்தனை ஆண்டு களுக்குப் பிறகு, இந்தக் கடன் வட்டியோடு பல்கிப் பெருகி யிருக்கும் போது, இந்த நேரத்தில், நாங்கள் எங்களால் முடிந்ததை மக்களின் வரிப் பணத்தில் இருந்து கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு மத்திய அரசு அனுமதி வேண்டும், ரிசர்வ் வங்கியின் சம்மதம் வேண்டும் என்பதை நாங்கள் சொன்னால், மக்களை ஏமாற்றி விட்டோம் என்ற அளவில் எங்கள் மீது பழி சுமத்தி மக்கள் முன் குற்றவாளியாக காண்பிக்க வேண்டுமென் பதற்காக வெளியே சிலர் உட்கார்ந்து கொண்டு நடவடிக்கை எடுப்போம் என்று சொல்வதும், அதற்கு இதைப்போல் விவரங் கள் அறிந்தவர்கள் ஆதரவு கொடுப்போம் என்பதும், அல்லது ஆதரவு கொடுக்கிறார்கள் என்று மற்றவர்கள் நினைக்கக்கூடிய சூழ்நிலை உருவானால் அது இந்த நாட்டுக்கு நல்லதல்ல.

யார் இங்கே இருந்தாலும் இந்த நிலைமைதான். ஆனாலும் 73 கோடி ரூபாயை ஆறு மாதங்களில் கொடுத்து விட்டு பெரிய திட்டங்களைச் செய்ய இன்னும் பணத்தைத் தேடிக் கொண் டிருக்கிறோம் என்ற நிலைமையில் எங்கள் நல்லெண்ணத்தைப் பற்றிக் கொஞ்சமாவது நினைத்துப் பார்க்கக் கூடாதா? ஐந்து ஆண்டுகளில் 240 கோடி கடனைத் தீர்ப்போம் என்று சொன்ன தாகச் சொன்னார்கள். ஆறு மாதங்களில் 73 கோடி ரூபாய் கடனைத் தீர்க்க மத்திய அரசைக் கூடக் கேட்காமல் நாங்கள் கொடுக்கவில்லையா? அதே போன்று கொள்முதல் செய்வதைத் துணிந்து செய்கிறோம், இப்போதும் செய்கிறோம் என்று சொல் லுகிறோம். முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் செய்தார்கள், மறுக்கவில்லை. ஆனால் இந்த ஒப்பந்தம் வரும்போது என்ன வகைகளில் போடப்பட்டிருக்கின்றன? இதற்கெல்லாம் அந்தச் சங்கங்கள் ஒத்துக் கொண்டனவா இல்லையா? இப்போது மட்டும் வேண்டுமென்றே இதைத் திரித்துக் கூறி எங்கள் மீது ஒரு குற்றச் சாட்டைச் சுமத்தி, நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று, சொல்லுவது எப்படி நியாயமாக இருக்க முடியும்? ஆகவேதான் நியாயம் கேட்கிறேன்.

அதோடு மட்டுமல்ல—''பயிர் அடிப்படையில் போடப்பட் டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்டுள்ள நிலவரி, செஸ் வரிகளைக் கைவிட வேண்டும். விவசாய பம்ப் செட்டுகளுக்கும் இரசாயன உரத்திற்கும் போடப் பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டும்.''

''பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியில் கணக்கு வைப்பது கட்டாயம் இல்லையென்றும், ஏக்கர் வரையறை இல்லாமல் கம்பவுண்டிங் முறையில் வரி கொடுக்கலாம் என்றும் முன்பு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளை ஒட்டி மேலும் சிறிய விவசாயிகளுக்கு வருமான வரியில் சலுகை அளிப்பது



பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். அந்தச் சலுகை காரண மாக 7 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வருமான வரி இல்லையென் பதை 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்குவது பற்றியும், ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்குகளில் மாற்றம் செய்வதாகவும் இருக்கிறோம்.''

''பாசனத்திற்கு பாக்கி, தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். இதற்கான தாற்காலிக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி இந்தப் பகுதிகளில் விவ சாயிகள் மாநாட்டைக் கூட்டி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.''

அதுமட்டுமல்ல பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசன உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.'' ''அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்து வதோடு இதுபற்றி மத்திய திட்டக் குழுவுடனும் கேரள அர சோடும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்.''

இதை அன்று ஒத்துக் கொண்டார்கள். இன்றைய தினம் இதைச் செய்ய எவ்வளவு கோடி ஒதுக்குகிறோம்? கிணறுகள் தோண்டவும், குழாய்க் கிணறுகள் வைக்கவும் நாங்கள் பணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னால் கூட போராட்டம் நீடிக்கிறது. போராட்டம் வலுப்பட வேண்டிய காரியங்களைச் செய்கிறார் கள். ஆனால் அன்று மத்திய அரசோடு பேசி, கேரள அரசோடு கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்று சொன்னால் அதை ஒத்துக் கொண்டு சம்மதித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாங்கள் ஆட்சி செய்கிறோம் என்ற ஒரே ஒரு காரணத்தைத் தவிர வேறு அல்ல. அந்த முதலமைச்சர்—எதிர்க்கட்சித் தலைவர்—கூறி அப்போது ஒத்துக் கொண்ட அதே நண்பர்கள், அதே தலைவர்கள் இன்று இதை எதிர்க்கிறார்கள் என்றால், எந்த அர்த்தத்தில், எந்தப் பொருளில், எதனால் என்பதை இந்த நாடும், இந்த மன்றமும் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

விவசாயிகளுக்கு கால்நடை, பயிர்பாதுகாப்பு செய்யப்பட வேண்டும். மாநில அரசுக்கு இந்தக் கொள்கை உடன்பாடுடை யது. மத்திய அரசிடம் இந்தக் கொள்கை வலியுறுத்தப்படும். நாங்கள் பல இடங்களிலே பயிர் பாதுகாப்புக் கழகம் அமைத் திருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கி றேன். மத்திய அரசினுடைய அமைச்சர் 2, 3 நாட்களுக்கு முன்பு இங்கே வந்தபோது நாங்கள் இதை செய்திருக்கிறோம். நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று சொன்ன போது அவர் கள் சொன்னார்கள், அகில இந்திய ரீதியில் எங்களால் செய்ய முடியாது, நீங்கள் மாநிலத்தில் செய்ய முடிந்தால் செய்யுங்கள், மகிழ்ச்சி என்றார்கள். முன்னாலே அமைச்சரவையிலே என்ன [illegible] ஒத்துக் கொள்கிறார்கள். நாமும் [illegible] சொல்ல முடிந்தது.

[மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

வேண்டுமென்று விரும்புகிறோம் ஆனால் வசதி யில்லை. அதை ஒத்துக் கொள்கிறோம். அந்த வசதி இல்லை என்பது அப்போது இருந்தால் இன்றைய தினம் ஆயிரக்கணக்கிலே, கோடிக் கணக்கிலே வரிவிதிக்கப்பட்டு நிதிநிலை உயர்ந் திருக்கிறது என்றாலும் கூட செலவு எப்படி உயர்ந்திருக்கிறது, சம்பளம் எப்படி உயர்ந்திருக்கிறது, எப்படி சம்பளம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கணக்கைப் போட்டுப் பார்த்தால் இந்த அளவில் இப்போது செய்வது நெருக்கடியை ஏற்றுக் கொள்கிற வகையில் நாங்கள் செய்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த வர்களும் நன்கு சிந்தித்து உணர வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும். ரிசர்வ் வங்கியிலே சொல்கிறார்கள் பிளாக் லிஸ்டிலே தமிழகத்தை வைக்க வேண்டியிருக்கிறது, நாம் எழுத வேண்டும் என்று சொல்கிறார்கள். அவசரப்படாதீர்கள் என்று சொல்கிறோம். என்ன காரணம்? இந்தக் கடன்களைத் திரும்பக் கொடுக்காவிட்டால் அவர்களுக்குப் பணம் போய்ச் சேராததை நாம் கொடுத்தாலும் கூட நிதிநிலைமை பற்றாக் குறையாக வந்துவிடும் அல்லது திட்டங்களை நிறைவேற்றமுடி யாத அல்லது வசூலிப்பதற்குத் திறமை இல்லை, வசூலித்து தன்மை செய்வதற்கு அவர்கள் வசதி ஏற்படுத்தாத காரணத்தி னாலே அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கடன்களை நாம் கொடுப்பதற்கு மேலும் கொடுத்து விவசாயத் தொழிலை விருத்தி செய்வதற்கு கடன் கொடுக்க முடியாது என்ற நிலை உருவாகி, அப்படிப்பட்ட நிலைமை உருவாகும் என்றால் இந்த தமிழக அரசு இந்த நாட்டை சரியாக ஆளத்தெரியாத அரசு, நிதி நிலையை ஒழுங்காக வைத்துக் கொள்ள முடியாத அரசு ஆகவே பிளாக் லிஸ்டிலே நாங்கள் சேர்க்கிறோம் என்றால் இந்தப் பதவியே பிறகு கிடைக்காது, இதைத் தயவு செய்து நீங்கள் இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர்கள் உணர்ந்து இருக்கமாட் டீர்கள் என்று சொல்ல மாட்டேன். நினைத்துப் பார்க்க வேண்டும், நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கே இருக்கிறோம், யார் இந்த ஆட்சியிலே இருந்தாலும் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படுமானால் இந்த அரசு அல்லது வேறு எந்த அரசும் மீண்டும் பதவியை நிலைநிறுத்தி மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டை செய்யமுடியுமா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். கடனை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். கூடாது என்பது கொள்கை இல்லையே, எங்கள் கொள்கை அது தான். கொடுக்க முடியாத ஏழை களிடம் வற்புறுத்தி சிறைசாலையில் அடைப்பதால் லாபம் இல்லை, தேவை இல்லை. நிச்சயமாக நாங்கள் அதை விரும்ப வும் இல்லை. ஆனால் பிளாக் லிஸ்டிலே சேர்ப்போம் என்று சொன்னால். நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. இந்த மக்களுக்கு நாம் என்ன சொல்லியிருக்கிறோமோ அதையும் நிறை வேற்ற வேண்டும். அதற்கு ஏற்ப வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும். வருமானத்தைப் பல வழிகளிலே பெருக்கிக் கொண்ட பிறகு இந்தக் கடன்களை தீர்ப்பதற்கு உரிய வழ



1981 பிப்ரவரி 5] [திரு. எம் ஜி. இராமச்சந்திரன்]

முறைகளை ஏற்படுத்தி எந்த அளவுக்கு தீர்க்கமுடியுமோ அதை
நாங்கள் செய்தாக வேண்டும். அந்த வகையில் இந்த அரசு
பணியாற்றிக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதோடு தரிசு, புறம்போக்கு நிலங்களை அந்தந்தப் பகுதி
களிலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்
கப்படும். காட்டு இலாகாவிலே இப்போது காடுகள் இல்லாத நிலங்
கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு 50 ஆயிரம்
ஏக்கர் பகிர்ந்து அளிக்க திட்டம் உள்ளது. புறம்போக்கு நிலங்
களும் லட்சக்கணக்கானவர்களுக்கு தொடர்ந்து பகிர்ந்து அளிக்
கப்படுகிறது. விவசாயத்திலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு இப்
போது இதுபோன்ற நிலங்கள் வழங்கப்படவேண்டுமென்பது அர
சின் கொள்கை, இது தீவிரமாக அமல்படுத்தப்படும். இந்
னுடைய நிலைமை என்ன? வன இலாகாவிலே உள்ள நிலங்கள்
எடுத்து அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குக் கொடுப்பது என்
றால் மைய அரசு சொல்கிறது, வனத் துறையிலே இருக்கின்ற
மரங்களை வெட்டக் கூடாது, மழை குறைகிறது, மழை வளம்
இல்லாததால் நாட்டிலே சுபீட்சம் இல்லை, ஆகவே அதைச்
செய்யக்கூடாது. அங்கிருந்து யோசனை நீங்கள் இத்தனை மரங்
களை புதிதாக வளர்க்க வேண்டும். இத்தனை மரங்களை நட்
டாக வேண்டும் என்று சொல்கிறார்கள். நல்ல யோசனை.
ஆனால் நாம் அதையும் மீறி செய்கிறோம். சில இடங்களிலே
கொடுக்கிறோம். அதிலும் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்
களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மலைவாழ்
மக்களுக்கு கொடுக்க நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 11-40].

இந்தப் பிரச்னை
இருந்தாலும் பிரச்னைகள் வருகின்றன. அதைத் தாங்கிக்கொண்டு
களையெல்லாம் சமாளித்து, எதிர்த்து, என்பதை இந்த
தான் நாங்கள் இந்தப் பணியைச் செய்கிறோம்
மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவேதான் அமைதியும் சுமுகமான சூழ்நிலையும் ஏற்
படுவதற்கு ஏற்றவகையில் எந்த மட்டத்திலும், அளவிலும்
நீதி விசாரணை தேவையில்லை என்பதும், இதன் தொடர்பாக
வழக்குகள் அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதும் இரு
தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நீதி விசாரணை கேட்கிறார்
எதற்கெடுத்தாலும் இப்பொழுது நீதி விசாரணை வேண்டும்.
கள். நாங்கள் மறுக்கவில்லை. சாட்சி சொல்ல முடி
யாமல் இடங்களில் பயந்து, வழக்கு மன்றத்திலே தைரியமாகச்
சொல்ல இருக்கின்றவர்கள், உண்மை தெரிந்தவர்கள், என்ற நிலைமையில்
சொல்லி, தன் மீது வழக்குகள் வராது
அவர்கள் சாட்சி சொல்ல வருவதற்கு வாய்ப்புக் கொடுத்தாக

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

வேண்டும். குற்றம் செய்திருப்பவர்கள் அதிகாரிகளாக இருந்
தாலும், வேறு யாராக இருந்தாலும் அவர்களுக்கு வேண்டப்
பட்டவர்கள், அதேபோன்று அதே அதிகாரிகள் போகக்கூடாது
என்று சொல்வது நியாயமான வாதங்கள், சில நேரங்களில் ஒத்துக்
கொண்டுதான் ஆக வேண்டும். அதை இந்த அரசு மறுத்தது
இல்லை. அதை ஏற்றுக்கொள்ளத் தயங்கியதும் இல்லை.
ஆனால் என்னுடைய வேதனையும் நான் சொல்லியாக வேண்
டும்.

சில சமயங்களில் வெளியிலே பேசுகிறார்கள், சி.பி.ஐ.
விசாரணை வேண்டும் என்று, இங்கேயும் சொல்கிறார்கள்.
கேரள அரசு தனியாக விசாரணை நடத்துவதோ, தமிழக அரசு
தனியாக விசாரணை நடத்துவதோ கூடாது. இரண்டுக்கும்
பொதுவாக சி.பி.ஐ. வேண்டும். இப்படிச் சொல்கிறார்கள்,
சி.பி.ஐ, நிலைமை என்ன? இதுதான் இப்பொழுதுள்ள கேள்வி.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு.
இராமமூர்த்தி அவர்கள், இங்கே முன்னால் இருக்கின்ற எதிர்க்
கட்சித் தலைவர் பேரிலும், மற்றும் சிலர் பேரிலும் நாங்கள்
புகார் கொடுத்தோம்; அதைக் கொண்டு போய்க் கொடுத்து
விட்டோம் என்று தெரிந்து திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்
னார்கள், இது வழக்குமன்றத்திற்கு வராது, வழக்காடாது என்று
நான் ஒன்றும் பேசவில்லை, ஏன் குறுக்கை பேச வேண்டுமென்று
இருந்தேன், பிறகு சொன்னார்கள், இதற்கு முடிவே இருக்காது.
இத்தனை ஆண்டுகள் ஆகும் என்றும் தெரியாது; இதைப்பற்றி
ஒரு முடிவும் வரப்போவதும் இல்லை, கடைசியிலே வழக்கு கை
விடப்பட்டாலும் விடப்படும் என்று சொன்னார்கள். நான்
சொன்னேன், அப்படி இருக்காது, சர்க்காரியா போன்றவர்களின்
விசாரணை நடக்கிறது; என்ன உண்மை வருகிறதோ அது
வெளிவரும் என்று சொன்னேன். ஆனால் இதுவரையில் எனக்
குள்ள மனக் கஷ்டத்தைச் சொல்கிறேன்.

இன்றையதினம் நான் சாட்சி சொல்கிறேன் என்று வைத்துக்
கொள்ளுங்கள். ஒரு ஆட்சி இருக்கிறது மத்தியிலேயும், இங்கே
யும், நான் வேண்டப்பட்டவனாக இருந்தால், அந்த ஆட்சிக்குச்
சார்பாக. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நான் சாட்சி
சொல்லிவிட்டேன் என்கின்ற நிலைமையில் பழி சுமத்தப்படுவேன்.
அது உண்மை என்று எப்போழுது சொல்கிறார்கள்
என்றால் ஆட்சி மாறியவுடனே நானே, எந்தக் கையெழுத்தைப்
போட்டுக் கொடுத்தேனோ, எந்த நீதிபதியின் முன் சொன்
னேனோ அதையே மாற்றி, என்னை அடித்தார்கள், குத்தினார்
கள், என்னைத் துன்பப்படுத்தினார்கள். ஆகவே நான் எழுதிக்
கொடுத்தேன் அது தவறு என்று சொல்வது, இன்னும் ஒரு ஆட்சி
மாறிவிட்டால் மறுபடியும், நான் எதை எழுதினேனோ அதையும்



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அவர்கள் என்னை அடித்தார்கள், துன்பப்படுத்தினார்கள், ஆகவே
நாங்கள் விட்டுவிட்டோம், இப்படிச் சொல்கிறோம், இதுதான்
உண்மை என்று சொல்வது.

இப்படிச் சாட்சியங்கள் சொல்ல வைத்துக் கொண்டே இருந்
தால் நீதிவிசாரணை எப்படி நிலைத்து நிற்கும்? நீதிவிசாரணைக்கு
எந்த சுப்ரீம் கோர்ட் நீதிபதி வந்தாலும் எங்களுக்கு
ஆட்சேபணை இல்லை. நான் மனம் விட்டுச் சொல்கிறேன்.
தயார், ஆனால் கொடுக்கப்படுகின்ற சாட்சியங்கள் முதலில்
சொன்னது கடைசிவரையில் உறுதியாக இருக்கும் என்ற உத்தர
வாதம் இருக்கிறதா?

ஒருவேளை நானே இருக்கிறேன், இந்த ஆட்சிப் பொறுப்
பிலேயிருந்து இறக்கப்படுகின்றேன்; குற்றவாளியாக நிறுத்தப்
படுகின்றேன். என்கூட இருப்பவர்கள் எனக்கு எதிராகச்
சாட்சி சொல்லி கையெழுத்து போட்டுவிட்டு, என்னுடைய
நிலைமை மோசமாக இருக்கிறது, ஆபத்தாக இருக்கிறது, அவ
ருக்கு வந்தால் வரட்டும் எனக்கென்ன என்று நண்பர்களை தீர்
மானித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்று ஏற்றுக்
கொண்டாலும்கூட, அது உண்மை என்று வைத்துக்கொண்
டாலும் கூட அல்லது உண்மைக்கு மாறாக என்று வைத்துக்
கொண்டாலும்கூட அந்த சாட்சியங்கள் இறுதிவரையில் உறுதி
யாக இருப்பதற்கு நம்மிடத்திலே என்ன அதிகாரம் இருக்கிறது?
இந்த நாட்டில் என்ன உத்தரவாதம் இருக்கிறது? அது இல்லை.
அப்படி உண்மைக்கு மாறாகச் சாட்சி சொல்லி, பின்னர் மாற்று
வார்களேயானால் அவர்களுக்கு முதலிலே தண்டனை கிடைக்கக்
கூடிய சட்டம் இந்த நாட்டிலே வந்தாக வேண்டும். அந்த
உத்தரவாதம் இருந்தால் நீதிவிசாரணை வருவதைப்பற்றி
எனக்குக் கவலை இல்லை. பதவியில் இருந்தாலும் சரி, இல்லா
விட்டாலும் சரி, நெருக்கடி வரும்பொழுது ஒரு சாட்சி, நெருக்
கடி தீர்ந்து அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்றால்
அதையே மாற்றிச் சொல்வது என்றால் அப்படிப்பட்ட நண்பர்
களையோ, அப்படிப்பட்ட உறவினர்களையோ, அப்படிப்பட்ட
கட்சித் தோழர்களையோ, அப்படிப்பட்ட பணக்காரர்களையோ
வியாபாரிகளையோ இந்த நாடு கொண்டிருக்கிறது. எந்த
ஆட்சி வந்தாலும் அவர்கள் இஷ்டப்படி மாற்றிக் கொண்டு
போவார்கள் என்றால் அதற்கு ஒரு முடிவு வேண்டாமா? ஆகவே
தான் என்னைப் பொறுத்தவரையில் இங்கே நீதி விசாரணை
வேண்டுமென்றால் நாங்கள் நடத்துவதற்குத் தயாராக இருக்கி
றோம்; ஆனால் சாட்சிகள் முதலில் என்ன சொல்கிறார்களோ
அதையே அவர்கள் மாற்ற முடியாமல் இருக்கின்ற நிலைமை
வேண்டும். மாற்றிச் சொன்னார்கள் என்றால் அதற்குரிய
நியாயத்தை அவர்கள் சொல்வது மட்டுமல்ல, அப்படிச் சொன்ன
வர்கள்மீது ஒரு பெரிய வழக்கை, இரண்டு மூன்று ஆண்டுகள்
நடத்தியாவது, அதற்குப்பிறகு நிரூபித்து தீர்ப்பு அளிப்பது.
அதற்குப்பிறகு இவர்கள் போய் இல்லை என்பது அல்லது
இருக்கிறது என்று இப்படியே போனால் நிலைமை என்ன?

இதற்கு ஒருமுடிவு வந்தாக வேண்டும். அந்த முடிவை மத்திய அரசுச் சட்டமாகக் கொண்டு வருமானால், மாற்றிச் சொன்னால் தண்டனை உண்டு ; மாற்றிச் சொல்லும்போது அதை நிருபிக்காவிட்டால் கடுமையான தண்டனை உண்டு என்று நிலைமை உருவாக்கப்படுமானால் நீதி விசாரணைக்கு நிச்சயமாக ஒரு உத்தரவாதம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் எனக்கு, நீதி விசாரணையை சந்திப்பதைப் பற்றிக் கவலையில்லையென்றாலும் என்ன உத்தரவாதம் என்பதிலேதான் சந்தேகம் இருக்கிறது என்று சொல்லி, இப்படிப்பட்ட நிலைமையிலே நீதி விசாரணை எதற்கெடுத்தாலும் கேட்பார்கள் என்றால் என்ன சொல்வது?

நேற்றையதினம் திருவேங்கடம் என்ற பகுதியில் என்ன நடந்தது என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அங்கே தடுப்புச் சுவர் போட்டதாகச் சொன்னார்கள். அங்கிருந்த காவல் துறையைச்சேர்ந்தவர்களே, போட்டார்கள் விவசாயிகளை அடித்தார்கள், நொறுக்கினார்கள் சுடப்பட்டவர்கள் செத்துவிடவில்லையே என்று சந்தேகப்பட்டு மிதித்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர் உண்மைக்குப் புறம்பாகப் பேசியதாகச் சொல்லத் தயாராக இல்லை. அவருக்குக் கிடைத்த செய்தியை நம்பிச் சொன்னார்கள். ஆனால் நடந்த இடமே திருவேங்கடம் அல்ல. பெயரே மாற்றம். (குறுக்கீடு) துரிஞ்சாபுரம் நிகழ்ச்சியைப் பற்றி (குறுக்கீடு) அதுதான் இது போன்ற செய்திகள் தவறாக வந்து விடுகின்றன. நாம் நம்புகின்றோம். எப்படியாவது நன்மைகள் நடக்க வேண்டுமென்பதற்காக அக்கறை காட்டுகின்ற நேரத்தில் நம்மைச் சுற்றியிருப்பவர்கள் சரியான தகவலைக் கொடுப்பதில்லை.

வேறோரிடத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது என்று இப்பொழுது சொன்னார்கள். எனக்குத் தந்தியிலே தகவல் வந்திருக்கிறது. அது உத்தரவாதம் அல்ல என்பதால் நான் படிக்கவில்லை. கேரள அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அப்படி யாரும் கேட்கவில்லை, கேட்டதாக இல்லையென்று அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். தந்தி உத்தரவாதமா, அது உண்மையானதா என்ற கேள்வி பிறக்கும் என்பதால் நான் அதைப் படிக்கவில்லை. ஆனால், உண்மை நிலை அது. கடிதம் வரட்டும், காண்பிப்போம் என்று நான் காத்திருக்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம் நம்மிடம் கொடுக்கின்ற ஏதோ, யாருக்கோ திருப்தி என்பதற்காக, யார் மீதோ இருக்கிற ஆத்திரத்திற்காக, ஏதோ தகவலைச் சொல்லி, அதைச் சொல்லட்டும், அதனால் விளம்பரம் பெறட்டும், விளம்பரம் சொல்கின்றவருக்கு அல்ல, படித்தவருக்கு. இது ஒரு ஏதோ சொல்வார்களே, (குறுக்கீடு) ' மேனியா ' என்று சொன்னால் அது ஆங்கில வார்த்தை. தமிழில் உண்மையாகச் சொல்லப் போனால், அப்படி ஒரு ஆசை. அது தேவையில்லாத ஒரு ஆசை. தன்னோடு உடன் பிறந்த உடன் பிறந்தவன் என்பது போல் வளர்ந்து விட்ட நிலைமை. அவர்





களால் சும்மா இருக்க முடியாது. அவர்களாகச் சண்டை போட்டுக் கொள்கிறார்கள், அவர்கள் தானே இதற்குப் பதில் சொல்லப் போகிறார்கள். நமக்கென்ன, எழுதிக் கொடுப்போம், படித்து விடுகிறார்கள், என்றுதான் கொடுக்கிறார்கள். இந்த நிலையில் நான் சொல்வது இதுதான். அப்படிப்பட்டவர்களை நம்பி நாம் சொல்லும்போது, அவர்கள் நம்மை வைத்து விளையாடுகிறார்கள் என்று சொல்வதிலே வேதனைப்படுகிறேன். அதைப் பற்றி நான் விசாரித்துப் பார்த்து பெற்ற தகவல்களை இங்கே வைத் திருக்கிறேன். படிப்பதற்கு நிறைய நேரம் ஆகுமே என்ற நிலையில் நான் அவைகளைச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

அதிலே சொல்லியிருப்பது இதுதான். அங்கேயிருக்கின்றவர் களில் இராணுவத்திலிருந்து திரும்பி வந்திருப்பவர்கள் பலர் இருக்கின்றார்கள். அகழி வெட்டியிருக்கின்றார்கள். தடுப்பு வைத்திருக்கின்றார்கள். பக்கத்திலேயிருந்த வீடுகளுக்குமேல் பாராங்கற்களைக் கொண்டு போய் வைத்திருக்கின்றார்கள். இப்படியெல்லாம் தயார் செய்து வைத்துவிட்டு தாக்கி இருக்கின்றார்கள். கடமையைச் செய்யப் போனவர்கள் என்ன செய்ய முடியும் ? நாம் சொல்லவில்லையா ? மக்களைக் காப்பாற்ற முடியாத காவல் துறை எதற்காக இருக்க வேண்டும் என்று கேட்கவில்லையா ? அதே போல் மக்களைத் துன்பப்படுத்துகிற காவல் எதற்காக, என்று நாம் கேட்கிறோம். இரண்டையும் சிந்தித்துப் பார்க்கும்போது. . . . . . . . . . .

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, துப்பாக்கிச்சூடு நடைபெற்ற துரிஞ்சாபுரம் பகுதிக்கு நான் நேரில் சென்று அங்கே உள்ளவர்களையெல்லாம் விசாரித்து வந்தேன். நான் நேரடியாகவே சென்றேன். அந்தக் கிராமத்திலேயும், பக்கத்துக் கிராமத்திலேயும் உள்ள ஏறத்தாழ 200 பேர்களை, அதாவது, ஊரில் தங்கி இருந்த தாய்மார்களையும், ஒருவர், இருவர் வயதானவர்களையும் பார்த்து வந்தேன். நான் பார்த்து வந்த செய்தியையெல்லாம் இப்பொழுது சொல்வது முறையல்ல. கேள்விப்பட்டதை எல்லாம் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. தவறாக, முறைகேடாக துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது என்று ஆதாரப்பூர்வமாக எனக்குத் தெரிகிறது. அது தவறாக இருக்கலாம். அதுவும் தவறு என்று சொல்வதற்கும் சான்று கிடைக்கலாம். இப்பொழுது அரசாங்கத்திற்கு உண்மை தெரிய வேண்டுமென்றால் அரசாங்க இலாகாவைக் கேட்டு அவர்கள் தருகிற பதிலை மட்டும் பெற்றால் பயனில்லை. அதுபற்றி பல விவரங்கள் இருக்கின்றன. நீங்கள் வேண்டுமானால், அரசாங்க அதிகாரிகளே கூட சிலபேர் சான்று சொல்லக் கூடியவர்கள் இருக்கின்றார்கள். இன்னும் தலைமைச் செயலாளரை நேராகச் சந்தித்து முறையிட்ட ஒருவர்கூடச் சான்று சொல்லக்கூடியவர் இருக்கிறார். தலைமைச் செயலாளர் கூடக் கடிதம் எழுதியிருக்கிறார், அவருக்குப் பாதுகாப்பு கொடுக்கும்படி. அந்த விவரங்களிலே

[திரு. க. அன்பழகன்] 1981 பிப்ரவரி 5

இரண்டு கிராமங்களிலே எப்படி, எப்படி நிகழ்ச்சிகள் ஏற்பட்டன என்பதை அரசாங்கத்தினுடைய நன்மைக்காக நீங்கள் விசாரித்துப் பார்ப்பதற்குரிய முறை, மக்கள் சாட்சி சொல்லி தெளிவு படுத்த ஒரு நல்ல வாய்ப்பளிக்கக் கூடியதாக அமைய வேண்டும். இதிலே அரசியல் இல்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். கட்சி மாறுபாட்டிற்காக அல்ல இதைச் சொல்வது? அரசாங்கத்தினுடைய கண்ணையே கூட மறைத்துவிடக் கூடிய காரியங்கள் நடைபெறுமானால் மக்களுடைய கதி என்ன என்பதற்காக, நீங்களாக விசாரிப்பதற்கு ஒரு வழி தேட வேண்டாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11–50)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுகிறது. அதற்குரிய கட்டளைகளை இந்த அரசு இட்டிருக்கிறது. எப்படி நடவடிக்கையை தெளிவாகத் தெரிந்துக் கொள்ள வேண்டுமோ அதைத் தெரிந்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விழுப்புரத்திலே ஒரு பிரச்சினை முன்பு நடந்தது. அதைக் கவனிப்பதற்காக, தெரிந்துக் கொள்வதற்காக நான் சென்றேன். நான் சென்ற போது எனக்குச் சொல்லப்பட்ட பிரச்சினைகள் வேறு. அதே நேரத்தில் இன்னொரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் சென்றபோது அவர்களிடத்தில் சொல்லப்பட்ட நிலைமை வேறு. இந்த இரண்டையும் நாம் நினைவிலே வைத்துக் கொண்டால் அந்தந்த இடத்திலே இருக்கின்ற கட்சிக்காரர்கள் எப்படிப்பட்ட செய்திகளைச் சொல்ல வேண்டுமோ, அவரவர்கள் போகும்போது அதைச் சொல்வதற்கு தயார் படுத்தி வைக்கிற நிலைமை நடந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்காக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதை நான் அலட்சியப்படுத்துகிறேன் என்று பொருளல்ல. எப்படி நிலைமைகள் உருவாகின்றன என்பதை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அதிலே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த சங்கத்தின் தலைவர், இன்று மாத்திரம் அல்ல, முன்பும் சரி, அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் அல்லது முதலமைச்சர் அவரை அழைத்துப் பேசும்போது நேரடியாக ஒன்றைப் பேசுகிறார். வெளியே சென்ற பிறகு, நேர் மாறாக அறிக்கை வெளியிடுகிறார். அதைப் பற்றி நான் வெளியிட்டபோது என் மீது ஆத்திரப்பட்டவர்களும் உண்டு. சங்கத் தலைவர் என்ற முறையில் நாராயணசாமி நாயுடு அவர்களும் மற்றவர்களும் இங்கே வந்து என்னிடமும் அதிகாரிகளிடமும் பேசினார்கள். 12 பைசாவாக மின்சாரக் கட்டணம் குறைக்கிறோம் என்று சொல்லுகிறபோது அவர் சொன்னார் 'என் கையிலே மாலை இல்லையே 'என்றார். எங்கு வேண்டுமானா



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

லும் அரிசியைக் கொண்டு போகலாம் தமிழ்நாட்டுக்குள், அந்தத்
தடையை நீக்குகிறோம் என்று சொன்னபோது, ' நான் உங்களை
தூக்கி ஆட வேண்டும். ஓட வேண்டும் ' என்றும் ' எவ்வளவு
நல்ல காரியம் செய்து விட்டீர்கள் ' என்றும் சொன்னார்கள்.
வெளியே போய் என்ன சொன்னார்கள் ? ' அவர்கள் சொன்ன
தைச் செய்வதில்லை. இப்படிப்பட்ட கொடுமையைச் செய்து
விட்டார்கள். எனவே 10 பைசாவாக ஆக்க வேண்டும், சிறு
விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று கூடாது ' என்று பேசி
னார்கள். நாங்கள் சொன்னால் தவறு. எங்களை விட அனுபவம்
படைத்தவர்கள் என்ன எழுதி இருக்கிறார்கள். சிறு விவசாயிகள்
என்று குறிப்பிடுகிறார்கள். ஏதாவது கொள்கை உண்டா.
அவர்கள் கட்சிக்காரர்களுக்கு செய்கிறார்களா? நிலைமை
அன்றும் சொல்லியிருக்கிறார்கள் இன்று சொல்லுகின்றேன்.
உள்ள நிலைமை இதுதான். அந்த அளவில் இங்கே நான் ஒன்றை
படித்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

போராட்டத் தலைவர் நாராயணசாமிநாயுடு அறிக்கை
இப்போது இல்லை—1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ஆம்
நாளன்று ' கோவை மத்திய சிறைச்சாலையில் என்னைச் சந்
தித்த கோவை உதவிக் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியாள
ரும் காவல் துறை உதவித் தலைவரும், மாவட்டக் கண்காணிப்
பாளரும் என்னுடன் பேச்சு வார்த்தை நடத்த அழைப்பதாகவும்,
முதலமைச்சரும் சட்ட அமைச்சரும் போராட்டத்தைக் கை
விடுமாறு கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெரிவித்
தார். 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ம் நாள்
மாலையே புறப்பட்டுச் சென்று 1972 ஜூன் திங்கள்
9 ஆம் நாளன்று சென்னையில் பேச்சுவார்த்தை நடத்தலாம்
என்றும், சென்னைக்கு வாகன வசதி செய்து தரப்படும் என்று
கூட தெரிவித்தார். இந்த அடிப்படையின் பேரில்தான் வாக்
குறுதிக்குப்பின் ரிமான்டில் இருப்பவர்கள் ? செய்யப்பட்டார்கள்
இப்போது உண்மைக்கு மாறாக சொல்வது வியப்பும், வேதனைக்
கும் உரிய விஷயம்தான். இது சர்வாதிகாரப் போக்கு மனப்
பான்மை.

போராட்டம் முதல்வரை விருப்பத்
இப்போதைய மாதிரிப் ரிமான்டு முடிந்து உதவிக் கண்காணிப்
பைப் பொறுத்து அல்ல. சென்னைக்கு அரசாங்கச் செலவில்
பாளர் வந்து அழைத்து. எங்கள் சங்கத்தின் கட்டடத்திற்கு வருவது
அனுப்புவது உண்டா? எங்கள் சென்னைக்குக் கொண்டு வரு
உண்டா ? அரசாங்கச் செலவில் எல்லாம் திசை திருப்புவதற்
வது உண்டா ? ஆகவே இதை சமாளிப்பதற்கு முதலமைச்சர் செய்த
கான வழி. நிலைமையைச் சமாளிப்பதற்கு விருவிருப்புடன் நடக்கும்.
சூழ்ச்சி. போராட்டம் பன்மடங்கு விருவிருப்புடன் நடக்கும்.
பேச்சு வார்த்தை நடத்த வரவில்லை. பல கட்சித் தலைவர்
களைச் சந்தித்து முடிவெடுக்கத்தான் வந்தோம். நாங்கள்
சௌகரியத்தை எதிர்பார்த்து சிறை செல்லவில்லை.

இன்றைக்கும் அப்படித்தான் சொல்கிறார். அன்று என்ன சொன்னாரோ அதுதான் இன்றைக்கும் சொல்கிறார்கள். அவர் வந்து பார்க்க முடியாது என்று சொன்னபோது, நான் சொன்னேன், நானே வந்து பார்க்கிறேன் என்று. அப்போதும் நான் பார்க்க மாட்டேன் என்றார். இங்கே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அழகாகச் சொன்னார். மெக்காவுக்குப் போகிறோம். ஜெருசலத்திற்குப் போகிறோம். அதைப் போலத்தான் நாராயணசாமி நாயுடு அவர்களையும் பார்க்க ஓடினார் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் என்று அவர் சொன்னார். மகாத்மா காந்தி அவர்களே ஜின்னா அவர்களைப் பார்க்க—பிரிவினை கேட்டபோது சென்றார்கள் என்கிற போது ஒரு சாதாரண எம். ஜி. இராமச்சந்திரன் போய் ஒரு சங்கத் தலைவரைப் பார்க்கக் கூடாதா? இதிலே என்ன தவறு? பார்த்தது உண்மைதான். பேசியது உண்மைதான் ஆனால் நேற்றைய தினம் கலைஞர் அவர்கள் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள் நராயணசாமி நாயுடு அவர்களும், நானும் சந்தித்துப் பேசியபோது பக்கத்தில் இருந்தது போல் சொன்னார்கள். இதையெல்லாம் உத்தரவாதம் கொடுத்து விட்டு வந்தார்கள் என்று. யார் சொன்னது? இப்படிச் சொல்வதை நம்புகிறார்கள். நான் பேசியது என்ன என்பது எனக்கும் அவருக்கும்தான் தெரியும். நேரடியாகப் பேச்சுவார்த்தை என்றால் 4 பேர் உட்கார்ந்து கொண்டு என்னோடு பேசினால் நான் என்ன சொன்னேன், என்பது எல்லாம் வெளியே வரும். அதற்கு வாய்ப்பே கிடையாது. இதையிதைச் சொன்னார்கள், கடைசியாக, இறுதியாக வந்து பார்த்தார் என்று சொன்னார்கள். நாராயணசாமி நாயுடு அவர்கள் சொல்வதை வைத்துக் கொண்டுதான் அந்த முடிவுக்கு வந்தேன். அந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். அவரும் அழைத்தால் வருவார் என்று எண்ணி நானும் அழைத்தேன். என்னிடத்தில் சொன்னவர்கள் பொய் சொன்னதாக நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அவர்களையெல்லாம் நாராயணசாமி நாயுடு அவர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று அவர்களே வருத்தப்பட்டார்கள். அதிலே சில தலைவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களை நம்பி அழைத்தேன். வந்தார்கள். அவர்கள் சொன்னது 1 பிளஸ் 1 அதை ஒப்புக்கொண்டேன். ஒரு முதலமைச்சர் என்ற நிலையில் நான் எதையும் சுமத்தவில்லை. சிலவற்றை இங்கே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்—எதிர்க்கட்சி தலைவர்—முதலமைச்சராக இருந்தபோது—இவர் சொன்னதை அவர்கள் ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நான் அவர்கள் சொன்னதை ஒப்புக் கொண்டு இருக்கிறேன். இருப்பினும், நான் தான் இன்றைய தினம் எதிரி என்கிறார்கள். எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் புதிது பதவிக்கு........





*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாரா
எதிர்க்கட்சித்
யணசாமி நாயுடு அவர்களைச் சந்தித்தபோது
பார்த்தவர்களைப்போல் சொன்
தலைவர் அருகில் இருந்து
நான் எந்த ஆதாரத்தோடு
னார் என்று குறிப்பிட்டார்கள்.
நாயுடு அவர்களைச் சந்தித்து விட்டு,
சொன்னேன் என்றால்,
நம்முடைய முதலமைச்சர்
சட்டமன்றத் தேர்தலின் போது,
கூட்டங்களில் மிகத் தெளிவாகவும்
அவர்கள் பேசிய பல்வேறு
ஒரு கருத்தைப் பேசியதை இந்த அவையிலே
திட்டவட்டமாகவும்
படித்துக் காட்டியிருக்கிறேன்.
நான் சென்ற கூட்டத் தொடரில்
வந்தது என்று படித்துக் காட்டியிருக்
'அண்ணா' பத்திரிகையில்
முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது —
கிறேன். அதிலே
சேர்ந்து அளித்துள்ள
கருணாநிதியும், இந்திரா காங்கிரசும்
'ஆவன செய்வோம்' பரி
குறைந்த பட்ச திட்ட அறிக்கை
என்று இருக்கிறது. நான் கா
சீலிப்போம் என்று
ஏழாவதா
வட்டமாகச் சொல்கிறேன்.
ராகச் சொல்கிறேன். திட்ட
ஒப்புக் கொள்ளாவிட்டாலும்
மத்திய அரசு ஒப்புக் கொண்டாலும்,
கோரிக்கைகள் அனைத்துப்
மாநில அரசின் சார்பாக உங்கள்
அனைத்தும் ரத்து செய்யப்
நிறைவேற்றப்படும். கடன்கள்
அவற்றைச் சொன்னேன். நான்
படும் என்று கூறப்படவில்லை
அருகில் இருந்தால் நீங்கள்
அருகில் இருந்து பார்க்கவில்லை.
அவ்வளவு ரகசியம் பேசியிருக்கமாட்டீர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ரகசியம் பேசு
வைத்துக் கொண்டு பேசுவது
கிறபோது இன்னொருவரை
தனியாகப் பேசும்போது
இல்லை. எதிர்க்கட்சித் தலைவர்
போனார்கள் (சிரிப்பு). அவர்
என்னை அழைத்துக் கொண்டா
ஒவ்வொரு கட்சியைச்
தனியாகத்தான் சென்று பேசினார்.
பார்க்கிறபோது அவர்களுக்கு
சேர்ந்தவர்களும் தனியாகப் போய்
அழைத்துக்கொண்டு போவார்கள்,
வேண்டியவர்களைத்தான்
அழைத்துக்கொண்டு
நம்பிக்கை வைத்து இருப்பவர்களைத்தான்
அவர் என்னை நம்ப முடி
போவார்கள். இந்த விஷயத்தில்
முடியாது (சிரிப்பு). ஆக,
யாது. நான் அவர்களை நம்ப
அவர்கள் மத்திய அரசு
இதிலே பிரச்சனை இல்லை. ஆனால்
(என்ன சொன்னீர்கள்) ........ ஒப்புக் கொண்
........ கொள்ளாவிட்டாலும் — அதிலே ஒரு மாற்றம்
டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும் நிதி தந்தாலும்
செய்யாவிட்டாலும்
— உதவி செய்தாலும்,
வேறு, நிதி ஆதாரத்
ஒத்துழைப்பது என்பது
தராவிட்டாலும்
நாங்கள் செய்கிறோம்
திற்கு உதவி செய்வது என்பது வேறு.
செய்யவில்லை, உங்களுக்கு
என்பதை நீங்கள் செய்யுங்கள் தடை
குறைக்கமாட்டோம். பிளாக்
உரிய அந்தத் தகுதியை நாங்கள்
அனுமதிக்க மாட்டோம் —
லிஸ்ட்டில் சேர்ப்பதற்கு நாங்கள்
சொன்னால் அது உதவி.
நீங்கள் உதவி செய்யுங்கள் என்று
நிதி உதவியும் உண்டு. மற்றதும்
அதைத்தான் சொன்னேன்.
இரண்டும் இல்லாத நிலையில்
உண்டு. இரண்டும் இல்லை.
முறை பிரதம அமைச்சருக்கு கடிதம்
சொல்கிறேன். எத்தனையோ
தெரியும், அவர்களுக்கும்
எழுதினேன். அது எனக்குத்

தெரியும். அத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன். நேரடியாகவும் பேசியிருக்கிறேன். நிதி அமைச்சரிடமும் பேசியிருக்கிறேன். ஆனால் அகில இந்தியப் பிரச்னை என்று அவர்கள் எடுத்துக்கொள்கிறபோது, சில சூழ்நிலைகளில் பகிரங்கமாகவோ, அல்லது வேறு வகையிலோ எங்களுக்கு ஆதரவாக அவர்கள் செல்ல முடியவில்லை. எனக்குப் புரிகிறது.

ஆனால், ஒன்றை அவர்கள் சொல்கிறார்கள். பிரதம அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வன்முறை போராட்டம் கூடாது. எதற்கு எடுத்தாலும் போராட்டங்கள் நடத்தக் கூடாது. பேசி தீர்க்கப்பட வேண்டும். விவாதிக்கப் பட வேண்டும். நாட்டில் பொருள்களின் உற்பத்தி அதிகமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அது சரியாக இருக்கும் என்று அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். நான் சொன்னால் அது வேறு வகை. பிரதம அமைச்சர் அவர்கள் சொன்னால், அதைக்கூட ஒப்புக்கொள்ளக்கூடாதா ? ஆனால் இல்லை. ஆனால் இந்த நிலையில் இங்கே ஒரு படத்தை நான் இங்கே காண்பிக்க விரும்புகிறேன். தடை எங்கே போட்டு இருக்கிறார்கள் என்பதையும், எப்படி விலக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். (ஒரு போட்டோ காண்பித்தார்.)

[நண்பகல் 12-00]

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இதிலே உள்ள பிரச்சனை தடுப்பு போட்டது பற்றியல்ல. தடுப்பு போடவில்லை என்று கிராமவாசிகள் சொல்கிறார்கள். அவர்கள் வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டாம். அது அரசாங்கத்தினுடைய முடிவு. யார் போட்டார்கள் என்ற பிரச்சனைக்குக் கூட போக வேண்டாம். துப்பாக்கிச் சூட்டில் ஏற்பட்டுப்போன விளைவுகளுக்குத்தான் அரசாங்கம் எப்படி பரிகாரம் காணப் போகிறது என்பதை விசாரிக்க வேண்டுமென்று என்னைப் போன்றவர்கள் கருதுகிறார்களே தவிர தடுப்பு போட்ட ஒரு காரணத்தாலே, போட்டது உண்மையாக இருந்தால் கூடச் சுடப்படுகிற எல்லைக்குப் போகத்தான் வேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த சாலையில் இருந்து நானே அந்த இடத்தைப்பார்த்தேன். ஒரு மணிநேரத்திற்குமேல் அங்கே செலவிட்டிருக்கிறேன். ஆகவேதான் அரசாங்கம் அதை விசாரித்து அறிய தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இங்கே சொல்லி, அதை ஒத்துக்கொண்டீர்கள். திரும்ப அந்த சாலையிலே தடுப்பு போட்டதை எடுத்துக் காட்டுகிறபோது, மக்கள் போராடியதாகச் சொல்ல அதை எடுத்துக் காட்டி சொல்லும் போது ஒரு விசாரணை நடத்தினால் தவிர உண்மை தெரியாது என்று கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** அது பற்றிய பிரச்சனையை நான் முற்றிலும் சொல்லிவிட்டேன், என்ன செய்யப் போகிறோம் என்று. ஆகவே, மீண்டும் அந்த பதில்



இராணுவத்திலே பணியாற்றித் தேவையில்லை. என்றாலும் இராணுவத்திலே பணியாற்றித் திரும்பியவர்கள் எப்படியெல்லாம் நடத்த கற்றுக்கொண்டு இருப்பார்கள் என்பதற்கு உதாரணம் — கேரள மாநிலத்தில் முன்பு இங்கே இராஜாஜி அவர்கள் ஆட்சி இந்த காலத்தில் ஒரு தனித் திட்டில் இரண்டு, மூன்று நாட்கள் பெரிய போராட்டமே நடந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இராணுவ யுத்தம்போல் அங்கு நடந்தது என்பதை எல்லாம் வரலாற்றைத் தெரிந்தவர்கள் நன்கு நினைவில் வைத்துக் கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட அனுபவம் உள்ளவர்கள் அங்கே இருந்தார்கள் என்பதால்தான் இப்படிச் செய்ய முடிந்தது என்பதையும் சாதாரண விவசாயிகளுக்கு இதெல்லாம், இந்த முறைகள் எல்லாம் தெரியாது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் விவசாய சம்பந்தமாக, விவசாயப் பிரச்சனை சம்பந்தமாக பேச வேண்டுமென்று சொன்னபோது நான் உடனே ஒத்துக்கொண்டு அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொண்டேன். ஆனால் முன்னாள் முதலமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் 1972 ஆம் ஆண்டு மே மாதம் 19-ஆம் தேதி அன்று கோவையில் திருவாளர்கள் முதலமைச்சரை சந்தித்து மீண்டும் விவசாயச் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவீர்களா என்று கேட்டதற்கு மாண்புமிகு கருணாநிதி அவர்கள் நான் அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க மாட்டேன் ; அவர்களாக வந்தால் ஆட்சேபனை இல்லை ; பேச்சுவார்த்தையின் போது ஒன்றை ஏற்றுக் கொள்கிறார்கள் ; ஆனால் வெளியிலே போன பிறகு வேறு விதமாக அறிக்கை வெளியிடுகிறார்கள் என்று கூறினார். இதைத்தான் நானும் சொன்னேன். நேரிலே வந்து பேசும்போது சம்மதத்திற்கு வருகிறார்கள். ஒன்றைச் சொல்கிறார்கள். போன பிறகு வேறு விதமாக அறிக்கை வெளியிடுகிறார்கள். ஆனால் வெளியிலே இது இன்று மட்டும் வந்த வழக்கம் அல்ல. இது தொன்றுதொட்டு வந்த வழக்கம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அறிக்கையே அதற்கு உத்தரவாதம் ஆகும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல இன்னொரு கருத்தையும் இங்கே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொல்லியிருக்கிறார்கள். செயற்குழு கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தி.மு. கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் தி.மு.க. அரசுக்கு எதிராக இம் மாநிலத்தில் பிற்போக்கு சக்திகளுக்கு காங்கிரஸ், வலது கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவு அளிப்பது குறித்து நிர்வாக உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தார்கள் என்றும் இக்கட்சிகள் தங்களை சமதர்மவாதிகள்—சோசலிஸ்ட்—என்று கூறிக் கொண்டு கோயம்புத்தூரில் பெரிய

னால் எப்படிப்பட்ட நிர்வாகமும், அரசாங்கமும் சரிவர இயங்க முடியாது'' என்று கூறி இருக்கிறார். நாங்கள் சொன்னதை நாங்கள் செய்தாக வேண்டும், அதை நாங்கள் மறுக்கவும் இல்லை, மாற்றவும் இல்லை. முயற்சிப்போம், அதற்காக என்ன வந்தாலும் அதை நிறைவேற்றுவதற்கு நாங்கள் பாடுபடுவோம். ஆனால் எந்த அரசும் இயங்க முடியாது என்று எங்களை விட அனுபவப்பட்ட ஒருவர் முதலமைச்சராக இருக்கும்போது கூறி யிருக்கிறார். ஆகவே இந்த நேரத்தில் அவர் என்ன சொல்லி யிருக்க வேண்டும்? '' நீங்கள் தவறாகச் சொல்லி விட்டீர்கள், ஏதோ தேர்தலிலே வெற்றி பெறுவதற்காகச் சொல்லி விட்டீர் கள், அல்லது நீங்கள் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் சொன்னீர்கள், அதிலே 73 கோடி ரூபாய் என்ற அளவுக்கு இப்போது நிறைவேற்றி விட்டீர்கள், வேண்டாம், [illegible] அறை [illegible] நாம் [illegible], உர [illegible] எல்லாம் [illegible], [illegible], அந்த விவசாயிகளைப் [illegible] 97,030 [illegible] [illegible] [illegible] சேர்ந்து [illegible]'' [illegible] அவர் [illegible] —[illegible] அல்ல— [illegible] என்ற [illegible] [illegible] என்று [illegible] தூண்டு தல் [illegible]? [illegible] செய்கிறார்கள் என்று [illegible] நாங்கள் [illegible] காரணமாக [illegible] அப்படி [illegible] [illegible] நாங்கள் [illegible] என்று செய் யக்கூடிய [illegible] வகையில் இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட வேண்டியது என்னுடைய மாபெரும் கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் ஏதோ எல்லோரையும் கைது செய்து விட்டோம், தண்டித்து விட்டோம் என்றெல்லாம் சொல்கிறார் கள். ஆனால் எங்களைப் பொறுத்த வரையில் நான் இங்கே ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சிலர் மீது அதாவது கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற வகையில் சிலர் மீது வழக்கு மன்றத்திலே தீர்ப்பளிக்கப்பட் டிருக்கலாம். அதிலேயும் பலபேர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் கூட நா[illegible]றிந்த உண்மை. ஆனால் அன்றை[illegible]ம் யார் யாருக்கு என்னென்ன தண்டனை என்பதைப் பொறுத்த வரையில் ஒன்றிரண்டு மட்டும் படித்தால் போதும் என்று கருது கிறேன். ஏதோ நாங்கள் போய் இரவோடு இரவாக எல்லோரை



நிலச்சுவாந்தார்கள் நடத்தும்—இதைத்தான் நானும் குறிப்பிட் டேன்—நிலச்சுவாந்தார்கள் நடத்தும் விவசாயப் போராட்ட டத்தை ஆதரிக்கிறார்கள் என்றும் அந்தக் கட்சிகள் ஏனைய மாநிலங்களில், குறிப்பாக காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங் களிலுள்ள பின் தங்கிய வீதங்களை கருதிப் பார்க்காமல் இது தொடர்பாக நிலச்சுவாந்தார்கள் உடன் சேர்ந்துக் கொண்டு உள்ளார்கள் என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய கொள்கைக்கு முரணாக நடந்துக் கொள்கிறார்கள் என்று செயற்குழு உறுப்பினர்கள் கருதினார்கள் என்று கூறினார். இதை நாங்களும்தான் சொல்லு கிறோம்.

பணக்கார விவசாயிகள், ஏகபோக முதலாளிகள், படித்து சம்பாதித்து வாழ்க்கையிலே வசதி பெற்றிருக்கிறவர்கள் ஏழை விவசாயிகளைத் தூண்டி விடுகிறார்கள். போராட்டங்களுக்கு அங்கே அவர்களை அனுப்பிவிட்டு, பலி கொடுத்துவிட்டு, இங்கே அவர்கள் வசதியாக வாழ்கிறார்கள் என்று சொன்னால் எங்கள் மீது அந்நியாயம் வருகிறது. [illegible] சட்டமன்றத்தில் சொன் னேன்; [illegible] [illegible]. இந்த ஒரு [illegible] முதலமைச்ச ஆதாயம் போதும் என்று [illegible] செய்தார்கள்; தூண்டி ராக [illegible] அப்படி [illegible] போராட்டம் நடத்தினார்கள். விட்டார்கள். நிலச்சுவாந்தார்கள் போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, இன்றும் அவர்கள் [illegible] நிலைமை வேறு; சாதாரண விவசாயிகள், அவர்களுடைய நிலைமை வேறு; உழைக்கும் விவசாயிகள் நிலைமை வேறு; ஏழை விவசாயிகள், பணக்கார விவசாயிகள், அவர்களை ஆட்டிப் படைக்கின்ற நிலைமை வேறு.

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்றால் நட வடிக்கையை நாம் கட்டாயம் சரியான முறையிலே எடுத்தாக வேண்டும். [illegible] சொல்லும்போது இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளன்று முன்னாள் முதலமைச்சரவர்கள் தெரிவித்ததை இங்கே நான் படிக்கிறேன். '' ஏனைய கோரிக்கைகள் தொடர்பான விவசாயிகள் போராட் டம் மத்திய அரசுக்கு எதிரான ஒன்றேயாகும்.'' இதை இன் னொரு முறை நான் படிக்கிறேன். '' ஏனைய கோரிக்கைகள் தொடர்பான விவசாயிகள் போராட்டம் மத்திய அரசுக்கு எதிரானதேயாகும். அவை மாநில அரசுக்கு எதிரானது அல்ல, விவசாயிகள் நடத்தும் போராட்டம் எனது கட்சியின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சக்திகள் இம்மாதிரி சட்டம் ஒழுங்கைச் சீர்குலைய வைக்கும் முயற்சியாகும் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்று திரு. கருணாநிதி அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள். விவசாயிகள் வைத்த 12 அம்ச கோரிக்கைகள் குறித்து திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிடுகையில் ''கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

யும் கைது செய்து விட்டோம் என்று சொல்கிறார்கள். பாதுகாப்புச் சட்டத்தின் படி நாராயணசாமி நாயுடு அவர்களைக் கைது செய்து விட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் வந்து இங்கே பேசியதற்கு பிறகு விட்டு விட்டார்கள். என்ன அவ்வளவு? என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்டார்கள். நான் ஒன்றை இந்த மாமன்றத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நாராயணசாமி நாயுடு அவர்களை மட்டும் அல்ல, சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு—அரசியல் வாதிகளின் நிலைமை வேறு. அவர்கள் அத்தகைய நிலைமைக்கு வர மாட்டார்கள் என்பதை வைத்துக் கொண்டு நான் சொல்கிறேன்—சமுதாயத்திலே இருக்கின்ற மக்களிடையே ஜாதி உணர்வைத் தூண்டுகின்ற நிலைமையை உண்டாக்கிவிட்டு, அவர்களை மதத்தின் மூலமாகப் போராட வைத்து பாலைக் கொட்டுவது போன்ற வேறு பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு இவ்வாறு செய்வது இப்போது மட்டுமல்ல. ''பாலைக் கொட்டியிருக்கிறார்கள், கட்டை வண்டியை நிறுத்தி வைத்து மக்கள் போக முடியாமல் போக்குவரத்தைத் தடுத்திருக்கிறார்கள், இதற்கெல்லாம் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று இதற்கு முன்பும் கூட சொல்லி இருக்கிறார்கள்.—அப்படிப்பட்ட நிலையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சமூக விரோதிகள் மீது பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த நிச்சயமாக இந்தத் தமிழக அரசு தயங்காது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10).

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னதற்காகவோ, அல்லது இந்திரா காந்தி அம்மையார் சொன்னார்களே அவர்களை வெளியே விட்டு விடுவோம் என்பதற்காகவோ, நாங்கள் விட்டு விடவில்லை. எங்களிடம் வந்த விவசாயச் சங்கத் தலைவர்கள் சொன்னார்கள். அவர்களை வெளியே விட்டு விடுங்கள். சந்தித்துப் பேசட்டும் என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டுக் கொண்டதற்குப் பிறகுதான் நாங்கள் அவர்களை வெளியே விட்டோம். அதுதான் உண்மை. தயவு செய்து உறுப்பினர்கள் இதை தெரிந்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் எங்களையெல்லாம் மிக நன்றாக புரிந்தவர்கள், இன்னும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்கிற நேரத்தில் உண்மையைத்தான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து வைக்க வேண்டிய அவசியம் ஜாமீனிலே அவர்கள் வெளியே வரக்கூடாது என்பதற்காகத்தானே தவிர வேறொன்றும் இல்லை. வெளியே வந்து மீண்டும் இப்படிப்பட்ட வன்முறைக் கிளர்ச்சிகளை வளர்க்கக் கூடாது என்பதற்காகத்தானே தவிர வேறொன்றும் இல்லை.



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இந்த நிலை எங்களுக்கு மட்டுமல்ல. மத்திய அமைச்சர் அவை
யிலே இருப்பவர்களுக்கும் கூட இந்த யோசனை இருக்கிறது.
ஏன் என்.ஜி.ஓ.க்களை ஆந்திராவிலே அப்படி கைது செய்ய
வில்லையா? நாங்கள் இங்கு அப்படிச் செய்யவில்லையே.
இந்த அரசை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிற என்.ஜி.ஓ.
சங்கத் தலைவரை இன்றைய தினம் மாநாட்டுக்குத் தலைமை
தாங்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் குறுக்கே
போக வில்லையே. மக்கள் நம்பிக்கையில் நாங்கள் நிச்சயமாக
வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில நாங்கள் நிச்சயமாக
இருக்கிறோம். அவர்கள் திருந்துவார்கள் என்று நாங்கள் எதிர்
பார்க்கிறோம். நிர்வாகத்திலே கோளாறு, நிர்வாகத்திலே
ஒத்துழையாமை இந்த அரசை ஒழிக்க வேண்டும் என்கிற எண்
ணத்தையும அடிப்படையாகக் வைத்துக் கொண்டு, நாங்கள் இந்த
அரசின் பணியாளர்கள், அலுவலர்கள் என்று சொல்வது எப்படி
நியாயம் என்பதை, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், இதை
அந்த அரசு ஏற்றுக் கொள்ளாது, ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.
ஆனால், நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரி
வித்துக் கொள்கிறேன். இதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னா
லேயே நான் ஆதாரங்களோடு பேசியிருக்கிறேன். ஆனால்,
இன்னும் அவர்கள் மீது எதிராக அப்படியெல்லாம் எந்தவித
நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி நிலைமை எல்லாம்
இருந்தும்கூட, இந்தச் சட்டம் இங்கே இருந்தது. இப்பொழுது
கூட ஒரு தடுப்புச் சட்டம் வந்தது. நாங்களே கொண்டு வந்
திருக்கிறோம். தொழிலாளர்கள் மற்றவர்களுக்கெல்லாம் என்று
கருதுகிறேன். ஆனால் சட்டம் கொண்டு வந்திருக்கிறோமே
தவிர, அத்தகைய தடுப்புச் சட்டங்கள் இங்கே பயன்படுத்தப்
படுகிறதா? தூங்குகிறது. பயன்பட வேண்டிய அவசியம்
எங்களுக்கு இல்லை. அந்த நிலைமை ஏற்படக் கூடாது என்பது
தான் என்னுடைய ஆசையும் கூட.

அதை நான் இங்கே சொல்லும்போது, இந்த விவசாயிக
ளுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அவர்கள் சில
சமயம் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மகாத்மா காந்தியின்,
அந்த அறவழியிலே போராட்டம் நடத்துகிறோம் என்று சொல்
கிறார்கள், முன்பெல்லாம்—நான் யாரையும் இழிவு படுத்திப்
பேசுவதாக நினைக்க வேண்டாம்— கம்யூனிஸ்ட் தொண்டர்கள்,
அல்லது அதுபோன்று இருப்பவர்கள் எல்லாம் சுதந்திரக் கால
போராட்டம் நடக்கும்போது, பிரச்சினைகள் வரும்போது அவர்
கள் அண்டர்-கிரவுண்ட் என்று சொல்லப்படுகிற தலைமறை
வாகியிருப்பார்கள். அதைச் சொல்லிவிட்டே செய்வார்கள்.
அவர்கள் அப்படித்தான் செய்தார்கள் என்பதும் தெரியும். நாங்
கள் நினைத்தால், எங்களை யாரும் கண்டு பிடிக்க முடியாது
என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூட இங்கே கூட சொல்லி
யிருக்கிறார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

ஆனால் அஹிம்சை வழியிலே, அற வழியிலே, மகாத்மா காந்தி வழியிலே போராட்டம் நடத்துகிறதாக சொல்கிற நாராயணசாமி நாயுடு சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் என்ன செய்தார்கள்? பாலை கொட்டினார்கள். போக்குவரத்தைத் தடை செய்தார்கள். பஸ்ஸை கொளுத்தினார்கள். இது மகாத்மா காந்தியின் கொள்கை இல்லையே. அவர் இந்தக் கொள்கையை சொல்லவே இல்லையே. எங்கே போராடுகிறோம். யார் யார் போராடுகிறோம். எத்தனை மணிக்குப் போராட்டம் நடத்தப் போகிறோம். எங்கே அந்தப் போராட்டத்தைத் தொடங்கப் போகிறோம் என்பதையெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டு, அதற்குப் பிறகு தான் அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். இங்கே நிலைமை அப்படி இல்லையே. 50 பேர்கள் செத்தால் தான் நல்லது. அதற்குப் பிறகு தான் நமக்கு வெற்றி என்கிற கொள்கையில் அல்லவா அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இந்த விவசாயச் சங்கத்தின் கொள்கை என்பது பற்றி ஒரு உதாரணத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே அவர்கள் விவசாயிகளாக இருந்தால், ஏழை விவசாயிகளுடைய துன்பத்தை தெரிந்துக் கொண்டிருப்பவர்களானால், தங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றாலும் கூட, மின்சாரம் பெற்றிருப்பவர்களின் வீட்டிலே போய் அங்கு இருக்கக் கூடிய மின்சார இணைப்பை துண்டிப்பார்களா? டிரான்ஸ்பார்மரை அழிப்பார்களா? மறுபடியும் அதை உருவாக்க வேண்டாமா? பணம் கட்டி விட்டார்களே என்ற ஆத்திரத்தில், தாங்கள் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்பதற்காக, அந்த வீடுகளிலே இருக்கிற மின்சாரத்தை, அதன் தொடர்பைத் துண்டிப்பது, இது போன்ற துன்பங்களை ஏற்படுத்துவது போன்ற செயல்களை செய்பவர்கள் மகாத்மா காந்தியின் அறவழியிலே போராட்டத்தை நடத்துபவர்களா என்று கேட்கிறேன்?

இன்னொன்றும் கேட்கிறேன். போராட்டத்திற்கு, அதன் குழுவிற்குத் தலைமை வகிப்பவர்களைத் தேடினோம். காணோம். அந்தக் குழுவின் தலைவர் என்கிற முறையில் விவசாயி அவர்களை காவல் துறையினர் தேடுகிறார்கள். அவரைக் காணோம். இங்கே கூட பேசியிருக்கிறார்கள். மக்களுக்குத் தெரியும்.

போராட்டம் நடத்தச் சொல்லிவிட்டு அவர்கள் எல்லாம் நாம் விரும்பத்தகாத அளவிற்குக் கொடுமையான காரியங்களில் இறங்கி மக்களுக்குத் துன்பம் ஏற்படுத்தி விட்டு, தூண்டிவிட்டு இவர்கள் வசதியாகப் போய் எங்கேயாவது நம்முடைய தமிழக அரசு செல்லமுடியாத இடங்களில் போய் பதுங்கிக் கொள்கிறார்கள் என்றால் அதற்கு பக்கத்திலுள்ள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது ஒத்துழைக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? இது நியாயம் அல்ல. இது அகிம்சாப் போராட்டம் அல்ல. அப்படிப்பட்டவர்கள் இன்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். முன்பு சொன்னார்கள், அழைத்தால் வருவேன் என்று. எந்த நண்பர்களை அனுப்பி வைத்துப் பேசச் சொன்னார்களோ அதே நண்



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

1981 பிப்ரவரி 5]

பர்கள் மீண்டும் சொல்கிறார்கள் நாங்கள் அழைத்தால் வர மாட்டேன் என்கிறார்கள் என்று. சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள், அதை நீக்க வேண்டும், இப்போது அவை எல்லா வற்றையும் ஏற்றுக்கொண்டால் சந்திப்பேன் என்று சொல்கிறார் கள். நான் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு எந்தளவிற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு பொறுப்பு களையும் சுமந்துக் கொண்டு சூழ்நிலை கேள்விக்குறியை ஏற் படுத்துகிற அளவிற்கு நாங்கள் பணிகளைச் செய்கிறோம்—அந்த அளவிற்கு தந்து விட்டோம். இதையும் மீறி விவசாயப் பெருங் குடி மக்கள் சார்பாக என்று சொல்லி ஏதாவது போராட்டத் தைத் தொடங்குவதன் மூலம் தமிழக மக்களுக்கு சமூக துரோகம் செய்கிற அளவிற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பார்களே யானால் இந்த அரசு வாளாயிராது என்பதை கண்டிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (பலத்த கரவொலி).

ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசு பாதுகாப்பு தரும். ஏழை விவசாயிகளுடைய கடன்களை நிச்சயமாக தீர்ப்பதற்கு எந்த வழியையும் ஏற்றுக் கொள்ள இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது நாராயணசாமி உட்பட அநேகமாக கோவை மாவட்டத்தில் விவசாயச் சங்கம் அமைத்து அனைத்து முக்கிய தலைவர்களும் இரவு திடீரென்று முன் எச்சரிக்கையோடு அவர்கள் தங்கியிருந்த ஹோட்டல்களில், சங்க அலுவலகத்திலும் வந்து கைது செய்யப்பட்டார்கள். இதைச் செய்வது, திடீரென்று இரவில் போய் கைது செய்யப்பட்டது நியாயம். ஏனென்றால் அவர்கள் நிச்சயமாக வன்முறையைத் தூண்டுபவர்கள். எனக்கு நன்கு தெரியும். நான் அந்த ஆண்டு அங்கே இருந்திருந்தால் அப்படித் தான் செய்திருப்பேன். இதே போல் செய்ய வேண்டுமென்று அவர்கள் நினைத்திருந்தால் நான் ஒத்துழைப்பு தந்திருப்பேன். அதை நான் பேசியிருப்பேன். மாநாட்டில் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறோம். அந்தக் கருத்தில் நான் பின் வாங்க வில்லை. மக்களை துன்புறுத்தி, மக்களுக்கு வேண்டிய தேவை களை அவர்கள் பெறவிடாமல் தடுப்பது என்பது அது சமூக விரோதச் செயல். அதை ஒத்துக்கொள்ள முடியாது. எவ் வளவோ கட்சிகள் போராடுகின்றன. போராட்டம் நடத்துவ தாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். பாலைக் கொட்டுவேன் என்று அவர்கள் சொல்லவில்லை. அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் தான் இப்படிப்பட்ட வன்முறைகளை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தீர்மானம் போடுகிறார்கள். ஆனால் அவர்கள் மட்டும் அதைப்பற்றி அப்படி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அப்படிச் செய்வோம் என்று சொன்னால் நிச்சயமாக இந்த அரசு விட்டுக் கொடுக்காது என்றும், ஏழை விவசாயிகள், சாதாரணமாக சமூகத்தில் இருக்கக்கூடிய மற்ற மக்கள், அலுவலகங்களில்

இருக்கிறவர்கள் அவர்கள் வாய்ப்பு வசதிகளைக் குறைப்பதற்கு இல்லாமல் செய்வதற்கு அப்படிப்பட்டவர்கள் முயன்றால் உங்கள் ஒத்துழைப்போடு நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

19—5—1972-ம், 20—5—1972 அன்றும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி திருப்பூர் வட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்னால் மறியல் செய்திருக்கும் முத்துசாமி மற்றும் 163 விவசாயிகளுக்கு தலா மூன்று மாத கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இது போன்று பல இருக்கின்றன. இவைகளை எல்லாம் நான் சொல்லியாக வேண்டும். மே 19 ஆம் நாள் அன்று 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் மறியல் செய்த மாவட்ட விவசாயச் சங்கத்தைச் சார்ந்தவர்கள், திரு. மன்றாடியார் உட்பட 28 பேர்களுக்கு தலா மூன்று மாத கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது, சட்டவிரோதமாக கூடிய குற்றத்திற்காக. இது போன்று நிறைய குறிப்புகள் இருக்கின்றன.

[பிற்பகல் 12-20].

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னதற்காக 10—6—1972 அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கோயம்புத்தூர் விவசாயிகள் போராட்டம் மூன்று மாதங்கள் நீடித்த பிறகு கைவிடப்படுவதற்கு தான் புதிய உறுதிமொழி எதுவும் கொடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். முதலமைச்சர் சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு பேச்சு வார்த்தைகளுக்கு ஒப்புக்கொண்டால் போராட்டம் கைவிடப்படும் என்று கூறப்படுவதை செய்தியாளரிடம் அறிவித்தார். இது எல்லாம் நாராயணசாமி நாயுடு சொல்லுகிறார். இதை எல்லாம் ஒப்புக் கொண்டார் அதாவது வெளியே வந்தோம் என்று. உண்மை என்னவென்றால் விவசாயிகள் தான் போராட்டத்தை நிறுத்திவிட்டு முதலமைச்சரைச் சந்தித்து அவர்கள் கோரிக்கை குறித்து விவாதம் நடத்த விரும்பினார்கள் என்று கூறினார். "கடந்த ஏப்ரல் மாதம் கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் பிரதிநிதிகளும் சட்டமன்ற உறுப்பினர்களு தம்மைச் சந்தித்த போது மின் கட்டணத்தில் சில சலுகைகள் அளிப்பது பற்றி கவனிப்பதாகக் கூறியதாகவும் மின்சக்தி கொண்டு இயங்கும் சில தொழில்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அடிப்படையில் மின் கட்டணசலுகை வழங்குவதாகக் கூறியிருந்தார்கள். இத்தகைய வருமான வரிக் கணக்குகளிலும் சில இடர்பாடுகளை நீக்குவதாகக் கூறுகிறார்கள். விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டு பெருமளவில் விவசாயிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து காமராஜர் அவர்களுக்குக் பதிலளிக்கையில் "மற்றவர்களுக்குப் போதனை செய்ய துடிக்கிறவர்கள் தங்களுடைய கடந்த கால நடவடிக்கையை நினைத்





துப் பார்க்க வேண்டும்" என்று கூறினார். இதை நான் இங்கே சொல்லுவதற்குக் காரணம், எந்த ஆட்சியில் இருப்பவர் களும் உண்மை மற்றவர்களுக்குத் தெரியாத நேரத்தில் இந்தப் பதிலைச் சொல்லாமல் இருக்கமாட்டார்கள் என்ற வகையில் தான் இந்தக் கருத்தை நான் ஏற்றுச் சொல்லுகிறேன். அதைப் போல் இன்றைய தினம் நாங்கள் ஆட்சியில் இருக்கிறபோது எங்களுக்கு வருகின்ற தகவல்கள், போடுகின்ற திட்டங்கள், அவர் யார், யாரைச் சந்தித்து யோசனை கேட்கிறார்கள், எப்படிப்பட்ட யோசனைகள் அவருக்குத் தரப்படுகின்றன என் பதை எல்லாம் அறியும்போது நாங்கள் வேதனைப்படாமல் இருக்க முடியாது, நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது.

அது போலவே, கிராமஅதிகாரிகள் பிரச்சினையில் நான் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு ஓரிரு வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும்போது விரிவாகச் சொல்லுகிறேன் என்றாலும் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமை இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

கிராமஅதிகாரிகளை நாங்கள் திடீரென்று போய் எல்லா வற்றையும் பறித்துக் கொண்டு வந்து விட்டோம் என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டு. அதைப் பற்றிக் குறிப்பிட்டு வந்திருக்கிறார் கள். நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்—மூன்று நான்கு நாட்கள், ஏழு எட்டு நாட்கள் தொடர்ந்து சென்று அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள், அதிகாரிகள். இப்போது அந்தப் பொறுப்பை ஏற்றுச் செயல்படுகிறவர்களுக்கு அதிகமாக 100 ரூபாய் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி அவர்கள் இல்லாததால் வேலைகள் ஸ்தம்பித்துப் போய்விட்டன என்பது பொருத்தமல்ல, உண்மைக்கு மாறானது என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் அண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதிக்குச் சென்றபோது, அங்கே பெண்கள் எல்லாம் கற்பழிக்கப்பட்டார்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் துன்புறுத்தப் பட்டார்கள் என்ற செய்திகள் வந்த நிலைமையைக் கவனிக்கச் சென்ற போது அங்கே சொன்னவைகளை நான் சொல்லியாக வேண்டும். ஏதோ வெளியில் இருப்பவர்கள் ஜாதிப் பிரச்சினையைத் தூண்டிவிட்டு முக்குலத்தோருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையில் போராட்டம் ஏற்படும் வகையில் கருத்துக் களைப் பேசினார்கள். அதையும் நான் சொல்லிவிட்டு வந்தேன். அந்தப் பெண்கள் திருமணமாகாதவர்கள்— ஆனவர்கள் அவர்கள் எல்லாம், உறவினர்கள் எல்லாம் சொன்னது முக்குலத்தோர் அனைவரும் தவறு செய்தார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. மீண்டும் சட்டமன்றத்தில் அங்கத்தினர்கள் முன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் கள் அப்படிப்பட்ட படுபாதகமான செயல்களைச் செய்தார்கள்

என்று சொன்னார்கள். முக்குலத்தோரில் பெரும் பகுதியினர் தங்களுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள், அதே போன்று நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களும் ஏனைய மற்றவர்களும் பாதுகாப்பைத் தருகிறார்கள். ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர், கிராம அதிகாரி பொறுப்பில் இருப்பவர், இந்தக் கொடுமையான காரியத்தைச் செய்தார் என்று சொன்னார்கள். இந்த ஒருவரை வைத்து 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எல்லோரையும் ஒன்றாக நான் கணக்குப் போட்டு விட்டேன் என்று சொல்லக்கூடாது. சொல்லத் தயாராக இல்லை. நான் ஒன்றைச் சொல்வேன். கிராம அதிகாரிகளாக இருந்தவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு ஆசையுடையவர்களாக இருந்திருக்கலாம், சிலர் நல்லவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் அதே நேரத்திலே அந்தப் பதவிகள் தேவையற்றவை என்ற அளவுக்கு மக்கள் மத்தியிலே கிராமப் புறங்களிலே ஒரு பெரிய சுமையாகவும் ஒரு கொடுமைக்காரர் ஆட்சியில் ஒப்படைக்கப்பட்டால் எப்படியிருக்குமோ அப்படி மக்கள் அதிலே அகப்பட்டு சிக்கி நலிந்து போய்க் கொண்டிருந்தார்கள் என்பதையும் இங்கே இருக்கின்றவர்கள் பெரும்பாலோர் அல்ல, எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களுக்குத் தெரியாதது அல்ல, 1973 ஆம் ஆண்டு கூட அப்படி ஒரு யோசனை வந்தது. நிறுத்திவிட்டாலும்கூட வந்ததற்குக் காரணமே இப்படிப்பட்ட செய்திகள் வேறு காரணங்கள் இல்லாமல் இருக்க முடியாது. அதை நிறைவேற்றினார்களா இல்லையா என்பது வேறு; ஏன் நிறைவேற்றவில்லை என்பதைப்பற்றி நான் குறைசொல்லவில்லை. நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்றால் கர்நாடகத்திலே அப்படியில்லையா, ஆந்திரத்திலே அப்படியில்லையா என்று கேட்கிறார்கள். அங்கே பகுதி நேர ஊழியர்களாக இருந்தாலும்கூட அங்கே இருந்த நிலைமைகளே வேறு, அவர்களை வேலையைவிட்டு அகற்றும்பொழுது அவர்களுக்கு மானியமாகக் கொடுத்திருந்த நிலங்களை அரசு எடுத்துக்கொண்டது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே நட்ட ஈடு கொடுத்தார்கள். இதற்காக நட்ட ஈடு கொடுப்பதிலே எதிராக இருக்கிறோம் என்று யாரும் கருத வேண்டிய தேவையில்லை.

* திரு. எல். இளையபெருமாள்: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், கனம் சபாநாயகர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே செங்கனாங்கும் விஷயமாக முதலமைச்சர் அவர்களுக்கு நான் சமுதாயத்தின் பெயராலும் இந்தச் சபையின் உறுப்பினர் என்ற பெயராலும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருப்பதோடு அவர்கள் சென்று, பார்த்து உண்மையை எடுத்துக் கூறுகிற வரையிலும் அங்கே இருந்த போலீஸ் அதிகாரிகளும் ரெவின்யூ அதிகாரிகளும் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொன்னதற்கும் மத்திய அரசாங்கத்திலே இருக்கிற அமைச்சர் பெருமகன் ஒருவர் அங்கு 50 வயதுக்கு மேற்பட்ட இழைகள்





தான் இருந்தார்கள். இளம்பெண்கள் இல்லை கற்பழிக்கப்படவில்லை என்று சொன்னதற்கும் மத்திய அரசுக்கு மாநில அரசு இதுவரையிலும் உண்மையான தகவலை அறிவித்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, விசாரணை முடியவில்லை, விசாரணை முடிந்த வுடன் அதற்குப் பிறகு தீர்ப்பு என்ன என்பதைச் சொல்ல வேண்டும். அதோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நான் முன்பே சொன்னேன். எதிர்கட்சித் துணை தலைவர் பேராசிரியர் அவர்களிடம் சொன்னேன். அந்தந்த கட்சிக்காரர்கள் போகிறபோது அதற்கு ஏற்ப சாட்சி சொல்கிறார்கள். அதுதான் நிலைமை ஆகவே அதை நம்பி சொல்லியிருக்கலாம். ஆனால் என்ன நிலைமை என்பதை வைத்துக் கொண்டு இன்னார் பேசினார்களா இன்னார் சொன்னார்களா என்பதை மட்டும் வைத்துக்கொண்டு பரிசீலிப்பதைவிட என்ன நடந்தது என்பதை விசாரணையின் மூலமாகத் தெரிந்து கொண்டு அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்போம், அதற்குப் பிறகு அவசியமானால் மத்திய அரசுக்கோ தலைவர்களுக்கோ சொல்வோம் என்ற நிலைமையை நாம் பின்பற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்லும்போது தரமுடியுமா என்று கேட்டார்கள். வேலைக்கு உத்தரவாதம் சர்வீஸ் கமிஷன்—தேர்வாணைக் குழுவின் மூலமாக அவர்கள் முயலலாம். இன்னாருக்கு வேலை கொடுப்பது என்ற நிச்சயத்தோடு முடிவு எடுத்துக்கொண்டு அந்தப் பணியை மேற்கொள்ளவில்லை. அது மட்டுமல்ல இப்பொழுது இருக்கிற நிலைமைகள் படி, விகிதாச்சாரப்படி 18 சத விகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளுக்கு அங்கே இடம் கிடைக்கும், அதேபோல் பிற்பட்ட சமூகத்தினருக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது போன்ற வாய்ப்பு கிடைக்கும்போது ஓரளவுக்கு சமுதாயத்திலே பின்னுக்குத் தள்ளப்பட்டவர்கள் கைகட்டி வாழவேண்டிய நிலையில் உள்ளவர்கள் மேல்நிலைக்கு வந்து சமுதாயத்திலே ஒரு பகுதிக்குச் சொந்தக்காரர்களாகி அந்தக் கிராமத்தை நடத்துகிற அளவுக்கு அவர்கள் வாய்ப்பைப் பெறுவார்களேயானால் கொஞ்சம் கொஞ்சமாக இங்கே பெரியார் அவர்களுடைய படத்தைக் காண்பித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதைப்போல் அப்படிப்பட்ட எண்ணம் நம் உள்ளத்திலே மட்டுமல்லாமல் செயலிலே வரும் வேளையெல்லாம் என்பதைச் சொல்லி அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வழிகோலும் என்று சொல்ல விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 5

திரு. ந. சுந்தரராஜ் : முதலமைச்சர் அவர்கள் சர்வீஸ் கமிஷன மூலமாக தேர்வு நடைபெறும் என்று சொன்னார்கள் ஆனால் முதலமைச்சர் கிராம அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந் தவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்கள் முன்னால் நடந்த பேச்சுவார்த்தையிலே மாநிலத்திலே உள்ள தலைமைச் செயலாளர், ரெவின்யூ செயலாளர், நிதித் துறைச் செயலாளர் ஆகியோர் அது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்துவார்க . அதற்கான முடிவை அரசு நிறைவேற்றும் என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கருத்து என்ன கருத்து என்பதை முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா?

[பிற்பகல் 12.30]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு ஒன்றை நான் கூற விரும்புகிறேன். வந்தவர்கள் என்னைக் கண்டு பேசினார்கள்; மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியவர்களும் இருந்தார்கள்; தலைமைச் செயலாளரும் இருந்தார். அவர்களிடம் சொல்லி தலைமைச் செயலாளரைச் சந்தியுங்கள், பேசுங்கள், விரைவிலே முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். வந்தவர்கள், அதிலே வந்த இளைஞர்கள் சொன்னார்கள், ஒரு நியாயமான பிரச்சனையை எங்கள் முன்னால் எழுப்பினார்கள். அதாவது பத்தாண்டுகளுக்கு முன்னால் ஒரு இளைஞர் அந்தப் பதவிக்கு வந்திருக்கலாம்; அப்பொழுது அவருக்கு 24 வயது, 25 வயது ஆகியிருக்கலாம்; இப்பொழுது அவருக்கு 32 வயது, 34 வயது ஆகியிருக்கும். ஆனால் இப்பொழுது 30 வயதுக்குள்ளவர் களுக்கு வாய்ப்பு என்று சொன்னால் இப்படிப்பட்ட இளைஞர் களுக்கு பத்தாண்டுகள் அனுபவப்பட்டவர்களுக்கு வாய்ப் பில்லாமல் போய்விடுகிறது, அதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லும்பொழுது சொன்னேன். இந்தப் பிரச்னை புதிய பிரச்சனையாக இருக்கிறது, அதைப்பற்றி அரசு கவனிக்கும். நீங்கள் விவாதியுங்கள், அதற்குப் பிறகு தேர்வாணைக் குழுவிற்கு புதிய யோசனைகள், உத்தரவுகள் அல்லது வேண்டுகோள் அனுப்ப வேண்டுமென்றால், விதிமுறைகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றால் எந்த அடிப்படையிலே செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு நிச்சயமாக நாங்கள் விருப்பம் காண்பிப்போம்; அதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை; எப்படி யாவது அனுப்பப்பட்டவர்கள், இளைஞர்கள், தகுதியுள்ளவர் களுக்கு நியாயமாகப் பணியை ஏற்றுக்கொண்டு செயல்படக் கூடிய திறமை உள்ளவர்களுக்கு அது கிடைக்க வேண்டுமென் பதிலே நாங்கள் மாறுபாடாகக் கருதவில்லை என்பதை எடுத்துச் சொல்லியிருந்தேன். ஆனால் எல்லோரையும் கூப்பிட்டுப்





பேச வேண்டுமென்று சொன்னபொழுது, உடனே சொன்னார்கள் உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றார்கள். அதிலும் இரண்டு கட்சி. இந்த வேதனையை எங்கே சொல்ல முடியும்? கூப்பிட்டு அவர்களை யும் அழைத்துப் பேசலாம், ஒன்றாகச் சேர்ந்து பேசலாம் என்றால், நாங்கள் அவர்களோடு வர மாட்டோம், தனியாக வருவோம் என்று சொன்னார்கள். அப்படியிருந்தும் பேசச் சொன்னோம். அதிலேயும் இதே கதைதான். வெளியே போய்ச் சொன்னார்கள், அத்தனைபேர்களையும் வேலைக்கு எடுத்துக் கொண்டாலொழிய நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று. வெளியே என்ன நடந்ததோ தெரியாது. அதைச் சொல்லி விட்டார்கள். ஆகவே இதற்கு யார் இடையே இருந்து நல்ல நோக்கத்தோடு அதற்கு உழைத்தார்களோ அவர்களுடைய எண்ணமும் வெற்றியடையவில்லை; நாங்களும் இன்னும் வெற்றி அடையவில்லை. எங்களுடைய வெற்றியெல்லாம் பிரச்சனை இல்லாமலிருந்தால்தான் வெற்றியே தவிர பிரச்னையிலே ஏதோ புதிதாகத் தீர்வு கண்டு ஒரு சிலருக்குத் திருப்தி இல்லையென் றாலும், பலருக்குத் திருப்தியாகி விட்டது என்றாலும் அதை வெற்றியாக நான் கருத மாட்டேன். ஆனால் ஒட்டுமொத்த மாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள், சட்டத்திற்கு உட்பட்டு, அரசினுடைய நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டிய நிலைக்குள்ள தகுதியைப் பெற வேண்டுமென்பது தான், முழு நேர வேலை ஊழியர்களாக இருக்க வேண்டு மென்பதுதான் இந்த அரசினுடைய ஆசை என்பதையும் தெரி வித்துக்கொள்கிறேன்.

இருக்குமானால் அதனால் தவறுகள் கிராமங்களிலே யாருக்காவது தவறுகள் அவைகளைச் சீர் செய்வதற்கும், மற்றவைகளெல்லாம் யாருக் இழைக்கப்பட்டு அந்த நிலங்கள் மீண்டும் அந்த கோ சொந்தமாக ஆக்கப்பட்டிருந்தால் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் உழைக்கும் வர்க்கத்திற்குத் வைத்துக்கொண்டு இந்த அதிகாரி என்பதும், பினாமி நிலங்களை விடுவித்து மக்களுக்குச் களைப் பயன்படுத்துகிறவர்களிடமிருந்து எடுப்பதற்கு, புதிதாக சேர வேண்டிய அந்த நிலங்களை துணை நிற்க வேண்டு வருகின்ற இளைஞர்கள், படித்தவர்கள், நாங்கள் மேற்கொண்டு மென்பதை வைத்து இந்த முடிவை முன் வந்தால் செயல்படுகிறோம். அதில் எல்லோரும் ஒத்துழைக்க கொடுக்க வேண்டிய சுமுகமாகவும் சீராகவும் ஏதாவது நஷ்டயீடு கொடுத்து நிலையில் இருப்பவர்களுக்கான நஷ்டயீட்டைக் வேண்டுமென்பதுதான் அவர்களையும் திருப்தியடையச் செய்ய தெரிவித்துக் இந்த அரசின் நோக்கம் என்பதை இங்கே நான் கொள்கிறேன்.

இங்கே அவசரச் சட்டங்கள் எல்லாம் தமிழில் வெளியிடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், கருத்தை வெளியிட் டிருக்கிறார்கள். பொதுவாக, இம் மாநில அரசு தனது அலுவல

கத்தில் நடைபெறும் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டுள்ளது. பல்வேறு நேரங்களில் நான் உத்தரவு போடும்போதெல்லாம் தமிழில்தான் எழுதப்பட வேண்டும். தேவையிருந்தால் தமிழி லிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டு மென்ற நிலை உருவாக வேண்டுமென்று சொல்லி, அதற்காக தட்டச்சுப் பொறி வாங்க வேண்டுமென்றெல்லாம் உத்தரவிட்டு, அங்கே அதிகமாக வாங்கச் செய்திருக்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருப்பினும், அதற்குரிய எல்லா சாதனங்கள், வசதிகள், இன்னும் முழுமையான அளவு இல்லாததால், தலைமைச் செய லகத்தின் எல்லா துறைகளிலும் பொதுவாக, இன்னும் முழு அளவில் தமிழினைப் பயன்படுத்த இயலவில்லை. இதனால், தலைமைச் செயலகத்தில் எல்லா துறைகளிலிருந்து அரசிதழ் வெளியிடுவதற்காக சென்னை மத்திய அச்சகத்திற்கு அனுப்பப் பெறும் அரசாணைகளும் மற்ற அறிக்கைகளும் தமிழிலேயும், மற்றவைகள் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகின்றன. விரைவில், இவைகள் முழுமையும் தமிழில் வெளியிடப்படும்போது, அரசி தழ்களும் முழுமையாக, தமிழிலேயே வெளியிடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஹெலிகாப்டரைப் பற்றி ஒரு பிரச்சினை வந்தது. குறிப்பாக, கோவை மாவட்டம் போன்ற இடங்களில் நீலகிரி பகுதியில், நிலச்சரிவு போன்றவைகள் ஏற்படும்போது, போவ தற்கு வழியில்லையென்றும், அதிகாரிகள் போவதற்கோ அல்லது அவசரமாக மக்கள் போவதற்கோ, வழியில்லையென்ற வகையில், அப்பொழுது பயணத் தொடர்புக்கு இதைப் பயன்படுத்த வேண்டு மென்ற யோசனை இருக்கிறது. இதைப்பற்றி இந்தியப் பேர ரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். விரைவில், அதைப் பற்றி மைய அரசிடம் பேசி அனுமதி பெற முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

பினாமி ஒழிப்புச் சட்டத்தைப் பற்றி இங்கே நல்ல கருத்துக் களைத் தந்திருக்கிறார்கள். ஏன் காமதம் என்றெல்லாம் கேட் டிருக்கிறார்கள். தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள், நில உச்ச வரம்பு கட்டுதல், இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவு, 1980 ஆம் ஆண்டில் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் நிறை வேற்றப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளில் மத்திய அரசுக்கு, குடியரசுத் தலைவரின் இசைவு பெற அனுப்பப் பட்டது. இந்தச் சட்ட முன்வடிவிற்கு விரைவில் குடியரசுத் தலைவரின் இசைவு பெற கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11 ஆம் நாளில் டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு சிறப்புப் பிரதிநிதிக்கு இந்த சட்ட முன் வடிவின் நகலை மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத் தின் நகலை அனுப்பி, மத்திய அரசை அணுகி, குடியரசுத் தலை வரின் இசைவைத் துரிதப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டு



ளது. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாளில் அதே மாதத்தில், டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு சிறப்பு ஆணையருக்குக் குடியரசுத் தலைவரின் இசைவை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கும்படி தந்தி மூலம் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாளில் இந்தப் பணிக்காக, ஓர் தனி நபரைப் போட்டு, கவனித்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்துள்ளதாக டெல்லியில் இருக்கும் சிறப்பு ஆணையர் பதில் அளித்தார்.

1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாளில் சட்டத் துறை மைய அரசை தந்தி மூலம் நினைவுபடுத்தியது.

1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளில் இந்தச் சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவரின் இசைவை விரைவில் பெற மேல் நடவடிக்கை எடுக்கும்படி டெல்லியில் இருக்கும் சிறப்பு ஆணையரை சட்டத்துறை கேட்டிருக்கின்றது. 25–10–1980, 15–12–1980, 8–1–1981, 24–1–1981 ஆகிய தேதிகளில், சட்டத்துறை மத்திய அரசை, தந்தி மூலம் நினைவு படுத்தி உள்ளது.

இந்த நிலையில் அவர்களுடைய பதில் வரவில்லையென்றா லும், நியாயமான, தேவையான, இந்தச் சட்டத்தை அவர்கள் விரைவிலே நிறைவேற்ற அனுமதி தருவார்கள் என்று நான் எதிர் பார்க்கின்றேன். இந்த மாமன்றமும் அப்படித்தான் எதிர்பார்க் கிறது என்பதிலே எனக்கு ஐயம் இல்லை.

இங்கே திரைப்படத்தைப் பற்றிப் பேசினார்கள். 4 காட்சி கள் தேவையா? 4 காட்சிகள் எதற்காக? அதை 3 காட்சி களாக்கக் கூடாதா? சாதாரண ஏழைகள் எல்லாம் கெட்டுப் போகின்றார்கள், மாணவர்கள் படிப்பெல்லாம் கெட்டுப் போகின்றது என்று சொன்னார்கள். 4 காட்சிகள் என்ற வகை யிலே அந்த ஒரு காட்சி நடைபெறுவதற்கு நாங்கள் அனுமதித் திருப்பதற்கு வழி கிடைத்தது என்ற ஒரு நிலைமையிலே தவிர, வேறொன்றும் அல்ல. ஆனால், அதே நேரத்தில், அண்ணனோ, தம்பியோ, கணவனோ, தந்தையோ, ஏதாவது அலுவலகத்தில் பணியாற்றப் போகும்போது, வீட்டில் உள்ளவர்கள், சிறு குழந் தைகள் அல்லது தாய்மார்கள் ஒரு வேலையும் இல்லாமல் இருக்கும்போது, அவர்களுக்குப் பொழுது போவதற்கு அது பயன் அளிக்கிறது என்கிற செய்தியும் எனக்கு வந்திருக்கிறது என்பதைச் சொல்லும்போது உண்மையிலேயே மாணவர்கள் ஏதாவது கெட்டுப் போகிறார்கள் என்றிருக்குமானால் இந்த அரசு அதைப்பற்றி திரும்பப் பரிசீலனை செய்வதிலே தயங்காது என்பதை நான் இங்கே உறுதியாகக் கூறிக் கொள்ளுகின்றேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

(பிற்பகல் 12–40)

அதே சமயத்தில் திரைப்படத் துறையினுடைய சில பிரிவுகள்
என்கிற வகையில் சில உரிமைகளை, அதிகாரத்தை மைய அரசு
எடுத்துக் கொள்கிறது என்கிற நிலைமை கொண்டு வரப்பட்டு
இருக்கிறது என்பதும், அதைப்பற்றி இந்த அரசு, அது சரியில்லை
என்பதையும் வற்புறுத்தி இருக்கிறோம். அதே நேரத்தில் இந்தத்
தணிக்கைக் குழுவிற்கு இந்தத் திரைப்படத் துறையில் இருந்து
ஒருவரைத் தலைவராக பம்பாயிலே இருந்து நியமித்திருப்பதற்
காக நான் அந்த அரசுக்கு நன்றியைச் சொல்லவும் கடமைப்
பட்டிருக்கிறேன். அதிகாரிகளை உட்காரவைத்து அந்தப் பணியை
செய்ய விடாமல், இந்தத் துறையில் இருந்து அனுப்பப்பட்டவர்
ஒருவரை—அவர் எந்த மொழியை பேசுபவராக இருந்தாலும்—
அங்கேதான் அந்தத் தலைமை தணிக்கையகம் இருக்கிற காரணத்
தால், இப்போது அவரைப் போட்டு இருந்தாலும் கூட, எதிர்
காலத்திலே. தமிழகத்திற்கு அந்த பிரதிநிதித்துவம் வரும்
என்கிற நிலையில் அதைச் சொல்ல வேண்டியவர்களாக
இருக்கிறோம். இது போன்ற பல பிரச்சினைகள் இருப்பினும்
இன்னும் வாய்ப்பு இருக்கிறது, அப்போது அதைப் பற்றிப்
பேசலாம் என்று கருதுகிறேன்.

இங்கே எரி சாராயத்தைப் பற்றி விளக்கமாகப் பேசப்பட்டது.
அதிலே எனக்குத் தெரிந்த சில வரைமுறைகளை எல்லாம் முத
லிலே சொல்லிவிட்டு, பிறகு அதைப் பற்றிப் பேசலாம் என்று
நான் கருதுகிறேன். வெளி மாநிலங்களுக்கு சாராயம் அனுப்பப்
படும்போது சாராவி கொண்டு செல்லும் வண்டிகளுடன் எஸ்
கார்ட் அலுவலர்களை அனுப்பும் முறை பற்றி மதுவிலக்குச்
சட்டத்தின் கீழ் ஏற்றுக் கொண்ட விதிமுறைகள் எதுவும் இல்லை,
1975 ஆம் ஆண்டு வரை இம்மாதிரி எஸ்கார்ட்டு அனுப்பும் முறை
நடைமுறையிலே இல்லை. 1975 ஆம் ஆண்டு பிற் பகுதியிலே
கோவா மாநிலத்திற்கு அனுப்பப்பட்ட சாராய வண்டிகளுடன்
இளநிலை உதவியாளர் தரத்தில் உள்ள ஒரு ரெவின்யூ இன்பெக்
டரும், போலீஸ்காரர் ஒருவரையும் அனுப்பி வைக்க முன்னாள்
வருவாய் வாரியம் ஏற்பாடு செய்தது. எல்லா மாநிலங்களுக்கும்
அனுப்பப்படும் சாராய வண்டிகளுடன் ஒரு ரெவின்யூ இன்ஸ்
பெக்டரையும், ஒரு போலீஸ்காரரையும் அனுப்பும் முறை 1976-
ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வருவாய் வாரியத்தால்
பின்பற்றப்பட்டது, பின்னர் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள்
8 ஆம் நாளில் வருவாய்த் துறை ஆணையாளருடன் சாராய
தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுடன் நடைபெற்றக்
கூட்டத்தில் சாராவி ஏற்றிச் செல்லும் வண்டிகளுடன் அனுப்பு
வதற்கு வருவாய்த் துறை அலுவலர் ஒருவரும், போலீசார் ஒரு
வரும் ஒரே நேரத்தில் கிடைப்பது மிகவும் கடினமாக உள்ளது
என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்றுக் கொண்டு
வருவாய்த்துறை ஆணையாளர் அவர்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்
டர் அனுப்பும் முறையை நிறுத்திவிட்டு, போலீசாரை மட்டும்



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அனுப்பினால் போதும் என்று 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்களில்
ஆணையிட்டார். அன்று முதல் தனியாகவோ, அல்லது தொகுதி
யாகவோ செல்லும் எரி சாராய வண்டிகளுடன் ஆயுதம் தாங்கிய
போலீஸ்காரர் ஒருவர் மட்டும் முறை வழக்கத்தில் உள்ளது.

'பிளை லீப்' என்பது மாநிலங்களுக்குள் சாராயம் கூட்
யோகிப்பதற்கான உரிமத்திலும், வெளி மாநிலங்களுக்கு
சாராவி எடுத்துச் செல்வதற்குமான அனுமதிச் சீட்டில் ஒரு
பகுதியாகும். இதிலே, கொடுக்கப்பட்ட சாராவியின் அளவையும்,
டிரான்ஸ்போர்ட் பர்மிட் எண் அனுமதி கொக்கப்பட்ட நாள்
போக்குவரவை பதிவுசெய்யப்பட்டு, சாராவி கொடுக்கப்படும் வடி
சாலையின் பொறுப்பாளர் கையெழுத்து இடப்படுகிறது. ஒரு
உரிமத்தில் அல்லது ஏற்றுமதி அனுமதிச் சீட்டில் ஒரு பிளை லீப்
தான் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல்
கேரளாவுக்கு சாராவி எடுத்துச் செல்ல அனுமதியோ, பிளை
லீபோ வழங்கும் அதிகாரம் சைதாப்பேட்டை ஆர்.டி.ஓ. அவர்
களுக்கோ, அல்லது எந்த ஆர்.டி.ஓ.வுக்கோ கிடையாது என்
பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மருந்துகள் தயாரிப்பதற்கும், சிறு தொழிலுக்கும் சாராயம்
வேண்டுமென்று வருகின்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்
பட்டு, உண்மையான தேவைக்கு ஏற்ப அனுமதி அளிக்கப்படு
கிறது. கருநாடக மாநிலத்தில் உள்ள கோடே வடிசாலைக்கு
கொடுக்கப்பட்டது பற்றியும், கோயம்புத்தூர் அல்க ஹாலிக்ஸ்
அண்ட் கெமிகல்ஸிலிருந்து 60,000 லிட்டர், அரவிந்த் டிஸ்
டில்லரிஸிலிருந்து 48,000 லிட்டர் ஆக லட்சத்து எட்டாயிரம்
பெற்று இருக்கிறது என்றும் நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன்.

1971 ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு மது விலக்கை தமிழகத்
தில் ரத்து செய்து, 1974 ஆம் ஆண்டு மீண்டும் கொண்டு வந்த
போது தமிழகத்தில் சர்க்கரை கழிவுப்பால் மற்றும் எரி சாராயம்
உபரியாக உற்பத்தியாகி இருந்தது. எனவே, பற்றாக்குறை
மாநிலங்களான கோவா, கேரளா, கருநாடகா, மஹாராஷ்
டிரா, ஆந்திரா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களுக்கு
மைய அரசின் கொள்கைக்கு ஏற்ப தமிழ் நாட்டில் உள்ள உபரி
எரி சாராயம் அனுப்பப்பட்டு வந்தது. இம்முறை 1974 ஆம்
ஆண்டிலிருந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என் மீதே
குற்றம் சாட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே,
இதற்கு சரியாக பதில் சொல்லவேண்டியது என்னுடைய மா
பெரும் கடமை. என்னவோ நாங்கள் இங்கே வந்த பிறகுதான் எரி
சாராயம் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவது போன்ற ஒரு
குற்றச்சாட்டு இங்கே சொல்லப்பட்டது ........ (குறுக்கீடு)

1980 பிப்ரவரி 5

திரு. அ. ரகுமான்கான் * * *

[பிற்பகல் 12-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து எல்லோரும் உட்கார வேண்டும். திரு. ரகுமான்கான் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதிலிருந்து இதுவரை நடந்த விவாதம் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன; மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அந்தந்த மாநில அரசு, ஆயத் தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் — இவர்கள் அனுமதி பெற்று கொண்டு எழுதப்பட்ட கடிதங்கள் அடிப்படையில் தான் இங்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது இல்லை என்று நிரூபித்தால் நான் எதற்கும் தயார். (கூச்சல் குழப்பம்). இந்தப் பிரச்சனைப் பற்றி கோவையிலும் தமிழ்நாட்டிலும் நடைபெறுகின்ற அந்த விசாரணை முடிந்த பிறகு உண்மை தெரிய வரும். நீண்ட நாள் ஆகாது. நாம் எல்லாம் இங்கேதான் இருக்கப் போகிறோம். அந்த முடிவு தெரிந்த பிறகு எது உண்மை, எது உண்மையல்ல என்பதை இந்த நாடு அறிய இருக்கிறது.

நேற்றையதினம் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும் போது நான் ஒரு இடத்திலே பேசுகின்ற நேரத்தில் 10, 15 இலட்சம் வெளியே கொண்டுபோகிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்று சொன்னேன் என்றால் எனக்குத் தெரிந்திருந்தால் நான் நடவடிக்கை எடுத்திருப்பேன். இங்கே சொல்வதெல்லாம் மற்றவர்களை எச்சரிப்பதும், அச்சுறுத்துவதும் என்பதை நண்பர்கள், இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். எதற்காக சொல்கிறோம்? சட்டத்தை மீறினால் இப்படிப் பட்ட தண்டனை உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்வதால் சட்டத்தை மீறக்கூடாது என்பதும் உங்களை கவனிக்கிறோம் என்பதும் தான் அதற்குப் பொருளே தவிர வேறல்ல.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

ஆட்சியிலே இருக்கும்போது எப்படியெல்லாம் நடந்தது என் பதை நான் ஆதாரபூர்வமாகச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அதிகம் நேரம் இல்லாத காரணத்தால் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி மற்றவற்றை பிறகு வாய்ப்புக் கிடைக்கும்போது படிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் நாள் அன்று அரவிண்ட் டிஸ்டிலரிஸ் கோவாவுக்கு 80 ஆயிரம் லிட்டர் எரி சாராயத்தை திரு. மனுபாய் சங்கிலி என்பவர் பெயருக்கு அனுப்ப அனுமதி கேட்டு கடிதம் எழுதுகின்றனர். இதிலே மனுபாய் சங்கிலி என்பவர் வேறு சில நிறுவனங்களுக்கு கமிஷன் ஏஜென்டாக இருந்து விண்ணப்பிக்கிறார். இவரது மனு பரிசீலனையில் இருக்கும் போது சி.பி.ஐ. இலாக்காவிடமிருந்து ஒரு கடிதம் வருகின்றது அரசுக்கு. அதில் மனுபாய் சங்கிலி என்பவர் கறுப்புப் பணக்காரர் என்றும் இந்த எரி சாராயத்தை எப்படியும் அவர் பயன்படுத்துவது இல்லை என்றும் கமிஷன் வாங்கிக் கொண்டு வேறு சிலருக்கு விற்று அதிக இலாபம் சம்பாதிக்கிறார் என்றும் புகார்கள் அடங்கிய மனுவை சி.பி.ஐ. தக்க விசாரணைக்கு அனுப்புகிறது. வருவாய் வாரியத்திற்கு 1975—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ம் நாளில் ரகசிய விசாரணையின் மூலம் உத்தரவிடப்படுகின்றது. ஆனால் இதன் மீது முடிவு தெரியும் முன்னாலேயே 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாளில் இதே மனுபாய் சங்கிலிக்கு 80 ஆயிரம் லிட்டருக்கு அனுமதி தரப்படுகிறது. பின்னர் 1975 ஆம் ஆண்டு மே மாதம் 5-ம் தேதியில் காவல் துறையினர் அறிக்கைப்படி இந்த மனுபாய் சங்கிலி ஒரு கமிஷன் விற்பனையாளர் என்றும் கோவைக்கு அனுப்பப்பட்ட எரி சாராயம் கோவைக்கு போய்ச் சேரவில்லை, அது சென்னையிலேயே விற்கப்பட்டு விட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மனுபாய் சங்கிலி நேரில் காவல் துறை அதிகாரிகளிடம் சொன்ன விவரங்கள் முறைகேடுகளை உறுதிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது. எரி சாராயம் கோவைக்கு வரவில்லை என்றும் தமிழ்நாட்டுக்காரர் மூலம் அது சென்னையிலேயே விற்கப்பட்டு இருப்பதாகவும், அது கோவை சேர்ந்ததாக போலி சர்டிபிகேட்டுகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதாகவும் விசாரணையில் நிரூபணம் ஆகிறது. எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், அவர் சொன்னது போல் இந்தத் தவறை அவர் முதலமைச்சராக இருந்தபோது அவர் தான் செய்தார் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் புகார் கடிதம் யார் மீது வந்ததோ அவருக்கே எரி சாராயம் அனுப்பப்பட்டதே அது ஊழல் இல்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே தவறுகள் நடப்பதை இந்த அரசு கண்காணித்துத் தடுத்து கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னமும் சொல்லப்போனால், 10 இலட்சத்திற்கு அனு
மதித்த இடத்தில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் கூட அவர்கள்
எடுத்துப்போக முடியாமல் அதோடு நாங்கள் தடை விதித்திருக்
கிறோம். சந்தேகம், அதில் இப்படிப்பட்டப் பிரச்சனைகள்
எல்லாம் வந்தவுடனே அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று
நாங்கள் நிறுத்திவிட்டிருக்கிறோம். அதில் விரைவிலே உண்மை
என்ன என்று தெரிய வரும். எவ்வளவு, எங்கே போயிற்று?
எந்த இடத்திலிருந்து போயிற்று? எங்கே இருந்து கொண்டு
போகப்பட்டது? யார் கணக்கில் இல்லாமல் கொண்டு போனார்?
யாருடைய உதவியினாலே சென்றது என்பதையெல்லாம் சில
வாரங்களிலே நாம் தெரிந்து கொள்ள முடியும் என்று கருது
கிறேன். அப்போது யார் இதற்குக் காரணம்? எப்படிப்பட்ட
வர் தொடர்பு கொண்டிருக்கின்றனர்? யாரோடு தொடர்பு
கொண்டிருக்கின்றார் என்ற உண்மைகள் எல்லாம் வெளி
வரும். அதுவரையில் நாம் காத்துக்கொண்டிருக்க வேண்டிய
கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனென்றால் தமிழகத்தில்
மட்டும் விசாரணை நடப்பது அல்ல. இன்னொரு மாநிலத்தி
லும் விசாரணை நடக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் இங்கே
வந்து விசாரணை செய்கிறார்கள். நம்முடைய அதிகாரிகள்
அங்கே சென்று விசாரணை செய்கிறார்கள் அவர்களுடைய
உதவியுடன். ஆகவே, இந்த நிலையில் இதுபற்றி நாம் முடி
வைச் சொல்ல இங்கே ஒரு பிரச்சனையைக் கிளப்புவதற்கு முன்
உண்மையிலே என்ன நடந்தது என்று அனைவரும் தெரிந்து
கொள்வதற்கு, நம் எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த
நாட்டு மக்களுக்கு உண்மை தெரிந்தாக வேண்டும். அந்த
உண்மை தெரிவதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை
செய்துதர வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் நாங்கள் அடி
ஷனல் ஐ.ஜி. லெவலில் ஒருவரை இங்கிருந்து அனுப்ப இருக்
கிறோம்; அவர்களும் செல்ல இருக்கிறார்கள்.

அதேபோல் அங்கிருந்தும் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்.
அவர்களுடைய பணியைச் செய்து கண்டுபிடித்த பிறகு என்ன
நடவடிக்கை என்பதை இந்த நாட்டுக்குச் சொல்வோம். அரசும்
தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு சொல்லப் போனால் தன
லட்சுமி என்ற இதுபோன்ற வழக்கிலே சம்பந்தப்பட்ட ஒருவர்
கைது செய்யப்பட்டு ஜாமீனிலே வந்திருக்கின்றார்கள். எப்
படிப்பட்ட கொடுமை நடந்திருக்கின்றது என்பதை நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்திலே
முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்தில் எப்படிப்பட்ட நிலைமை
கள் நாட்டிலே நடந்துகொண்டிருந்தது என்பதை நான் குறிப்பிட
வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றேன். அதை
நான் படித்துச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்
பட்டிருக்கிறேன். என் மீது பழி சுமத்தி என்னை இதிலே நேரடி
யாக ஈடுபடுத்தி இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரவர்கள்



சமீபத்தில் தனலட்சுமி கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்தில்
எரி சாராய விற்பனையில் தவறு நடந்தது என்று கண்டுபிடிக்கப்
பட்டு சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நடை
பெறுகின்றது. அதேபோல் ஓரியண்ட் கெமிக்கல்ஷ் நிறுவனத்
தில் முறைகேடுகள் நடந்தது பற்றிய விசாரணை நடந்து வழக்கும்
நடைபெறுகின்றது. 1975 ஆம் ஆண்டில் நடந்த முறைகேடு
களுக்காக அரவின்ட் டிஷ்டில்லரிஷ் நிறுவனத்தின்
உரிமம் 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் நாள் வரையில்
புதுப்பிக்கப்படாமல் நிறுத்தி வைத்து இந்த அரசு ஆட்சியில்
இருந்தபோது 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வருவாய்
வாரியத்தின் மூலம் உத்தரவு இட்டிருக்கின்றது. ஆனால் ஏப்ர
லில் இந்த உரிமத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று
வருவாய் வாரியத்தால் உத்தரவிடப்பட்டது.

(பிற்பகல் 1-00)

நாங்கள் போடவில்லை அந்த உத்தரவை. அதே போல பெங்க
ளூரைச் சேர்ந்த ஏகாம்பரம், திருநெல்வேலி சணபதியாப்
பிள்ளை, சென்னை ரங்கநாதன் செட்டி, மற்றும் சித்தூரைச்
சேர்ந்த சக்திசங்கரி ஆகிய நால்வரும் ஆந்திர மாநிலம், கடப்பா
மாவட்டம் ராயலச்சீமாவில் உமா இண்டஸ்டிரீஸ் என்ற
பெயரில் ஒரு போலி இறக்குமதி பெர்மிட்டை தயாரித்தது.
அதனை அடிப்படையாகக் கொண்டு வருவாய் வாரியம் 10,000
லிட்டர் எரிசாராயம், ஈரோடு காமதேனு நிறுவனத்திலிருந்து
வழங்க அனுமதித்தார்கள். இது நடந்தது 30–9–1975-ல்.
ஆனால் உமா இண்டஸ்டிரீஸ் என்ற பெயரில் எந்த ஒரு நிறு
வனமும் கடப்பா மாவட்டத்தில் ராயலசீமாவில் இல்லை.
இப்படி போலியான ஒரு நிறுவனத்தின் பெயரில் போலி பெர்
மிட்டுகள் தயாரிக்கப்பட்டு, 10,000 லிட்டர் எரி சாராயம்
கடத்தப்பட்டது, மாண்புமிகு எதிர் கட்சித் தலைவராக இருக்
கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த
போது நடந்தது தான் என்பதை, இந்த ஆதாரத்தோடு சொல்லிக்
கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் இருக்கும் அத்தனை எரி சாராய
தொழிற்சாலைகளும் அந்தக் காலத்தில் தான் உருவாயின.
1–9–1975ல் விண்ணப்பிக்கப்பட்டது 1–10–75ல் அனுமதி
பெற்று இவைகளெல்லாம் அந்த காலத்தில் தான் உருவாக்கப்
பட்டன. அப்பொழுது எல்லாம் எரி சாராயம் சம்பந்தப்பட்டது
என்றாலே கோப்புகள் துரிதமாக ஆணை பிறப்பிக்கப்பட்டன.
இவைகளையெல்லாம் சொல்வதால் இந்த அரசின் நடவடிக்கை
களில் ஏற்பட்டதாக சொல்லப்படும் தவறுகள், முந்தைய அரசின்
தவறுகளைப் போலத்தான் இருக்கிறது என்றும் அதை மூடி
மறைப்பதற்காகத்தான் நாங்கள் இதை உதாரணம் காட்டுவ
தாகவும் யாரும் எண்ணிவிட வேண்டியது இல்லை. (குறுக்கீடு)

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ராணிப்
பேட்டை தனலட்சுமி கெமிக்கல்ஸ் பற்றி நம்முடைய மாண்புமிகு
முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அது 1975 ஆம் ஆண்டு
தொடங்கப்பட்டது என்று சொன்னார்கள். 1975 ஆம் ஆண்டு
முன்னேற்றக் கழக அரசின் சார்பில் லெட்டர் ஆப் இன்டென்ட்
தான் தரப்பட்டிருக்கிறது. தொடங்கப்படவில்லை., ஆனால்
1978 ல் போர்டு ஆணை எண். பி.பி.ஆர்.சி. நெ. 990 (2),
தேதி 13–10–78ல், இந்த அரசு 22,50,000 லிட்டர்
ஒரு ஆண்டிற்கு எரி சாராயம் கொடுக்க அந்த தனலட்சுமி
கெமிக்கல்ஸ் இண்டஸ்டிரீஸ்ஸாக்கு அனுமதி வழங்கி யிருக்கிறது.

அது மட்டுமல்ல மறுபடியும் 1977—78க்கான தொழிற்சாலை
களுக்கான எக்ஸைஸ் டியூட்டி, galvaniz d பீஸ் இரண்
டுக்கும் சலுகை காட்டலாம் என்று இந்த அரசு தான் விதி
விலக்கையும் அந்த தொழிற்சாலைக்குக் கொடுத்திருக்கிறது.
1979 ஏப்ரல் மாதத்தில் 1,52,000 லிட்டர் எரி சாராயத்தை
''டிரையல் ரன்''னிங்கிற்காக என்று கொடுத்திருக்கிறது.
டிரையல் ரன்னுக்கு 5,000 அல்லது 10,000 கொடுத்தால் போது
மானது. ஆனால், 1,52,000 லிட்டர் எரி சாராயத்தைக்
கொடுத்திருக்கிறார்கள். அது பெரும் தவறு என்பது என்
னுடைய குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

அது மாத்திரம் அல்ல, டிரையல் ரன்னில் ரிப்போர்ட்டு
களில் தரமாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஐ. ஜி.
செந்தாமரை அவர்கள் அந்த தொழிற்சாலை மீது நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று அறிவித்தும் கூட, அப்படி எடுக்க
வில்லை. ஏதோ எந்திரக் கோளாறு என்று சாக்கு போக்குக்
காட்டி, அந்த தனலட்சுமி கெமிகல்ஸ் நிறுவனம் மன்னித்து
விடப்பட்டிருக்கிறது. இது போல் 2, 3 குற்றச்சாட்டுகள்
சொன்னார்கள். கோவாவுக்கு அனுப்பியது, அங்கே அனுப்பியது,
இங்கே அனுப்பியது என்று. இவைகளை எல்லாம் திராவிட
முன்னேற்றக் கழக அரசுதான் கண்டு பிடித்து விசாரணைக்கு
ஏற்பாடு செய்தது. ஆனால் இப்பொழுது நடை பெற்றிருக்
கிற விவகாரத்திற்கு தமிழக அரசு விசாரணைக்கு ஏற்பாடு
செய்யவில்லை. கேரள அரசு தான் இவைகளை யெல்லாம்
கண்டு பிடித்து விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது என்
பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத்
தலைவர் அவர்களே, சந்தேகங்கள் ஏற்பட்டு விட்டதால், இந்த
அரசு என்ன உத்தரவு இட்டது என்பதை இங்கே நான் படித்துக்
காண்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். 23–11–1980 அன்று
அனுமதிச் சீட்டு வழங்க வேண்டுமென்று கேட்கப்பட்டபோது,
அந்தக் குறிப்பிட்ட தேதிக்குள் அவர்கள் அனுப்பாவிட்டால்,
அதை ரத்து செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்ற



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

காரணத்தால், கால தாமதம் ஆகியதை அனுமதிக்க வேண்டும்
என்று கேட்கப்பட்டபோது, கீழ்க்கண்ட இந்தக் குறிப்பை நான்
எழுதினேன்

விரைவில் தமிழக அரசின் கருத்து அறிவிக்கப்படும். அது
வரை புதிய முறை ஏதும் பின்பற்றக் கூடாது என்று அந்தக்
கோப்பில் எழுதியிருக்கிறேன்

அடுத்தபடியாக, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை. கேரளா
டிஸ்ட்டிலரீஸ் அலைட் ப்ராடக்ட்ஸ் இம்மாநிலதிலிருந்து
ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்தது பற்றி. இங்கே தேவை
யில்லாமல் வைத்து வீணாவதை விட வரி கிடைக்கும் வகையில்
பயன்படுத்துவது, அனுமதிப்பது நல்லது, எனவே இதை அனு
மதிப்பதோடு தவறுகள் நேரிடாதவாறு கண்காணிக்க, எச்
சரிக்கையாக இருத்தல் வேண்டும். அனுமதி பெற்று தவறான
வகையில் அனுமதித்தற்கு மேல் வெளியில் செல்லாமல் நட
வடிக்கையில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் உத்தரவு
போட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, 24–11–80 அன்று தமிழக மாநிலத்தைச்
சேர்ந்தவர்களுக்கு அதாவது வெளியே இருந்து வந்து ஹோட்டல்
களில் தங்குபவர்களுக்கு பெர்மிட் கொடுக்க வேண்டுமென்று
கேட்டபோது தமிழ் மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதற்கு
அனுமதி வழங்க இயலாது. இதனால் பல தவறுகள் நடை
பெறும். வெளி நாட்டவர்களுக்கு, வெளி மாநிலங்களில் இருந்து
வருகிறவர்களுக்கு, குறைந்தது மூன்று மணி நேரமாவது தங்கு
பவர்களுக்கு மட்டும் அனுமதிக்கலாம், தமிழ் நாட்டில் முகவரி
இல்லாது அனுமதிச் சீட்டு வைத்துள்ள, வெளி மாநில அனுமதி
பெற்றுள்ளவர்களுக்கு மட்டும், வெளி நாட்டவர்களுக்கும் அனு
மதிக்கலாம் என்று நான் உத்தரவிட்டேன்.

அடுத்தபடியாக, திருவாளர்கள் மாக்டவல் அண்ட் கோ,
ஆந்திர பிரதேசம் கோவாவில் உள்ள ஆலைகளுக்கு சாராயம்
கொண்டு செல்ல அனுமதி அளித்தது. மது வர்த்தக ஆயத்
தீர்வை சட்டத்தின் கீழ், சாராயம், சாராவி, இதர மாநிலங்
களுக்கு அனுப்புவது பற்றி அனுமதிக்கப்பட்டிருப்பின் காரண
மின்றி நிறுத்த இயலாது. இனி புதிதாக கொடுப்பதாயின்,
அமைச்சரவை விவாதித்து பிறகு முடிவு எடுக்கலாம், மைய
அரசின் பரிந்துரை இருப்பின் கோவாவுக்கு கொடுக்கலாம் என்று
குறிப்பிட்டிருந்தேன். அதற்குப் பிறகு 15–1–1981 அன்று
ஒட்டு மொத்தமாக உடனடியாகக் கொடுக்கத் தேவை இல்லை.
இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கொஞ்சங் கொஞ்சமா
தேவைக்கேற்பக் கொடுக்கலாம். தமிழக அரசின் விசேஷ
அதிகாரி ஒருவர் இந்தத் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தியாகி
வெளியே போகிற மருந்துகளை, கையிருப்பு சாராவியின் அளவை
கண்காணித்து அனுமதி கொடுக்க வேண்டும். அரசுக்கும்

அறிக்கை அவ்வப்போது மேலே குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு
வாரத்திற்கு ஒரு முறை அளிக்க வேண்டும். வேறு ஒரு அரசாங்க
அதிகாரி எதிர்பாராத விதத்தில் பரிசோதனைகள் நடத்த
வேண்டும். யார் தவறு செய்தாலும் கடுமையான நடவடிக்கை
கள் எடுக்க வேண்டும். முதலில் தொழிற்சாலை துவங்க
பத்தாயிரத்திற்குள் கொஞ்சம் தேவைக்கேற்ப கொடுத்துவிட்டு
வேலை நடைபெறச் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல. கேரள அரசு இப்போது நடவடிக்கை
எடுத்திருக்கிறது என்று அறிந்தவுடன் நான் கோப்பிலே உத்தர
விட்டேன். கேரள அரசு எடுத்த நடவடிக்கைகளில் கள்ளத்
தனமாக கடத்தப்பட்டது என்று வெளியாகி உள்ளது. நான்
பகிரங்கமாக எச்சரித்தும் தமிழ் நாட்டில் நடவடிக்கைகள்
வெற்றி பெற இயலவில்லை என்பது வேதனைக்குரியது. எனவே
இது போல் அதிகப்படுத்துவதோ அல்லது கொடுத்ததில் மீதம்
கொடுக்க வேண்டியது போன்றவைகளை அனுமதிப்பதற்கு முன்
கொடுக்கப்பட வேண்டுமென்றால் நன்கு தக்கவர்களால்
ஆராய்ந்து, அந்தந்த மாநில அரசுகளின் அனுமதி பெற்றிருந்
தாலும் அவர்கள் எங்கே பெறப் போகிறார்கள் என்பதையும்
அந்தக் கம்பெனி அதிகாரிகள் எச்சரிக்கப்படுவதோடு தவறு
நேரிடாத வண்ணம் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க
ஏற்பாடு செய்தபின் அனுமதி வழங்க வேண்டும், அதோடு இப்
போது எந்த புதிய அனுமதியும் அளிக்க வேண்டாம், மது
விலக்கு பற்றி அமைச்சரவை கூடி முடிவு எடுத்த பிறகு யோசிக்க
லாம் என்றும் எழுதியிருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக்
கொள்கை மாற்றம் ஏன் ஏற்பட்டது என்பதை நான் அறிய
விரும்புகிறேன். 1978 செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாள்
ஆளுநர் உரை மீது இங்கே விவாதத்திற்கு பதில் அளித்து உரை
யாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஸ்பிரிட் வேண்டுமென்று
கேட்கிறார்கள், வார்னிஷ் வேண்டுமென்று கேட்கிறார்கள்,
லித்தோ பிரஸ்-க்கு என்னிடமே கேட்கிறார்கள், எட்டு லட்சம்
லிட்டர் தேவை என்று கேட்டார்கள், இவைகளையெல்லாம்
நான் கணக்குப் போட்டுப் பார்த்து இனிமேல் நேரடியாக
லைசென்ஸ் கொடுப்பதில்லை என்றும் கூட்டுறவு முறையில் குறிப்
பிட்ட சங்கங்கள் அமைத்து அரசாங்கத்தினுடைய அங்கீகாரம்
பெற்ற கடைகள் வைக்கிற வியாபாரிகளுக்கு மாத்திரம் கொடுப்
பது என்றும் எல்லோருக்கும் கொடுப்பதில்லை என்றும் முடிவு
எடுத்திருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்
என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்களே தென் இந்திய
வர்த்தக சபையில் தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுத்தது 10
லட்சம் லிட்டர், அதை 15 லட்சம் லிட்டராக எடுத்துச் சென்று
விட்டார்கள், இது முறையா என்று கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சாமர்த்திய
மாக ஒன்றை ஒன்று தொடர்ந்து இழுத்து எதற்கும் எதற்குமோ
தொடர்பு இருப்பது போல் கேட்கிறார்கள். சிவகாசிப் பகுதியில்





இப்படிப்பட்ட சில காலண்டர்கள் போன்றவைகளையெல்லாம்
வெளியிடுவதற்கு அவர்களுக்கு தேவை என்று கேட்டு அனுமதி
கொடுக்க வந்த போது தேவைக்கு அதிகமாகக் கேட்கப்பட்டது
என்று அதிகாரிகள் சொன்னதின் பேரில் அவர்களுக்குக் கொடுக்கக்
கூடாது, எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், அதை
நான் புரிந்து கொண்டிருக்கிறேன் என்பதை பகிரங்கமாக
இங்கே வெளியிட்டேன். அதற்குப் பிறகு அவர்கள் போதிய
ஆதாரங்கள் காட்டி அதிகாரிகளை திருப்திப் படுத்திய பிறகு
தொழில் நசித்துப் போய்விடும் அவர்கள் அங்கு தொழில் செய்ய
முடியாமல் போய்விடும் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு
அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்பட்
டிருந்தும் கூட இது போன்றவை ஒரே பெயர், ஒரே முகவரியில்
வெவ்வேறு இடங்களில் இருப்பது போன்ற புள்ளி விவரங்களைப்
பார்த்தபின் அவைகளை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10).

வாய்ப்புக் கிடைத்தால் அந்தக் கோப்பையும் வரவழைக்க
நான் தயாராக இருக்கிறேன். அந்த வியாபாரிகள் சங்கத்தில்
நான் பேசியபோது, தொழில் அதிபர்கள் சங்கத்தில் பேசிய
நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்பினேன். பல பேர்
சொன்னார்கள். நீங்கள் கொடுப்பதற்கு மேல் வெளியே
கொண்டு செல்லுகிறார்கள், இது வழக்கமாக நடந்து கொண்
டிருக்கிறது. அந்தந்த வியாபாரம் செய்கிறவர்கள் இதற்குத்
தேவையான வகையில் என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம்
செய்து கொண்டு வசதியாக இருக்கிறார்கள், கோடிக்கணக்
காகச் சம்பாதிக்கிறார்கள் என்று சொன்ன போது அந்தத்
தொழில் அதிபர்கள் யார் யார் இருப்பார்கள் என்று தெரியாத
காரணத்தால் அவர்கள் எச்சரிக்கையோடு அச்சுறுத்தலுக்குப்
பயந்து இனிமேல் செய்ய வேண்டாம் என்று நிறுத்த வேண்டு
மென்பதற்காக எச்சரிக்கை செய்தேன். அதைத்தான் இங்கு
வெளியிட்டேன்.

ஆனால் டில்லியிலிருந்து திரும்பத் திரும்பக் கடிதம் வந்தது.
அந்தத் துறையைக் கையில் வைத்துக் கொண்டிருந்த பட்டியல்
அவர்கள் எழுதினார்கள். அதற்குப் பிறகு சாத்ரே என்று கருது
கிறேன், அவர்களும் எழுதினார்கள். இப்படி திரும்பத் திரும்ப
எழுதியது மட்டுமல்லாமல் கேரளத்திலும், ஆந்திரத்திலும்,
கர்நாடகத்திலும் இருந்து அதிகாரப் பூர்வமான அனுமதிக் கடிதங்
களைக் கொண்டு வந்து கொடுத்து, தாங்கள் கொடுத்துத்தான்
தீர வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அங்கே தொழில் நசித்து
விடும் அளவுக்கு பிரச்சினை எழுந்த பிறகு கொடுக்க அனுமதித்
தோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 பிப்ரவரி 5

அதேநேரத்தில் ஏதோ வியாபாரத்திற்குக் கொடுக்கவில்லை,
குடிப்பதற்காகக் கொடுத்தேன் என்றெல்லாம் நேற்றைய தினம்
பேசினார்கள். அதற்கு மறுப்புச் சொல்ல குறிப்புகள் இருக்
கின்றன என்றாலும உண்மையில் நேரம் இல்லை. புதிதாக
அல்ல, இன்னும் எனக்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்போது
அதையும சொல்ல என்னால் முடியும். வியாபாரிகள் வியாபாரம்
செய்வது என்பது வேறு, குறிப்பாக மருந்துகளுக்குப் பயன்
படுத்துவது என்பது வேறு. இப்படி தடைப்படுத்தியதில் சாரி
டோன் போன்ற மாத்திரையை தயாரித்து வந்தவர்கள் இது
கிடைக்காமல் நிறுத்த வேண்டி வந்து விட்டது என்பதைக் கூட
என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு
நான் அனுமதி கொடுக்க உத்தரவிட்டேன். இப்படி எல்லாம்
செய்த பிறகு இன்றும் நாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம்
என்றால், யார் யார் இதிலே ஈடுபட்டிருந்தார்கள் என்பதை,
ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள இந்த நேரத்தில்
எனக்குத் கிடைத்த தகவல்களை வெளியே சொல்ல முடியாத
நிலைமையில், இன்னும் இரண்டொரு வாரங்கள் அல்லது நான்
கைந்து வாரங்களில் அப்படிப்பட்ட பெயர்கள் வெளியேவரும்
போது யார் யார் எங்கெங்கே தொடர்பு வைத்திருந்தார்கள்
என்பதெல்லாம் வெளி வரும் என்று நம்புகிறேன். அந்த விசா
ரணை முடிந்து உண்மை தெரியும் வரையில் நான் என்னைக்
கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கிறது
என்பது மட்டுமல்லாமல் ஏதோ தலலட்சுமிக்கு நாங்கள் தான்
கொடுத்து விட்டோம் என்கிறார்கள். அதனுடைய அதிபர்
தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். எனக்கு
தெரியாது. அப்படித்தான் கேள்விப்பட்டேன் ஏதோ தி.மு
கழக பொதுக் குழுவில் இருப்பவர்கள் என்றெல்லாம் சொன்
னார்கள். தவறாக இருக்கலாம். நான் அதற்காகத்தான்
சொல்லுகிறேன். இது உண்மையா, இல்லையா என்பதை விசா
ரணைககுப் பிறகுதான் சொல்ல முடியும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதல்வர்
அவர்கள் சில விசாரணைகள் இருக்கின்ற காரணத்தால் அதி
வரைக்கும் கட்டுப்படுத்திக் கொண்டு இதற்கு மேல் இதைப்
பற்றி அதிகம் பேசப் போவதில்லை என்று அறிவித்திருக்கும்
காரணத்தால் அவருக்கு உதவிகரமாக, நாட்டுக்கு உதவிகரமாக
நான் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். அவருக்கு மலை
யாளம் நன்றாகத் தெரியும் என்ற காரணத்தால் (குறுக்கீடு :
தெரியாது) தெரியாதா ? மாத்ருபூமி என்ற பத்திரிகையில்
ஒரு பயங்கரமான செய்தி வந்திருக்கிறது. தமிழ் நாட்டைப்
பொறுத்த ஒரு செய்தி. அதை நீங்கள் உடனடியாக விசாரிக்க
வேண்டும். ஏனென்றால் தமிழ் நாட்டில் ஒரு கொலை நடந்
திருக்கிறது. மகாதேவன் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்
கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இப்படிப்பட்ட செய்தி
படித்த போது அது சரியல்ல என்று சொல்லியிருக்கிறேன்.



1981 பிப்ரவரி 5] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

கொடுத்திருக்கிறார்கள். எப்படி மொழி
அவர்கள் இங்கே சொல்லி செய்திருக்கிறார்கள்.
பெயர்க்க வேண்டுமோ அப்படிச் சொல்லி நானே அறிக்கை வைக்
அது பற்றி இதே பேரவையில் மீண்டும் நானே அறிக்கை வைக்
கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப்
பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி. தங்களிடத்தில் கொடுக்
கிறேன். இது மிக முக்கியமான செய்தி. மகாதேவன் என்பவர்
கேரள மாநில நிதித் துறைச் செயலாளர் பத்மநாபன் என்பவ
ருடைய சகோதரர். பி. எஸ். மகாதேவன்.

மாண்புமிகு திரு. எம் ஜி இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்லுகிறேன். இது
பத்திரிக்கைச் செய்தி. கொலை செய்ததாக எவ்வளவோ வரு
கிறது. ஏதோ பெண்களைத் தூக்கி, கடத்திப் போய்விட்டார்
கள் என்று வருகிறது. பிறகு பெண் நானேதான் போனேன்
என்று சொல்லி வருகிறார்கள். ஆண்கள் கடத்திச்
சென்று விட்டால் கூட திரும்ப வருகிறார்கள்.
பத்திரிகை செய்தியை வைத்துக் கொண்டு பேசுவது முறையல்ல
என்பதை நேற்று சொல்லிய பிறகும், அதுவும் கேரளாவிலே
நடந்திருக்கிற நிலைமையை அல்லது அங்கே இருக்கிறவருடைய
ஒரு அதிகாரியினுடைய தம்பி, உறவினர் என்றால் அதைப்பற்றி
விசாரணை செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு தந்த பிறகு
(குறுக்கீடு) பேப்பரைக் கொடுத்தால் போதும், செய்தி வர
வேண்டாம், தயவு செய்து பத்திரிகை செய்தியை வெளியிட
வேண்டாம், வேறு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் படியுங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நானே
எனக்குத் தந்த தகவலை முதலமைச்சருக்குச் சொல்லுகிறேன்.
கேரள நிதித் துறை செயலாளருடைய உறவினர், சகோதரர்
எனப்படுபவர் மகாதேவன் ஏற்கெனவே ஸ்பிக்கினுடைய மேனே
ஜராக இருந்தவர், அவர் இப்போது வக்கீலாக பிராக்டீஸ் செய்து
கொண்டிருந்தார், அவர் திடீரென்று சென்னையிலே கொலை
செய்யப்பட்டிருக்கிறார், அவர் இந்த பேரத்திலே ஈடுபட்டவர்
என்றும் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி உடனடியாக இந்த
அரசு விசாரணை செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு.. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, பத்திரிகையிலே சொல்லப்படுகிறது, கேட்கப்படு
கிறது எண்ணுகிறோம், நம்புகிறோம் அது எல்லாம் நியாய
மல்ல, அப்படிச் சொல்வது சரியல்ல., சொல்லப்படுவது எல்லாம்
நமக்கு எதற்காக (குறுக்கீடு) இருக்கலாம் அது அங்கே சர்க்காரி
னாவாலே விசாரிக்கப்பட்டது. சில இல்லை என்று சொன்னார்
கள், சில உண்மை என்று சொன்னார்கள். ஆகவே நான் சொல்
வது இது தான். சொல்லப்படுவது எல்லாம் வேண்டாம். அவர்
சொல்லி இருக்கிறார், எனக்குத் தெரியும் என்று சொல்லியிருக்
கிறார் (குறுக்கீடு) இல்லையா.....

டாக்டர் மு. கருணாநிதி : நான் முதலமைச்சருக்குத் தெரியும் என்றும் சொல்லவில்லை, தெரியாது என்றும் சொல்லவில்லை, நான் சொன்னது மகாதேவன் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்ற தகவல் வந்திருக்கிறது. அவர் சென்னையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார், அதைப் பற்றி இந்த அரசு விசாரிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நாங்கள் விசாரிப்போம். ஆனால் வந்திருக்கிற அந்தச் செய்தி நான் சொன்னேனே அது போன்று ஆகிவிடக் கூடாது. அப்படி ஒருவர் இருந்தாரா என்று பின்னால் கேள்வி வந்து விட்டால் என்ன செய்வது? எதையும் நான் சொல்ல முடியவில்லை. இந்த நேரத்திலே. ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் போன்றவர்கள் இளம் துடிப்பில் சில ஆதாரங் களைத் தருகிறேன் என்று பேசி விடுகிறார்கள்........

திரு. அ. ரகுமான்கான் : உங்களுக்குத் தெரியாதா ஆதாரம் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எனக்கு ஆதாரம் தெரியும். என்றால் தனக்குத் தெரியும் என்று அவர் சவால் விட வேண்டிய அவசியமே இல்லை. என்னிடம் ஒப் படைத்து விட்டிருக்கலாம். எனக்குத் தெரியாது என்ற வகை யிலே தான் அப்போது சொன்னார்கள். இன்னமும் அது அவையிலே வைக்கப்படவில்லை என்று கருதுகிறேன். பரவா யில்லை. இனிமேலாவது நம்மைப் போன்றவர்கள்எல்லாம், பொதுவாகச் சொல்கிறேன், ஏதாவது சொன்னோம் என்றால் ஆதாரமும் இருக்க வேண்டும். எனக்குக் கூட மொழிபெயர்த்து கொடுத்தார்கள். என்ன பத்திரிகை (குறுக்கீடு) இல்லை, மனோ ரமா (குறுக்கீடு) 12 கோடி ரூபாயா, இவ்வளவு சரியாக புள்ளி விவரம் தருகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது அந்தப் பத்திரிகை பற்றியெல்லாம் நமக்கு எவ்வளவு நல்ல எண்ணம் இருக்கிறதோ சில சமயம் இழந்து விடுவோமோ என்று நான் எண்ணுகிறேன். எல்லாப் பத்திரிகைகளையும் சொல்லப் போவதில்லை. அப்படிப்பட்ட செய்திகளை வெளியிடுகிற பத்திரிகை (குறுக்கீடு) ஏன் நீங்கள் எழுதியிருக்கிறீர்களா. (குறுக் கீடு) சரி போகட்டும். (குறுக்கீடு). பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு மட்டும் தனி உரிமை அளித்து இருக்கிறீர்களா என்பது தெரிய வில்லை. (குறுக்கீடு). மறுபடியும் இப்படிப் பேசி னால் அது மரியாதையும் அல்ல நாகரீகமும் அல்ல மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி நீண்ட நாளாக சட்டசபையில் அனுபவப்பட்டவர். அவர் இப்படி நடந்து கொள்வது சரி யல்ல என்பதை நான் பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பால் [illegible]ப்பது, ஏதோ சில உரிமைகளை





சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வது என்பது இருந்தாலும் கூட அதற்கு ஒரு எல்லை வேண்டும், ஒரு கட்டுப்பாடு வேண்டும். வழக்குகள் சிலவற்றை நான் இன்னும் படிக்கவில்லை. 50 லட் சம் லிட்டர் ஆந்திராவுக்கு கொடுப்பதற்காக அனுமதி வாங்கப் பட்டது. அந்த 50 லட்சம் லிட்டர் ஆந்திராவுக்குப் போய்ச் சேருவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்தது. (குறுக்கீடு) 63 லட்சம் அப்புறம். 13 லட்சம் லிட்டர் புதிதாக, இப்போது இல்லை, பழைய காலம், ஸ்ரீலங்காவுக்கு வேண்டு மென்று கோரப்பட்டது. அவர்கள் கர்நாடகத்திற்கு அனுப்பி கர்நாடகத்திலிருந்து அதை அனுப்பி விடலாம் என்ற நிலை மைக்கு வந்து அதற்கு ஏறத்தாழ 20 லட்சம் லிட்டருக்கு மேலே கொடுப்பது பற்றி முடிவு எடுத்தார்கள். ஆனால் கர்நாடகத் திலே இருந்தவர்கள் அதை வாங்கும் போது நாங்கள் ஸ்ரீலங் காவுக்கு அனுப்ப முடியாது என்று சொல்லி விட்டால் ஆந்தி ராவுக்கு கொடுத்து 50 லட்சத்துக்கு மேல் 13 லட்சம் அதிக மாகக் கொடுத்து ஸ்ரீலங்காவுக்கு அனுப்பலாம் என்று ஏற்பாடு செய்தார்கள்.

(பிற்பகல் 1—20.)

ஆனால் ஸ்ரீலங்காவுக்குப் போனதாகத் தெரியவில்லை. இப் படிப்பட்ட ஒவ்வொன்றையும் சொல்லிக்கொண்டே போகலாம் பல விஷயங்கள் இருக்கின்றன. இப்படித் தனிப்பட்டவர்களுக்கு நாங்கள் கொடுத்துவிட்டோம் என்று சொல்கின்றவர்களுக்கெல் லாம் அது ஒரு கம்பெனி, அதற்கு முன்னே கொடுத்திருக்கிறார் கள் ; போர்டிலே வைத்துக் கொடுத்திருக்கிறார்கள் ; அதில் அமைச்சர் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அந்தக் கோப்புகளை நான் இன்னும்படிக்கவில்லை ; விரைவிலே அந்த வாய்ப்பு கிடைக் கும், இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே படிக்கலாம் என்று வைத்திருக்கிறேன். அதைப் படித்தால் கோப்புகளில் என்னென்ன எழுதப்பட்டிருக்கிறது ; யார் எழுத வேண்டியது, யார் எழுதாமல் இருந்தார்கள், எங்கே போய் கோப்பு திரும்பி வந்து, மறுபடியும் அதிகாரிகளை அதை அனுப்புவதற்குச் சொல்லி, பிறகு கையெழுத்திட்டார்கள் என்பதையெல்லாம் நான் கோப்புகளை வைத்துக் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். இங்கே இன்னும் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருப்பதால் பேச்சை நான் சுருக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சில பிரச் சினைகளையெல்லாம் இங்கே கிளப்பியிருந்தார்கள். அதிலே ஒரு பிரச்சினைக்கு நான் பதில் சொல்லிவிட்டேன். நாராயண சாமி நாயுடுவைக் கைது செய்தது, பிறகு விட்டு விட்டது என்பதைப் பற்றி. அதைப் போல இன்னும் சிலவற்றை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே சட்டசபையிலும், மேலவையிலும் இருக்கின்ற ஊழி யர்களுக்கு ஏன் பணம் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை, உத்தரவிடட்டும் என்று சொன்னார்கள். கொடுக்கப்பட உத்தரவு இடப்பட்டு விட்டது. 5 ரூபாய், 4 ரூபாய் என்று தினசரிப் படிப் பணம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, தாமதத்திற்கு என்ன காரணம் என்பதை விசாரித்து அதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் நான் சொல்லி, உத்தரவு ஏழெட்டு மாதங்கள், பத்து மாதங்களுக்கு முன்பாகவே போடப்பட்டதாக எனக்கு நினைவு, என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, இந்திரா காங்கிரசோடு தொடர்பு வைத்துக் கொண்டால் நாங்கள் ஒதுங்கி விடுவோம் என்றார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒரு அரசியல் கட்சியோடு தொடர்பு வைத்தால் இன்னொரு அரசியல் கட்சி விலகுவதா? அது அரசியல் கட்சியினுடைய தலைமை அல்லது அரசியல் கட்சியினிடம் இருக்கிற கொள்கை தவறு, அந்தக் கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்லி விலகுவதா? இது எனக்குப் புரியவில்லை.

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, நாங்கள் சொன்னது ஒரு கட்சித் தலைவருடைய தொடர்பு என்ற அந்த முறையிலே, '' நான்-பொலிடிகலாக '' அரசியலை விட்டுச் சொல்லவில்லை. எங்கள் கட்சித் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் பிரதமர் என்ற முறையிலே பார்க்கிறார், இந்திரா காந்தி அம்மையாராகவும் பார்க்கிறார் ; எல்லோரையும் பார்க்கிறார். அதுவல்ல பிரச்சினை. இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய அரசியலைத் தழுவி இருக்கக்கூடிய உறவு என்பதுதான் எங்கள் சீரியஸ் அப்ஜெக்ஷன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர் களே, நல்ல கொள்கைகளை யார் சொன்னாலும் ஏற்க வேண்டி யது நம் ஒவ்வொருவருடைய கடமை என்று நான் கருதுகிறேன் என்பதைச் சட்டப் பேரவைத் தலைவரவர்களின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, நாங்கள் 1977 ஆம் ஆண்டில் தோழமைக் கட்சியாக இருந்தோம் தேர்தலில். அதற்குப் பிறகு தோழமைக் கட்சியாக இருந்தது தஞ்சாவூரில் இடைத் தேர்தலில் நடக்கின்ற வரையில். அதற்குப் பிறகு தேர்தலில் எங்களுக்குக் கூட்டு இல்லை. மாநில அவை உறுப்பினர் மாண்புமிகு திரு. கல்யாண சுந்தரனார் அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிட்டார்கள். இந்தத் தேர்தல் முடிந்து ஒரு சில மாதங்களுக்குப் பிறகு தேர்தல் கூட்டு முடிந்து விட்டது, இனிமேல் எங்கள் கொள்கையைப் பற்றித் தான் பேசுவோம் என்று அவர்கள் சொன்னார்கள். நான்



ஒன்றும் கோபித்துக் கொள்ளவில்லை. அது அவர்களுடைய உரிமை. உங்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது ; எங்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது. நாங்கள் எழுந்து, மார்க்சிஸ்ட் கம்யு னிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கட்சியோடு தொடர்பு கொண்டால் அல்லது அவர்களோடு இணைந்து போராட்டத் திற்கு இணங்கினால் நாங்கள் நிச்சயமாக எதிர்ப்பாக இருப்போம் என்று சொன்னால்அது நியாயமா ? எந்தப் போராட்டத்திலே எந்தக் கொள்கையிலே நாங்கள் இணைகிறோம், எதை ஆதரிக் கிறோம் என்பதைத்தான் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக நீங்கள் வேறு வகையிலே தீர்மானம் செய்வது உங்கள் உரிமை. அதை நான் தடுக்க முடி யாது. ஆனால் ஒன்றை மட்டும் நான் கண்டிப்பாகச் சொல்வேன். இங்கே நேற்றைய தினம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன் னார்கள் இந்திப் பிரச்சினைப் பற்றி பேசினார்கள். இங்கே மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களும் அதைச் சொன்னார்கள். இந்திப் பிரச்சினையில் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சொல்லியதை நான் நம்ப மாட்டேன் என்று எப்போது கூறினேன் எந்தக் காலக்கட்டத்தில் கூறினேன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தேர்தல் நடந்து கொண்டிருந்த நேரம் அதுமட்டுமல்ல. உண்மையிலே நான் மனத்திலே வேகமும் ஆத்திரமும் கூட என்று சொல்கிற அளவிற்கு எனக்கு ஏற்பட்டு நான் பேசிய கருத்து விசாரணை வேண்டுமென்றால் நாங்கள் நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் சாட்சிகள் முதலில் என்ன சொல்கிறார் களோ அதையே அவர்கள் மாற்ற முடியாமல் இருக்கின்ற நிலைமை வேண்டும். மாற்றிச் சொன்னார்கள் என்றால் அதற்குரிய நியா யத்தை அவர்கள் சொல்வது மட்டுமல்ல அப்படிச் சொன்னவர் கள் மீது ஒரு பெரிய வழக்கை இரண்டு மூன்று ஆண்டுகள் நடத்தி யாவது அதற்குப்பிறகு நிரூபித்து தீர்ப்பு அளிப்பது. அதற்குப் பிறகு இவர்கள் போய் இல்லை என்பது அல்லது இருக்கிறது என்று இப்படியே போனால் நிலைமை என்ன?

மாநிலக் கட்சிகள் இந்த நாட்டிற்குத் தேவையா என்ற கேள்வி வந்த பொழுது நான் எதிர்த்து அதிகமாகப் பேசி, இதை நான் நம்ப முடியவில்லையென்றேன். ஒரு மாநிலக் கட்சியின் ஆதரவும் இருந்து ஒரு காலத்திலே மத்திய அரசைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையிலே இருந்த அந்த நிலைமை நாட்டிலே நன்மை பயக் கின்ற ஒரு செயலையும் உருவாக்கியது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அப்படிப்பட்ட மாநிலக் கட்சிக் கூடாது என்று சொன்னதாக பத்திரிகையிலே படித்த பிறகுதான் தேர்தல் நேரத்திலே அவ்வளவு வேகமாக நான் பேசினேன். ஆனால், இன்றைய தினம் அதே மாநிலக் கட்சியோடு தொடர்பு கொண் டிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையிலே எங்கள் கட்சியினுடைய தலைவி இந்திரா காந்தி அவர்கள், மாநிலக் கட்சி இந்த நாட்டுக்குத் தேவையில்லை

யென்று எந்தப் பொழுதிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் சொல்ல
வில்லையென்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, நான் வேண்டுமானால், அவருக்கு இங்கே
இல்லை, எப்பொழுது வேண்டுமானாலும், வெட்டி வைத்திருக்
கும் அந்தப் பகுதியை நான் காண்பிக்கத் தயாராக இருக்கின்றேன்.

**திரு. கே. எஸ். ஹரசா செரீப் :** ஸ்பீக்கர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுந்தரராஜ் சொன்
னது நான் அறிந்த வரையில் ஒன்றுதான்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, எந்த வகையில் நான் பேசினேன் என்பதைத்
தெளிவு படுத்துவதற்காகத்தான் இந்த ஆதாரத்தை எடுத்துக்
கொண்டேனே தவிர, அவர் பேசியது உண்மை என்பதற்காக
நான் அதை இங்கே பயன்படுத்திக் கொள்ளவில்லை. அந்த
நேரத்தில் அதைப் படித்த பொழுது எனக்கு ஏற்பட்ட மன
நிலைமையை நான் சொல்கின்றேன். ஆகவே, அவர் சொல்வதை
நான் நம்ப முடியாது என்று இன்னும் வேறு பல காரணங்களை
வைத்துக் கொண்டு சென்னேன். ஆனால், மார்க்சிஸ்ட் கட்சி,
மொத்தமாக, கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் ஒரு காலத்திலே
இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொன்னதாக
எனக்கு நினைவு.

**திரு. என். சங்கரய்யா :** கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை
இந்தியாவில் இருக்கக் கூடிய எல்லா தேசீய மொழிகளும் மத்திய
சர்க்காருடைய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டுமென்பதுநான்.
அதுதான் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத்
தலைவர் அவர்களே, அவர் வாயில் அதை இங்கே சொல்ல
வைத்த நிலைமையை உருவாக்கிக் கொண்டேன். அதை ஏன்
சொல்கிறேன் என்றால்.

**திரு. என். சங்கரய்யா :** ஏற்கெனவே பல மாதங்களுக்கு
முன்னால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மொழிப்
பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி
இராமச்சந்திரன் அவர்கள் மூலமாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி தமிழ் மாநிலக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தையே
தங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். அதிலேயே அந்த விவரங்கள்
பூராவும் அடங்கியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்
களே அவர்கள் அதை நினைவு என்ற அளவிலே
வைத்துக் கொண்டு சொன்னதற்காக நன்றி என்றாலும் நான்





குறிப்டுவது, இதற்காக, திராவிட முன்னேற்றக் கழகம் அமரர்
அண்ணாவின் தலைமையிலே போராடிய பொழுது, அப்பொழுது
இந்த நிலை இல்லை. அப்பொழுதிருந்த நிலைமை வேறு. 14
மொழிகளும் தேசீய மொழிகளாக, இந்த நாட்டின் ஆட்சி
மொழிகளாக ஆக வேண்டுமென்று சொன்ன பொழுது, எதிர்த்த
கருத்துக்கள் இருந்தன. இருக்கக் கூடாது என்பதல்ல. அண்ணா
அவர்கள் திராவிட நாடு வேண்டுமென்று கேட்டு பிறகு மாற்றிக்
கொள்ளவில்லையா ? அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை
அந்த, அந்த நேரத்திற்கு எது சரி என்று படுகிறதோ, இந்த
நாட்டிற்கு எது நன்மை என்று கருதுகிறோமோ, அதைச் சொல்
கிறோம். அதைப் பின்பற்றுகிறோம். அதை நடைமுறைக்குக்
கொண்டு வருகிறோம். ஆகவே, அந்த வகையில் கருத்து வேறு
பாடுகள் இருந்தாலுங்கூட, அதை மாற்றி, ஒற்றுமைப்பட்ட
நிலைமையில் ஒரு எண்ணத்தை வெளியிடுவதற்கு உரிமை உண்டு
என்பதாலேதான் நான் வாதிக்கின்றேன். அந்த உரிமை உங்க
ளுக்கும் இருக்கிறது. எங்களுக்கும் இருக்கிறது. ஒருவரைப்
பாராட்டும்போது, வார்த்தை அளவிலே நாங்கள் சொல்வதை
வைத்துக் கொண்டு கேலியாகப் பேசுவதால் மட்டும் ஒரு
பிரச்சினை உண்மைக்குப் புறம்பானது என்று ஆகிவிடாது.

நண்பர் உமாநாத் அவர்கள் இந்த மீனாட்சியைப் பற்றிச்
சொன்னார்கள். நான் போய் பங்கு கொண்ட இடம் மீனாட்சிக்
கல்லூரி. மதுரை மீனாட்சி என்று பாராட்டி, அந்த மதுரை
மீனாட்சியின் ஆட்சியிலே மதுரை இருக்கிறது என்று எல்லோரும்
பேசுகின்ற வகையில் அந்த மீனாட்சி என்பது கண் அழகைக்
காட்டும். அந்தப் பொருள் உங்களுக்குத் தெரியும் என்று கருது
கின்றேன். அதே போல் மீனாட்சிக் கல்லூரி என்று சொல்லும்
போது, அந்தப் பரம்பரைக்கே உரித்தாகி இருக்கிற அந்தக்
கண்ணைப் பற்றி நான் அங்கே புகழ்ந்து பேசினேன். மீனாட்சி,
இந்திய மீனாட்சி என்று சொன்னேன். கல்லூரி மீனாட்சியிலே.
இந்திய மீனாட்சியினுடைய படத்தைத் திறந்து வைக்கிறேன்.,
அதே மீனாட்சி, மதுரையிலே இருக்கிற அந்த
மீனாட்சி கோயிலுக்கு அவர் போவதாக இருந்தார். அங்கே
வரப் போகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். கொள்கைக்
கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை
ஆனால், ஜனாதிபதி ஆட்சி வேண்டுமென்று சொன்னதை
ஏதோ, சர்வாதிகாரத்தை நான் ஆதரிக்கிறேன் என்று சொன்
னார்கள்.

(பிற்பகல் 1-30).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதி
யுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** நான் அங்கே
சொன்னதை அப்படியே சொல்லுகின்றேன்.

அவர் நான் சொன்னதை முழுவதும் படிக்க வாய்ப்பு கிடைக்க வில்லை என்று நான் கருதுகிறேன்.

ஜனாதிபதி ஆட்சி என்பது நிக்சன் தவறு செய்துவிட்டார் என்று சொன்னபோது விசாரித்து அவரை வெளியேற்ற முடிந்தது ஒரு நீதிமன்றத்தாலே. அதுபோன்று ஜனநாயக வழியில் இருக் கின்ற ஒரு ஜனாதிபதி ஆட்சி வேண்டுமென்று சொன்னேன். அதே நேரத்தில் மத்திய அமைச்சரை வைத்துக் கொண்டு சொன்னேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று. அதே நேரத்தில் அதே கூட்டத்தில் இன்னொன்றையும் சொன்னேன். திரும்ப அழைக்கின்ற உரிமை மக்களுக்கு வேண்டும் என்று சொன்னேன். திரும்ப அழைக்கின்ற உரிமையை வர வேற்கிறேன் என்று கேரள முதலமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்குப் பிறகு, அதைப் பாராட்டி பேசியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவு படுத்துகின்றேன். ஆகவே நாங்கள் ஜனநாயக கொள்கையை விட்டுவிடவில்லை. சர்வாதி காரத்தை நாங்கள் எப்போதும் ஆதரிக்கவில்லை, என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். இனிமேல் உமாநாத் அவர்களுக்கு எங்களைப் பற்றிச் சந்தேகம் வராது என்று கருதி இன்னும் பல பேர்களுக்கு நான் பதில் சொல்லவேண்டும் என்றா லும் அதைப் பின்னால் வைத்துக் கொள்ளலாம் என்று கூறி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

திரு என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்போது விவாதம் நடந்தபோது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த அரசின் தேர்தல் நிலைகளைப் பற்றிக் கேட் டோம் உதாரணமாக, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி யிருக்கிறார், வரவிருக்கின்ற திருப்பத்தூர் உட்தேர்தலிலே ஏற்கனவே உள்ள கொள்கைப்படி திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரசை ஆதரிக்கும் என்று. ஆனால், நாமும், மற்றக் கட்சிகளும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து சமீபத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு அணி வகுத்தோம். அந்த நிலையில் இருந்து அண்ணா தி.மு.க. மாறி இருக்கிறதா என்பதைத்தான் இந்திரா காங்கிரஸை நோக்கி மாறுகிறதா என்பதைக் கேட்டோமே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இந்தக் கொள்கையை கேட்பது நியாயம் அல்ல. அவர்கள் கேட்கவேண்டியது, எழுதவேண்டியது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கு. அவர்கள் பேசி அதை முடிவு செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி 27-ந் தேதி விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளை எல்லாம் சந்தித்து பேசும்போது இந்த பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில்





தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் ஒரு குழு அமைக்கப்பட்டு, 15 தேதி வரையில் ஜப்தி போன்ற தீர்க்கப்படும். அது வரையில் என்று சொன்னார்கள். ஆனால் நடவடிக்கைகள் இராது அந்தக் குழு அமைப்பதைப் பற்றியோ, அதோடு அண்ணாமலை சர்வகலாசாலையில் நடைபெறும் போராட்டம் சம்பந்த மாகவோ, அதில் கைதானவர்களை விடுதலை செய்வதைப் பற்றியோ ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அது இன்னும் சரியாக அங்கே நடைபெறக் கூடிய நிலைமை உருவாகவில்லை. ஆகவே அதைப் பொறுத்துத்தான் விடுதலையைப் பற்றி அரசு சரியான முடிவெடுக்க முடியும்.

அதே நேரத்தில் குழு அமைப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. வெளியே இருப்பவர்கள் வரமாட்டேன், போராட்டம் நடத்துவேன் என்று சொல்லும்போது யாரை வைத்துக்கொண்டு நடத்துவது என்று தெரியவில்லை. குழுவை நடத்த நான் தயார் ஆனால் வருகின்ற அத்தனை பேர்களும் முடிவாக என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அத்தனை பேரும் சேர்ந்து இறுதி வரையில் அதே முறையிலே இருப்போம் என்ற உத்திரவாதத்தோடு அவர் கள் கலந்து கொள்ள விரும்பினால் நிச்சயமாக நான் தயாராக இருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கே திருப்பத்தூர் இடைத்தேர்தல் இடம் பெற்றுவிட்ட காரணத்தால் அதிலே சந்தேகம் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. அனுமதிப் பீர்கள் என்று எண்ணுகிறேன். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது திருப்பத் தூர் இடைத் தேர்தல் குறித்து மார்க் கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே கடிதம் வந்தால் அது குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு எடுக்கும் என்று சொன்னார்கள். அதைப்போலவே, இந்திரா காங்கிரஸ் கட்சியிடமிருந்தும் கடிதம் எதிர்பார்த்துதான் முடிவு எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலை வரும், எதிர்க்கட்சித் தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர் கள் போக்கு எப்படியோ அதை அனுசரித்து எங்களின் முடிவு இருக்கும். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், ஜே. எஸ். இராசு மற்றும் சு. பாலன் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [ 98 பிப்ரவரி 5

திருவாளர்கள் எல். பலராமன், திரு. என். கிட்டப்பா, ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் திரும்பப்பெறப்பெற்றவையாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் டி. மணி, எல். இளையபெருமாள் ஆகியவர்களுடைய திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: '' 1981-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21 ஆம் தேதி யன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர் களாவர் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (6—2—1981) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

187. தமிழ் நாடு கால்நடை மன்றத்திற்கு சில உறுப்பினர் களை நியமிப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 5—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2181 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1957 ஆம் ஆண்டு கால்நடை மருத்துவர்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் [தமிழ் நாடு சட்டம் 21/1957) 16(7) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

188. உள்துறையின் 28—8—1977 ஆம் தேதியன்று வெளி யாகி 19—10—1977 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ் நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் 11- பிரிவு-2, பக்கம் 618-ல் (ஆங்கிலத்தில்) வெளியான 11-2/எச்.-ஒ/5093/77 ஆம் எண். அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறை யின் 11—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2955 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].



1981 பிப்ரவரி 5]

189. சென்னையிலுள்ள திட்டமிடுதல் பிரிவு 68-ல் உள்ள கங்காதரேசுவரர் கோவில் பகுதிக்கான விரிவான மேம்பாடுத் திட்ட வரை படத்தை வெளியிடுவது குறித்து வீட்டுவசதி-நகர்ப் புற வளர்ச்சித் துறையின் 11—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 49-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுபுற அமைப்புத் திட்டச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

190. தமிழ் நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 7—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 892 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ் நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 33/1943) 22(4) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்

* 25. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரிவிதித்தல் சட்டமுன்வடிவின் நகல் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1981).

* 26. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1981).

* 27. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைத் தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1981).

* 28. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு புயல் மற்றும் வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பயிரிடும் குத்தகை தாரர்கள் குத்தகைப் பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1981).

* 29. தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1981).

* 30. தமிழ் நாடு 1981 ஆம்ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1981).

---

* 2—2—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.

## இணைப்பு 1.

(133-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 1854 கான விடையைக் காண்க).

சிலைகள் திருட்டு போவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

(1) பழம்பெரும் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் குறித்த 1972-ம் வருடத்திய தொல் பொருள் பதிவுச் சட்டத்தின் படி, ஆலயங்களிலுள்ள தொன்மையான விக்கிரகங்கள் மற்றும் சிலைகளை பதிவு செய்யப்படுகிறது.

(2) விக்கிரகங்களை நிழற்படம் எடுத்து ஆல்பம் தயார் செய்து ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள விக்கிரகங்கள் ஒரு தனிப்பதிவு பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

(3) போதிய பாதுகாப்பு வசதியற்ற ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள் அருகில் உள்ள பெரிய ஆலயங்களில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

(4) சிலைகள் உள்ள இடங்களுக்கு போதுமான காவல் நியமனம் செய்யப்படுகின்றது. பாதுகாப்புப் பதிவேடு பேணப் பட்டு, அதில் காவலர்கள் தினப்படி பணி மாற்றம் ஆகும்போது விவரங்கள் குறிக்கப்படுகின்றன. தற்போது பூட்டப்பட்டுள்ள பூட்டுக்கள் போதுமான பாதுகாப்பு இல்லாமலிருப்பின் கூடுதல் பூட்டுக்கள் பூட்டப்படுகின்றன.

(5) ஒவ்வொரு சன்னதிக்கும் கதவு அல்லது கதவுக்கு மேல் இரும்புக் கம்பியாலான கதவுகள் போடப்பட்டு வருகின்றன.

(6) சிலைகள் பாதுகாப்பாக வைக்கும் இடத்தை பாது காக்கவும் மேற்படி இடத்திற்கு அவசியமான பந்தோபஸ்து செய் யவும், அந்தந்த ஆலயங்களின் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசு மான்யமும் வழங்கப்பட்டு உள்ளன.

(7) ஆலயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டாச்சாரியார்கள், அல்லது குருக்கள் அல்லது பண்டாரங்கள் இருப்பின் தினப்படி அல்லது ஆலயத்திற்கு தகுந்தவாறு பணிமாற்றம் செய்யும்போது பணிமாற்றப் பதிவேட்டில் (Turn Register) கையொப்பம் பெறப்படுகிறது. ஒரே ஒரு பட்டாச்சாரியார் அல்லது குருக்கள் அல்லது பண்டாரம் இருந்து சன்னதிகள் பல்வாக இருந்தால், ஒரு சன்னதியிலிருந்து மற்றொரு சன்னதிக்கு செல்லும் போது



பாதுகாப்புக்காகப் பூட்டிச் செல்லப்படுகிறது. முந்தைய சன்னதி மேற்கொண்டவர்கள் இல்லாத சமயம் எந்த சன்னதியும் திறந்து வைக்கப்படுவதில்லை.

(8) ஆலயங்களின் உள்ளேயும் வெளியேயும் சுற்றிவர காவ லர்கள் வைக்கப்பட்டு, டெல்டேல் கடிகாரங்களும் வைத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

(9) சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடும் நபர்களை கவனித்து காவல்துறையினருக்கு தகவல் கொடுக்கவும், அவசிய மானால் லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி வாங்கிக் கொடுத்து பயிற்சி அளிக்கவும் ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(10) களவு நடந்த உடனே காவல்துறைக்கும், ஆணை யருக்கும் தெரிவிக்கப்பட்டு அரசுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(11) ஆலயச் சிப்பந்திகளின் நடவடிக்கைகளை, கண் காணிக்க வேண்டுமென்றும், ஏதாகிலும் ஒரு சிப்பந்தியின் நட வடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டால் தீவிரமாக கண்காணித்து அவர் மீது காவல் துறையில் ஏதாவது புகார்கள் உள்ளதா என விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையானால், காவலர்களின் புகைப்படம் எடுத்து காவலரின் விவரங்களுடன் வைத்துக் கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(12) விக்கிரகங்கள் பாதுகாப்பாக இருப்பதனை காவல் துறையினர் அடிக்கடி கண்காணிக்க காவல் நிலையத்தில் இருந்து பட்டாப் புத்தகம் பெற்று அதில் ரோந்து வரும் காவலர் களின் கையொப்பம் பெறப்படுகிறது.

(13) சிலைத் திருட்டு நேர்வுகள் கடுமையான குற்றங்க ளாகக் கருதப்பட்டு ஒவ்வொரு நேர்வும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. கண்காணிப்பாளர்கள் மாதந்தோறும் மாவட்ட காவல்துறை வழக்குகளின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங் நடைபெறும் குற்ற வழக்குகளின் புலன் விசாரணையின் முன் களின் போது சிலைத் திருட்டுகளில் புலன் விசாரணை செய்கின்றனர். உள்ளூர் காவல்துறை னேற்றத்தையும் ஆய்வு செய்வதில் சிலைத் திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை காவல்துறையின் குற்றவியல் சிரமப்பட்டால் அவ்வழக்குகள் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(14) காவல்துறையின் இரவு நேரத்துக் காவலர், மதிப்பு மிக்க சிலைகளுள்ள கோயிலுக்கு அடிக்கடி சென்று கோவிலில் அல்லது அதற்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டி

கையேற்பமிடுகின்றனர். உள்ளூர் காவல்துறை அலுவலர்களும் இவ்விதக் கோவில்களுக்கு அடிக்கடி சென்று கண்காணித்து வருகின்றனர்.

(15) சிலைத் திருடர்கள் பற்றியும், திருடப்பட்ட சிலைகளை வாங்குபவர்கள் பற்றியும், சம்பந்தப்பட்ட காவல் அலுவலகத்தில் பட்டியல்கள் பேணப்பட்டு, சிலை திருடுவோர்களைத் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் சிலைகள் திருடும் குற்றவாளிகளின் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவற்றினை முக்கியமான காவல் துறை ரேகைப் பதிவு அலுவலகங்களில் வைத்திருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(16) காவல்துறை சார்நிலை அலுவலர்கள் கோவில்களை அடிக்கடி கண்காணிப்பதுடன் காவல்துறை கண்காணிப்பாளர்களும் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட மதிப்புவாய்ந்த சிலைகள் வைக்கப்பட்டிருக்கும் கோயில்களுக்கும், மற்ற இடங்களுக்கும் சென்று பார்வையிடுகின்றனர்.

(17) தென்மாநிலங்களில் நடைபெறும் கற்சிலை, மற்றும் வெண்கலச் சிலைகள் திருட்டு பற்றியும், அவைகளைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், அவ்வப்போது காலமுறையில் நடைபெறும் தென் மாநிலங்களின் காவல்துறை துணைத் தலைவர்களின் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டு, மாநிலங்களிடையே நடைபெறும் சிலை கடத்தலைத் தடுப்பதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(18) சிலை திருட்டு வழக்குகளை நடத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஒரு கூடுதல் நீதித்துறை தலைமை நடுவர் கொண்ட தனி நீதிமன்றம் (Additional chief Judicial Magistrate) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு உதவி செய்ய இரண்டாம் நிலை அரசுக் குற்றத்துறை வழக்கறிஞர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(19) சென்னையில் சிலை திருட்டு வழக்குகளை புலன் விசாரிப்பதற்காக காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஒருவர் இரண்டு ஆய்வாளர்கள் மற்றும் சில பணியாளர்கள் கொண்ட காவல்துறை தனிப்பகுதி ஒன்று இயங்கி வருகிறது.

மேலும் எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தலைமைச் செயலகத்தில் வணிகவரி அறநிலையத்துறை அரசுச் செயலர், காவல் துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர், தொல் பொருள் துறைத் தலைவர் ஆகியோருடன் காலமுறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.



## இணைப்பு II.

[159-ம் பக்கத்திலுள்ள உடுக்குறிட்ட வினா எண் 200 க்கான விடையைக் காண்க

தனியாரால் நடத்தப்படும் அனாதைக் குழந்தைகளுக்கான இல்லங்களும் அவற்றின் குழந்தைகளின் எண்ணிக்கையும்.

| வரிசை எண்ணும், இல்லங்களின் பெயரும், இருக்கும் இடத்தின் பெயரும். | குழந்தைகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 சேவா சமாஜம், சிறுமியர் இல்லம், எழும்பூர், சென்னை—8. | 50 |
| 2 சேவா சமாஜம், சிறுவர் இல்லம், சாலிக்கிராமம், சென்னை—93. | 50 |
| 3 பால மந்திர், சென்னை—17 .. .. | 75 |
| 4 ஸ்ரீ சேவா மந்திர், 66, பஜுல்லா ரோடு, சென்னை—17. | 100 |
| 5 சேவா சமாஜம், மகளிர் பயிற்சி நிலையம், மற்றும் விடுதி, சென்னை—8. | 25 |
| 6 கிருத்துவ இளைஞர்கள் சங்கம், சென்னை—9 | 25 |
| 7 அவ்வை மகளிர் இல்லம், சென்னை—20 .. | 25 |
| 8 தென்னிந்திய பழங்குடியினர் நல சங்கம், சென்னை—15. | 100 |
| 9 கிருத்துவ பெண்கள் சங்கம், சென்னை—84 .. | 25 |
| 10 சேவா சமாஜம், குழந்தைகள் இல்லம், பள்ளிப்பட்டு, சென்னை—20. | 50 |
| 11 பஞ்சாப் அசோசியேஷன், சென்னை—14 .. | 50 |
| 12 வள்ளுவர் குருகுலம் பெண்கள் இல்லம், தாம்பரம், சென்னை—45. | 75 |
| 13 குருகுலம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மதுராந்தகம், செங்கல்பட்டு. | 250 |
| 14 சரோஜினி வரதப்பன் மகளிர் உயர்நிலைப்பள்ளி, பூந்தமல்லி. | 100 |

[1981 பிப்ரவரி 5

| | | |
|---|---|---|
| 15 | மகாபோதி மனநோய் குழந்தைகள் இல்லம், சென்னை—8. | 25 |
| 16 | செயின்ட் பிரான்சிஸ் சேவியர் குழந்தைகள் இல்லம், சென்னை—18. | 25 |
| 17 | பால் பவன் சிறுவர் இல்லம், கில்டு ஆப் சர்வீஸ், சென்னை—24. | 25 |
| 18 | செயின்ட் லாசரஸ் போர்டிங் ஹோம், சென்னை —28. | 25 |
| 19 | சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை—28 | 50 |
| 20 | செயின்ட் ஜோசப் குழந்தைகள் இல்லம், காஞ்சி புரம், செங்கல்பட்டு. | 50 |
| 21 | செயின்ட் ஜோசப் அருள் இல்லம், பல்லாவரம், செங்கல்பட்டு. | 25 |
| 22 | குழந்தைகள் இல்லம், மதுரவாயல் .. | 45 |
| 23 | வித்யா பாரதி சிறுவர் இல்லம், தாம்பரம் .. | 50 |
| 24 | சிவானந்தா ஆர்ப்பனேஜ், காட்டான்குளத்தூர், செங்கல்பட்டு. | 50 |
| 25 | செயின்ட் லூயிஸ் குழந்தைகள் இல்லம், செல்லம்பட்டி, செங்கல்பட்டு. | 25 |
| 26 | செயிண்ட் ஜோசப் அனாதை இல்லம், தேனிகா புரம், வட ஆற்காடு. | 300 |
| 27 | செயிண்ட் ஜோசப் காப்பகம், அத்திப்பட்டு, வட ஆற்காடு. | 200 |
| 28 | கில்டு ஆப் சர்வீஸ், இந்திய குழந்தைகள் நல குழு, வட ஆற்காடு. | 25 |
| 29 | வள்ளலார் குழந்தைகள் இல்லம், வளையமா தேவி, தென் ஆற்காடு. | 75 |

திருநெல்வேலி.

| | | |
|---|---|---|
| 30 | அவ்வை ஆசிரமம், சிவசைலம், திருநெல்வேலி மாவட்டம். | [illegible] |



1981 பிப்ரவரி 5]

| | | |
|---|---|---|
| 31 | செயிண்ட் ஜோசப் சாரிட்டி இன்ஸ்டிடியூட், அடைக்கலாபுரம், திருநெல்வேலி. | 100 |
| 32 | ஹோலி பேமிலி ஹோம், இருதயகுலம், திருநெல் வேலி மாவட்டம். | 50 |
| 33 | கிருபை இல்லம், (குழந்தைகள்) நாங்குனேரி, திருநெல்வேலி மாவட்டம். | 50 |

கன்னியாகுமரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 34 | ஸ்ரீ கன்னியாகுமரி குருகுலம் குழந்தைகள் இல்லம் கன்னியாகுமரி. | 65 |
| 35 | செயிண்ட் தெரசா குழந்தைகள் இல்லம், கன்னியாகுமரி. | 25 |
| 36 | அதென்கோட்டாசான் முத்தமிழ் கழகம், மண்டைக்காடு கன்னியாகுமரி மாவட்டம். | 50 |
| 37 | செயின்ட் தாமஸ் குழந்தைகள் இல்லம், சாந்தி கிராம், கன்னியாகுமரி மாவட்டம். | 25 |

இராமநாதபுரம்

| | | |
|---|---|---|
| 38 | கில்டு ஆப் சர்வீஸ், பாலர் பாதுகாப்பு விடுதி, சிவகங்கா, இராமநாதபுரம் மாவட்டம். | 50 |
| 39 | அன்னை சாரதாமணி மாதர் கழகம், சிவகாசி | 50 |

நீலகிரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 40 | ப்ரான்சிஸ்கான் ஆஸ்பிட்டலர் சிஸ்டர்ஸ் ஆப் இம்மாகுலேட் கன்சப்ஷன், நீலகிரி. | 25 |
| 41 | குழந்தைகள் காப்பகம், ஆனந்த பாலமந்திரம், கோத்தகிரி. | 25 |
| 42 | சிறுமலர் குழந்தைகள் காப்பகம், நடுவட்டம் .. | 50 |

திருச்சி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 43 | தமிழ்நாடு மாணவர் இல்லம், பாரதிபுரம் .. | [illegible] |
| [illegible] | தமிழ்நாடு பெண்கள் நல சங்கம், வசந்தநகர், திருச்சி. | 50 |

[1981 பிப்ரவரி 5]

45 திருச்சி சேவா சங்கம், நெ. 2, வில்லியம்ஸ் ரோடு திருச்சி — 75

46 திருவள்ளுவர் அனாதை விடுதி, (குழந்தைகள்) லிங்கதடிமேடு, திருச்சி. — 100

47 தென்னிந்திய பழங்குடியினர் நல சங்கம், திருவானைக்கோவில், திருச்சி மாவட்டம். — 125

48 செயின்ட் ஜான் பாய்ஸ் டவுன், மஞ்சம்பட்டி, மணப்பாறை, — 50

49 ஸ்ரீ இராமலிங்க ஜோதி நிலையம், வள்ளலார் குருகுலம், செட்டி, திருச்சி மாவட்டம். — 25

மதுரை மாவட்டம்.

50 பாலமந்திரம், பழைய நத்தம் ரோடு, மதுரை — 50

51 குழந்தைகள் இல்லம், காந்திகிராமம், மதுரை — 100

52 சன்மார்க்க குருகுலம், கீரனூர். . .. .. — 50

53 நேரு சிறார் பள்ளி, குப்பிநாய்க்கன்பட்டி, மதுரை மாவட்டம். — 50

54 பாலர் இல்லம், கரடிக்கால் மதுரை மாவட்டம். — 50

55 பாலர் இல்லம், திருநகர், மதுரை மாவட்டம் — 50

56 வளர் மகளிர் இல்லம், மேட்டுப்பட்டி, திண்டுக்கல் — 25

57 செயின்ட் பிலோமினா குழந்தைகள் காப்பகம், மதுரை ரோடு, திண்டுக்கல். — 50

பெரியார் மாவட்டம்.

58 கஸ்தூரிபா நிகேதன், ராஜன் நகர், பெரியார் மாவட்டம். — 100

கோயம்புத்தூர் மாவட்டம்.

59 கோயம்புத்தூர் சேவா இல்லம், கோயம்புத்தூர் — 75

60 ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆசிரமம், பள்ளப்பாளையம் கோயம்புத்தூர் மாவட்டம். — 50



1981 பிப்ரவரி 5]

61 கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவாலய கமிட்டி, ஈரோடு. — 100

62 சகாய அன்னை இல்லம், சின்னப்பாலம், பவானி தாலுகா. — 25

தஞ்சாவூர் மாவட்டம்.

63 இந்திய குழந்தைகள் நலக்குழு, தஞ்சாவூர் .. — 125

64 வள்ளுவர் கல்விக்குழு, சித்திரக்குடி, தஞ்சாவூர் — 25

65 விவேகானந்தா அனாதைகள் காப்பகம், வெள்ளம்பெரம்பூர். — 125

66 ஸ்ரீ இராமகிருஷ்ணா அனாதைகள் இல்லம், தில்லைஸ்தானம். — 75

67 ஸ்ரீ வெங்கடேஸ்வரா அனாதை விடுதி, காடுவேலி — 75

68 கஸ்தூரிபா காந்தி குருகுலம், வேதாரண்யம் .. — 100

69 வள்ளுவர் கல்விக்குழு, கூனமங்களம் .. — 50

70 வள்ளுவர் கல்விக்குழு, அல்லூர், தஞ்சாவூர் மாவட்டம். — 50

71 ஆரூரான் மாணவர் இல்லம், திருவாரூர் .. — 100

72 இளநிலை சீர்திருத்தப்பள்ளி, சித்திரக்குடி .. — 50

73 ஸ்ரீ சண்முகானந்தா ஆசிரமம், கோட்டையூர், கும்பகோணம். — 25

74 செயின்ட் ஜோசப் குழந்தைகள் இல்லம், கருங்கணி, தஞ்சாவூர். — 25

75 செயின்ட் தாமஸ் குழந்தைகள் இல்லம், பட்டுக்கோட்டை. — 25

76 செயின்ட் வின்செண்ட் டி பால் அனாதை விடுதி, மன்னார்குடி. — 25

77 செயின்ட் ஜோசப் குழந்தைகள் இல்லம், மன்னார்குடி. — 25

[1981 பிப்ரவரி 5]

78 ஆர். சி. பாதிமா குழந்தைகள் இல்லம், மன்னார்குடி. 25

79 செயிண்ட் அந்தோணி குழந்தைகள் இல்லம், மானாம்புசாவடி, தஞ்சாவூர். 25

80 செயிண்ட் அந்தோணி குழந்தைகள் இல்லம், நாகப்பட்டினம். 25

81 செயிண்ட் மைக்கேல் குழந்தைகள் இல்லம், பூக்கார தெரு, தஞ்சாவூர். 25

82 செயிண்ட் தெரசா குழந்தைகள் இல்லம், திருத்துறைப்பூண்டி. 25

83 செயிண்ட் ஜோசப் குழந்தைகள் இல்லம், வடக்கு வாசல், தஞ்சாவூர். 25

84 செயிண்ட் சேவியர் இல்லம், பாதூர் மேல் காவேரி, கொரடாச்சேரி. 25

85 செயிண்ட் ஆனிஸ் குழந்தைகள் இல்லம், தேவதானம், மன்னார்குடி. 25

86 டான் பாஸ்கோ குழந்தைகள் இல்லம், வேளாங்கன்னி. 25

சேலம் மாவட்டம்.

87 பூள் காஸ்பெல் சர்ச், தர்மநகர், சேலம். .. 25

88 சுப்பிரமண்ய நகர், மாதர் சங்கம், சேலம் .. 25

89 வள்ளலார் இல்லம், நாதமணிபுரம், தர்மபுரி மாவட்டம். 25

புதுக்கோட்டை மாவட்டம்.

90 செயிண்ட் மைக்கேல் குழந்தைகள் இல்லம், கம்மங்குடிபட்டி. 25

91 செயிண்ட் மேரி குழந்தைகள் இல்லம், அறந்தாங்கி. 25

92 இருத்துவ அரசர் குழந்தைகள் இல்லம், இருதயபுரம். 25



1981 பிப்ரவரி 5]

93 செயிண்ட் ஆரோக்கிய குழந்தைகள் இல்லம், மார்த்தாண்டபுரம். 25

94 செயிண்ட் ஜோசப் குழந்தைகள் இல்லம், வைச்சூர். 25

## இணைப்பு 111

(160 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 200க்கான விடையைக் காண்க).

தனியாரால் நடத்தப்படும் அனாதை குழந்தைகள் இல்லத்திற்கு அளிக்கப்படும் உதவித் தொகையின் விவரங்கள் (ஒரு குடிசைக்கு).

தொடர் செலவினம் :—

| | | ரூபாய் |
|---|---|---|
| 1 | குழந்தைகளின் பராமரிப்பு செலவு மாதம் ரூபாய் 60 ரூபாய் 60-25-12. | 18,000 |
| 2 | இதர செலவினங்கள் மாதம் ரூபாய் 100 வீதம் (12 மாதம்). | 1,200 |
| 3. | படுக்கை ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு ரூபாய் 30 (25 குழந்தைகளுக்கு). | 750 |
| 4 | பகுதி நேர தொழிற் பயிற்சிக்கு மாதம் 10 ரூபாய் வீதம் 12 மாதத்திற்கு 25 குழந்தைகளுக்கு. | 3,000 |
| 5 | சம்பளமும், வீட்டு வாடகையும் ரூபாய் 200-12 | 2,400 |
| 6 | ஒரு சமையலாள் சம்பளம் மாதம் ரூபாய் 100 வீதம் 12 மாதத்திற்கு. | 1,200 |
| 7 | வாடகை மாதம் 16 ரூபாய் வீதம் 12 மாதத்திற்கு 25 குழந்தைகளுக்கு. | 4,800 |
| | மொத்தம் .. .. | 31,350 |

90 சதவிதம்—ரூபாய் 28,215.

தொடராச் செலவினம்—

| | | |
|---|---|---|
| | | ரூ |
| கட்டிடத்திற்கென | .. .. .. .. | 45,000 |
| தளவாட சாமான்கள் | .. .. .. .. | 3,000 |
| படுக்கைக்கு ஆண்டுக்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 30 வீதம். | | 750 |
| மொத்தம் | .. .. | 48,750 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 பிப்ரவரி, 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

" அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல் ".

அவையில் வீற்றிருப்பவர்களைக் கொண்டு அந்த அவையின் தன்மை இன்னதுதான் என்று கண்டறிந்து கொள்ளாதவர், சொற்களைப் பேசத் தொடங்குதல் சொல்ல வேண்டிய வகை முறையினையும் சொற்களையும் அறியாதவரல்லாமல் அத்துறையின் திறமை இல்லாதவருமாவார்.

### I. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மேல்நிலைப்பள்ளி நூலகங்களுக்கு நூலகர்கள் நியமனம்.

*வினா எண் 164— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேல்நிலைப்பள்ளிகளின் நூலகங்களைப் பராமரிக்க பட்டம் பெற்ற நூலகர்களை அமர்த்தும் எண்ணம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தக்கல்வி ஆண்டில் அதை நடைமுறைபடுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை. பகுதி நேர நூலகர்கள் நியமித்துக்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள நூலகங்களை நல்ல முறையில் செயல்படுத்தவும் அதிலே படித்திருக்கிற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் முழுநேர நூலகர்களை நியமிக்க அரசாங்கம் இனிமேலாவது முன்வருமா ?

[1981 பிப்ரவரி

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற நூலகங்களே, முன்னாலே உயர்நிலைப்பள்ளிகளில் இருந்த நூலகங்கள்தான், அவைகளிலே மேற்கொண்டு சில புத்தகங்களை வாங்கி வைத்து, அந்த நூலகங்களைக் கொஞ்சம் அதிகமாக புத்தகங்கள் உடையவைகளாக ஆக்கியிருக்கிறோம். இந்த நூலகங்களை மாணவர்கள் பயன்படுத்த பகுதி நேர ஊழியர் ஒருவரை நியமித்துக் கொள்ள இப்போது ஆணை வழங்கப்பட்டுள்ளது. அவர் அந்தப் பள்ளியிலே பணியாற்றும் ஆசிரியர் என்றால் மாதம் 25 ரூபாயும் வெளியிலே உள்ள ஒருவராக இருந்தால் மாதம் 50 ரூபாயும் வழங்கலாம் என்ற உத்திரவைத் தந்திருக்கிறோம். இன்றைய நிலையில் இந்தப் பகுதி நேர ஊழியர்களே போதும் என்று அரசு கருதுகிறது.

## அண்ணா எழுதிய புத்தகங்கள்

*வினா எண் 165— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அண்ணா எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் அரசு வெளியிடும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : '' அண்ணா எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் அரசு வெளியிடும் உத்தேசம் ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.''

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னையிலுள்ள ஒரு புத்தக நிறுவனம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களை அதிகமான விலைக்கு விற்பனை செய்கிறது. ஆகவே, அந்த நிறுவனத்தைத்தடை செய்து, பாரதியார் நூல்களை தேசியமயமாக்கி குறைந்த விலையில் அனைவரும் வாங்கிப் படிக்க வகை செய்திருப்பதைப்போல தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களையும் தேசியமயமாக்கி, ஏழை எளிய மக்களும் அவைகளை வாங்கிப் படிக்கின்ற வகையில் குறைந்த விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புத்தக நிறுவனத்தார் அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் விற்கிறார்கள். இப்போது இருக்கிற பிரச்சனை மலிவு விலையில் அரசு அண்ணாவின் நூல்களை வெளியிடுமா என்பது. அந்தக் கருத்து தற்போது ஆய்வில் இல்லை என்று சொன்னேன். மற்றபடி புத்தக நிறுவனத்தாரின் உரிமையைத் தடை செய்து, அந்த உரிமையை அரசாங்கம் பெறுவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை.



1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் துணைத்
திரு. கோவைத்தம்பி : மலிவு விலையில் அண்ணாவின் புத்தகங்களை
தலைவரவர்களே, அரசுக்கு உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு
வெளியிடுவதற்கு சொன்னார்கள். ஏழை எளிய மக்களும்
அமைச்சரவர்கள் புத்தகங்களைப் படிப்பதற்கு வேறு ஏதா
பேரறிஞர் அண்ணாவின் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்பு
வது வழி
கிறேன்.

தலைவரவர்களே,
மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இத்தகைய கருத்து
கல்வித் துறையைப் பொறுத்த வரையில் மற்றபடி பேரறி
ஆய்வில் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். பொறுப்பினை
ஞர் அண்ணாவின் நூல்களை வெளியிடுகின்ற முறையில் வெளியிட
ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் அதை நல்ல வந்தால், அதை அரசு
அரசினுடைய ஆதரவு தேவை என்று கருதி
பரிசீலிக்கும்.

தலைவரவர்களே, பேரறிஞர்
திரு. இரா. தாமரைக்கனி : விளக்க நூல்களை பள்ளி
அண்ணாவின் நாடகங்கள், நாவல்கள், பசுமரத்து ஆணிபோல பதிய
களிலே படிக்கின்றவர்கள் மனதிலே துணைப்பாடங்களாக
வைக்க பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அண்ணாவின் நாடகங்
வைக்க உத்தேசம் உண்டா ? பேரறிஞர் வந்திருக்கின்றன. மீத
கள், நாவல்கள் பல திரைப்படங்களாக வெளியிட அரசு முயற்சி
முள்ளவைகளையும் திரைப்படங்களாக
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

தலைவரவர்களே,
மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இருக்கின்றன.
பாடப்புத்தகங்களை நிர்ணயிக்க குழுக்கள் பல்கலைக் கழக
குறிப்பாக கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அவை அண்ணா
பாடக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மகிழ்ச்சியடையும்.
வின் நூல்களைப் பரிசீலிப்பதில் அரசு மிக்க குழுக்கள் பேரறிஞர்
அத்தகைய ஒரு நிலையில் அந்தப் பாடக் பரிசீலித்து கல்லூரி
அண்ணாவின் நூல்களை நல்ல முறையில் பாடப்புத்தகங்களாக வைக்க
மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும்
அரசு நடவடிக்கை எடுக்கும்.

தலைவரவர்களே, பேரறிஞர்
திரு. என். கிட்டப்பா : புத்தகங்களை மலிவு விலையில்
அண்ணா அவர்கள் எழுதிய அந்தப் புத்தகங்களை அரசாங்கமே
விற்க இயலாவிட்டாலும் அரசு மேற்கொள்ளுமா என்
வெளியிடுவதற்கான முயற்சிகளை
பதை அறிய விரும்புகிறேன்.

தலைவரவர்களே,
மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை என்பதைத் தெரி
இப்போது அந்த உத்தேசம் அரசுக்கு
வித்துக் கொள்கிறேன்.

[1981 பிப்ரவரி 6

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்கள் சமயம், சட்டம், சமூகம் ஆகிய அத்தனையையும் உள்ளடக்கியதாக இருப்பதால், அப் புத்தகங்களைப் படிக்கின்றவர்கள் தமிழகத்தின் எல்லா கலைச் செல்வங்களையும் அரசியல், சமுதாய அமைப்புக்களை யும் தெரிந்து கொள்கின்ற நிலை இருக்கின்றது. இந்த நாட்டு மக்களும், உலக மக்களும் அந்தப் புத்தகங்களின் மூலம் இவை அத்தனையையும் தெரிந்து கொள்ள வசதியாக இருக் கின்றது. ஆகவே, அந்தப் புத்தகங்களை மலிவு விலையில் கிடைக்கச் செய்வது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்களைப் படித்து அவருடைய பல்லாயிரக் கணக்கான கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில்தான் 1967-ஆம் ஆண்டிலே இருந்து தமிழகத்தில் அவருடைய பெயராலே அரசு நடந்து கொண்டிருக்கின்றது. மேலும் அவருடைய நூல்களை வெளியிடுகின்ற பொறுப்பை இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், எதிர்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் கூட ஏற்றுக் கொண்டு செய்ய முடியும். ஆனால் அரசே அதைச் செய்ய வேண்டுமென்றால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

### சிவகிரியில் நூலகத்திற்கான இடம்.

*வினா எண் 166—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் நூலகம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி அனுபவித்து வருவது அரசுக் குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1981 பிப்ரவரி 6]

திரு. ச. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர் முன்னாள் ஆளும் கட்சியைச் சேர்ந்த அவைத் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத் தில் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. கேள்விதான் கேட்க வேண்டும்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, அந்த இடத்தை ஆக்கிரமிப்புச் செய்திருப்பவர் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, ஈரோடு மாவட்டத்தின் துணை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31-ஆம் நாளன்று பார்வை யிட்டிருக்கிறார்கள். அங்கே ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் அதிலே ஒரு கட்டிடத்தையே கட்டி இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நூலகங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டிடங்களிலேயே நடத்தப்படுகின்றன. ஆகவே அரசாங்கம் சொந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டங் கள் ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவர் களே, நூலகத் துறையினுடைய நிதியாதாரங்களைப் பொறுத்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம்.

### கோவை சித்தாபுதூர் மேல்நிலைப்பள்ளி.

*வினா எண் 167—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரம், முதல் வார்டு சித்தாபுதூர் மேல் நிலைப் பள்ளியில் மாணவிகள் எண்ணிக்கை சுமார் 800 ஆகி விட்டதால் பிரித்து பெண்கள் பள்ளி தனியாக ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

(இ) கோவை நகராட்சி அதற்கனுமதி கோரியுள்ளது ஏற்கப்பட்டுவிட்டதா ?

[1981 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (ஆ) மற்றும் (இ): சித்தாபுதூர் நகராட்சி மேல் நிலைப் பள்ளியில் பயின்ற மாணவிகளை தனியாகப் பிரித்து நகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளி 1980–81 கல்வியாண்டில் துவங்க கோயம்புத்தூர் நகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசாணை நிலை எண் 1406, கல்வி, நாள் 25–7–1980-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அந்த ஆணைவெளியிடப்பட்டுள்ளது என்று சொன்னார்கள் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பிரித்து தனியாக நடத்துவதற்கான உத்தரவு கல்வி இயக்குநரிடத்திலிருந்து வந்து இப்போது அந்தப் பள்ளிக்கூடம் பிரிக்கப்பட்டு பக்கத்தில் இருக்கின்ற ஒரு ஆரம்பப் பள்ளியின் கட்டிடத்திலே நடக்கின்றது. அப்பள்ளிக்குரிய தலைமை ஆசிரியை மற்றும் வேறு பல ஊழியர்கள் இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கின்ற நிலைமை இருப்பதால் மிகவும் கஷ்டமாக அந்தப் பள்ளிக்கூடம் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. ஆகவே அதற்கு தலைமை ஆசிரியையை விரைவில் நியமிப்பதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர் களே, அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அது குறித்த நடவடிக்கையை எடுத்து அந்தப் பள்ளிக்கூடம் வெற்றிகரமாக நடைபெறுவதற்குரிய அளவில் ஏற்பாடு செய்ய இருப்பது குறித்து நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம் வேறொரு ஆரம்பப் பள்ளியின் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருவதால் அங்கே இருக்கின்ற மத்திய சிறைக்குச் சொந்தமான காலியாக இருக்கின்ற இடங் களைப் பள்ளிக்கென்று தரவேண்டும் என்று முனிசிபல் நிர்வாக மும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. ஆகவே அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இது உள்துறை அமைச்சரிடம் கேட்டுச் செய்ய வேண்டிய காரியம். அதனால் அவரிடம் கேட்டு பின்னர் நடவடிக்கை எடுக்க முயலலாம்.



1981 பிப்ரவரி 6]

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே நகராட்சியிலே செல்வபுரம் பக்கத் தில் மிகவும் ஜனநெருக்கடி அதிகம். அங்கே 2,000-க்கும் மேற் பட்ட பிள்ளைகள் ஒரே ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார் கள். ஆகவே அந்தப் பள்ளியை விரிவு படுத்தும் விதமாகவும், நெரிசலைத் தவிர்க்கவும், மற்ற பகுதிகளில் அதே போன்று ஆரம்பப் பாடசாலைகளை அமைக்க அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் அரசு ஆலோசிக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வி என்னைக் கேட்க அனுமதிக்க வேண்டும்.

Without headmistress, the school is going on. That is why I am putting another question.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, தலைமை ஆசிரியரை நியமிப்பதற்கான உத்தரவு போடப்பட் டிருப்பதாக சொன்னார்கள். படித்துப் பட்டம் பெற்ற வேலை யில்லாத ஆசிரியர்கள் நிறைய பேர்கள் இருக்கும்போது, அவர் களை அப்பாயின்ட் செய்வதில் அரசுக்கு என்ன கஷ்டம் இருக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரிடையாகவும் யாரையும் அரசு நியமிப்பது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 201, 202, 203 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

சேலம் இரும்பாலைத் திட்டத்தின் கீழ் மாற்று இடங்கள்.

*வினா எண் 204—செல்வி பி. விசாலட்சுமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சேலம் இரும்பாலைக்கென குடியிருந்தவர்களைக் காலி செய்து மாற்று இடம் கொடுக்கப்பட்டவர்களுக்கு இதுவரை அவற்றிற்கென பட்டா வழங்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

[1981 பிப்ரவரி 6

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) சேலம் இரும்பாலைக்கென ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் குடியிருந்தவர்களைக் காலி செய்ததில், மொத்தம் 3,002 குடும்பங்கள் வீடிழந்தன. அவ்விதம் வீடிழந்து சேலம் மாவட்டத்தின் சுற்றுப் புறக் கிராமங்களில் குடியிருந்த 1,990 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் ஏற்கெனவே ஒதுக்கப் பட்டுவிட்டன. மீதமுள்ள 1,012 குடும்பங்களுக்கு வீட்டு மனை கள் கொடுப்பதற்குப் போதுமான இடங்கள், சாலை, வடக்குத் தும்பட்டி கிராமத்தில் உள்ளன. மேலும் நில ஆர்ஜிதத்தால், பாதிக்கப்பட்டு, பிறகு தர்மபுரி, ஆந்திரா, நெய்வேலி போன்ற இதர இடங்களில் குடியேறியவர்களிடமிருந்தும் வீட்டு மனை கள் ஒப்படை செய்யக் கோரி இதுவரை வந்துள்ள 600 மனுக் களை சேலம் மாவட்ட வருவாய் அதிகாரி பரிசீலித்து வருகிறார்.

செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப தொழில்களுக்கென நிலங்கள் எடுக்கப் படுகின்றனவா ? அப்படி எடுத்தால் நிலமற்றவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பு ஆலை நிர்வாகத்தினர், உப தொழில்கள் நடத்துவதற்காக நிலங்கள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏறக்குறைய 600 ஏக்கர் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அப்படி ஆர்ஜிதம் செய்கிறபோது 333 பேர்கள் வீடிழப்பார்கள் என்று கணக்கிட்டு அவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

### தஞ்சை மாவட்டத்தில் கரும்பு பயிருக்குக் குத்தகை விடப்பட்ட நிலங்கள்.

*வினா எண் 205—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள திரு ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு பயிரிட குத்தகைக்கு நிலம் விட்டுக்கொடுத் திருந்த விவசாயிகளிடம் மேற்படி நிலங்களைத் திரும்பக் கொடுக் கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கரும்புப் பண் ணைக் கழக சொந்த நிலங்களுடன் இணைந்து அவைகளை சீரிய முறையில் சாகுபடி செய்வதற்கு முற்றும் தேவையான நிலங் களைத் தவிர ஏனைய குத்தகை நிலங்களை அவைகளின் சொந்தக் காரர்களுக்குத் திருப்பித்தர அரசு நடவடிக்கை எடுத்துக்கொண் டிருக்கிறது.



1981 பிப்ரவரி 6]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு சொந்தமாக உள்ள நிலங்கள் நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து தப்பிப்பதற்காக முதலில் மற்றவர்கள் பெயரில் எழுதி வைத்து, பின்னால், குத்தகை எடுத்ததாக காட்டப்பட்ட பினாமி நிலங் களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கரும்பு பயிரிடுவதற்கென உள்ள மொத்த நிலம் 6,628 ஏக்கர் ஆகும். அதிலே அரசு நிலம் 3,910 ஏக்கர்கள். தனியார்-பலருடைய நிலங்கள் 2,618 ஏக்கர் ஆகும். அரசு நிலம் என்பது உச்சவரம்புச் சட்டத்தின் படி அரசுக்கு வந்த நிலமாகும்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை நிறுவனம் மற்ற கரும்பு சாகுபடியாளர்களுக்கு வழங்கும் அளவிற்கு தமிழ் நாடு கரும்பு கழகத்திற்கு கரும்பு அளிக்கவில்லை என்று இந்திய அரசின் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் கோரியுள்ளாரா ? அப்படியானால் அதனைப் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத் துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது, தொழில் அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. சோ. அழகர்சாமி : இந்த ஆரூரான் சர்க்கரை ஆலைக் குச் சொந்தமாக இருந்த நிலங்கள் இப்போது ஆரம்பிக்கப்பட் டிருக்கிற கரும்புப் பண்ணைக் கார்ப்பரேஷனிடம் இருக்கிறது. இந்தக் கார்ப்பரேஷன் அரசாங்கத்தின் பண்ணையாக இருந்து வருகிறது. அதில் அரசுக்குச் சொந்தமான 3,910 ஏக்கர் நிலங் களோடு மேற்கொண்டும் தனியார் சில பேர்களுடைய நிலங்களும் சேர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த சிலபேர்களுடைய நிலங்கள என்பது அதிகமாக நிலங்கள் வைத்திருக்கக்கூடியவர்கள், உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள பினாமியாக பலபேர்கள் பேரில் எழுதி வைத்திருக்கின்ற நிலங்களாகும் என்று நான் அறிந்தமட்டில் தெரிகிறது. ஆகவே இந்தப் பண்ணையை அரசாங்கம் நல்லதொரு சிறந்த பண்ணையாக நடத்த, அதில் வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்களுக்கு சிறந்த முறையில் வசதிகள் செய்து கொடுத்து—இப்போதுள்ள சலுகைகளை நீக்கி— உற்பத்தியாகிற பொருள்கள் அவர்களுக்கு நியாயவிலையில் கிடைக்க ஏற்பாடு செய்வதோடு, இந்தப் பண்ணை இலாபகரமாக நடப்பதற்கும் ஒரு சிறந்த பண்ணையாக எதிர்காலத்தில் வருவதற் கேற்ற முறையில் இதை நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

[1981 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அரசாங்க நிலங்களை அரசுப் பண்ணையாக நடத்த வேண்டும் என்று அமைச்சரவை ஒரு முடிவு எடுத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், அதில் இருக்கிற தனியார் நிலங்கள் இருக்கிற சட்டப்படி இன்றைக்கு அரசாங்கம் தான் அதற்கு குத்தகைதாரர்களாக இருக்கிறது. தனியார் நிலங்களுக்கு இன்று இதைப்பொறுத்து அரசாங்கம்தான் குத்தகைதாரராக இருக்கிறது. ஆனால், இந்தக் குத்தகை 1975-யோடு முடிந்துவிட்டு, மீண்டும் அது ஏழு ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 1981 னோடு இது முடிவடைகிறது ஆனால், தனியார் நிலங்கள், அவை உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்டு இருக்கிறபோது அவர்கள் கேட்கிறபோது கொடுக்காமல் இருக்க முடியாது ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கிறபோது பினாமியாக பலர் எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பினாமியாக எழுதி வைத்திருப்பதைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் தனியாகச் சட்டம் வந்திருக்கிறது. அது மத்திய அரசுக்குச் சென்றிருக்கிறது, விரைவில் அதற்கு அனுமதி வரும். அனுமதி வருகிறபோது, நான் இங்கேசொல்லியிருப்பதுபோல், எல்லா கட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுபோட்டு அவை கண்டுபிடிக்கப்படும் என்கிறபோது விரைவில் அவை கண்டுபிடிக்கப்படும்.

**திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு நிலம் திருப்பித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான நிலங்கள் விவசாயத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு கூட வடபாதி மங்கலத்தைச் சுற்றியுள்ள நிலங்கள் பூராவும் விவசாயத் தொழிலாளர்களை வஞ்சிப்பதற்காக நிலப்பிரபுக்கள் அன்றிருந்த அரசாங்கங்களைப் பயன்படுத்தி அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய நிலங்களையெல்லாம் வஞ்சித்து இன்று கரும்புப்பண்ணை கார்ப்பரேஷனில் இருக்கிறது. அங்கு வேலை செய்யக்கூடியவர்களுக்குப் போதுமான கூலியோ அல்லது சம்பளமோ கிடைக்கவில்லை. அந்த நிலங்கள் விவசாயத்தொழிலாளர்கட்கு பகிர்ந்து அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பண்ணை அரசால் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதுபற்றி அரசு எது நல்லது என்று ஆராய்ந்து நல்ல, தக்க முடிவு எடுக்கும்.



1981 பிப்ரவரி 6]

### சிவஞானபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி

*வினா எண் 206— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி சிவஞானபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்ட அரசு அனுமதி தந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9-20]

**திரு. ரா. கு. பெருமாள் :** விளாத்திக்குளம் தொகுயியில் ஐம்பதுக்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்குள்ள குழந்தைகள் விஞ்ஞானக் கல்வி பயில ஏறத்தாழ 30 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கும் காரணத்தாலும், விஞ்ஞானக் கூடம் இல்லாத காரணத்தாலும் அப்பகுதி மக்கள் கல்வித் தரம் குறைவாக இருக்கிறது. ஆகவே, சிவஞானபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் இந்த நிதி ஆண்டில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்ட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ்நாட்டிலுள்ள 3,218 உயர்நிலைப்பள்ளிகளில் 1,243 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றில் பல பள்ளிகளுக்கு ஆய்வுக்கூட வசதி இல்லை. வருஷந்தோறும் 25 பள்ளிக்கூடங்களுக்குத் தனி மானியம் தந்து ஆய்வுக்கூட வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம். அப்படிப் பார்க்கிறபோது வசதி இல்லாத பள்ளிக்கூடங்களின் தன்மையை ஆராய்ந்து அந்தப் படியாக நாம் இந்த மானியத்தைத் தந்து கொண்டிருக்கிறோம். அது பற்றி ஆராய்கின்ற போது சிவஞானபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

### குத்தாலம் உயர்நிலைப்பள்ளியில் தேசிய மாணவர் படைப்பிரிவு.

*வினா எண் 207—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் அரசினர் பள்ளியில் நடைபெற்றுவந்த தேசிய மாணவர் படைப் பயிற்சி இடையில் நிறுத்தப்பட்டது உண்மையா ?

[1981 பிப்ரவரி 6

(ஆ) மீண்டும் தேசிய மாணவர்படை துவங்க அரசிற்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) அதன் மீது நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) மீண்டும் இப்பள்ளியில் தேசிய மாணவர் படை பயிற்சியைத் தொடர்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மீண்டும் குத்தாலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தேசிய மாணவர் படை துவங்கப்பட ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள். எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அங்கு ஜூனியர் டிவிஷன் தொடங்கி அப்பள்ளிக்கு 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாங்கள் துவங்குவதற்கான ஆணை பிறப்பித்துள்ளோம். துவங்கவேண்டியது அவர்கள்தான்.

### அரசு கலைக் கல்லூரி, கரூர்.

*வினா எண் 208—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் அரசினர் கலைக் கல்லூரி கட்டப்பட்டுள்ள இடத்தைக் காலி செய்ய வேண்டுமென்று கோர்ட்டு தீர்ப்பு வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?



1981 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(ஆ) கரூர் அரசினர் கலைக் கல்லூரி, தான்தோனிமலை அருள்மிகு வெங்கடராமசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் நெடுங் காலமாக இருப்பதாலும், கல்லூரியை அங்கிருந்து அகற்ற சாத்தியமில்லாததாலும், அந்நிலத்திற்குரிய மதிப்பை நிர்ணயித்து, அத்தொகையைக் கோவிலுக்குக் கொடுக்க அரசு ஆலோசித்து வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரை அந்நிலத்திற்குரிய மதிப்பை நிர்ணயிக்கும்படி அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்விகள் 209, 210, 211, 212 ஆகியவை தள்ளி வைக்கப்படுகின்றன.

### காளப்பநாயக்கன்பட்டி—சேந்தமங்கலம் குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 213—திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள காளப்ப நாயக்கன்பட்டி, சேந்தமங்கலம் பகுதிகளுக்கு குடிநீர் திட்டங்கள் நிறைவேற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) உண்டு.

(ஆ) காளப்பநாயக்கன் பட்டி, பேரூராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களான நடுக்கொம்பை, நாச்சிபுத்தூர் ஆகியவற்றிற்கும் சேர்த்து கருவட்டார் ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு கூட்டு குடிநீர்த் திட்டம் அமைக்க ஆய்வுப் பணி நடைபெறுகிறது. ஆய்வுப் பணி முடிந்த பின் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் கிடைத்த பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை எண் 1467, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை, நாள் 16-9-1978 இல் ரூபாய் 24.13 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தலைமையிடம் அமைப்பதில் ஆட்சேபனை எழுப்பப்பட்டு நாமக்கல் முனிசிப் கோர்ட்டில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆதலால் பணிகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### இரைமீன் துறை நீரோடி பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண் 214— திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விளவங்கோடு தொகுதியிலுள்ள இரைமீன் துறையிலிருந்து நீரோடி வரையிலுமுள்ள கடலோரப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதியில்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இரைமீன் துறைக்கு ஏற்கெனவே குடிநீர் வசதியளிக்கப்பட்டுள்ளது. மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை மற்றும் நீரோடி ஆகிய சிற்றூர்களுக்கு ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்று முடிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12 ஆம் நாள் முதல் மக்கள் பயனில் இருந்து வருகிறது.

திரு. டி. மணி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரை மீன் துறைக்குக் குடிநீர் அளிக்கும் திட்டம் அமலில் இருக்கிறது என்று கூறினார்கள். ஆனால் இரைமீன் துறையிலிருந்து தூத்தூர் சின்னதுறை வரையிலும் உள்ள குழாய்கள் பழுது அடைந்து இருக்கின்றன. நான் 1980 ஆம் ஆண்டிலேயே இந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே கிளப்பினேன். இதுவரையிலும் நான் இங்கே வருகிற வரையிலும் அந்தப் பணிகள் சீர் செய்யப்படவில்லை, ஆகவே சீரமைத்து அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : என்னிடம் உள்ள விடையைத் தந்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை எழுதி இன்றைய தினம் கொடுப்பார்களானால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. மணி : அந்தக் குழாய்கள் மூலமாக குடிநீர் கொடுப்பதிலே இயந்திரக் கோளாறுகள் இருப்பதாலே—ஏற்கெனவே அந்தக் கோளாறுகள் தாலுக்கா மட்டத்திலே மட்டுமல்ல, மாவட்டம் பூராவிலும் இருப்பதால், பஞ்சாயத்து ஒன்றியங்கள் காலாகாலத்தில் அந்த வேலைகளைச் செய்ய முடியவில்லை. அந்தப் பணிகளைச் சீராக செய்வதற்கு ஏற்ற முறையிலே குடி நீர் வாரியத்திற்கு அந்தப் பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் நினைப்பதையெல்லாம் எழுதிக் கொடுத்தால் குடிநீர் வாரியத் தலைவரோடு கலந்து பேசி செய்ய முடிந்ததை இந்த அரசு செய்யும்.

திரு. ஏ. சி. சண்முகம் : கடலோரப் பகுதிகளிலே உள்ள மக்களுக்கு குடிநீர் கொடுக்க, கடல் நீரைக் குடிநீராக மாற்றி, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

### கலவை பிர்க்காவில் குடிநீர்த் திட்டங்கள்.

*வினா எண் 215— திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆற்காடு தொகுதி கலவை பிர்க்காவில் பல கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத் திட்டம் எப்போது செயல் படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு தொகுதியிலுள்ள ஆற்காடு மற்றும் திமிரி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்துள்ள 8 சிற்றூர்களுக்கு ஊரக குடி நீர்த் திட்டத்தின் கீழ் உடனடியாக குடி நீர் வசதியளிக்கத் திட்டமிட்டு அவைகளில் 5 சிற்றூர்களில் அனைத்து வேலைகளும் முடிவுற்றுள்ளன. இரண்டு சிற்றூர்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள ஒரு சிற்றூரில் வேலைகள் விரைவில் எடுத்துக் கொள்ளப் பட இருக்கின்றன.

[198. பிப்ரவரி 6

## மதுரை நகர மேம்பாட்டுக்கென எடுக்கப்பட்ட நிலங்கள்.

*வினா எண் 216—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரிலுள்ள பொன்மேனி கிராமத்தில் எல்லிஸ் நகர நில எடுப்புத் திட்டத்தின் கீழ் தமிழக அரசினரால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு நஷ்ட ஈடு இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) இல்லை. பொன்மேனி கிராமத்தில் கையகப் படுத்தப்பட விருக்கின்ற மொத்தம் 74.75 ஏக்கர் நிலத்தில், 6.12 ஏக்கர்களுக்கான விலை மதிப்பீடு மட்டும் வருவாய் வாரியத்தின் ஒப்புதல் பெற்று 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று தனி வட்டாட்சியர் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கியுள்ளார். மீதமுள்ள 68.63 ஏக்கர் நிலங்களுக்கு நில ஆட்சி ஆணையாளரின் ஒப்புதல் பெற்று விரைவில் தனி வட்டாட்சியர் நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்குவார்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நட்ட ஈட்டுத் தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? ஒரு சதுர அடிக்கு எவ்வளவு கொடுப்பதாக இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. ப. நெடுமாறன் : அந்த நிலங்களின் மார்க்கட் விலை இன்றைக்கு சதுர அடிக்கு 10 ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் அரசுத் தரப்பிலே சதுர அடிக்கு 3 அல்லது 4 ரூபாய் என்று கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். இது ஏறத்தாழ 2½ ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த விலை. இன்றைக்கு விலை உயர்ந்து இருக்கிறது. இதை மனதிலே, கொண்டு அமைச்சர் அவர்கள் நட்ட ஈட்டை முடிவு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்பேர்ப்பட்ட கருத்துடையவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் செல்கிறார்கள். அந்த முறையை இந்த நிலச் சொந்தக்காரர்களும் கைக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.



1981 பிப்ரவரி 6]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவர் அவர்களே, பொன்மேனி கிராமத்திலே எல்லிஸ் நகரத்திற்காக கையகப் படுத்தப்பட்ட நிலங்களுக்கு 30 மாதங்கள் ஆகியும் நட்ட ஈடு கொடுக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? விரைவிலே அதைக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா ? இதற்கு மேலும் நிலம் கையகப்படுத்த வேண்டுமென்றால் வைகை ஆற்றுப் பாசன மாக இருப்பதால் விளைச்சல் நிலங்களை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக விளையாத பகுதிகளிலே உள்ள நிலத்தை வீட்டு வசதி வாரியமோ குடிநீர் வாரியமோ கையகப்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதல் பகுதிக்கு ஏற்கெனவே விடையளித்து விட்டேன். இரண்டாவது பகுதிக்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யும்பொழுது அந்த நில மதிப்பீடு மார்க்கெட் விலையில் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியென்றால், அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போகாமலேயே அந்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை அடிப்படையாக வைத்து விலை நிர்ணயிக் கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவவரவர்களே, கேள்வி எல்லிஸ் நகர நிலம் பற்றியதாகும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லிஸ் நகர நிலத்தைப்பற்றித்தான் சொல்கிறேன். ஏற்கனவே நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும் பொழுது விலை நிர்ணயிக்கும்பொழுது மார்க்கெட் விலையை அனுசரித்துக் கொடுக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது. அது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா. அப்படியென்றால், இப்பொழுது இருக்கின்ற நிலத்திற்கு அவர்களை ஹைகோர்ட்டுக்குப் போகச் சொல்லாமலேயே அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே விலை நிர்ணயம் செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, எப்படி விலை நிர்ணயிக்க வேண்டு மென்று நீதி இருக்கிறதோ, நிலையும் இருக்கிறதோ அதைத்

யொட்டி அதிகாரிகள் நிர்ணயிக்கிறார்கள். அதில் திருப்தி அடையாதவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். அங்கே விலையை நிர்ணயித்தே தீர்ப்பு கூறிவிடுகிறார்கள்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை நகரிலுள்ள பொன்மேனி கிராமத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்படும்பொழுது சாதாரணமாக சிறிய அளவிற்கு நிலம் வைத்துக்கொண்டு ஜீவித்துக் கொண்டிருக்கும் குடும்பங்கள் பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நில ஆர்ஜிதம் செய்யும்பொழுது அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் நம்முடைய நில ஆர்ஜிதக் கொள்கை இருக்க வேண்டுமென்று அந்த மக்கள் விரும்புகிறார்கள். எனவே, அதுபற்றி அரசு ஆய்வு செய்யுமா? அடுத்து நான் கேட்க விரும்புவது, சமீபத்திலே உயர்நீதி மன்றத்திற்குச் சென்று மிக அதிகமான நஷ்டயீட்டைப் பெறும்பொழுது, நாம் நஷ்டயீட்டை நிர்ணயிக்கும்பொழுது சில நிலைமைகளை மாற்றியமைத்து புதிய சூழ்நிலைகளுக்குத் தகுந்தவாறு பொன்மேனி கிராமத்தில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு நஷ்டயீடு வழங்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் துணை தலைவரவர்களே, முதல் பகுதிக்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவது பகுதிக்கு, உயர்நீதி மன்றம் அதிகமாகக் கொடுக்குபடி தீர்ப்பு கொடுத்து விட்டதே என்று தான் பணம் கொடுக்கிறோமே தவிர, தீர்ப்பு சரி என்று நினைத்துக் கொடுப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தீர்ப்பு வந்து விட்ட பிறகு பணம் கொடுக்கிறோம், அவ்வளவுதான்.

## குண்டம்பாச்சி அணைத்திட்டம்.

*வினா எண் 217—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை—அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுகா பூம்பாறையில் குண்டம்பாச்சி அணைகட்டுவதற்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அணை கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பமாகும்?

(இ) அணையின் நீரை நீர்ப்பாசனத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுத்தும் திட்டம் உள்ளதா?





**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** (அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமத்தில் குண்டம்பாச்சி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் ஏதுமில்லை. ஆயினும் மேற்படி கிராமத்தில் குண்டம்பாச்சி ஆற்றின் குறுக்கே ரூ. 3 இலட்சத்தில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ரூ. 4.40 லட்சத் திற்கு சிறு பாசன தலைமைப் பொறியாளரால் புதுப்பிக்கப் பட்டு (up-dated) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத் திட்டம் பாசன வசதி அளிப்பதற்காகவே வகுக்கப் பட்டதாகும். குடிநீர் வழங்குவதற்கான நோக்கம் இல்லை.

**திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** துணைத் தலைவரவர்களே இத் திட்டத்தால் பயன் அடையும் கிராமங்கள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது :** துணைத் தலைவரவர்களே, இது பாசன வசதிக்காக வகுக்கப்பட்ட திட்டமாகும். ஏறக்குறைய அந்தப் பகுதியிலே உள்ள 117.83 ஏக்கர் விவசாயத்திற்குப் பயனடையக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

## சுகநதி கண்மாய்

*வினா எண் 218—திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் வந்தவாசி தொகுதி சுகநதியில் நாகர்மேடு கொண்டம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :** வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் நாகர்மேடு கிராமம் அருகில் சுகநதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 12,24,800 செலவில் சிறுபாசனத் தலைமைப் பொறியாளரால் வருவாய் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது ஆணையர் (நில நிர்வாகம்) அவர்களின் ஆய்வில் உள்ளது. அவரது பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. செ. குப்புசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப் படும் என்பதையும், எப்பொழுது முடியும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : துணைத் தலைவர் அவர்களே, ஆணையர் (நில நிர்வாகம்) அவர்களின் ஆய்வில் இருக்கிறது. அவரது பரிந்துரையை எதிர்பார்க்கிறோம். பரிந்துரை வந்தவுடன் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்ட ஓராண்டிலே அது முடிவுறும்.

## அரியலூர் சிமெண்ட் ஆலை.

*வினா எண் 219—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலையில் தற்பொழுது உற்பத்தி ஆகும் சிமெண்ட் அளவின் மதிப்பு எவ்வளவு ?

(ஆ) இந்த சிமெண்ட் நமது மாநிலத்திற்கு மட்டுமே விநியோகிக்கப்படுகிறதா ?

(இ) வெளி மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது என்றால் அதன் மதிப்பு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) அரியலூர் சிமெண்ட் ஆலை 1979–80 ஆம் ஆண்டு 1,15,919 டன் சிமெண்ட் உற்பத்தி செய்தது. 1980–81 ஆம் ஆண்டு 3,50,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரை 1,84,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்துள்ளது.

(ஆ) அரியலூர் ஆலையில் தயாரிக்கப்படும் சிமெண்ட் நமது மாநிலத்தில் மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களிலும் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரியின் உத்தரவின் படி விநியோகிக்கப்படுகிறது.

(இ) 1979–80 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட சிமெண்டின் மதிப்பு ரூ. 2,67,70.722,55 (56,920.9 டன்கள்).

திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் ஆண்டு தோறும் திட்டமிட்டபடி உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஆண்டுவாரியாகச் சொன்னேன். 1979–80-ல் எவ்வளவு என்றும் 1980–81-ல் எவ்வளவு என்றும் சொன்னேன். திட்டமிட்டபடி என்றால், 1980–81-ல் ஏறக்குறைய 3,50,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுதுதான் உற்பத்தியே துவங்கியிருக்கிறது. துவக்கத்திலே சில இடர்பாடுகள் இருந்தாலும் காலப்போக்கிலே முழுமையான உற்பத்தியை அல்லது திட்டமிட்ட உற்பத்தியை நிச்சயமாக எட்ட முடியும் என்று நம்புகிறோம்.

திரு. ஆர். கருப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டுக்கு 3,50,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. 1,84,000 டன் சிமெண்ட் தான் உற்பத்தி செய்யப்பட்டது என்று அமைச்சர் அறிவித்து இருக்கிறார். இந்த அளவிற்குக் குறைந்ததற்கான காரணங்கள் என்ன என்பதையும் இந்த ஆலையில் இயந்திரங்கள் தவறான முறையில் பொருத்தப்பட்டதன் காரணமாக இந்த உற்பத்தி திட்டமிட்டபடி நடைபெறவில்லையென்று கூறப்படுவது உண்மையா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் ஆலை 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2 ஆம் தேதி உற்பத்தியைத் துவக்கியது. ஆரம்ப கட்டத்திலே சில இடர்பாடுகள், நிலக்கரி பற்றாக்குறை, மின்சாரம் போதிய அளவு கிடைக்காமை இயந்திரங்கள் சீரமைப்பு போன்ற சில காரியங்களால், எதிர்பார்த்த அளவு உற்பத்தியைப் பெற இயலவில்லை. இது தான் காரணம். அவர்கள் சொன்னதைப் போல இயந்திரங்கள் பொருத்தப்படுவதிலே வேண்டுமென்றே, ஏதாவது, தவறுகள் நடந்திருப்பதாக என்னிடத்திலே விவரங்கள் இல்லை.

திரு. என். வரதராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் அளிக்கிற பொழுது ரூ. 2 கோடிக்கு மேல் பெறுமானமுள்ள சிமெண்ட் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். தமிழ் நாட்டினுடைய சிமெண்ட் தேவை கடந்த 6 மாதக்காலத்திலே மிகப் பெரிய அளவுக்குப் பூர்த்தி செய்யப்படவில்லையென்று மக்களிடத்திலே குறை இருக்கக்கூடிய இந்த சூழ்நிலையில் நம்முடைய மாநில அரசு இங்கே உற்பத்தி ஆகக்கூடிய சிமெண்டில் 75 சதவீதம் இந்த மாநிலத்திலேயே விநியோகம் செய்ய மத்திய அரசிடத்திலே கேட்டு அனுமதி பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 6

[முற்பகல் 9-40]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1967 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின்படி, உத்தரவின்படி சிமெண்ட் தயாரிப்பவர்கள் யாரும் மத்திய சிமெண்ட் கட்டுப்பாட்டு அதிகாரியின் உத்தரவின்படிதான் சிமெண்ட் விநியோகத்தை செய்ய முடியும். மாநிலங்கள் வாரியாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு சிமெண்ட் அல்லாட்மென்ட் என்று சிமெண்ட் கட்டுப்பாட்டு அதிகாரி அங்கேயிருந்து நமக்கு உத்தரவிடுகிறார். அதன்படி நாம் அந்தந்த மாநிலத்திற்கு பிரித்துக் கொடுக்கிறோம்.

சிமெண்ட் தமிழகத்திலே உற்பத்தியானாலும் கூட, உற்பத்தி செய்யப்படுகிற சிமெண்ட், மத்திய அரசினுடைய சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரியின் உத்தரவின் பேரிலேதான் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

ஆனால் நமக்குத் தேவையான, நமக்கு வேண்டிய அளவிற்கு நமக்கு போதுமான அளவிற்கு மத்திய அரசு நமக்குத் தரவில்லை. எனவே நமக்கு வழங்கப்படுகிற விகிதாசாரத்தை மத்திய அரசு உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்கள். நானும் டெல்லிக்குச் செல்லும் போதெல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறோம். வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அரியலூர் சிமெண்ட் ஆலையினுடைய மொத்த உற்பத்தித்திறன் எவ்வளவு என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தியாகிற சிமெண்ட் அவ்வளவையும் விநியோகம் செய்கிற பொறுப்பு மத்திய சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரி அவர்களிடம்தான் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்தான் அவ்வப்போது நிர்ணயிப்பதாகச் சொன்னார்கள். அதற்கு ஏதாவது வரையறை இருக்கிறதா? இவ்வளவு சதவீதம் இங்கே விநியோகம் செய்யப்பட்டு மீதியைக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதா? அல்லது மொத்தமாக இந்தியா பூராவிலும் உள்ள தேவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு இதை விநியோகிக்கிறார்களா? எந்த அடிப்படையில் நிர்ணயிக்கிறார்கள்.

இப்போது சிமெண்ட் விலை ஒரு மூட்டை, இரண்டு மூட்டை என்று கேட்டால் ரூ. 50-க்குக் கூட கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் இங்கே பெரிய பெரிய மாடமாளிகைகள் கட்டுவதற்கு சிமெண்ட் கிடைக்கிறது. இதை எல்லாம் சீராக்குவதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது?



1981 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களின் முதல் கேள்வி எவ்வளவு உற்பத்தித் திறன் என்பது.

ஒரு ஆண்டுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக அந்த அரியலூர் சிமெண்ட் ஆலை நிறுவப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, இங்கேயே பற்றாக்குறை இருக்கிறபோது வெளி மாநிலத்திற்கு எப்படி அனுப்பப்படுகிறது என்று கேட்டார்கள். மாநிலத்தினுடைய தேவைகளை கணக்கிலே கொண்டு மத்திய சிமெண்ட் கட்டுப்பாட்டு அதிகாரி மத்திய அரசினுடைய உத்தரவின்பேரில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரித்துக் கொடுக்கிறார்கள். தேவைகளைக் கணக்கிலே கொண்டு ஒரு ரேஷியோ வைத்துக்கொண்டு ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரித்துக் கொடுக்கிறார்கள்.

மூன்றாவதாக, சிறிய சிறிய சாதாரணமான மக்கள் ரூ. 50 அளவிலேகூட சிமெண்ட் வாங்கமுடியாத நிலையிலே இருக்கிறபோது சிலர் பெரிய மாடமாளிகைகளை கட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் அவர்களை எல்லாம் நாங்கள் அனுமதிப்பதில்லை. அவர்களை எல்லாம் முறையாக கணக்கிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்து, சிபாரிசு செய்து அதற்குப் பிறகு டைரக்டருக்கு வந்து முறையாக கணக்கிட்டு பிறகுதான் இந்த விநியோகம் செய்யப்படுகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் உற்பத்தியாகக் கூடிய சிமெண்டில் 75 சதவீதம் பிற மாநிலங்களுக்கு செல்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே போல பிற மாநிலத்திலே உற்பத்தியாகக்கூடிய சிமெண்ட் தமிழ் மாநிலத்திற்கு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே, தனியார் துறையிலே 6 சிமெண்ட் தொழிற்சாலைகளும், நம்முடைய சிமெண்ட் கார்ப்பரேஷன் சார்பிலே புதிதாகத் திறந்துள்ள 2 தொழிற்சாலைகளும் ஆக 8 தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலேயிருந்துதான் வேறு மாநிலங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். வேறு மாநிலங்களிலிருந்து நாம் பெறவில்லை.

[1981 பிப்ரவரி 6

**திரு. ஏ. சி. சண்முகம் :** பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் மிகவும் தட்டுப்பாடாக இருக்கும் இந்த நேரத்தில் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ? அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் சிமெண்ட்டின் பெரும்பகுதி தமிழ் நாட்டிற்கு ஒதுக்கவேண்டும் என்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நாம் திட்டமிட்டு அந்தத் தொழிற்சாலையை அமைத்து இருப்பது ஆண்டுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதாகும். அந்த திட்டமிட்ட அளவிற்கு நாம் இன்னும் முழுமை பெறவில்லை. முழுமை பெற்ற பின்னர் தான் விரிவாக்கம் செய்ய இயலும். சிமெண்ட் ஒதுக்குவது பற்றி கேட்டார்கள். இது குறித்து மத்திய அரசுக்கு வற்புறுத்தி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் எழுதியிருக்கிறார்கள். நானும் அரசின் சார்பில் எழுதியிருக்கிறேன். தமிழகத்திற்கு ஒதுக்கப்படுகின்ற சிமெண்ட்டின் அளவை அதிகரிக்க வேண்டும் என்று தொடர்ந்து தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து அதிகப்படியான சிமெண்ட் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகச் சொன்னார்கள். விரைவில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? இந்த சிமெண்ட் வினியோகத்தில் சிறிய ஏழை மக்களுக்கு போதுமான அளவிற்குச் சிமெண்ட் கிடைக்காத காரணத்தால் அதிக விலை கொடுத்து அவர்கள் வாங்கும் நிலை இருக்கிறது. இதனால் அவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து கடன் பெறுவதற்கு மேல் செலவாகிறது. இந்த நிலைமைகளை மாற்ற, ஏழை மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து சிமெண்ட் வழங்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அரசின் சார்பில் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள இயக்கத்தின் சார்பிலும் அவர்கள் வலியுறுத்தினால் நல்லது.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அரியலூர் பகுதியில் சிமெண்ட்டிற்கு தேவையான மூலப் பொருள்கள் அதிகமாகக் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, சிமெண்ட் தேவையை அடிப்படையாகக் கொண்டு, மேலும் அந்த ஆலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?



1981 பிப்ரவரி 6]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். அந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் உற்பத்திசெய்கிற திறன் பெற்றது. அந்த இலக்கை இன்னும் முழுமையாக எய்தவில்லை அதனால், விரிவாக்கம் செய்வது பற்றி இப்போது பரிசீலனையில் இல்லை. ஏற்கெனவே இந்த மன்றத்தில் நான் ஒரு திட்டம் பற்றி அறிவித்து இருக்கிறேன் திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய இடங்களில் கிடைக்கிற சுண்ணாம்புக்கற்களை வைத்துக்கொண்டு, ரூபாய் 32 கோடி செலவில் பாளையம் பகுதியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். இவ்வாறு புதிய தொழிற்சாலைகளை உருவாக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். தொழிற்சாலைகளில் அதிக உற்பத்தி செய்வதற்கும் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் தொடங்குவதற்கு லைசென்சுகள் பெறப்பட்டு, வங்கி மூலம் கடன்கள் வாங்கியும் உள்ளவர்கள், சிமெண்ட் கிடைக்காத காரணத்தால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் அவர்கள் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கினால் தான் பணம் பெற முடியும், இல்லையென்றால் அந்தப்பணம் லாபஸ் ஆகிவிடும். பல விண்ணப்பங்கள் சிமெண்ட் கேட்டு வந்தும் அவர்களுக்குக் கொடுக்காமல் இருப்பதாகத் தெரிகிறது. அது அமைச்சருக்குத் தெரியுமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அரியலூரில் சிமெண்ட் உற்பத்தி பற்றியதாகும். ஆனால், கேட்கப்படுகின்ற துணைக் கேள்விகள் சிமெண்ட் வினியோகத்தைப் பற்றி இருக்கின்றன. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரமாக எவ்வளவு யார் யாருக்கு எப்படி வினியோகிக்கப்பட்டது என்பதைப் பற்றிச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9·50]

**திரு. ஜே. எஸ். இராசு :** துணைத் தலைவரவர்களே, ஆண்டுதோறும் 5 இலட்சம் டன் "டார்கெட்" என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவ்வாறு இருக்கும்போது 1 இலட்சம், 2 இலட்சம், அல்லது 3 இலட்சம் என்ற அளவுக்குத் தான் இந்த 3, 4 ஆண்டுகளில் உற்பத்தியாகியிருக்கிறது. மிகப் பெரிய அளவுக்கு உற்பத்தியில் குறைவு இருக்கிற காரணத்தால்

இதற்கு அங்கே இருக்கிற நிர்வாகம் காரணமா? நிலக்கரி கிடைக்காத காரணமா? மின்சாரம் போதிய அளவுக்கு தரப்படாத காரணமா அல்லது அந்த இயந்திரத்தைப் பொருத்துவதிலே ஏற்பட்ட கோளாறா என்பதை இந்த அரசு பரிசீலித்ததா? இந்த உற்பத்தித் திறன் குறைவுக்கு என்ன காரணம் என்பதை ஆராய சம்பந்தப்பட்ட நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை அரசு அமைக்க முன்வருமா? காரணம் இது ஒரு பொதுத்துறை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணை தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். எதற்கெடுத்தாலும் அதிகாரிகளை குறை சொல்வது சரியல்ல. இந்தத் தொழிற்சாலை திட்டமிடப்பட்ட ஒன்றரை ஆண்டு காலத்திலேயே— மாண்புமிகு புரட்சித் தலைவர் பொறுப்பேற்ற பிறகுதான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது— குறிப்பிட்ட காலத்திற்குள்ளேயே உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. 1979இல் உற்பத்தியைத் தொடங்கியது. நிலக்கரி பற்றாக்குறை, மின்சாரம் பற்றாக்குறை போன்ற காரணங்களாலும், அண்மையில்தான் ஆரம்பிக்கப்பட்டது என்பதாலும் திட்டமிட்ட அளவுக்கு உற்பத்தியை எட்ட முடியவில்லை. எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும் செயல்படத் தொடங்கி 2, 3 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் உச்ச அளவை எட்ட முடியும். அதைப்போல இந்தத் திட்டமும் படிப்படியாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. 5 இலட்சம் டன் உற்பத்தியை எட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. நெடுமாறன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது; உட்காருங்கள்.

திரு. என். ஏ. பூங்காவனம்: துணைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் சிமெண்ட் விநியோகம் செய்யும் பொறுப்பினை ஊராட்சி ஒன்றியங்களிடம் விட்டிருக்கிறார்கள். அதனால் கிராம வேலைத் திட்டங்களுக்கு சிமெண்ட் சரியாகக் கிடைப்பதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, கிராமப்புறங்களுக்கும் சிமெண்ட் விநியோகம் செய்யும் பொறுப்பை, இப்போதிருக்கும் முறையை மாற்றி, அரசாங்கமே ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, [illegible] இதற்கும் இரண்டுமுறை பதில் சொல்லிவிட்டேன். [illegible] "ப்ரொடக்ஷன்" பற்றியது. இங்கே [illegible] கேள்வி "டிஸ்ட்ரிபியூஷன்" பற்றியது. [illegible] வேண்டாம்.





திரு. என். இட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் குறிப்பிடும்போது வெளியில் சிமெண்ட் விலை 50 ரூபாய்க்கு விற்கப்படுவதாகச் சொன்னார்கள். மாயூரத்தில் 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எனவே, அந்த விலையைக் குறைக்க அரசு முன்வருமா?

(பதில் இல்லை.)

செங்கல்பட்டு மாவட்டத்தில் உப்பு உற்பத்தி.

*வினா எண் 220—திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம், கோவளம் போன்ற இடங்களில் அதிகமாக உற்பத்தியாகும் உப்பை பயன்படுத்தும் வகையில் கேளம்பாக்கத்தில் சிறிய உப்பு (Table Salt) தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இல்லை.

ஆலங்குளம் தொகுதியில் மின்வெட்டு.

*வினா எண் 201—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியில் இதர பகுதிகளைவிட மின்சாரவெட்டு மிக அதிகமாக உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: துணைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் மின்சார வெட்டினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, நஷ்டமடைகிறார்கள். அதைப்போல தொழிற்சாலைகளும் பாதிக்கப்படுகின்றன. அதைப்போக்க அரசு புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைத்துத்தர உத்தேசித்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, புது திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை துரிதப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

[1981 பிப்ரவரி 6

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் குறிப்பாக ஆலங்குளம் பகுதியில் அதிகமான அளவு நீர்ப்பாசனக் கிணறுகள் மூலம் விவசாயம் நடப்பதால் அங்கே ட்ரான்ஸ்பார்மர் அமைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது மின் வெட்டைப் பற்றிய கேள்வி. மின் வெட்டு என்பது தமிழகம் முழுவதும் அமலில் இருக்கின்றது. ஆலங்குளத்தில்தான் அதிகமான அளவு மின்வெட்டு என்பது இல்லை. ஆகவே, ட்ரான்ஸ்பார்மர் அமைப்பது குறித்து தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இருப்பதும் மின் வெட்டு அமுலாக்கப் பட்டிருப்பதும் பெரிய உண்மை. ஆனால், எந்த எந்தப் பகுதிகளில் எந்தெந்த அளவுக்கு மின்வெட்டு இருக்கின்றது என்பதை அரசு அறிவித்தால் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்கும். ஆகவே, அந்த முறையில் தெரிவிப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்வெட்டைப் பொறுத்தவரையில் உயர் அழுத்த மின்சாரத்தில் இயக்கப்பட்டு வருகின்ற இண்டஸ்ட்ரீஸிக்கு 30 சதவீதம் மின் வெட்டு உள்ளது. பம்ப் செட்டுகளைப் பொறுத்த வரையில் பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் தரப்படுகின்றது. இதுதான் இப்போதுள்ள நிலைமை. இந்த நிலைமை மேம்பட மின் உற்பத்தியை அதிகரிக்கவும், மின் உற்பத்திக்கான திட்டங்களை விரைவுபடுத்தவும்தான் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போடிநாயக்கன்பட்டி கிராமதிற்கு மின் இணைப்பு.

* வினா எண் 202—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதி இடைப்பாடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த போடிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம் ஒப்புதலாகி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது நடவடிக்கை எடுப்பதில் தாமதத்திற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ), [illegible] முடிக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டு [illegible] திங்கள் 1[illegible] ஆம் நாளன்று மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.



1981 பிப்ரவரி 6]

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, இடைப்பாடித் தொகுதியிலுள்ள போடிநாயக்கன்பட்டி கிராமத்தில் வாழும் ஆதி திராவிட மக்களுக்காக மட்டும் இந்த மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற இனத்தினர் வாழும் பகுதிகளுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, போடிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு 32,300 ரூபாய் செலவில் 29 எண்ணிக்கை கொண்ட 40 வாட்ஸ் குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் எனக்கு வந்திருக்கின்றது. ஊரின் மற்றப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு மின் வசதி வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுபற்றி மின்சார வாரியத்திற்கு உத்தரவு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, ஊரார் வாழ்கின்ற பகுதி என்கிறார். அப்படி என்றால் இந்த மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குரிய பெயர் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைத்தான் சொன்னேன். ஆகவே எல்லாமே ஊர்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, இந்த நிலைமையை மாற்ற சேலம் மாவட்டத்தில் ஒரு மின் விநியோக அமைப்பு ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நீரிலிருந்து மின் உற்பத்தி.

*வினா எண் 203—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காவிரிக்கரையில் ஒகனேக்கல்லிலிருந்து மேட்டூர் வரை புதிய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் சாத்தியங்கள் உண்டா ?

(ஆ) ஆம் எனில் என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, காவிரிக் கரையில் ஒகனேக்கல்லிலிருந்து மேட்டூர் வரை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்கு சாத்தியங்கள் உண்டா என்பதை அறிய ஆய்வுகள் ஏதேனும் அரசு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒகனேக்கல்லிலிருந்து மேட்டூர் வரை நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கும் சாத்தியங்கள் உண்டா என்பது கேள்வி. மேட்டூரிலே நீர் தேங்கினால் ஒகனேக்கல் வரை நீர் பிடிப்பு இருக்கும். ஆகவே இடையிலே மின் உற்பத்தி நிலையம் அமைக்க முடியாது என்பதுதான் பதில்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, ஒகனேக்கல் மின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி தருவதில் கால தாமதம் செய்வதால் அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசு உறுதியான முயற்சியை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு காலதாமதம் செய்யவில்லை. கர்நாடக அரசு தன்னுடைய சம்மதத்தை இன்னும் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது [illegible] குறிக்கும்.]



## 2. அறிவிப்புகள்.

### (அ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாளன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின் படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:—

| | |
|---|---|
| 6-2-1981 (வெள்ளிக்கிழமை) | 1980-81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும் அதற்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தலும். |
| 7-2-1981 (சனிக்கிழமை). | அரசு அலுவல்கள். |
| 8-2-1981 (ஞாயிற்றுக் கிழமை). | விடுமுறை. |
| 9-2-1981 (திங்கட் கிழமை). 10-2-1981 (செவ்வாய்க் கிழமை). 11-2-1981 (புதன்கிழமை) | அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். |
| 12-2-1981 (வியாழக்கிழமை). | அரசு அலுவல்கள். |

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) தண்டராம்பட்டு தொகுதியில் நிலவும் கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''தண்டராம்பட்டு தொகுதியைச் சேர்ந்த தானிப்பாடி கிராமத்தில் நிலவும் கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம் பற்றி திரு. த. வேணுகோபால் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் அவையில் இல்லாததால் அமைச்சர் அவர்கள் அவைமுன் அறிக்கையை வைக்கலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

வட ஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியைச் சார்ந்த தானிப்பாடி கிராமத்தில் ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், தரை மட்டத் தொட்டியும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் காலனியிலுள்ள ஓர் துளைக் கிணறும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் மூன்று துளை கிணறுகள் போடுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2. மற்றும் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளில் நிலவி வரும் குடி நீர் பஞ்சத்தைத் தீர்க்க அரசு ரூபாய் 115.00 இலட்சம் மதிப்பீட்டில் முறையே 500 மற்றும் 200 (ஆழ்) துளை கிணறுகள் தோண்ட அனுமதி அளித்துள்ளது. அதன்படி, திருவண்ணாமலைக் கோட்டத்தைச் சார்ந்த தண்டராம்பட்டு ஒன்றியத்தில் 16 துளைக் கிணறுகள் ரூபாய் 2,40,000 மதிப்பீட்டில் தோண்டப்படும்.

3. தேவையான அளவு குடி நீர் வசதி செய்ய நடவடிக்கைகள் யாவும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

**(ஆ) வீடு கட்டுவதற்கு வழங்கப்பெறும் கடன்.**

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ''ஏற்கெனவே வீடு கட்டுவதற்குக் கடன் வழங்க, ஆணை பிறப்பிக்கப்பட்ட அரசு ஊழியர்கட்கு இரண்டாவது தவணைக் கடன் வழங்குவதில் பிறப்பிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை.**

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் வழங்கும் திட்டம் 1960 ஆம் ஆண்டு முதல் செயலாற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிதியாண்டிலும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சமாக இருந்த ஒதுக்கீடு 1979–80-ல் 225 இலட்சமாகவும், நடப்பு





நிதியாண்டு 1980–81-ல் ரூ. 500 இலட்சமாகவும் உயர்த்தப்
பட்டது. தலைமைச் செயலகத்தில் ஒருமுகப் பட்டதாக இத்
திட்டம் 1979 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் வரை
இருந்தது. இதனால் கடன் மனுக்களின் மீது ஒப்புதல் அளிப்
பதில் ஏற்படும் காலதாமதம் காரணமாக, 1979 ஆம் ஆண்டு
ஜூலை திங்கள் 1 ஆம் நாள் முதல் இவ்வாறு கடன் வழங்கும்
அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு அளிக்கப்பட்டு
திட்டம் விரிவாக்கப்பட்டது. இதற்கென வரவு செலவுத்
திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அனைத்து மாவட்ட ஆட்சி
யருக்கும் பிரித்து அளிக்கப்பட்டது. இவ்வாறான அதிகார
மாற்றம் ஏற்பட்ட பின்னர் 1979–80 நிதி ஆண்டில் முதல் சில
மாதங்களில் ஒப்புதல் அளிப்பது சற்று தாமதமானதின் காரண
மாக செலவினமும் குறைவாக இருந்தது. 1979–80 ஆம்
ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 225 இலட்சம் முழுவதும்
செலவிடப்படாமல் அரசுக் கணக்கில் திரும்பச் செலுத்தி
விடப்படலாம் என்ற நிலை உருவான காரணத்தினால் அந்த
நிதியாண்டில் அனைத்து மாவட்ட ஆட்சியரும் வீடுகட்டுவதற்
கான முன்பணம் அளிக்கும் திட்டத்திற்கு தனிக்கவனம் செலுத்த
அறிவுறுத்தப்பட்டனர், அவர்களும் சிறப்புக் கவனம் செலுத்
தியதன் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை செலவிட
முடிந்தது.

மேற்சொன்ன நடவடிக்கையினால் ஏற்பட்ட அனுபவம்
காரணமாக நடப்பு நிதியாண்டு 1980–81-ல் மேலும் அதிக
மான அலுவலர்கள் இவ்வாறான கடனுதவி பெறுவார்கள்.
அதனால் அதிக நிதி தேவைப்படும் என்ற காரணத்தால் இந்நிதி
யாண்டின் துவக்கத்தில் வரவு செலவுத் திட்டத்தில், இத்திட்டத்
திற்கென ஒதுக்கப்பெற்ற ரூ. 325 இலட்சம் தொகை ரூ. 500
இலட்சமாக உயர்த்தப்பட்டது. இத்தொகையும் போதுமான
தாக இருக்காது என்று நிலை இருந்த போதிலும் அரசின் ஒட்டு
மொத்தமான நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இதனை
மேலும் உயர்த்த முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. சென்ற
ஆண்டை விட, 1980–81-ல் ரூ. 2.75 கோடி அரசு ஊழியர்களின்
நலனைக் கருதி கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது குறிப்
பிடத் தக்கது மேலும் இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறும் அலு
வலர்கள் அனைவரும் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியாண்டிலேயே
முழுத் தொகைகளையும் பெறுவதில்லை என்பதோடு, முந்தைய
ஆண்டுகளில் கடனுதவி பெற்றோர் பலர், சில தவணைகளைப்
பிந்தைய நிதியாண்டுகளில் பெறுவதாலும் மாவட்ட ரீதியில்
கடன் மனுக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வருவதாலும்
தேவைப்படும் நிதி அளவையோ அல்லது இவ்வளவு செலவாகும்
என்பதையோ முன்கூட்டி நிர்ணயிக்க முடியவில்லை.

இந்நிலையில், நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பெற்ற நிதி
(ரூ. 500 இலட்சம்) க்கும் மேலாக செலவினம், டிசம்பர் மாத
இடைப்பகுதியிலேயே உயர்ந்து விட்டது. ஆகையால் அரசின்

ஒட்டுமொத்த நிதி நிலையைக் கருதி, இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து செலவினம் செய்வது தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது. வரும் நிதியாண்டு வரவு-செலவுத் திட்டம் சமர்ப் பிக்கப்பட்டவுடன் மேற்கண்ட தடையால் பாதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு அதாவது ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளவர் களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் விரைந்து கடனுதவி அளிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்திந்திய பணி (All India Services) ஐப் பொறுத்த வரையில் மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிப்பதால், அவர்களுக்கு அளிக்கும் கடன் மீது தடை உத்தரவு விதிக்கப்படவில்லை. மேலும் இந்த அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகையான ரூ. 7.50 இலட்சத்தில் ரூ. 2.64 இலட்சமே டிசம்பர் திங்கள் முடிய செலவாகி உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த திட்டத்தின்கீழ் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 3½ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. அதற்குப் பின்னாலே 1½ கோடி ரூபாயையும் மீண்டும் ஒதுக்கீடு செய்திருக்கிறது. அப்படி இருந்தும் கூட இன்னமும் வீடு கட்ட இயலாத நிலையில் இருக்கிற சூழ் நிலையை மாற்றி அமைப்பதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978–79ல் 150 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 1979–80-ல் 225 லட்சம் ஒதுக்கீடு செய்தது. இந்த 1980–81-க்கென்று 325 லட்சம் ஒதுக்கீடு செய்த பிறகும் ஆண்டு இறுதியில் 500 லட்சம் ஒதுக்கிடு செய்தது. ஆனால் மொத்தமாக 530 லட்சம் ரூபாய் செலவு ஆகிவிட்ட காரணத்தால் அந்தப் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வருகிற நிதி ஆண்டில் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட வர்களுக்கு முன்னுரிமை கொடுத்து கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பெற்ற தொகையைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், எவ்வளவு ஒதுக்கீடு செய்திருந்தாலும் அந்த வீடுகள்





கட்டப்படாத நிலையில் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் அதற்கு வேண்டிய ஏற்பாடு எதையாவது செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் மனதிலே கொண்டுதான் வரும் நிதி ஆண்டு வரவு செலவுத் திட் டம் ஏற்கப்பட்டவுடன், மேற்கொண்டு, ஏற்கெனவே பாதிக்கப் பட்டவர்களுக்கு, அதாவது ஒப்புதல் அளிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து கடன் உதவி அளிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைந்து என்று சொல்லப்பட்ட வார்த்தையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நான் நமது சட்டசபை விதிகள் சம்பந்தமாக ஒரு ஒழுங்குப் பிரச்னையை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே எனக்குத் தரப்பட்டிருக்கிற தகவல், நான் கொடுத்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான அட்ஜோர்ன்மெண்ட் மோஷனை கால் அட் டென்ஷனாக மாற்றியிருக்கிறார்கள். அதற்கு உங்களுக்கு அதி காரம் இருக்கிறது. அதில் நான் குறுக்கிட முடியாது. ஒத்துக் கொள்கிறேன். உங்கள் தீர்ப்பு தான் இறுதியானது. ஆனால், போலீஸ் லாக்கப் மரணங்கள் பற்றிய விவாதங்கள் நம் சட்டசபையில் ஒத்திவைப்புத் தீர்மானங்களாகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அதுதான் கன்வென்ஷன். நம் மன்றத்தில் கன்வென்ஷன் என்று சொல்வது அது ஏறத்தாழ சட்டம் போன்றதுதான். போலீஸ் லாக்கப் மரணங்கள் பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தால் தான் பிரச்னையைப் பற்றி விரிவாகப் பேச முடியும். கால் அட்டன்ஷன் என்றால் ஒன்றிரண்டு கேள்விகளுக்கு மேல் கேட்கமுடியாது. ஒத்தி வைப்புத் தீர்மானம் எனறால் விரிவான அபிப்பிராயங்களைச் சொல்ல முடியும் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கருத்தை எழுதிக்கொடுங்கள். பார்க்கலாம்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவு. 1981.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) முதல் துணை நிதி நிலை அறிக்கை—1980—81 (ஆ. இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1980–81ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I Sadiq Ali, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the year 1980-81.



5. முதல் துணை நிதி அறிக்கை 1980—81— விவாதம்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நிதி அமைச்சர் அவர்களால் 1980–81 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மீது என் கருத்துக்களை, நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வருவாய்க் கணக்கில் 18 கோடியும் மூலதனக் கடன் கணக்கில் 32.41 கோடியும், ஆக மொத்தம ரூபாய் 50.41 கோடிக்கு அனுமதி கேட்கிறார்கள். என்று சொன்னாலும், இதிலே பல்வேறு தலைப்புக்களில் ஒதுக்கியிருக்கிற பணங்களைக் கூட்டிப் பார்க்கிறபோது நிறைய தொகைகள் வர வாய்ப்பிருக்கிறது. உதாரணத்திற்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே முக்கியமாக, இந்தத் திட்டத்தில் நிறைய—விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வதற்கு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ரூபாய் 42 கோடியும், புதிய கடன்கள் வழங்க ஏழு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு ரூபாய் 22.58 கோடி ரூபாயும், மின்வாரியத்திற்கு கடனாக வழங்க 15 கோடி ரூபாயும், போக்குவரத்துக் கழகங்களுக்கு ஒரு பத்துகோடி ரூபாயும், உலகத் தமிழ் மாநாட்டுக்கு (மதுரை)செலவு செய்த வகையில் ஒரு நாலைந்துகோடி ரூபாயும் இப்படி நிறையக் கடன்கள் கொடுக்கக்கூடிய அளவிற்கு முன் பணம் என்று ஒரு குட்டி பட்ஜெட்டையே தயார் செய்து நமது முன்னால் வைத்து மன்றத்தின் ஒப்புதலுக்காக நமது நிதி அமைச்சர் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-10)

ஆனால், நிச்சயமாக அவருடைய இந்தக் கோரிக்கை நிறைவேறும். காரணம், மெஜாரிட்டி அவர்கள் பக்கத்தில். ஆனாலும் நான் அவர்களிடத்தில் எதிர்க் கட்சிக்காரன் என்ற முறையில் சில விளக்கங்களை முதலில் தெரிந்து கொள்ள விழைகிறேன்.

இன்றைக்கு திட்டங்களுக்கு பணத்தை ஒதுக்குவதும், அதனில் பெரிய செயல்களைச் செய்யப் போகிறோம் என்று சொல்லுவதும் ஒரு அரசுக்கு ஏற்றதுதான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு மேல் எடுக்கப் போகிறீர்களே, அவற்றுக்கு வேண்டிய நிதி ஆதாரம் எங்கே வைத்திருக்கிறார்கள் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று பார்த்தேன். செலவைச் சொல்லுகிற போது வருவாயைச் சுட்டிக்காட்ட வேண்டாமா? வருவாயைச் சுட்டிக் காட்டாமல் செலவை மட்டும் எடுத்துக் காட்டுகிறீர்கள். எங்கே இருந்து பணத்தை எடுக்க

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 6

போகிறீர்கள்? பினான்ஷியல் ரிசோர்சஸ் எங்கே இருந்து கிடைக்கப் போகிறது என்று சுட்டிக் காட்டியிருப்பார்கள் என்று துருவித் துருவிப் பார்த்தேன், கிடைக்கவில்லை. சேல்ஸ்டாக்ஸ் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. புதிய வருவாய் வந்திருக்கிறதா என்றால் கிடையாது. இருப்பு இருக்கிறதா என்றால் இல்லை. ரிசர்வ் பாங்கில் ஓவர் டிராப்ட் வாங்க முடியுமா என்றால் முதலமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டார்கள், பிளாக் லிஸ்டில் வருகிற அளவுக்குத் தமிழ்நாடு இருக்கிறது என்று. எல்லா மாநிலங்களும் சேர்ந்து கிட்டத்தட்ட ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஓவர்டிராப்ட் வாங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வந்த பிறகு அது பற்றிக் கேட்டு, தெரிந்து பதில் சொல்ல வேண்டும். தமிழகத்தில் எவ்வளவு ஓவர்டிராப்ட் வாங்கியிருக்கிறார்கள என்பதைத் தெரிவிக்க அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் திட்டங்களுக்குப் பணம் கிடையாது. எந்த வகையிலும் கிடையாது. ஏனென்றால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலை மத்திய சர்க்காருக்குச் சமர்ப்பித்த நேரத்தில் நிதி ஆதாரம் எங்கே இருக்கிறது என்று கேட்ட நேரத்தில் நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள்,—எலக்ட்ரிசிடி போர்டில் இருந் 217.81 கோடி ரூபாய் கிடைக்குமென்று. ஆனால் 217 கோடி ரூபாய் மின்சார வாரியத்திலிருந்து திட்டச் செலவுக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்த நீங்கள் அந்த மின்சார இலாகாவுக்கு 10 கோடி ரூபாய் கடன் வழங்கும் நிலையில் இருக்கிறீர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. போக்குவரத்துக் கழகங்களில் இருந்து வருவாய் கிடைக்குமென்று மத்திய சர்க்காரிடம் திட்டத்தின் தொகையைச் சாட்டுவதற்காகக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்கள் இன்றைக்கு 55.33 கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. மற்றப்படி சர்க்காருக்கு வேறு எந்த வகையில் பினான்ஷியல் ரிசோர்சஸ் வரும் ? ஓப்பன் மார்க்கட் லோன்ஸ் வாங்கலாம். ஸ்மால் சேவிங்ஸ் மூலம் பெறலாம், பிராவிடென்ட் பண்ட் மூலம் வரலாம். அடிஷனல் மொபிலிசேஷன் மூலம் வரலாம். சென்ட்ரல் அசிஸ்டன்ஸ் மூலம் வரலாம், எலக்ட்ரிசிடி போர்டு மூலம் வரலாம்.

ஆனால் எலக்ட்ரிசிடி போர்டிலிருந்து பணம் வர முடியாது. சென்ட்ரல் அசிஸ்டன்ஸ் நிச்சயமாகக் கிடையாது. காட்கில் ஃபார்முலா படி பர்காபிடா இன்கம் படி அசிஸ்டன்ஸ் கொடுக்கிறார்கள். இந்த மாநிலத்தில் தனி மனிதன் வருவாய் 967 ரூபாயாக இருக்கிறது. அகில இந்தியாவில் தனி மனிதன் வருமானம் 1,292 ரூபாயாக இருக்கிறது. ஆகையால் 22 மாநிலங்களில் தமிழகம் ஒன்பதாவது இடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, உங்களுக்கு இதிலே பணம் கிடைக்காது.



1981 பிப்ரவரி 6] [திரு. துரைமுருகன]

வேறு எதிலும் கிடைக்கப் போகிறதா என்றால் ஓப்பன் மார்க்கட் லோன் வாங்கலாம் என்றாலும் சீலிங் என்று விதித்து சென்ட்ரல் கவர்ன்மென்ட் கட்டுப்பாடு செய்து விட்டது.—

"Unless the ceiling for the State's open market borrowing is fixed liberally, collection from the source is likely to dwindle to a small amount"

என்றுதான் அதிலே கூட, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். வரியை உயர்த்துவார்களா என்றால் கிடையாது. மத்திய அரசுக்குத் தந்த நகலில் அருமையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீங்கள் அந்த நகலை எங்களுக்குத் தராவிட்டாலும் நாங்கள் அந்த நகலைப் பார்த்திருக்கிறோம். அதிலிருந்து குறிப்பிட்டுக் காட்டுகிறேன்—

"In the matter of taxation, the state has possibly reached its limits and it is difficult to think of any substaintial addition to tax resources being made by the introduction of new taxes or by raising the rates of the existing taxes'.

ஆகவே, உங்களுக்கு அந்த வழியிலும் பணம் வருவதற்கு வகை கிடையாது. இப்படி இருக்கும் போது எக்கச்சக்கமான பணத்தை வாரி வாரி மின்சார வாரியத்திற்கு, போக்குவரத்து கழகங்களுக்கு, உலகத் தமிழ் மாநாட்டுக்கு வழங்கியிருக்கிறீர்கள். எங்கே உங்களுக்கு நிதி ஆதாரம் ? நிதி ஆதாரத்தைச் சொல்லி பணத்தைக் காட்ட வேண்டாமா ? கேட்பது எங்களுடைய உரிமை அல்லவா ? அந்த முறையிலே தான் நான் இவற்றைச் சுட்டிக் காட்டுகிறேன். உங்களுக்கு இருக்கிற தைரியம் என்ன ? ஒரே ஒரு காரியம் தான், திட்டச் செலவிலே கைவைத்து விடலாம் என்பதுதான். ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்வார்கள். சென்ற ஆண்டு திட்டச் செலவிற்காக ஒதுக்கப்பணம் 436 கோடி ரூபாய், அந்த 436 கோடியிலே கையை வைத்து. விட்டால் என்ன என்று கருதுகிறீர்கள். அந்த 436 கோடி ரூபாய் மட்டுமல்ல, இந்த ஆண்டு பார்த்தால் 630 கோடி ரூபாய் வரையில் திட்டச் செலவுக்காக ஒதுக்க வேண்டியிருக்கிறது. திட்டச் செலவிற்காக மத்திய அரசிடம் ஒப்புதல் பெற்றது 3150 கோடி ரூபாய். அப்படி என்றால் ஆண்டு திட்டச் செலவு 1980—81 ஐயும் சேர்த்து 630 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும். ஆனால் ஒதுக்கியிருப்பது 436 கோடி ரூபாய். அப்படி என்றால் இன்னும் அதற்கு 194 கோடி ரூபாய் தேவை. மத்திய அரசினுடைய பங்கு இருக்கிறதே என்று கேட்டால் அது ஆண்டுக்கு132 கோடி ரூபாய். அதைக் கழித்தாலும் மீதம் 62 கோடி ரூபாய்க்கு நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள் என்று கேட்கக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

எதற்காக நீங்கள் மின் வாரியத்திற்கு இவ்வளவு பணம் வாரி வழங்கியிருக்கிறீர்கள் என்று கேட்டால் இதிலே சொல்கிறீர்கள், விவசாயிகளுடைய கடன் வரவில்லை, அவர்கள் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தவில்லை, எனவே அதற்காக இந்தப் பணத்தைக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன். விவசாயிகளிடமிருந்து மின் வாரியத்திற்கு வரவேண்டிய பணம் எவ்வளவு ? அதிலே நீங்கள் ஒதுக்கியிருக்கிற 15 கோடி ரூபாய்க்கு மேலும் வர வேண்டுமா அல்லது குறைவாக வரவேண்டுமா அல்லது மின் வாரிய நிர்வாகக் கோளாறினாலே ஏற்பட்ட செலவைக் கூட சரிக்கட்ட இந்த அரசாங்கத்திலே பணம் கேட்டிருக்கிறார்களா ? இந்த அவையிலே அந்த விவர அறிக்கையை வைத்து இருக்க வேண்டும், அதையும் செய்ய வில்லை. எதை எடுத்தாலும் யார் மீதாவது போட்டுவிடுவது. இங்கே முதலமைச்சர் ஒரு முறை சொன்னார், மலைக்கள்ளன் படம் பற்றி. மலைக்கள்ளன் நல்லவனாக இருக்கலாம், ஆனால் ஊரிலே யாராவது கொள்ளை அடித்தாலும் மலைக்கள்ளன் தான் செய்தான் என்று சொல்லிவிடுவார்கள். அதைப்போல் எதைப் பற்றி உங்களைக் கேட்டாலும் சரி விவசாயிகள் பணம் கொடுக்கவில்லை, ஆகவே இதை .செய்கிறோம் என்று சொல் கிறீர்கள். நான் .ஒத்துக் கொள்கிறேன். ஆனால் போக்கு வரத்துக் கழகங்களுக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். எந்த விவசாயி பணத்தைக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னான், எந்த விவசாயி பணம் கொடுக்கவில்லை. 55 கோடி ரூபாய் நட்டத்திலே ஓடிக் கொண்டிருப்பதற்கு 10 கோடி ரூபாய் தந்திருப்பது நீங்கள் யானைப் பசிக்கு சோளப் பொறி தீனி போடுவது போல் ஆகும். (மணியடிக்கப்பட்டது). நான் இன்றைக்குத்தான் சலங்கை கட்டி இருக்கிறேன். நேரம் கொடுங்கள். அது மட்டுமல்ல, இன்றைக்கு என்ன செய்திருக் கிறீர்கள். அமைச்சர்களுடைய பாதுகாப்புச் செலவிற்காக 6 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய், போலீஸ்காரர்களுக்கு மலிவு விலையிலே கொடுப்பதற்கு 1 கோடியே 38 லட்சம் ரூபாய். ஏன் அவர்களுக்கு மட்டும் தான் மலிவு விலையா, மற்றவர் களுக்கு கொடுக்க வேண்டாமா? விலைவாசி அவர்களுக்கு மட்டும் தான் ஏறியிருக்கிறதா? அதே போன்று மந்திரிகளுக்கு ரொம்ப முக்கியமான, ரொம்ப அத்தியாவசியமான .செய்தே தீரவேண்டிய தவிர்க்க முடியாத நெசஸ்சிட்டி அதற்காக செலவு, 1 கோடியே 38 லட்சம் ரூபாய். அதைப் போன்று மதுரையிலே கழிப்பிடங்கள் கட்டுவதற்காவும் மற்றவைகளுக்காகவும் ஒதுக் கப்பட்டிருப்பது, கிட்டத்தட்ட உலகத் தமிழ் மாநாட்டிலே, வருவது, 4 கோடி ரூபாய். நான் கேட்கிறேன் .உலகத் தமிழ் மாநாட்டிற்கு இவ்வளவு .செலவாயிற்று என்பதைப் பற்றிய ஒரு அறிக்கையை இந்த அவையிலே வையுங்கள். ஒவ்வொன்றை யும் மாற்றி மாற்றி இதிலே .கொஞ்சம் சேர்க்கிறீர்கள், அதிலே கொஞ்சம் சேர்க்கிறீர்கள், இதிலே ஒரு விசித்திரம். பணத்தைக் கேட்பதிலே அவ்வளவு என்ன ஒளிவு மறைவு ? விளக்க அறிக்கை





யிலே கொடுத்து இருக்கிறீர்கள். மதுரையில் உள்ள பொதுக் கழிப்பிடங்களை காசு கொடுத்துப் .பயன்படுத்தும் கழிப்பிடங் களாக மாற்றுவதற்கும் அனைத்து வசதிகளுடன் கூடிய காசு கொடுத்துப் பயனபடுத்தும் 14 குளியல் அறைகள் கட்டுவதற்கும் ஆண், பெண் குளியல் அறைகள் கட்டுவதற்கும் பொது மக்களுக்கு 76 பொது கழிப்பிடங்களைக் கட்டுவதற்கும் மதுரை மாநக ராட்சிக்கு 84 லட்சம் என்று சொல்லியிருக்கிறீர்கள், காசு கொடுத்து காசு கொடுக்காத கழிப்பிடங்களைக் கட்டுவதற்காக மதுரை மாநகராட்சிக்கு.84 லட்சம் ரூபாய் தருகிறீர்கள், அதிலே கீழே சொல்கிறீர்கள், மறுபடியும் மதுரை மாநகராட்சியிலே உள்ள குடிசைப் பகுதியிலே பொதுக் கழிப்பிடங்களைக் கட்டுதல் போன்ற வசதிகளை .செய்து கொடுப்பதற்கு மீண்டும் 3 கோடி 11 லட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். கழிப்பிடங்கள் கட்ட மதுரை மாநகராட்சிக்கு 83 லட்சம், மறுபடியும் 3 கோடி ரூபாய் இப்படி தனித்தனியாக ஏன் கேட்கிறீர்கள். தைரியமாக சொல்லுங்கள். நாங்கள் உலகத் தமிழ் மாநாட்டிற்கு இவ்வளவு செலவு செய்தோம், இந்த மாமன்றத்திலே அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டால் அதிலே இருக்கிற சொட்டை சோடுகளை சுட்டிக் காட்டிவிட்ட பிறகு நீங்களும் அதிலே தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்வதற்கும் முடியும். அதை விட்டு விட்டு நீங்கள் மதுரை மாநகராட்சிக்கே இரண்டு முறை கழிப்பிடங்கள் கட்டுவதற்கு, கழிப்பிடங்கள் கட்டுவதற்கு என்று பணத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள்.

[முற்பகல் 10-20]

நான் கேட்கிறேன், சற்றொப்ப 4 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டப்பட்டிருக்கின்ற கழிப்பிடங்கள் இன்றைக்கு என்ன நிலைமையில் இருக்கின்றன. அவைகள் பூட்டப்பட்டிருக் கின்றன, அது உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதா, கிடையாது. தண்ணீர் வருகிறதா, கிடையாது. மாநாட்டு நேரத்திலேயாவது அவைகள் பயன்படுத்தப்பட்டனவா! ஒன்றும் கிடையாது. போர்க்கால நடவடிக்கைகளைப்போல நடத்துங்கள் என்று நீங்கள் அறிக்கை விட்டதால், ஜீ. ஓ. அனுப்பிய காரணத்தினாலே என்ன நடந்தது ? ஒன்றுக்கு ஐந்து, ஒன்றுக்கு எட்டு என்று கலவை போட்டான். அது ரொம்ப நாள் நிற்க முடியாத நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, உலகத் தமிழ் மாநாட்டிலே செய்யப்பட்ட செலவுகள் கொஞ்சநஞ்சமல்ல. அது ஊதாரித்தனமான செலவு என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. லெமூரியா கண்டம் பற்றிய படத்தை எடுத்திருக்கிறார்கள். எத்தனை அடி தெரியுமா? 3,000 அடி நீளம் உள்ள அந்தப் படத்திற்கு 15 இலட்சம் ரூபாய்? திரைப்பட உலகத்திலே மதிப்பிற்குரிய முதலமைச்சரவர் கள்.............

[1981 பிப்ரவரி 6

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் எம். ஏ. பி. எல். படித்தவர்கள். நேற்றைய தினம் தான் நான் சொன்னேன், 3 இலட்சம் ரூபாய் என்று; இன்றைக்கு அவர்கள் 15 இலட்சம் ரூபாய் என்கிறார்கள். வேறு விதமாக அவர் வைத்திருக்கிற குறிப்பிலே இருந்தாலும் கூட நான் சொன்னதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; குறிப்பிலே ஏதாவது தவறு இருந்தால் அதையும் சேர்த்துப் பேசுவது நியாயம் அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு துரைமுருகன் :** முதலமைச்சர் அவர்களின் திருத்தத்திற்கு நன்றி. (மணி அடிக்கப்பட்டது) துணைத் தலைவரவர்களே, சபைக்கு சலாம் சொல்வதற்கே ஐந்து நிமிடங்கள் போகிறது. அதற்கு மேலே மீதியிருப்பதைப் பாருங்கள்.

இன்னொரு வீணான செலவு. போப் எழுதிய குறள் என்ற ஆங்கில நூல், இராஜாஜி அவர்கள் குறளை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்திருக்கிறார்களே அந்தவொரு நூல்; மகராஜன் எழுதிய கம்பர் என்கிற நூல்; வ. வே. சு. ஐயர் எழுதிய கம்ப இராமாயணம்; பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், அண்ணா ஸ்பீக்ஸ் என்ற இந்த ஏழு புத்தகங்களை வெளிநாடுகளிலே இருந்து வந்திருக்கின்ற டெலிகேட்ஸ்சுக்கு தருவதற்காக வாங்கியிருக்கிறார்கள். ஆனால் எந்தெந்தப் புத்தகங்களைக் கொடுத்திருக்கிறார்கள்? பாரதிதாசன் கவிதையைக் கொடுத்தார்கள்; பாரதியார் கவிதையைக் கொடுத்தார்கள். அண்ணா ஸ்பீக்ஸ் என்ற புத்தகத்தைக் கொடுத்தார்கள்; மகராஜனுடைய கம்பராமாயணத்தைக் கொடுத்தார்கள் ஆனால் வ. வே. சு. ஐயர் எழுதிய கம்ப ராமாயணம், இராஜாஜி அவர்கள் எழுதிய அந்தக் குறள்; போப் அவர்கள் மொழிபெயர்த்த குறள் ஆகிய இந்தப் புத்தகங்கள் வெளிநாட்டு டெலிகேட்ஸ்சுக்குத் தரப்படவில்லை. போப் மொழிபெயர்த்த குறள் என்ற அந்தப் புத்தகத்தின் விலை 100 ரூபாய்– 95 ரூபாய் சரியாக என்று கருதுகிறேன். எவ்வளவு காப்பி வாங்கியிருக்கிறார்கள்? 1,000 காப்பிகளை வாங்கி இருக்கிறார்கள். ஆனால் யாருக்கும் ஒரு புத்தகமும் கொடுக்கப்படவில்லை. 1,000 காப்பி என்றால் ஒரு இலட்சம் ரூபாய் வருகிறது. இன்றைக்கு அந்தப் புத்தகங்கள் எங்கே? ஊதாரித்தனமாக இப்படிச் செலவு செய்திருக்கிறார்கள். பயன்படுத்துகின்ற அளவிற்குச் செய்திருக்கிறார்களா என்று கேட்டால் அதையும் செய்ய முடியவில்லை. ஆகையினால் இந்த உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்குகளை, மொத்த வரவுகள் இவை இத்தனையும் இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கும் வகையில் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 6] [திரு. துரை முருகன்[

பணம் ஒதுக்குவது பெரிதல்ல; ஆனால் அந்தப் பணம் முறையாக மக்களுக்குச் செல்கிறதா அல்லது எந்தக் காரியத்திற் காக அந்தப் பணம் ஒதுக்கப்பட்டதோ அந்தக் காரியத்திற்குப் போய்ச் சேர்ந்திருக்கிறதா என்பதுதான் எனக்கு முக்கியம். எனக்கிருக்கின்ற ஒரு ஆசை இன்றைக்கு என்னவென்றால் நம் முடைய முதலமைச்சர் அவர்கள் அவையிலே இருக்கிறார்கள் அவர் இருக்கும் பொழுது நான் சொல்ல வேண்டுமென்று கருதி னேன். ஏனென்று கேட்டால் அவர் இப்பொழுது தலைவராக மாற்றப்பட்டிருக்கிறார் ஒரு விவகாரத்தில். (குறுக்கீடு) நான் கட்சியைப் பற்றிச் சொல்லவில்லை பாட நூல் போர்டைப் பற்றிச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற மகிழ்ச்சியிலேதான் சொல்கிறேன்.

தமிழ்நாட்டில் பாடநூல்களை அச்சிட்டு மாணவர்களுக்குக் கொடுப்பதற்காக ஒரு பாட நூல் நிறுவனம் துவக்கப்பட்டிருக் கிறது. அது 1970 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. அது துவக்கப் பட்டு மாணவர்களுக்குப் பாடநூல்களை மலிவு விலையில் அச்சடித்துக் கொடுத்து மாணவர்கள் பயன் பெற்றார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்தவரையில் ஒரு கோடி ரூபாய் அதனுடைய சிறுசிறு இலாபத்திலே இருந்து சேர்ந்து பிக்செட் டெபாசிட்டிலே போட்டிருக்கிறார்கள். அதனுடைய வட்டி வருமானமே 8 இலட்சம் ரூபாய் வரையிலே கிடைத்தது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்று கேட்டால் அதற்கு ஒரு எம். டி. யைப் போட்டிருக்கிறார்கள், ரிடையரானவர். எத்தனையோ பேர்கள் இன்றைக்கு வேலை யில்லாமல் இருக்கிறார்கள்; புரோமோஷன் இல்லாமல் இருக்கிறார் கள். ஆனால் ரிட்டையரான ஒருவரைக் கொண்டு வந்து இரண் டாண்டுக் காலமாக அந்த நிறுவனத்தில் போட்டு அவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இப்பொழுது 3–வது ஆண்டிலே அடியெடுத்து வைக்கிறார். இவருடைய மகத்தான முயற்சியாலே என்ன நடந்தது தெரியுமா? அன்றைக்கு ஒரு கோடி ரூபாயை பிக்செட் டெபாசிட்டில் போட்டு வைத்திருந்தார்கள் அல்லவா அதையே கொண்டு போய் வேறொரு பேங்கிலே அடமானம் வைத்து 36 இலட்சம் ரூபாய் வாங்க வேண்டிய நிலைமைக்கு அந்தப் பாடநூல் நிறுவனம் போயிருக்கிறது.

அதுமட்டுமல்ல, அந்தப் பாடநூல் நிறுவனம் எதற்கு என்று கேட்டால், மாணவர்களுக்கு மலிவான விலையில் புத்தகங்களை அச்சடித்துக் கொடுப்பது. முதல் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்ப் புத்தகம் அச்சடித்து இருக்கிறார்கள். அந்தப் புத்தகத் தின் விலை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 80 பைசா. அதற்குப் பிறகு இவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 1979 ஆம் ஆண்டு 1 ரூபாய் 10 காசாக மாற்றப்பட்டது. ஆனால் தலைவ ரவர்களே, உங்களிடத்திலே காட்டுகிறேன், இந்தப் புத்தகத்திலே அழகான ஒரு கிளியினுடைய படம் போடப்பட்டிருக்கிறது.

இது முதல் வகுப்புத் தமிழ்ப் புத்தகம். ஆனால் இந்த ஆண்டு என்ன செய்கிறார்கள்? இதே புத்தகம் 2 ரூபாய் 20 காசுக்கு — அது இன்னும் வெளியே வரவில்லை.

இதிலே ஒரு விசித்திரம். முதல் வகுப்பு மாணவர்கள் சின்னக் குழந்தைகள். அதன் கையிலே புத்தகம் கொடுத்தால் ஆசையாகப் பார்ப்பது கிளி. (ஒரு புத்தகத்தைக் காண்பித்து) இதிலே பாருங்கள், 'ஆ' என்று வாயைப் பிளந்துகொண்டு சிங்கம் இருக்கிறது. (குறுக்கீடு) இதைப் பையன் படிப்பானா? தூக்கிப் போட்டு ஓடிப் போய் விடுவான். (குறுக்கீடு) ஏதோ ஒன்று புலி. நான் கேட்கிறேன்.............

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1—வது வகுப்பிலேயே இதை ஒழுங்காகக் காட்டியிருந்தால்; மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இந்தத் தவறைச் செய்திருக்க மாட்டார்.

திரு. துரைமுருகன் : 1—வதிலிருந்து எம். ஏ. வரையில் ஒழுங்காகத்தான் படித்து வந்திருக்கிறேன். நான் கேட்கிற கேள்வி, மாணவர்களுக்கு முதல் வகுப்பிலே, சின்னக் குழந்தைகளுக்கு, 5 வயது, 4 வயதிலே படிக்கிற குழந்தைகளுக்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்தால், கிளி, பறவை, என்று போட்டுக் கொடுத்தால் பார்க்கும். இப்படி முதலமைச்சர் சொன்னதைப் போல் இது புலி வாயைத் திறந்து கொண்டிருப்பதைப் போல் அட்டைப் படத்தைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாணவர்களை 'ஸூ'வுக்கு எதற்காக அழைத்துப் போகிறார்கள்? இந்த மாதிரி மிருகங்களைப் பார்ப்பதற்காகத்தான். அதைப் புத்தகத்திலே போட்டிருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன் : முன்பு விலை ரூ. 1—10; இப்பொழுது ரூ. 2—20—இரண்டு மடங்காகியிருக்கிறது. இந்நிறுவனம் எதற்காக துவக்கப்பட்டது? மலிவு விலையிலே புத்தகங்களைக் கொடுப்பதற்காக. ஆனால், 0—80 காசிலிருந்து ரூ. 2—20 காசுக்குப் போயிருக்கிறது. நீங்கள் சொல்லலாம், பேப்பர் விலை ஏறி இருக்கும், பிரிண்டிங் சார்ஜ் ஏறி இருக்கும், என்று. ஆனால் அது கிடையாது. என்ன காரணம் தெரியுமா? அன்னிய நாட்டுப் பேப்பரிலே, இந்தோனேஷியா நாட்டுப் பேப்பரிலே அந்தப் புத்தகத்தை அச்சடித்திருக்கிறார்கள். இந்தோனேஷியாவிலிருந்து ஏன் பேப்பர் வாங்கினார்கள்? நம்நாட்டிலே இல்லையா என்றால், மத்திய அரசு அப்படிப்





பட்ட நல்ல காரியத்திற்கு மலிவு விலையிலே ஏராளமான காகிதத்தை நமக்கு சப்ளை செய்கிறது. அப்படி ஸ்டாக் நம்மிடம் இல்லையா? நிறைய ஸ்டாக் இருக்கிறது. அப்படி இருந்த பிறகும் இந்த வெளிநாட்டுப் பேப்பரை எதற்காக வாங்கினார்கள்? நேராகவே வாங்கினார்களா ? கிடையாது. இந்துஸ்தான் பேப்பர் கம்பெனி மூலம் வாங்குகிறார்கள். எவ்வளவு பேப்பர் வாங்கினார்கள்? 60 ஜி. எஸ்.—600 டன் வாங்கியிருக்கிறார்கள். ராயல் சைஸ் என்பது 300 டன் வாங்கியிருக்கிறார்கள். அந்த 60 ஜி. எஸ். என்கிற பேப்பரின் 1 டன் விலை 8,050 ஆக, 600 டன்னுக்கு ரூ. 51 இலட்சம். ராயல் சைஸ் 300 டன்னுக்கு ரூ. 25 இலட்சம் ஆக, ரூ. 76 இலட்சம் கொடுத்து இந்தோனேஷியா பேப்பரை வாங்கி, அச்சடித்து, முதல் வகுப்பு மாணவனுக்கு பாடப் புத்தகத்தை ரூ. 2—20 காசுக்குத் தருவானேன். அதே நம்முடைய நாட்டுப் பேப்பரை வாங்கியிருந்தால் ரூ. 30 இலட்சம் தான் ஆகியிருக்கும். அதிகமாக, இந்த நிறுவனம் கொடுத்திருப்பது ரூ. 45 இலட்சம். நான் கேட்பது இதுதான். நம் நாட்டிலே பேப்பர் இருக்கிறது, ஸ்டாக் இருக்கிறது. இவ்வளவு இருந்ததற்குப் பிறகு அன்னிய நாட்டுப் பேப்பரை வாங்கி ரூ. 45 இலட்சம் பணத்தை விரயம் செய்வானேன். அதனாலே என்ன நடந்தது? அந்த இந்துஸ்தான் பேப்பர் கம்பெனிக்கும் அவர்களுக்கும் இருந்த நிலை என்ன? அதை ஊழல் என்பதா? ஊதாரிச் செலவு என்பதா? தெரியாத்தனம் என்பதா? என்ன பெயரிட்டு அழைப்பீர்களோ, உங்களுக்கு ஏற்புடையதை வைத்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்கிறேன். இவ்வளவு செலவு செய்து அச்சடித்தார்களே எவ்வளவு புத்தகத்தை ......

* * *

(மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அதிகமான நேரம் எடுத்துக் கொண்டீர்கள். 10 நிமிடம் என்று சொன்னேன், கூட ஒரு 5 நிமிடம் கொடுத்தேன். இன்னும் 10 பேர் பேசவேண்டியிருக்கிறது. 1 மணிக்குள்ளே முடிக்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : கிளைமாக்ஸ் சீனே இப்பொழுதுதான் வருகிறது. நீங்கள் நேரமில்லை என்றால் என்ன செய்வது? எக்ஸ்பிரஸ் வேகத்திலே சொல்லிவிடுகிறேன். ஏற்கனவே விற்பனை 11,88,000. ஆனால் இந்த ஆண்டு முதல் வகுப்புப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 22,81,000 அச்சடித்து வெளியான புத்தகம் 31 இலட்சம். ஏன் அச்சடிக்க வேண்டும்? மாணவர்களினுடைய எண்ணிக்கை 22 இலட்சம். நீங்களே சொல்லுங்கள். ........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மற்றவர்கள் பேசவேண்டும், 10 பேர் பேச வேண்டியிருக்கிறது. இதோடு நிறுத்தி விடுங்கள். திரு. குப்புசாமி.

திரு. துரைமுருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * *

திரு. செ. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். திரு. துரைமுருகன் 20 நிமிடம் பேசியாயிற்று.

திரு. துரைமுருகன் : நான் முடிக்கவில்லை. பாதியிலே இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது.

திரு. துரைமுருகன் : நான் ஒருவன் தான் எங்கள் கட்சியில் பேசுகிறேன்.

[முற்பகல் 10-30.]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துரைமுருகன் அவர்களே நான் சொல்வதைக் கேளுங்கள். ஆரம்பத்திலேயே உங்களுக்கு 10 நிமிடம் கேட்டீர்கள். இப்பொழுது நீங்கள் 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. அடுத்தவர், திரு. குப்புசாமி அவர்களைப் பேச அழைத்தாகிவிட்டது.

திரு. துரைமுருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் சொல்வதைக் கேளுங்கள். எல்லோருக்கும் டைம் வேண்டும். உங்கள் டைம் ஆகிவிட்டது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அவர்களுடைய பேச்சின் முடிவுரையில் * * * என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. துரைமுருகன்: (குறுக்கீடு).

மாண்யுமிகு பேரவைத் துணைத் தலைவர்
(குறுக்கீடு)

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிற போது அதிலே ஏதோ மாற்றம் ஏற்படுகிறது என்றால், ஒரு அமைச்சர் எழுந்து ஒரு ஒழுங்குப் பிரச்னை கேட்டபோது அவரைப் பார்த்து * * * என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் கேட்டால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும். குறுக்கீடு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களை அப்படிச் சொல்வது தவறு. * * * என்று சொல்லக் கூடாது. சுமுகமாக நடந்து வரும் சபையை இடையூறு செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு. துரைமுருகன்: நான் உங்களுக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். நான் ஒரு குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டு வருகிறேன் * * *
அதை முழுவதும் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். தயவு செய்து இதில் கௌரவப் பிரச்னை பார்க்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் கௌரவ பிரச்னை பார்க்கவில்லை.

திரு. துரைமுருகன் : உங்களிடத்தில் இரண்டு நிமிடம் மேலும் பேசுவதற்கு அனுமதியுங்கள் என்று கேட்பதற்கு எதிர்க் கட்சி உறுப்பினராக உள்ள எனக்கு உரிமை இருக்கிறது. * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது முறை அல்ல

திரு. துரைமுருகன் : அன்றைக்கு திரு. உமாநாத் அவர்களுக்குக் கொடுக்கவில்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வற்புறுத்தி நேரம் வாங்குவது சரியல்ல. நானாகக் கொடுத்தால் தான் சரியாக இருக்கும் (குறுக்கீடு)

---

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது-

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பில் நான் குறுக்கிடுவதாக தயவுசெய்து எடுத்துக் கொள்ள வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கூறிக்கொண்டு வந்தார். ஆனால் அந்தக் குற்றச்சாட்டை பாதியிலே தான் நான் நிறுத்தி இருக்கிறேன் என்று குறிப்பிடுகிறார். இப்போது அவரைப் பேச அனுமதிக்கவில்லையென்றால், ஏதோ குற்றச்சாட்டுகள் சொல்வதற்கு தாங்கள் அனுமதிக்கவில்லை என்று கூட பொருளாகிவிடும். ஆகவே நான் தங்களைக் கேட்டுக்கொள்வது அந்தக் குற்றச்சாட்டு என்று அவர் கருதுகிற அந்த ஒரு பாயிண்டை மட்டும் முடிக்க அவருக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சரி அவர் அந்த பாயிண்டை சொல்லி முடிக்கட்டும். பேசும்போது சுமுகமாகப் பேசவேண்டும். ஏற்கனவே அவர் கூறிய * என்ற வார்த்தை அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. துரைமுருகன் : 3½ இலட்சம் புத்தகங்கள் முதல் வகுப்பு மாணவர்களுக்கு என அச்சடித்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு முதல் வகுப்பு படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 22 லட்சத்து 81 ஆயிரம். ஆனால் அடித்த புத்தகங்களோ 3 லட்சம். இதன் காரணமாக 10 லட்சம் புத்தகங்கள் பழைய புத்தகக் கடைக்குப் போய் இருக்கின்றன. இப்படி பல்வேறு புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தயவு செய்து நீங்கள் திரும்பவும் அந்தப் புள்ளி விவரங்களைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

திரு துரைமுருகன் : 3½ இலட்சம் புத்தகங்கள் முதல் வகுப்பு மாணவர்களுக்கு என அச்சடித்து இருக்கிறார்கள், இந்த ஆண்டு முதல் வகுப்பு படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 22 லட்சத்து 81 ஆயிரம், ஆனால் அடித்த புத்தகங்களோ 3 லட்சம. இதன் காரணமாக 10 லட்சம் புத்தகங்கள் பழைய புத்தகக் கடைக்குப் போய் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 22 லட்சத்து 81 ஆயிரம் என்று சொல்கிறார்கள். ஆனால் அச்சடித்த புத்தகங்கள் 3½ லட்சம் என்று சொல்கிறார்கள். எப்படி 10 லட்சம் புத்தகங்கள் வீணாகும் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் கொடுத்து இருக்கிற புள்ளிவிவரங்கள் தவறாக இருக்கிறது.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. துரைமுருகன் : ஐ ஆம் சாரி. நான் அவசரமாகப் படிக்கிற வேகத்தில் தவறுதலாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்று சொல்கிற நீங்களே உட்கார்ந்து கொண்டு பேசுகிறீர்கள்.

திரு. துரைமுருகன் : ஒரு வேகத்தில் 32 லட்சம் என்பதை 3½ இலட்சம் என்று சொல்லியிருக்கிறேன். அது ஒரு மிகப் பெரிய தவறுதலாக எண்ண வேண்டாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கரெக்டாகச் சொல்லுங்கள். நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

(முற்பகல் 10-40)

திரு. துரைமுருகன் : இந்த ஆண்டு முதல் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை அரசு கணக்குப்படி 22,81,000 ஆனால் அச்சடித்த புத்தகம் 32.5 இலட்சம். ஆகையால் வீணான புத்தகம் சுமார் 10 இலட்சம். அதனுடைய மதிப்பு சுமார் 22 இலட்சம் ஆகும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது அவர் சொன்ன கணக்கை வைத்துத்தான் நான் பேச வேண்டியிருக்கிறது. அவர்கள் முதலிலே சொன்ன மாதிரி 3.5 இலட்சம் என்றால் வீணாவதற்கு இடமில்லை. இப்போது 32.5 இலட்சம் என்கிறார். ஒன்றாவது படிக்கும் மாணவர்களுக்கு வருஷத்திற்கு ஒரு புத்தகம்தான் வாங்குவார்கள் என்கின்ற கணக்கு தப்பு. அநேகமாக 3 மாதத்திற்கு ஒரு புத்தகம் வாங்குவார்கள். ஏனென்றால் குழந்தைகள் பயன்படுத்தும் போது கிழிந்து போய்விடும் என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே, முதல் வகுப்பு மாணவன் வருஷத்திற்கு ஒரு புத்தகம்தான் வாங்குவான் என்ற அடிப்படையிலே கணக்கு சொல்வது சரியல்ல.

திரு. துரைமுருகன் : நீங்கள் அந்தக் காரணத்தைச் சொல்வீர்கள் என்று தெரியும். நான் ஒரு கணக்கைச் சொன்னேன் அதுமட்டுமல்ல. 1980 ஆம் ஆண்டு கணக்குப்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிரசாரம் 6-வது 3-வது வகுப்பு மாணவர்களுக்கு அச்சிடப்பட்ட புத்தகங்களில் 6 இலட்சம் புத்தகங்கள்—பழைய புத்தகங்கள் சேஷசாயி கம்பெனிக்கு சுமார் 30,000 ரூபாய்க்கு ஏற்றி அனுப்பி விட்டார்கள். அதே மாதிரி இந்த ஆண்டு, 1981 ஆம் ஆண்டு வீணான புத்தகங்கள் — ஒன்றாவது தமிழ் புத்தகம் மட்டுமல்ல 2-வது தமிழ் புத்தகம், 3-வது தமிழ் புத்தகம் என்று எடுத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட இந்த ஆண்டு மட்டும் (குறுக்கீடுகள்) 2,75,000 ரூபாய் பெறுமானமுள்ள புத்தகம் சேஷசாயி கம்பெனிக்கு சில ஆயிரம் ரூபாய்க்கு போயிருக்கிறது. (மணியடிக்கப் பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

தி. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக் களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற வீடுகளுக்கு வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள் நம் முடைய புரட்சித் தலைவரவர்கள். அதைத் தொடர்ந்து வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தை செயல் படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது இந்த புரட்சித் தலைவர் அரசு. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரி வித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்; நன்றி தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த துணை நிதிநிலை அறிக்கையிலே பார்க்கிறபோது இங்கே இருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு கடனை ரத்து செய்ய, அவர்கள் சிரமம் இல்லாத வகையில் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குவதால் ஏற்படுகின்ற இழப்புக்கு ஈடு செய்ய இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத் திலும் இல்லாத அளவுக்கு தமிழக மக்களுக்கு குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த அரசு செய்துவருகிற சாதனைகளை இந்த நாட்டு மக்கள் அனைவருமே பாராட்டு வார்கள் என்பதில் சந்தேகமில்லை. நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டினாலும் இங்கே இருக்கிற ஒரு சிலர் "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பதைப் போல இந்த அரசை நினைத்துக் கொண்டு வயிற்றெரிச்சலோடு இருப்பதை தமிழக மக்களால் புரிந்து கொள்ள முடியாமல் இல்லை. அதே நேரத்தில் இந்த துணை நிதிநிலை அறிக்கையில் மதிப்பிற்குரிய நாவலர், நிதி அமைச்சரவர்கள் இங்கே 42 கோடி ரூபாயை சிறு விவசாயிகளுக்கு ரத்து செய்துவிட்டு, அவர்கள் வங்கியிலே வாங்கிய கடனுக்கு ஈடுகட்டுகின்ற வகையில் 42 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன்.





அதோடு ஏற்கெனவே முறையாக, ஒழுங்காக வாங்கிய கடனைச் செலுத்திவிட்ட விவசாயிகள் மீண்டும் கடன் பெறுவதற்கு, அவர்களுக்கு கடன் கொடுக்கின்ற வகைக்காக 22·57 கோடி ரூபாய் இந்த துணை நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருப்பது பாராட்டுவதற்குரிய ஒரு செய்தியாகும்.

அத்துடன், தமிழகத்தில் மிக முக்கியமான பிரச்சனையாக இருப்பது குடிநீர் பிரச்சனை. இந்த குடிநீர் பிர்ச்சனையைத் தீர்ப்பதற்கு இதுவரை எந்த அரசும் செய்யாத அளவுக்கு புரட்சித் தலைவர் அரசு ஏராளமான திட்டங்களைத் தீட்டி, பட்டி தொட்டிகளில் எல்லாம் குடிநீர் கிடைக்கின்ற மிகப்பெரிய திட் டத்தைச் செயல்படுத்தி வருவதை தமிழக மக்கள் பாராட்டு கின்றனர். அதற்காக ஏற்கெனவே ஒதுக்கிய 16 கோடி ரூபா யுடன் இப்போது மீண்டும் 4 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கி யிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, பிற மாநிலங்களை விட தமிழகத்திலே மிகச் சிறப் பாகச் செயல்பட்டு வருகின்ற தன்னிறைவுத் திட்டத்திற்கு மேலும் 3·35 கோடி ரூபாய் ஒதுக்கி இன்று ஒவ்வொரு ஒன்றியங்களிலே யும் அந்தத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. அந்தத் தன் னிறைவுத் திட்டம் நல்ல பலனை அளிக்க வேண்டும் என்றும் நிதிப்பற்றாக்குறையினால் வாடக்கூடாது என்ற கருத்திற்கிணங்க 3·5 கோடி ரூபாயை ஒதுக்கி அந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுகிற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பிற மாநிலங்களாலும் மத்திய அரசிலே இருப்பவர்களாலும் கூட பாராட்டப்படுகின்ற வகை யிலே தமிழகத்திலே கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல் பட்டு வருகின்றது. மத்திய வேளாண்மைத் துறை துணை அமைச்சராக இருக்கின்ற ராம் பலேஷ்வரராம் அவர்கள் தமிழகத் தில் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டுவருவது பற்றி ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதி அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பு கிறேன். அவர்கள்,

Tamil Nadu has done well in some of the special programmes for rural construction.

என்று சொன்னார்கள். தமிழ்நாடு அரசு போட்டிருக்கின்ற பல கிராமப்புற மேம்பாட்டுக்கான சிறப்புமிக்க திட்டங்களில் செயல்பட்டு வருகின்றது, இந்த திட்டம் மிக நல்ல முறையில் என்று சொல்லி இருக்கிறார்கள். பாராட்டுக்குரிய ஒன்று இங்கே இருப்பவர்களுக்கு [illegible] இதை நாங்கள் சொன்னால் அமைச்சகத்திலே துணை வேளாண் வரலாம். ஆனால் மத்திய பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற மைத் துறை அமைச்சராகப்

[திரு. கே, குப்புசாமி] [1981 பிப்ரவரி 6

அமைச்சர் போன்றோர் இங்கே தமிழகத்தில் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகின்ற விதம்குறித்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல நன்மைகளை இந்த அரசு செய்து வருகின்ற வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் எதிர்க்கட்சியினர் ஏதாவது ஒரு பிரச்சினையை காரணமாக வைத்து விவசாயிகளைத் தூண்டிவிட்டு அவர்களைப் போராட்டங்களிலே ஈடுபடச் செய்வது என்ற நிலைமையோடு மட்டுமல்லாமல் அந்தப் போராட்டங்களிலே, வன்முறையைத் தூண்டுகின்ற வகையில் நாங்கள் செயல்பட மாட்டோம் என்று சொல்கின்ற பிரதான எதிர்க்கட்சியினர் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்ற அரசியல் நிலைமையைக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டை இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் அவர்கள் ஆட்சியிலே இருந்த போது விவசாயிகளுக்கென்று ஒரு சிறு சலுகை கூடச் செய்யாமல் அவர்களை விரோதிகள் போன்று நடத்தியவர்கள் இந்த அரசு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குச் சலுகை கொடுத்த நிலையில் இந்த அரசைப் பாராட்ட மனமின்றி விவசாயிகளைத் தூண்டி விட்டு இந்த அரசுக்கு எதிராக அவர்கள் செயல்படுகின்ற தன்மையினை அறிந்து எதிர்காலத்திலே சரியான பாடத்தை மக்கள் கற்பிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழக அரசு இங்கே போடுகின்ற பல திட்டங்களைப் பாராட்டுவதற்கு அவர்களுக்கு மனம் இல்லை என்றாலும் கூட பேசாமல் இருந்திருக்கலாம். தமிழக அரசு கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்று 3.5 கோடி, கடன் ரத்து என்ற வகையில் 42 கோடி, இப்படி பல்வேறு திட்டங்களின் மூலம் இன்றைக்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவில்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோது அவர் பேசிய பேச்சு அத்தனையையும் நான் பார்த்த பிறகு வெளியிட்டால் போதும் என்று பத்திரிகைகளைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த முழு விவரத்தையும் நான் பார்த்து அதிலே நீக்கப்பட வேண்டிய பகுதிகள் ஏதாவது இருக்கின்றதா என்பது அறிவிக்கின்ற வரையில் அதனை வெளியிட வேண்டாம்,



1981 பிப்ரவரி 6]

திரு. கே. குப்புசாமி : தலைவரவர்களே, தமிழக
அரசு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவுக்கு நன்மைகள்
அளிக்கின்ற வகையில் திட்டமிட்டு இந்த நிதியாண்டின் அறிக்கை
யிலே அறிவித்திருப்பதைப் பாராட்ட மனம் இல்லாவிட்டாலும்
பரவாயில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை
முருகன் அவர்கள் பேசுகின்றபோது தமிழக அரசு பணத்தை
வாரி வாரி இறைக்கின்றது என்று குறை கூறியிருக்கிறார்கள்.
அவ்வாறு குறை கூறியிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும்.

[முற்பகல் 10-50]

இங்கே இந்த அரசினுடைய நல்ல பல திட்டங்களை, நல்ல
இங்கே இந்த அரசினுடைய நல்ல பல திட்டங்களை, நல்ல
இங்கே இருப்பவர்கள் சிலர் பாராட்ட மனம்
செயல்களை இங்கே இருப்பவர்கள் சிலர் பாராட்ட மனம்
செயல்களை இங்கே 5 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்
இல்லாவிட்டாலும் கூட, 5 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்
இல்லாவிட்டாலும் கூட, மக்கள் புரட்சித் தலைவர் அவர்களைப்
கிற அமெரிக்க நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் அவர்களைப்
கிற அமெரிக்க நாட்டு செயல் திறனை வியந்து, ஏழை எளிய
பாராட்டி, அவருடைய செயல் திறனை வியந்து, ஏழை எளிய
பாராட்டி, அவருடைய மேம்படுத்தவே தன் வாழ்க்கையை
மக்களுடைய வாழ்க்கையை மேம்படுத்தவே தன் வாழ்க்கையை
மக்களுடைய வாழ்க்கையை என்று பாராட்டி, அங்கே அவர்
அர்ப்பணித்துக் கொண்டவர் என்று பாராட்டி, அங்கே அவர்
அர்ப்பணித்துக் கொண்டவர் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான்
களுக்கு டாக்டர் பட்டம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான்
களுக்கு டாக்டர் பட்டம் சொல்லிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடை
இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடை
இந்த நேரத்திலே அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசு
கிறேன். அதோடு அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசு
கிறேன். அதோடு பிரச்சினைகளை தீர்த்து தமிழக மக்களுடைய ஒரு
இருக்கிற பிரச்சினைகளை தீர்த்து தமிழக மக்களுடைய ஒரு
இருக்கிற வாழ்க்கைக்கு வழிகோலுகிற திட்டங்களைத்
நியாயமான வாழ்க்கைக்கு வழிகோலுகிற திட்டங்களைத்
நியாயமான கொண்டிருக்கிறது என்று.
தீட்டிக் கொண்டிருக்கிறது என்று.

இங்கே உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டது. அப்போது
இங்கே உலகத் தமிழ் அறிஞர்கள் பலரும் பாராட்டு
வருகை தந்திருந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அதனை
கிற வகையில் உலகத் தமிழ் மாநாடு பாராட்டியிருக்கிறபோது
உலகத் தமிழ் மக்கள் அனைவரும் பாராட்டியிருக்கிறபோது
உலகத் தமிழ் மக்கள் அனைவரும், ஏதோ இங்கே இருக்
அதனைப் பாராட்ட மனம் வராவிட்டாலும், ஏதோ இங்கே இருக்
அதனைப் பாராட்ட மறைக்கத்தான் உலகத் தமிழ் மாநாடு
கும் சில குற்றங்களை மறைக்கத்தான் உலகத் தமிழ் மாநாடு
கும் சில குற்றங்களை சொல்வது நிச்சயமாக எதிர்
நடத்தினார்கள் என்பதுபோல் சொல்வது நிச்சயமாக எதிர்
நடத்தினார்கள் என்பதுபோல் நல்ல நிலையையும் தராது என்
காலத்தில் அவர்களுக்கு எந்த நல்ல நிலையையும் தராது என்
காலத்தில் அவர்களுக்கு ஐயப்பாடும் இல்லை.
பதில் எங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை.

இங்கே பேசும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் திரா
இங்கே பேசும்போது அண்ணா திராவிட முன்னேற்றக்
விட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக்
விட முன்னேற்றக் தயவைப் பெறுவதற்காக பாடுபட்டுக்
கழகமும் பிரதமருடைய தயவைப் பெறுவதற்காக பாடுபட்டுக்
கழகமும் பிரதமருடைய குறிப்பிட்டுப் பேசினார்கள். அவ
கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். அவ
கொண்டிருக்கின்றன பெறுவதற்காகத்தான் போட்டி போடுகிறார்
ருடைய தயவைப் பெறுவதற்காகத்தான் போட்டி போடுகிறார்
ருடைய தயவைப் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்த
கள் என்று கூடக் குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்த
கள் என்று கூடக் தயவையோ ஆதரவையோ நாடியிருக்க
வரையில் யாருடைய தயவையோ ஆதரவையோ நாடியிருக்க
வரையில் யாருடைய என்பதைச் சொல்லிக் கொள்ளக்
வேண்டிய அவசியம் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ளக்
வேண்டிய அவசியம் இருந்தாலும் நியாயமான
கடமைப்பட்டிருக்கிறேன். யாராக இருந்தாலும் நியாயமான
கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கிறோம். எங்களுடைய
உறவை நாங்கள் வளர்க்க தயாராக இருக்கிறோம்.

உரிமையை விட்டுக் கொடுத்துவிட மாட்டோம். அப்படி விட்டுக் கொடுத்து உறவை வளர்க்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்பதையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அவருடைய பேச்சு ஆங்கிலப் பத்திரிக்கைகளில் மிக அழகாக வெளி வந்திருக்கிறது. அதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Doctor has experience in changing sex. But the Hon. Chief Minister seems to have perfected the art of the converting an autocrat into a democrat

ஆண்களை பெண்களாக டாக்டர்கள் மாற்றும் சிகிச்சையைப் பற்றி நாம் அறிவோம். ஆனால் ஒரு சர்வாதிகாரியை ஜனநாயகவாதியாக மாற்ற முயலுகிறார் நம்முடைய முதலமைச்சர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு ஜனநாயகவாதியை சர்வாதிகாரியாக மாற்றினால்தான் கவலைப்பட வேண்டும். அதற்காக தண்டிக்கவும் செய்யலாம். ஆனால் திரு. உமாநாத் அவர்கள் கூற்றை எடுத்துக் கொண்டால்,

The Hon. Chief Minister seems to have perfected the art of converting an autocrat into a democrat.

என்று சொல்லியிருக்கிறார். ஒரு சர்வாதிகாரியை ஜனநாயகவாதியாக மாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார். ஒரு சர்வாதிகாரியை ஜனநாயகவாதியாக மாற்றுவது நல்ல காரியம்தானே. அந்தச் செய்கையை யாவரும் ஒரு மனதாகப் பாராட்ட வேண்டுமே தவிர கண்டிக்க ஒன்றும் இல்லை. அந்த ஆற்றல் நம்முடைய முதலமைச்சருக்கு இருக்கிறது என்பதை மிக அழகாக எடுத்துக் காட்டியமைக்கு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சர்வாதிகாரிகளுக்கு என்றுமே துணை நிற்க வேண்டிய அவசியம் எங்களுக்குக் கிடையாது.

அதேபோல் இந்தி மொழியைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார். இந்தித் திணிப்பு என்பதில் "நாங்கள் எப்போதும் நீறுபூத்த நெருப்பாக இருப்போம்" என்று குறிப்பிட்டார். நான் இந்த அவைக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தி திணிப்பு எந்த முறையிலே வந்தாலும், திணிக்கப்பட்டாலும், நீறுபூத்த நெருப்பாக என்ன, எரிகின்ற நெருப்பாகவே நாங்கள் இருப்போம். நேரிடையாகவே எதிர்த்துப் போராட்டம் [illegible] என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதோடு நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அமைச்சர்கள் வீடு கட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். அவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசினால் ஒதுக்கப்படும் வீட்டை விட வசதி ஒன்றும் அதிகமானதல்ல அமைச்சர்கள் கட்டிக் கொள்ளும் வீடு என்று. அப்படி இதைவிட வசதி குறைந்த வீட்டைக் கட்டிக் கொள்வதில் ஏன் பொறாமைப் படுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அதோடு என் தொகுதி பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தில் பழனி வட்டம் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது தொழில்துறையில் பின்தங்கிய தொகுதியாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பல பகுதிகள் உள்ளன. அவற்றை (மணியடிக்கப்பெற்றது.) . . . . . . . . . .

* திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வறட்சியில் எங்களது சேலம் மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சேலம் மட்டுமல்ல, என்னுடைய தொகுதியைச் சுற்றிலுமுள்ள துறையூர், பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம் ஆகிய தாலுக்காக்களும் வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை நான் நேரில் கண்டேன். இங்குள்ள ஏழை விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் பிழைப்பிற்காக ஊர் ஊராக வேலை தேடி அலையும் வேதனையான நிலைமையினை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இப்படி தமிழ்நாட்டின் பச்சைத் தமிழ் மக்கள் ஏழ்மையிலும் வறுமையிலும் சிக்கித் தவிக்கின்றபோது, உலகத் தமிழ் மாநாட்டுக்கென இத்தனை கோடியைக் கொட்டி விழா கொண்டாடியிருக்கத் தேவையில்லை.

இந்தப் பணத்திற்கு கலைக்களஞ்சியப் பணியைத் தீவிரப் படுத்தி புதுப்பித்திருக்கலாம். நீதிமன்றங்களில் தமிழை அமுலாக்கியிருக்கலாம். ஏராளமான சிறந்த அயல் மொழி நூல்களை தமிழில் மொழிபெயர்த்திருக்கலாம். இந்த மாநாட்டின் நினைவாக 375 வட்டாரங்களிலும் நல்ல நூலகங்களை அமைத்திருக்கலாம். நகராட்சிகளிலுள்ள நூலகங்களுக்காவது சொந்தக் கட்டடங்களைக் கட்டி படிப்பக வசதியை மேம்படுத்தியிருக்கலாம்.

[திருமதி நா. இராமசாம்பாள்] [1981 பிப்ரவரி 6]

இதையெல்லாம் விடுத்து குட்டிச் சுவற்றில் நந்தியை எடுத்து வைத்தமாதிரி தலைகளை வைத்து கேலி செய்திருக்க வேண்டியதில்லை. ஆயிரம் ஏரிகளை தூர் எடுத்திருக்கலாம். குழந்தைகளுக்கு தமிழ் கான்வென்ட்டுகள் ஒரு ஆயிரம் ஏற்படுத்தியிருக்கலாம்.

வளமை குன்றி வறுமை அகலாத நிலைமையில் இந்த அரசு மக்களின் வரிப்பணத்தை இப்படி கேளிக்கைகளில் அழித்து அதிலே மகிழ்ச்சி காண்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுரையில் கழிப்பிடங்கள் ஏற்படுத்தியதையும் தமிழறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சேகரித்ததையும் பாராட்டுகிறேன். ஆனால் இதன் அருமை பெருமைகளை தமிழ் மக்கள் எளிதாக அனுபவிக்க இயலாமல் போகிறமாதிரி வேடிக்கை பார்க்கிற விழாவாக ஆக்கியமைக்காக என்னுடைய கண்டனத்தையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழின் பெருமையை பேசும் இந்த அரசு, நீதிமன்றங்களில் தமிழை இன்றுவரையிலும் கூட நடைமுறைப் படுத்தவில்லை. இப்படியிருக்கும்போது உயர்நீதிமன்ற நீதிபதியினுடைய மாறுதல் உத்திரவைக் கண்டித்திருப்பது வியப்பாக இருக்கிறது. அந்த நீதிபதி கேரளத்திற்குச் சென்றாலும் ஆங்கிலத்தில்தான் தீர்ப்புகளை எழுதப்போகின்றார். வக்கீல்களது வாதங்களும் ஆங்கிலத்தில்தான் அங்கும் இருக்கின்றன.

** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப்பற்றி இங்கே பேசக் கூடாது. வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. ஸ்டே இருக்கிறது. அந்த வாசகங்களை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: ** ** **
அதுசம்பந்தமாக இந்த அவையில் அதிகமாகவே பேசியிருக்கிறார்கள். ஆகவே இது ஒன்றும் புதிய கருத்தல்ல. ஆகவே எங்கள் தரப்பிலிருந்தும் அதுகுறித்துப் பேச வாய்ப்பு கொடுக்க வேண்டும். எங்கள் கருத்தையும் நாங்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அன்று பேசும்போது ஸ்டே வரவில்லை. இப்போது ஸ்டே வந்திருக்கிறது. ஆகவே இப்போது அதைப்பற்றிப் பேச வேண்டாம்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 பிப்ரவரி 6]

திரு. நா. சுந்தரராஜ்: அப்போதும் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருந்தது. ஸ்டேயும் இருந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஸ்டே இல்லை, அப்போது.

திரு. எல். இளையபெருமாள்: இதுபற்றி முன்பே பேசப்பட்டிருக்கிறது. எல்லா உறுப்பினர்களுக்கும் அதுபற்றி பேச உரிமையிருக்கிறபோது இப்போது பேசுகிற உறுப்பினருக்கு மட்டும் அந்த உரிமையைப் பறிக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்களின் பேச்சுக்கு உள்நோக்கம் கற்பிப்பதுபோல் இருக்கக்கூடாது.

(பார்வையாளர்கள் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பெற்றன.)

திருமதி நா. இராமசாம்பாள்: ஒரு தமிழ் ஆர்வம் நீதிபதி மாற்றல் உத்திரவில் சிக்கி தவறான திசை வழிகளில் சென்று தற்கொலை முயற்சியில் முடிந்திருப்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் முன்பிருந்த தோப்புத்துரவுகளோ வேலி அடைப்புகளோ இப்போது அழிந்துவிட்டன. ஊரின் ஓரம் காலியாக கிடந்த நிலங்கள் அருகில் உள்ளவர்களது அடங்கலில் முடங்கிவிட்டன.

[முற்பகல் 11-00].

குறிப்பாக பெண்களுக்கு கழிப்பிட வசதிகள் மிகவும் அரிதாகி
இருப்பதை இந்த மன்றத்தில் ஏற்கனவே நான் சுட்டிக்
காட்டி இருப்பதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.
ஆகவே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தலைவாசல் ஊராட்சி
ஒன்றியத்தில் பெண்களுக்காக ஒன்றைக் கட்டிக் கொடுக்க
வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மன்றாடிக்
கேட்டிருக்கிறேன். அதில் தீர்வு காண இயலவில்லை. தன்
னிறைவுத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் பெண்களுக்
கென ட்ரை லெட்ரின்களை போதுமான அளவில் அமைக்க
திட்டமிடுமாறு மீண்டும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் பொது உபயோகத்திற்கென ஃப்ளஷ் அவுட்
[illegible]ஸ்கள் அமைப்பதைக் கைவிட வேண்டும். ஏனெனில் இந்த
[illegible]கள் முழுவதும் நாளடைவில் பயனற்று விடுகின்றன.

[திருமதி தா. இராசாம்பாள்] [1981 பிப்ரவரி 6

ஆகவே, திறந்தவெளி ட்டை லெட்ரின்களை அமைத்தாலே போதுமானது. அதற்கேற்ப திட்டமிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். பாம்பே கக்கூசை விட இதில் செலவும் குறைவு. இதற்கான மாதிரி படம் மதிப்பீடு முதலியவற்றை நான் தயாரித்து வைத்திருக்கின்றேன். அதை இந்த அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

சென்னைக்கு குடிநீர் கொண்டுவரும் ஜால வித்தைகளில் ஒன்றாக காவிரி கட்டளைக் கால்வாய் திட்டம் ஒன்றை இந்த அரசு அறிமுகம் செய்திருக்கிறது. திறந்த கால்வாய்த் திட்டம் நிச்சயமாய் பயனளிக்காது என்பதை இந்த அரசுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். மேட்டூரிலிருந்தே இந்தக் குடிநீரை குழாய்களின் மூலம் சேலம், ஆத்தூர், உளுந்தூர் பேட்டை வழியாய் கொண்டுவர திட்டமிடுமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் கிராம, நகர்ப்பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு ஆண்டுதோறும் அதிகரித்து வருவதை இந்த அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். பணம் செலவிட்டாலும் தண்ணீர் கிடைப்பதில்லை என்கிற நிலைமையினைக் கருத்தில் கொண்டு, நிலத்தடி நீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு முதல் முக்கியத்துவம் அளிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிணறுகளை ஆழப்படுத்துவது, புதிய கிணறுகளைத் தோண்டுவது, தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களை வறட்சிப் பகுதிகளில் செய்வது முதலியவற்றுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு இந்த அரசு தீவிரமாய் சிந்தித்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக நீர் பிடிக்காத ஏரி ஆயக்கட்டு நன்செய் நிலங்களை புன்செய் நிலங்களாக மாற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப்பற்றி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். விநியோகித்த அளவிற்கு உற்பத்தியில் இந்த அரசும் இதற்கு முன்பிருந்த அரசும் போதிய கவனம் செலுத்தவில்லை. சரியான அழுத்தத்தில் மின் விநியோகம் இல்லாமல் ஏராளமான விவசாய பம்பு செட்டுக்களில் அடிக்கடி காயில் தீய்வதை இந்த அரசு உணர்ந்து அதனைக் கட்டுப்படுத்த தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரே கிணற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்புகள் வழங்குவது, தண்ணீர் இல்லாத கிணற்றுக்கு மின் இணைப்பு தருவது, அருகருகே நெருக்கமாக மின் இணைப்புக்களைக் கொடுப்பது, கம்பங்களுக்கு அடியில் வெட்டப்படுகிற கிணறு



1981 பிப்ரவரி 6] [திருமதி தா. இராசாம்பாள்]

களுக்கு மின் இணைப்பு கொடுப்பது போன்ற நடவடிக்கைகளைக் கைவிட்டு மின் விநியோகத்தில் அறிவு பூர்வமாய் சிந்தித்து செயல்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு நல்ல பல காரியங்களைச் செய்திருப்பதாக சகோதர சட்டமன்ற உறுப்பினர்கள், தாழ்த்தப்பட்ட மக்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கூறினார்கள். அதை நான் வரவேற்றாலும் இன்னும் பல குறைகள் இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்ட மறந்து விட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பம்பு செட் மின் கட்டண வசூலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய ஆலோசனைகளை ஏற்கிறேன். ஆனால் யூனிட்டுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பில் போட வேண்டுமென்றும் மீட்டர் கட்டணத்தையும் லெவி கட்டணத்தையும் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மாட்டுத் தீவனப் பஞ்சம் எழுந்திருக்கிறது. தஞ்சாவூரிலிருந்து வைக்கோல்களை அழுத்த இயந்திரங்கள் மூலம் பாக்கிங் செய்து வறட்சிப் பகுதிகளுக்கு எளிதாக விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

*திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதி நிலை அறிக்கையினை நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அவை முன் வைத்திருப்பதன் பேரில் அதைப் பாராட்டிப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக அகில இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத ஒன்றினை தமிழகத்திலே டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் செய்கின்ற முறையிலே சிறிய விவசாயிகளுக்கு ரூ. 42 கோடி வழி வகைகள் பணமாகக் கொடுக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டுகிறேன். மேலும் அரசு 22.57 கோடி ரூபாய் முன்பணம் அவர்களுக்கு அளித்துள்ளதாக அறிகிறேன். ஆனால் கிராமங்களிலே உள்ள கூட்டுறவுச்சங்கங்களிலே முறையாக கடன் சலுகைகளைக் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு அறிவுரை கூறி கடன் சலுகைகளை சீக்கிரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம் 60-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிலே துவக்கப்பட்டு நல்லபடியாகச் செயல்படுகிறது. குறிப்பாக சுதந்திரம் கிடைத்து 34 ஆண்டுகள் ஆகியும் இன்னும்

[திரு. ஈா. கு. பெருமாள்] [1981 பிப்ரவரி 6

கிராமங்களிலே உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கவில்லை என்ற நிலைமையைப் போக்குகிற வகையிலேயும் அடிப்படை வசதிகளைச் செய்யக்கூடிய வகையிலேயும் அறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவுகளை நனவாக்கக்கூடிய முறையிலேயும் இந்தத் தன்னிறைவுத் திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்குக் கீழ் உதவிப் பொறியாளர், உதவிக் கோட்டப் பொறியாளர் பணியாற்றுகிறார்கள். பொறியாளரைவிட பி.டி.ஓ. ரேங்க் குறைவானதென்று கருதி ஒருவருக்கொருவர் சுமுகமான உறவில்லாமல் பணியாற்றுகிற நிலைமை இருக்கிறது. நீ பெரிதா நான் பெரிதா என்று பார்க்கக் கூடிய நிலைமை இருப்பதால் திட்ட வேலைகள் ஒழுங்காக நடைபெற முடியாத நிலை இருக்கிறது. காலதாமதமாக நடைபெறுகின்றன. ஓராண்டிற்குள் முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே பெருவழித் துறையிலே தேசிய நெடுஞ்சாலை, கிராமப்புறச் சாலை ஆய்வுகள் செய்யும் பிரிவு என்று இருப்பதைப் போல தன்னிறைவுத் திட்டம் இந்த ஆண்டு 100-க்கு மேல் ஆரம்பிக்கப்பட இருப்பதால் தன்னிறைவுத் திட்டத்திற்கு தனியாக ஒரு சி.இ., எஸ்.இ., டி. இ. இ. போன்றோரை டெப்யூடேஷனிலே கொடுத்து பிரிவு அமைத்துச் செயல்பட்டால்தான் நல்ல முறையிலே முழுமையாகச் செயல்பட ஏதுவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக குடிநீர் வழங்குவதற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே என்னுடைய தொகுதியிலே உள்ள புதூர், விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் ஆகிய 3 ஒன்றியங்கள் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டு ஒழுங்காக வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதியிலே இன்னும் சில கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதற்கான வேலைகளை விரைவிலே செய்வதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட கிராமங்களிலே உள்ள மக்களுக்கு சாலை வசதிகள், பாலவசதிகள் பள்ளிக் கட்டிட வசதிகள் இல்லாத நிலைமை இருக்கிறது. தாமதமாக வேலைகள் நடைபெறுவதைப் போக்குகிற முறையிலே தொடர்ந்து அந்த வேலைகளைச் சீக்கிரத்திலே செய்து கொடுக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 6] [திரு. ஈா. கு. பெருமாள்]

பி. டி. ராசன் கால்வாய் அமைக்க ரூபாய் 44.12 இலட்சம் ஒதுக்கீடு செய்து 1,341 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் என்று குறிப்பிட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே என்னுடைய தொகுதியிலே வானம் பார்த்த பூமியில் வாழுகின்ற சிறு விவசாயிகள் பயன்பெறும் அளவுக்கு நெல்மேனி அணைக்கட்டுத் திட்டம் தீட்டப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அரசு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. 2 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. எனவே வருகிற நிதிநிலை அறிக்கையிலே அந்த அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் சாத்தூர் தொகுதி, விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள சுமார் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் புன்செய் நிலம் நஞ்சை நிலமாக மாற வழிவகை செய்யும். ஆகவே அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே விளாத்திகுளம் பிற்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுவிட்டது. ஒரு ஆண்டுக் காலமாக கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படவில்லை. அங்கே 300 கிராமங்களிலே உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-10].

அந்த விவசாயிகளுக்கு இந்த ஆண்டிலே மழைப் பாசனத்தால் வேளாண்மை கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் இந்த ஆண்டில் தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. எனவே அந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவிக்குமாறு நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே நான் சட்டமன்ற உறுப்பினராக வந்ததிலேயிருந்து பலமுறை சட்டமன்றக் கூட்டத்திலேயும், வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் வாயிலாகவும் சொல்லியும் இருக்கிறேன்; அது பற்றி அரசுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அதை கிராமப் பகுதிகளை மேம்பாடு செய்யும் திட்டத்திலேயாவது சேர்த்துக் கொண்டு, இந்த ஆண்டிலேயே அங்கே கூட்டுறவு நூற்பாலையைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்காக நம்முடைய அரசின் மூலம் சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு 80-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. முன்பு திராவிட முன்னேற்றக் கழக

ஆட்சியின்பொழுது 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு 17 கூட்டுறவுச் சங்கங்கள் தான் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது. ஆனால் இன்றைய தினம் புரட்சித் தலைவாவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஏறக்குறைய 80-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, கிட்டத் தட்ட 1 இலட்சத்து 60 ஆயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள்.

அப்படியிருந்தும் கூட, லைசென்ஸ் பெறுவதற்கான முறைகளில் இருக்கக் கூடிய கஷ்டங்களின் காரணமாக குறிப்பாக மதுரை மாவட்டம், தஞ்சை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் இருக்கின்றவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சிறிய தொழில்கள் தொடங்குவதற்கு குறிப்பிட்ட அளவு 10 அடி சுற்றளவு காலியாக இருக்க வேண்டுமென்று அரசின் உத்தரவு இருக்கிறது. இதைப்பற்றி வலியுறுத்தப்பட்டும் கூட அந்த உத்தரவு நீக்கப்படாத காரணத்தால் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்ட பகுதிகளில் கூட தொழில்களைத் துவங்குவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். தஞ்சை, மாயவரம் போன்ற பகுதிகளிலே தொழில்களை ஆரம்பிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, தொழில் துறையிலே ரூரல் இன்டஸ்ட்ரீஸ்-க்கு என்று டைரக்டர் பதவியை ஏற்படுத்தி கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் தொழில் மையங்கள் மூலம் துவக்கி, சிறு தொழில்களைப் பெருக்குமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது தமிழ்நாடு அரசினுடைய துணை மதிப்பீடு ரூபாய் 50·41 கோடி ஒதுக்கியதற்கு தமிழ்நாடு அரசு இன்றைக்கு அனுமதி கோரி உள்ள இந்தக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் இங்கே பேசவிருக்கிறேன். இன்றையதினம் இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது விவசாயிகள் கடன்களைத் தள்ளுபடி செய்ய 22·57 கோடி ரூபாயும், குடிநீருக்காக 4 கோடி ரூபாயும், தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 3·35 கோடி ரூபாயும், பொது சுகாதாரத்திற்காக 3·11 கோடி ரூபாயும், பி.டி. இராஜன் கால்வாய், சென்னை குமரி கடலோரப்பகுதி ஆகியவைகளுக்காக 2·14 கோடி ரூபாய், லாரி நிலையம் கட்ட 3·34 கோடி ரூபாய், போக்குவரத்து நிறுவனங்களைச் சீர் செய்ய 10·81 கோடி ரூபாய் என்று இப்படிப் பல்வேறு முக்கிய துறைகளுக்காக அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த நேரத்தில் நமது தமிழகத்தினுடைய இன்றைய நிலையைக் கணக்கில் கொள்ள வேண்டும். ஏனென்றால் என்றுமில்லாத அளவிற்கு இன்றைக்கு தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டுள்ளது. தஞ்சை போன்ற பகுதிகள்கூட





இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றால் மற்ற மாவட்டங்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. எங்கு பார்த்தாலும் விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்கள் இன்றைக்குக் காய்ந்து தீய்ந்து விட்டன. அதுமட்டுமல்லாமல், ஒரு பகுதி நிலங்களில் சாகுபடியே செய்யாமல் தரிசாகப் போடப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிலையைக் கணக்கில் கொண்டு பார்க்கும்பொழுது இந்த ஆண்டு நிச்சயமாகப் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய வறட்சிப் பகுதிகளை உடனடியாக வறட்சிப் பிரதேசமாக அறிவித்து, அவர்கள் 1980–81 ஆம் ஆண்டில் வாங்கியிருக்கக்கூடிய பயிர்க் கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், ஏற்கனவே கெடுபிடி வசூலில் இருக்கும் பழைய நிலுவைகளையும் சிறுவிவசாயிகளிடமிருந்து இன்னும் இரண்டாண்டுகளுக்கு நிறுத்திவைக்க வேண்டுமென்றும் நான் வற்புறுத்துகிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு கொள்முதல் லெவி முறையை அறிவித்திருக்கிறார்கள். அந்த லெவியை தனியார் வியாபாரிகளிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னாலே சரித்திரம் எல்லாம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நேரடியாகக் கொள்முதல் செய்து போதுமான ஸ்டாக்கைக் கையிலே வைத்துக் கொண்டால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியை, இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கு பொதுமக்களுக்கு ஓரளவுக்கு நியாயமான விலையிலே உணவு, பொருட்களை சப்ளை செய்ய முடியும். ஆகவே, அந்தக் கொள்முதலை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கார்டுகள் கொடுத்து பல ஆண்டுகள் ஆகிவிட்டது. அந்தக் குடும்பக் கார்டுகள் இல்லாமல், கிராமங்களில், நகரங்களில், எங்கு பார்த்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தால், எம்.எல்.ஏ. க்களைச் சுற்றி முற்றுகையிடுகிறார்கள். ஆகவே, இந்தக் குடும்பக் கார்டுகள் வழங்குவதற்காக அரசு உடனே பரிசீலித்து, அந்த மக்களுக்கு புதிய கார்டுகள் கொடுக்கவேண்டும்.

அதேபோல், கைத்தறி விவசாயிகள் பிரச்சினை. மாஸ்டர் வீவர்கள் கதவடைப்பு செய்துவிட்ட காரணத்தால் பல இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மதுரை மாவட்டத்திலே இன்றைக்கு 50,000-க்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் பிழைப்பதற்கு வழியில்லாமல் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. என். பழனிவேல்[ [1981 பிப்ரவரி 6

வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள்; அவர்களை பர்மனென்ட் ஆக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பழனி நகராட்சியில் இருக்கிற மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் இல்லாமல் இருந்து கொண்டு இருக்கிறது. மாணவர் களுக்குப் பரிட்சையும் வரப்போகிறது. ஆசிரியர் இல்லாத நிலையில் அவர்கள் எப்படிப் பரிட்சையில் பாஸ் செய்ய முடியும்? ரசாயனத்திற்கு, பௌதிகத்திற்கு ஆசிரியர்கள் இல்லை. உடனடியாக ஆசிரியர்களை அந்தப் பாடங் களுக்கு நியமிக்க வேண்டும்.

திண்டுக்கல், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய 4 தொகுதிகளுக்கும் ஒரேயொரு அரிஜன் வெல்பேர் தாசில்தார் தான் இருக்கிறார். அவர் எங்கே இருக்கிறார் என்று எங்களுக்கே தெரியவில்லை. அவரைப் போய்ப் பார்க்கும் போதெல்லாம் கேம்ப் போய் இருக்கிறார் என்று சொல்லுகி றார்கள். எல்லாத் தொகுதிகளுக்கும் வருவதற்கு அவருக்குப் போதிய வாகன வசதி இல்லை. எனவே, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு அரிஜன் வெல்பேர் தாசில்தாரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனி தொகுதியை வறட்சிப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டும். இதைப் பற்றி ஏற்கனவே ஒட்டன் சத்திரம் எம்.எல்.ஏ. திரு. குப்புசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையே நானும் வலியுறுத்துகிறேன். பழனியை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81-ம் வருட துணை நிதிநிலை அறிக்கையில் பல்வேறு நல்ல பல திட்டங்களுக்கு ரூ. 50.41 கோடி அரசு நிதி உதவி அளித்திருப்பதுபற்றி என்னுடைய சார்பாகவும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி எந்தவித தொழில் நிலையமும் இல்லாத பகுதியாகும். என்னுடைய தொகுதியில் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு விளைவதால் எனது தொகுதியில் மரவள்ளிக் கிழங்கில் இருந்து ஆல்கஹால் தயாரிக்கும் தொழிலகம் ஒன்று ஏற் படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 6] [திரு. சி. சிவப்பிரகாசம்]

ஒரு துணை நூற்பாலையையும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வசதிக்காக ரூ. 16 கோடியிலிருந்து அதிகமாக்கி 20 கோடியாக ஆக்கியதைப் பெரிதும் வரவேற்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டிற்காக நிரந்தர ஆக்கப்பணி செல வினங்களுக்காக 3.11 கோடி ரூபாய், மதுரை நகரை அழகுபடுத்த சோடியம் விளக்குப் போட 12.25 இலட்சம் ரூபாய் என்று ஒதுக் கியிருப்பதையும் நான் பெரிதும் வரவேற்கிறேன்..

சோடியம் விளக்கு போடும் திட்டத்தை அரசு கிராமங் களுக்கும் விஸ்தரிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பெட்ரோலியப் பொருள்களின் விலையேற்றத்தால் போக்கு வரத்து நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள நிதிநிலைப் பற்றாக் குறையைப் போக்க அரசு 10.81 கோடி ரூபாய் ஒதுக்கி, கிராம மக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுத்து வரும் போக்குவரத்துக் கழகங்களைச் சீரமைத்துக் கொள்வதற்குப் பெரிதும் உதவி செய்து இருப்பதை நான் வரவேற்கிறேன்.

மலைவாழ் மக்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்க 13.75 கோடி நிதி ஒதுக்கி இந்தத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டம் என்று இருந்த போதிலும்—முதல் ஆண்டிலேயே இந்தத் தொகை ஒதுக்கியிருப்பதைப் பெரிதும் வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கொல்லிமலை செல்லும் பாதை 70 ஹேர்பின் வளைவுகளைக் கொண்டதாக இருக்கிறது. அதைச் சீர்படுத்தி, வளைவுகளைக் குறைத்து, சாலையைச் சீரமைக்க வேண்டும் என்றும், கொல்லிமலையில் கூட்டுறவுத் துறையில் பழச்சாறு எடுக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்றும், கொல்லிமலையில் உள்ள ஐந்தாறு நீர்வீழ்ச்சிக்கு சுற்றுலாப் பயணிகள் சென்று வர படிக்கட்டுகள் போடுவதற்குப் பதிலாக நீர்வீழ்ச்சிக்குச் செல்ல சாலை வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும், சுற்றுலா வாரியத்தின் மூலம் உறைவிடம்—உணவு விடுதி கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சாலை வசதிகளை ஏற்படுத்த அரசு பல்வேறு துணைத் திட்டங்களைத் தீட்டியுள்ளதை நான் மிகவும் வரவேற்கிறேன். 1981-82 கொல்லிமலை ஒன்றியப் பகுதியைத் தாலுக்காவாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழங்குடி மக்களின் நலனுக்காகத் தனியாக ஒரு துறை ஏற்படுத்த வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சீ. சிவப்பிரகாசம்] [1981 பிப்ரவரி 6

அரிசன, ஆதிவாசி மக்களின் நலனுக்காக துணைத் திட்டத்தில் 18 சதவிகித நிதி உதவி அளிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிதி உதவியைச் சரியாக ஒவ்வொரு துறையிலும் செலவழித்து, அரிசன ஆதிவாசி மக்களின் நலன்கள் காக்கப்படுகின்றனவா என்பதை அரசு கண்காணிக் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத் துறை மூலமாக மலைவாழ் மக்களுக்கு என்று தனித் திட்டம் தீட்டி, அதன் மூலம் மின்சார வசதி இல்லாத மலைவாழ் மக்களுக்கு மின்சார வசதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொல்லிமலை நீர்வீழ்ச்சியிலும், பெரியார் நீர்வீழ்ச்சியிலும் மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் பல பேருக்கு வேலை கிடைக்கும். நம்முடைய மின்சாரத் தேவையையும் பூர்த்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கிராம மின் இணைப்புத் திட்டத்தின் மூலம் மின் இணைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டு பல மனுக்கள் நிலுவையில் உள்ளன. குறிப்பாக சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம், கொல்லிமலை ஒன்றிய கிராமம் பகுதிகள் இருக்கின்றன. அங்கே வசிக்கின்ற மக்களுக்கு—குடிசை வாழ் மக்களுக்கு—மின் இணைப்பு கொடுக்க முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதியான சேந்தமங்கலத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்து, நிவாரணப் பணிகளைத் துவக்க வேண்டும் என்று என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக் கொண்டு, இந்தத் துணைநிதி நிலை அறிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே அரசின் கவனத்தில் விடுபட்டுப்போன சில திட்டங்களைப் பற்றியும் சில பிரச்னைகளைப் பற்றியும் பேச விரும்புகிறேன்.

மதுரை அரசினர் ராஜாஜி மருத்துவ மனையில் உள்ள கண் நோய் சிகிச்சைப் பிரிவிற்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் ஏறத்தாழ 11 ஆண்டு காலமாக செயல்படாமல் இருந்து வருகிறது. 26-8-1969-ல் இதற்கான அனுமதியை அப்போது இருந்த அரசு வழங்கியிருக்கிறது. அதற்கு 3 மாடிக் கட்டிடம் ஒன்று 5.5 லட்ச ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டது. பின்னால், 1972-ல் அதற்கு பைல் பவுன்டேஷன் போட்டு 8 மாடிக் கட்டிடம் கட்ட வேண்டும் என்று அப்போது இருந்த சி. ஈ. அவர்கள் 12 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை வகுத்தார்கள். பிறகு



1981 பிப்ரவரி 6] [திரு. ப. நெடுமாறன்]

1976-லே அந்தக் கட்டிடத்திற்கான அடித்தளம் மட்டும்தான் கட்டிமுடிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே மேற்கொண்டு அந்தக் கட்டிடத்திலே முதல் மாடி, இரண்டாவது மாடி வேலைகள் துவங்கப்படவில்லை.

மதுரையிலே இருக்கக் கூடிய அந்த கண் நோய் சிகிச்சைப் பிரிவு இந்தியாவிலேயே 3-வது சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிற ஒரு பிரிவாகும்.

[முற்பகல் 11-30.]

ஆண்டுக்கு 1,70,000-க்கு மேற்பட்ட கண் நோயாளிகள் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு வந்து போகிறார்கள். அங்கே ''பெரணியல் கிராஃப்டிங்''—விழியை பெயர்த்துப் பொருத்துகிற சிகிச்சையைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். அது இந்தியா பூராவிலும் புகழப்படுகிறது. இந்தியாவிலேயே அது மூன்றாவது பெரிய யூனிட்டாக இருக்கிறது. இப்படிப் பட்ட சிறப்பான அந்த மருத்துவமனையில் கீழ்த்தளம் மட்டும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதிலே கண் நோய்ப் பிரிவின் சில பகுதிகள் மட்டும் வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றப் பிரிவுகள் பழைய கட்டிடத்திலேயே, அந்த இட நெருக்கடியிலேயே இன்னமும் இருந்து வருகின்றன. இவ்வளவு முக்கியமான அந்த மருத்துவமனையில், இந்தியா பூராவிலும் புகழப்படுகின்ற அந்த மருத்துவமனையில் இதற்கென்று தனியாக ஒரு ஆப்பரேஷன் அறை இன்றுவரையில் இல்லை. ஆகவே, இந்த துணை மானியக் கோரிக்கையில் அதையும் சேர்த்து, குறைந்த பட்சம் 8 மாடி கட்டாவிட்டாலும் முதலிலே திட்டமிட்ட, 3 மாடிக் கட்டிடத்தையாவது அங்கே கட்டினால் வரக்கூடிய நோயாளிகளுக்கும், அங்கே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெல்லத்திற்கு பலமுனை விற்பனை வரியை அரசு விதித்துவருகிறது. அருமைத் தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இதை ஒரு குடிசைத் தொழிலாகக் கருதி விவசாயிகள் குடிசைத் தொழிலாகத் தான் இன்றைக்கும் வெல்லம் காய்ச்சுகிறார்கள்.—விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வெல்லத்திற்கு பலமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டு, பின்னால் அது மாற்றப் பட்டு ஒருமுனை விற்பனை வரியாக மாற்றப்பட்டது. மீண்டும் இந்த ஆட்சியில் அதற்குப் பலமுனை விற்பனை வரி விதிக்கப் பட்டிருக்கிறது. இங்கே உற்பத்தியாகின்ற வெல்லத்தில் 80 சதவீதம் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது. இது விவசாயி

*திரு. என். ஏ. பூங்காவனம் : சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்பு ஏற்கெனவே அறிவித்த நிதிநிலை அறிக்கையிலே இந்தச் சட்டப் பேரவையிலே பணியாற்றிய காவலர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகின்ற படியின் அளவை உயர்த்துவதாகச் சொன்னார்கள். அதை உயர்த்தாதது மட்டுமல்லாமல் சட்ட மன்றப் பேரவை உறுப் பினர்களுக்கு என்று சில வசதிகளைச் செய்ய வேண்டும் என்று சொன்னோம், அவை எல்லாவற்றையும் நிறைவேற்ற முடியா விட்டாலும் இந்த மைக்கையாவது சற்று உயர்த்தி வைக்க வேண்டும் என்று சொன்னேன். அது கூட உயர்த்தப்பட வில்லை. இதனை அடுத்த கூட்டத் தொடரிலேயாவது செய்வார்கள் என்று நம்புகிறேன்..

காவல் துறையினருக்குச் சில சலுகைகள் அறிவிப்பது பற்றி முன்பு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அதுபற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே அதைப் பரிசீலிக்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய பகுதியில் விவசாயிகளும், ஏழை எளிய மக்களும் மிகக் கொடுமை யான முறையில் அடக்கப்பட்டிருக்கிறார்கள், ஒடுக்கப்பட்டிருக் கிறார்கள். திருப்பத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏ. சி. சாமிக்கண்ணு சண்முகம் உட்பட 15 நபர்களைக் கைது செய்து காவலில் வைத்திருக்கிறார்கள். யாரோ ஒரு கடிதத்தில் ஏதோ எழுதினார்கள் என்பதற்காக இவர்களைக் கைது செய்து 15 நாட்கள் உடை இன்றி நிர்வாண மாக ஆக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை அடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் நடப்பதை எல்லாம் தடுத்து நிறுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, நிர்வாகம் சம்பந்தப்பட்ட வகையில் அமைச்சர்களுக்கு அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு உடனுக்குடன் பதில் தகவல் கொடுத்தால் அதனைத் தொகுதி மக்களுக்குச் சொல் வதற்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அது குறித்துத் தொகுதி மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு வசதி யாக இருக்கும். ஆகவே அவ்வாறு உடனுக்குடன் பதில் தரப் படும் என்று அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முந்தைய சட்ட சபைக் கூட்டத் தொடரில் விவசாயி களுக்கு போனஸ் என்று அறிவித்தார்கள். ஆனால் இந்த அரசின் துணை நிதி நிலை அறிக்கையிலே அது சம்பந்தப்பட்ட வகை





யிலே ஒன்றுமே சொல்லப்படாமல் இருக்கின்றது. கேரளாவிலும், மேற்கு வங்கானத்திலும் அப்படிப்பட்ட போனஸ் கொடுக்கப்படு கின்றது. ஆகவே அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே யாவது அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40.]

அதுமட்டுமல்லாமல் கடந்த கூட்டத் தொடரில், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொண்ட வேலை யற்ற படித்த மாணவர்களுக்கு 50 ரூபாய் தரப்படும் என்று சொன்னார்கள். அந்த 50 ரூபாய் பற்றி எந்தவிதமான பேச்சும் பின்னர் அடிபடவில்லை. அது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு அல்லாமல் கால் நடைப் பராமரிப்புக்குப் பண உதவி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய காட்பாடி தொகுதியில் மாடுகளுக்குத் திடீரென்று புதுவகைநோய் வந்து பாதிக் கப்பட்டிருக்கின்றன. இதனால் பாதிக்கப்பட்ட மாடுகள் அனைத் தும் செத்து விடுகின்றன. விலை உயர்ந்த மாடுகளைக் கூட இழந்து விட்டு நிற்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள். இந்த நோய்க்கான மருந்து வேண்டும் என்று கேட்டால், இல்லை என்று சொல்கிறார்கள். அதற்கான பண ஒதுக்கீட்டிலிருந்து இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டாமா ? தயவு செய்து உடனடியாக நடவடிக்கை எடுத்து, அப்பகுதி மாடுகளைக் காப் பாற்றுகின்ற வகையில் முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய தொகுதியில் கவசன்பட் என்ற இடத்தில் ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றில் அணை கட்டவேண்டும் என்று பல ஆண்டுகளாகப் பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துக்கொண்டிருக் கின்றன. ஆனாலும் இதுவரை எந்தவித நடவடிக்கை யும் இல்லை. இதையும் தயவுசெய்து அரசு கவனித்து துரித நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் காட்பாடியில் ரெயில்வே பாலத்தில் ஒரு பிரிட்ஜ் கட்டவேண்டும் என்பது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டங் களில் ஒன்று. ஆனால் இன்னமும் ஹைவேஸ் அதிகாரிகளும் அரசும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். இதை அரசு தயவுசெய்து முக்கியமாக கவனித்து அந்த இடத்தில் பிரிட்ஜ் கட்ட ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

களால் முழுக்க முழுக்க குடிசைத் தொழிலாக நடத்தப்பட்டு வருகிற ஒரு தொழில். ஆகவே, இதற்கான விற்பனை வரியை அரசு ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். ரத்து செய்ய முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் ஒருமுனை விற்பனை வரியாகவாவது ஆக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பஸ் கட்டணம் உயர்த்தப்படலாம் என்ற ஒரு கருத்தை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் சில நாட்களுக்கு முன்னால் வெளியிட்டார்கள். பஸ் கட்டணம் ஏற்கனவே உயர்த்தப்பட்டிருக்கிறது. சாதாரன ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற ஒரு வாகனமாக இது இருப்பதினால் பஸ் கட்டணத்தை மீண்டும் உயர்த்தினால் அவர்கள் எல்லாம் பெரும் தொல்லைகளுக்கு ஆட்படுவார்கள். ஆனால் இதற்கு மாற்று ஏற்பாடு இல்லையா என்றால் நிச்சயமாக மாற்று ஏற்பாடு உண்டு. சீனி, சிமெண்ட் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் அரசாங்கத்தினாலே கொள்முதல் செய்யப்பட்டு ' சப்சிடைஸ்ட் ரேட்டில் ' விற்பனை செய்யப்படுகிறது. அதைப் போலவே பெட்ரோல், டீசல் விலை உயர்வினால்தான் இந்த பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக பெட்ரோலுக்கு, டீசலுக்கு இருக்கக்கூடிய எக்சைஸ் வரியை—எக்சைஸ் வரி மத்திய அரசால் விதிக்கப்படுகிறது—விற்பனை வரியை, அரசு நடத்துகின்ற போக்குவரத்துகளுக்கு ரத்து செய்ய வேண்டும். மத்திய அரசு எக்சைஸ் வரியை ரத்து செய்ய வேண்டும்: அதைப்போல மாநில அரசு விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும். அப்படியானால், குறைந்த விலையில் பெட்ரோல், டீசல் வழங்கப்பட்டால் நிச்சயமாக பஸ் கட்டணம் உயர்த்தப்பட வேண்டிய அவசியம் இருக்காது. அதைப்போலவே பஸ்களுக்கு வேண்டிய சேசிஸ்களுக்கும் சாதாரணமாக 10,000 ரூபாய், 15,000 ரூபாய் வீதம் ஒவ்வொரு ஆண்டும் விலை ஏறிக் கொண்டே போகிறது. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்படும் இந்த சேசிஸ்கள் குறைந்த விலையில் வழங்கப்பட்டால் கட்டணத்தைக் குறைக்கலாம். இந்த அரசு அந்த முயற்சியில் ஈடுபட்டு, அதற்காக மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். 60 சதவீதம் கச்சா எண்ணெய் பெட்ரோல், டீசலுக்கு வேண்டியது—வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. 40 சதவீதம் தான் உள் நாட்டில் கிடைக்கிறது. மத்திய அரசு தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு வரியில்லாமல் வழங்குகிற பெட்ரோல், டீசலை உள்நாட்டில் உற்பத்தியாகிற 40 சதவீதத்திலிருந்து கொடுக்க முடியும். ஆகவே, மத்திய அரசு வழங்குகிற பெட்ரோல், டீசலுக்கு எக்சைஸ் வரியை முழுமையாகத் தள்ளுபடி செய்து வழங்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



இறுதியாக இங்கே சென்னையில் இருக்கிற குடிசை மாற்று வாரியம் பற்றிச் சில கருத்துக்களை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குடிசைமாற்று வாரியத்தில் 10 ரூபாய்க்கு வாடகைக்கு விட்டிருந்த வீடுகளுக்கு இன்றைக்கு திடீரென்று 22 ரூபாய் வாடகை வசூலிக்கப்படுகிறது. இது ஏராளமான ஏழை எளியமக்களைப் பெரிதும் பாதித்திருக்கிறது. மாதம் 200 ரூபாய், 300 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும், அதற்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கும் தான் இந்த 10 ரூபாய் வாடகை வீடு ஒதுக்கப்பட்டது. அது இன்றைக்கு கிட்டத்தட்ட இரண்டு மடங்குக்கு மேல் உயர்த்தப்பட்டிருப்பது அவர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது.

அடுத்து புதிதாக ஒரு திட்டத்தை இப்போது அரசு அறிவித்திருக்கின்றது. வீட்டுவசதி வாரியத்திலே இருப்பது போன்று குடிசை மாற்று வாரியத்திலேயும் தவணை முறையிலே பணம் கட்டினால் அந்த வீடுகளை அவர்கள் தங்களுக்குச் சொந்தமாக்கி கொள்ளலாம் என்று ஒரு திட்டத்தை அரசு அறிவித்திருக்கின்றது. இது ஒரு நல்ல திட்டம் என்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தத் திட்டத்தின்படி பெரும் தொகையை டெப்பாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லியிருப்பது மாதம் 200, 300 ரூபாய் சம்பாதிக்கின்ற ஏழை எளிய மக்களுக்குப் பெரிய அளவுக்குச் கஷ்டத்தை அளிக்கின்றது. இதற்கு முன்பு 10 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்டவர்கள் குடிசை மாற்று வாரியத்திற்கு மனுச் செய்து அவர்களுக்கு இந்த வீடுகளை அளிக்கின்ற நிலையில் ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் அந்தப் பலனை அடைய முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ. இராகவானந்தம் : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் இருக்கின்ற வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்றால் மாதாமாதம் பணம் கட்டினால் போதும், 500 ரூபாய் டெப்பாசிட் கட்ட வேண்டியதில்லை என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இவ்வாறு அறிவித்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏழை எளிய மக்களின் சார்பில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இந்தக் குடிசை மாற்று வாரியம் என்று சென்னை நகருக்கு மட்டுமே இருக்கிறது. மதுரை, கோவை ஆகிய இரண்டு மாநகராட்சிகளுக்கும் இதன் பணியை விரிவுபடுத்தலாம் அல்லது மதுரைக்கும், கோவைக்கும் தனியான ஒரு குடிசைமாற்று வாரியத்தை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் காட்பாடி தொகுதி உறுப்பினராக இருந்த காலத்தில் இருந்தே அதாவது 1963-லிருந்தே இந்தத் தொகுதியில் ராஜா தோப்பு பகுதியில் அணை கட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதுவரையில் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. அதைத் தயவுசெய்து அரசின் கவனத்தில் ஏற்று, இப்பகுதி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று இங்கே, உள்ள, கல்யாணகுப்பம் ஏரி உடைந்து விட்டது. அது உடைந்து 3 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் இன்னும் செப்பனிடப்படவில்லை. சுற்றியிருக்கிற 40 கிராமங்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கினறன. அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீரே இல்லை. அரசு இதை மிக முக்கியமானது என்று கருதி, அப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் பிரச்னையைத்தீர்க்க, ஏரியையாவது செப்பனிடவேண்டும். அல்லது வேறு குடிநீர் சப்ளை ஏற்பாடுகளையாவது செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல் குடிதண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்னை என்னுடைய தொகுதியில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் பிடித்து வைக்க முடியும் என்கிற நிலைமை கூட இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதியைப் பஞ்சப்பிரதேசம் என்று அறிவித்து வறட்சிப் பணிகளுக்கான நிவாரணப் பணிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்துமிக முக்கியமானது தமிழ்நாட்டில் 3 லட்சத்திற்கும் மேல் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களின் சார்பாகப் பல கோரிக்கைகள் அரசாங்கத்திற்கும், தொழிலாளர் அமைச்சருக்கும், தொழில் துறைக்கும்கூட அனுப்பியிருக்கிறேன். ஆனால் எந்தவித பிரயோஜனமும் இல்லை.

இந்தப் பீடித் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள் பீடி இலை. இந்தப் பீடி இலையை ரயில்வே மூலமாக வரவழைக்க வேண்டும். அதற்கான பிரையாரிட்டியை மத்திய அரசாங்கம் இப்பொழுது குறைத்துக் கொண்டே வருகிறது. இதை எப்படியாவது தடுக்கும் வகையில், பிரையாரிட்டியை அதிகமாக்காவிட்டாலும், ஏற்கெனவே இருந்த அளவாவது கிடைப்பதற்கு மாநில அரசு தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இங்கே எங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற மைக்கை கொஞ்சம் உயர்த்தி வைக்க வேண்டும் என்று மறுபடியும் கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.





## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (இ) பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டுப் பிரசுரம் வீசப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று (6-2-81) பகல் சுமார் 11 மணியளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக்கொள்ளும் நபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் புரிந்துள்ளார் என்று அவை கருதுகிறது. அவருக்கு பார்வையாளர் மாடத்திற்கு வருவதற்கான அனுமதி சீட்டு வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்களின் பரிந்துரையின் பேரில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார்.

## 6. அரசினர் தீர்மானம்.

### பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டறிக்கை வீசியவர் மீது நடவடிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் மொழிகிறேன் :—

" இன்று (6-2-1981) பகல் சுமார் 11-00 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசி கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், கீழ்க்கபிஸ்தலத்தைச் சேர்ந்தவரும் தற்போது சென்னை, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, 9 ஆம் எண்ணுள்ள வீட்டில் வசிப்பவருமான திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக் கொள்ளும் நபர் பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவரது இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் ஏழு நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமக்கு பிரிசிடெண்ட் இருக்கிறது. 7 நாள் என்பது மிகவும் அதிகம். 3 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒட்டு மொத்தமாக இந்த அவையை அவமதித்தால் நம் எல்லோரையும் அவமதித்தது போல்தான். இதற்கு நீங்கள் பரிந்து பேசுவது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த அவையினுடைய மதிப்பு காப்பாற்றப்பட்டாக வேண்டும். மற்றவர்களுக்கு இந்த அவை என்றால் ஒரு அச்ச உணர்ச்சி ஏற்பட்டால்தான் இந்த அவையின் மதிப்பும் மரியாதையும் பாரம்பரியமும் காப்பாற்றப்படும். ஆகையால் இந்த அவையை அவமதிப்பவர்களைத் தண்டிப்பதைக் குறைக்க வேண்டும் என்று கேட்போமேயானால், இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகும் என்றுதான் சொன்னேன். அன்று ஒரு துண்டு அறிக்கைதான் வீசப்பட்டது. 3 நாட்கள் சிறைத் தண்டனை என்று குறிப்பிட்டேன். ஆனால் இப்பொழுது 6 நாள்கள் சேர்த்து வீசப்பெற்றிருக்கிறது. (சிரிப்பு) அதற்கு 3 நாட்கள் என்று அனுமதித்தால் இனிமேல் அது 200 பக்கங்கள் கொண்ட புத்தகங்களாக மாறினாலும் மாறிவிடக் கூடும்.

அதற்குப் பிறகு பெரிய கட்டே, பெரிய பாறாங்கல்கூட விழுந்தாலும் விழலாம். அன்றைக்கு நாம் ஓரளவிற்குச் சலுகைகள் தந்தோம். அப்படித் தந்துகொண்டே போவோமானால்—ஒரு அச்சநிலை ஏற்படவேண்டும் என்று செய்கிறோமே தவிர யாரையும் தண்டிக்க வேண்டும் என்பதல்ல. அதைவிட அதிகமான அளவிற்குப் புத்தகத்தை எறியக்கூடிய அளவிற்கு வந்து பிறகு மேலும் மேலும் இது வளர இடம் தரக்கூடாது என்பதால்—ஏழு நாட்கள் என்பதே மிக மிகக் குறைவு. இதை வழக்கு மன்றத்தில் கொண்டு போய் நிறுத்தியிருப்போமானால் குறைந்தது மூன்று மாதங்களாவது தந்திருப்பார்கள். எனினும் உறுப்பினர்களின் பெருந்தன்மை அடிப்படையில் ஏழு நாட்கள் என்பதற்கு ஐந்து நாட்கள் என வேண்டுமானால் குறைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான் முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" இன்று (6-2-1981) பகல் சுமார் 11-00 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டுப் பிரசுரங்களை வீசிக் கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், கீழ்க்கபிஸ்தலத்தைச் சேர்ந்தவரும் தற்போது சென்னை, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, 9 ஆம் எண்ணுள்ள வீட்டில் வசிப்பவருமான திரு. மாரிமுத்து என்பவரின் மகன் திரு. எம். சரவணன் என்று சொல்லிக்கொள்ளும் நபர் பெரும் குற்றம்



புரிந்துள்ளார். அவரது இச்செயல் பேரவையை அவமதிக்கும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. அவர் ஐந்து நாட்கள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

மாற்றுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

## 5. முதல் துணை நிதி அறிக்கை 1980—81—விவாதம்—தொடர்ச்சி.

திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் மேல் பேசுகிற வாய்ப்பு பெற்றமைக்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எனது வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களின் போர்த் தளபதியாக இருந்து இந்தத் துணை நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிற என் மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்களின் ஒவ்வொரு அறிக்கையும் பாராட்டுக்குரிய அறிக்கைகளாக அமைந்திருக்கின்றன. ஆகவே அவைகளை நான் முழு மனதோடு வரவேற்று என்னுடைய தொகுதி பற்றிச் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தொப்பையாறு அணை கட்டுவதற்கு நமது புரட்சித் தலைவர் அமைச்சரவையில் உள்ள திரு. இராஜா முகமது அவர்கள் பொறுப்பேற்ற பிறகு செயல்பட்டு வருகிறார்கள். அதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். ஆனால் அதில் சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. விடுபட்ட அந்தப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று என் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசை மாற்று வாரியம் என்பது, தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் குடிசைகள் மாற்றப்பட்டு வீடுகள் கட்டி அவற்றை ஒப்படைக்கிற பணியைச் செய்து வருகிறார்கள். ஆனால் என் தொகுதி இருக்கிற தர்மபுரி மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியம் எப்படி இருக்கும் என்று கூட அறிய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே தர்மபுரி மாவட்டத்தில், என் தொகுதியில் உள்ள குடிசைகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக வீடுகளைக் கட்டி அவற்றை அவர்களுக்கு ஒப்படைக்கிற பணியினைத் தொடங்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். அரங்கநாதன்] [1981 பிப்ரவரி 6

தர்மபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்றும் நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பெண்கள் காலேஜ்கள் இருக்கின்றன. ஆனால் தர்மபுரியில் எந்த பெண்கள் காலேஜும் இன்னும் செயல்படவில்லை. அதற்காக அதற்குரிய அமைச்சர் அவர்களிடத்தில் நான் மனு கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தர்மபுரியில் ஒரு போலீஸ் ஸ்டேஷன்தான் இருக்கிறது. அதில் உள்ள காவலர்களை வைத்துக் கொண்டு அங்கு குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. காரணம் அந்தத் தொகுதியில் நக்ஸலைட்ஸ் என்ற தீவிரவாதிகள் அதிகமாக இருக்கிற காரணத்தால், ஒரு போலீஸ் ஸ்டேஷனை வைத்துக் கொண்டு அதைக் கட்டுப்படுத்த இயலாத நிலை இருப்பதன் காரணத்தால் இன்னும் ஒரு போலீஸ் சப்-ஸ்டேஷன் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று பணிவன்போடு இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, நீராறு டாம் கட்டியிருக்கிறார்கள் மாரஹள்ளி பகுதியில். அந்த டாமிலிருந்து ராமக்கா ஏரிக்குத் தண்ணீர் விடுகிறார்கள். எல்லா ஏரிகளும் நிரம்பி இந்த ஏரிக்கு வருவதற்குள் தண்ணீர் தீர்ந்துவிடுகிறது, தண்ணீர் வருவதில்லை. ஆகவே இந்த ராமக்கா ஏரி நிரம்பிய பிறகு மற்ற ஏரிகளுக்குத் தண்ணீர் விடவேண்டும். அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முதற் பகல் 11–50)

அதற்கடுத்து, தர்மபுரி மாவட்டத்திலே ஹோசூர் பகுதியில் மட்டுந்தான் தொழில் வளங்கள் பெருகி வருகின்றன. தர்மபுரி மாவட்டத்தின் மற்றப் பகுதிகளில் தொழில் வளம் பெருகாமல் பெங்களூரை ஒட்டி இருக்கும் பகுதியில் ஹோசூர் பகுதியில் மட்டும் தொழிற்சாலைகள் அதிகமாக வளர்ந்து வரும் காரணத்தால், தர்மபுரியை ஒட்டியிருக்கும் பகுதிகளிலும் தொழில் வளம் பெருக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அதிகமான்கோட்டை—அதிகமான் மன்னர் வாழ்ந்த இடம்—அந்த ஊரில் ஒரு ஏரி இருக்கிறது. இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்கின்ற அளவுக்கு உள்ள ஏரி, அந்த ஏரிக்குக் கடந்த பத்து ஆண்டுகளாகத் தண்ணீர் வரவில்லை.



1981 பிப்ரவரி 6] [திரு. எஸ். அரங்கநாதன்]

ஏரிக்குத் தண்ணீர் வருகின்ற இடத்தில் தூர் எடுக்காது ஏரியை மட்டும் தூர் எடுக்கின்ற காரணத்தால் தண்ணீர் வரத்து இல்லை. ஆகவே, தண்ணீர் வருகிற வழியைத் தூர் எடுத்து தண்ணீர் வர வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே தர்மபுரி தலைநகரமாக இருக்கும் காரணத்தால் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் செலவு செய்து குடி தண்ணீர்த் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் வசதி படைத்தவர்கள் மட்டும் குடி தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஏழை எளியவர்கள் கேட்டால் கொடுப்பதில்லை என்று நகராட்சினர் சொல்லுகிறார்கள். அருமை அண்ணன் அவர்களிடமும் இது பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஏழை எளியவர்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி தொகுதியில் அன்னசாகரம் என்ற ஊரிலிருந்து போகிற ரோட்டில் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னால் பாலம் கட்ட ஏற்பாடு செய்து பாலம் இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. எந்த இலாக்காவிடம் சொன்னாலும் எங்களுக்குத் தெரியாது, பணம் இல்லையென்று சொல்லுகிறார்கள். அந்தப் பாலத்தைக் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திப்பம்பட்டி ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது. அந்த ஆற்றின் குறுக்கே பெரிய அணையைக் கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் தர்மபுரி நகரத்தில் ஒல்லஹல்லிக்குச் செல்லுகிற பாலம் குறுக்கே இருக்கிறது. யாரோ ஒரு மிட்டாதாரர் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய அந்தப் பாலம் மாட்டு வண்டி மட்டுந்தான் போக முடியும் என்ற அளவுக்கு இருக்கிறது. லாரியோ, பஸ்ஸோ போக முடியாதபடி இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்று பலமுறை துறை அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறேன். இன்று வரை அந்தக் காரியம் நடைபெறாமல் இருக்கிறது. அது நடைபெறுவதற்கான காரியங்களைச் சர்க்கார் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையின் மேல் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

[1981 பிப்ரவரி 6

*திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81-ஆம் ஆண்டின் முதலாவது துணை மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை இந்த அவையிலே பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

கடுமையான வறட்சியிலும், கடுமையான விவசாயிகளுடைய வன்முறைப் போராட்டங்களுக்கிடையிலும், விவசாயப் பெருங் குடி மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழ்மை நிறைந்த மக்களுக்கும் பயன்படும் விதத்தில் மதிப்பீடுகள் அமைந்துள்ளதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு விவசாயி களுக்குக் கூட்டுறவுக் கடன்கள் தொடர்பான சலுகைகள் வழங்கு வதற்கு ரூ. 42 கோடி வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

கடன்களை ஒழுங்காகச் செலுத்திய விவசாயிகள் மீண்டும் கடன் பெறுவதற்கு வசதியாக ஏழு மத்திய கூட்டுறவு வங்கி களுக்கு 22.57 கோடி ரூபாய் முன்பணமாக அனுமதிக்கப்பட் டுள்ளது. இது, விவசாயிகள் மீது இந்த அரசு எந்த அளவு அக்கறையும் பரிவும் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றாகும்.

எரிபொருள்களின் விலை உயர்வாலும், மின் கட்டண வகுலில் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளின் சூழ்ச்சியாலும் பாதிப்பு ஏற்பட்டாலும், திட்டமிட்ட பணிகள் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற நல்லெண்ண அடிப்படையில் மின் வாரியத்திற்கு ரூ. 15 கோடி வழங்கி யுள்ளது தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர் களுடைய பெருந்தன்மைக்கு எடுத்துக் காட்டாகும்.

தன்னிறைவுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 16 கோடியைவிட ரூ. 4 கோடி கூடுதலாக, அதுவும் குடி நீர் வழங்கும் திட்டங்களுக்காகச் செலவிட ஒதுக்கியுள்ளதைப் பாராட்டி வரவேற்கிறேன். நாம் சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட குடிநீர்ப் பிரச்சினைகூட இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் உள்ளது மிகவும் வேதனைக்குரியது. என்றாலும் இந்த அரசு தொடர்ந்து குடிநீர்ப் பிரச்சினையின் தன்னிறைவு ஏற்படப் பாடுபடும் என்று நம்புகிறேன்.



1981 பிப்ரவரி 6] [திரு. த. மாரிமுத்து]

தன்னிறைவுத் திட்டத்திற்கு தன்னுடைய பங்கைச் செலுத்த இயலாத ஒன்றியங்களுக்காக 3.35 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது. இந்த அரசு மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு இயங்குகிறது என்று சொல்லலாம். இந்த நேரத்திலே வணக்கத்துக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் நான் என் இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வது என்னுடைய நீங்காத கடமையாகும்.

காரணம், என்னுடைய தொகுதியான குளத்தூர் தொகுதி புதுக்கோட்டை மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதி யாகும். ஆண்டுதோறும் மழை பெய்கின்ற காலங்களில் கூட என்னுடைய தொகுதி மிகவும் வறட்சியை சந்திக்க நேரிடும். அப்படிப்பட்ட என் தொகுதியில் உள்ள மூன்று ஒன்றியங்களையும் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்து மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றி வருவதற்கு என் தொகுதி மக்கள் சார்பாக என் நன்றியை இந்த அரசுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள குடுமி யான்மலை அண்ணா விவசாயப் பண்ணை சீரோடும் சிறப் போடும் நடந்து வருகிறது. அதனால் வாய்ப்பு நிறைந்துள்ள பண்ணைக்கு அருகில் ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்தித் தருமாறும் குளத்தூர் தொகுதிக்கு காவிரி நீர் கிடைக்க இந்த அரசு ஆவன செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி விவசாயத்தை மட்டும் நம்பி இருக் கிறது. ஆகவே என்னுடைய தொகுதியில் ஒருபெரிய தொழிற் சாலையை அமைத்து அதன் மூலமாக வேலையில்லாத் திண் டாட்டத்தை போக்கவும் மாற்றுத் தொழிலை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீரனூர் அரசினர் மருத்துவ மனைக்கு 50 படுக்கைகள் ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிகிறேன். அதை விரைவில் செய்து கொடுக்குமாறும் கீரனூரில் ஒரு பெண்கள் அரசு உயர்நிலைப் பள்ளியையும் ஏற்படுத்திக் கொடுக்கும்படியும் குளத்தூர் தாலுகா பெரிய தாலுகாவாக அமைந்திருப்பதால் அதை இரண்டாகப் பிரித்து இலுப்பூர் நகரை மையமாகக் கொண்டு தாலுகா அமைப்ப தாக அரசு பரிசீலனையில் உள்ளதை விரைவுபடுத்தி இலுப்பூர் நகரை தாலுகாவாக்கிடவும் வேண்டிக்கொள்கிறேன்.

குளத்தூர் தொகுதி முழுமைக்கும் பரவலாக மக்கள் போக்கு வரத்து வசதியைப் பெற ஏற்கனவே திட்டமிடப்பட்ட மினி பஸ் ரூட்டுகளை தொடர்ந்து விரைவுபடுத்தி அமலாக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பொதுப் பணித்துறை கண்மாய்கள் பல இன்னமும் ஆழப்படுத்தப்படாமல் உள்ளன. அவற்றை ஆழப்படுத்த வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

[திரு. த. மாரிமுத்து] [1981 பிப்ரவரி 6

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை சிறப்போடும் சிறப்போடும்
நடத்தி பெரும் புகழும் பெற்றுவிட்ட மாண்புமிகு முதல்வர்
அரசுக்கு தொகுதி மக்கள் சார்பாக இதயம் நிறைந்த பாராட்டு
களை சமர்ப்பித்துக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.
உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மதுரையும் மதுரையின் சுற்றுப்
புறமும் நல்ல முன்னேற்றப் பலன்களைப் பெற்றுள்ளதற்கும்
பி. டி. ராசன் கால்வாயிலிருந்து புதிதாக கால்வாய் ஒன்று
வெட்ட 44.22 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளதற்கும், பெரியார்
அணை வலுப்படுத்தப்படுவதற்கு 48 லட்சம் ரூபாய் ஒதுக்கி
யுள்ளதற்கும் கடல் அரிப்பைத் தடுக்கும் பொருட்டு 2.14 கோடி
ஒதுக்கியுள்ளதற்கும் சென்னை நகருடைய போக்குவரத்து நல
னுக்காக 3.34 கோடி ரூபாய் செலவில் திட்டம் வகுத்துள்ள
தற்கும் போக்குவரத்து நிறுவனங்களின் நிதிநிலைமை பாதிக்கப்
பட்டுள்ள நிலைமையைச் சீர்செய்ய 10.81 கோடி ரூபாய் முன்
பணமாக வழங்கியுள்ளதற்கும் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு
வங்கிகள் நல்ல முறையில் செயல்பட விவசாயப் பெருங்குடி
மக்களுடைய நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள
இந்த அரசு 20 கோடி ரூபாய் முன் பணமாக வழங்கியுள்ள
தற்கும் மனமாரப் பாராட்டி துணை மானியக் கோரிக்கையில்
பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவருக்கு என்
நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டு முதல் துணை மானியக்
கோரிக்கையின் மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறாத
திட்டங்களுக்கும் கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்பட்ட இனங்
களுக்குமாக தேவையான ரூ. 50.41 கோடி கோரப்பட்டு உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் நண்பர் துரை முருகன் இங்கே பேசும்
பொழுது தமிழக நிதியமைச்சர் நிதி ஆதாரங்களைக் கோடிட்டுக்
காட்டவில்லை என்றும் ஓவர் டிராப்ட் வாங்க வேண்டிய
நிலைமை இருப்பதாகவும் நிதிநிலைமை சரியாக இல்லை என்றும்
கூறினார்கள். இது குறித்து கடந்த ஆண்டு தமிழக அரசின்
கலைக்கப்பட்ட தமிழக அரசின் அறிக்கையை பாரா[illegible]
மன்றத்திலே இந்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன்
அவர்கள் தாக்கல் செய்தபோது தமிழக அரசின் நிதி நிலைமை
திருப்திகரமாக இருக்கிறது.

The financial position of the Tamil Nadu Government is
satisfactory.

என்று மனநிறைவு பெறத்தக்க வகையில் கூறியிருப்பதை நான்
நினைவுபடுத்த விரும்புகிறேன். ஓவர் டிராப்ட் வாங்குவதிலே
தப்பில்லை. வாங்குகிற ஓவர் டிராப்ட் உரிய காலத்திலே திருப்பித்



1981 பிப்ரவரி 6] [திரு. வே. இரா. ஜெயராமன்]

தரப்படுகிற நிதிநிலை இன்றைக்குத் தமிழகத்திலே தான்
இருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். தேர்தல்
காலங்களில் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை விவசாயிகளின்
கடன் சுமைகளைக் குறைக்கின்ற வகையில் கூட்டுறவுக் கடன்கள்
தொடர்பாக சலுகைகள் வழங்குவதற்கு மத்திய கூட்டுறவு
சங்கங்களுக்கு 42 கோடி ரூபாய் வழிவகை செய்திருப்பது
பாராட்டுக்குரியதாகும். ஒழுங்காகக் கடன்களைத் திருப்பிச்
செலுத்திய விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடன்கள் வழங்கும்
தகுதியைப் பெறுகின்ற வகையிலே 7 மத்திய கூட்டுறவு வங்கி
களுக்கு 22·57 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்
தக்கதொன்றாகும். மின் வாரியத்திடம் போதிய நிதி வசதி
இல்லாத நிலையைப் போக்குகின்ற வகையிலே 15 கோடி ரூபாய்
அளித்திருப்பதை நான் வரவேற்கிறேன். கிராமத் தன்னிறைவுத்
திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவதற்காக 16 கோடிக்கு
மேலும் 4 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்திருப்பதை நான்
வரவேற்கிறேன்.

[நண்பகல் 12-00]

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி மாமதுரையில்
ஏற்படுத்தப்பட்டுள்ள நிரந்தரப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட
3.11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும், எனது தொகுதியில் நீண்ட
காலமாகக் கோரி வந்த வரப்பு வாய்க்கால் திட்டத்திற்கு
(காண்டூர் வாய்க்கால்) 44.12 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்
கியதற்கும், கடல் அரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்
போன்ற வகையில் 2.14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் மற்றும்
பஸ், லாரிகள் நிறுத்துவதற்காக புறநகர்ப் பகுதியில் மூன்று
பஸ், லாரி நிலையங்கள் அமைத்துப் போக்குவரத்திற்கு 3.44
கோடி ரூபாய் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும்
பாராட்டுகிறேன்.

எனது தொகுதியில் நீண்ட நெடுங்காலமாகத் தேவைப்
படுகின்ற வைகை ஆற்றின் குறுக்கே அம்பாசமுத்திரத்தையும்
ஆண்டிப்பட்டி தொகுதியிலுள்ள கண்டமனூர் நகரத்தையும்
இணைக்கின்ற வகையில் ஒரு பாலம் கட்டித் தரவும், தேனி,
சின்னமனூர் ஒன்றியப் பகுதிகளைக் கிராமத் தன்னிறைவுத்
திட்டத்தில் சேர்ப்பதற்கும், பருத்தி அதிகமாக விளைகின்ற
தேனிப் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றும், கரும்பு அதிக
மாக உற்பத்தியாகும் பெரியகுளம், அன்னஞ்சி, லட்சுமிபுரம்
ஆகிய ஊர்களை உள்ளடக்கிய பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை
ஆலை ஏற்படுத்தித் தரவும், லோயர் கேம்பிலிருந்து பெரிய
குளம் வரை, மேற்கு மலை அடிவாரத்தில் பரம்பிக்குளம்
ஆளியாறு ப்ராஜக்ட் போன்று, மேல் மட்ட வரப்பு வாய்க்கால்
திட்டம் ஒன்று ஏற்படுத்துவதன் மூலம் வறண்ட புஞ்சை
நிலங்களை வளப்படுத்துகின்ற திட்டத்தினை ஆய்வு செய்
வதற்கு அரசு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1981 பிப்ரவரி 6

அதுபோன்று சின்னமனூரிலிருந்து ஹைவேஸ் வரை செல்லும் தனியார் சாலையினை அரசு தன் பொறுப்பிலே ஏற்க வேண்டு கிறேன்.

மதுரை, போடிமட்டு, கொச்சி, திண்டுக்கல், தேனி, குமுளி, கோட்டயம் சாலைகளைத் தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கூறி அமைகிறேன், நன்றி.

திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு அனுமதி அளித்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டை மதுரையிலே சிறப்பாகக் கொண்டாடி அந்த மாவட்டத்தில் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மிக விரைவாகப் பல பகுதிகளுக்கும் செய்து தந்தமைக்காக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற மற்ற மாவட்டங்களிலும் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் மாநாடுகளை நடத்துவதன் மூலமாக அந்தந்த மாவட்டங்களின் குறைகளையும் தீர்க்க முடியும் என்ற கூற்றைக் கேட்டு நாங்களெல்லாம் மனமகிழ்ச்சி அடைகிறோம். அந்த வகையிலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மாநில அளவில் நடத்தி அந்த மாவட்டத்தின் குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிசைகளுக்கு விளக்குகள் என்ற பகுதிக்கு மானியத்தை அதிகமாக ஒதுக்கித் தந்து, விளக்குகளை எப்பொழுதுமே பார்த்திராத அந்த குடிசைவாழ் மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உண்டாக்கித் தந்திருக்கிறார்கள். விளக்கே இல்லாத பகுதி என்று இருந்த அந்தக் குடிசைகளிலே, அந்தச் சேரிப் பகுதிகளிலே இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தித் தந்தமைக்காக என்னுடைய நன்றியைக் கூறி, இன்னும் குறைவாக உள்ள பகுதிகளிலேயும் அந்த வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் கேட்டு, அந்தப் பகுதி மக்களின் சார்பாக இந்த அரசுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்வாரியத்தின் மூலமாக அரசு தருகின்ற அத்தனை சலுகைகளும், அந்த வாரியத்தில் ஆட்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று கூறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையை அரசு கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறது. கீழ் மட்டத்திலே உள்ள ஹெல்ப்பர்கள் கூட எங்களுக்கு ஆட்கள் போதவில்லை என்ற முறையிலே சொல்லும் நிலைமையிருக்கிறது. வசதியுள்ளவர்கள் கேட்கும் பொழுது அவர்கள் தங்கள் பணியைச் செய்கிறார்கள்; ஆனால்



1981 பிப்ரவரி 6] [திரு. செ. குப்புசாமி]

சிறு விவசாயிகளோ அல்லது குடிசைப் பகுதி மக்களோ கேட்கும்
பொழுது இப்படிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய
வேண்டுமென்று கேட்கிறபொழுது, அவர்கள் ஆள் போத
வில்லை என்ன செய்வது என்ற முறையிலே சொல்லி புறக்
கணித்து விடுகிறார்கள். இந்த நிலையை அரசு கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வந்தவாசி தொகுதி பின்தங்கிய தொகுதி.
அதிலும், குறிப்பாக தொழில் துறையிலே அது பின்தங்கிய
பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த நேரத்திலே தொழி
லாளர் நல அமைச்சரவர்கள் அந்தப் பகுதியில் எப்படியாவது
ஒரு சில தொழிற்கூடங்களையாவது ஏற்படுத்தி தந்து, அங்கே
யுள்ள தொழில் இல்லாத மக்களுக்குத் தொழில் வாய்ப்பை
ஏற்படுத்தி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி நகரத்திலே உள்ள மருத்துவமனையில் படுக்
கைகள் சீரழிந்து உள்ளன. அந்தப் பகுதியில் பெண்மணிகள்
அதிக அளவிற்கு நோயுற்று அந்த மருத்துவமனைக்குச் செல்வ
தால் அங்கே பெண் டாக்டர் குறைவாக உள்ளார் என்பதை
சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுக்குச் சொல்லி, அந்தக்
குறையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை மக்கள் குறிப்பாக அடித்தள மக்களும், குடிசைவாழ்
மக்களும் வைத்திய வசதி பெறுகின்ற அந்த மருத்துவமனையில்
படுக்கைகள் இல்லாத காரணத்தினால் பிரசவ வேதனைப்படும்
பெண்மணிகள்கூட மருத்துவமனையில் சீராக மருத்துவம் பெற
முடியவில்லை என்றவொரு கூற்றையும் அமைச்சரவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதோடு அந்தப் பகுதியில் குடிநீர் வசதி கூட இல்லையென்ற
காரணத்தினால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அந்த
மருத்துவமனையில் குடிநீர் கிடைக்க உடனடியாக ஆவன
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இப்பொழுது, நமது அரசு வசதிபடைத்தவர்கள்
புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுத்து, அவர்களிடமிருந்து அந்த நிலத்தை எடுத்துக் கொள்கின்ற நேரத்தில், வசதி
படைத்த ஒருசிலர் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, பொதுப்பயனுடைய மார்க்கெட்டுகள், சாலை போடுதல்,
ஹாஸ்டல் வசதிகள் அமைத்தல், குடிநீர்த் திட்டம்
போன்றவற்றிற்கு அந்த இடங்களைத் தராமலிருக்கிறார்கள்.
முன்னாள் தலைவர்கள் மூலமாக, அந்த ஆக்கிரமிப்பாளர்கள்
கோர்ட்டுகளுக்குச் சென்று, கோர்ட்டு அவர்களுக்கு எதிராகத்
தீர்ப்பளித்துங்கூட அந்த நிலை என்னுடைய தொகுதியிலே
நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். அப்படிப்பட்ட நிலைகள் நீடிக்குமானால், பொது
நலனுக்காக நாம் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் தடைப்

[திரு. செ. குப்புசாமி] [1981 பிப்ரவரி 6

படும். அதே நேரத்தில் வசதி படைத்தவர்கள் தாங்கள் ஆக்கிரமித்து வைத்துள்ள இடங்களை மேம்மேலும் விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட, சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் மூலமாக துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைகள் தொடரக்கூடாது. ஏழைகள் வாழ வேண்டும், பொதுக் காரியங்கள் நடைபெறவேண்டும், பொதுக் காரியங்கள் நடைபெற இடம் வேண்டும். அப்படி இடம் கேட்டு வருகின்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, அந்த வசதி படைத்தவர்களை, வெளியேற்றி, பொதுக் காரியங்களுக்கு அந்த இடங்கள் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் கீழ்க் கண்டவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடு கிறேன்.

திரு. துரைமுருகன் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது * * * என்றதையும் திரும்ப * * * என்று சொன்னதையும், அடுத்து, * * * என்று சொன்னதையும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் * * * என்று குறிப்பிட்டதையும், அதன் மேல் திரு. துரைமுருகன் * * * என்று குறிப்பிட்டதையும், அடுத்து திரு. மணிமாறன் * * * என்று குறிப்பிட்டதையும், அதனையொட்டி திரு. துரைமுருகன் * * * என்று சொன்னதையும், பிறகு * * * என்றதையும், பி கு திரு. வி. கிருஷ்ணமூர்த்தி * * * ஏன்று சொன்னதையும், பிறகு திரு. துரை முருகன் * * * என்றதையும், அவைக்குறிப்பிலிருந்து நீக்குவதோடு, அதைப்பற்றி நான் எங்கெங்கு குறிப்பிட்டேனோ அவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகின்றேன்.

[பிற்பகல் 12-10]

*திரு. சு. முத்துக்கிருஷ்ணன் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையிலே கன்னியாகுமரி கடற்கரையிலும், சென்னைக் கடற்கரையிலும் ஏற்படுகிற கடல் அரிப்பைத் தடுக்கின்ற விதத்தில் சுவர்கள் கட்டுவதற்காகவும், பழுது பார்ப்பதற்காகவும் 2·14 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கி இருப்பதற்கு நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, கன்னியாகுமரிக்குப் பக்கத்திலே தடிக்காரன்கோணம் அருகிலே ஏறக்குறைய 900 ஏக்கர் நிலம் காலியாக, பாரஸ்ட் டிபார்ட்மென்டுக்கு இருக்கிறது. அந்த 900 ஏக்கர் நிலத்திலே ஒரு விவசாயக்

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



1981 பிப்ரவரி 6] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

கல்லூரியை குமரி மாவட்டத்திலே தடிக்காரன்கோணத்திலே அமைக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். ஏனென் றால், குமரி மாவட்டம் விவசாயிகள் நிறைந்த இடம். விவசாயப் பயிர்தான் மிக முக்கியமானதாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் தடிக்காரன்கோணத்தில் இந்த அரசு ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக சாலைகளைப் பொறுத்த அளவில் நான் ஏற்கெனவே அரசிடம் 18 சாலைகள் பழுது பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கின்றேன். அதற்கு தார் பற்றாக்குறை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த சாலைகளைப் பழுது பார்ப்ப தற்கு உடனடியாக தார் கிடைப்பதற்குரிய தகுந்த நடவடிக் கையை எடுக்க வேண்டுகிறேன்.

அதைப்போலவே குமரி மாவட்டத்தில் அரசின் சார்பாக கூட்டுறவு நூற்பாலை ஒன்று உள்ளது. அந்தக் கூட்டுறவு நூற் பாலையில் அதனை விரிவுபடுத்தி புதியதாக ஒரு வீவிங் மில் ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் அரசுக்கு பொது மக்களிடத்திலிருந்து வந்திருக்கிறது. ஆகவே, இந்த அரசு குமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் கன்னியாகுமரியில் அரசு பழத்தோட்டத்திற்கு எதிரில் உள்ள இடத்தில் இந்தக் கூட்டுறவு நூற்பாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் இதேபோல மீன் எண்ணெய்த் தொழிற் சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஏனென்றால், குமரி மாவட்டத்தில் மீன்கள் ஏராளமாக கிடைக்கின்றன. ஆகவே, அங்கு கிடைக்கின்ற மீன்களைக் கொண்டு அந்தப் பகுதியில் மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இரப்பர் மிகுதியாக கிடைக்கும் இடம் கன்னியாகுமரி மாவட்டம்தான். அங்கிருந்து மற்ற மாநிலங் களுக்கு ஏராளமாக இரப்பர் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே அரசு இதை கவனத்தில் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு டயர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் இந்த அரசு புரட்சித் தலைவரின் அரசு, ஏழை எளிய மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற விதத்தில் தன்னிறைவுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்தத் தன்னிறைவு திட்டத்தில் 1980-81 ஆம் ஆண்டில், 2 மாதங்களுக்குப் பின்னால்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆகையால்,

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 பிப்ரவரி 6

இந்த ஆண்டுக்குள் அந்தப் பணிகளை, அதாவது மார்ச்சு மாதத்
திற்குள் முடிக்கவேண்டுமென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள்.
ஆனால் இரண்டு மாதங்கள் கழித்தே இத்திட்டம் ஆரம்பிக்கப்
பட்டதால், உடனடியாக முடிக்கவேண்டுமென்ற எண்ணத்தில்
செய்தால் அந்தப் பணிகளின் தரம் கெட்டுவிடும். ஆகவே,
இந்த அரசு அந்தப் பணிகளைச் செய்வதற்கு காலத்தைக் கூடு
தலாக்க வேண்டும். தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்கு மட்டும்
மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கான விரைங்களைப்
பெற்று, அந்தப் பணிகளைச் செய்வதற்கு இரண்டு மாதங்கள்
நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்
கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை சேனல், புத்தனார்
சேனல் என இரண்டு சேனல்கள் இருக்கின்றன. தோவாளை
சேனலில் தூர் எடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது.
இதற்கு முன்பாகவே நான் இந்த சட்டமன்றத்தில் பேசுகின்ற
போது இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த அரசைப்
பொறுத்த அளவில் நல்ல பணிகளைச் செய்துக் கொண்டு வரு
கிறது. ஆகவே இந்த சேனல்களில் தூர் எடுப்பதற்கு ஏற்பாடுகள்
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால்,
தோவாளை சேனல் மூலமாக பயிராகக்கூடிய நிலங்கள் ஏறத்தாழ
12,864 ஏக்கர். இந்தப் பணிகளை உடனடியாகச் செய்ய வேண்
டியது மிக மிக முக்கியமானது என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதைப்போலவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உலக்கருவி
குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதாக அறிகிறேன்.
அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் தோவாளை,
அகஸ்தீஸ்வரம், நல்லூர் போன்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கும்
நல்ல குடிநீர் கிடைக்கும் என்பதால், அந்தக் குடிநீர்த் திட்
டத்தை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுத்துக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் பிள்ளைமார் இனம் இருக்கிறது. அவர்
கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள். ஆகவே, அந்த
பிள்ளைமார் இனத்தை பிற்பட்டோர் லிஸ்டில் இணைக்கவேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் என்ற பகுதியில்
2·78 இலட்ச ரூபாய் செலவில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்டு
வதற்கு மாநில அரசு ஒப்புக்கொண்டு, மத்திய அரசின் ஒப்பு
தலுக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதலை
விரைவாகப் பெற்று, அந்தப் பணியை சீக்கிரமாக ஆரம்பிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 6] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

நெல்லை-குமரி ரயில் பாதை வேலைகள் முடிக்கப்பட்டு பல
மாதங்கள் ஆகின்றன. ஆனால் போக்குவரத்து ஆரம்பிக்கும் சூழ்
நிலை காணவில்லை. ஆகவே, இந்த அரசு மத்திய அரசை இதற்
காக அணுகி, அந்த ரயில் போக்குவரத்தை உடனடியாக ஆரம்
பிக்க வேண்டும் என்றும், அந்த நெல்லை-குமரி டிவிஷனை
மதுரை டிவிஷனோடு இணைக்கவேண்டும் என்றும் வற்புறுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியில் வெளிநாட்டுக் கப்பல்
கள் குறிப்பாக இந்தோ-சைனா, தைவான் நாட்டுக் கப்பல்கள்
வந்து மீன் பிடித்துக்கொண்டு செல்கின்றன. இதன் காரணமாக
அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த இழப்பு ஏற்படுகிறது. இது
குறித்து ஏற்கனவே இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லி
யிருக்கிறேன். ஆகவே, நமது அரசு இதை நன்கு கவனித்து, அந்த
வெளிநாட்டுக் கப்பல்கள் நம்நாட்டு எல்லைப் பகுதிகளில் வந்து
மீன் பிடித்துச் செல்லாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை
மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்
கொள்கிறேன்.

*திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்களுக்கு பொங்கல் வாழ்த்து கூறியும்,
இந்தச் சட்டமன்றத்திற்கு என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய
என்னுடைய தொகுதி பர்கூர் மக்களுக்கு நன்றியையும் தெரி
வித்து, எனக்குப் பேச வாய்ப்பளித்த அருமை சட்டமன்றப்
பேரவை துணைத் தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, என்
உரையை துவக்குகிறேன்.

தமிழகத்தின் பெருமை உலகம் முழுவதும் பரவும் வகையில்
5 ஆவது உலகத் தமிழ் மாநாடு மதுரையிலே நடத்திய உலகப்
பெருமைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை
தந்து, இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று உறுதிமொழியை
தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துத் தந்த
மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியை
அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நமது திட்டச்செல
விற்காக ரூ. 3,150 கோடி மத்திய அரசு வழங்கியிருப்பதற்காக
நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் இப்
போது இருக்கும் பொருளாதார நிலையில் அது மிகவும் குறைவு
என்பதை நான் மிகவருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
மேலும் விவசாயிகளுக்கு நமது அரசு அதிக சலுகைகளைக்

கொடுத்தும், அவர்கள் அராஜகச் செயல்களில் ஈடுபட்டு, பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மது விலக்கைக் பொறுத்தவரையில் இந்த நமது அரசு அதை தீவிரமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து இருந்தபோதி லும், மக்கள் அதை முழுமையாக ஏற்காததன் விளைவாக பல கோடி ரூபாய்கள் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருவதோடு மட்டு மல்லாமல், கள்ளத்தனமாக மதுவைப் பலர் குடித்துவிடுகிறகார ணத்தால், சிலர் அதன் மூலம் இறக்கவும் நேரிடுகிறது என்பதால் அந்த மது விலக்கை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20).

தமிழ்நாட்டில் தென்னை மரங்கள், பனை மரங்கள், ஈச்ச மரங்கள் அதிகமாக இருப்பதால் கள் நிறைய கிடைக்கிறது. அது நல்ல உணவாகவும் இருக்கிறது. ஆகவே இதன் மீது எந்தவித மான கட்டுப்பாடும் இல்லாமல் விட்டுக்கொடுத்து அரசு இந்த ஏழை எளிய மக்களுக்கு அதை நல்ல உணவுப் பொருளாக ஆக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள் கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் பெண்களுக்கு என்று தனியாக கல் லூரி இல்லை. ஆகையால் அந்த மாவட்டத்தில் பெண்களுக்கு ஒரு கல்லூரி அமைத்துத் தரும்படி பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஹொகனேக்கல் நீர்வீழ்ச்சி யிலிருந்து மின்சாரம் எடுக்க அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் புதிய பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக திருப்பத்தூரிலிருந்து மாடறஹள்ளி செல் லும் சாலையில் இரண்டு பாலங்கள் புதிதாக அமைத்துத் தர வேண்டும். இந்த பாலங்கள் இல்லாததால் அடிக்கடி போக்கு வரத்து தடைப்படுகிறது. இந்தப் பிரச்சனை பல்லாண்டு கால மாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகள் அமைக்க பலர் அரசுக்கு நிலத்தைக் கொடுத்தாலும், அதிக அளவில் கொடுத்திருந்தாலும், ஒன்றி ரண்டு பேர்கள் கொடுக்காவிட்டால் அந்த சாலை வேலை தடைப் பட்டுவிடுகிறது. அதனால் மெஜாரிட்டியாகக் கொடுத்திருப்பவா





சாலை பயன்படாமல் இருந்துவிடுகிறது. அந்த களுக்கு அந்த சாலை பயன்படாமல் இருந்துவிடுகிறது. அந்த மாதிரியான நேரங்களில் அரசாங்கம் தலையிட்டு, தேவைப்பட்ட நிலங்களை எடுத்துக்கொள்ளும் வகையில் சட்டம் ஒன்று இயற்றி, அந்த இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணியை செய்துதர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுக்கு ஒருவர் வேலை திட்டத்தை இன்று நம்முடைய அரசு அறிவித்திருப்பதை மகிழ்ச்சியுடன் நான் வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டுமென்றும், அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அன்போடு கேட் டுக்கொள்கிறேன்.

தேங்காய் நார் தொழிற்சாலை அமைப்பதைப்பற்றி ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன். பர்கூர் நகரில் சுமார் 6 தொழிற்சாலைகள் தேங்காய் நார் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. அந்த இடத்தில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தேங்காய் நாரிலிருந்து நவீன பொருட்கள் செய்யும் தொழிற் சாலையை அமைத்துத்தர வேண்டுமென்றும் அதன் மூலம் பல பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் இந்த அரசை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூரில் பருத்தி விளைச்சல் அதிகமாக இருப்பதால் அர சாங்கம் அங்கே ஒரு நூல் ஆலையைக் கட்டி, அதன்மூலம் சுமார் 1,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தர்மபுரி மாவட்டத்தில் மழையே இல்லாத காரணத்தால், பல இடங்கள் மிக வறண்டு குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. எனவே தர்மபுரி மாவட்டத்தை முழுமையாக வறட்சிப் பகுதியாக அறிவித்து வறட்சி நீங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஊத்தங்கரை ஒன்றியத்தில் குடிநீர்ப் பிரச்சனை அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஊத்தங்கரை ஒன்றியத்தை இந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுக் காலமாக எங்கள் பகுதியில் பருவ மழை தவறிவிட்ட காரணத்தால் குடி தண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தாய்மார்கள் ஒரு மைலுக்கு மேல் சென்று தண்ணீர் கொண்டுவர வேண்டியிருக்கிறது. இந்த கஷ்டத்தைப் போக்க, எங்கள் பகுதியில் இந்த குடிநீர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கியதற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழக சர்க்கார் நல்ல திட்டங்களை இந்த மானியக் கோரிக்கையில் வைத்திருக்கிறது. பொதுவாக பல சலுகைகளை வாரி வழங்க முன்வந்திருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தவரையில் இன்று நல்ல பல சலுகைகளை அரசாங்கம் வழங்க திட்டமிட்டிருக்கிறது. காவல் துறைக்கு வழங்கியிருக்கிற சலுகைகள் போலவே நாள்தோறும் காலையிலிருந்து இரவு 8 மணிக்கு மேல் வரையில்கூட உடற்பயிற்சி செய்துகொண்டிருக்கிற பீடித் தொழிலாளர்களுக்கும், நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் தெருக்களை கூட்டுகின்ற 'ஸ்வீப்பர்கள்' கால்வாய் தள்ளுகின்ற தொழிலாளர்கள், கடைநிலை ஊழியர்கள் என்று சொல்லுகின்ற அளவிலே இருக்கின்ற தொழிலாளர்கள் ஆகியோருக்கும் அந்த சலுகைகளை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று இந்த மானியக் கோரிக்கையிலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் பெரும்பாலான ஒன்றியங்களிலே தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல ஒன்றியங்கள் அந்தத் திட்டத்தினால் பலன் பெற்று வருகின்றது. ஆனால் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படாத ஒன்றியங்களிலே இன்றையதினம் கவுன்சிலும் இல்லை, சேர்மேனும் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட பகுதிகளுக்கு சட்டமன்றஉறுப்பினரைத் தலைவராகக் கொண்ட மக்கள் குழு சொல்கின்ற ஆலோசனைக்கேற்ப அந்த ஒன்றியங்களில் காரியங்கள் நடைபெறுகின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிசைப் பகுதிகளுக்கு விளக்குகள் ஏற்றுகின்ற திட்டத்தை நம்முடைய சர்க்கார் பின்பற்றி வருகின்றது. அந்தத் திட்டத்தின் மூலம் குறைந்தபட்சம் பேரூராட்சிகளுக்காவது ட்யூப் லைட் போடுகின்ற திட்டத்தினை மேற்கொள்ளவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வறட்சிப் பகுதி என்று பல பகுதிகளை நாம் அறிவித்து இருக்கிறோம். அந்தப் பகுதிகளில் நிலவரியை ரத்து செய்திருக்கிறோம். அதாவது 50 காசு என்ற அந்த வரியை ரத்து செய்திருக்கிறோம். அதனால் விவசாயிகள் பெரும்பாலோர் பயன்பெற்றிருக்கிறார்கள், என்றாலும் அபிவிருத்தி வரி என்று போடப்படுகின்ற இரண்டு ரூபாயையும் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து கிராமப்புறங்களுக்கு எல்லாம் பேருந்துகளை விடுகின்ற திட்டத்தை நம்முடைய அரசாங்கம் விரிவுபடுத்தி செயல்படுத்தி வருகின்றது. ஆனால் பேரணாம்பட்டு பகுதியிலே இன்னும் பல கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் இல்லாத நிலை இருக்கின்றது. அங்கே சாலை வசதிகள் இருக்கின்றன. ஆனால் பேருந்துகள் இன்னும் செல்லவில்லை. ஆகவே மூலை முடுக்குகளுக்கெல்லாம் பேருந்தை விடுகின்ற திட்டத்தினை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே டேனரிங் தொழில் மிகவும் அதிகமாக இருக்கின்றது. அந்த தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் அரைக்கூலி, கால்கூலி பெற்றுக்கொண்டு மிகவும் பரிதாபமான நிலையில் இருந்து வருகிறார்கள். ஆகவே அந்த தொழிலாளர்களைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபோல அந்த டேனரிங் தொழிலுக்கு என்னென்ன இடர்பாடுகள் உள்ளதோ அவைகளையும் நீக்குவதற்குரிய வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பேரணாம்பட்டில் இருக்கின்ற மருத்துவமனையில் குறைந்தது பத்து, பதினைந்து நோயாளிகளாவது தங்குகின்ற வகையில் படுக்கைகளை ஏற்படுத்துவதற்கு மதிப்பிற்குரிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கவனித்து ஏற்பாடு செய்யவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பல இடங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று வெல்ஃபேர் பள்ளி ஏற்படுத்துகிறார்கள். ஆனால் நலங்காணூர், பேரணாம்பட்டு, ஒதியந்தூர் ஆகிய இடங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 5 மைல் 6 மைல் என்று நடந்து பள்ளிகளுக்கு வரவேண்டி இருக்கின்றது. ஆகவே அங்கே அரிசன நலப்பள்ளியை ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பகுதியிலே குடியாத்தம், பேரணாம்பட்டு, ஆம்பூர் போன்ற மிகப்பெரிய நகரங்களில் பெண்களுக்கென்று தனியான தொழில் கல்லூரிகள் கிடையாது. ஆகவே அந்தப் பகுதியிலே பெண்களுக்கென்று ஒரு தொழில் பயிற்சிக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் துணை மதிப்பீடு

களின் கோரிக்கைகளுக்கு உட்பட்டும் இதற்கு அப்பாற்பட்டும் கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். உட்பட்டு நின்று அளித்த கருத்துக்களுக்கு விளக்கங்களைத் தருதவற்குத்தான் போதுமான நேரம் இப்போது இருக்கின்றது. ஆனால் அப்பால் நின்று எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் அந்தந்தத் துறையினர் ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

ஆனால் அதை துணை மதிப்பீடுகள், முதலாண்டு மதிப்பீடுகள் என்ற முறையில் எந்தெந்த இனத்திற்கு எவ்வளவு ஒதுக்கப் பட்டிருக்கிறது என்கிற விவர குறிப்பேடுகளை என்னுடைய உரையினோடு இணைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையிலே தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. அதிலே ஏன் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ன காரணத்தினால் என்ற விவர குறிப்புகள் எல்லாம், இங்கே காட்டப்பட்டிருக்கிற புதிய செலவினங்களைப் பொறுத்தவரையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிற விவரங்கள் எல்லாம் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபற்றி கூறிய சிலபல கருத்துக்களுக்கு விளக்கம் தருவதற்கான கடப்பாட்டை நான் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் ஒரு மணியோடு இந்த விவாதங்கள் முடிவுபெற்றாக வேண்டும். அதற்குப் பிறகு நிதி ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப் பட்டாக வேண்டும். அந்த முறையிலே இந்த துணை மதிப்பீடு களுக்கு, தன் கருத்துக்களை தெரிவித்து அதன் மூலம் மேன் மேலும் பணிகள் சிறப்பாக நடைபெற வழி வகுக்கிற முறையிலே சிறப்பாக உதவி புரிந்த நண்பர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த துணை மதிப்பீடுகள் என்று வருகிறபோது—எந்தப் பொருளையும் யார் யார் எப்படிப் பார்க்கிறார்களோ அப்படியேதான் தெரியும். பொருள் அதன் தன்மைப்படியே இருந்தாலும், பார்க்கிறவர்களுடைய கண்ணுக்கு எப்படி அது பார்க்கப்படுகிறதோ அப்படித்தான் பொருள்படும்.

இதனால் அதை சாதாரணமாக ஆண்டுக்கு ஆண்டு நாம் கொடுக்கிற போது, இது ஆண்டு நிதி மதிப்பீடுகள் என்று மொத்தமாக ஆண்டு பட்ஜெட் என்று சொல்லப்படுகிறது. ஒன்றை நாம் ஆண்டு மதிப்பீடு என்று சொல்வோம். இன்னொன்றை துணை மதிப்பீடுகள் என்போம். அதற்குப் பிறகு ஓராண்டு காலத்தில்ஒட்டி ஏற்படுகிற செலவினங்களையும், அவைகளையொட்டிய கூடுதலாக ஆகின்ற செலவினங்களையும் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் அனுமதி பெறாமல் இருக்கிற செலவினங்களையும் கொண்டு வந்து வைத்து அனுமதி பெறுவதற்காகத்தான் துணை



மதிப்பீடுகள் இருக்கின்றன. ஆகவே இந்த மதிப்பீடுகளை, அதை ஆண்டு நிதி மதிப்பீடு என்றும், இதை துணை மதிப்பீடு என்றும் நாம் கூறுகிறோம்.

இந்த விவாதத்தை துவக்கிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு இந்த துணை மதிப்பீடு குட்டி பட்ஜெட்டாகவே தெரிந்திருக்கிறது. அதை தாய் மதிப்பீடாக கருதுவார்களேயானால், இது குட்டி மதிப்பீடுதான். அவரவர்களுக்கு உள்ள எண்ணங்களுக்கும் தன்மைக்கும் பொறுத்து பெயர் ஏற்படுகிறது. ஆனால் எந்த பெயர் இட்டாலும் இங்கே இருப்பது துணை மதிப்பீடுகள் தாம்.

அதைப்பொறுத்து சிலபல கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கிறார்கள். ஆகவே வருவாய் இனங்களிலே இயல்பாய் ஏற்படும் உயர்வுகளையும் இது கொண்டிருக்கும். இங்கே செலவினங்கள் காட்டப்பட்டிருக்கிறதே தவிர அதற்கான வருவாய் இனங்கள் காட்டப்படவில்லை என்ற கருத்தை அவர்கள் எடுத்துச சொன்னார்கள். புதிய செலவினங்கள் மேற்கொள்ளப்படும் போது, அரசுக்கு இருக்கும் வருவாய் இனங்களிலே இயல்பாய் ஏற்படும் உயர்வு இனங்களையும், பொது நிறுவனங்களுக்கு கொடுத்த கடன்களையும் திரும்பப் பெறுவதினையும் கணக்கில் கொள்ளப்படுகிறது. ஆகவே இது பற்றிய முழு விவரங்களையும், அது பற்றிய மதிப்பீடு (பட்ஜெட்) வைக்கப்படுகிறபோதுதான் அறிந்து கொள்ள முடியும்.

1980–81 ஆம் ஆண்டிற்காக ஆண்டு மதிப்பீடுகள் வைக்கிற போது திருத்தப்பெற்ற மதிப்பீடுகள் வருகிறபோது செலவினங்கள் எந்தெந்த வருவாய்களின் அடிப்படையில் காட்டப்படுகிறது போன்ற விவரங்களை எல்லாம் காணலாம். ஆனால் துணை மதிப்பீட்டிலே வருவாய்களினுடைய வகைகள் போன்ற விவரங்களை காண முடியாது. ஆகவேதான் அவ்வப்போது ஏற்படுகின்ற உயர்வுகளையும் கூட கணக்கிலே எடுத்துக்கொண்டு புதிய செலவினங்களை செய்கிறோம். அது மட்டும் அல்லாமல் எதிர்பார்த்திருக்கக் கூடிய சில கடன் வருவாய்கள் வரும். அந்தக் கடன் வருவாய்களினுடைய வகைகளை வைத்துக் கொண்டு நாம் சில செலவுகளையும் செய்கிறோம். அதனுடைய முழு விவரங்களையும் திருத்த மதிப்பீடுகள் வருகிறபோது, இந்தஆண்டு மதிப்பீடுகளைப்பற்றிய விவாதங்கள் நடைபெறுகிற போது அது பற்றிய கருத்துக்களையும், மற்றவைகளையும் வழங்க வாய்ப்பும் இருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன்.

இந்த ஓவர் டிராப்ட் என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இந்த அரசினுடைய நிலையைப் பொறுத்தவரையில் ஓவர் டிராப்ட் என்பதே இல்லை என்பதை பெருமையோடு கூறிக்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 6

கொள்கிறேன். ஓவர் டிராப்ட் வாங்க வேண்டிய நிலையும்
இல்லை. அது வாங்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு
நிதிநிலைமை மிக பத்திரமாக காப்பாற்றப்படுகிற அளவிற்கு.
எந்தெந்த வகையிலே அதைக் கோடிட்டுக்காட்ட முடியுமோ
அந்தந்த அளவுக்கு முடியும். ஆனால் ஓவர் டிராப்ட் வாங்கவே
கூடாது என்பது அல்ல. எத்தனையோ மாநிலங்களிலே அப்படி
ஓவர் டிராப்ட் வேண்டுமென்று கேட்டு வாங்கியிருக்கிறார்கள்.
அது மட்டுமல்ல வைர்டிராப்ட் வாங்குவதற்கு ஒரு மாநிலத்திற்கு
தகுதி இருக்கிறதா இல்லையா என்று பார்த்துத்தான் தருவார்கள்.
என்ன தகுதி என்றால், அந்த ஓவர் டிராப்ட்டை திருப்பி தரு
வதற்கான வழிவகைகள் இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்
டால் ஓவர் டிராப்ட் தரமாட்டார்கள். ஓவர் டிராப்ட் தரு
கிறார்கள் என்றாலும் கூட, திருப்பிக் கொடுக்கிற வாய்ப்பும்,
மற்ற நிதி ஆதாரங்களையும் பார்த்துக் கணக்கிட்டுப் பார்த்த
பிறகுதான் தருவார்களே தவிர, கணக்கிடாமல், பார்க்காமல்
தரமாட்டார்கள். அப்படி பல மாநிலங்கள், 3 மாதம் 6 மாதங்
களுக்கு ஒரு முறை என்று ஓவர் டிராப்ட் வாங்கியிருக்கிறார்கள்.
அவற்றை திருப்பிக் கட்டிவிடுவதும் உண்டு. நம்முடைய மாநிலத்
தைப் பொறுத்தவரையிலும், ஓவர் டிராப்ட் என்பதே இல்லை
என்பதைத்தான் நான் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்தைப் பொறுத்தவரையில் முழு
விவரக் குறிப்புகளும் பிறகு, அது முழுமை அடைந்ததற்குப் பிறகு
இந்த அவை முன்னால் வைக்கப்படும்.

ஆறாவது ஐந்தாண்டுத்திட்டம் பற்றிய தன்மையில் ரூ. 3,150
கோடி இருப்பதினால் 1980-81 ஆம் ஆண்டுக்கு 630 கோடியா
வது இருக்கவேண்டுமே என்ற கருத்து இங்கே தெரிவிக்கப்பட்டது.
ஐந்தாண்டுக் காலத்தில் இந்த 3,150 கோடி ரூபாயையும் செல
வழிப்பதற்கான திட்டங்களைத் தீட்டி அதைச் செலவழிப்பதற்
கான வழிவகைகளை காணவேண்டுமென்பதுதான் கணக்கே தவிர
அது ஒரு ரிக்கரிங் எக்ஸ்பென்ஸாக, தொடர்செலவாக அமை
யுமே தவிர ஆண்டுக்காண்டு சராசரி இவ்வளவு என்று கணக்கிட
முடியாது. திட்டக் குழு கூட 1980-81-க்கு 411 கோடி ரூபாய்
என்றும் 1981-82-க்கு 514 கோடி ரூபாய் என்றும் வைத்தார்கள்.
ஆனால் மொத்தத்தில் 3,150 கோடி என்று நாம் ஏற்றுக்கொண்
டிருக்கிறோம் என்றால், இந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்த
3,150 கோடி ரூபாயை—இறுதியில் ஆண்டுக்காண்டு பெருகக்
கூடும். அதற்கான வசதிவாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ளக்
கொள்ள நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ளக்கொள்ள
இதன் அளவும் தன்மையும் பெருகக்கூடும்.

சென்ற ஆண்டு 1980-81-க்கு 411 கோடி என்றிருந்தது.
1981-82-க்கு 514 கோடியாகத் தரப்பட்டிருக்கிறது. ஆக
1982-83, 1983-84, 1984-85 என்று வருகிறபோது இந்த



1981 பிப்ரவரி 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளவிற்குக் கூடுதலாக அமையும், கூடுதலாக அமையத்தக்க
அளவிற்கு நிதி ஆதாரங்களை நாம் திரட்டி வைக்க
நடவடிக்கைகள் பலவற்றை எடுக்கவேண்டிவரும்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் சொன்னார்கள்.
மின் கட்டணவருவாய் உற்பத்திச் செலவைச் சரிக்கட்டியபிறகு
இன்று செலவு ஓரளவு இருப்பதால் அரசாங்கம் உதவி செய்ய
வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதில் வருகிற வரு
வாயை வைத்துக்கொண்டு எல்லாம் நடத்துவது மட்டுமல்ல,
மேற்கொண்டு அதை விரிவுபடுத்த, அதைச் செம்மைப்படுத்த
வேண்டுமென்றால் அதற்கு நிதி ஆதாரங்கள் போதுமான அளவு
இல்லை. நாம் மின்சார வாரியம் என்று வைத்திருக்கிறோமே
தவிர அதை நடைமுறைப்படுத்துகிற அளவிற்கு ஒரு நிலையை,
தன்மையையொட்டி அதை வாரியமாக்கினோமே தவிர அதில்
போட்டியிருக்கிற பணம் முழுவதும் அரசாங்கப் பணம்தான்,
அதை அரசாங்க நிறுவனம் என்றுதான் சொல்ல வேண்டும்.
அரசாங்கம் இதை ஒரு துறையாக வைத்து நடத்தினால் அதற்கு
கடன் வழங்குவது, செலவழிப்பதுபோன்ற பல இடர்பாடுகள்
ஏற்படும் என்ற காரணத்தினால்தான் அதை ஒரு கார்ப்பரேஷன்
அல்லது வாரியம் என்று கொண்டு வந்திருக்கிறோம். ஆனால்
அதைக் காப்பாற்றவேண்டியதில், அதன் தன்மையை நோக்கத்தை
நிறைவேற்ற வேண்டியதில் அரசுக்கு பொறுப்பு இருக்கிறது.
ஆகவே கூடுதலாக அதற்கு ஓரளவு செலவு இருக்கும்போது ஆண்டு
தோறும் அரசாங்கம் மின்வாரியத்திற்கு நிதி உதவி அளிக்கவேண்
டிய அவசியம் வருகிறது. இருந்தாலும் அது அரசாங்கத்திற்கு
செலுத்தவேண்டிய கடன் கணக்கில்தான் இருந்துவரும். ஆனால்
இந்த ஆண்டு 75 கோடி ரூபாய் வாரியத்திற்கு உதவியாக ஒதுக்கப்
பட்டது. உரையில் குறிப்பிட்டிருக்கிற காரணங்களின் அடிப்
படையில் 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் மின்சார
வாரியத்தின் அடிப்படைத் தேவை இன்னும் பற்றாக்குறையாகத்
தான் இருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம்
நிறைவேற்றி மின்சார உற்பத்தியைப் பெருக்கினாலும் கூட
போட்டிருக்கிற கணக்குப்படி, நம் தேவை மற்றவை எல்லாம்
கணக்கிட்டுப் பார்க்கும்போது ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட
இறுதியிலும்கூட பற்றாக்குறை இருக்கும் என்ற கணக்கில்தான்
இருக்கிறது. அதைச் சமாளிப்பதற்கு விரிவான திட்டங்கள்
போடுவது பற்றி மத்திய அரசினுடைய உதவி வந்தாலொழிய
அத்தகைய நிலைகள் வராது.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
சொல்கிறபோது, எலக்ட்ரிஸிட்டி போர்ட் டெபிஸிட்டில் இருக்
கிறது என்று சொன்னார்கள். அதற்காக நாம் கடன் கொடுத்து
இருக்கிறோம் என்றும் கூறுகிறார்கள். ஆனால் ஆறாவது ஐந்
தாண்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் வாங்கச் செல்கிற போது,
பைனான்ஷியல் ரிசோர்ஸஸ் பற்றி என்ன ஆதாரங்களை குறிப்

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 6

பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள்? 217 கோடி ரூபாய் எங்களுக்கு மின்சார வாரியத்திலிருந்து வரும், அதனால் பைனான்ஷியல் ரிசோர்ஸஸ் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஏற்கனவே டெபிஸிட் என்ற நிலை இருக்கும்போது மின்வாரியத்தின் மூலம் 217 கோடி ரூபாய் வரும் என்று எப்படி எதிர்பார்க்கிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், திட்டக் குழு சில பல விளக்கங்களைக் கேட்கிறது. அதற்கு சமாதானம் சொல்ல வேண்டிய அவசியமும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளையும் சொல்ல வேண்டிய அவசியமும் இருக்கிறது. உடனடியாக ஏற்படுகிற செலவினத்தைப் பொறுத்த வரையில், கடன் வகையில்தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். இதை வசூலிக்க வேண்டிய அளவிற்கு, மேற்கொண்டும் வசூலிக்க வேண்டும் என்று நாம் எடுத்துச் சொன்ன காரண காரியங்களை திட்டக் குழு ஒப்புக் கொண்டதால்தான் ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறதே தவிர, நம்மால் நிறைவேற்ற முடியாது என்றால், வேறு பல நிலைமைகள் ஏற்படுகிறது என்றால் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அப்போது திட்டத்தின் அளவைக் குறைக்கச் சொல்வார்கள். நாம் கிட்டத்தட்ட 3,150 கோடி ரூபாய் என்று சொல்கிறோம். இதே அளவு மக்கள் தொகை இருந்தும் மகாராஷ்ட்ராவின் வருவாய் நிலை மற்றவை அதிகமாக இருப்பதால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஆறாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கேட்டு மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. நாமும் கூட அப்படிக் கேட்கலாம்.

[பிற்பகல் 12-40]

இப்போது ஒப்புக் கொண்டிருக்கிற அளவு இந்த அரசால் முடியும் என்று ஏற்றுக் கொண்டதன் காரணமாக ஆண்டுக்காண்டு போடுகின்ற திட்டத்தின் அடிப்படையில் மாறுதல்கள் வருமானால் மத்திய அரசு திட்டக் குழுவுக்கு எடுத்துச் சொல்லி ஆவன செய்யப்படும்.

திரு. துரைமுருகன் : விளக்கம் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன். பினான்ஷியல் ரிசோர்சஸ் என்று எலக்ட்ரிசிடி போர்டில் இருந்து 217 கோடி ரூபாயை நிதி ஆதாரமாகக் காட்டுகிறீர்கள். அதே நேரத்தில் பற்றாக்குறை காரணமாக எலக்ட்ரிசிடி போர்டு சர்க்காரிடத்தில் இருந்து கடன் வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. இரண்டுக்கும் முரண்பாடாக இருக்கிறது. ஏற்கனவே பற்றாக்குறை இருக்கும்போது கடன் தந்து கொண்டிருக்கும்போது இந்த நஷ்டத்தை ஈடுகட்டி அதற்கு மேல் 217 கோடி ரூபாய் நிதி ஆதாரம் வந்து எப்போது திட்டத்தைச் செயலாற்றப் போகிறீர்கள்? இரண்டுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை விளக்குவார்களா?



1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய
முழு விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லையே தவிர,
மாண்புமிகு துரைமுருகனுக்கு வந்த சந்தேகம் திட்டக் குழுவுக்கு
வரவில்லை. அவர்களுக்கு இந்தச் சந்தேகம் வந்திருக்குமானால்
ஒப்புதல் தரமாட்டார்கள். இப்போது விளக்கிச் சொல்ல
குறிப்புகள் இல்லாவிட்டாலும் தனியாகக் கேள்வி போட்டாலோ
அல்லது வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கக் குறிப்புகளைச்
சொல்லத் தயாராக இருக்கிறேன். திட்டக் குழுவுக்குத் திருப்தி
ஏற்படாமல் வழி வகைகளைக் காணாமல் ஒப்புக்கொள்ள
மாட்டார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கு மேலும் பல உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதி
பற்றிய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.
அவற்றை எல்லாம் அடுத்து வரும் நிதிநிலை அறிக்கையின் போது
ஒவ்வொரு மானியக் கோரிக்கைகளும் வரும்போது தெளிவாக
அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் கண்டறிந்து
என்னென்ன வழிகள் செய்யலாம் என்பதைப் பற்றி பரவலாக
எடுத்துச் சொல்வார்கள்.

உலகத் தமிழ் மாநாடு தொடர்பாக 1980-81-ல் போட்ட
மதிப்பீடுகள் மூலமாக நிலையாக ஏற்படுத்தப்பட வேண்டிய
செலவினங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. சில செலவினங்
கள் 1981-82-ல் செய்யப்பட வேண்டியவையும் இந்தத் துணை
மதிப்பீட்டில் காட்டப்பட்டிருக்கின்றன. இது பற்றி ஓரளவு
விவரங்களை நேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே
தெரிவித்தார்கள். இதற்குப் பிறகு முற்றும் கணக்குகள் எலலாம்
தணிக்கையான பிறகு உலகத் தமிழ் மாநாட்டையொட்டி நிலை
யாக ஏற்பட்ட செலவுகள், உலகத் தமிழ் மாநாட்டுக்காக
ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றின் முழு விவரக் குறிப்பையும்
இந்த அவையில் வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை
வைக்கின்ற போது முழு விவரங்களும் தெரியக் கூடும்.

விலைவாசிகள் உயர்வு மற்றவைகள் பற்றி உறுப்பினர்கள்
குறிப்பிட்டுச் சொன்னார்கள். விலைவாசிகள் ஏறுகிற அளவுக்கு
அடிப்படையாக பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வு
அமைந்திருக்கிறது. அந்த உயர்வு எல்லா நாடுகளையும் பாதித்து
இருக்கிறது என்பதை பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் சொல்
லியிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.
இப்போது எண்ணெய் உற்பத்தி செய்கிற நாடுகள் எல்லாம்
உலகத்தில் 1970-ல் ஒரு பாரல் ஆயிலுக்கு 1 டாலர் 80 சென்ட் விலை
கூடி, இருந்ததை இப்போது 32 டாலர்கள் 41 சென்ட் என்ற அளவுக்கு
உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் உயர்த்துவதாகவும் முடிவு
செய்திருக்கிறார்கள். இது உலகெங்கும் பாதித்திருப்பதோடு
மட்டுமல்ல, இந்தியாவிலும் பாதித்திருக்கிறது. இந்தியாவை

பாதித்திருப்பதோடு மட்டுமல்லாமல் இந்திய அரசாங்கம் எக்ஸைஸ் வரியை ஏற்றியதன் காரணமாக அதிமான விலை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் பற்றாக் குறையை ஈடுகட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக சென்ற ஆண்டு டீசல், பெட்ரோல் ஆகியவைகளுக்கு எக்ஸைஸ் வரியை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு 2,600 கோடி ரூபாய் பற்றாக்குறையை தீர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொன்னார்கள். பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் போது மற்றைய பண்டங்களை அகற்று கின்ற பொறுப்பை ஏற்கும் தன்மையில் டிரான்ஸ்போர்ட்டுக்கு அதனுடைய வாடகை ஏறுகின்ற போது, எடுத்துச் செல்லுகிற பொருள்களுக்கும் விலைகள் ஏறுகிற நிலை இந்தியா முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் உலகத்தில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு மாறுதல்கள் இந்தியாவையும் பெருமளவு பாதித்து இருக்கிறது. இந்தியா முழுவதும் ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் தமிழகத்தையும் சேர்ந்துத்தான் பாதிக்கும். அந்த வகையில் வரி உயர்வு, மற்றவைகள் காரணமாக இங்கும் விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூட "Prices of essencial goods are still high" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே உயர்ந்த நிலையில்தான் இருக்கின்றன, கீழே கொண்டுவருவதற்கு வழியில்லை என்று தெரிவித்திருக்கி றார்கள். அவைகள் எல்லாம் பொருளாதாரப் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. சென்ற ஆண்டு இன்பிளேஷன், பண வீக்கம் 20 சதவீதம் ஏற்பட்டிருக்கிறது என்று பொருளாதாரத் தன்மை களை, பொருளாதாரத்தை விரிவாக எடுத்துரைக்கின்ற ஏடுகள் சிறப்பாகத் தெரிவித்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது இந்தியா முழுமையும் பாதிக்கப்படுகிறபோது மாநிலமும் பாதிக்கப்படுகிறது, அதன் காரணமாக மாநிலத்திலே பல்வேறு பொருள்களின் விலைகள் ஏறுவதற்கும் போக்குவரத்து பொருட்கள் விலை ஏறுவதற்கும் காரணமாக அமைந்து விடு கின்றன. மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், "The prices of these Commodities have shot up, and the price rise of sugar, jaggery, edible oil, and pulses was nearly 50 per cent higher than in the last year." என்று. ஆகவே சென்ற ஆண்டைப் பொறுத்தவரையிலே 50 சதவீதம் ஏறவேண்டிய தன்மைகள் வந்ததன் காரணமாக நுகர் வோருக்கும் அதிகப்படியான விலைகள் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எந்த அளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்று முயன்று வருகிறோம் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்தியா முழுமையும் பாதிக்கப்படுகிற [illegible] நிலையில் இந்த மாநிலத்தையும் அது பாதிக்கிற தன்மை [illegible]





தால் அதையும் நாம் தாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த மாநிலம் புதிய வரிகள் போட்டதன் காரணமாகவோ அல்லது ஏற்கனவே உள்ள வரிகளை உயர்த்தியதன் காரணமாகவோ விலை உயரவில்லை. 1980-81 ஆம் ஆண்டிலே. ஆனாலும் எந்த எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டுமோ அந்த அளவுக் குக் கட்டுப்படுத்த நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். விலை வாசியினுடைய அளவை, முக்கியமான பெரு நகரங்களைப் பார்க்கிறபோது நாம் ஓரளவிற்குக் கட்டுப்படுத்துகிற சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறோம். அதிலேயும் ஓரளவுக்கு ஆங்காங்கே தவறுகள் ஏற்படுகின்றன என்று மாண்புமிகு உறுப் பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அப்படிப்பட்ட தன்மைகள் காரணமாகப் பொருட்கள் நியாயமான விலைக்குக் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதற்குக் காரணம் போலி கார்டுகள் கொஞ்சம் அதிகப்படியாக இருக்கின்றன என்ற குற்றச் சாட்டுகள் இருக்கின்றன. ஆங்காங்கு போலி கார்டுகளை வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. 300, 400 கார்டுகள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி போன்ற நகரங் களிலே வாங்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகளுடைய கண்களுக் கும் கைகளுக்கும் அகப்படாமலே ஆங்காங்கே பரவலாக இருக் கின்றன. ஆகவே பொது மக்களுடைய நல்ல ஒத்துழைப்பும் ஆதரவும் இருக்குமானால் நல்லது. ஆகவே பழைய கார்டுகளை ஒரு கட்டத்திலே ரத்து செய்துவிட்டு ஒவ்வொருவரையும் கணக்கு எடுத்து புதிய கார்டுகளை அதற்கு ஒரு தனி வண்ணம் கொடுப்ப தன் மூலமாக அதிலே ஏற்படுகிற தன்மைகளை அடக்கலாமா என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறோம். சில பல இடங்களிலே நியாயவிலைக் கடைகளிலும் கூட்டுறவுச் சங்கங் களிலும் வாங்குகிறவர்கள், 40, 50, 60 கார்டுகளை ஒன்றாகவே சேர்த்துக் கொடுத்து அதற்குரிய பண்டங்களை வாங்கிக் கொண்டு போகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்த பிறகு 40, 50, 60 கார்டுகள் என்று யாராவது சேர்த்துக் கொண்டால் அவைகளை அப்படியே பறிமுதல் செய்யவும், உரியவர்கள் தனித்தனியாக வந்து வாங்க வேண்டுமே தவிர ஹோட்டல் முதலாளிகளோ அல்லது மற்றவர்களோ அவைகளைக் கொண்டுவரவேண்டாம் என்றும் நாம் சொல்லியிருக்கிறோம். அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்குமானால் அதை ஓரளவுக்குச் சீர்படுத்த முடியும், இன்னும் சிறப்பாக அது இருக்கும்.

வேறு பல மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது சர்க்கரை ஒரு கிலோ 13, 14, 15, 16 ரூபாய்க்கு ஏறியிருக்கிற நிலையில் இப் போது வெளி மார்க்கட்டிலே $6\frac{1}{2}$ ரூபாய்க்கும், லெவி சர்க்கரை என்றால் $3\frac{1}{2}$ ரூபாய்க்கும் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. 15,500 டன்கள் இந்த மாநிலத்திற்குத் தந்துகொண்டு வரு கிறார்கள். ஆகவே நாம் வெளி மார்க்கட் சர்க்கரையை வாங்கி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 பிப்ரவரி 6

வைத்து திருமணங்கள் போன்றவற்றிற்கும் விசேஷங்கள் போன்ற வற்றிற்கும் நாமே ஓரளவுக்குக் கட்டுப்படுத்துகிற விலைக்கு விற்கிற பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கிறோம். ஆனால் அதிகமான அளவுக்கு ஒதுக்குவார்களானால் விடுதிகளுக்கு— மாணவர்கள் விடுதிகளுக்குத் தேவையானதை முழுவதையும் கூட நாமே நிறைவேற்ற முடியும். அதனுடைய அளவைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் சொல்கிறபோது டீசல் ஆயில், பெட்ரோலுக்கு மத்திய அரசு போடுகிற எக்சைஸ் வரியை எடுத்துவிடுவார்களானால், நாமும் போடுகிற சேல்ஸ் டாக்சை எடுத்துவிடுவோமானால் மற்றவர்களுக்கு நன்மை ஏற்படும், போக்குவரத்துக் கட்டணங்கள் உயராமல் இருக்கும் என்று சொன்னார்கள். கருத்து நல்ல கருத்துதான், யோசனையும் நல்ல யோசனை தான். ஆனால் மத்திய அரசு கேட்குமா என்பதும் நாம் பல முறைகள் எடுத்துச் சொல்லியும் அமைச்சர்கள் மாநாட்டில், உணவு அமைச்சர்கள் மாநாட்டிலும் மற்றவற்றிலும் எடுத்துச் சொன்னாலும் கூட அவர்கள் இருக்கிற பற்றாக் குறைக்கு ஒன்று புது வரி போட வேண்டும் அல்லது யாராவது கடனாவது தரவேண்டும் அல்லது நோட்டாவது அடிக்க வேண்டும்.

[பிற்பகல் 12-50]

இந்த மூன்று வகையிலும் மத்திய அரசாங்கத்தினுடைய பட் ஜெட், அவர்களுக்கு ஓவர் டிராப்ட் என்று வராது, மாநிலங் களுக்குத்தான் ஓவர் டிராப்ட் என்று வரும்.

திரு. ப. நெடுமாறன்: . மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, நம்முடைய மதிப்பிற்குரிய நிதியமைச்சரவர்கள் நான் சொன்ன யோசனையைப் பற்றி இங்கே சொன்னார்கள். நான் எல்லோருக்கும் அந்த எக்சைஸ் வரியை விலக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மத்திய அரசாங்கம் இந்த எக்சைஸ் வரியைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும், மாநில அரசும் அது விதிக்கின்ற விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தால் அரசாங்கப் போக்கு வரத்து பஸ் கட்டண உயர்வைத் தடுக்கலாம். எனவே, தனியார் துறைக்குக் கொடுக்கவேண்டுமென்று நான் சொல்ல வில்லை. ஆகவே, இந்த யோசனையை நம்முடைய மதிப்பிற் குரிய நிதியமைச்சரவர்கள் மத்திய மாநாட்டிலே சொன்னதாகச் சொன்னார்கள். இந்த அவையிலேயேயும் ஒரு தீர்மானமாக இந்த அரசு கொண்டு வருமேயானால் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களும் ஆதரிப்பதற்கு வசதியாக இருக்கும். அப் படியொரு தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்புவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கூறியதைப்போன்ற அப்படிப்பட்ட ஒரு சலுகையைத் தந்தால் நல்லதுதான். அதை வாய்ப்பு ஏற்படும்பொழுது வற்புறுத்துவதிலேயும் கஷ்டமில்லை; வற் புறுத்தலாம். அரசாங்க பஸ் கட்டணம் ஏறாமல் பார்த்துக் கொள்வதற்கு இந்தச் சலுகைகள் தரப்படுமேயானால் இந்தக் கட்டணத்தை உயராமலே வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தக் கருத்தை வாய்ப்பு ஏற்படும்பொழுது சொல்லலாம். நான் சொன்னாலும் ஒன்று தான்; இந்த அவை தீர்மானம் நிறைவேற்றிச் சொன்னாலும் அங்கே வருகின்ற பதில் ஒன்றாகத்தான் இருக்கும் என்ற காரணத் தால் அதையே கஷ்டப்பட்டு எடுத்துச் சொல்லாமல், நிலைமை களைச் சொல்லலாம். ஆனால் இதை ஆதரிப்போமேயானால் பிறகு அரசாங்கத்தினுடைய பஸ்ஸிலே கட்டணம் குறைவாக வும், தனியார் பஸ் கட்டணம் உயர்வாகவும் வருகின்றபொழுது அப்படியொரு போராட்டங்கள், மற்றவைகள் எல்லாம் வரக்கூடும். ஆனாலும் மத்திய அரசு குறிப்பிட்ட சிலபல இனங்களுக்கு ஒரே தடவையிலே வரி போடுவதன் மூலம் ஒரு கணிசமான அளவிற்கு நிதி வசதி வேண்டுமென்று எதிர்பார்க்கும் நிலையில், அவர்கள் பெட்ரோல், டீசல் ஆயில் போன்று, எல்லோரும் சேர்ந்து செலுத்துகின்ற வரியின்மீது போட்டால் தான் கணிசமான அளவிற்கு வரும். இல்லாவிட்டால் 15 கோடி 20 கோடி, 50 கோடி, 60 கோடி என்ற அளவிற்குத்தான வரும் எக்சைஸ்வரி, மற்றவைகளை மத்திய அரசு அவர்களுடைய நிதி நிலைமைக்கேற்ப உயர்த்த வேண்டிய கட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். ஆகவே, இங்கே கொடுக்கின்ற தன்மைகளைப் பொறுத்தவரையிலே மத்திய அரசு பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டுமென்று எடுத்துச் சொல்கிறோம். இந்திய அரசாங்கம், அவர்கள் ஓரளவிற்கு எடுத்துச் சொன்னது மாதிரி, 60 சதவிகிதம் வெளிநாடுகளிலேயிருந்து வருகிறது; 40 சதவிகிதம் இந்தியாவிலே உற்பத்தியாவதன் காரணமாக 60 சதவீதம் வெளியிலேயிருந்து வந்த பிறகு, இந்தியாவிலே உற்பத்தியாவதையும் சேர்த்து சராசரி விலையினுடைய அடிப்படையிலே பார்க்கும் பொழுது, ஏனென்றால் ஏறத்தாழ மற்றைய விலைகளெல்லாம் ஏறுவதற்கு இது காரணமாக இருக் கின்ற காரணத்தினாலே இது உயராமல் இருக்க வேண்டுமென்ற கருத்து ஏற்கெனவே பல தடவை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் வாய்ப்பு ஏற்படும்பொழுது இந்த அரசு தெரிவிக்கும் என்ற தன்மைகளை நான் எடுத்துக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

அது போன்று நெல் கொள்முதல் மற்றவைகள் முதலியவற்றைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே வரும்பொழுது நான் குறிப்பிட்டேன். ஆகவே, போட்டு பத்து பதினைந்து நாட்கள் ஆகின்றன. இதில் உள்ள குறைபாடுகளை அறிந்து மறுபடியும் இதிலே ஏதாவது திருத்தம் செய்து, பொதுமக்களுக்கும் மற்றவர்களுக்கும் கஷ்டம் ஏற்படாமல் செய்ய என்ன செய்யலாமோ அதைச் செய்யலாம் என்று இருக்கிறேன். அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் ஆங்காங்கு இருக்கின்ற ரிப்போர்ட்டுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்தக் கொள்முதலிலே லெவிக்கு ஒரு மூவ்மெண்ட் ரெஸ்ட்ரிக்ஷன் இம்போஸ் செய்திருக்கிறீர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அகில இந்தியா முழுவதும் ஒரே ஸோனாக வைத்திருப்பதன் காரணமாக நாம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவதைத் தடுக்க முடியாது. இந்த மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போக இப்பொழுது உரிமை உண்டு.

திரு துரைமுருகன் : வித் இன் தி ஸ்டேட் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநிலத்திற்கு மாநிலம் போகலாம் என்று சொல்லும்பொழுது மாவட்டத்திற்கு மாவட்டம் போகக் கூடாது என்று சொல்ல முடியாது. ஆனால் அதைக் கட்டுப்படுத்தும் அளவிற்கு வரும்பொழுது யார் யார் மொத்த வியாபாரிகளாக இருக்கிறார்களோ அவர்களுக்கு 40 சதவீதம் என்று வைத்திருக்கிறோம். ஆக. 40 சதவீதம் என்பது 1976-77லேயே இருந்த ஒன்று. 1979-லே 50 சதவீதம் ஆயிற்று. தேவைகள் நிறைவேறிய பிறகு அதைக்கூட விட்டு விடலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த 40 சதவீதம் லெவி என்று போட்டு அதில் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக— நான் காலையிலே உணவு அமைச்சரவர்களிடத்தில் பேசியிருந்தேன்— மொத்த வியாபாரிகள் வாங்கினால்தான் 40 சதவீதம் என்றும், கூட்டுறவுச் சங்கங்களின் சார்பில் வாங்கினால் போக்குவரத்துக்கோ 40 சதவீத லெவி கொடுக்க வேண்டியதில்லை என்று இருக்கின்ற காரணத்தால் சில தவறுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.





ஏனென்றால், சில வெளி மாவட்டங்களிலே, பார்டர் ஏரியாக்களிலே, இருக்கக்கூடியவர்கள் கூட்டுறவுச் சங்கம் என்று வைத்திருப்பதைப் போல் தவறான முறையிலே அவர்கள் வாங்குவதைப்போல், அதே பில்லிலே, அதே வவுச்சரிலே, தஞ்சாவூரிலே அல்லது திருச்சிப் பகுதியிலே கொள்முதல் செய்துகொண்டு, எடுத்துக் கொண்டு போய்விடுவார்களே? ஏற்கெனவே, கூட்டுறவுச் சங்கங்களே வாங்கினால் கூட, அதற்கு லெவி கொடுக்க வேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த சமயத்திலே இருந்தது. ஆகையினால், இதில் தவறு வந்து விடுமே, அதைப் பற்றி ஏதாவது அரசாங்கம் புனர்பரிசிலனை செய்து, அதைத் திருத்தி, தவறு நடைபெறாமல் பார்த்துக்கொள்ள முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. உறுப்பினர்கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னிடத்திலே காலையிலே பேசியபொழுது கூட, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். 1977-லேயே இப்படித்தான் இருந்தது. கூட்டுறவுச் சங்கத்திலேயும் 40 சதவீதம் வாங்கலாம், மற்ற வியாபாரிகளிடத்திலேயும் வாங்கலாம் என்று இருந்தது. கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வாங்குவது பெரும்பாலும், 17 ஆயிரத்துச் சில்லறை நியாய விலைக் கடைகளின் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற அளவுக்கு வருகின்ற பொழுது, பொதுவாக வாங்குகிற கார்டுதாரர்களுக்கு விலை குறைவாக இருக்கக்கூடுமே என்றுதான் அவர்களுக்கு லெவி விதிக்காமல், அவர்கள் கொள்முதல் செய்து கொள்ளலாம் என்று இன்று வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்வது போன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாம் கொடுக்கின்ற அந்தச் சலுகையை வாய்ப்பைப் பயன்படுத்தி, யாராவது ஏமாற்றுகிறார்கள், அல்லது கூட்டுறவுச் சங்கம் தானா இல்லையா என்று தெரியாமல் இருக்கின்ற நிலைமையிலே வாங்கிக்கொண்டு போய் விடுவார்களானால், அதனால் தவறுகள் ஏற்படக் கூடுமே என்று வருமானால், அது கவனிக்கப்படவேண்டிய ஒன்று. அதைப் பற்றி நான் ஆராய்கிறேன், அதிலே, ஏதாவது தவறுகள் நடக்கும் என்கின்ற நிலைமைகள் இருக்குமேயானால் அதை மறு பரிசிலனை செய்யவும் நான் ஆயத்தமாக இருக்கிறேன் என்று அவரிடத்திலே குறிப்பிட்டேன். இந்த அவையிலும் குறிப்பிட விரும்புகிறேன். அதன்மூலமாகப் பல பேர்கள் பல இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வார்களானால், நம்முடைய நோக்கமே நிறைவேற முடியாமல் போய்விடும். எந்த லெவியின் மூலமாக நாம் கொள்முதல் செய்து, ப.'.பர் ஸ்டாக் வைக்க வேண்டுமென்று கருதினோமோ, அது நிறைவேறாமல் போய்விடும். நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் வேண்டாமென்று சொன்னதற்குக் கார

## நிறைவேற்றப்பட்ட துணை மானியக் கோரிக்கைகள் 1980—1981

### A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| கோரிக்கை | 4 | பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 3 |
| ஷை | 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 3,89 |
| ஷை | 11 | மாவட்ட நிர்வாகம் .. | 1,81,87 |
| ஷை | 14 | சிறைச்சாலைகள் .. | 1 |
| ஷை | 15 | காவல் துறை.. .. | 4,37,99 |
| ஷை | 17 | கல்வி.. .. .. | 40,28 |
| ஷை | 18 | மருத்துவம் .. | 76,26 |
| | 19 | பொதுச் சுகாதாரம் .. | 5,67,50 |
| கோரிக்கை | 20 | வேளாண்மை .. | 1,05,95 |
| ஷை | 21 | மீனளம் .. .. | 1,29 |
| ஷை | 23 | கூட்டுறவு .. .. | 2,84 |
| ஷை | 24 | தொழில்கள் .. | 17,58 |
| ஷை | 25 | சின்கோனா .. .. | 8,30 |
| ஷை | 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. .. .. | 82,04 |
| — | 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | 1,71 |
| ஷை | 30 | சமூக நலன் .. .. | 27,41 |
| ஷை | 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர்கள் முதலியவர்களின் நலன். | 13,78 |
| ஷை | 33 | வீட்டு வசதி .. | 3,37 |
| — | 38 | பொதுப் பணிகள் — பணியாளர் அமைப்பும் கருவிகளும் தளவாடமும். | 15,39 |
| ஷை | 39 | சாலைகளும் பாலங்களும். .. .. | 1,90,83 |
| ஷை | 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 9,19 |
| ஷை | 43 | பல்வகை .. .. | 10,52 |
| | | மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு .. | 17,98,29 |





### B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 48 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 13,56 |
| ஷை | 49 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 1,45,00 |
| ஷை | 50 | பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 21,56 |
| ஷை | 51 | பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. .. | 1,06,26 |
| ஷை | 52 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச்செலவு. | 1 |
| கோரிக்கை | 54 | காட்டுவள மூலதனச் செலவு. .. .. | 16,57 |
| ஷை | 55 | பல்வகை மூலதனச் செலவு. | 1,45,50 |
| | | மொத்தம்—B. மூலதனக் கணக்கு | 4,48,46 |

### C. கடன்களையும், முன்பணங்களையும் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்துதலும்.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|---|---|
| கோரிக்கை | 56 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 27,92,85 |
| | | பெரு மொத்தம் .. | 50,39,60 |

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.] [1981 பிப்ரவரி 6

ணமே நியாய விலைக் கடைகள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்க
ளிடமிருந்து வாங்கி விற்கின்ற பண்டங்கள், அதிக விலை ஏறா
மல் இருக்க வேண்டு மென்பதற்காகத்தான். இல்லாவிட்டால்,
40 சதவிகிதம் லெவி கொடுத்துவிட்டு செய்கின்ற விளைவுகள்,
இவர்கள் அதற்காகக் கொடுத்த பணத்தையும், மற்றவைகளில்,
வருகின்றவர்களிடத்திலே சேர்ந்து வரவேண்டுமென்பதற்காகத்
தாங்கள் கொஞ்சம் கூடுதலாக விலை வைக்கக் கூடும். ஆகவே
அந்த விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியுமா என்பதற்காகத்
தான் இந்த யோசனையை வைத்தோம். அவர் இதைக் குறிப்
பிடுவதிலிருந்து மறுபடியும் ஆராய்ந்து, மறுபரிசீலனை செய்ய
வேண்டிய அவசியம் ஏற்படுமானால், இந்த அரசு செய்யும் என்
பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்.—மாண்புமிகு பேரவையினுடைய
துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சரிட
மிருந்து மக்களுக்காக ஒரு சிறு விளக்கத்தை நான் பெற விரும்பு
கிறேன். ரூ. 42 கோடி விவசாயக் கூட்டுறவுக் கடன் ரத்து
செய்யப்பட்டிருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. இந்த
1980-81ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளிலே கூட்டுறவு
வங்கிகளுக்கு அந்த விவசாயக் கடனை ரத்து செய்வதற்காக,
ஈடு செய்வதற்காக ரூ. 42 கோடி முன் பணமாகக் கொடுக்கப்
படுகிறது. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தகவலை இந்த
அரசுக்கு நான் தெரிவிக்கவும் தயாராக இருக்கிறேன். பட்டியல்
தரவும் தயாராக இருக்கிறேன். 5 ஏக்கருக்குக் கீழே இருக்கக்
கூடிய விவசாயிகள், வறட்சியால், புயலால், வெள்ளத்தால்,
மழையால் பாதிக்கப்பட்டவர்கள், ஷார்ட் டேர்ம் லோனை
மீட் டேர்மாக மாற்றியவர்கள் ஆகியோருக்கு இந்த விவசாயக்
கடன் ரத்து செய்யப்படுவதாக அரசு அறிவித்திருக்கிறது.
ஆனால், ஒவ்வொரு மாவட்ட வாரியாக என்னிடத்திலே
பட்டியல் இருக்கிறது. நான் அரசிற்குத் தருகிறேன். இந்தத்
தகுதிகளுக்கு உட்பட்டு 5 ஏக்கர்களுக்குக் கீழே வைத்துள்ள
புயலால், வெள்ளத்தால், மழையால் பாதிக்கப்பட்ட ஷார்ட்
டேர்மை, மீட் டேர்மாக ஆக்கப்பட்ட பல விவசாயிகளுடைய
கடன்கள் ரத்து செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகையி
னாலே, அந்தக் கடனை ரத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை
எடுக்குமா ? அந்தப் பட்டியல் பரிசீலிக்கப்படுமா என்று நான்
தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று
இங்கே விதித்த விதிமுறைகளுக்கு உட்பட்டு நியாயமாகக் கிடைக்க
வேண்டிய சலுகைகள் கிடைக்கமுடியாமல் யாரேனும் இருப்பார்
களானால் மாண்புமிகு உறுப்பினர் பட்டியல் தருகிறேன் என்
றோர். அந்தப் பட்டியலைத் தந்தால் அரசு ஆராய்ந்து [illegible]



1981 பிப்ரவரி 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நடவடிக்கையெடுக்கும் என்பதையும் நான் தெரிவிக்கிறேன்.
ஆனால், அதற்காக இப்பொழுதும் நாம் என்ன விதிமுறைகளை
வைத்திருக்கிறோமோ அந்த அடிப்படையிலே, எந்தச் சலுகை
களை நாம் தருவதாகச் சொல்லியிருக்கிறோமோ, அந்தச்
சலுகைக்கு உட்படக்கூடிய யாருக்காவது கிடைக்கவில்லை
யென்றால், கவனிக்கலாம். நேற்று மாண்புமிகு முதல்வர்
அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள், இப்பொழுது ரூ. 42 கோடி
என்று கணக்குப் போட்டாலும், கொடுப்பது என்று வருகின்ற
பொழுது கிட்டத்தட்ட ரூ. 50 கோடிக்கு வருகின்றது என்று.
முழு விவரம் இப்பொழுது இல்லை. அந்த மதிப்பீட்டிலே
அது வரக்கூடும். (குறுக்கீடு) இப்பொழுது சலுகை கொடுக்கும்
பொழுது, ஏற்கெனவே கட்டி விட்டவர்கள் ஏமாந்தவர்களா
என்ற நிலை வருமே என்பதற்காக அப்படி வரும்போது, ரூ. 21
கோடியாவது, அந்த ஆண்டு அவர்களுடைய கணக்கிலே
அட்ஜஸ்ட் செய்கின்ற ஒரு நிலைமை வருவதன் காரணமாக,
கிட்டத் தட்ட ரூ. 73 கோடிக்கு வருகிறது, அந்த விவரங்கள்
எல்லாம் பின்னால் தரவேண்டிய நிலைமை வரும். மாண்புமிகு
உறுப்பினர் அந்த முறைப்படி நடக்கவில்லையென்ற அளவுக்
குக் காரணமோ அல்லது விளக்கங்களோ அல்லது பட்டிய
லோ தருவார்களானால், அதுபற்றி கவனிக்கப்படும் என்று
கூறி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பிற்
பகல் 1 மணி. எனவே, நமது பேரவையின் 155-வது விதி,
உள் விதி(3)—ன்படி இத்துடன் விவாதம் முடிவுறுகிறது. இப்
போது வாக்கெடுப்பு.

**பேரவை முன்னுள்ள கேள்வி.**

''1980-81ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்
கைகள் அடங்கிய 27—1—1981ஆம் நாளிட்ட அறிவிப்பில்
இரண்டாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள மானியக் கோரிக்
கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்
டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்
களுக்கு 1980-81ஆம் நிதி ஆண்டிற்கான கூடுதல் செலவுக்
கணக்கில் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்
பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஈ) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு 1981 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் :—பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

4. அரசினர் சட்டமுன் வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஆ) நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன்வடிவை '' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7–2–1981 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்:

191. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 4—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2316 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

192. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் I, II, ஆம் விவர அட்டவணைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 23—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 926 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)).

193. வழங்கு இருப்பு மின்மாற்றி எண்ணெயினை பெட்ரோ-இரசாயன நிறுவனத்திற்கு விற்பனை செய்வதன் மீதும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 450 கிலோ லிட்டர் மின்மாற்றி எண்ணெயினை விற்பனை செய்வதன் மீதும் செலுத்தத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1156 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

194. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1114 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

1981 பிப்ரவரி 6]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*31. 1981 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1981).

*32. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வரிசெலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1981).

*33. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 12/1981).

*34. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1981)

@35. 1974—75 மற்றும் 1975—76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை (தமிழ்).

---

* 4—2—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

@ 5—2—1981 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### சனிக்கிழமை, 1981 பிப்ரவரி 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

பல சொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சில சொல்லல் தேற்றா தவர்

குற்றமற்றவைகளாகிய சில சொற்களால் ஒரு கருத்தை விளக்கிச் சொல்ல அறியாதவரே பொருளற்ற சொற்கள் பலவற்றை அடுக்கிச் சொல்ல விரும்புவர்.

### 1 இரங்கல் குறிப்பு.

#### முன்னாள் உறுப்பினர் திரு. சி. ஸ்ரீனிவாசன் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. ஸ்ரீனிவாசன் அவர்கள் 13—8—1980-ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஸ்ரீனிவாசன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் என் சார்பிலும் இப்பேரவையின் சார்பிலும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்).

[1981 பிப்ரவரி 7

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

இறால் ஏற்றுமதி.

*வினா எண். 221—திரு. த. வேணுகோபால், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் ஏற்றுமதி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

(ஆ) அதன் மூலம் 1979–80-ல் ஈட்டிய வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 1.19 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 2,120 கிலோ இறால் மீன்களை பதப்படுத்தி ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது. கழகத்திற்குச் சொந்தமான "தஞ்சை" மற்றும் "நெல்லை" ஆகிய இரண்டு மீன்பிடி கப்பல்கள் மூலம் பிடிக்கப்படும் இறால்கள் கழகத்தின் உறைவிப்பு நிலையங்களில் பதப்படுத்துவதற்கு போதுமானதாக இல்லை. தற்போது இந்த இரண்டு மீன்பிடி கப்பல்களும் விசாகப்பட்டினம் கடலில் மீன் பிடிக்கின்றன. கிடைக்கும் இறால் மற்றும் இதர வகை மீன்கள் விசாகப்பட்டினத்திலேயே உறைவிப்பு நிலையங்கள் வைத்துள்ள ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

(ஆ) 1979–80 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் இறாலை ஏற்றுமதி செய்யவில்லை. ஆனால் இவ்வாண்டில் இவ்விரண்டு மீன்பிடி கப்பல்கள் மூலம் பிடிக்கப்பட்ட 61,385.220 கிலோ இறாலை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் வசதியுள்ள தனியார் நிறுவனங்களுக்கு விற்றதில் ரூபாய் 31.01 இலட்சம் வருமானம் கழகத்திற்கு கிடைத்துள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இறால் மீன்களுக்கு வெளிநாடுகளில் கிராக்கி அதிகமாக இருக்கிறது. அந்நியச் செலவாணியை அது அதிக அளவில் ஈட்டித் தருகிற வாய்ப்பு இருக்கிறது. இறால் மீன் பிடிப்பதற்கான வசதிகள் குறைவாக இருப்பதால், அதிக



1981 பிப்ரவரி 7]

அளவில் அந்த வகை மீனைப் பிடிக்க முடியவில்லை என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. ஆகவே, அதிக இறால் மீன்களைப் பிடிப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது இரண்டு கப்பல்கள் அந்த இறால் வகை மீன் பிடிப்பதற்காக வைத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த வகை மீன்களுக்கு ஜப்பான் நாட்டில் அதிக கிராக்கி இருக்கிறது. ஆகவே, அந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொண்டு வருகிறோம். நம்முடைய சென்னையைச் சார்ந்த கடலில் இறால் வகை மீன்கள் குறைவாக இருப்பதால், அந்தக் கப்பல்களை நிர்வகிப்பதற்கு ஆகும் செலவிற்குக் கூட அதில் இருந்து வருகிற வருமானம் போதாது என்கிற காரணத்தால், தற்போது நம்மிடம் இருக்கிற இரண்டு இறால் மீன்பிடி கப்பல்களையே விசாகப் பட்டினம் கடற்கரைப் பகுதியில் வைத்துக் கொண்டு மீன் பிடித்துக் கொண்டு இருக்கிறோம். அதன் மூலம் கணிசமாக அளவிற்கு கிட்டத்தட்ட 31 லட்சம் ரூபாய் அளவிற்கு நமக்கு வருமானம் கிடைத்து இருக்கிறது. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் மேற்கொண்டு இரண்டு டிராலர்களை இது போன்ற மீன்பிடிப்பதற்காக வாங்க இருக்கிறோம். இதற்கான முயற்சிகளை மீன்வளத் துறை மேற்கொண்டு வருகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டு கடற்கரை ஓரங்களில் இறால் அதிகமாகக் கிடைக்கிறது என்று பல குறிப்புகளிலிருந்து பேசப்பட்டு வருகிறது. அப்படி இருந்தும் கிடைக்கின்ற இறால் மீன்களையும் ஏற்றுமதிக்காக ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பிவிடுவதாகச் சொல்லப்படுகிறது. அதை நமது துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ? அதுமட்டுமல்ல. இங்கே கிடைக்கின்ற இறால் பூராவையும் கேரளத்திலுள்ள வியாபாரிகளுக்கு ஏலத்தில் விட்டு விடுவதாகச் சொல்லப்படுகிறது. கேரள வியாபாரிகளின் கார்கள்தான் நம்முடைய கடற்கரை ஓரங்களில் இந்த இறால் மீன்களை வாங்குவதற்காக சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இதிலே அரசாங்கம் கவனம் செலுத்தி, நம்முடைய அரசாங்கமே இந்த இறால்களை வாங்கி ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது கடற்கரை ஓரங்களில் கட்டுமரம் வைத்திருப்பவர்களும், சிறு படகு, விசைப் படகு வைத்திருப்பவர்களும், இறால் பிடிக்கிறார்கள். இந்த இரண்டு கப்பல்களும் ஆழ்கடலில்

சென்று இறால் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த கப்பல்களும் கரையோரங்களில் மீன் பிடிக்க ஆரம்பித்தால் கட்டுமரம், சிறு படகு வைத்திருப்பவர்களுக்குத் தொல்லையாக இருக்கும். நம்முடைய பகுதியில் அதிகமாக இறால் கிடைக்காத தால் அதிகமாகக் கிடைக்கின்ற விசாகப்பட்டினத்தில் இந்த இரண்டு கப்பல்களையும் வைத்திருக்கிறோம். அங்கே அதிகமான இறால் கிடைத்து, அதனால் நல்ல இலாபம் கிடைப்பதால், மேற்கொண்டும் அதிகமாக 'ட்ராலர்களை' வாங்கும் முயற்சி யில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

சாத்தனூர் அணையில் மீன் விற்பனை.

*வினா எண் 222—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடாற்காடு மாவட்டம் சாத்தனூர் அணையில் மீன் வளர்க்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) இதனால் ஆண்டுக்கு எவ்வளவு வருமானம்?

(ஈ) உள்ளூரில் மீன் விற்பனை உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சாத்தனூர் அணையில் பிடிக்கப்படும் மீன்களை தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் நேரடியாக வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பு வதில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(ஈ) உண்டு.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, சாத்தனூர் அணையில் கிடைக்கின்ற மீன்களை வெளி மாநிலங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். திருவண்ணாமலைக்கு அருகே கடற் கரையோ, ஆறோ இல்லை. அணையில் கிடைக்கின்ற மீன்களும் வெளி மாநிலங்களுக்கு போய் விடுவதால் அங்கே உள்ள மக்க [illegible] மீன் கிடைக்க வழியில்லை. ஆகவே திருவண்ணாமலையில்



இந்த இலாகாவின் மூலம் ஒரு கடை அமைத்து, உள்ளூர், மக்களுக்கு மீன் கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, திருவண்ணாமலையில் சாத்தனூர் அணையில் கிடைக் கின்ற மீன் வகைகள் கட்லா, ரோகு, நீல்பா, கடல்பாசி ஆகியவை. அவற்றை தமிழக மக்கள் விரும்பி சாப்பிடுவதில்லை என்பதா லும், மேற்கு வங்கத்தில் இருப்பவர்கள் விரும்பிச் சாப்பிடு கிறார்கள் என்பதாலும் அங்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்ளூர் மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்றால் அவர் களுடைய தேவையைப் பூர்த்தி செய்த பிறகு வெளி மாநிலங் களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். என்னிடம் இருக்கிற குறிப்பில், இதற்காக விடப்படும் டெண்டர் குத்தகை அதிகமாக இருப்பதால் இங்கே இருப்பவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க தயங்கு கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கின்ற மக்கள் விரும்பி, அதை வாங்கிச் சாப்பிடுவதாக இருந்தால், அவர்களுக்குக் கொடுத்தது போக மீதியை வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்ய முயற்சி செய்யலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்த மீன்களையும் உள்ளூர் மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். ஆனால் கிடைப்பதில்லை. ஆகவே, அங்கே பிடிக்கின்ற மீன் களில் ஒரு பகுதியை ஒதுக்கி, உள்ளூர் மக்களுக்கு விற்கப் படுமா? அதிகமாக இலாபம் கிடைக்கிறது என்பதற்காக கல்கத்தாவுக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்படி இல்லாமல் உள்ளூர் மக்களின் தேவையை பூர்த்தி செய்ய இந்த இலாகா மூலம் விற்பனை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மாதிரி, உள்ளூர் மக்கள் இந்த மீன்களை விரும்பிச் சாப்பிடுவதாக இருந்தால், பிடிக்கின்ற மீன்களில் ஒரு பகுதியை ஒதுக்கி, அங்காடி வைத்து விற்பனை செய்வதற்கும், மீதியை ஏற்றுமதி செய்யவும் ஏற்பாடு செய்யலாம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதில் உரையில் கட்லா மீன் களை இங்கே உள்ள மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். ஓரளவுக்கு அவர்களுக்கு கட்லா மீனைப்பற்றி தெரியும் என்று கருதுகிறேன். அது மிகவும் ருசியான மீன். அந்த மீனை இங்கே விற்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா? அதைப் போலவே இந்த மீன் விற்பனையின் மூலம் ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார் களா?

[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மீன் வளர்ச்சிக் கழகம் சாத்தனூர் அணையில் பிடிபடும் மீனை டெண்டர் மூலம் குத்தகைக்கு விடுகிறது. ஆகவே, மீன்களின் விலை சற்று அதிகமாக இருக்கும். விலை உயர்வு காரணமாக தமிழக மக்கள் வாங்கும் ஊக்கம் குறைந்துள்ளது. இந்த மீன்களுக்கு தமிழ்நாட்டைவிட மேற்கு வங்கத்தில் அதிக கிராக்கி இருப்பதால் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டேன்.

[முற்பகல் 9—10]

எந்த வகை மீனில் என்ன ருசி இருக்கும் என்பது தெரியவில்லை. அதனுடைய பெயர்கள் தெரியவில்லை. நமக்கு வைக்கப்படுகின்ற மீன் ருசியாக இருந்தால் சாப்பிடுகிறோம், இல்லையென்றால் ஒதுக்கி விடுகிறோம். ஆகவே எந்தெந்த வகை மீன்களில் என்னென்ன ருசிகள் இருக்கும் என்று தெரியாது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இங்கே அதைச் சாப்பிடுகின்றவர்கள் இருந்தால் அந்த மீன்களின் ஒரு பகுதியை இங்கேயே விற்பதற்கு முயற்சிகள் செய்யலாம்.

1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரை 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. அதற்கடுத்த ஆண்டு 9,04,124 ரூபாய் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. அதற்கடுத்த ஆண்டு 10,25,402 ரூபாய் மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன. இந்த ஆண்டு அதாவது 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரையுள்ள 5 மாத காலத்தில் 5,78,035 ரூபாய் அளவு மதிப்புள்ள மீன்கள் பிடிக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தற்போது மீன் உணவைச் சைவ உணவாகக் கருதி, மீன் சாப்பிடாதவர்கள் கூட தெரியாத் தனமாகச் சாப்பிடுகிறார்கள். அதிலும் இரால் மீன் ரொம்பவும் ருசியானது. ஆகவே அரசாங்கமே சிறப்பான முறையில் அந்த இரால் மீனை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும் கூட, இரால் மீன்களை வளர்ப்பதற்கு வேறு பல முயற்சிகள் எடுக்கப்பட்டு, அது சம்பந்தமான நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 7]

திருச்சிராப்பள்ளியில் பதுக்கிவைக்கப்பட்ட சர்க்கரை :

மாண்புமிகு
*வினா எண் 223—திரு. இரா. தாமரைக்கனி :
நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

உள்ள கடை
(அ) திருச்சியில், திருச்சி—தஞ்சை ரோட்டில் இலட்சம் ரூபாய்
யில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த சுமார் 1½ போலீசாரால்
பெருமான சர்க்கரை அண்மையில் உணவுப் பிரிவு
கைப்பற்றப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி பதுக்கல்காரர்கள் மீது என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இது தொடர்பாக, 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு
சர்க்கரை விற்பனையாளர் (உரிமம் வழங்கல்) ஆணை பிரிவு
3 (1)-ன் படியும், 1955-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்
கள் சட்டம், பிரிவு 7 (I)எ (II)-ன் படியும் பாலக்கரை காவல்
நிலைய குற்ற எண் 821/80, 822/80 என்ற இரண்டு வழக்குகள்
பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளன. 1955-ஆம் ஆண்டின்
இன்றியமையாப் பொருட்கள் சட்டம் பிரிவு 6 (ஏ) யின் படி
குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விரிவான
ஓர் அறிக்கையும், உணவு குற்றப் புலனாய்வு காவல் துறையின
ரால் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்
ளது.

தலைவரவர்களே, மாண்புமிகு
திரு. இரா. தாமரைக்கனி : தொடரப்பட்டுள்ளதாகச் சொன்னார்
அமைச்சரவர்கள் வழக்கு அளவிலே காசு கொடுத்து
கள். பதுக்கல்காரர்கள் அதிகமான விடுகிறார்கள். அப்படிப்
விட்டு வழக்கிலிருந்து விடுதலையாகி பாதுகாப்புச் சட்டத்தின்
பட்ட பதுக்கல்காரர்களைத் தேசியப் சொத்துக்களையும் ஜப்தி
கீழ் கைது செய்து அவர்களுடைய இந்த அரசு எடுக்குமா ?
செய்வதற்கான நடவடிக்கையை கடுமையான அளவுக்கு
மேலும் நன்றாகப் பிரம்படி கொடுத்து
அவர்களுக்குத தண்டனை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

தலைவரவர்களே
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறித்து விரிவான
குற்றப்புலனாய்வுத் துறையினர் இது அவைகளை எல்லாம்
அறிக்கையை அனுப்பி இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்க
ஆராய்ந்து சட்டத்துறையில் எப்படி எப்படி எடுப்பார்கள். ஆகவே
வேண்டுமோ அப்படி அப்படி நடவடிக்கை

தண்டனையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேயே அளித்துவிடுவது என்பது சரியாக இருக்காது. அந்த வழக்குகள் குறித்து விசாரித்து இருக்கின்ற சட்டங்களைப் பயன்படுத்தி எந்த அளவுக்கு அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்க இயலுமாகையால் இதற்கு தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, பிஸ்கட் கம்பெனிக்காரர்கள் மிக அதிகமான அளவுக்கு சீனியை அரசாங்கத்திடமிருந்து வாங்கிக்கொண்டு அதில் ஒரு குறிப்பிட்ட அளவை மட்டும் தங்களது உற்பத்திக்குப் பயன்படுத்திக்கொண்டு மீதியை கள்ள மார்க்கெட்டில் விற்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட பதுக்கல்காரர்களைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எல்லா வியாபாரிகளும் இந்தமாதிரி செயல்படுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. சில வியாபாரிகள்தான் இப்படிப்பட்ட குற்றமான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் அதற்காகத்தான் தனியாக குற்றப்புலனாய்வுத்துறை இருக்கின்றது. அத்துறையினர் ஆங்காங்கே இது குறித்து ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். அத்துறையின் மூலமாக இக்குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ஆனால் பொதுமக்களும் இப்படிப்பட்ட குற்றங்கள் நடப்பது குறித்து தகவல் தந்தால் குற்றப் புலனாய்வுத் துறையினரால் அது குறித்து மேற்கொண்டு விசாரித்து இப்படிப்பட்ட குற்றங்கள் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளும் முயற்சியில் இந்த அரசும் ஈடுபட இயலும்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, திருச்சி தஞ்சை ரோட்டிலுள்ள கடையில் பதுக்கி வைக்கப்பட்டதாக சொல்லப்பட்ட சர்க்கரை கைப்பற்றப் பெற்றதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுமார் 1½ இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சர்க்கரை என்று சொன்னால் 50 மூட்டைக்கு இருக்கும் என்று கருதுகிறேன். இந்த சர்க்கரை அரசு கோடவுனிலிருந்து அந்த கடைக்கு வந்ததா? அல்லது சர்க்கரை ஆலைகளிலிருந்து அந்தக் கடைக்குவந்ததா என்ற விவரம் அமைச்சரிடத்தில் இருந்தால் அறிவிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து குற்றப்புலனாய்வுத் துறை திடீரென்று சென்று பரிசோதனை செய்ததில் 7-6-1980 அன்று 300 சர்க்கரை மூட்டைகள் பெறப்பட்டு கடனுக்கு விற்பனை



செய்யப்பட்டதாகக் காட்டப்பெற்றிருக்கிறது. ஆனால் அப்படி பெறப்பெற்றதற்கோ விற்பனை செய்யப்பெற்றதற்கோ தேவையான ரசீதுகள் அவர்களிடத்திலே இல்லை. அது மட்டும் அல்லாமல் 13-5-80 அன்று 13 மூட்டை சர்க்கரை கடனாக விற்கப்பட்டிருப்பதாக கணக்கில் காட்டப்பெற்றிருக்கிறது. அதற்கும் ரசீது எதுவும் காண்பிக்கப்பெறவில்லை இவற்றை அடிப்படையாக வைத்துத்தான் இந்த வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1½ இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சர்க்கரை என்று சொல்கிறீர்களே அதை எப்படிப் பாதுகாத்து வைத்திருக்கிறீர்கள்? அந்த வியாபாரியின் பெயர் என்ன? அவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா? அப்படி கைப்பெற்றப்பெற்ற சர்க்கரையை எப்படி வினியோகம் செய்யவிருக்கிறீர்கள் என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மொத்த சர்க்கரை வியாபாரியின் பெயர் முத்துசாமி, அவர் கைது செய்யப்பெற்றிருக்கிறார். கைப்பெற்றப்பெற்ற சர்க்கரை அரசாங்கத்தினுடைய பாதுகாப்பில் இருக்கிறது. அது கோர்ட்டினுடைய முடிவுக்குப் பிறகுதான், அதை எப்படி வினியோகிப்பது என்பது குறித்து முடிவு எடுக்கப்பெறும்.

### திருவொற்றியூரில் சமையல் எண்ணெய் பதுக்கல்.

வினா எண். 224—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையை அடுத்த திருவொற்றியூர் காலடிப் பேட்டையிலுள்ள ஒரு கிடங்கில் பதினாறு இலட்சத்துக்கு மேற்பட்ட சமையல் எண்ணெய் சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) சட்டம் விதித்துள்ள உச்ச வரம்பிற்கு மேல் வைத்திருந்ததோடு கையிருப்புக் கணக்கு சரியாகக் காட்டப்படவில்லை என்பது உண்மை.

(ஆ) உணவுப்பொருள் வழங்குதுறை துணை ஆணையர் முன்பு இவ்வழக்கு விசாரணையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அதிகப்படியாக கையிருப்பு வைத்திருந்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இவைகள் அனைத்தையும் பறிமுதல் செய்து, நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்மூலமாக விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பெற்றதா? அப்படி இல்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வியாபாரிக்கும் இவ்வளவுதான் வைத்திருக்க வேண்டும் என்று உச்ச வரம்பு இருக்கிறது. அதற்கு மேல் வைத்திருந்தால், அதற்குச் சரியாக கணக்கு காட்டப்பெறவில்லை என்றால் அவற்றைப் பறிமுதல் செய்யலாம் என்று சட்டவிதி இருக்கிறது. காலடிபேட்டையிலுள்ள இந்தக் கிடங்கில் 150 மெட்ரிக் டன் எடையுள்ள பாம் ஆயில் எண்ணெய் கைப்பற்றப்பெற்றது. அதற்கு முன்பே, உச்ச வரம்பு சட்டத்தின்படி அவர்களிடத்தில் கையிருப்பு இருக்க வேண்டியதற்கு அதிகமாக இருந்த 162.2 மெட்ரிக் டன் எண்ணெய் கைப்பெற்றப்பெற்றது. அதற்கு முன்பும் 16—6—80 அன்று திருவொற்றியூரில் ஒரு கடையிலும், ராயபுரத்தில், ஹைதர் எண்டர்பிரைசஸ் கம்பெனிக்கு சொந்தமான கோடவுனிலும் திடீர் பரிசோதனை செய்ய குற்றப்புலனாய்வுத் துறைக்கு ஆணைபிறப்பிக்கப்பெற்று பரிசோதனை செய்ததில், முன்பு சொன்னவாறு ரூ. 2 கோடிக்கு மேல் மதிப்புள்ள பாமோலின் எண்ணெய் பிடிபட்டது. கீழ்க்கோர்ட்டில் இவ்வழக்கு விசாரணைக்கு சென்றபோது, ஹைதர் எண்டர்பிரைசஸ் கம்பெனியார் ஒரு மனுவைக் கொடுத்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து கீழ்க்கோர்ட்டின் ஆணையை நிறுத்தி வைத்தனர். இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் இப்போது வழக்கு நடைபெறுகிறது. 28—7—1980 அன்று உயர்நீதிமன்றம் மேற்படி கம்பெனியிடத்தில் கைப்பற்றப்பெற்ற பாமாயிலை விற்று அதன் மூலம் கிடைக்கிற தொகை முழுவதையும் பாங்கியில் போட்டு வைக்க வேண்டும் என்று உத்தரவு இட்டது. பிறகு மறுபடியும் 24—12—80 ஆம் தேதி உயர்நீதிமன்றம் இந்த எண்ணெய் விற்ற தொகையில் 10 சதவிகிதம் உயர்நீதிமன்றத்தின் முன்பும், உணவுப் பொருள் வழங்குத்துறை துணை ஆணையர் முன்பும் எடுக்கவேண்டிய மேல் நடவடிக்கைக்காக பாதுகாப்புத் தொகையாக வைக்கும்படி உத்தரவிட்டுள்ளது.





[முற்பகல் 9—20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: காலடிபேட்டையில் ரூ. 16 இலட்சத்திற்கு மேற்பட்ட சமையல் எண்ணெய் கைப்பற்றப்பட்டிருக்கிறது. கொஞ்ச காலத்திற்கு முன்பு அதே இடத்தில் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள சமையல் எண்ணெய் கைப்பற்றப்பட்டிருக்கிறது. சமையல் எண்ணெய் என்பது ஒரு அத்தியாவசியமான பண்டமாகும். அப்படிப்பட்ட பண்டங்களை பதுக்கல் செய்தால் செயற்கை தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட அத்தியாவசியப் பண்டங்களை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்க வேண்டும், தனியார்களுக்கு அவற்றைக் கொடுக்க வேண்டாம் என்று முடிவு எடுக்க அரசு முன்வருமா? நமது அமைப்புகள் மூலமே அவைகளை விநியோகிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த வழக்கைப் பொறுத்தவரையில் முழுவதையுமே யாருக்கும் தெரியாமல் பதுக்கி வைத்திருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்கள் வைத்திருக்க வேண்டிய அளவிற்கு மேல் கூடுதலாக வைத்திருந்தார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. மற்றொரு குற்றச்சாட்டு, அதற்கான சரியான கணக்குகள் வைக்கவில்லை என்பதாகும். ஆகவே சட்டப்படி அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் சட்டப்படி முழுவதையும் கைப்பற்றலாம் என்று சட்டமிருக்கிறது. அச்சட்டப்படி கைப்பற்றினோம். இதற்கு லைசென்ஸ் கொடுப்பது, இவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்பது ஏற்றுமதி இறக்குமதி போன்றவையெல்லாம் மத்திய அரசிடம் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் இதைக் கட்டுப்பாடு செய்ய தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடம் இந்த உரிமையைத் தந்து விட்டால் இப்படிப்பட்ட பிரச்னை வராது, நாம் பார்த்து விநியோகிக்கிற நிலைமை ஏற்படவேண்டுமென்று மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு கொடுக்கிற லைசென்சை வைத்து அவர்கள் வாங்குகிறார்கள். அதைக் கண்காணிக்கிற பொறுப்பு, அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கிற பொறுப்பு மாநில அரசின் கையில் இருப்பதால் இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட சமையல் எண்ணெய் கைப்பற்றப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கணக்கில் காட்டப்படாது, சட்டத்திற்கு உட்படாத வகையில் வைத்துக் கொண்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றால் யார் யார் கைது செய்யப்பட்டார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரக் குறிப்பும் இல்லை. ஹைதர் எண்டர்பிரைசஸ் கம்பெனியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டு விடப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு இந்த வழக்கு நடைபெற்று வருகிறது.

திரு. ரா. உமாநாத் : இது 16 இலட்சம் ரூபாய் சம்பந்தமான முக்கிய விஷயம். 16 இலட்சம் ரூபாய் என்பது ஒரு ஸப்ஸ்டான்ஷியல் அமௌண்ட். ஜாமீன் கொடுக்கப்பட்டவர் அதையும் மீறி வெளிநாட்டுக்குப் போனதாகச் சொல்லப்படுகிறது. எங்களைப் போன்றவர்கள், இது சம்பந்தமில்லாது அரசியல் சம்பந்தப்பட்டு ஜாமீனில் விட்டாலும் கூட ஸ்பெஷல் பிராஞ்ச் எங்களை 'பாலோ' செய்துகொண்டு விழிப்போடு இருப்பார்கள். அப்படியிருக்கும்போது 16 இலட்சம், இது பெரிய அமௌண்ட், சம்பந்தப்பட்ட விஷயத்தில் இந்த மாதிரி ஒருவர், 'பெயிலில்' விடப்பட்டு, அரசாங்கம் எதிர்த்தும் 'பெயிலில்' விடப்பட்டு அவர்களை 'பாலோ' செய்து அவர்கள் 'பெயிலில்' இருந்து 'ஜம்ப்' செய்யாமல் இருக்க விழிப்போடு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? அப்படி நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் ஏன் எடுக்கவில்லை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வழக்கு மன்றம் மூலம் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கைப்பற்றுகிற எண்ணெய் கூட நாங்கள் பாதுகாப்பில் வைத்திருந்தால் கெட்டுவிடும் என்ற நிலைமை இருதரப்பாருக்கும் இருக்கிறது. எனவே கைப்பற்றியதை நாமே விற்று அதற்குரிய பணத்தை வங்கியில் வைத்துவிடலாம் என்று வழக்கு மன்றத்தில் எடுத்துச் சொன்னபோது வழக்கு மன்றத்தில், அதற்குரியவர்கள் அதை விற்று அந்தப் பணத்தை அவர்கள் வங்கியில் வைக்க வேண்டும் என்று தீர்ப்பு வந்தது. நாம் வாதாடியும் அது நிறைவேறவில்லை, ஜாமீனில் விடுவதும், விடக்கூடாது என்று மறுத்தும்கூட வழக்கு மன்றம் விட்டு விட்டது. வெளிநாடு போவதைத் தடுப்பது என்பது மத்திய அரசின் பொறுப்பில் இருப்பதால்—அவர் போனாரா இல்லையா என்பது பற்றிய விவரக் குறிப்பு இல்லை—அது நம் கையில் இல்லை, அவர்கள் கையில்தான் இருக்கிறது.

### கச்சா முந்திரி ஒதுக்கீடு

*வினா எண். 225—திரு. ஜே. ஹேமச்சந்திரன் திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்திலுள்ள எத்தனை முந்திரி ஆலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து கச்சா முந்திரி ஒதுக்கீடு பெறப்படுகிறது?



(ஆ) அதனை சீரான முறையில் விநியோகிக்க மாநில அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 49.

(ஆ) மைய அரசின் நிறுவனமான இந்திய முந்திரி நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்ட கச்சா முந்திரியைத் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : இந்திய முந்திரிக் கழகம் விநியோகிக்கிற கச்சா முந்திரியை ஒழுங்காக உபயோகிக்கப்படுத்தவில்லை என்று புகார் இருப்பதால் சென்ட்ரல் காஷ்யூ கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாக முந்திரியை மாநில அரசு பெற்று கேரள மாநிலத்தில் செய்வது போல் ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தி அந்த நிறுவனத்தின் வழி அந்த முந்திரியை ஆலைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரித் தொழில் வளர்ச்சி முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்கமாகக் கொண்டு ஒரு முந்திரி வாரியம் அமைக்க செயற்குறிப்பு ஒன்றை தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு அனுப்பி அது மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரி ஆலைகளுக்கு கச்சா முந்திரி அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு, அந்த அளவிலே கொடுக்கப்பட இல்லை என்றும், அப்படி இந்த கச்சா முந்திரியை சென்ட்ரல் முந்திரி கார்ப்பரேஷன் வழங்காத காரணத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்திலே வேலை செய்கின்ற அனைத்துத் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே கச்சா முந்திரி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலும், இதுபோன்ற திருநெல்வேலி மாவட்டத்திலும் சுமார் முக்கால் லட்சம் தொழிலாளர்கள் இந்த முந்திரி ஆலைகளிலே வேலை செய்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, இந்த சென்ட்ரல் முந்திரி கார்ப்பரேஷன் தமிழ் நாட்டிற்கு 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கிய கச்சா முந்திரி எத்தனை டன்கள் என்பதை அறிய விரும்புகிறேன் ?

[1981 பிப்ரவரி 7

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டு, 4,350 டன்களும், 1980–81 ஆம் ஆண்டு 1,300 டன்களும் இந்திய முந்திரி கார்ப்பரேஷன் நிறுவனம் மூலமாகத் தமிழக அரசு பெற்றிருக்கின்றது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முந்திரி கோட்டா ஒதுக்கப்பெற்ற பாக்டரிகளிலே வேலை நடைபெறுவதற்கு உத்தரவாதம் செய்யப்படுமா? கோட்டா இல்லாத பாக்டரிகள் மத்திய முந்திரிக் கழகத்திடம் அதிகப்படியான கோட்டாவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. அருள்கூர்ந்து தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பொ. விஜயராகவன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது 49 ஆலைகளுக்கு மட்டும் தான் இந்த கச்சா முந்திரி கோட்டா கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ நூற்றுக் கணக்கான மில்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்றன. கேரள மாநிலத்திலே இருந்து கச்சா முந்திரி தமிழ்நாட்டிற்கு வரமுடியாத அளவிலே தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இங்கே தமிழகத்திலே வன இலாக்கா துறையின் கீழ் நாம் முந்திரிகளை ஏலத்திலே விடுகின்றோம். அப்போது இங்கிருந்து அதிகமான முந்திரி கேரளாவிற்கு எடுத்துச் செல்லப்படுவதாக பல புகார்கள் இருக்கின்றன. இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்குப் போதிய அளவிற்கு கச்சா முந்திரி கிடைக்காத நிலையில், இங்கிருந்து கேரளாவிற்குச் சென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல ஒரு இலட்சம் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்னையை விளக்கிக் கொண்டு போகக் கூடாது. கேள்வியாக சுருக்கமாய்க் கேட்க வேண்டும்.

**திரு. பொ. விஜயராகவன்:** தமிழ்நாட்டில் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரியை சீராக விநியோகம் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 7]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முந்திரி தொழிற்சாலைக்கு முந்திரிகளை அளிக்கின்ற உரிமை மத்திய அரசாங்கத்திற்கு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலிருந்து கச்சா முந்திரி அதிக அளவுக்கு வாங்கி, தமிழக முந்திரி ஆலைகளுக்கு வழங்குவதற்கு ஒரு யோசனையை தமிழக அரசு மத்திய அரசுக்கு தெரிவிக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு இதுபற்றிய குறிப்பு ஒன்றை தமிழக அரசு அனுப்பி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் சென்ட்ரல் முந்திரி கார்ப்பரேஷன் மூலமாக நமது நாட்டிற்குத் தேவையான கச்சா முந்திரியை ஆப்பிரிக்கா கண்டம் போன்ற நாடுகளிலே இருந்து இறக்குமதி செய்து, அதிலிருந்து விநியோகம் செய்யப்படுகிறது. அந்தக் கார்ப்பரேஷனில் தமிழகத்திற்குப் பிரதிநிதித்துவம் உள்ளதா? இல்லையெனில், பிரதிநிதித்துவம் பெற்று, அதிக கோட்டா முந்திரியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது கொச்சியிலுள்ள இந்திய முந்திரி நிறுவனத்திலே தமிழ்நாட்டிற்கு பிரதிநிதித்துவம் இல்லை. தமிழ்நாடு அரசுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று மைய அரசை தமிழக அரசு வற்புறுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி எண். 226 ஒத்திவைக்கப்பெறுகிறது.

[1981 பிப்ரவரி 7

**இராமேசுவரத்தில் பயணியர் விடுதிகள்.**

*வினா எண் 227—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) இராமேசுவரத்தில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக தங்குமிடங்களை விஸ்தரிக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) சாதாரண மக்களும் தங்கிப் பார்க்கும் அளவுக்கு கட்டணங்களை குறைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) மற்றும் (ஆ): இருக்கிற கட்டணங்களைக் குறைக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்று லாப் பயணிகளுக்கு வசதி செய்யும் வகையில் இராமேசு வரத்தில் இளைஞர் இல்லம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட் டுள்ளது. இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

[முற்பகல் 9–30]

**திரு. செ. சிவசாமி :** இராமேசுவரத்தில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான கட்டிடங்கள் அழகான கட்டிடங்களாக இருக்கின்றன. ஆனால் அதற்குப் பக்கத்தில் போகமுடியாத அளவுக்கு கட்டணங்கள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான வீடு களும் கட்டப்பட்டிருக்கின்றன. அதில் கூட சாதாரண மக்கள் தங்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான பேர்கள் ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய அந்த முக்கியமான ஸ்தலத்தில் சாதாரண மக்கள் தங்குவதற்கு உரிய வகையில் கட்டணங்கள் குறைக்கப்படுமா, அல்லது புதிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** குறைந்த கட்டணத்தில் வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் மூன்று லட்சம் ரூபாய் செலவில் இளைஞர் இல்லம் கட்டுவதற்கான திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஏ. சி. சண்முகம் :** உள்நாட்டுச் சுற்றுலாப் பயணி களையும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வண்ணம் இராமேசுவரத்தை அழகுபடுத்தும் திட்டம் அர சிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போடுவார்களானால் விவரங் களை விவரமாகச் சேகரித்துத் தரமுடியும்.



1981 பிப்ரவரி 7]

**தொண்டியை சுற்றுலா மையமாக்கல் :**

*வினா எண் 228—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :—

முகவை மாவட்டத்தில் உள்ள தொண்டியை சுற்றுலா மையமாக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தற்போது இல்லை.

**திரு. ச. அங்குசாமி :** தமிழ்நாட்டில் கடற்கரையை ஒட்டி பயணிகள் விடுதி உள்ள இடம் தொண்டி ஒன்றுதான். உல்லாசப் பயணமாக பள்ளி மாணவ, மாணவிகளும், கல்லூரி மாணவ, மாணவிகளும் உயர்தர அதிகாரிகளும், வெளிநாட்டுப் பயணிகளும் வருகை தருகிறார்கள். ஆகவே, தொண்டியை ஒரு சுற்றுலாமையமாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கப்படுகிற நிதி வசதியைப் பொறுத்தவரை இப்போது தொண்டியை சுற்றுலா ஸ்தலமாக மாற்றுகிற அளவுக்கு அங்கே செலவிட நிதி வசதி இல்லை. இனிமேல் அதைப்பற்றி காலம் வருகிறபோது, நிதி இடம் தருகிறபோது பரிசீலனை செய்யப் படும்.

**திரு. செ. சிவசாமி :** பூம்புகார் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு தொண்டியும் பாண்டிய நாட்டுத் துறைமுகத்தில் முக்கியமானது. தற்போது அது சீர்கெட்ட நிலையில் இருக் கிறது. அந்தத் துறைமுகத்தைப் பழைய நிலைக்குக் கொண்டு வர முயற்சி செய்வதோடு சுற்றுலா வாரியத்தின் மூலமாக அபி விருத்தி செய்யவேண்டிய ஏற்பாட்டை மீண்டும் பரிசீலனை செய்ய, பரிவோடு பரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** நிதி வசதி ஏற் படுகிறபோது அதனைப் பரிவோடு அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மூங்கில் அங்கே மாத்திரம் குறைந்து விடவில்லை. பொதுவாகவே தமிழகத்திலே மூங்கில் பற்றாக்குறையாகி விடுமோ என்ற ஐயம் இருக்கிறது. ஆகவே மூங்கில் வளர்க்கும் திட்டங்களில் அரசு அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது. நிதி நிலைமைகளையொட்டி மேலும் இந்தத் திட்டங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சி. பழனிமுத்து : கல்ராயன் மலைப் பகுதியிலே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பழைய இடங்களிலே மூங்கிலை அரசு நட உள்ளதா? அல்லது ஏற்கனவே அவர்கள் அனுபவித்து வருகின்ற இடங்களைக் கையகப்படுத்தி மூங்கில் வளர்க்கப் போவதாகக் கூறுகிறார்களே அதுபோல் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வனத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கக் காடுகள் என்ற பகுதிகளில் இந்த மரங்களை வளர்க்கின்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

எலிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம்.

*வினா எண் 231—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் விவசாயிகளின் பயிர்களை எலிகள் நாசப்படுத்துவதை அரசு அறியுமா

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள திட்டம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) எலிகளை ஒழிக்கும் திட்டம் விவசாயத் துறையில் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. எலிகளை ஒழிக்கும் மருந்துகள் போதுமான அளவு வேளாண்மைத் துறையின் கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்கு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயப் பணியாளர்கள் எலி ஒழிக்கும் முறைகளை விளம்பரப் படுத்துகின்றார்கள்.



திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நட்டுவிட்டு களையெடுத்து, உரமிட்டு, பூச்சி மருந்துகள் போட்டு முடிந்த பிறகு கதிர்கள் வருகின்ற நிலையில்தான் எலிகள் விளையாடி உணவு உற்பத்தியைப் பாதிக்கிற அளவுக்கும் அதன் காரணமாக விவசாயக் குடும்பங்கள் பொருளாதாரத்திலே மிகவும் பாதிக்கப்படுகிற அளவுக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன. அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போல் விவசாய இலாகா கிராமங்களிலே செயல்படுத்துவது இல்லை. இதை தீவிரமாக எடுத்துக் கொண்டு செயல்பட விவசாய இலாகா முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கதிர் விளைகின்ற நேரத்திலேதான் எலிகள் வரும். ஜிங்க் பாஸ்பைட் மற்றும் அலுமினியம் பாஸ்பைட் போன்ற நச்சு மருந்துகளை உணவுப் பொருள்களுடன் வைத்து எலிகளை அழித்தல், போரேட் 10 சதவிகித குருணைக் கரைசலை எலி வளைகளில் செலுத்தி எலிகளைக் கொல்லுதல், கார்பன் மானாக்சைடு என்ற நச்சு வாயுவை விசைத் தெளிப்பான்கள் மூலம் எலி வளைகளுக்குள் செலுத்தி அழித்தல், எலிகளைப் பிடித்துக் கொல்லுதல் ஆகிய முறைகள் கையாளப்படுகின்றன. இவைகளைச் செயல்படுத்த அரசு முன்வரும்.

[முற்பகல் 9-40]

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு வகையான மருந்துகளைப் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில விவசாயிகள் மருந்து வைத்தால்கூட அவைகளை எலிகள் சாப்பிடுவது இல்லை. அவ்வாறு சாப்பிட்டாலும் அந்த எலிகள் சாவதும் இல்லை. இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சாப்பிடாமல் இருக்கின்ற எலிகளைக் கட்டாயப் படுத்த முடியாது. ஆனால் சாப்பிட்டால் அவைகள் சாகின்ற அளவிற்கு மருந்துகளின் வீரியத்தில் கவனம் செலுத்தப்படும்.

திரு. இரா. சண்முகம் : தலைவரவர்களே, விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கின்ற எலிகளை ஒழிப்பதற்கு எலி ஒழிப்புத் திட்டம் என்ற திட்டத்தை அரசே ஏற்படுத்தி அதன் மூலம் எலிகளை ஒழிக்கும் திட்டத்தை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்தத் திட்டத்தைத்தான் ஏற்கனவே நான் குறிப்பிட்டேன்.

[1981 பிப்ரவரி 7

### கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம்

*வினா எண். 229— திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோடியக் காட்டில் வன விலங்கு சரணாலயமும் பறவைகள் சரணாலயமும் ஒரே இடத்தில் இருப்பதால் அதை மேம்படுத்துவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம், கோடியக்கரையில் வன விலங்கு சரணாலயத்தை மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய அரசுபலவகை எண். 1189, வன மீனளத் துறை, நாள் 14–12–1977ல் ரூ. 3,57,000 அனுமதி வழங்கியுள்ளது. மேலும் இச் சரணாலயத்தை மத்திய அரசின் நிதி யுதவித் திட்டத்தின் கீழ் அபிவிருத்திச் செய்ய ரூ. 5,76,000 ஒப்புதலளிக்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கோடியக்கரை வன விலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம் இரண்டும் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஆனால் அது பற்றி அதிகமாக விளம்பரம் செய்யப்படவில்லை. அதனால் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதில்லை. ஆகவே, அதிகமாக விளம்பரம் செய்து இன்னும் அதிகமாக சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைப் பரிசீலித்து அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 பிப்ரவரி 7]

### கல்ராயன் மலைப் பகுதியில் மூங்கில் வளர்ப்பு.

வினா எண் 230—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்ராயன் மலைப்பகுதியில் மூங்கில் வளர்க்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) மூங்கில் நடும் திட்டம் இந்த ஆண்டு (1980–81) முதல் தொடங்கி நடந்து வரும்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியிலே முன்பு இயற்கையாகவே மூங்கில் அதிகமாக விளைந்து வந்தது. தற்போது அது அழிந்துவிட்டது. இந்த மலைப் பகுதி இப்போது வன இலாகாவிலே செயல்பட்டு வருகிறது. இந்த மூங்கில் நடும் திட்டம் தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு எத்தனை ஏக்கர் நடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கல்ராயன் மலைப் பகுதியில் 2,250 ஹெக்டேர் பரப்பளவில் புதிய காடுகள் ஏற்படுத்துவது குறித்து சுமார் 28 லட்சம் ரூபாயிலே இப்போது திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அது 1980–81 லிருந்து துவங்கி நடத்தப்பட்டு வருகிறது. அதிலே மூங்கில் வளர்ப்புத் திட்டமும் ஒரு பகுதியாகும்.

திரு. சோ. கலிதீர்த்தான் : தலைவர் அவர்களே, அங்கே மூங்கில் உற்பத்தி குறைந்து விட்டது என்பது தான் எங்களுடைய கருத்து. இருந்தாலும் அதிகப்படியாக இன்னும் கூடுதலான ஏக்கரில் சாகுபடி செய்ய அரசு முன்வருமா?

[1981 பிப்ரவரி 7

திரு. என். வரதராஜன்: : தலைவரவர்களே, சமுதாயத்தினுடைய பொது நோக்கத்தைக் கருதி, பலவிதமான அபாயகரமான நோய்களைத் தடுக்க அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. தமிழகத்தினுடைய உணவுப் பொருட்களையும், இதர பொருட்களையும், நாசமாக்குகின்ற எலிகளை விவசாயிகள் கொல்லுகின்றபொழுது, இப்படிப்பட்ட முறையில் விவசாயத்தைப் பாதுகாப்பதற்காக பெரு முயற்சி எடுக்கின்றபொழுது அவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் பல நாடுகளில் செய்யப்படுகிறது. இது ஒன்றும் அதிசயம் அல்ல, இவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள், ஆகவே, நாமும் அவ்வாறு எலிகளைக் கொன்று வருபவர்களுக்கு ஒரு எலிக்கு 5 பைசா என்று கொடுத்து, அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு எலி ஒழிப்புத் திட்டத்திற்காக 1980-81க்கு 69,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலே ஒரு எலியைப் பிடிப்பதற்காகக் கொடுக்கப்படும் பணம் 5 பைசா அல்ல; 10 பைசா கொடுக்கப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளால் நூற்றுக்கணக்கான மூட்டைகள் கோடவுன்களில் நாசம் ஆக்கப்பட்டதாகக் கணக்குகள் கொண்டு வரப்பட்டதே. இப்பொழுதும் அத்தகைய எலிகளால் அழிவுகள் உள்ளனவா? விவசாயப் பயிர்களை எலிகள் நாசப்படுத்துவதைவிட விவசாயப் பலன்களை நாசப்படுத்துகின்றவர்களைத் தடுக்க மருந்து ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தவறு செய்கின்ற மனிதர்களைத் திருத்த முடியும்; ஆனால் எலிகளின் இயல்பை மாற்ற முடியாது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, இப்படி உணவிலே மருந்தை வைக்கும்பொழுது அந்த உணவைப் பல கோழிகள் தின்று விடுகின்றன. அதனால் கோழி வளர்ப்பதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, கிராமங்களில் சிறு பாம்புப் பண்ணையை—அதாவது சாரைப் பாம்புப் பண்ணையை வைத்து எலிகளைப் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இந்தப் பயங்கரமான யோசனையை திரு. தாமரைக்கனி அவர்கள் தான் முதலில் செயல்படுத்திப் பார்க்கவேண்டும்.



1981 பிப்ரவரி 7]

திரு. செ. செக்கலிங்கம்: தலைவரவர்களே, விவசாயப் பயிர்களை எலிகள் அழிக்கின்றன. அந்த எலிகளை ஒழிக்க பல மருந்துகளைக் கண்டு பிடித்ததாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த எலிகளை ஆதிவாசிகள் அதிகமாகப் பிடிக்கிறார்கள். அந்த ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் மூலமாக ஏதாவது உதவித்தொகை வழங்கப்படுமா? அவர்களுக்கு இதில் முன்னுரிமை கொடுத்து ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தேன். எலிகள் இருக்கின்ற பகுதிகளில் விவசாயப் பெருமக்களுக்கு என்னென்ன வகைகளில் வேளாண்மைத் துறை துணை செய்கிறது என்பதைக் குறிப்பிட்டேன். அதைத் தவிர, வேறு செயற்குறிப்பு இல்லை.

குறுவைப்பட்ட நெல் விளைச்சல்.

*வினா எண். 232—திரு. கு. ரமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த வருடத்தில் குறுவை நெல் விளைச்சல் அமோகமாக ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், சென்றாண்டைவிட இந்த ஆண்டு அதிக விளைச்சலின் அளவு என்ன?

(இ) தஞ்சையைவிட திருச்சியில் விளைச்சல் ஏக்கராவுக்கு அதிகம் கிடைக்கிறதா?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) குறுவைப்பட்டம் என்று குறிப்பது பெரும்பாலும் தஞ்சை திருச்சி மாவட்டங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் பகுதியிலும் ஆகும்.

தஞ்சையிலும் சிதம்பரம் பகுதியிலும் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அதிக விளைச்சல் ஹெக்டேருக்கு முறையே 418 கிலோவும், 448 கிலோவும் ஆகும். ஆனால் திருச்சியில் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு விளைச்சல் ஹெக்டேருக்கு 62 கிலோ குறைவாகும்.

(இ) & (ஈ) இல்லை. தஞ்சையின் சராசரி விளைச்சல் ஒரு ஹெக்டேருக்கு 4351 கிலோ திருச்சியின் சராசரி விளைச்சல் ஹெக்டேருக்கு 3550 கிலோ.

**திரு. கு. மணி ?** தலைவரவர்களே, குறுவை நெல் ஒரே ரகமான நெல் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இவ்வளவு அதிகமாக விளைச்சல் கிடைக்கக் காரணம் என்ன? திருச்சியில் அம்மாதிரி குறைவாக விளைச்சல் கிடைப்பதற்குக் காரணம் என்ன என்று அறிவிப்பதோடு, திருச்சியிலும் தஞ்சையில் கிடைப்பதைப் போன்று கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, தஞ்சையில் பெரும்பாலும் ஏ.டி.டி. 31, ஏ.டி.டி. 4 ஆகிய குறுவை நெல் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. திருச்சியிலே அந்த மண்ணுடைய இயல்புக்குத் தகுந்தவாறு அதே நெல் வகைதான் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. எனவே, விளைச்சலுக்கு குறுவை நெல் வகையை மாற்றியது காரணம் இல்லை.

**திரு. கு. மணி :** தலைவர் அவர்களே, நெல் ரகத்தினுடைய தகராறு அல்ல என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். அப்படியானால், அதற்கு இடப்படுகின்ற உரம் அல்லது அந்த மண்ணினுடைய வளமை, இவற்றில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறதென்றால், அதைப்பற்றி விவசாயிகளிடம் சொல்லி, ஆராய்ச்சி பண்ணி விளைச்சலை, இங்கு கிடைப்பதுபோல் அங்கும் அதிகம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதன் காரணத்தைக் கண்டறிய துறை நிச்சயமாக முற்படும். முற்பட்டு அந்தக் குறையை நிவர்த்தி செய்ய என்ன வழிவகை என்பதையும் ஆராயும்.





**திரு. எஸ். இளையபெருமாள் :** தலைவர் அவர்களே, இந்தத் தடவை குறுவை நெல் அதிகமாக விளைந்திருந்தும் விற்க முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டபொழுது அது விலை போகாமல் இருந்தது என்று அரசாங்கத்திற்கு மனு செய்தது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன வழி செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமான விளைச்சல் குறுவையில் கிடைத்தது என்று அமைச்சர் சொன்னார். வருகிற ஆண்டிலே கூட, இன்னும் அதிகமாக உற்பத்தியை எதிர்பார்க்கவேண்டும் என்றால், விவசாயிகளுக்கு தண்ணீர் வருவதற்கு முன்னாலே, சுருட்டுப்பா நாற்று விட்டு, தண்ணீர் வந்தபிறகு, அந்த நாற்றை பறித்து நடுபவருக்கு அதற்கு ஏதுவாக, அரசு உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவை நெல் அதிகமாக மகசூல் கிடைத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு கிடைத்ததைவிட இந்த ஆண்டு எவ்வளவு அதிகமாகக் கிடைத்தது என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த ஆண்டு தாளடி, சம்பா மகசூல் பாதிக்கப்பட்டது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்ததா? அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது சலுகை வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பற்றிய தகவல்தான் என்னிடம் இருக்கிறது. பாதிக்கப்பட்டதைப் பற்றிய விவரம் அரசுக்குத் தெரியாது.

### வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 233—**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரிலிருந்து திட்டக்குடி செல்லும் பெருவழித் துறை சாலையில் ஓடும் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, அரசிடம் மாநில நெடுஞ்சாலைத் துறை மூலம் பாலம் கட்டும் திட்டம் எதுவுமில்லை. பங்களூர் ஒன்றிய பொது நிதியிலிருந்து ஒரு தரைப் பாலம் கட்டுவதற்கு தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதி கோரப்பட்டது. பரிசீலிக்கப்பட்டு ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து மேற்சொன்ன பணியினை மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜெ. எஸ். இராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் நான் கேட்டிருக்கும் பாலம் இருக்குமிடத்திலிருந்து வெள்ளாற்றின் குறுக்கே கட்டப்படும் பாலமாகும். அப்பாலம் இல்லாததால், விவசாயப் பொருள்களைப் பிற இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் மாணவர்கள் சென்றுவரவும் பெருத்த தடை ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு அமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தை மிக விரைவிலே அரசு முடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன பதிலிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் யூனியனுடைய பணத்திலிருந்து பொது நிதியிலிருந்து கட்ட வேண்டுமென்ற பரிசீலனை அரசினுடைய பரிசீலனையிலிருந்து கொண்டிருக்கிறது. அதற்காக ஏறத்தாழ ரூ. 15 இலட்சம் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. ஜெ. எஸ். இராசு:** சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது பஞ்சாயத்து ஒன்றியத்திலிருக்கிற நிதி அனைத்தும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒரு யூனியனிலிருந்து ரூ. 15 இலட்சத்தை ஒரே ஒரு திட்டத்திற்கு அதுவும் அந்தத் தரைமட்டப் பாலத்திற்குப் போடக்கூடிய நிலையில் அந்தப் பஞ்சாயத்து இல்லையென்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் திட்டம் விரைவில் நடைபெற அரசு சிறப்பான முறையில் ஏதேனும் நிதி உதவி அளித்து திட்டத்தை முடிக்குமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, புறச்சாலைகள் திட்டத்தின் அடிப்படையிலே இதை உயர்மட்டப் பாலமாக எடுக்க வேண்டுமென்று சொன்னால், ரூ. 40 இலட்சம் செலவாகும். அதனால் தரைமட்டப் பாலமாகக் கட்ட வேண்டுமென்ற யோசனை அரசினுடைய பரிசீலனையிலே இருந்து வருகிறது. நிதி நிலைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. இரா. கருப்பையா:** தலைவர் அவர்களே, இந்தப் பாலம் திருச்சி மாவட்டத்தையும் தென்னார்க்காடு மாவட்டத்தையும் இணைக்கின்ற முக்கியமான பாலமாக இருக்கிற காரணத்தால் தான், அரசே பார்ட் டூ ஸ்கீமில் எடுத்து நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இவ்வளவும் நிதித் திட்டத்திலே எடுக்க முடியாத நிலைமையிலே அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## இராஜபாளையத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம்

*வினா எண். 234—**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளையத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சுமார் 2 இலட்சம் பெறுமானம் உள்ள 1,110 ச. அடி நிலம் வருடத்திற்கு ரூ. 12-க்கு மில் உரிமையாளருக்கு குறைந்த குத்தகைக்கு விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள நிலத்தை இராஜபாளையம் ஞானகிராம் மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு 72-ம் ஆண்டில் 5 ஆண்டுகளுக்கு குத்தகை விடப்பட்டது. மீண்டும் 77 ஆம் ஆண்டில் 2 வருடங்களுக்கு குத்தகைக்கு நீட்டிக்கப் பட்டது.

(ஆ) மேலும் குத்தகைக்கு நீட்டிக்குமாறு விண்ணப்பித்த போது அவ்விடத்தில் சாலையை அகலப்படுத்த வேண்டியிருந்ததால் அது மறுக்கப்பட்டது.

[முற்பகல் 9-50]

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தை அரசாங்கத்திலிருந்து குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அரசு அனுமதி இல்லாமல் அங்கே மாடிக்கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் நெடுஞ்சாலைத் துறை அந்த சாலையை அகலப்படுத்த இருப்பதால் அந்தக் கட்டிடத்தை இடிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமா? இதற்குக் காரணமாக இருந்த, குறைந்த குத்தகைக்கு விட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, குத்தகைக்கு விடும்போது சில நிபந்தனைகளுக்கு உட்படுத் தான் அது குத்தகைக்கு விடப்பட்டது. அந்த 1,410 சதுர அடி நிலம் 1972 ஆம் ஆண்டில் 6 ரூபாய்க்கு மட்டுமே குத்த

கைக்குக் கொடுக்கப்பட்டது.

கைக்குக் கொடுக்கப்பட்டது. அந்த 5 ஆண்டுகளுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த நேரத்தில் நிரந்தரமான கட்டிடங்கள் எதுவும் எழுப்பக்கூடாது என்று நிபந்தனையும் ஏற்கனவே இருக்கிறது. நிரந்தரமான கட்டிடம் இருக்குமானால் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களை ஏழைகள் ஆக்கிரமிக்கும்போது பளிச்சென்று வெளியே தெரிகிறது. பணக்காரர்கள் ஆக்கிரமிக்கும்போது வெளியே தெரிவது இல்லை. எனவே பணக்காரர்கள் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்க, அரசாங்கம் கண்காணிப்புக் குழு அமைக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, பணக்காரர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் குறிப்பாக நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் ஆக்கிரமிப்புகள் இருந்தால் அவைகள் அகற்றப்பட்டு வருகின்றன. அதற்குக் காரணம், ஒவ்வொரு சாலையையும் அகலப்படுத்தவேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கிறது. சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், சில இடங்களில் சாலைகள் கோணலாக இருந்தால் அவற்றை நேர்படுத்துவதற்கும் ஆங்காங்கு இருக்கும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுகின்றன. ஆக்கிரமிப்பு யார் செய்தாலும் அது அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## துறையூர் நகரில் புறச்சாலை.

*** வினா எண். 235—திரு. வெ. அரங்கராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) துறையூர் நகரில் புறச்சாலை (Bye-pass Road) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

**(ஆ) & (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.**



**திரு. வெ. அரங்கராசன் :** தலைவர் அவர்களே, துறையூர் நகரில் புறச்சாலை அமைக்கும் திட்டத்திற்காக ரொண்டுக் காலத்திற்கு முன்பே நிலங்கள் சர்வே செய்யப்பட்டது. ஆனால், இப்போது அமைச்சர் அவர்கள் அதுபற்றிய பரிசீலனை இல்லை என்று சொல்கிறார்கள். முசிறி-குளித்தலை பாலம் கட்டப்பட்ட பின்னர், இப்போது தினசரி கிட்டத்தட்ட 1,000 லாரிகள் துறையூர் நகரம் வழியாக வருவதால், அதிக விபத்துகள் அந்தச் சாலையில் ஏற்படுகின்றது. ஆகவே, இந்தப் புறச்சாலை அமைக்கும் செயற்குறிப்பை அரசு மறுபரிசீலனை செய்து, விரைவாக நிறைவேற்றித் தர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மாற்று வழிப் பாதை ஒன்று 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ. 6.26 இலட்ச மதிப்பீட்டில் அமைத்துத் தருவதற்காக ஒரு திட்டம் ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் இதுவரையில் அது அரசின் ஒப்புதல் பெற்ற எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணி வரும் ஆண்டில் நிதி நிலைக்கு ஏற்ப மாநிலச் சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. வெ. அரங்கராசன் :** தலைவர் அவர்களே, நிதி வசதி பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்படி இருந்தாலும் அந்தத் திட்டத்தை 1981–82 ஆம் ஆண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நிதிநிலை சரியாகயிருந்தால் எடுத்துக்கொள்ளப்படும்.

## போழியம்மனூர் குடிநீர் வழங்கு திட்டம்.

***வினா எண் 236—திரு. அ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் ஆத்தூர் தொகுதி போழியம்மனூர் என்னும் கிராமத்தில் கூட்டுக் குடிநீர் திட்ட வேலை பாதி அளவில் நிற்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது மீண்டும் துவங்கப்படும் ?

(இ) இத் திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ)— மதுரை மாவட்டம் ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரியபட்டியில் ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்ட வேலை 1972 இல் மேற்கொள்ளப்பட்டு பணப்பற்றாக்குறை காரணமாக முடிவு பெறாத நிலையில் உள்ளது. இக் குடிநீர் திட்டத்திற்காக ரூ. 5,000, 14-1-1980-ல் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆய்வுக் கட்டணமாகச் செலுத்தப்பட்டது. இவ்வேலைக்கான மதிப்பீட்டை தயார் செய்யுமாறு திண்டுக்கல் உதவிப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். பெறுவர் இதனை மாவட்ட ஆட்சியர் கவனத்திற்குக் கொண்டு வந்து, வேலையினை முடிக்க ஆவன செய்யப்படும்.

(இ) இவ்வேலை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செய்து முடிக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, தற்போது அங்கே தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் இந்தத் திட்டம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுமா அல்லது தனியாகச் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ரெட்டியார் சத்திரத்தைப் பொறுத்தவரையில் அது ஏற்கனவே தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வேலை நடந்தது. மேலும் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுமா அல்லது தனியாகச் செயல்படுத்தப்படுமா என்ற குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. ஆனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் குடிநீர் வசதி செய்து தருவதற்காக தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் இந்தக்கிராமத்தின் பிரச்சினை முடிவு பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுக்கொண்டதிலிருந்து 3 மாதங்களுக்குள் இத்திட்டம் செய்து முடிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இந்த குடிநீர் வடிகால் வாரியம் எப்போது இந்தத் திட்டத்தை எடுத்துச் சொல்லும் என்பதை அறிவிப்பார்களா ?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, வெகு சீக்கிரமாக.

## விளாத்திகுளம் அரசு மருத்துவ மனைக் கட்டிடம்.

* வினா எண். 237—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் அரசு மருத்துவ மனையில் படுக்கைகள் கொண்ட கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை படுக்கைகள் ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ), (ஆ) மற்றும் (இ)— இம்மருத்துவமனையில் கூடுதலாக 50 படுக்கை (25 ஆண்கள் 25 பெண்கள்) பிரிவுகள் மற்றும் ஒரு எக்ஸ்ரே பிரிவு ஆகியவைகள் புதிதாக கட்டுவதற்காக ரூ. 8.50 இலட்சம் அங்கீகரித்து 18-9-80 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 50 படுக்கைகள் கொண்ட பிரிவுகள் கட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்ததற்கு நன்றி. அதே நேரத்தில் அந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக மாற்றி கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுக்காலம் ஆகியும் இன்னும் அங்கே மருத்துவர் இல்லாமல் டெபுடேஷன் முறையில் கோவில்பட்டி, தூத்துக்குடியிலிருந்து மருத்துவர்கள் வருகிறார்கள். அந்த கிராம மக்கள் நேரடியாக பாதிக்கப்பட்டு பெரிய மருத்துவ மனைக்கு செல்ல மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே உடனடியாக அங்கே ஒரு பெண் மருத்துவரையும் ஒரு செவிலியரையும், ஒரு ஆண் மருத்துவரையும் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இது ஒன்றியத்தினுடைய டிஸ்பென்சரியாக இருந்து, அரசாங்க டிஸ்பென்சரியாக மாற்றப்பட்டது 5-7-1978-ல். இப்போது அங்கே out-patient room, emergency room, store room, shed, ma tern room, lumber room, kitchen. etc,

இருக்கின்றன. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன மாதிரி விரைவில் டாக்டர்கள் நியமிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, அவசர கேஸ் எடுத்துக்கொண்டால் ஒரு நிரந்தரமான மருத்துவ அதிகாரி கிடைக்கின்ற வகையில் நிரந்தரமாக அந்த நகரில் இருந்து கொண்டு சிகிச்சை அளிக்க ஒரு மருத்துவரை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதைத்தான் சொன்னேன். இப்போது அந்த வகையில், 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சட்டையபுரத்தில் 6 படுக்கைகளும், 35 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோவில்பட்டியில் 30 படுக்கைகளும் கொண்ட மருத்துவமனைகள் இருக்கின்றன. இந்தக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஆணையிடும்.

## சத்தியமங்கலத்தில் தாலுகா மருத்துவமனை.

*வினா எண். 238— திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்தியமங்கலத்தில் புதிதாக தாலுகா அளவிலான பெரிய மருத்துவமனை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ப. செங்கோட்டையன் : தலைவரவர்களே, இது தாலுகாவாக மாற்றப்பட்டு 6 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே 6 படுக்கைகள் வசதியுடைய மருத்துவமனைதான் இருக்கிறது. அந்தப் பகுதியில் பின் தங்கிய மலைவாழ் மக்கள் அதிகமாக இருப்பதால் நடப்பாண்டிலேயே அதை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதற்காகத்தான் உள்ளூர் முக்கியஸ்தர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெரியார் மாவட்டத்தில் இருக்கக் கூடிய மருத்துவ அலுவலரோடு தொடர்பு கொண்டு வருகிறார்கள். மேலும் மருத்துவ மனை கட்டுவதற்காக மருத்துவக் கட்டிடக் குழு மூலம் 25,000 ரூபாய் நன்கொடை வசூல் செய்திருக்கிறோம். இன்னும் 25,000 ரூபாய் வசூல் செய்யலாம் என்று எதிர்பார்க்கிறோம். கட்டிடம் கட்டுவதற்கு தகுதி வாய்ந்த நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மருத்துவத் துறை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டவுடன், மருத்துவமனை கட்டுவதற்கான செயற்குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## விளாத்திகுளம் வழியாக விரைவுப் பேருந்துகள்.

*வினா எண். 239—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னையில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக துரித வண்டிகளில் சிலவற்றை விளாத்திக்குளம், நாகலாபுரம், புதூர் வழியாக திருப்பி விடும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10-00].

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, முன்பே சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போதும் இந்த அவையின் வாயிலாகவும், நேரடியாகவும், என்னுடைய தொகுதி வழியாக

சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்கின்ற திருவள்ளுவர் பேருந்தை என் தொகுதி வழியாக விட வேண்டும் என்று கேட்டிருந்தேன். அப்போது கூடிய விரைவில் விடுகிறோம் என்று சொன்னார்கள். அப்போது 3 மாத காலத்திற்குள் பஸ் விடப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது ஏறத்தாழ 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே இப்போதாவது சென்னையிலிருந்து தூத்துக்குடி செல்கின்ற அந்த விரைவுப் பேருந்தை என்னுடைய தொகுதியின் வழியாக விடுவதற்கு மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் நல்லெண்ணமாக இருந்தாலும் சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்கின்ற பேருந்தை விளாத்திகுளம் வழியாக விடுவது என்றால் 14 கிலோ மீட்டர் அதிகமாக அப்பேருந்து செல்ல வேண்டி இருக்கிறது. அப்படிச் செல்வதை நீண்ட தூரப் பயணிகள் விரும்ப மாட்டார்கள். ஆகவேதான் அதைச் செய்யாமல் இருக்கிறோம். ஆனால் புதிதாக அங்கே பேருந்து விடப்படுவது பற்றிச் சொல்லவில்லை. அப்படிப் புதிதாக பேருந்து விடப்படுவது குறித்து கேட்டிருந்தால் அதற்குப் பொருத்தமான பதில் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பு தனியாகப் பேருந்து கேட்டேன். அப்படி கேட்கின்றபோதுதான் சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் எட்டையாபுரம் வழியாகச் செல்கின்ற பேருந்தை மாற்றி விளாத்திகுளம் வழியாக விடப்படும் என்றும் அதை அரசு ஆலோசிக்கும் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இருந்தபோதிலும் அங்குள்ள மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருப்பது புதிதாக ஒரு திருவள்ளுவர் பேருந்தை சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு விளாத்திகுளம் வழியாக விடப்பட வேண்டும் என்பது. அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள், எட்டையாபுரம் வழியாகச் செல்கிறது என்று. எட்டையாபுரத்திற்கும் விளாத்திகுளத்திற்கும் உள்ள தூரம் 20 கிலோ மீட்டர் தான். அந்த 20 கிலோ மீட்டர் தூரத்தில் எட்டையாபுரம் வருவதற்கு நகரப் பேருந்துகள் நிச்சயமாகக் கொடுக்கப்படும். அந்தப் பேருந்துகளைப் பயன்படுத்திக் கொண்டு எட்டையாபுரத்திற்கு வந்து விரைவுப் பேருந்தைப் பிடிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே உள் பக்கமாக இருக்கின்ற ஒவ்வொரு கிராமம் வழியாகவும் விரைவுப் பேருந்து செல்வது என்றால் அது நகரப் பேருந்து போல ஆகிவிடக் கூடும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்



அவர்களின் எண்ணத்தைக் கவனத்தில் கொண்டு பரிசீலனை செய்து தேவையானதைச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தூத்துக்குடி துறைமுகம்

*வினா எண். 240—திரு. து. புருஷோத்தமன் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தூத்துக்குடி துறைமுகத்தை விரிவு படுத்துவதுபற்றி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :— இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, இந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்தினால் தூத்துக்குடி ஒரு தலைசிறந்த தொழில் நகரமாக வருவதற்குரிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே மத்திய அரசை மாநில அரசு இத்துறைமுகத்தை விரிவுபடுத்துவது குறித்து வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன். தூத்துக்குடி துறைமுகத்தில் தற்போது ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, எவ்வளவு சரக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்றன என்ற தகவல் இல்லை. ஆனால் துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தூத்துக்குடி துறைமுக வளர்ச்சி வாரியம் என்று ஒரு புதிய வாரியமே அமைக்கப்பட்டிருக்கின்றது. அதிலே மாநில அரசு அதிகாரிகளும், மத்திய அரசு அதிகாரிகளும் உறுப்பினர்களாக இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய கூட்டம் பல முறை நடந்திருக்கின்றது. மீண்டும் அந்தக் கூட்டத்தை நடத்த இருக்கிறார்கள். அக்கூட்டம் முடிந்த பிறகு அது குறித்த தகவலை மத்திய அரசுக்கு அனுப்பி இதிலே திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசின் மூலம் சொல்வதாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. சுப்பரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரம் வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரம். அது மாத்திரம் அல்லாமல் அது இன்டஸ்ட்ரியல் ஏரியாவாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலும் வளர்ந்து வருகிறது. ஸ்பிக் நிறுவனமும் அங்கே வந்திருக்கிறது. அதனால் அத்துறைமுகத்தை விரிவுபடுத்த அப்பகுதி மக்களும் விரும்புகிறார்கள். அதிகாரிகளும் விரும்புகிறார்கள். ஆகையினால் அடிக்கடி காலம் மட்டும் போட்டு நேரத்தைக் கடத்திக் கொண்டு போகாமல் உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கான முடிவை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவு படுத்த வேண்டும் என்று எப்படி மக்கள் விரும்புகிறார்களோ எப்படி அதிகாரிகள் விரும்புகிறார்களோ, அப்படித்தான் நாங்களும் விரும்புகிறோம். ஆகையினால் நிச்சயமாக அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத்தான் வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய கருத்துக்களைக் கேட்டிருக்கிறோம். அந்தக் கருத்துக்களைப் பெற்று மத்திய அரசாங்கத்திற்கு தெரிவிப்போம். விரிவு படுத்தியே ஆக வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று சொல்லிய பிறகு 2 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்ட பிறகும் அமுலுக்கு வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே இந்த மாமன்றத்தின் மூலமாக, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை கொண்டு வர வேண்டும் என்கிற தீர்மானத்தைப் போட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி உடனடியாக அத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் தீர்மானம் கொண்டு வர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடப்பெற்ற 2 ஐந்தாண்டு திட்டங்களுக்கும் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் மாத்திரம் அல்ல. பல்வேறு நிறைய திட்டங்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. பலவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலவற்றை தள்ளிவிருக்கிறார்கள். ஆகவே, அப்படி மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் பிரச்னை வருகிற காலத்தில் இந்தத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டும் என்று இந்த அரசாங்கம் நிச்சயமாக வற்புறுத்தும்.



## தன்னிறைவுத் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 5—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு எவ்வளவு ஒன்றியங்கள் தன்னிறைவு திட்டத்தின்கீழ் எடுக்கப்பட இருக்கின்றன?

(ஆ) அதற்கு எத்தனை கோடி ரூபாய் ஒதுக்க அரசு உத்தேசித்துள்ளது?

(இ) ஏற்கனவே எடுக்கப்பட்ட 69 ஒன்றியங்களில் வேலை முடிந்து விட்டதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 120 ஒன்றியங்கள்.

(ஆ) நிதி ஒதுக்கீடு இன்னும் செய்ய வில்லை.

(இ) வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன. இது முழுவதும் முடியும்போது எத்தனை கிராமங்கள் பயன்பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கிராமங்களிலே முக்கியமான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பெறுகின்றன. குறிப்பாக குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள் வசதி, அரிசன குடியிருப்புகளுக்கு—மயானங்களுக்குச் செல்ல வேண்டிய பாதைகள் அமைத்தல், சிறு பாலங்கள், சிறு பாசன வசதி, ஊரக மருத்துவ மனைகள், மக்கட்பேறு நிலையங்கள் அரிசனங்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற வேறு சில பணிகளுக்காகவும் இத் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலமாக 40 ஆயிரம் கிராமங்கள் பலன் அடையும் என்றும் எதிர்பார்க்கப்பெறுகிறது.

திரு. மி. வின்சென்ட்: புதிதாக எடுக்கப்பெறும் 120 ஒன்றியங்களில் குமரி மாவட்டத்தில் உள்ள தக்கலை, தோவாளை ஒன்றியங்கள் சேர்க்கப்பெற்றுள்ளனவா என்று அறியவிரும்புகிறேன்?

[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. பி. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்கு ஒன்றியங்கள் எடுக்கப்
பெற்றிருக்கின்றன. மேற்புறம், தக்கலை, திருவட்டாறு,
தோவாளை ஆகியவையாகும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்
களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த தன்னிறைவுத் திட்டத்
தின்கீழ் எத்தனை இடங்கள் எடுக்கப்பெற்றிருக்கின்றன?
எவையெவை? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. குழந்தைவேலு : எல்லா மாவட்டங்
களிலிருந்தும் ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கின்றன.
ஒவ்வொருவரும் கேட்க ஆரம்பித்தால் அதற்கே ½ மணி நேரம்
போய்விடும். ஆகவே அவற்றிற்கான குறிப்புகளை நான்
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.
(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பின
ருக்கும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் அதிக
மாகும். ஆகையினால் அமைச்சர் அவைகளை அச்சடித்து
அனுப்பிவிடுவார்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்
பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி
பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மதுரை மாவட்
டத்திலே திருமங்கலம் வட்டம், உசிலம்பட்டி வட்டம்
ஆகிய இடங்களிலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் நீண்ட
வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மழை பொய்த்ததன்
காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையினால் அதை
வறட்சிப் பிரதேசமாக அறிவித்து, வறட்சிப் பணிகளை மேற்
கொள்வதுகுறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்
திருந்தேன்.... (மணியடிக்கப் பெற்றது).



1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வறட்சியைப் பற்றி வரு
வாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அவைக்
குத் தர இருக்கிறார்கள். அப்போது பேசிக் கொள்ளலாம்.
அது வரையில் பொறுமையாக இருங்கள். அதற்குள் மழை
வந்து விட்டால் நல்லது.

[முற்பகல் 10-10]

திரு. வெ. இராஜசேகரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்னை என்னவென்று
பார்த்தபிறகுதான் அனுமதிக்க முடியும். இவை எல்லாம்
அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் எழுப்பக்கூடிய
பிரச்னை முக்கியமான பிரச்னையாகும். அது, அவர் சம்பந்தப்
பட்ட பிரச்னையாகும். ஒரு உறுப்பினர் தாக்கப்பட்டது
சம்பந்தமாக இந்த அவைக்கு தவறான தகவல் கொடுக்கப்
பட்டிருப்பதாக அவர் கருதுகிறார். அதை விசாரணை செய்வது
உங்கள் பொறுப்பு. நீங்கள்தான் எங்களுக்குப் பாதுகாப்பாக
இருக்கவேண்டியவர்கள். நீங்களே இது சம்பந்தமாக விவாதம்
நடத்தத் தயாராயில்லை என்றால் நாங்கள் எங்கே போவது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தயாராயிருக்
கிறேனா இல்லையா என்று நீங்களே தீர்ப்புக் கொடுத்தால்
என்ன செய்வது? அதைப் பற்றி முடிவு எடுக்க எனக்கு நேரம்
கொடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் சட்ட
சபை விதிகளுக்கு உட்பட்டு ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப
விரும்புகிறேன். சென்னை மாம்பலம் காவல் நிலையத்தில்,
போலீஸ் லாக்கப்பில் ஒருவர் இறந்து இருப்பதாகத் தகவல் வந்
திருக்கிறது. அது குறித்து நான் ஒத்திவைப்புத் தீர்மானம்
கொடுத்திருக்கிறபோது—இந்த அவையின் மரபு போலீஸ் லாக்
கப்பில் யாராவது இறந்துவிடுகிற சூழ்நிலை வருகிறபோது அது
குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு உறுப்
பினர்கள் பேசுவதற்கு வசதிவாய்ப்பு தரப்பட்டு அரசாங்கத்
தரப்பில் இருந்து அதற்கு விளக்கம் கொடுக்கிற முறைதான்
தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் அது கவன
ஈர்ப்பாக மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி கவன ஈர்ப்பாக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

மாற்றப்பட்டிருப்பதின் காரணமாக உறுப்பினர்கள் ஒன்றிரண்டு கேள்விகள்தான் கேட்க முடியும். ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானமாக அனுமதிக்கப்பட்டால்தான் அப்பிரச்னைபற்றி விவாதிக்கமுடியும், இல்லையென்றால் அவைபற்றி சபைக்குத் தெரியாமல் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. ஆனால் ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வது என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுத்திருக்கிறோம்.

டாக்டர் மு. கருணாநிதி : திரு. ரகுமான்கான் எழுப்பியுள்ள பிரச்னை ஒத்திவைப்புத் தீர்மானத்தை கவன ஈர்ப்பாக மாற்றியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அலுவலகக் குறிப்பைப் பார்த்துத்தான் மாற்றியிருப்பேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, 'இந்து' பத்திரிகை மீது போன தடவை பிரிவிலேஜ் மோஷன் மீது அவை முன்னவர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார்கள். அதிலே இரண்டு முக்கியமான தவறுகள் இருந்து, சில திருத்தங்கள் கொடுக்கப்பட்டன. அப்போது நான் ஒரு அறிக்கையைக் கொடுப்பதற்கு தங்கள் அனுமதியைக் கேட்டிருக்கிறேன். அது எப்போது அஜெண்டாவில் எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெரிய வேண்டும். இது நெம்பர் 1. நெம்பர் 2, திருச்சி சென்ட்ரல் ஜெயிலர் சம்பந்தமாக பிரிவிலேஜ் மோஷன் பற்றி ஏற்கனவே பேசியாகிவிட்டது. தாங்கள் தீர்ப்பு கொடுக்கவில்லை. இது சம்பந்தமாக ஜெயிலர் மீது பிரிவிலேஜ் மோஷன் சப்ஜக்டிலே அமைச்சர் அவர்களும், பல எம்.எல்.ஏக்களும் சிறைக்குச் சென்று குறிப்பிட்ட பிரச்னைபற்றி கைதிகளிடம் ஸ்டேட்மென்ட் எடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை வரவழைத்து, தாங்கள் தீர்ப்பு தரவேண்டும். இன்னும் மூன்று, நான்கு நாட்களுக்குத் தான் சட்டமன்றக் கூட்டம் உடனடியாக, அஜெண்டாவில் அவைகளைச் சேர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பரிசீலனை செய்து எடுத்துக் கொள்ளப்படும்.



## 4. உரிமைப் பிரச்சினைகள்.

### (அ) உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 246வது விதியின்கீழ் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை ஒன்ற பேரவையிலே எடுத்துக் கொள்ள அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடைய நேர்முக உதவியாளர் என்று முத்திரையிட்ட, ரப்பர் ஸ்டாம்ப் முத்திரையோடு, இராமகிருஷ்ணன் என்ற பெயருடைய, அவருடைய உதவியாளராக இருப்பவர் என்று கருதுகிறேன், அவர் கையெழுத்திட்டு சுற்றறிக்கை ஒன்று ஜனவரி 29ஆம் தேதியிட்டு சைக்கிளோஸ்டைல் செய்த படிவங்கள் மூலமாகப் பத்திரிகைகளுக்கும், மற்றவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தின்சார்பில். அப்படி அனுப்பப்பட்டிருக்கின்ற அந்தச் செய்திக்கு தலைப்பு, ''12 சட்டமன்ற உறுப்பினர்களோடு அன்பழகன் தனிக் கட்சி துவக்கம்—அமைச்சர் குழந்தைவேலு தகவல்.'' தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் 12 எம்.எல்.ஏக்களுடன் தனிக் கட்சி ஒன்றைத் துவங்க இருக்கிறார். இத்தகவலை உள்ளாட்சித் துறை அமைச்சர் ப. குழந்தைவேலு வெளியிட்டார். அதன் உள்ளே வருகின்ற செய்திகள், ஒரு விழாவிலே அவர் பேசுகின்றபோது தெரிவிக்கப்பட்ட செய்திகள், அவைகள் முழுவதையும் படிப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். சென்னை, 28வது வட்டம் அ.தி.மு.க. நிர்வாகிகள் பாராட்டுக் கூட்டம், நேற்று மாலை பெரம்பூர் ராகவாச்சாரி ரோடில் நடைபெற்றது. பொதுக்கூட்ட நிகழ்ச்சி—கட்சியின் நிகழ்ச்சி நடந்தது. அரசாங்க அறிக்கையின் மூலமாக அது வெளிவருகிறது. விழாவில் நிர்வாகிகளுக்குக் கைத்தறி ஆடைகளை அமைச்சர் அவர்கள் போட்டுப் பாராட்டினார். விழாவில் பேசும்போது, அமைச்சர் குழந்தைவேலு கூறியதாவது: ''கடந்த 8 மாதங்களாக மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று புரட்சித் தலைவர் அவர்கள் நல்வழியில், அண்ணா அவர்கள் வழியில் பாடுபட்டு வருகிறார். இதைக் கண்டு கருணாநிதி எரிச்சல் அடைந்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி எரிச்சல் அடைந்திருக்கிறார்—அதன் விளைவுகளை சட்டமன்ற நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தாலே தெரியும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை மக்கள் உணரவேண்டும்'' என்று

[திரு. க. அன்பழகன்] [1981 பிப்ரவரி 7

தெரிவித்திருக்கிறார். பொறுப்புள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களை மொத்தமாக எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார்கள் என்பதை மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார். ''நமது இதய தெய்வத்தின் ஆட்சி 1977-ல் ஏற்பட்டது. ஆனால், இடையிலே வேண்டுமென்றே கருணாநிதியின் துர்போதனையால் ஆட்சியைக் கலைத்து விட்டார்கள். தர்மம் மறுபடியும் வென்று புரட்சித் தலைவர் வெற்றி வாகை சூடி ஆட்சியை அமைத்திருக்கிறார். ஆனால், கருணாநிதியின் நிலையைப் பாருங்கள். 79லே 48 இடங்கள்; இப்போது 38 இடங்களில் ஜெயித்திருக்கிறார். இதிலே, 3 போய், இப்போது 35 ஆகியிருக்கிறது. கருணாநிதிக்கு எடுத்துச் சொன்னேன், இந்த 35, 18ஆகப் போகிறது. கருணாநிதிக்கு அமைச்சர் குழந்தைவேலு பரிவோடு எடுத்துச் சொன்னார்கள். உடனே கருணாநிதி, அமைச்சர் குழந்தைவேலு மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்தார்.'' சட்டசபையிலே இதுபற்றி பேசப்பட்டிருக்கலாம்; ஆனால் உரிமைப் பிரச்னை கொண்டு வரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

18 எம்.எல்.ஏ-க்களும் 3 எம்.பி-க்களும் பிரிந்து தனிக் கட்சி துவங்க இருப்பதாக எனக்கு வந்த தகவலைச் சொன்னேன்.

அப்போதே சொன்னாராம்—18 எம்.எல்.ஏ-க்களும் 3 எம்.பி.க்களும் தனியாக ஒரு கட்சி ஆரம்பிக்க இருப்பதாக சிறப்புச் செய்தி ஒன்று அமைச்சருக்கு வந்து அதை அவர் தெரிவித்தர்ராம்,

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அறிக்கையை வாசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு—

He is making a running commentary over it.

அது அனுமதிக்கப்படுகிறதா ?

MR. SPEAKER : The Hon. Deputy Leader of the Opposition is explaining his Position.

**திரு. க. அன்பழகன் :** இவ்வளவு கருத்துக்களையும் நான்
விரிவாக விளக்கிப் பேச ஆரம்பித்தால் நீண்ட நேரம்
ஆகும் என்பதால் அவையின் கவனத்திற்கு இடையில் அந்தக்
குறிப்பைத் தருகிறேன். அந்தப் புரிந்துகொள்ளக்கூடிய
ஆற்றல் உள்ள அவையாகத்தான் இந்த அவை இருக்குமென்று
நான் நம்புகிறேன்.



1981 பிப்ரவரி 7] [திரு. க. அன்பழகன்]

நுழைந்தவுடன் ஒரு முறை
'கருணாநிதி சட்டமன்றத்திற்குள் எல்லா எம்.எல்.ஏ-க்களும் இருக்
பின்னால் திரும்பி தன்கட்சியின் சரிபார்த்துவிட்டுத்தான் உட்காருகிறார்.
கிறார்களா என்று எண்ணினாலும் அவரையும் சேர்த்து
கருணாநிதி எவ்வளவுதான் தென்படுகிறார்கள்'.
23 பேர்தான்

இருப்பது மறுக்கப்படுகிறது.
மிச்சம் பேர் இந்த அவையில்

திரும்பிப் பார்த்தால் தென்
'23 பேர்தான் கருணாநிதி காணவில்லை. அவர்கள்
படுகிறார்கள். 12 பேர்களைக் எங்களுக்குத் தெரியும்.'
எங்கே போனார்கள் என்பது

குழந்தைவேலு சொல்லு
அமைச்சரவையில் இருக்கிற திரு. இருக்கிற 12 பேர்கள்
கிறார்—திராவிட முன்னேற்றக் கழகத்தில் தெரியும் என்று.
எங்கே போனார்கள் என்பது எங்களுக்குத்

கடத்திக் கொண்டு
'அந்த 12 பேர்களையும் அன்பழகன்
போய் வைத்திருக்கிறார்.'

எவ்வளவு பெரிய குற்றம்
கடத்திக்கொண்டு போவது என்பது எவ்வளவு தரம்
என்பதும், ஒருவகையில் சொல்லப்போனால் சொல்லப்பட்ட வார்த்தை
தாழ்ந்த செயல் என்பதும், இதிலே, அவரைப் பற்றி
யினால் அது யார் மீது சுட்டப்படுகிறதோ என்பதையும்
எப்படிப்பட்ட கருத்து உருவாக்கப்படுகிறது நான் விரும்புகிறேன்.
அவை எண்ணிப் பார்க்கவேண்டுமென்று

ஆரம்பிக்க முடிவு
'அவர்களுடன் சேர்ந்து தனிக் கட்சி
செய்திருக்கிறார்.'

என்னுடைய நோக்கமாக அது சொல்லப்படுகிறது.

இருந்து
''அன்பழகனை திராவிட முன்னேற்றக் கழகத்தில் துடித்துக்
விரைவில் வெளியேற்ற வேண்டுமென்று அங்கு ஒருவர் மனோகரன்தான்.
கொண்டிருக்கிறார். யார் என்றால், அது பொதுச் செயலாளர்
அன்பழகன் வெளியே போய்விட்டால் தான் துணைப் பொதுச்
ஆகிவிடலாம். அதற்குப் பிறகு தன்னுடைய மொடக்குறிச்சி
செயலாளர் பதவியை தன்னுடன் வந்த — மனோகரன் கனவு
சுப்புலட்சுமிக்குத் தந்து விடலாம் என்று திருநெல்வேலி
காண்கிறார். இரண்டு மாதங்களுக்கு முன்பு மாநாட்டில்....
யில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக

அவை உரிமை மீறல்
**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**
என்ன என்பதை மட்டும் சொல்ல வேண்டும்.

[1981 பிப்ரவரி 7

**திரு. க. அன்பழகன் :** இந்த அறிக்கை அரசாங்க அறிக்கை. அரசாங்கம் என்றால், அரசாங்கத்திலிருந்து நேரடியாக வெளியிடப்பட்டது அல்ல என்றாலும் அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சரால், அவருடைய செயலாளரால் வெளியிடப்பட்ட அறிக்கை என்ற காரணத்தால் அதிலே வருகிற உரிமை மீறல் எவ்வளவு விபரீதமான உரிமை மீறல் என்பதை விளக்குவதற்காகப் படிக்க வேண்டியவனாக இருக்கிறேன். மன்னிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே உரிமை எங்களுக்கும் தரப்படும் என்று நம்புகிறோம். எங்களைப் பற்றி வெளியே பேசிய விமரிசனங்களைப் பற்றி இங்கே கொண்டு வருவதற்குத் தாங்கள் இதே அளவு உரிமையை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு இதை அனுமதிக்கிறீர்கள் என்று நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய உரிமை மீறல் எப்படி நடைபெற்றிருக்கிறது என்பதைச் சொன்னேன். இன்னும் முழு அளவுக்கு விளக்கவில்லை. கருத்துக்களைத்தான் இடையில் சொல்லி வருகிறேன். அதை விளக்கியதற்குப் பின்னால் அதேபோல் சட்டமன்ற உரிமை மீறப்பட்டிருக்குமானால் எந்த உரிமைப் பிரச்சினையையும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும், அந்த உரிமை மீறல்கள் தடுக்கப்பட சட்டமன்றம் வழிகாண வேண்டு மென்றும் நான் இந்த நேரத்தில் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'இரண்டு மாதங்களுக்கு முன்பு திருநெல்வேலியில் நடை
பெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் தி.மு.க.-வில்
உள்ள உட்கட்சிக் குழப்பத்தை அன்பழகனே வெளிப்படுத்தி
யிருக்கிறார். தி.மு.க. வில் போட்டி, பொறாமை அதிகரித்த
நிலையில் தி.மு.க.வை யாரும் காப்பாற்ற முடியாது என்று
கூறியிருக்கிறார். அன்பழகன் பேசும்போது கருணாநிதி எழுந்து
போயிருக்கிறார்.'

கருணாநிதி ஒருவேளை எழுந்து போயிருக்கலாம். சில அத்தியாவசியமான காரியங்களுக்கு மனிதன் எழுந்து போக வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சருக்கு அல்ல, அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'கருணாநிதி அடிக்கடி எம்.ஜி. ஆரை எட்டப்பன் பரம்பரை
என்று கூறி வருகிறார். நாங்கள் எட்டப்பன் பரம்பரை என்றால்
நீங்கள் யார்? இன்றைக்கும் சவால் விட்டுக் கூறுகிறேன்.
கருணாநிதி தமிழனே அல்ல. அதை நிரூபிக்க நான் தயாராக
இருக்கிறேன்.'



1981 பிப்ரவரி 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய பிரச்சினை வரை நிறுத்திக்கொண்டால் பரவாயில்லை. அறிக்கையில் உங்களைப் பற்றிச் சொல்லியிருப்பதில் உரிமை மீறல் என்ன இருக்கிறது என்பதை மட்டும் சொன்னால் போதுமானது.

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அவையினுடைய உரிமை மீறல் எந்தெந்தக் கோணத்தில் நடைபெற்றிருக்கிறது என்பதை, எந்த அளவுக்கு நடைபெற்றிருக்கிறது என்பதை பேரவை உணர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆகவே, சொல்லப்பட்ட கருத்துக்களில் இருந்து பெறப்படுகிற உணர்வுகள் என்ன என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் படிக்கிறேன்.

''கருணாநிதி தமிழன் அல்ல என்பதை நிரூபிக்க நான் தவறி
னால் என்னுடைய இந்த அமைச்சர் பதவியையே ராஜிநாமா
செய்யத் தயாராக இருக்கிறேன். கருணாநிதி தான் தமிழன்
என்பதை நிரூபிக்கத் தவறினால் தப்பிப் பிழைத்து வந்த
எம்.எல்.ஏ. பதவியை ராஜிநாமா செய்யத் தயாரா? இந்தச்
சவாலை ஏற்கும் துணிவு கருணாநிதிக்கு உண்டா? கருணாநிதி
தமிழன் அல்ல என்பதற்கு ஆதாரங்கள் என்னிடம் உண்டு. இனி
மேலாவது கருணாநிதி, தமிழன், தமிழன் அல்லாதோர் என்று
பிரித்துப் பேசுவதைக் கைவிடவேண்டும். இவ்வாறு அமைச்சர்
குழந்தைவேலு பேசினார்'' என்று உள்ளாட்சித் துறை அமைச்
சரின் நேர்முக உதவியாளர் கையெழுத்திட்டு சைக்லோஸ்டைல்
செய்யப்பட்டு பல்வேறு பத்திரிகைகளுக்கும் வேறு பல இடங்
களுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக நிச்சயமாக நான் அறிகிறேன்.
இந்த அறிக்கையிலே காணப்படுகிற கருத்துக்கள், ஒரு அமைச்சர்
அப்படிப் பேசலாமா? அது என்னுடைய கேள்வியல்ல, அரசியல்
வாதிகள் எதை வேண்டுமானாலும் பேசுகிறார்கள் என்று கூடப்
பதில் சொல்லி விடலாம். ஒரு அமைச்சர் பேசியதாக இருக்
கின்ற கருத்து சட்டமன்றத்தைத் தாழ்த்துவதாக இருக்கலாமா
என்பது என்னுடைய முதல் கேள்வி. அதுகூடப் பொது
வகையிலே அப்படி ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்
களையும் சட்டமன்றத்தையும் தாழ்த்துகின்ற வகையில் எதிர்க்
கட்சிகளைக் குறை சொல்லப் பேசிவிடலாம் என்று கருதப்பட்
டாலும் எதிர்க்கட்சி சட்டமன்றத்திலே ஒரு அங்கமாக இருக்கிற
காரணத்தால் சட்டமன்றத்திலே உள்ள தனி உறுப்பினர் அங்க
மாக இருந்தாலும், எதிர்க்கட்சி என்ற அங்கமாக இருந்தாலும்
அதைக் குறைவுபடுத்துவதற்கு யாருக்கும் இயற்கையிலே
உரிமை இல்லை. அதை முறை கடந்து பயன்படுத்துவதாக
இருந்தாலும் கூட அப்படி முறைகடந்து பயன் படுத்துகிறபோது
சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கிற ஒருவரை, தான்
ஏற்று இருக்கிற பொறுப்பு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

[திரு. க. அன்பழகன்] [1981 பிப்ரவரி 7

பொறுப்பு, அப்படி துணைத் தலைவராக இருக்கிற பொறுப்பை வேண்டுமென்றே இழிவுபடுத்துகின்ற வகையில் 12 பேரை கடத்திப்போய் எங்கே வைத்திருக்கிறார் என்று தனக்கு நிச்சயமாகத் தெரியும் என்றும் அப்படிக் கடத்திப் போய் வைத்திருப்பது ஒரு புது கட்சி ஆரம்பிப்பதற்காக என்றும் அமைச்சர் பேசி அப்படிப் பேசுகின்ற காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தையே தகுதியிழக்கச் செய்துவிடலாம் என்று எண்ணத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக ஒரு களங்கத்தை என் மீதும், நான் சார்ந்திருக்கிற கட்சியின் மீதும் நான் ஏற்றுக் கொண்டு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் என்ற பொறுப்பின் மீதும், இன்னும் சொல்லப் போனால், அதன் மூலமாக இந்தச் சட்ட மன்றத்தின் மீதும் இவைகள் எல்லாம் தனக்குத் தெரியும் என்றும் தானே அறிந்து நடக்கிறது என்று சொல்வதன் மூலமாக ஆளுங்கட்சி மீதும்கூட ஒரு பெரிய களங்கத்தை இந்த அறிக்கையின் கருத்து தெரிவிக்கிறது. அதிலே அமைச்சர் பேசினார் என்பதற்கு என்ன ஆதாரம் என்றால் அவருடைய நேர்முக உதவியாளரே அமைச்சர் பேசியது என்று தலைப்பிட்டுச் செய்தியாகத் தந்து இருப்பதன் காரணமாக அவர்தான்; பேசினார் அவர் மூலமாக அந்தச் செய்தி வந்திருக்கிறது அந்தச் செய்தியை அனுப்பியதாக அவருடைய நேர்முக உதவியாளரின் கையெழுத்து இருக்கிறது.

எனவே, இது இந்தச் சட்டமன்றத்தினுடைய உரிமையை மீறிய, உரிமையை சாதாரணமாக மீறியதல்ல, எதிர்க்கட்சியை அவமானப்படுத்துகிற வகையில் உரிமை மீறிய எதிர்க்கட்சியை அவமானப்படுத்துவதன் மூலமாக இந்தச் சட்டமன்றத்தையே அவமானப்படுத்துவதற்கு ஒரு அமைச்சர் முன்வந்து இருக்கிற ஒரு செயலாகும்.

இதை உரிமைக் குழுவின் பரிசீலனைக்கு நம்முடைய பேரவை அனுப்ப வேண்டும். சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும். இந்த உரிமைப் பாதுகாப்பு இல்லையென்றால் எந்த உரிமைப் பாதுகாப்பும் இந்தச் சட்டமன்றத்திற்கு இருக்காது என்பதை நான் தெரிவித்து உரிமையைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை தலைவரிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ..................

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உங்களுக்கு இதிலே இடம் இல்லை.



1981 பிப்ரவரி 7]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; நான் நோட்டீஸ் கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 பேர்கள் கொடுத்து இருந்தாலும் ஒருவர்தான் பேச முடியும். நீங்கள் பேசுவதாகச் சொல்லியிருந்நால் அவரை வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இரண்டு கட்சிகள் கொடுத்து இருந்தாலும் அப்படித்தான் அனுமதிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மரபு இருக்கிறது. அந்த மரபை மாற்ற முடியாது. இரண்டு கட்சிகள் கொடுத்தாலும் கட்சிக்கு ஒருவர்தான்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, என்மீது கொடுக்கப்பட்டிருக்கிற உரிமை மீறல் பிரச்சினை சம்பந்தமாக ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்திற்குச் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சினையை முதலிலே இந்த மாமன்றத்திலே கிளப்பியவர் எதிர்க்கட்சித் தலைவர்தான். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து கிளப்பிவிட்டு இந்த மாமன்றத்திற்குக் கொடுத்த மனுவிலே அவர்கள் கையெழுத்திடவில்லை. அதற்கு மாறாக ..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை உரிமை மீறல் வரவில்லை என்பதற்கு மட்டும் விளக்கம் சொல்லுங்கள். யார் கொடுத்தார்கள் என்ற விளக்கம் தேவையில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தாங்கள் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வெகு நேரம் பேசுவதற்கு அனுமதித்தீர்கள்.

[முற்பகல் 10-30.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நேரத்தைப் பற்றிப் பிரச்னை இல்லை ; இதில் உரிமை மீறல் பிரச்னைக்கு இடமுண்டா இல்லையா என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள் என்றேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; ரொம்ப நன்றி. தலைவரவர்களே இந்தப் பிரச்னை கிளப்பப்பட்டதே எதிர்க் கட்சித் தலைவரவர்களால்தான் என்பதை யாரும் மறுக்க முடி

யாது. இது ஒன்று. இரண்டாவதாக உரிமை மீறல் பிரச்னை
எப்பொழுது எழும், எப்பொழுது ஆரம்பிக்கிறது என்பதனையும்
நாம் தயவுசெய்து இங்கே நினைவுகூற வேண்டும். ஒன்று,
இந்த அவையிலே பேசியதை வெளியிலே போய் மாற்றிக் கூறி
னால் உரிமை மீறல் பிரச்னை வரும்; அல்லது பேசாததைப்
பேசியதாக வெளியிலே போய் நான் கூறினால் உரிமை மீறல்
பிரச்னை வரும். இவை இரண்டும் இங்கே இல்லை என்பதனைப்
பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாவதாக
நேர்முக உதவியாளர், அதுவும் அரசாங்கத்தின் பணத்தைப்
பெற்றுக் கொண்டிருக்கிறவர் சம்பளத்தைப் பெற்றுக் கொண்
டிருக்கிறவர் இந்தக் காரியத்தைச் செய்யலாமா, கவர்ன்மெண்ட்
மெஷினரி உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது என்கின்ற
குற்றச்சாட்டும் இந்த மனுவிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த
உதவியாளர் அரசாங்கத்தினுடைய அலுவலர் அல்ல என்பதை
நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கத்தினுடைய
சம்பளத்தை இதுவரையிலும் அவர் பெறவில்லை என்பதனையும்
தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அரசாங்கத்தி
னுடைய முத்திரையும் அந்த ஏடுகளுக்கு அனுப்பிய தன்னுடைய
குறிப்புகளிலே அவர் போடவில்லை என்பதனையும் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கத்திற்கும்
இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அந்த உதவியாளர்
என்னுடைய அரசியல் ஈடுபாட்டிற்காக அதே நேரத்தில் அரசியல்
கூட்டங்களுக்கு நான் செல்லுகின்ற நேரத்தில் வருகின்ற நேர்முக
உதவியாளர். இங்கேயும் கூட காங்கிரஸ் கட்சியின் துணைத்
தலைவர் அருமை நண்பர் திரு. சுந்தரராஜ் அவர்களும் கூட
சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய பணத்தை வாங்கிக்
கொண்டிருக்கின்ற அலுவலர் இப்படிச் செய்யலாமா என்று.
அவர்களுக்கு இந்த நிலைமை புரியாமல் அந்தக் கருத்தை அவர்
தெரிவித்திருக்கலாம் என்று நான் நம்புகிறேன். உண்மையிலேயே
அந்த நேர்முக உதவியாளர் அரசாங்கத்தினுடைய அலுவலர்
அல்ல என்பதனை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தெரி
விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, எந்த வகையிலேயும்
அரசாங்கத்தினுடைய உதவிகளைத் தவறான முறையில் நான்
பயன்படுத்தவில்லை என்பதனையும், அதே நேரத்தில் எந்த
உரிமை மீறல் பிரச்னையும் இதில் வருவதில்லை என்பதனையும்
நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும் குறிப்பாக இந்தத் துணைத் தலைவரவர்களின் கையிலே
கிடைத்திருகின்ற அந்த பிரஸ் ரிலீஜிலே உள்ள இன்னொரு
கருத்தினையும் சொல்லாமல் விட்டு விட்டிருக்கிறார்கள்;
நான் அதையும்கூடச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



(குறுக்கீடு) தலைவரவர்களே, என்னைப் பொறுத்த அளவில், இங்கே இருக்கக்கூடிய துணைத் தலைவரை ஒரு தமிழ் இனத் தலைவராக நான் ஏற்றுக் கொள்ளத் தயார்; ஆனால் எதிர்க் கட்சித் தலைவரை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்ற கருத்தினையும் நான் ஏற்கனவே தெரிவித்திருக்கின்றேன். அந்தக் கருத்து இதிலே வரவில்லை. (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புகு அமைச்சர் அவர்கள் இது உரிமை மீறலா இல்லையா என்பதை மட்டும் சொல்ல வேண்டும்.

*டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் தமிழனே அல்ல என்று நிரூபிப்பதாக அமைச்சர் திரு. குழந்தை வேலு அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நிரூபிக்காவிட்டால் அமைச்சர் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன் என்று சொல் கிறார்கள். ஆதாரங்களைக் காட்டுவதாகச் சொல்கிறார்கள். நான் அந்தச் சவாலை ஏற்றுக் கொள்கின்றேன். நான் தமிழன் அல்ல என்பதை அவர் நிரூபிக்கத் தவறினாரானால் ராஜிநாமாச் செய்யட்டும். (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தமைவர்: உட்காருங்கள்; எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

டாக்டர் மு. கருணாநிதி; தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அமைதியாக இருக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நான் தங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம்' பேராசிரியர் படித்தது அவைக் குறிப்பிலே இருக்கிறது. கருணாநிதி தமிழன் அல்ல என்று அமைச்சர் சொன்னது, இருக்கிறது. மறுபடியும் அவர் அழுத்தந்திருத்த மாகச் சொல்லியிருக்கிறார், அதுவும் இருக்கிறது. நான் அவருக்கு விடுத்த, அவருடைய அறைகூவலுக்கு விடுத்த பதில் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டும். நான் உங்கள் மூலமாக அவரைக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனை நாளைக்குள் நான் தமிழன் அல்ல என்பதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறார்? அந்தத் தேதியும் அவர் சொல்ல வேண்டும். (கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது ..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒரு தீர்ப்பு கொடுத்து விடுகிறேன். அதற்குப் பிறகு பேசுங்கள். இந்த அவைக் குறிப்பிலே பேராசிரியர் படித்தது இருக்கிறது. அதே

[பேரவைத் தலைவர்] [1981 பிப்ரவரி 7

மாதிரி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது இருக்கிறது.
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேச்சு இருக்கிறது.
மற்றவை எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
உண்மையிலே அரசாங்கத்தினுடைய உதவிகளைத் தவறான
முறையிலே பயன்படுத்தி வருகின்றவர்கள் என்று சொன்னால்,
தான் முதலிலே எதிர்க்கட்சித் தலைவரைத்தான் குற்றம் சாட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே அரசாங்கத்தினுடைய உதவி
களை எல்லாம் ......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும்.
அமைச்சர் இப்பிரச்னையில் உரிமை மீறல் இருக்கிறதா
இல்லையா என்பதற்கு மட்டும் பதிலைச் சொல்ல வேண்டும்.
புதுக் குற்றச்சாட்டுகளை ஆரம்பித்தால் அது திரும்பத் திரும்பப்
புதுப் பிரச்னைகளை எழுப்பும். உரிமை மீறல் இருக்கிறதா,
இல்லையா என்பதற்கான பதிலை மட்டும் சொல்ல வேண்டும்.
சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே,
உரிமை மீறல் இல்லையென்பதுதான் என்னுடைய வாதம்
எல்லாம். அந்த வாதத்திற்கு வலுவூட்டுகின்ற வகையிலேதான்
என்னுடைய கருத்துக்களை எடுத்துவைக்கிறேன். குறிப்பாக
ஒருநேர்முக உதவியாளரை அரசாங்கத்தினுடைய சம்பளம்பெற்று
இருப்பவரை வைத்து, ஒரு ப்ரஸ் ரிலீஸ் கொடுக்கலாமா என்பது
தான் இங்கே இருக்கிற பிரச்னை.

[முற்பகல்-10.40.]

ஆனால் உண்மையிலேயே யார் அரசாங்கத்தின் சம்பளத்
தைப் பெற்றுக் கொண்டுள்ள நேர்முக உதவியாளரை வைத்துக்
கொண்டு, அரசாங்கத்தின் உதவிகளைத் தவறாகப் பயன்படுத்தி
வருகிறார் என்று சொன்னால் அது இங்கே இருக்கக்கூடிய எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள்தான் என்பதை நான் ஆதாரத்தோடு
சொல்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித்
துணைத் தலைவர் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னை இருக்
கிறது என்று சொல்லி இங்கே விளக்கம் தந்து இருக்கிறார்கள்.
அதற்கு உரிய பதிலைச் சொல்லி அதிலே உரிமை மீறல் எதுவும்
இல்லை என்கிற அளவிற்கு மட்டும் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.



1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு ; தலைவர் அவர்களே,
இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய
உரையில் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி ஒரு கருத்தை
எடுத்துச் சொன்னார்கள். அதன் காரணமாகத்தான் அதற்கு
விளக்கம் சொல்லும் முறையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல
அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
(குறுக்கீடுகள்). நான் பேசுகிறபோது மட்டும் ஏன் இவ்வளவு
குறுக்கீடுகள் செய்ய வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
அவர்களுக்கு வேறு ஏதாவது குற்றச்சாட்டுக்கள் யார் மீதாவது
சொல்லவேண்டும் என்று எண்ணம் இருந்தால், அதை விதிகளின்
அடிப்படையில் வேறு வகையில் இங்கே கொண்டு வரலாம். இந்
தப் பிரச்னையில் பேசுகிறபோது, வேறு பிரச்னைகள் குறித்துப்
பேசுவது சரியல்ல. இந்த அவை உரிமை மீறல் பிரச்னை
குறித்து மட்டும் பேசினால் போதும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அவர்கள் கொடுத்து
இருக்கிற கடிதத்திலேயே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

'The Minister for Lccal Administration, a Member of th's House, has used official machinery for accusing and attempting to divide the Opposition Members'

அவர்கள் கொடுத்துள்ள கடிதத்திலேயே அபிசியல் மெஷினரி
தவறாக உபயோகிக்கக் கூடாது என்று இருக்கிறது. மேலும்,
இந்தப் பிரச்சினையை அவையில் கிளப்பியவரே எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள்தான். (குறுக்கீடுகள்.)

** ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தையும்,
அதையொட்டி இதுவரை நடந்த விவாதமும் அவைக் குறிப்பில்
ஏறாது. அவற்றை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்
களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் ஒரு
முக்கியமான உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவந்து பேசும்
போது சில விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். வெளியிலே
சொல்லும்போது அரசியல் ரீதியாக வாதங்கள் அமையலாம்.
ஆனால் இந்த அவையிலே நடைபெறுகின்ற விவாதங்கள் அந்த
வகையில், வாதத்திற்கு எதிர்வாதம் என்ற முறையில் போவது
சரியாகாது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப் பெற்றது.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவரவர்களே (ஒரு காகி
தத்தைச் காட்டி) இதிலே ஸ்டாம்ப் குத்தப்பட்டிருக்கிறதே; இப்
படி யார் வேண்டுமானாலும் ஸ்டாம்ப் வாங்கிக் குத்திக்கொள்ள
லாமா? இதை அவை முன்னவரிடமே கொடுக்கிறேன். பார்த்துக்
கொள்ளட்டும் (அவை முன்னவரிடம் அந்த காகிதத்தைக் கொடுத்
தார்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் பேசும்போது ஒரு
முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். அதிலே முக்கியமான
குற்றச்சாட்டு, இந்த அவையிலே இருக்கிற ஒருவரைப்பற்றி இந்த
அரசாங்கத்திலே சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை பார்க்கிற
ஒரு அமைச்சரின் நேர்முக உதவியளர் குறிப்பிட்ட கருத்தைப்
பற்றியது. இதுதான் உரிமை மீறல் பிரச்சினைக்கு முக்கிய
காரணமாக இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சரவர்கள்
அவர் என்னுடைய தனிப்பட்ட உதவியாளர் என்றும் இதிலே
உரிமை மீறல் இல்லை என்றும் சொல்லிவிட்டதால், பிரச்சினை
அத்தோடு முடிந்துவிட்டது. அதன்பிறகு தீர்ப்பளிக்க வேண்
டியது தங்களுடைய பொறுப்பு. மேற்கொண்டு இதற்கு உள்ளே
போகவேண்டியது இல்லை. வெளியிலே பேசும்போது அவரவர்
களுடைய கருத்துக்களை எப்படி வேண்டுமானாலும் பேசலாம்.
அதே மாதிரி இந்த அவையிலே கூறுவது சரியல்ல. இந்த
அளவிலே பிரச்சினை முடிந்துவிட்டது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார், இந்தப் பிரச்சினைக்கு
தங்களுடைய தீர்ப்பு என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விவகாரத்தை
இத்துடன் முடிக்கிறேன். இதனமீது என்னுடைய தீர்ப்பு
பின்னர் அளிக்கப்படும். *

[முற்பகல் 10-50]

(ஆ) செய்தி அறநிலையத் துறை அமைச்சர் மீது—தீர்ப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரகுமான்கான் அவர்கள் 28—1—1981 அன்று சட்டப்
பேரவை விதி 246-ன் கீழ் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். எம்.
வீரப்பன் அவர்கள்மீது உரிமை மீறல் பிரச்சினை ஒன்றிற்கு
அறிவிப்பு கொடுத்து, அதை எழுப்புவதற்கு எனது இசைவினைத்
தந்து, இது 29—1—1981 அன்று பேரவையில் எழுப்பப்பட்டது.
உறுப்பினர் அவர்களும், அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களும்

* — 4—3—1991 ம் நாளன்று தீ,ப்பு வழங்கப்பெற்றது.



மிகவும் விவரமாகவே இதுபற்றி பேரவைக்குத் தங்கள் வாதங்
களை எடுத்து வைத்தார்கள். உறுப்பினர் திரு. ரகுமான்கான்
கொடுத்த அறிவிப்பில் இரண்டு பிரச்சினைகளை முக்கியமாகக்
கூறியுள்ளார்.

1. மத்திய அரசின் ஆணைக்கு இணங்க அரசு ஆணை பிறப்
பிக்கப்பட்டதாக கூறியது முற்றிலும் தவறானது. திசை திருப்
பும் நோக்கத்தோடு, அவைக்குத் தவறான தகவல் அமைச்சர்
தெரிவித்துள்ளார் என்றும்;

2. ஏற்றுமதியாளர் மீது நடவடிக்கையும், வழக்கும், ஷெட்
யூலில் இருந்து 'ரெட் சாண்டர்ஸ்' மரம் நீக்கப்பட்டதால், அந்த
வழக்கும் நடவடிக்கையும் தானாகவே வாபஸ் ஆகிவிட்டதாகத்
தான் அர்த்தம். இதுபற்றி உறுப்பினர் தான் கொண்டுவந்த அவை
உரிமை மீறல் பிரச்சினை சரிதான் என்று வாதிட்டுள்ளார்கள்.

ஆனால், அமைச்சர் அவர்கள், தான் கூறியதில் எந்தவித
மான தவறும் இல்லையென்றும், இதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டதின் பூர்வாங்கமாக உள்ள பொருள்களைப் பேரவைக்குத்
தெளிவாகக் கூறினார்கள். மேலும் உறுப்பினர் அவர்கள் அரசு
ஆணையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தவறாக வாதிடுகி
றார்கள் என்றும் கூறினார்கள்.

முதலாவது குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதற்கு அர
சாணைகள் 1. G.O.Ms. No. 103 dated 30-1-80; 2. G.O.Ms. No. 1374
படித்தாலே தெரியும் என்றும் எடுத்துவைத்தார்கள். அரசாணை
103-ன் படி 2-வது பத்தியில் இந்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை
யின்படி 'ரெட் சாண்டர்ஸ்' மரம் ஓ.ஜி எல். முறையில் ஏற்றுமதி
செய்ய வகை செய்யப்பட்டுள்ளதால், ஏற்றுமதிக்கு " O igin
Cּrtificate " தேவை இல்லையென்றும், அதே ஆணையில்
மூன்றாவது பத்தியில் ரெட் சாண்டர்ஸ் பற்றிய t ansit
விதிமுறைகளில் எவ்வித மாற்றமும் இல்லையென்றும் அந்தக்
கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என்றும் தெளிவாக கூறப்
பட்டுள்ளது. 22—10—1980 அன்று வெளியிடப்பட்ட இரண்
டாவது அரசாணையில் 'ரெட் சாண்டர்ஸ்' ஏற்றுமதியாளர்
களின் சங்கத்தின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து அர
சாணை எண் 103, நாள் 30—1—80 ஆணையில் " O:igin
Ce tificat· " தேவையில்லை என்பதினால் 'ரெட் சாண்
டர்ஸ்' இனத்தை ஷெட்யூலில் காட்டப்பட வேண்டுவ
தில்லை என்ற முடிவினைத்தான் வெளியிட்டுள்ளது. ஒரு அரசு
ஆணையில் முந்தைய அரசு ஆணையைக் குறிப்பிட்டு இயற்றினால்
முந்தைய அரசு ஆணையில் உள்ளவற்றை முழுவதுமாக பின்
வெளியிடப்படும் அரசு ஆணையில் கூறவேண்டியதில்லை. ஏனென்
றால், முன்னுள்ள அரசு ஆணைக்குப் பின்னே வெளியிடப்படும்
அரசு ஆணை இணைந்துதான் பிறப்பிக்கப்படும். எனவே, முதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [1981 பிப்ரவரி 7
திருவாளர்கள் கே.எம். தங்கமணி பி. தங்கவேலு, நா. சுந்தரராஜ், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் "கும்ப கோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவன் திரு. ஆர். சீனி வாசன் மர்மமான முறையில் இறந்தது பற்றி" ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இதே பொருள் குறித்து பேரவையின் 54-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங் களை திருவாளர்கள் செ. இராமலிங்கம். இ. எஸ். எம். பக்கீர் முகமது., இரெ. இராசமாணிக்கம். எஸ். இராசா ராமன், இரா. தாமரைக்கனி ஆகியோர் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாக முதலில் திரு. கே. எம். தங்கமணி அவர்களை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர். சீனிவாசன் என்கிற முதலாம் ஆண்டு பி. காம் படிக்கிற மாணவன், குடந்தை அரசினர் கல்லூரியில் படிக்கிறவர். அவருடைய சொந்த ஊர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மணத்தூர். கடந்த 26 ஆம் தேதி அன்று மளிகைச் சாமான் கள் வாங்கவேண்டும் என்பதற்காக கும்பகோணத்திற்கு சென்றார். நீண்ட நேரம் இரவு கடந்து விட்டதால் இடையிலே இருக்கிற ஆற்றினைக் கடந்து வீட்டுக்குச் செல்ல முடியாது என்ற காரணத் தால், தான் படிக்கிற கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் 83-வது அறையிலே தங்கிப் போனார். அப்படித் தங்கியவர் மர்மமான முறையிலே அடித்துக் கொல்லப்பட்டு தூக்கிலிடப் பெற்றிருக்கிறார் என்று இந்த சந்தர்ப்பத்திலே உங்கள் கவனத் திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

கடந்த 2, 3 மாதங்களாகவே அக்கல்லூரி பதட்ட நிலையில் தான் இருந்திருக்கிறது. இன்றையதினம் ஏட்டைத் தூக்கி நாளைய தினம் நாட்டைக் காக்கப் போகிற அந்த இளைய சமு தாயத்திலே நாட்டின் வருங்கால சமுதாயத்தை உருவாக்கப் போகிற வருங்கால இளைய சமுதாயத்தினரின் மத்தியிலே எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்று போதிக்கிற ஆசிரிய சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் வகுப்பு உணர்ச்சியைத் தூண்டி விடுகிற முறையில் நடந்து கொள்கின்றனர். ஜாதி உணர்ச் சிகளை, வகுப்பு பிரிவுகளை இளப்பி சில பேராசிரியர்கள் நடந் கொள்ளும்போது. அவர்களுக்கு ஆதரவாக சில மாணவர்களு



1981 பிப்ரவரி 7] [திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்]

மாணவர்களுக்கு ஆதரவாக பேராசிரியர்களில் சிலரும் துணை நின்றிருக்கின்றனர். இதன் விளைவாக கடந்த 2, 3 மாதங் களாகவே அந்தக் கல்லூரியில் அமைதியின்மை நிலவியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11-00]

இதன் விளைவாகத்தான் 1—12—1980 அன்று தொடங்கப் பெற்ற தேர்வுகளிலே பல மாணவர்கள் பாதிக்கப்பெற்றனர். அவர்களைப் பிடிக்காத பேராசிரியர்கள், பரீட்சைக்கு வந்த மாணவர்களையும், வராத மாணவர்களையும சேர்த்து பரீட் சையே எழுதாத முறையில் தடை செய்கிற நிலைமை ஏற்பட்டது. ஜாதியின் பெயரால், வகுப்பு வாதத்தின் பெயரால் அங்கே அடிக்கடி கலவரம் ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக மாணவர்களை எப்படியாவது அடக்கியே ஒடுக்கியே தீரவேண்டும் என்று அக்கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஒருவரின் துணை கொண்டு, போலீசாரின் உதவியை நாடினர் என்றும் போலீ சாரின் அடக்குமுறையின் காரணமாக அங்கிருந்த பேராசிரியர் ஒருவர் கூட தாக்கப்பெற்றார் என்பதையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதன் விளைவாக வே 26-ஆம் தேதியன்று கல்லூரியிலே 83-ஆம் அறையிலே தங்கு வதற்காக வந்த சீனிவாசன் என்ற அந்த மாணவனை அடித்துத் தாக்கி கொன்று பிறகு 6 அடி உயரமுள்ள அந்த ஜன்னலிலே தூக்கிலே கட்டப்பட்டிருக்கிறார் என்ற விவரம் அந்த மாணவர் களின் மத்தியிலே நிலவுகிறது.

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை]

ஆக, பொது மக்கள் மத்தியில் ஒரு பயங்கரமான அச்சுறுத் தல் இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நினைவூட்ட விரும்பு கிறேன். ஏனென்றால் சீனிவாசன் மர்மமான முறையில் தாக் கப்பட்டு கொலை செய்யப்பட்டதுபோன்ற ஒரு நிலை மற்ற மாணவர்களுக்கு வந்து விடக்கூடாதே என்ற அச்சம் இன்றைய தினம் குடந்தையில் இருக்கிற பொது மக்கள் மத்தியிலும் மாண வர்கள் மத்தியிலும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அன்றைய தினம் விடுமுறையில் இருந்த இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் அந்த மாணவர்மீது இனம் தெரியாத எதிர்ப்புணர்ச்சி காரணமாக லீவில் போயிருப்பவர் ஓடோடி வருகிறார். ஒன்று திரண்டிருக்கிற மாண வர்கள் சமுதாயத்தை விரட்டியடித்திருக்கிறார்கள், கலவரத்தைத் தூண்டுவதற்கு பக்கபலமாக இருந்திருக்கிறார். ஆகவே பொறுப்புள்ள பராளுமன்ற உறுப்பினர் இதுகுறித்து பிரதமர் அவர்களுக்கும் ஜனாதிபதி அவர்களுக்கும் தந்தி கொடுத்திருக் கிறார்கள். சட்டசபை உறுப்பினர்களாகிய நாங்கள் மனு

ஆணையில் 'ரெட் சாண்டர்ஸ்' மரம் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிட்டுள்ளது. இரண்டாவது ஆணையில் மத்திய அரசு ஆணையை ஒட்டியே இடப்படுவதாகத்தான் பொருள். மேலும் அந்த ஆணை முன் தேதியிலிருந்து அமலுக்கு வரும்படியாக அமையவில்லையென்றும், என்று அரசாணை வெளியிடப்பட்டதோ அன்று முதல்தான் அமலுக்கு வருமென்றும் கூறினார். எனவே, இக் குற்றச்சாட்டிற்கு எந்தவிதமான ஆதாரமும் உறுப்பினர் கொடுக்கவில்லை. மேலும், '' பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதால் அந்த வழக்கு தானாகவே வாபஸ் ஆகிவிட்டதாகக் கூறுவதும் தவறு. எந்த ஒரு வழக்கும், வழக்குத் தொடரப்பெற்ற நாளில் அமலில் இருந்த சட்டப்படிதான் வழக்கு மன்றம் பரிசீலனை செய்யும் என்பது சட்டம், எனவே, 'ரெட் சாண்டர்ஸ்' ஷெட்யூலிலிருந்து விலக்கப்பட்டதால் வழக்கு வாபஸ் வாங்கப்பட்டதாகக் கருதப்படும் என்பதற்கும் எந்தவிதமான ஆதாரமும் இடையாது'' என்றும் கூறியுள்ளார். மேலும், அமைச்சர் அவர்கள் தான் தன்னிலை விளக்கத்தில் பொதுவாகக் குறிப்பிட்டுத் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பொதுவாகத்தான் பதில் அளித்தார் என்றும், பேரவையை எந்தவிதமான நோக்கத்தோடும் திசை திருப்புவதற்காகச் செய்யவில்லையென்றும், திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கொண்டு வந்த உரிமை மீறல் பிரச்சினையில் இரண்டு பொருள்கள் மீதும் எந்த விதமான ஆதாரமும் மேலெழுந்தவாரியாகக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, அவையின் உரிமையை அமைச்சர் அவர்கள் மீறவில்லை என்பது தெளிவாகிறது.

மேலும், உறுப்பினர்கள் மற்றொரு உறுப்பினர் மீதோ, அல்லது அமைச்சர் மீதோ குற்றம் சாட்டுவதாக இருந்தால், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ முன்னதாக அறிவிப்புக் கொடுத்துவிட்டுத்தான் அவையில் எழுப்பவேண்டும் என்பது பாராளுமன்ற நடைமுறை. பாராளுமன்ற விதிகள் எவ்வாறு அவையின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்றதோ அவ்வாறே பாராளுமன்ற மரபுகளும் அவையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும். ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுவதற்கு முன்னதாகவே, அவர்களுக்கும், அவைத் தலைவருக்கும் அறிவிப்புக் கொடுத்து, அனுமதி அளித்தால்தான் எழுப்பவேண்டும் என்ற மரபு நமது அவையில் பன்முறைகள் எனக்கு முன்பிருந்த பேரவைத் தலைவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அம்முறை கடைப்பிடிக்கப்படாததன் விளைவுதான் இம்மாதிரியான பிரச்சினைகள் வருகின்றன. எனவே, உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்கள் மீதோ அல்லது அமைச்சர்கள் மீதோ தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்ட விரும்பினால், அவர்களுக்கும் பேரவைத்



தலைவருக்கும் முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டு அனுமதி அளித்தால் பின்தான் பேரவையில் எழுப்ப வேண்டுமென்ற உள்ள நியதி இனிமேல் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்படும்.

எனவே, உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக அவை உரிமை மீறல் எதுவும் நடைபெறவில்லை என்று நான் தீர்ப்பளிக்கிறேன்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவனது மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. ஒன்று நேற்று சென்னையில் நடைபெற்ற சம்பவத்தை யொட்டி மாணவர்களிடையே உள்ள பதட்டநிலை குறித்து. மற்றொன்று குடந்தைக் கல்லூரியில் சீனிவாசன் என்னும் மாணவன் மர்மமாக கொல்லப்பெற்றிருப்பது குறித்து. இவைகளில் எதை எடுத்துக் கொள்ளலாம்; (குறுக்கீடு).

இரண்டும் முக்கியம்தான், இரண்டையும் எடுத்துக்கொள்ளலாம் என்பது முடியாது. நம் விதிகளின்படி ஏதாவது ஒன்றைத்தான் இன்று எடுத்துக் கொள்ள முடியும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் கல்லூரியைப் பற்றிய ஒத்தி வைப்புத் தீர்மானம் முதலில் கொடுக்கப் பெற்றிருக்கிறது என்கிற முறையில் வேண்டுமானால் அதை முதலில் எடுத்துக் கொள்ளலாம். சென்னை சம்பவம் நேற்று நடைபெற்றது. ஆதலால் அதை அடுத்த சட்டமன்ற நாளில் எடுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் கருத்திற்கிணங்க முதலில் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரி மாணவன் மர்மமான முறையில் இறந்தது குறித்து எடுத்துக் கொள்ளலாம்.

27—1—1981 காலையில் எட்டு மணிக்கு கல்லூரியின் சார்ஜன்ட் வழக்கம்போல் சுற்றி பார்த்துக் கொண்டு வரும்போது, கல்லூரியின் பிரதான கட்டிடத்தின் மேல் மாடியில் தென்பகுதியிலுள்ள எண்பத்து மூன்றாம் எண்ணுள்ள அறையில் உடல் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு கல்லூரி அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தார். தொங்கிக் கொண்டிருந்த அவ்வுடல் திருச்சிராப்பள்ளி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் (வாழைக்குறிச்சி தபால் நிலையம்) மதநத்தூர் கிராமத்திலிருக்கும் திரு. ரங்கராஜன் என்பவரின் மகனும், அக்கல்லூரியிலேயே முதலாமாண்டு வணிகவியல் படித்துக் கொண்டிருந்தவனுமான திரு. ஆர். சீனிவாசன் என்னும் மாணவனுடையது என்று உறுதி செய்யப்பட்டது.

உடனே இச் செய்தி காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது. அவரது பெற்றோருக்கும் இச்செய்தி காவல் துறையினரால் அறிவிக்கப்பட்டது. இம்மாணவரது பெற்றோர்கள் அன்று காலை 11 மணிக்கு கல்லூரிக்கு வந்து விட்டார்கள்.

திரு. ஆர். சீனிவாசன் மதநத்தூர் கிராமத்திலிருந்து தினமும் கல்லூரிக்கு வந்து படித்துக் கொண்டிருந்த மாணவன். இந்தக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட விக்டோரியா ஜுபிலி விடுதிக்கு இம் மாணவன் 26—1—1981 தேதி இரவு வந்து தன்னுடைய நண்பர்களுடன் சில மணி நேரம் தங்கி இருந்ததாகத் தெரிகிறது.

காவல் துறையினர் இறந்த மாணவனுடைய பெற்றோர்கள், உறவினர்கள், மாணவப் பிரதிநிதிகள், பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விசாரணை நடத்தினார்கள். பிறகு காவல் துறையினர் பிரேத பரிசோதனைக்காக அருகில் உள்ள கும்பகோணம் அரசினர் மருத்துவமனைக்கு பிரேதத்தைக் கொண்டு சென்றனர். பிரேத பரிசோதனை செய்த டாக்டர் இது தற்கொலை என்று கூறியுள்ளார்.

கல்லூரி மாணவர்கள் 2—2—1981 கல்லூரிக்கு வரவில்லையென்றும், ஊர்வலமாகச் சென்றதாகவும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். நிலைமையைக் காவல் துறையினர் கவனித்து வருகின்றனர். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



## 6. கவன ஈர்ப்புகள்.

### (அ) உளுந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் சினிமா தியேட்டர் கட்டப்பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் அரசு உத்தரவினை மீறி சினிமா தியேட்டர் கட்டி வருவதினால் அங்குள்ள மாணவ, மாணவியர் படிப்பு பாதிக்கப்படுவது குறித்து" திருவாளர்கள் எல். இளையபெருமாள், கே. எம். தங்கமணி கவுண்டர், எஸ். சிவராமன், உ. சுப்பிரமணியன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. எல். இளையபெருமாள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டை அரசுமேல்நிலைப் பள்ளிக்குஅருகில் அரசுஉத்தரவினைமீறி சினிமா தியேட்டர் கட்டி வருவதினால் அங்குள்ள மாணவ, மாணவியர் படிப்பு பாதிக்கப்படுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி–அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

உளுந்தூர்பேட்டை தாலுகா உ. கீரனூர் கிராமத்தில் சர்வே எண். 414/1, 2, 3-ல் நிரந்தரத் திரையரங்கு அமைக்கத் தடையில்லாச் சான்று கோரி திருமதி எஸ் சரஸ்வதி என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனுச்செய்தார் மேற்கண்ட மனுக்களின் மீது ஆட்சேபணைகள் கோரிக்கைகளை வரவேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும், பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும், அறிவிப்பு ஒட்டப்பட்டது. உத்தேசிக்கப்பட்ட திரையரங்குக்குப் பக்கத்தில் உள்ள (R.S. 415) ஆதி திராவிட மக்களின் மயான பூமியை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்து வேலியிட்டுள்ளதாக ஆதி திராவிட மக்களும், அந்தத் தொகுதி அப்போதைய சட்ட மன்ற உறுப்பினர் திரு. துலுக்கானம் அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். பின்னர் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை மனுதாரர் காலி செய்து விட்டார்.

கொடுத்திருக்கிறோம். ஆக, இன்று கும்பகோணத்தில் ஒரு பதட்டமான சூழ்நிலை, அசம்பாவிதங்கள், சீனிவாசன் போன்று மர்மமாக அடித்து கொலை செய்யப்பட்டது போன்ற நிலைமை வந்துவிடுமோ என்ற ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சபையை ஒத்திவைத்து இந்தத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுவதைப் போல் உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : ஆக, குடந்தையில் மாணவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருப்பதால், இது ஒரு முக்கியமான பிரச்னையாக இருப்பதால், இதுகுறித்து அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசுக் கல்லூரியில் பி.காம். முதல் ஆண்டு படித்துக்கொண்டிருந்த சீனிவாசன் என்ற மாணவர் ஊருக்குப் போக நேரம் இல்லை, இரவில் போவதற்கு பயம் காரணமாக தன் அறையில் தங்குவதற்காகச் சென்றவர் மறுநாள் காலையில் மர்மமான முறையில் மரணமடைந்திருக்கிறார். சமீபத்தில் நடைபெற்ற மாணவர் தலைவர் தேர்தலில் அதிகப்படியான பங்கு எடுத்துக்கொண்டவர் அவர். அந்தப் பகுதியில் வகுப்பு கலவரம் தூண்டிவிடப்பட்டு அதற்கு உடந்தையாக கல்லூரி முதல்வர் அவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் கல்லூரி முதல்வர், மாணவர் தலைவர் தேர்தலின்போது மாணவர்கள் சார்பில் பல குறைகள் எடுத்துச் சொல்லப்பட்டது. அவர்களுக்குப் பிடிக்காத அந்தத் தேர்தலையே நடத்தக்கூடாது என்று வாதிட்டவர் அவர். மாணவர்கள் தேர்தல்கள் நடத்தியதில் அவர்காழ்ப்புணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். அதன்காரணமாக மாணவர்கள் மீது அவர் காழ்ப்புணர்ச்சி கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக இரவோடு இரவாக அந்த மாணவர் கொல்லப்பட்டிருக்கிறார் மர்மமானமுறையில். இது சம்பந்தமாக அந்த வட்டாரத்தில் ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அந்தக் கல்லூரி கூட சமீபத்தில் மூடப்பட்டிருக்கிறது. ஆகவே இது ஒரு முக்கியமான பிரச்சினை என்பது மட்டுமல்ல, அந்தக் கல்லூரி முதல்வர்மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது பற்றி விவாதிப்பதற்காகவும், மாணவர்கள் கல்லூரிக்குச் சென்றுவிட்டு உயிரோடு திரும்பிவர உத்தரவாதம் இருக்கவேண்டும் என்பது பற்றியும் பேச வேண்டியிருப்பதால் இதுகுறித்து அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடந்தை அரசினர் ஆண்கள் கல்லூரியில் சுமார் பத்து தினங்களுக்கு முன்னால் மாணவ சீனிவாசன் என்பவர் வகுப்பறையில் மர்மமான முறையில் அடித்துக் கொல்லப்பட்டு தூக்கில் தொங்கியதை பிணமாகக் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் உடலில் பல்வேறு இடங்களில் காயங்கள் இருந்ததால் அவர் மர்மமான முறையில் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொது மக்களும் மாணவர்களும் அந்தப் பகுதியில் சந்தேகப்படுகிறார்கள். அங்கு ஒரு பதட்டமான நிலை உருவாகி வருவதால் இதற்கு நீதி விசாரணை வைக்கவேண்டுமென்று சர்வ கட்சியைச் சார்ந்தவர்களும் 30—1—1981 அன்று உண்ணாவிரதமும் இருந்திருக்கிறார்கள். ஆகவே சர்வ கட்சியினரின் கோரிக்கையை ஏற்று ஒரு நீதி விசாரணை வைக்கவேண்டியது மிக மிக அவசியமாகும். இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடைபெற்றுவருகின்றன. இவைகளைப்பற்றியெல்லாம் நாம் பேசி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பது மிக மிக அவசியமாகும்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து காவல் நிலையங்களிலும், கல்லூரிகளிலும் நடைபெற்று வருகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் காவல் நிலையங்களில் கைதிகள் அடிக்கப்படுவதும், கல்லூரிகளில் மாணவர்கள் அடிக்கப்படுவதும், அவர்கள் இறந்தபிறகு அதைத் தற்கொலை என்று சொல்வதும், வாடிக்கையாக இருந்து கொண்டிருக்கின்ற செய்தியாகும். ஆகவே, இப்படிப்பட்ட செய்திகள், சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருக்கவேண்டும். அதற்காக இத்தகைய சம்பவங்களைக் குறித்து விவாதித்து, சுமுகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 நவம்பர்-டிசம்பர் திங்களில் நடந்த பல்கலைக்கழகத் தேர்வின்போது கும்பகோணம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி மாணவர்கள் வகுப்பறையின் பூட்டுக்களை உடைத்து விட்டார்கள். அதுமுதல் அறைகள் பூட்டப்பெற இயலவில்லை.

மனுதாரரின் திரையரங்கு இடம் உருந்தூர்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு எதிரில் மிக அருகில் அமைய இருப்பதால் மேற்படி பள்ளி மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் எனவும் கடலூர் முதன்மை கல்வி அதிகாரியாலும் எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மனுதாரர் திரையரங்கு கட்ட விருக்கும் இடத்தை 5—4—1979 அன்று நேரில் பார்வையிட் டார். பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 12—4—1979 நாளிட்ட ஆணையில் திரையரங்கு இடத்தின் எதிரில் (272 அடி தூரத்தில்) அரசின் மேல்நிலைப்பள்ளி இருப்பதாலும், திரையரங்கு இடத்தின் வடக்குப்புறத்தில் ஆதி திராவிடர்களின் மயான பூமி இருப்பதாலும் திரையரங்கு கட்ட அனுமதி மறுத்து ஆணை யிட்டார்.

மேற்கண்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையை எதிர்த்து திரையரங்கு மனுதாரர் திருமதி எஸ். சரஸ்வதி வரு வாய் வாரியத்திற்கு 25—4—1979 அன்று மேல் முறையீடு செய் தார். திரு. எஸ். சரஸ்வதியின் மேல் முறையீட்டு மனுவைப் பரிசீலனை செய்த வருவாய் வாரியம் மனுதாரரின் திரையரங்கு நிரந்தரத் திரையரங்கம் ஆதலால் ஒலி வெளிவராது எனவும், திரையரங்கு இடத்திலிருந்து பள்ளியின் கட்டிடங்கள் வெகு தொலைவில் இருப்பதால் பள்ளியின் அமைதிக்குப் பங்கம் விளை யாது எனவும், திரையரங்கு அமைவதால் ஆதி திராவிட மக்களின் மயான பூமிக்கு எந்த இடைஞ்சலும் ஏற்படாது எனவும் கருதி, திரையரங்கு அமைக்க மனுதாரர் உத்தேசித்துள்ள இடம் தகுதியானது எனக்கருதி மனுதாரருக்கு தடையில்லாச் சான்று அளிக்க வருவாய் வாரியம் தனது 3—9—1979 நாளிட்ட ஆணை யில் உத்திரவிட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் 15—9—1979 அன்று என்.ஓ.சி வழங்கிவிட்டார்.

இதன்பின் வருவாய் வாரியத்தின் மேற்கண்ட ஆணையை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமென தென்னாற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கோரிக்கை மாவட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் மூலம் உள்துறைக்கு 6—2—1980-ல் கிடைக்கப் பெற்றது. உடன் வருவாய் வாரியம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆவணங்களை வரவழைத்து பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கை கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு அப்போ தைய ஆளுநரின் ஆலோசகருக்கு ஆணைக்காக அனுப்பப்பட்டது. அப்போது (28—5—1980) திரையரங்கு கட்டும் வேலை ஆரம்ப மாகி விட்டதா எனவும், ஆம் எனில், எந்த நிலையில் உள்ளது என்பதை அறியுமாறு, திரையரங்கு கட்டுபவருக்கு அறிவிப்பு



கொடுத்து, அவரது கோரிக்கைகளையும் ஆராய்ந்து முடிவெடுக் கலாமெனவும், இல்லையானால் இது சிவில் வழக்குகளில் முடியு மெனவும் ஆளுநரின் ஆலோசகர் குறிப்பிட்டார்.

அந்நேரத்தில் மனுதாரர் திருமதி. சரஸ்வதியின் திரையரங் கின் அஸ்திவாரம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் 7—6—1980 தேதியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்தார். இந்நிலையில் திரையரங்கிற்கு எதிர்ப்புத் தெரி விப்பவர்கள் முறைப்படி வருவாய் வாரியத்தின் ஆணையை எதிர்த்து மேல் முறையீடு செய்து திரையரங்கு கட்டுதலை ஆரம்ப நிலையிலேயே தடுத்திருக்க வேண்டுமெனவும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு வருவாய் வாரியத்தால் தடையில்லா சான்றிதழ் வழங்கப்பட்டு திரையரங்கம் கட்ட ஆரம்பித்தபின் அதை அரசு நிறுத்தினால் மனுதாரர் நீதி மன்றம் சென்று வெற்றி பெறவும், தன் உரிமையை நிலை நாட்டவும் வாய்ப் புள்ளது எனக் கருதப்பட்டதால் சட்டப்படி அரசு தலையிட முடியாத நிலையில் இப்பிரச்னையில் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாமென அரசு தீர்மானித்தது.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 15 மாதங்களுக்கு முன்னால் இந்தக் கட்டிடத் தின் அஸ்திவாரத்தைப் போட்டார்கள். முன்னாலேயே அங்குள்ள கல்வி முதன்மை அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர், பள்ளிக் கூட தலைமை ஆசிரியர், பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்-பெற்றோர் சங்கத் தலைவர், பஞ்சாயத்து போர்டு ஸ்பெஷல் ஆபீசர், பஞ்சாயத்து கமிஷனர் இவர்கள் எல்லாம் அஸ்திவாரம் போடு வதற்கு முன்னாலேயே சொல்லியிருந்தும், அரசு ஏன் கவனிக்க வில்லை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11–10]

ஆர். எஸ். நம்பர் 425—ஆதித் திராவிட மக்களின் மயான பூமியை மனுதாரர் ஆக்கிரமிப்பு செய்து சினிமா கொட்டகை கட்டுவது தவறு, மனுதாரர் அந்த இடத்தைக் காலி செய்துவிட வேண்டும். அந்த இடத்தில் சினிமா கொட்டகை கட்டக்கூடாது என்று உத்தரவும் இருக்கிறது. ஆதித் திராவிட மக்களின் மயான பூமியை ஆக்கிரமித்தார்கள் என்று இருக்கும்போது அரசு 15 மாத காலம் தாமதமாக்கியதால்தான் அரசுக்குக் கெட்ட பெயர் வருவதோடு பள்ளிக் கூடத்திற்கும் இடையூறாக இருக் கிறது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் கருத்தை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு விரிவான பதில் அறிக்கையில் இருக்கிறது. இதிலே

அரசு அனுமதி அளிப்பது என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை முறையாக அவர்கள் ஒரு நிரந்தரத் திரை அரங்கு கட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அனுமதி கேட்கிறார்கள். அவர் மறுத்ததற்குப் பிறகு வருவாய் வாரியத்தின் ஆணையரிடத் தில் அனுமதி கேட்கிறார். அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார் கள். அனுமதி கொடுத்ததற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிக்கிறார். கட்டிடம் எழுப்பப்பட ஆரம்பித்த பிறகு மறு முறையீட்டுக்குரிய காலத்திற்குள் மறு முறையீடு செய்யப்படவில்லை. காலம் தாழ்ந்துவிட்டது. அதற்குப் பிறகு அரசு கவனத்திற்கு வருகிறது. அப்போது ஆளுநர் ஆட்சி இருக்கிறது. ஆளுநரின் ஆலோசகர் பரிசீலனைக்கு அனுப்பப்படு கிறது. ஆனால் அனுமதி அளித்து அவர்கள் கட்டிடம் எழுப்பிய பிறகு அதிலே குறுக்கிட்டால் சட்டச் சிக்கல் வரும் என்று அறிவுரை வழங்கப்படுகிறது. அதன் மீது அரசின் முடிவு எடுக்கப் படுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால் ஒன்று சொல்கிறேன் அரசு 15 மாதங்களுக்கு முன்பே இந்த நடவடிக்கை எடுத்திருந் தால்—ஆளுநர் ஆட்சி வருவதற்கு முன்பே மனு கொடுக்கப் பட்டிருக்கிறது ; ஆளுநர் ஆலோசகர் என்றால் அவரும் அரசாங்க அதிகாரிதான், கல்வி இலாகா அதிகாரி, காரியதரிசியும் இந்த அரசாங்க அதிகாரிதான். கல்வி இலாகா காரியதரிசி கூறியதற்கு மாறாக அதே அரசில் பணி புரிகிற சினிமா சம்பந்தமாக இருக்கிற அதிகாரி அல்லது போர்டு ஆப் ரெவின்யூ கமிஷனர் வேறு மாதிரியாக உத்தரவு போடுகிறார். இது அரசின் கவனக் குறை வால் ஏற்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15—9—1979 அன்று என். ஓ. சி. வழங்கப் படுகிறது. உரிய காலத்திற்குள் அரசுக்கு மறு முறையீடு வந் திருக்க வேண்டும். வரவில்லை. ஆனால் 6—2—1980-ல் அர சின் கவனத்திற்கு கல்வித் துறையின் மூலம் வருகிறது. 17 ஆம் தேதிக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லை. ஆகவே ஆளுநர் ஆலோசகர் பிரச்சினையைப் பரிசீலிக்கிறார்.

திரு. எஸ். சிவராமன் : உளுந்தூர் பேட்டையில் தியேட்டர் கட்டுவதற்கு அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தனிப் பட்டவர் கிரயமாக வாங்கினார் என்றால் எப்படி வாங்கினார் யார் வாங்கினார், 29—6—1978 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உளுந்தூர்பேட்டையில் வெள்ளை சர்க்கரை ஆலை அடிக்கல் நாட்டியபோது அங்கே இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.





திரு. எஸ். சிவராமன் : எனக்கு முன்பு பேசிய தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் கல்வி இயக்குநர், பாடசாலை தலைமையாசிரியர் அவ்வளவு பேரும் அந்த இடத்தைக் கொடுக் கக் கூடாது என்று கூறியும் வருவாய் வாரியத்தின் மூலமாக உத்தரவு போடப்பட்டுள்ளது. அங்கு பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்ற நிலை இருக்கும்போது வருவாய் வாரிய கமிஷனர் தியேட்டர் கட்ட உத்தரவு கொடுத்திருக்கிறார். அந்தப் பள்ளிக் கூடத்திற்கும் தியேட்டர் கட்டும் இடத்திற்கும் இடையில் 50 மீட்டர் தூரந்தான் இருக்கிறது. குறுக்கே செல்லும் நெடுஞ் சாலை ஒன்றுதான் இருக்கிறது. இந்தத் தியேட்டரினால் அந்தப் பள்ளிக்கூட மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படும்.

வருவாய் வாரிய அதிகாரிகள் பாதிப்பு இல்லை என்று சொல்கிறார்கள் என்றால் நாளைக்கு பள்ளிக்கூடத்திலேயே தியேட்டரைக் கட்டலாம் என்று உத்தரவு போட்டாலும் அது அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசன மக்கள் பயன்படுத்துகின்ற மயான பூமியை ஆக்கிரமித்தபோது அந்தக் குற்றச் சாட்டு வந்தவுட னேயே அந்த ஆக்கிரமிப்பு நீக்கப்பட்டு விட்டது என்று தகவல் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு கிளர்ச்சிகள் எல்லாம் நடந்து நிறுத்தப்பட்டு விட்டது என்று தகவல் தந்திருக்கிறார்கள். இப்போதுள்ள நிலை சட்டப்படி அனுமதி வாங்கியவர் கட்டடத் தைக் கட்டிக் கொண்டு இருக்கிறார். இப்போது அரசு தடுத்து நிறுத்த முடியாது. இனிமேல் நீதிமன்றம்தான் முடிவு காண வேண்டிய நிலைமையில் அந்தப் பிரச்சினை இருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் காலரா நோய்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதியில் மகாராசபுரம், மம்சாபுரம், கே. புதூர் பகுதியில் 21 பேர் காலரா நோயினால் இறந்தது பற்றி '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[1981 பிப்ரவரி 1

அறிக்கை.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள மகாராசபுரம், சேதுநாரா யணபுரம், மம்சாபுரம், கும்மாப்பட்டி, வத்திராயிருப்பு, நாச்சி யார்பட்டி, கீழ்பொத்தல்பட்டி ஆகிய இராமங்களில் 85 பேர் வயிற்றுப் போக்கு நே யால் (Acute Gastro Ente itis) பாதிக் கப்பட்டனர். தக்க சிகிச்சைக்குப் பின் 73 பேர் நலமடைந்தனர், 12 பேர் இறந்துவிட்டனர். பாதிக்கப்பட்ட 85 பேர்களில் இருவருக்கு மட்டுமே காலரா நோய் கண்டது. அதில் ஒருவர் இறந்துவிட்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோயுற்றவருக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் நோய் மேலும் பரவாமல் தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு (21,088 பேருக்கு) காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது. கிணறுகளுக்கு மருந்து விட்டு நோய் பரவாமல் காக்கப்பட்டது. மேலும் சுற்றுப்புற சுகாதாரத்தில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. நோயுற்றவர் இல்லங்கள் பூச்சி கொல்லி மருந்திட்டு சுத்தப்படுத்தப்பட்டது. மக்களுக்கு நோய் தடுப்பு குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் சுற்றியுள்ள பகுதிகளி லும் நோய் பரவாமல் இருக்க தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் கிராமப் பகுதிகளிலே உள்ள மக்கள் காலரா வியாதி எப்படிப் பரவுகிறது என்று அறியாமையால் இருந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணமாக சேலம் மாவட் டத்திலே ஏர்க்காடுக்கு அருகே, வெள்ளக்கடை கிராமத்திற்கு அருகிலே அங்கே உள்ள பெண்கள் எல்லாம் ஆடவர்களை, சிறு குழந்தைகளை எல்லாம் வெளியூருக்கு அனுப்பிவிட்டு காளி கோயி லுக்கு முன்னால் ஆடையில்லாமல் டான்ஸ் ஆடிக் கொண்டிருக் கிறார்கள். இது 23—1—1981 ஆம் தேதிய தினத்தந்தி பத்திரி கையிலும், மாலைமுரசு பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இப்படி அறியாமை உள்ள மக்களுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம்— அப்படி ஏற்படுவதற்கு விஞ்ஞான ரீதியாக ஏதாவது ஆதாரம் இருக்கிறதா—தமிழக அரசு செய்தித் துறையின் மூலமாக காலரா எப்படிப் பரவுகிறது என்று கிராமப்புற மக்களுக்கு எடுத்துக் காட்ட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.



1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தங்களுடைய மாவட்டத்தைவிட்டு சேலம் மாவட் டத்திற்கு விரைந்து இருக்கிறார். சேலம் மாவட்டத்தினுடைய குறிப்புகள் இங்கே இருக்கின்றன. அந்தமாதிரியான நிலைமை களைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். 30 ஆயிரம் தடுப்பு ஊசிகள் போட்டு இருக்கிறோம். அது மட்டுமல்ல, காலரா நோய் என்று உடனடி யாகக் கருதிவிடக் கூடாது. புதிதாக அறுவடை செய்த உணவு தானியங்களை முழுமையாக வேகவைக்காமல் அல்லது சரியாக வேகவைக்காமல் சாப்பிட்டதுதான் காரணம் Acute Gastero Enteritis அதனால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. காலரா நோய் என்று இரண்டு நோயாளிகளைக் கொண்டுவந்தார்கள். ஒருவர் இறந்து விட்டார், இன்னும் ஒருவர் நன்றாக இருக்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி: கிழக்கே போகும் இரயில் என்ற சினிமா படத்தைப் பார்த்துவிட்டுத்தான் மக்கள் இந்த மாதிரி நடக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்களாக இருப்பதால் அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிதி ஏதா வது கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கிழக்கே போகும் இரயிலோ, மேற்கே போகும் இரயிலோ அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். சுகாதார விஷயங்களை எப்படிக் கவனிக்கவேண்டுமென்பதற்காக டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் மூல மாக மாவட்டங்களில் எல்லாம் தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டுமென்றும், தடுப்பு ஊசிகள் போடச் சொல் லப்பட வேண்டுமென்றும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக் கிறோம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் எந்தவிதமான இன்ஸ்பெக் ஷனும் இல்லாமல் சரியான வகையில் கொடுக்கப்பட வேண்டு மென்று எல்லா மாவட்ட ஹெல்த் ஆபீசர்கள் மூலமாகவும் ஆணை செக்ரடேரியட் மூலமாகப் பிறப்பிக்கப்பட்டு அவர்கள் நட வடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பிரச் சினை ஒன்றும் இல்லை.

## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

### (ஆ) சட்ட முன்வடிவுக்கான விளக்கங்கள் தமிழில் அளிக்க வேண்டுதல்.

திரு. என். சங்கரய்யா: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இப் போது இங்கே எடுத்துக்கொள்ளப்படக்கூடிய கிராம அலுவலர் நீக்கம் பற்றிய சட்டமுன்வடிவுக்கான அரசு சார்பாக விளக்கங்கள்

[திரு. என். சங்கரய்யா] 1981 பிப்ரவரி 7

ஆங்கிலத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழிலே கொடுக்கப் படவில்லை. சமீபத்திலேகூட விவாதித்தோம். சட்டமன்ற நட வடிக்கைகள் தமிழிலே நடைபெற வேண்டும் என்று. ஆகவே, அரசினுடைய இந்தத் திருத்தங்களை ஆங்கிலத்திலே எழுதிக்கொடுத்து, தமிழ்மொழி பெயர்ப்பு இல்லாமல் கொடுத் தால் அது எவ்வாறு சரியாக இருக்கும் ?

[முற்பகல் 11–20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழிலே ரோனியோ செய்து கொண்டிருக்கிறார்கள் ; உறுப்பினர்கள் பேசுவதற்குள் கிடைத்துவிடும்.

திரு. என். சங்கரய்யா : முதலிலேயே தமிழிலே வருவதா அல்லது ஆங்கிலத்திலே கொண்டு வந்துவிட்டு தமிழிலே மொழி பெயர்ப்பதா ?

7. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, " இந் திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை (முதலாவது அறிக்கை) " அளிக்கிறேன்.

8. அரசினர் சட்ட முன்வடிவு.

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1981.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான்கான், கு. பா. பழனியப்பன், துரைமுருகன், இரா. கருப்பையா ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர் களுள் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. கு. பா. பழனியப்பன் : பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :



1981 பிப்ரவரி 7] [திரு. கு. பா. பழனியப்பன்]

" ஆளுநர் அவர்களால் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்ப தற்கான தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு அவசர சட்டத்தை (தமிழ் நாடு அவசரச் சட்டம் எண். 9/1980) இப்பேரவை நிராகரிக் கிறது ".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு வாளர்கள் அ. ரகுமான்கான், கு. பா. பழனியப்பன், சோ. அழகர் சாமி ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர்களுள் ஒருவர் தீர்மானத்தை மொழிவார்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஆளுநர் அவர்களால் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 3 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, வரிசெலுத்துவதை மறுக்கு மாறு அல்லது தள்ளிப்போடுமாறுதூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1981) இப்போது பேரவை நிராகரிக்கின்றது"

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை மொழிவார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : " வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடு மாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981 ஆம்ஆண்டு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1981) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் "

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்ட முன் வடிவு என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதிலே வேடிக்கை என்னவென்றால், இதிலே கொடுக்கப்பட்ட காரணங் கள், நோக்கங்கள் ஆகியவைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஏற்கெனவேயுள்ள சட்ட திட்டங்கள் நமக்கு இருக்கின்றன. அவை களெல்லாம் இருக்கின்ற பொழுது இப்படிப்பட்ட ஒரு புதிய சட்டம் தேவைதானா என்பதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* 1981 ஆம் வருடம், ஜனவரி மாதம் 29-ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. கு. பா. பழனியப்பன்] [1981 பிப்ரவரி 7

முதலாவதாக, இப்படி இதற்குக் காரணமாக யார் இருந்
தார்கள், ஏன் அவர்களெல்லாம் கட்டவில்லை என்பதைச்சொல்
லும்பொழுது ஒரு வகையிலே அரசாங்கத்தைக் குற்றம் சாட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால், இன்றைக்கு
ஆளும் பொறுப்பிலே இருப்பவர்கள் தேர்தல் காலத்திலே
அழகழகான வாக்குறுதிகளையெல்லாம் அள்ளித் தந்த காரணத்
தால் இப்போழுது நாம் கட்ட வேண்டியதில்லை, இப்பொழுது
கட்டத் தேவையில்லை. பிறகு, கட்டலாம் என்ற உணர்வை
ஏற்படுத்தியது ; அவர்களுக்குத் தாங்கள் பணத்தைச் செலுத்த
வேண்டிய சூழ்நிலை இருக்காது என்ற எண்ணத்தை ஏற்படுத்தி
யிருக்கிறது. ஆகவே, இதற்கு முழு முதல் காரணம் இந்த அர
சாங்கத்திலே இன்றைக்கு ஆளும் பொறுப்பிலே இருப்பவர்கள்
தான். அவர்கள் அப்படித் தூண்டினார்கள், அவர்கள் அப்படிச்
சொன்னார்கள் என்று நேரடியாகச் சொல்லுவதை விட அவர்கள்
அளித்த வாக்குறுதிகள் மக்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்
தது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே, குறிப்பாக, உள்ளாட்சி மன்றங்களுக்கு நிலவரி
வருவாய், கூட்டுறவுச் சங்கங்களுக்கு, மின் வாரியங்களுக்கு என்று
வரவேண்டிய, செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்தாமை
என்ற காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மின்
வாரியத்திற்கு வரவேண்டிய பணம், மின்கட்டணம் வசூலிக்க ஏற்
கனவே, இன்டியன் எலெக்டிரிசிட்டி ஆக்ட் என்றிருக்கிறது. அதைத்
தொடர்ந்து தமிழ்நாடு எலக்டிரிசிட்டி மானுவல் என்ற ஒரு
சட்டத் தொகுப்பும் இருக்கிறது. அதிலே எல்லாம் நீங்கள்,
பணம் கட்டவில்லையென்றால், நடவடிக்கை எடுக்க வழிவகைகள்
இருக்கின்றன. உடனடியாக, மின்வாரியக் கட்டணம் கட்ட
வில்லையென்று சொன்னால், அவர்களுக்கு ஒரு நோட்டீஸ்
கொடுத்து, மின் இணைப்பைத் துண்டிக்கின்ற ஒரு நிலைமையிருக்
கிறது. ஆனால், ஆண்டுக் கணக்கிலே மின்வாரியக் கட்டணத்
தைக் கட்டாத நிலையிலிருந்தும் கூட, ஆளுகின்றவர்கள் என்ன
காரணத்திற்காக, அவர்களது இணைப்புக்களைத் துண்டிக்கத்
தவறினார்கள் என்பது அரசியல் காரணமாகத்தானிருக்கவேண்
டும். அதைப் போலவே, நில வருவாயானாலும் சரி, வரியா
னாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சரி, அரசாங்கத்திற்கும்
சரி சேர வேண்டிய பணத்தை, வசூலிக்க வேண்டிய நேரத்திலே
வசூலிக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. திராவிட
முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை அதைக் கட்டக்கூடாது
என்பதல்ல. எந்த அரசாங்கம் இருந்தாலும் சரி, யார் ஆண்
டாலும் சரி, வசூலிக்கப்பட வேண்டுமென்பதிலே, ஒழுங்காக
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதிலே திராவிட முன்



1981 பிப்ரவரி 7] [திரு. கு. பா. பழனியப்பன்]

னேற்றக் கழகம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருக்கிறது.
ஆனால், இப்படித் தூண்டி விடுவதற்கு ஆதரவாக இருந்த,
காரணமாக இருந்தவர்களை இன்றைக்குத் தண்டிக்க வழியில்லை.
எனவே, அவர்களுக்கு எதிராகச் சட்டம் இயற்றுகிறோம் என்று
சொல்லப்பட்டது. அரசாங்க அதிகாரிகளைத் தாக்குவது.
அல்லது அரசாங்க அதிகாரிகளைத் தடுப்பது என்பதற்காகக்
கொண்டுவரப்படுகிறது என்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளை
அவர்களுடைய கடமையை நிறைவேற்றும்போது, தடுத்
தாலோ, தாக்கினாலோ, நடவடிக்கை எடுக்க, ஏற்கனவே,
இந்தியன் பீனல் கோட் சட்டத்திலே விரிவான வகையிருக்கிறது.
அதை வைத்துக் கொண்டு நிறைவேற்ற வேண்டிய நேரத்திலே
இன்றைக்குப் புதிதாக ஒரு சட்டம் இயற்றப்படுவது தேவை
யில்லையென்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இப்படிப்பட்ட சட்டங்
கள் இயற்றப்படுவதற்கு காரணமாக, அப்படிப்பட்ட ஒரு எண்ணத்
தை, ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிட்ட காரணத்தால்
இந்த அரசாங்கத்தைக் குறை சொல்வதற்கு வழி இருக்கிறது.
மேலும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இது
அடிப்படைச் சட்டத்திற்கே கூட மாறுதலான ஒரு நிலைமையை
உருவாக்கக்கூடும், எதிர்காலத்திலே என்று நான் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, அதிகப்படியான
வரியை இந்த அரசாங்கம், அல்லது, அதைச் சேர்ந்த உள்ளாட்சி
மன்றங்கள் விதிக்கும் நேரத்திலே, அதைக் கட்டக்கூடாது என்
கின்ற ஒரு நிலைமை ஏற்படுகிறது என்ற நேரத்தில், அதிகப்
படியான வரி, செலுத்தமுடியாது என்ற நிலைமை ஏற்படு
மானால், வரியைக் கட்ட முடியாது என்ற குரலைக் கூட எழுப்ப
முடியாத சூழ்நிலையை இந்தச் சட்டம் உருவாக்குகிறது. அது
அடிப்படை உரிமையைப் பாதிக்கிறது என்ற நிலைமை.
எனவே, அந்தக் காரணத்தைக் காட்டிக்கூட இந்தச் சட்டம்
செல்லுபடியாகாத நிலைமை உருவாகும் என்று நான் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். பல சட்டங்கள் இருந்தும், அவைகளை
நிறைவேற்றி, அவைகள் மூலமாகச் செயல்பட முடியாத இந்த
அரசாங்கம் இன்றைக்குப் புதிய ஒரு சட்டத்தை, அதையும்
திருத்தமாகக் கொடுத்து, இன்றைக்கு நேஷனல் செக்யூரிட்டி
ஆக்டிலே இருக்கிற வாசகங்களைச் சேர்த்து ஒரு பயமுறுத்துகிற
சட்டமாக, தங்களுக்கு அதிகப்படியான ஆயுதம் தேவை
யென்ற கருத்திலே அந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.
இந்தச் சட்டம் எந்தவிதத்திலும் நியாயமற்றது. எழுதுகோலை
வைத்து நன்றாக எழுதத் தெரிந்தவருக்கு ஒரு எழுதுகோலே
போதும். ஆனால், இத்தனை எழுதுகோல்கள் தேவை இல்லை.
நல்ல அறுவடையாளருக்கு பல அரிவாள்கள் தேவையில்லை.
ஒரு அரிவாளிருந்தால் போதும் என்று சொல்லி, இப்படிப்பட்ட

[திரு. கு. பா. பழனியப்பன்] [1981 பிப்ரவரி 7

சட்டம் நியாயத்துக்குப் புறம்பாக இருக்கும்,
சட்டத்திற்குப் புறம்பாக அமையக் கூடும். எனவே, இதை
நிராகரிக்கவேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இன்
றைக்கு அரசு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள், முன்னேற்றத்திற்
கென செலுத்துகின்ற வரியை, ஏனைய பாக்கிகளை, மறுக்கும்
அல்லது தள்ளிப் போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான
சட்ட முன்வடிவை, இங்கே அமைச்சர் அவர்கள் அறிமுகப்
படுத்தியிருக்கிறார்கள். நான் முதலிலேயே சொல்லிக் கொள்வது,
எங்கள் கட்சி அதை எதிர்க்கின்றது. காரணம், இன்றைக்குச்
சாதாரணமாக, நகர்ப்புறங்களிலே இருக்கிற தொழிற்சாலை
களிலே பணியாற்றுகின்ற வேலையாட்கள், அல்லது தொழி
லாளர்களுக்கு, பல்வேறு வகையான உரிமைகள், போராட்டங்கள்
நடத்துவதற்கான சட்டபூர்வமான உத்தரவாதம் அளிக்கப்
பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால்,
வேலை நிறுத்தம் போன்ற செயல்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்
பட்டிருக்கிறது. கேரோ போன்றவைகளைக் கூட இன்றைக்கு
நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

[முற்பகல் 11-30]

ஆனால், சாதாரணமாக இருக்கக்கூடிய விவசாயிகள்
இந்த நாட்டிலே 75 சதவீதம் இருக்கிறார்கள். அவர்களை இந்த
நாட்டின் முதுகெலும்பு என்று எல்லாம் நாம் அவர்களைப்
புகழ்பாடுகின்ற நேரத்தில், அவர்களுடைய சங்க உரிமை
களை, அவர்களுடைய நடவடிக்கைகளைத் தடைசெய்கிற வகை
யிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்கிற
உண்மையை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு சாதாரண
நபர் அரசு முதலியவற்றிற்குச் சேரவேண்டிய நில வரி முதலிய
வற்றைச் செலுத்துவதை மறுக்குமாறு எவரேனும், வாய்மொழி
யாகவோ, எழுத்து மூலமாகவோ, அடையாளங்கள் மூலமாகவோ
அல்லது பார்வைக்குப் புலப்படுகிற முறைகளிலோ அல்லது மற்ற
படியோ சொன்னால் அவர் குற்றம் புரிந்துள்ளவராகக் கருதப்
படுவார் என்று இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு கிராமத்தில் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது, வறட்சி
ஏற்பட்டு இருக்கிறது, ஆகவே என்னால் வரி செலுத்த
முடியாது, கூட்டுறவுக் கடன்கள் திரும்பச் செலுத்த முடியாது
உள்ளாட்சி மன்றங்களுக்கான வரிகள் செலுத்தமுடியாது
என்று சொன்னால் அது குற்றம். அவன் எந்தச் சங்கத்தைச்
சேராதவனாக இருந்தாலும் கூட அவனைக் கைது செய்து, 5
ஆண்டு காலம் சிறையில் தள்ளுகின்ற உரிமையை அரசுக்கு இந்தச்
சட்டம் தருகிறது என்பதை இங்கே நாம் பார்க்கிறோம்.



1981 பிப்ரவரி 7] [திரு. நா. சுந்தரராஜ்]

அது மட்டுமல்ல. இன்றைக்குச் சாதாரணமாக மின்சார இலாகாவில் எடுத்துக்கொண்டால் விவசாயிகள் பணம் கட்டவில்லை என்று சொன்னால் அவர்களையும் சிறையில் தள்ளும் முறையில் இங்கே சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. நான் ஒரு உண்மையை இங்கே சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பழனியப்பன் அவர்கள் சொன்னது போல் இந்தச் சட்டங்களை உங்களுக்குத்தான் முதலில் பிரயோகிக்கவேண்டும். ஏனென்றால் இந்த நிலைமை ஏற்பட்டதற்கு நீங்கள் தான் காரணம் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

நீங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்று 3 ஆண்டு காலம் ஆகிவிட்டது. இதனை வசூலிக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ? வசூல் செய்ய என்ன முயற்சிகளை எடுத்தீர்கள் ? ஒரே ஒரு தனி நபரிடம் நீங்கள் பயந்து கொண்டு, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க அச்சப்பட்டுக்கொண்டு இருந்தீர்கள். அரசு செய்யவேண்டிய கடமையை நீங்கள் செய்யவில்லை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் மத்தியில் பல்வேறு வகையான குழப்பங்கள், சிரமங்கள் இருக்கின்றன. மின்சாரக் கட்டணம் குறித்து எடுக்கப்படுகிற நடவடிக்கைகளைக் குறித்தும், அதனால் விவசாயிகள் படும் கஷ்டத்தையும் குறித்து நான் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன்.

ஒரு விவசாயி ஓராண்டுக் காலத்திற்கு முன்பு 109 ரூபாய் மின்சார பாக்கி செலுத்த வேண்டியிருந்தது. அவர் எந்தச் சங்கத்தையும் சேர்ந்தவர் அல்ல. ஆனால் அந்தப் பகுதியில் ஒரு சங்கம் வேகமாகச் செயல்படுவதால், அவர் தனி மனிதனாகச் சென்று அந்த மின் கட்டண பாக்கியைச் செலுத்தினால், தனக்கு ஆபத்து வரும் என்பதால் அவர் அந்தப் பணத்தைக் கட்டவில்லை. அரசுத் துறை அதிகாரிகளும் அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் அவர் மின்சாரத்தை உபயோகித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஓராண்டு காலத்திற்குப் பிறகு என்ன செய்கிறார்கள் ? மின்சாரத்தை நாங்கள் துண்டித்து விட்டபிறகு, நீங்கள் திருட்டுத்தனமாக மின்சாரத்தை உபயோகித்து இருப்பதால், 22,000 ரூபாய் அபராதம் என்று சொல்கிறார்கள். அதற்காக நோட்டீஸ் போகிறது. அவர் உபயோகித்த மின்சாரம் எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து, 44,000 ரூபாய் அளவிற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்தப் பணத்தை எப்படி விவசாயி கட்டுவான்? அவன் கட்டவில்லை என்றால், 5 ஆண்டுக் காலம் அவனுக்குச் சிறை. இது என்ன கொடுமை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 பிப்ரவரி 7

அதுவும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒரு அமைச்சர்
ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இங்கே
கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது வேதனை
யாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகள் கஷ்டங்களை உணர்ந்து அதனைப் போக்கு
வதற்கு மத்திய அரசாங்கமாக இருந்தாலும், மாநில அர
சாங்கமாக இருந்தாலும் நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டும். இதுபோன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுத்து
அவர்களைக் கொடுமைப்படுத்தக் கூடாது என்று சொல்லிக்
கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றத்திற்கு ஒருவர் வீட்டு வரிகள் செலுத்த
வில்லை என்றால், அதற்கும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்து
வதற்கு வழிவகை இருக்கிறது. சாதாரணமாக கிராமத்தில்
வாழ்கிற ஒருவன் வீட்டு வரி கட்டவில்லையென்றால் அவன்
மீது இந்தச் சட்டத்தை உபயோகிக்கப்போகிறார்களா? நகரத்
தில் வாழ்பவர்களுக்கு இதைப் பயன்படுத்தப்பொகிறீர்களா ?
தொழிலாளர்களாக இருப்பவர்கள் மீது இந்தச் சட்டத்தைப்
பயன்படுத்தப்போகிறீர்களா? என்று கேட்க விரும்புகிறேன்.

ஆனால் யாரோ ஒருவர் விவசாயிகளைத் தூண்டிவிடுகிறார்
என்பதற்காக அதாவது ஒரு அமைப்பை வைத்துக்கொண்டு
இந்த அரசாங்கத்தை மிரட்டுகிறார் என்பதற்காக பயந்துகொண்டு
இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவரை மிரட்டு
வதற்காக இந்த சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள்.
ஆனால் வருங்காலத்தில் அவருக்கும் உங்களுக்கும் ராசி ஏற்பட்டு
இரண்டுபேரும் கைகோர்த்துக்கொண்டு போகின்ற நிலைமை
ஏற்பட்டுவிட்டால். பிறகு அந்தச் சட்டம் யார் மீது பாயும்.
எதிர்க்கட்சியில் இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் மீது தான்
பாயும். ஆகவே, இதை அரசியல் நோக்கத்தில் தான் நீங்கள்
கொண்டுவந்திருக்கிறீர்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்

கிராமங்களிலே இருக்கின்ற சாதாரண ஒரு விவசாயி என்னால்
பணம் கட்ட முடியவில்லை வசதியில்லை என்று சொன்னால்
உடனே அங்கிருக்கின்ற அதிகாரிகள் கோபப்பட்டு அவனைக்
கைது செய்து, அவன் மீது வழக்கு தொடரலாம். ஆகவே
அதிகாரிகளுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்து கிராமங்களிலே
வாழ்கின்ற சாதாரண மக்களை எல்லாம் நசுக்கிப் பிழிகின்ற
சூழ்நிலைதான் உருவாகும். இந்தச் சட்டத்தால் இன்னும்
சொல்ல வேண்டுமென்றால் . . . (பணியடிக்கப்பட்டது)......



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. எனவே சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. நா. சுந்தரராஜ் :** அதிகாரிகளிடம் கிராமங்களில் இருக்கின்ற சாதாரண விவசாயி ''ஐயா, என்னால் இப்போது பணத்தை கட்டமுடியவில்லை, கொஞ்ச நாள் கழித்துக் கட்டுகிறோம்'' என்று சொன்னால் அதிகாரிகள்-- அவர்கள் சிறிய அதிகாரியாக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரியாக இருந்தாலும் சரி- '' நீ ஏன் அதைக் கட்ட வேண்டும், உனக்கு ஏன் சிரமம், நீ கட்டவே வேண்டாம், நான் ஒரு வழி சொல்லுகிறேன் கேள். நீ உன்னுடைய ஊருக்குச் சென்று, ஒரு பச்சைக் கொடியை ஏற்றி, விவசாயச் சங்கம் இங்கே செயல்படுகிறது என்று ஒரு போர்டை போடு, அதிகாரிகளே, நீங்கள் வந்தால் நாங்கள் தரமாட்டோம் நீங்கள் கட்டையை எடுத்தால் நாங்கள் பட்டையை எடுப்போம் என்று எழுதி வை நாங்கள் உன் ஊர் பக்கம் வரவேமாட்டோம்'' என்று சொல்லி அதன் மூலமாக விவசாயிகளுக்கு கடன் சுமை ஏறுகின்றது.

தமிழ்நாட்டிலே உள்ள எல்லா விவசாயிகளும் ஒரு குறிப்பிட்ட சங்கத்தை தான் சேர்ந்தவர்கள் என்று தயவு செய்து கணக்கு போடாதீர்கள். நீங்கள் அவ்வாறு கணக்குப் போட்டதின் விளைவாகத்தான் இன்றைக்கு இதுபோன்ற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த காலத்திலே ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பிறகு அதற்குரிய சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வருகிற நேரத்தில் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நாங்கள் எல்லாம் எதிர்த்தோம். மிகக் கடுமையான சட்டம் கொண்டு வந்தீர்கள். குடித்தால் ஓராண்டு சிறைத்தண்டனை காய்ச்சினால் சிறைத்தண்டனை என்றெல்லாம் கொண்டு வந்தீர்கள். அப்போது நாங்கள் ஒருவன் ஒரு வருடம் சிறைத்தண்டனை அனுபவிக்கச் சென்றுவிட்டால், அவனுடைய குழந்தைகள் எல்லாம் வீதியில் பிச்சை எடுக்க வேண்டியிருக்குமே என்று சொன்னோம். ஆனால் நீங்கள் மிக உறுதியாக மதுவிலக்கை செயல்படுத்தப் போவதாகச் சொன்னீர்கள். விளைவு என்ன ஆகியது? மதுவிலக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே அமல் படுத்த முடியாத நிலைமை தான் இருக்கிறது. அதைப் போலத்தான் இப்போது நீங்கள் கொண்டு வருகின்ற இந்தச் சட்டத்தையும் சிறிது அளவுகூட உங்களால் நிறைவேற்ற முடியாது. ஏனென்றால் அதை நிறைவேற்றுவதற்கு நீங்கள் சிறிதளவு முற்பட்டாலும்

தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகள் அத்தனை
சார்பற்ற முறையிலே அதை எதிர்க்க பெரும் கட்சி
உண்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
வேண்டிய சூழ்நிலை

நேற்றுக் கூட விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரை கைது
செய்திருக்கிறீர்கள். பின்சாரம் திருடினார் என்பதற்காக
கைது செய்து வழக்கு தொடர்ந்திருக்கிறீர்கள்.
விலே அவரை கைது செய்ய முடியவில்லை. என். எஸ். ஏ.
காக, இருக்கின்ற வேறு சட்டத்தை வைத்து என்ற காரணத்திற்
கிறீர்கள். ஆகவே இருக்கின்ற சட்டங்களை வைத்து கைது செய்திருக்
மானாலும் பயன்படுத்தி யார்மீது வேண்டுமானாலும் எப்படி வேண்டு
வடிக்கை எடுக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்கள். சட்டம் நட
என்ற ஒரு பெரிய ஆயுதம் உங்கள் கையிலே இருக்கின்றது.
இருக்கின்ற சட்டங்களையே முறையாக, ஒழுங்காகப் பயன்படுத்
தாமல் இப்போது இதுபோன்ற வேகமான கடுமையான சட்டங்
களை கொண்டு வந்து கிராமங்களிலே வாழ்கின்ற மக்களிடத்திலே
பீதியை உண்டுபண்ணி இருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, அதன்
மூலம் எதிர்க்கட்சியிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள்
மீதும் இந்த சட்டத்தை பயன்படுத்துவீர்களோ என்ற நிலையில்
நாங்கள் விமர்சனம் செய்ய வேண்டியநிலைமை ஏற்பட்டிருக்கிறது.
ஆகவே இந்த சட்டத்தை இப்போதே உடனடியாக திரும்பப்
பெற்றுக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லி முடித்துக்கொள்
கிறேன்.

[முற்பகல் 11-40]

திரு. துரை முருகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இந்த அவைமுன்னால்
வைக்கப்பட்டிருக்கின்ற மசோதா மீது நான் சார்ந்திருக்கின்ற
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு அவசரச் சட்டம் வந்தபோது அது ஆகாது
தேவையற்றது என்று ஏற்கனவே நாங்கள் 'டிஸ்அப்ருவல்
நோட்டீஸ்' கொடுத்திருக்கிறோம். அதற்கு எங்களுடைய முக்கிய
மான 'கண்டென்ஷன்' The genesis of the Bill is most undemocratic
என்று சொல்வது எங்களுடைய குறிக்கோள். காரணம் இது
ஒரு அரசியல் உள்நோக்கத்தோடும் இந்த நாட்டிலே யாராவது
கிளர்ச்சி செய்தால் அவர்களை நசுக்கிவிட வேண்டுமென்ற
எண்ணத்தோடும் கொண்டுவரப்பட்டு இந்த மாமன்றத்தின்
முன்னாலே இந்த அரசு வைத்திருக்கிறது என்பது என்னுடைய
குற்றச்சாட்டு.



வரியை மக்கள் செலுத்தக் கூடாது என்று சொல்லுகிற கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. வரி செலுத்தாமல் எந்த சர்க்காரும் நடக்காது என்பதிலே எங்களுக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு. ஆனால் மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உங்களுக்குத் தெரியும்.

Taxation without representation

என்றுதான் அமெரிக்க நாட்டிலே உள்நாட்டுப் போர் தொடங்கியது. அதைப் போல எங்களுக்கு நியாயம் வழங்கும் வரையில் நாங்கள் வரி செலுத்தமாட்டோம் என்று சொல்வது எந்த வகையில் குற்றம் என்று நான் கேட்கிறேன்.

ஒரு கோரிக்கையை முன்வைக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றச் சொல்லுகிறார்கள். அதை நிறைவேற்றும் வரையில் இதைச் செய்யமாட்டோம் அல்லது இப்படி செய்வோம் என்று சொல்வது அவர்களுடைய லீகல் ரைட்' ஒரு ஜனநாயகத்தினுடைய ரைட் அது. நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வரி கொடுக்காமல் இருந்தால் 5 ஆண்டு சிறை, 5000 ரூபாய் அபராதம் என்று திடீரென்று ஏலம் விடுவதைப் போல் ஒரு பீனல் செக்ஷனை கொண்டு வந்து போட்டிருக்கிறீர்கள் நீங்கள் திடீரென்று ஒரு திட்டம் அல்லது சட்டம் போடுகிறீர்கள். கரும்பு பயிர் செய்தால் இவ்வளவு வரி, அல்லது வாழை பயிர் செய்தால் இவ்வளவு வரி என்று சொல்கிறீர்கள். 50 ரூபாய் ஏற்கனவே போட்டிருந்த வரிக்குப் பதிலாக திடீரென்று 2000 ரூபாய் வரி போடுகிறீர்கள். உடனே விவசாயிகள் ஒன்று கூடி அல்லது ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடி, எங்களுக்கு வரியைக் குறைக்காவிட்டால் நாங்கள் வரி கட்ட மாட்டோம் என்று சொன்னால் அதை எப்படி இந்தச் சட்டம் தீண்டும். வரியே கட்டமாட்டேன் என்று சொன்னால் தண்டலாம். ஆனால் அவர்கள் கட்ட மாட்டோம் என்று சொல்லவில்லை. இதைக் குறைத்துக் கொடுக்கும் வரையில் கட்டமாட்டோம் என்று சொன்னால் இந்தச் சட்டம் கோர்ட்டிலே அடிபட்டுப்போய்விடும். ஏதோ சர்க்காருக்கு தொல்லை கொடுக்கிறார்கள்; இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைப் போட்டால் பயந்து, ஒடுங்கிவிடுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆகவே நீங்கள் போலீஸ் மெத்தேடை பாலோ செய்கிறீர்கள். பொலிடிகல் மெத்தேடை மறந்து விடுகிறீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்தால் அதற்கு ஒரு சட்டம்: விவசாயிகளை ஒடுக்குவதற்கு ஒரு சட்டம், பள்ளிக்கூட மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள் என்றால் அதற்கு ஒரு சட்டம். இப்படி சட்டம் போட நீங்கள் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறீர்கள். காரணம் எதற்கு எடுத்தாலும் சட்டம் போட்டு தடுத்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். ஆனால் என்றைக்குமே சட்டத்தாலே சர்க்கார் வாழமுடியாது. மக்கள் சக்தியை நம்பித்தான் சர்க்கார் வாழ முடியும். உங்கள் இஷ்டம் போல் வாழ முடியாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. துரைமுருகன்] [1981 பிப்ரவரி 7

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
எங்கள் கோரிக்கை ஏற்கப்படும் வரை உண்ணாவிரதம் இருப்
போம். சாகும் வரை உண்ணாவிரதம் இருப்போம் என்று
சொல்கிறார்கள் என்றால் அது அட்டம்ட் டு சூசைடு என்று
வரும். உடனே அவர்களைக் கொண்டு வந்து சிறையிலே தள்ளுவது
சர்க்கார் நிலையாக இருக்க முடியாது. அதைப் போல
விவசாயிகள் சில நியாயமான கோரிக்கைகளுக்காக போராட்டம்
நடத்துகிறார்கள். கோரிக்கைகள் நிறைவேறும் வரையில் வரி
செலுத்த மாட்டோம் என்று சொல்கிறார்கள். இது நியாயமான
கோரிக்கை. இந்த நியாயமான கோரிக்கையை ஏற்கும் வரை
இந்த போராட்டம் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகள்
9 அம்ச கோரிக்கையை ஏற்கும் வரை வரிகட்ட மாட்டோம்
என்று சொல்லுகிறார்கள். இதைத்தான் நான் திரும்பத் திரும்பச்
சொல்கிறேன். 50 ரூபாய் வரி என்று இருந்த இடத்திலே
திடீரென்று 2000 ரூபாய் வரி போட்டால் அதை எதிர்த்து
அந்த வரியைக் குறைக்கும் வரையிலே வரி செலுத்த மாட்டோம்
என்று செல்லுகிறார்களே தவிர, வரியே செலுத்த மாட்டோம்
என்று சொல்லவில்லை. அது தவறு அல்ல. அவர்களுடைய
கோரிக்கைக்கு ஒரு பரிகாரம் காணவேண்டும். வரி கொடுக்
காமல் இருக்க வேண்டுமென்ற எண்ணம் திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கோ மற்றவர்களுக்கோ இல்லை. இங்கே இருக்கின்ற
பிரச்சனை 9 அம்ச கோரிக்கையை ஏற்கப்படும் வரை வரி கட்ட
மாட்டோம் என்பதுதான். வரியே கட்ட மாட்டோம் என்று
சொல்லவில்லை. ஆகவே, இந்தச் சட்டம் கோர்ட்டுக்குப்போனால்
அடிபட்டுப் போகும். உயர்நீதி மன்றத்தின் உயரிய படிகளிலே
வக்கீல்களின் வாதங்கள் அங்கே பளிச்சிடும் போது இது தவிடு
பொடியாகிவிடும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏதோ நாராயணசாமி நாயுடுவை மனதிலே வைத்துக் கொண்டு
இப்படித் திட்டமிடுகிறீர்கள்; சட்டம் கொண்டு வருகிறீர்
கள் அதைப்போல பல்வேறு நிறுவனங்கள் இருக்கின்றன. யாரும்
ஸ்டிரைக் என்று வரக்கூடாது என்ற எண்ணத்திலே நீங்கள்
இப்படிச் செய்கிறீர்கள்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தச்
சட்டத்தின் மூலம் 5 ஆண்டு தண்டனை என்று கோர்ட்டிலே
சொன்னாலும் நீதிமன்றத்தின் தீர்ப்பை வாங்கிவிட்டு, அதற்கு
மேல் அப்பீலுக்கு அப்பீல் என்று போய்விடுவார்கள். இடையிலே
தீர்ப்பு அளிக்கப்பட்ட மறுநாளே பெயிலிலே வெளியே
வந்துவிடுவார்கள்.

அம்மையார் அவர்கள் என்ன சொன்னார்கள்? என்.எஸ்.
ஓ.-விலே நீங்கள் விவசாயிகளைக் கைது செய்யக்கூடாது என்று
சொன்னார்கள். ஆகவே பிரதமர் அவர்கள் சொன்னவுடனேயே



1981 பிப்ரவரி 7] (திரு. துரைமுருகன்)

நீங்கள் நாராயணசாமி நாயுடுவை விட்டு விட்டீர்கள். ஆனால்
நமது முதலமைச்சரவர்கள், அவர் என்ன பிரதமர், நான்
என்ன கேட்பது, நானேதான் விடுதலை செய்தேன் என்று
சொல்கிறார். பெரிய தைரியசாலி. பாராட்டப்பட வேண்டியது
தான். ஏனென்றால் பிரதமர் சொல்லி கேட்கவில்லை நானே
நான் செய்தேன் என்று, என்னை நம்பியே இந்த இடும்பைத்
தேடிக்கொண்டேன் என்று சொன்னானே ராவணேஸ்வரன்,
அப்படி சொல்கிறார் முதலமைச்சர். இதற்குள்ளே நான் போக
விரும்பவில்லை. ஆனால் என்.எஸ்.ஓ.விலே சொல்லப்பட்டிருக்
கின்ற சில சரத்துக்களை இங்கே கொண்டுவந்து இதிலே புகுத்து
கிறீர்கள். அதாவது, ஆன்டி நேஷனல் என்றும் பப்ளிக் ஆர்டர்
என்றும் சமுதாயத்திற்கு விரோதமானது என்றும் உள்ள சரத்துக்
களை எல்லாம் இங்கே கொண்டு வந்து புகுத்துகிறீர்கள். 'எங்கள்
கோரிக்கை கேட்கப்படுகின்ற வரையில் இந்தத் திட்டத்தை நாங்கள்
கையாளுவோம்' என்று அவர்கள் சொல்கின்றபோது இதிலே
நேஷனல் ஆண்டி என்று கொண்டு வந்து லிங் பண்ணி பப்ளிக்
டிஸ் ஆர்டர் என்று சொல்லி அவர்களை உள்ளே தள்ளுவதற்
குரிய வகையிலே இந்த சட்டத்தைப் பயன்படுத்தப்போகிறீர்கள்
என்பதைத் தைரியமாகச் சொல்லுங்களேன். திருமதி இந்திரா
காந்தி சொன்னால் கூட நாங்கள் என்.எஸ்.ஓ.-வைப் பயன்படுத்து
வோம் என்று சொல்வதற்கு உங்களுக்கு தைரியம் கிடையாது.
ஆகையினால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இப்படி ஒரு சட்டத்
தைக்கொண்டு வந்து மறைமுகமாக எப்படியாவது விவசாயிகளை
அடக்கி ஒடுக்கி விடலாம் என்று கருதிக்கொண்டிருக்கிறீர்கள்
என்று என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக்கொள்
கிறேன். மக்களுடைய எண்ணங்களைப் புரிந்துகொண்டு
நடக்கின்ற ஒரு சர்க்கார் செய்கின்ற காரியமல்ல இது. இந்தத்
திட்டத்தை எப்படிக் கொண்டு வந்தீர்கள் என்பது எனக்கும்
புரியவில்லை. நம்முடைய விவசாயத்துறை அமைச்சரவர்கள்
விவசாயிகளோடு நல்ல தொடர்பு உடையவர்கள். அவர்களின்
இதயத்தைப் புரிந்துக்கொள்ளக்கூடிய நல்ல ஆற்றல் படைத்த
அவருக்கு எப்படி இப்படிப்பட்ட ஒரு துரோதனை செய்யப்
பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. எனவே நான்
அவரிடம் மூவர் ஆஃப் தி மோஷன் என்ற அளவிலே கேட்டுக்
கொள்கிறேன்: நீங்கள் ஜனநாயகத்தின் பெயரால், நியாயத்
தின் பெயரால் இந்த சட்டத்தை வாபஸ் பெறுவதுதான் முறை
யாக இருக்கும் என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்
கிறேன். இல்லையென்றால் நீங்கள் ஜனநாயகத்தை அழித்த
வர்கள் ஆவீர்கள். உரிமைக்கு குரல் கொடுக்கின்றவர்களின்
குரல் வளையை நசுக்குகின்றவர்கள் ஆவீர்கள் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். எதற்கெடுத்தாலும் சட்டம், சட்டம்
என்று போய்க்கொண்டிருந்தால் கடைசியிலே இதற்கு ஒரு
ஒரு முடிவு இல்லாமலே போய்விடும். கத்தி எடுக்கிறவன்
கத்தியாலே அழிந்துபோவான் என்பதுபோல சட்டத்தாலே
நீங்கள் ஆட்சி நடத்தலாம் என்று கருதினால் இதேபோன்று ஒரு

சட்டம் உங்களுக்கே ஒரு முடிவைக் காட்டிவிடும் என்று சொல்லிக் கொண்டு, ஆகவே இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகின்றபோது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு துர்போதனை செய்யப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அவைக்குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது இருக்கக்கூடிய அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்கள் முதலியவற்றுக்கும் செலுத்தத் தக்க வரிகளையும், மின்சார பாக்கிகளையும் செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது மட்டுமல்ல. இந்த சட்ட முன்வடிவு அவசரச் சட்டமாக வெளியிடப்பட்டபோதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், தமிழகத்திலுள்ள விவசாயிகள் சங்கமும் எதிர்த்துள்ளது. ஆனால் இப்போது அதற்கான காரணங்களை நாங்கள் கூற வேண்டும். இந்த சட்டம் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களால் துவக்கப்பட்ட இயக்கத்தை அழிப்பதற்கு என்ற ஒரு பெயரால் அடுத்து வரக்கூடிய காலத்திலே எண்ணற்ற சந்ததிகளின், உழைக்கின்ற மக்களின் ஜனநாயக இயக்கங்களை எல்லாம் ஒடுக்குவதற்குரிய ஒரு சிறந்த அடக்கு முறைக் கருவியாக பயன்படக்கூடிய ஒரு சட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் நண்பர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கட்சிக்கும் அடிப்படையில் பல முக்கியமான பிரச்சினைகளில் மாறுபாடு உண்டு. உதாரணமாக மின் கட்டணத்தை எடுத்துக் கொண்டால் 1 ப்ளஸ் 1 என்கின்ற விதி முறையினை அதாவது நடப்பு மாதக் கட்டணத்தோடு பழைய பாக்கியில் ஒரு மாதக் கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டும் என்ற யோசனையை தமிழ்நாடு அரசுக்கு அளித்த அமைப்புக்களிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்று. அது மட்டுமல்ல. இது ஒரு சலுகைதான், இந்த வகையில் கடந்தகால மின் கட்டண பாக்கியில் ஒரு மாதக் கட்டணத்தை நடப்பு மாதக் கட்டணத்தோடு சேர்த்து கட்டவேண்டும் என்று விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்தது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. ஆகவே,





நியாயத்தின் அடிப்படையிலே நடைபெறவேண்டும் என்ற ஒரு நியதிக்கு உட்பட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாற்றுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அதேபோல கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் எல்லாப் பெரிய நிலச்சுவான்தார்களும், அவர்களுடைய டிராக்டர்களுக்கு வாங்கியிருக்கக் கூடிய கடன்களை எல்லாம் ரத்து செய்ய வேண்டும் என்று ஒரு சாரார் கேட்டார்கள். அதை நாங்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லையே. சிறு விவசாயிகள் மத்திய விவசாயிகளுடைய பயிர்க்கடன்களை, கூட்டுறவு சங்கங்களிலிருந்து வாங்கப்பெற்ற பயிர்க்கடன்களை ரத்து செய்யவேண்டும் என்கிற கோரிக்கையைத்தானே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரியது. அதேபோல இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக் கூடிய நிலைமையில் நிலவரி கொடுக்க வேண்டாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்லவில்லையே.

அப்படியானால் எதற்காக இந்தச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று கேட்டால், இந்தச் சட்டம் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களையும் அவருடைய சங்கத்தையும் மனத்திலே வைத்துக் கொண்டு, கொண்டுவரப்பெற்றிருக்கிறது. அவர்களை ஒடுக்க வேண்டும் என்கிற முறையிலே கொண்டுவரப்பெற்றிருக்கிறது. இதிலே ஜனநாயகமே இல்லை. அதனால்தான் இதனை நாங்கள் எதிர்க்கிறோம். இப்படி ஒரு குறிப்பிட்டவர்களை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு சட்டத்தைக் கொண்டு வருவது அரசாங்கத்திற்கு நல்லது அல்ல. திரு. நாராயணசாமி நாயுடுவும் அவர்கள் சங்கத்தினரும் தவறு செய்கிறார்களா? அதை அரசியல் ரீதியில் சந்திக்க அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். தேவை ஏற்பட்டால் மக்கள் மத்தியில் சென்று, அந்தச் சங்கத்தினரின் நிலையும் கொள்கையும் இவைகள், அரசாங்கத்தின் நிலை இது என்று பிரித்து விளக்கி, மக்கள் அதைப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டுமே தவிர, சட்டம் போட்டு அடக்கிவிட நினைக்கக் கூடாது. இப்படிப்பட்ட தண்டனைகள் கொடுக்கக் கூடிய சட்டத்தைக் கொண்டு வந்து அவற்றிற்கு தீர்வு காண முடியாது; கூடாது.

இந்திய தேசிய விடுதலை இயக்கத்திலே வரி கொடா இயக்கம் என்பது கைக் கொள்ளப்பெறவில்லையா? வேண்டுமானால் சொல்லலாம். அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டம் அது. ஆனால் இன்று

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் படி உருவாக்கப்பெற்ற அரசுக்கு
எதிராக உருவாக்கப்படும் இயக்கமல்லவா என்று. அதற்காக,
அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி கொண்டு வரப்பெற்ற அரசு
என்றால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்றிருக்கிறதா ?
ஒரு அரசு தவறான முறையிலே வரிகளைப் போடலாம்.
அப்படி நிலைமை ஏற்பட்டால் அதைக் கொடுக்க முடியாது
என்று சொல்ல மக்களுக்கு உரிமை உண்டு. அது அவர்களுடைய
அடிப்படை உரிமை. ஆகவே அப்படிப்பட்ட ரீதியிலே இந்தச்
சட்டத்தைக் கொண்டு வருவது மக்களுடைய அடிப்படை உரி
மையைப் பறிப்பது போலாகும் என்பதைக் கூறிக் கொள்ள
விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, அந்தச் சட்டத்திலே குறிப்பிடப்
பெற்றிருப்பது என்னவென்றால், முதலிலே
செலுத்தவேண்டிய யாதொரு வரியையும் மின் கட்டணம்
செலுத்தாமை, கூட்டுறவுக் கடன்கள் வசூலிப்பது
சொல்லிவிட்டு, பின்னால் என்ன தரப்பட்டிருக்கிறது என்று
நகராட்சிகள் உள்ளாட்சி மன்றங்களுக்கும் என்றால்,
வரிகள் பாக்கிகள் ஆகியவற்றை கொடுக்க வேண்டிய
தூண்டினாலோ அவையும் தண்டிக்கப்பட வேண்டாம் என்று
இடைச் செருகலையும் சேர்த்திருக்கிறார்கள். நமது மாண்புமிகு
காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நண்பர் திரு. சுந்தரராஜன் அவர்கள்
பேசும்போது இது ஏதோ கிராமப் புறங்களைத்தான் பாதிக்கக்
கூடிய விஷயம் என்று பேசினார்கள். ஆனால் இந்த இடைச்
செருகலினால் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற ஆயிரக்
கணக்கான நகர்ப்புறங்களிலே முனிசிபாலிட்டிகளிலே இருக்கக்
கூடிய மக்களையும் பாதிக்கக் கூடிய விஷயம் என்று கூற
விரும்புகிறேன்.

இன்றைக்குத் திண்டிவனத்திலே தண்ணீர் சப்ளையே கிடை
யாது. அங்கே தண்ணீர் வரி வசூலிக்கப்படுகிறது. தண்ணீரே
இல்லை, தண்ணீர் வரியை கொடுக்க மாட்டோம் என்று அம்
மக்கள் சொன்னால் அது நியாயமானது தானே. ஊராட்சிகளின்
நிர்வாகிகள் மக்களுக்கு எந்தவித நன்மையும் செய்யாமல் அதற்
கான வரிகளை மாத்திரம் போட்டுக் கொண்டே போனால் அந்த
வரியைக் கொடுக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லத்தானே
செய்வார்கள். ஆனால் இன்றைக்கு இந்தச் சட்டத்திலே பஞ்சா
யத்துக்களிலே விதிக்கப்படுகிற வரிகளை மாத்திரம் அல்ல;
செஸ் வரிகளையும் கூட கட்ட வேண்டாம் என்று ஒருவர் தூண்டி
விடுவாரேயானால், அவர் தண்டிக்கப்படுவார் என்று சொல்லி
யிருக்கிறார்களே. தண்ணீர் கொடுக்கவில்லை வரி கொடுக்க
மாட்டோம் என்று மக்கள் கிளர்ச்சி செய்தால், அதற்கு ஆதர
வாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினால் எல்லோரையும்
இந்தச் சட்டத்தை மீறிவிட்டார்கள் என்று சொல்லி



தண்டிக்க வழியிருக்கிறது இந்தச் சட்டத்தில். இந்தந்த இடங்
களில் வறட்சி இருக்கிறது. குடிதண்ணீர் இல்லை, அதற்கான
வரியை மக்கள் தர மாட்டார்கள் என்று சொன்னாலும்கூட
5 ஆண்டு தண்டனை கொடுக்க வழி இருக்கிறது இந்தச் சட்டத்
தில், அது மட்டும் அல்ல, மாநகராட்சி வரி, நகராட்சி வரி,
பஞ்சாயத்து வரி, முனிசிபாலிட்டி வரி இவைகளைக் கொடுக்க
வேண்டாம் என்று தூண்டினால் மட்டும் அல்ல, அதைத் தள்ளி
வையுங்கள், தவணை கொடுங்கள் என்று கேட்டால் கூட குற்றம்
என்று சொல்கிறமாதிரி, 'பாக்கிகளை செலுத்துவதை
மறுக்குமாறு தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்காக'
என்று கொடுக்கப் பெற்றிருக்கிறது. இது எப்படி நியாயம்
ஆகும் ?

ஒரு குறிப்பிட்ட இடத்தில் வறட்சி-பஞ்சம். நிலவரி
கொடுக்க முடியவில்லை. கொஞ்சம் தள்ளிப் போடுங்கள்
என்று கேட்டால், அது குற்றம் என்று சொன்னால் எப்படி
சரியாகும் ? இதில் இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன்.
நிலச் சுவான்தார்களுடைய நிலங்களைக் குத்தகை செய்யக்
கூடிய குத்தகை விவசாயிகளுக்கு 3/4 பங்கு கொடுக்க வேண்டும்
என்கிற சட்டத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள்தான் இந்த மாமன்றத்தில் கொண்டு வந்தார்கள்.
நாங்கள் எல்லாம் வரவேற்றோம். ஆனால் குத்தகை விவ
சாயிகள் நிலச்சுவான்தார்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கி
யைப் பற்றி இந்தச் சட்டத்தில் என்ன அவசியம் ? குத்தகை
விவசாயிகள் நிலச்சுவான்தார்களுக்குப் பாக்கி கொடுக்க வேண்
டியது பற்றி அரசாங்கத்திற்கு என்ன கவலை என்று கேட்கிறேன்.

நிலச்சுவான்தார்களுக்கு குத்தகை விவசாயிகள் கொடுக்க
வேண்டிய பாக்கி இருந்தால் நிலச்சுவான்தார் சட்டப்படி கோர்ட்
டுக்குப் போகலாம். அப்படி கோர்ட்டுக்குச் சென்று பாக்கியைப்
பெற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கும்போது நிலப் பிரபுக்களுக்கும்
மடாலயங்களுக்கும் உழைக்கக்கூடிய விவசாயிகள் கொடுக்கக்
கூடிய குத்தகை பாக்கி இருந்தால் அதைச் செலுத்தாதே என்று
ஒருவர் சொன்னால், செலுத்துவதைத் தள்ளிப் போட வேண்டு
மென்று ஒருவர் சொன்னால் ஐந்தாண்டு தண்டனை கொடுக்கக்
கூடிய ஒரு சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது
என்று சொன்னால் இது விவசாயிகளுக்குச் சாதகமான அரசாங்கம்
என்று சொல்லிக் கொள்வதற்கு என்ன உரிமை இருக்க முடியும்
என்று கேட்கிறேன்.

இன்னொன்று, குத்தகை விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்கு
கொடுக்க வேண்டிய குத்தகை பாக்கியைக் கொடுக்க வேண்டாம்
என்றோ அல்லது தள்ளிப் போடுங்கள் என்றோ சொன்னால்

[திரு. என். சங்கரய்யா] [1981 பிப்ரவரி 7

அது குற்றம். நான் கேட்கிறேன். விளைச்சலில் நான்கில் மூன்று
பங்கு குத்தகை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று
சட்டம் இயற்றினோம். அந்தச் சட்டத்தின்படி நான்கில் மூன்று
பங்கை நிலப்பிரபுக்கள் கொடுக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது
உத்திரவாதம் செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.
விளைச்சலில் நான்கில் மூன்று பங்கு சட்டப்படி கொடுக்காவிட்
டால் அந்த நிலப்பிரபுக்களுக்கு ஐந்தாண்டுக் கடுங்காவல் தண்
டனை விதிக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்களா? இல்லை.
அவர்கள் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுக்க மறுக்கிறார்கள்
என்றால் அதைப்பற்றி இந்த அரசாங்கத்திற்குக் கவலை இல்லை.
ஆனால் இன்றைய தினம் குத்தகை பாக்கியை ஒத்திப் போடுங்கள்
என்று சில பல விவசாய சங்கங்கள் கேட்டால் ஐந்தாண்டு
தண்டனை யாருக்காக இந்த அரசை நடத்த வேண்டுமென்று
கருதுகிறார்களோ அவர்களுக்கு விரோதமாக இந்த அரசு செயல்
படுகிறது. தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட குத்தகை விவசாயி
கள் நான்கு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். பதிவு செய்யப்
பெறாத குத்தகை விவசாயிகள் லட்சக் கணக்கில் இருக்கிறார்கள்.
அவர்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட
இருக்கிறது.

இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது, பேசுவது மட்டுமல்ல
எழுதினால் மட்டுமல்ல, அடையாளம் கைகாட்டினாலே போதும்.
கை காட்டினாலே அதுவும் இந்தச் சட்ட வரம்பிற்கு உட்பட்டுக்
கொண்டு வரப்பட்டு ஒரு குற்றமாக ஆக்கப்பட்டிருக்கிறது.
அப்படியானால் இந்தச் சட்டம் எந்த அளவிற்குக் கடுமையாக
மக்களை தாக்கப் போகிறது என்பதை நீங்கள் பார்க்க முடியும்.

கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும் என்பது தமிழ்
பழமொழிதான். மக்கள் பாதிக்கப்பட்டால், பஞ்சாயத்துக்
களுக்கு அல்ல நகராட்சிகளுக்கு வரிகட்டமாட்டேன் என்று
சொன்னால் கமிஷனர் வருகிறார், மற்றவர்கள் வருகிறார்கள்
அப்போதுதான் பிரச்சினை வரும், அப்பிரச்சினையைப் பற்றிப்
பேசுகிறார்கள். ஆனால் இந்தச் சட்டப்படி வரி கொடுக்கமாட்டேன்
என்று கிளர்ச்சி நடத்தினால் அது சட்ட விரோதமாக்கப்
பட்டு கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கும் விதத்தில் இது
அமைந்துள்ளது. இதே தமிழ் நாட்டில் எவ்வளவு அரசாங்கங்கள்
இருந்திருக்கின்றன. 1947இல் இருந்து எந்தஅரசாங்கமும் இப்படிப்
பட்ட கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்ததில்லை.
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு அரசாங்கமாவது
இங்கு இப்படிப்பட்ட ஒரு கடுமையான தண்டனை கொடுக்கக்
கூடிய ஒரு சட்டத்தை கொண்டுவந்திருக்கிறதா என்று நான்



1981 பிப்ரவரி 7] [திரு. என். சங்கரய்யா]

கேட்கிறேன். அப்படிப்பட்டதொரு நிலை அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசுக்கு ஏற்பட்டிருக்குமானல் எவ்வளவு
தவறான பாதையில் அது சென்று கொண்டிருக்கிறது என்பதை
நண்பர்கள் என்ற முறையில் நாங்கள் எடுத்துக் காட்ட விரும்பு
கிறோம். மக்கள் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும், என்ற
அடிப்படையில் பேசும்போது இப்படிப்பட்டதொரு சட்டத்தை
எந்த ஒரு அரசும் இதுவரை இங்கே கொண்டுவரவில்லை.
இங்கே எவ்வளவோ விதமான போராட்டங்கள் நடைபெற்றிருக்
கின்றன. ஆனால் எந்த அரசாங்கமும் கொண்டு வராத ஒரு
சட்டத்தை இப்போது கொண்டு வருகிறார்கள்.

இதற்குப் பின்னால் என்ன சொல்லப்படுகிறது? சட்ட அபிப்
பிராயம் கேட்கப்பட்டிருக்கிறது. வெறுமனே தூண்டினால்
சட்ட விரோதம் அல்ல என்பதுதான் நிலை. என்ன சேர்க்கப்
பட்டிருக்கிறது? புது வியாக்கியானம். இந்தியாவின் முழு முதல்
ஆட்சிக்கு அல்லது இந்தியாவின் அடிப்படை உரிமைக்குப் பாதிப்பு
ஏற்படுமானால் என்று இதில் கொண்டு வந்திருக்கிறார்கள்.
அப்போதுதான் இந்தச் சட்டம் கோர்ட்டில் நிற்கும் என்ற நிலை.
சட்டரீதியான யோசனை கோரப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்
கிறது. இந்தச் சட்டம் கொண்டு வந்தபிறகு ஒரு திருத்தம்
கொண்டு வந்தார்கள். அது என்ன தெரியுமா? சாதாரணமாகத்
தூண்டினால் குற்றம் இல்லை, அதுதான் நிலை. வரி கொடுக்க
வேண்டாம் என்று சொன்னால் இந்தச் சட்டத்தின் கீழ் வராது
என்று சட்டப்பூர்வமான ஆலோசனை கொடுக்கப்பட்டது.
ஆகவே, அரசின் பாதுகாப்பைக் குலைப்பதாய் இருந்தாலும்
அல்லது அமைதியையும் கண்ணியத்தையும் அல்லது ஒழுங்கையும்
அல்லது இந்தியாவின் முழு முதல் ஆட்சியை குலைக்கும் வகையில்
அமைந்தாலும் அப்போது அதற்குத் தண்டனை விதிக்கப்படத்
தக்கதாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வரி கொடுக்க
வேண்டாம், பஞ்சாயத்துக்கு வரி கொடுக்க வேண்டாம் அதை
ஒத்திவை என்றால் அது நாட்டினுடைய முழு முதல் ஆட்சிக்கு
ஆபத்து, நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து என்று இணைத்துத்
தான் இந்தக் கடுமையான சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அரசாங்கப் பணியாளர்கள் வன்முறை. முப்பது நாற்பது
ஆண்டுகளாக அரசாங்கப் பணியாளர்கள் வன்முறையேற்பட்டால்
எவ்வளவோ வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தியக்
குற்றவியல் சட்டத்தின்கீழ் ஏற்கனவே உள்ள சட்டத்தின்படி
அரசு ஊழியர்கள் தாக்கப்பட்டால். பயமுறுத்தப்பட்டால்
தண்டிப்பதற்குச் சட்டம் இருக்கிறது. வரி கட்டவில்லை என்றால்
அதைப் பெற ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்படி அதைப் பெற
சட்டங்கள் உள்ளன.

[நண்பகல் 12-00]

ஆகவே இவ்வளவு சட்டங்கள் இருந்தும், சாதாரண சட்டங்களால் சமாளிக்க வேண்டிய பிரச்சினையை, இவ்வளவு பெரிய பிரச்சினையாக ஆக்கினால், வருங்காலத்திலே வரக்கூடிய சர்க்கார் தங்கள் தங்கள் இஷ்டத்திற்கு உழைக்கின்ற மக்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தை உபயோகிக்க முடியும். ஆகவே நான் நாங்கள் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அரசாங்கம் இதை வாபஸ் பெற வேண்டும் என்ற நிலை இருந்தாலும், இப்படி கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் பரிசீலனைக்கு வந்தால், இந்தத் திருத்தங்கள் மூலம் எவ்வளவு தூரம் காரியங்கள் ஆற்றவேண்டியிருக்கின்றது என்பதற்காகக் கொடுக்கப்பட்டதே தவிர. இந்தத் திருத்தங்கள் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்கின்ற நிலையிலே அல்ல. கோட்பாட்டு அளவிலே இந்தச் சட்டம் தவறானது, அடிப்படையிலே தவறானது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் இதை ஒரு கவுரவப் பிரச்சினையாகப் பார்க்காமல் நாராயணசாமி நாயுடுவை சமாளிக்க வேண்டிய பிரச்சினையில் இவ்வளவு கவனம் செலுத்தாமல், அதற்காக தமிழ்நாட்டு மக்கள் மீது இப்படிப்பட்ட கொடுமையான சட்டத்தை சுமத்த வேண்டாம் இந்தச் சட்டத்தை அரசாங்கம் பின்வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை ஆளுங் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளோடு நெருங்கிப் பழகுகின்ற, விவசாயிகளுடைய உள் உணர்வுகளை நல்லபடியாக தெரிந்து வைத்திருக்கின்ற அமைச்சர் என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். ஆகவே விவசாயிகளுடைய பரிபூரண இதய தாகத்தைப் புரிந்து வைத்திருக்கிற வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நல்ல கால நேரத்திலே, நல்ல சந்தர்ப்பச் சூழ்நிலையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நான் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கங்களையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இந்தச் சட்டம் ஒரு அரசியல் உள்நோக்கத்தின் பிரதிபலிப்பு என்ற வாதப் பிரதிவாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. ஒரு அரசியல் சம்பந்தப்பட்ட சூழ்நிலையை அனுகுவ



தற்கு மிக அவசரமாக ஒரு அச்சத்தின் விளைவாக இந்த பயத்தின் பிரதிபலிப்பாக இந்தச் சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதாக குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காக எடுத்துக் கூறினார்கள். ஒரு தனி நபரை வஞ்சம் தீர்ப்பதற்காக அல்லது ஒரு நபருடைய செல்வாக்கைக் குறைப்பதற்காக இந்தச் சட்டம் எதிர்காலத்தில் பயன்படுத்தத்தக்க அளவில் வளரப் போகின்ற நிலைமைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில், ஒன்றைத் திட்டவட்டமாக சொல்லிக் காட்ட முடியும். ஒரு தனி நபரைப் பார்த்து அச்சப்படுகின்ற நிலைமையோ அல்லது தனி நபரின் வளர்ச்சியைக் கண்டு பயந்தோ இந்த அ. தி. மு. க. அரசாங்கம் இல்லை. ஆனாலும் கூட, ஏதோ ஒரு மாயையின் காரணமாக, ஏதோ ஒரு தவறான எண்ணத்தின் காரணமாக இந்த நிலைமைகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்ற கருத்திலே நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரையைப் பற்றி விவாதிக்கின்ற நேரத்திலேயும், துணை மானியக் கோரிக்கைகள் பற்றி விவாதிக்கின்ற நேரத்திலேயும் பெரும்பாலான மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுக்கு ரோடுகள் வசதியில்லை, தண்ணீர் வசதி இல்லை, மின் விளக்கு வசதியில்லை, பாலங்கள் கட்டப்படவில்லை என்ற கோரிக்கைகளை மக்களுடைய கோரிக்கையாக, மக்களுடைய ஒருமித்த குரலாக எடுத்து வைத்தார்கள் என்பதை நாம் மறந்திருக்க முடியாது. இந்த கோஷங்கள் ஒருபுறம் இருந்து கொண்டிருக்க, அதே நேரத்திலே மின்சார ஊழியர்களின் சம்பள உயர்வு பற்றியும், ஊதிய உயர்வு பற்றியும், பஞ்சப்படி உயர்வு பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டது. அதேபோல் என். ஜி. ஓ.க்களின் ஊதிய உயர்வு, பஞ்சப்படி உயர்வு தரவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஆலைத் தொழிலாளர்களின் வேலைப் பளுவை முன்னிட்டு, அவர்களுக்குரிய சம்பளத்தை அதிக வகையிலே தந்தாக வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அத்தனை சமூகத்தைச் சேர்ந்தவர்களும் வெளியிலே கோஷங்களைப் போட்டுக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலை. ஆகவே, அரசாங்கங்கள் இவைகளையெல்லாம் கவனத்திலே, கணக்கிலே எடுத்துக் கொண்டாக வேண்டும். அதற்கான திட்டங்களைப் போட்டு, அந்தத் திட்டங்களுக்கான பணத்தை, செலவுகளை அணுகுவதற்கான அவசியம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதே போல் என். ஜி. ஓ. க்கள், தொழிலாளர்கள் போன்றவர்கள் போடுகின்ற கோஷங்களைத் தங்கள் காதுகளிலே ஏற்றுக் கொண்டு, தங்களுடைய கவனத்தை வரவழைத்துக் கொண்டு, அவர்கள் ஒரு நிம்மதியான பெருமூச்சு விடக்கூடிய அளவிற்கு அரசாங்கம் சலுகைகளைத் தந்தாக வேண்டும். திட்டச் செலவுகளை அரசாங்கம் கவனித்தாக

வேண்டும். அரசு சார்பில் அன்றாடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற நடைமுறைச் செலவுகளைச் சமாளிப்பதிலும் இந்த அரசாங்கம் கவனித்தாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த முழக்கங்கள் எல்லாம் எழுகின்ற அதே நேரத்திலே தான் மின்சாரக் கட்டணத்தைக் கட்டக்கூடாது, கூட்டுறவுக் கடன்களை கட்டக்கூடாது, கிராமப்புறங்களிலே செஸ் வரி போன்றவைகளை எல்லாம் கட்டக்கூடாது, அரசு ஸ்தம்பித்து நிற்க வேண்டும், அரசு ஸ்திரமற்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட வேண்டுமென்ற முறையில் வாதங்களை எழுப்பி வைத்து, போராட்டங்கள் என்ற பெயரால் வன்முறை என்கிற கொடிய ஆயுதத்தைத் தங்களுடைய கரங்களில் தாங்கிப் பிடித்துக் கொண்டு ஊர்வலம் போகின்ற நிகழ்ச்சிகள் அன்றாடம் இந்த நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை மாமன்ற உறுப்பினர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள், நிச்சயமாக யாரும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் இருக்கிறது.

போராட்டம் என்ற பெயரால் இந்த நாட்டில் கடந்த மூன்றாண்டுக் காலமாக எப்படிப்பட்ட விபரீதங்களை இந்த நாட்டு மக்கள் கண்டு கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு சந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவருமே ஒட்டு மொத்தமாக தெரிந்துவைத்திருக்கின்றோம். போராட்டம் என்று சொல்லி மின்சாரக் கட்டணத்தைக் கட்டாதே என்று சொல்லுவதும், வரிகளைக் கட்டக்கூடாது என்று வாதிடுவதும் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து வாங்கிய கடன்களை நாம் ஏன் திருப்பித் தரவேண்டுமென்றும், வரி கட்டுகிறவர்களைக் கூட தூண்டிவிடுகிற ஒரு துர்ப்பாக்கிய போதனையைத் தங்களுடைய தாரக மந்திரமாக வைத்துக் கொண்டு உழன்று வருகிறவர்கள் எத்தனை பேர் என்ற கணக்குத் தெரியாதா? கணக்கு புரியாதா ? வாதிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட அதைத் தெரிந்து வைத்தும் தெரியாத சூழ்நிலைக்கு பலவந்தமாக ஒரு அரசியல் பின்னணி காரணமாக இருக்கலாம். நான் அதற்குள் சொல்லவில்லை அந்த நிர்ப்பந்தத்தின் காரணமாகச் சொல்லுகிறார்களா என்ற சந்தேகந்தான் எனக்கு ஏற்படுகிறது, கடந்த காலப் போராட்டமும், சமீப காலத்தில் நடந்த போராட்டமும்.

பாலில் உப்பைப் போடுகிற பாதகம் இந்த நாட்டிலே நடக்கவில்லையா ? போராட்டம் என்ற பெயரால் வன்முறையைத் தூண்டி விடுகிற ஆர்ப்பாட்டம் இந்த நாட்டிலே நடக்கவில்லையா? பாதையிலே மரத்தை வெட்டிப் போடுகிற விபரீதம் இந்த நாட்டிலே நடக்கவில்லையா? குடிநீரிலே பாலிடாலைக் கலக்க வேண்டுமென்று பேசவில்லையா? அரசுப் பேருந்துகளைத் தீயிட்டுக் கொளுத்துகின்ற தீவினைச் சக்திகள் இந்த நாட்டிலே



இருந்திருக்கவில்லையா? ஆகவேதான், இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன், அரசு வாகனங்களில் கல்லெறிந்து கலவரம் செய்யும் கூட்டங்கள் இந்த நாட்டிலே இருந்ததா இல்லையா ? சமீபத்தில் நடந்த போராட்டத்தில்கூட ஒரு லாரியைத் தீவைத்துக் கொளுத்தினார்கள். அரசுப் பேருந்துகளைத் தீவைத்துக் கொளுத்தினார்கள். கிராமப் புற மக்களுடைய வெள்ளை உள்ளத்தை நன்றாகப் புரிந்து கொண்டதன் விளைவாக அவர்களுடைய உள்ளத்தில் கறுப்பு விதைகளைத் தூண்டுகிற கங்காணித் தனங்கள் இந்த தேசத்திலே இருக்கிற காரணத்தாலேதான் வரியை நான் கட்டுகிறேன் என்று சொன்னால் கூட, யார் வரியைக் கட்ட முனைகிறார்களோ, அவர்கள் இல்லத்திற்குப் போய் ஊரடங்குச் சட்டம் போடுவது, கிராமப் புற மக்களைக் கூட்டி வைத்து அவனுக்குப் பெண்ணைக் கொடுக்க வேண்டாமென்று சொல்வதும், அவனுடைய வீட்டில் இழவு நடந்தாலும், திருமணம் நடந்தாலும் அங்கே போகக் கூடாது என்று ஒரு குட்டி தர்பாரை நடத்தக் கூடிய, ஒரு குட்டி சாம்ராஜ்யத்தை நடத்தக் கூடிய ஒரு மினி சர்க்காரை நடத்தக் கூடியதாக ஒரு பலவந்தமான சூழ்நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டகாரணத்தாலே தான் இந்தச் சட்டத்தை இந்த அரசு இன்றைய தினம் கொண்டு வந்திருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் மணிமாறன் அவர்கள் வன்முறை ருத்ரதாண்டவம் ஆடுகிற காரணத்தாலே அதைத் தடுப்பதுதான் இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களில் ஒன்று என்று குறிப்பிட்டார்கள். அவரிடத்திலிருந்து விளக்கம் பெற, ஒன்று கேட்க விரும்புகிறேன். வன்முறையைத் தடுப்பதற்காக அல்லது வன்முறையில் ஈடுபட்டால் அதைத் தண்டிப்பதற்காக என்று ஏற்கனவே இந்தியன் பீனல் கோட் என்ற சட்டம் இருக்கிறது. அரசாங்கத்திற்கு வரவேண்டிய பாக்கிகள் வரவேண்டுமென்று சொன்னால் அதை வசூலிக்க ரெவின்யூ ரெகவரி ஆக்ட் இருக்கிறது. இந்த இரண்டும் இருக்கும் போது இந்தச் சட்டம் எதற்காக? பெரிய ஓட்டையில் சின்னப் பூனையும் பெரிய பூனையும் போகும். ஆனால் சின்ன ஓட்டையில் சின்னப் பூனையும் பெரிய ஓட்டையில் பெரிய பூனையும் என்று இரண்டு வட்டங்களை வைத்துக் கொள்வது எப்படிச் சரியாக இருக்கும் ?

**திரு. ஆர். மணிமாறன் :** மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பல சட்டங்கள் இருந்த போதிலும் கூட புதிதாக இந்த சட்டம் தேவைதானா, அவசியந்தானா என்ற வினாவை அவர்கள் தொடுத்தார்கள். அவருக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்

[திரு. ஆர். மணிமாறன்] [1981 பிப்ரவரி 7

பினரும் பல சட்டங்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன, எதற்காக இந்தப் புதுச் சட்டம் என்று கேட்டார்கள். பல அரிவாள்கள் இருந்தாலும் ஒரே ஒரு அரிவாள் ஒரு அறிவாளிக்குப் போதாது. பல எழுதுகோல்கள் இருந்தாலும் ஒரே ஒரு எழுதுகோலை வைத்து எழுத முடியுமா ? ஏற்கனவே இருக்கிறதே என்று சொன்னார்கள். பல எழுதுகோல்கள் இருந்தாலும் கூட, அந்த எழுதுகோல்களில் இருக்கக் கூடிய, அந்த எழுதுகோல்களில் காட்சியளிக்கக் கூடிய ஊசி முனை சரியில்லாத காரணத்தால் தான் புதிய எழுதுகோலை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வல்லவனுக்கு ஒரு அரிவாள் போதும், ஆகவேதான் தேவையான அரிவாள், அவருடைய பாஷையிலேயே, மொழியிலேயே சொல்லுகிறேன்.

[பிற்பகல் 12-10].

இருக்கின்ற அரிவாள்கள் போதும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவை சரியில்லாத காரணத்தால் தான் புதிய அரிவாள்கள் தீட்டிய முறையில் புதிய முறையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் படுகிறது. சட்டங்கள் ஏற்கனவே இருக்கின்றன என்று சொன்னார்கள். ஏற்கனவே சட்டங்கள் இருந்தாலும்கூட ஒருவரைப் பற்றி ஊழல் குற்றச்சாட்டு சொன்னால் அதை அவர் நிரூபிக்கா விட்டால் அவரும் தண்டனை பெறுவார் என்ற மாபெரும் சட்டத்தை உங்களுடைய ஆட்சியிலே கொண்டு வந்தீர்கள். அப்படியென்றால் அதற்கான சட்டத்தை முன்னாலேயே போட்டு வைக்கவில்லையா ? இந்த அரசின் மீது என்ன குற்றச்சாட்டைச் சொன்னார்கள் என்றால் 2½, 3 ஆண்டுக் காலம் அந்த விவசாயிகளிடத்திலே மின் கட்டண பாக்கியை வசூல் செய்யாதது உங்களுடைய குற்றம்; அவர்களை ஆற வைத்து விட்டீர்கள், இப்போது பலவந்தப்படுத்துகிறீர்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு என்ன கோரிக்கை எழுப்பப்பட்டது? விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதற்காக அரசு அலுவலர்கள் துரிதமாக நடவடிக்கை எடுத்தால் ஐயோ பார்த்தீர்களா, கிராமப் புறங்களிலே அநியாயம் நடந்து கொண்டிருக்கிறது, போலீஸ் அராஜகம் நடந்து கொண்டு இருக்கிறது, நடக்கலாமா, ஜனநாயக ஆட்சி இல்லையா, படுபாதகம் இல்லையா என்ற கோரிக்கைகளைத்தான் 3 ஆண்டுக்காலமாக எழுப்பினார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க முடியாது. 3 ஆண்டுக் காலமாக விவசாயிகளோடு பேச்சு வார்த்தை நடத்தி 1 ப்ளஸ் 1 என்ற முறையிலே மின் கட்டணத்தைக் கட்டலாம் என்ற சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது. சாம, பேத, தான தண்டம் என்று சொல்வார்கள், சாமத்திற்கு சட்டம் இருக்கலாம், பேதத்திற்கு சட்டம் இருக்கலாம், தானத்திற்கு சட்டம் இருக்கலாம், ஆனால் தண்டத்திற்கு சட்டத்தை உண்டாக்குகிற முறையிலேதான் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.



[திரு. ஆர். மணிமாறன்] [1981 பிப்ரவரி 7]

அரசு ஊழியர்களைக் காப்பாற்ற வேண்டாமா? அரசின் கடமையை அவர்கள் ஆற்றப் போகிற நேரத்திலே கைகளை வெட்டுவேன், கால்களை வெட்டுவேன், உயிருக்குப் பாதகம் விளைவிப்பேன் என்று கிராமப் புறங்களிலே விவசாயச் சங்கத்தை சார்ந்தவர்கள் அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். . . . . . .

திரு. ரா. உமாநாத் : கைகளை வெட்டுவேன், கால்களை வெட்டுவேன் என்று பேசியிருப்பார்களானால் 304-வது செக்ஷன் இருக்கிறது 307 Sect on Attcpmt to mu der அதற்கு தனி செக்ஷன் இருக்கிறதே அப்படி இருக்கிறபோது நீங்கள் ஏன் அதைக் கொண்டு வரவேண்டும்.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, சொன்னால் குற்றம் அல்ல, அவர்கள் பாதிக்கப்படுகிறபோது நடவடிக்கை எடுக்க வழி இடையாது. சட்டத்திலே உள்ள நெளிவு சுளிவுகளைப் பயன்படுத்திக் கொண்டு இத்தனை ஆண்டுக் காலம் தப்பித்துக் கொண்டிருந்தார்கள். அதுபோல் வரிக் கட்டினால் தூண்டி விட்டு வரிக் கட்டக் கூடாது என்று சொல்வதும் அப்படி வரிக் கட்டியவர்கள் யாராவது இருந்தால் அவர்களுடைய இல்லங்களுக்கு சென்று தாக்குவதும், இல்லங்களைத் தரை மட்டமாக்குவதும் நடந்த நிகழ்ச்சிகள். பெருமாநல்லூர் என்ற ஊரில் மின்சார ஊழியர், மின்சாரக் கட்டணத்தைக் கட்டவில்லை என்ற காரணத்தால் மின் துண்டிப்பைச் செய்யச் சென்றார். 100 பேர் அவரைத் தாக்கினார்கள், அவரை அடித்தார்கள். அதைப் போல திருநெல்வேலி மாவட்டத்திலே எட்டயபுரத்திற்கு அருகிலே நடந்திருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே நடந்திருக்கிறது. பல்வேறு இடங்களிலே தொடர் கதைகள் என்ற முறையிலே வரிசை வரிசையாக நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டுமா ? இல்லையா ?

ஒரு தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஜப்தி செய்வதற்கு உள்ளே நுழைந்து இருக்கிறார். கிராமப் புறத்திலே உள்ள மக்களை எல்லாம் கூட்டி வைத்து யார் ஏலம் போட வந்தார்களோ அவர்களையே ஏலம் போட்டார்கள். தாசில்தாரை ஏலம் போட்டார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டரை ஏலம் போட்டார்கள், மின்சார இலாகா ஊழியரை ஏலம் போட்டார்கள். இப்படி ஏலம் போடுகிற நிலைமைகள் அரேபியா நாட்டிலே இருந்ததாக கதைகளில் நாம் படித்து இருக்கிறோம்.

ஒரு வேளை அராபியத் திருப்புத்திரர்களெல்லாம் இங்கு வந்திருக்கிறார்களோ என்ற சந்தேகமெல்லாம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்க அதிகாரிகளையே ஏலம் போடக் கூடிய படு

பயங்கரமான, படு பாதகமான செயல் இந்த நாட்டிலே நடக்க லாமா ? இது ஜனநாயக ஆட்சி இல்லையா ? அரசாங்க அதிகாரி களுக்கு ஒரு புறத்திலே வக்காலத்து வாங்கிக் கொண்டு, என். ஜி. ஓ.க்களின் குறைகளை நிறைவு செய்ய வேண்டுமென்று வாதாடி உணர்ச்சி பூர்வமாக சொல்லுகின்றீர்கள். மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் என். ஜி. ஓ. சங்க மாநாட்டிலே பேசப் போகிறார்கள். அப்படி அரசாங்க ஊழியர்களுக்காக வக்காலத்து வாங்கிக் கொண்டு இருக்கின்ற அதே நேரத்தில் அரசாங்க ஊழியர்கள் தாக்கப்படும் நேரத்தில் அவர்களைக் காக்கின்ற கரங்களாக இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறதா இல்லையா ? அதன் பிரதிபலிப்புதான் இது.

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவரவர்களே, தொழி லாளர்களுக்குப் பாதுகாப்பாக நடக்கக் கூடிய அந்த அரசாங்க ஊழியர்கள் மாநாட்டிலே பேசக் கூடிய நான், அதே ஊழியர் களை திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தாக்குவது, மற்ற வர்கள் தாக்குவது போன்ற தன்மையில் நோட்டீஸ் வெளியே வந்தபொழுது இலட்சக்கணக்கான மக்கள் இருந்திருக்கக் கூடிய அந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் முன்னாலே அதை அம்பலப் படுத்தி அந்த மக்களை, அந்த ஊழியர்களுக்குப் பாது காப்புக் கொடுக்க வேண்டுமென்று பேசியதும் மார்க்சிஸ்ட் பார்ட்டி; ஜனங்களைத் திரட்டியதும் மார்க்சிஸ்ட் பார்ட்டி என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவரவர் களே அவர்கள் நிலையானவர்கள் அல்ல, தடம் புரண்டு போகின்ற வர்கள் அல்ல என்பதைப் பல்வேறு விஷயங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களிலே நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும் ஒரு மாறுபட்ட கோணத்தில் நின்று கொண்டு இருக்கின்றார்கள். (குறுக்கீடு) ஆணா, பெண்ணா என்று திரு. ரகுமான்கான் அவர்கள் கேட் கிறார்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, நான் அப்படிக் கேட்கவில்லை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, அவர்கள் நிலையானவர்களும் அல்ல ;



தடம் புரண்டவர்களும் அல்ல என்ற பொருளில் குறிப்பிடுகிறார் கள் என்று சொன்னால அவர்கள் நிறம் மாறிய பூக்கள், திசை மாறிய பறவைகள் என்று சொல்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவாதம் நடப்பது சட்டத்தைப பற்றி. மக்கள் நலன் கருதி அதை எதிர்க்கிறோம். இதிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பின ரவர்கள் புகுந்து இதிலே அரசியல் படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் இந்திரா காங்கிரசோடு கூட்டணி சேர்வதும் இல்லை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யதேச்சாதிகாரத்தை என்றைக்கும் எதிர்க்கிறது.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவரவர் களே, நிறம் மாறாத பூக்களா அல்லது திசை மாறிய பறவை களா என்ற கேள்விக்கு நான் போக விரும்பவில்லை. நிச்சயமாக இவர்களைப் போல் மௌன கீதங்களாக இருக்க மாட்டார்கள். (குறுக்கீடு) என்ன செய்வது? இவர்களை காதலிக்கப் பார்க்கிறீர்கள், அவர்கள் இவர்கள் வலையில் விழ மாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் பொறுப்பா ?

**திரு. அ. ரகுமான்கான் :** அது ஒருதலை ராகம்.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவரவர்களே, அதேபோல பல வன்முறைகள் இந்த நாட்டிலே நடை பெற்றிருக்கின்றன என்ப தனுடைய எடுத்துக் காட்டாகத்தான், ஒரு கூறாகத்தான், ஒரு பகுதியைத்தான் என்னால் சுட்டிக் காட்ட முடியும். ஒரு விவசாய சங்கத்தின் தலைவர் இங்கே பிரெஞ்சுப் புரட்சி வரும் என்று சொல்கிறார்; அதைப் போல ஒருவர் ரஷியப் புரட்சி வரும் என்று சொல்கிறார். முதலமைச்சரைக் கேரோ செய் வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். மற்ற அமைச்சர் கள் வெளியே போக முடியாது, கேரோ செய்வோம் என்று வாதாடிக் கொண்டிருக்கிறார். இது ஜனநாயகத்தின் ஊன்று கோலாகத் திளைத்துக் கொண்டிருப்பதா ? ஜனநாயக சக்திகளை இந்தப் பேச்சுக்கள் வளர்க்குமா ? ஜனநாயகத் தென்றல் இந்தத் தமிழகத்திலே வீச வாய்ப்பு இருக்கிறதா என்பதைத்தான் இன்றைக்குக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருப்பூர் நகரத்திலே நடந்த ஒரேயொரு சம்பவத்தைப்பற்றி மட்டும் சொல்லி நான் முடித்துக் கொள்ளலாம் என்று கருது கிறேன். அங்கே ஒரு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இருக்

கிறது. அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை உடனடியாக மூடியாக வேண்டும் ; அப்படி மூடாவிட்டால் பட்டப்பகலில் நாங்கள் ஊர்வலமாக வந்து, அந்தக் கடைகளையெல்லாம் உடைத்து, தாழ்ப்பாளையெல்லாம் உடைத்து, பூட்டுக்களையெல்லாம் உடைத்து அதை ஆக்கிரமிப்பு செய்வோம் என்று சொல்கிறார்கள். அங்கே போலீஸ் பாதுகாப்பைத் தந்து, 40, 45 குடும்பங்கள் காப்பாற்றப்பட்டன.

அதே போலத்தான், தினசரி காய்கறி மார்க்கெட்டைச் செயல்படுவதற்கு விட மாட்டோம் என்று சொல்லி எங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயை அவர்கள் அபராதமாக வைத்தால் தான் யார் ஏலம் கோரினார்களோ அவர்களுக்கு வழி விடுவோம் என்று சொல்கிறார்கள். இன்றைக்குத் திருப்பூர் நகராட்சி மன்றத்தின் வருமானம் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ரூபாய் நஷ்டக் கணக்காக ஆகிக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு அங்கே ஆர்ப்பாட்டங்கள், அந்த அளவிற்கு வன்முறைத் தாண்டவம் ஆடிக் கொண்டிருக்கின்றன

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இவைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டாமா ? வரி
யைச் செலுத்துவோம் என்று நாட்டின் மீது பற்று, மான
சீகமான உணர்வில் திளைத்துக் கொண்டிருந்தாலும் அப்படிப்
பட்ட உணவுர்களுக்கெல்லாம் தடை போடுகின்ற வகையில்,
இருக்கிறது.

[பிற்பகல் 12-20]

அந்த உரிமைகளுக்கெல்லாம் பங்கம் விளைவிக்கின்ற சூழ்
நிலையை உருவாக்குகின்றவர்களை, இந்தச் சமுதாயத்து விஷக்
கிருமிகளாக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறவர்களை, கிராமப்
பொருளாதாரத்தை பள்ளத்திலே வீழ்த்தி விடுவதுதான்
தங்களுடைய தணியாத இலட்சியம் என்னும் வகையில் சங்
சுங்கள் என்ற பெயரால் நல்ல உணர்வுகள் சங்கமிப்பதைக் கூட
எதிர்த்து ஆர்பாட்டம் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய இந்த
ஜந்துக்களை, அவர்களையெல்லாம் நிச்சயமாக மக்கள் முன்
னால் அடையாளம் காட்ட வேண்டிய அவசியத்தை உணர்த்தத்
தான் அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்
தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தை
நான் ஆதரிக்கிறேன் என்று கூறி, முடித்துக் கொள்கிறேன்.
வணக்கம்.





3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(இ) ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாது அதே பொருள் குறித்து அமைச்சரை அறிக்கை அளிக்க அனுமதிப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலை 10 மணி அளவில் பல்லவன் போக்கு வரத்துக் கழக மேலாளர் புரசைவாக்கம் பகுதியில், சட்டக் கல்லூரி விடுதி......... (குறுக்கீடுகள்) Nobody can p event me.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இந்தமாதிரி அறிக்கைகள் அளிப்பது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. (கூச்சல், குழப்பம்) அந்த அறிக்கையிலே உள்ள விளக்கத்தைக் கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் அமைச்சர் அறிக்கை கொடுத்தால், ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். அது இன்ஃப்ரக்ச்சுவஸ் ஆகிவிடும் (கூச்சல், குழப்பம்).

**திரு. துரைமுருகன் :** அப்படி அரசுக்கு அந்த உணர்வு இருந்திருக்குமானால், காலையிலே இங்கே ஒரு அறிக்கை வைக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன்.

"A M:mber rose on a point of order and stated that while notie, of adjournment motions on a particular matter had been given if a Minister was allowed to make a statement under Ru!c 82 on the same subject and the adjournment motion was rejected, it virtually prevented a discussion on the matter covered by the adjournment motion, inas much as no discussion was permissible on a statement made under Rule 82. He wanted to know whether this was in order.

The chair observed that it was for the Chair to allow or reject a motion. Inasmuch as a statement on the matter raised in the adjournment motion had been given by the Minister, he refused consent to the adjournment motion."

This is the ruling which was given already. இது ஏற்கனவே அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி நடைமுறை வந்திருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்ட நடைமுறை அதற்கு வித்தியாசமானது. காலையிலே, நீங்கள்தான் இந்த அவையிலே கேட்டீர்கள். இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அதிலே, எதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம், எதை அடுத்தாற்போல் எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டீர்கள். மாண்புமிகு முன்னவர் அவர்கள் ஒரு கருத்தை முன் மொழிந்தார். ஏற்கனவே இந்தக் கும்பகோணம் சம்பவம் பற்றிய தீர்மானம் முதலிலே வந்திருப்பதால், அதை இன்றைக்கு எடுத்துக் கொண்டு, அடுத்தாற் போல், சட்டமன்றம் கூடும் தேதியிலே, மாணவர் சம்பந்தமான இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளலாம் என்று அவரும் கூறி, அதன் அடிப்படையிலே நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். ஆகவே, ஏற்கனவே, நீங்கள் நாளை மறுநாள் மாணவர் சம்பந்தமான ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சபை முன்னாலே அறிவித்து, அது சபையினுடைய சொத்தாக மாறிவிட்டது. ஆனால், அப்பொழுது அமைச்சர் அந்த அறிக்கையைக் கொடுப்பதாகச் சொல்லவில்லை. அந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே விவாதிக்கும் போது, அமைச்சர் அரசாங்கத்தின் சார்பில் சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாமே தவிர, இப்பொழுது அவர்கள் இந்த அறிக்கையை தருவது சரியல்ல தந்து விட்டால், அந்த பிரச்னை சம்பந்தமாக, ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மீது விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். ஆகவே, உறுப்பினர்களுடைய உரிமை பறிக்கப்படும் என்பதைத்தான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சருக்கு இங்கே அறிக்கை தருவதற்கான உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமையை ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத் தந்திருக்கிற அந்த அடிப்படையில் மறுப்பது என்பது சரியாகாது என்பதுதான் என்னுடைய வாதம்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாதாரணமாக உள்ள நிலைமைக்கும் இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைக்கும் வேறுபாடு உண்டு. காலையிலேயே ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தமாக இந்த அவையிலே பேசப்பட்டது. ... தீர்ப்ப வழங்கியிருக்கிறீர்கள், அடுத்த சட்டமன்றக் கூட்ட



நாளிலே எடுத்துக் கொள்ளப்படும் என்று. இடையிலே அமைச்சர் அப்பிரச்னை பற்றிய அறிக்கையை 82-வது விதியின் கீழ் இங்கே தாக்கல் செய்வாரானால், எங்கள் கட்சியைச் சேர்ந்த அல்லது, எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விவாதிப்பதற்கான வாய்ப்பு தரப்படாது. மேலும், அரசுக்குச் சாதகமான பதிலைத் தான் அவர்கள் தருவார்களே தவிர, உள்ள நிலைமை, என்ன நடந்தது என்பதைப் பற்றிச் சரியான தகவல் நாட்டு மக்களுக்குத் தரமுடியாமல் போய்விடும். ஆகவே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாகத்தான் அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமே தவிர, உங்களுடைய தீர்ப்பை மீறி அவையிலே அவர் அறிக்கை கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து உறுப்பினர்கள் அது சம்பந்தமாக தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படாமல் போகிறது, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய இந்த அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்படுவதன் மூலமாக. ஆகவே தான் அந்த உரிமை மறுக்கப்படுகிறதா இல்லையா என்பதை குறித்து தங்களுடைய தீர்ப்பை நான் கேட்க விரும்புகிறேன். தங்களுடைய தீர்ப்பு மீறப்படுகிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பு மீறல் என்பதில்லை. நான் பார்த்து விட்டுச் சொல்கிறேன்.

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக ஒரு பிரச்சினை இந்த அவையிலே வரவேண்டுமென்று விரும்பி, உறுப்பினர்கள் அப்படி ஒரு வேண்டுகோளை அல்லது தீர்மானத்தை தங்களிடத்திலே தெரிவித்திருக்கக்கூடிய நிலையில் அந்த தீர்மானத்தின் மீது அவர் எடுத்துச் சொல்கிற கருத்துக்களுக்கு முன் உரிமை வருகிறது. அதற்குப் பின்னால் அமைச்சர் பதிலளிக்க நேரிடுகிறது. அதற்குப் பதிலாக இன்றைய தினம் அவர் ஒரு அறிக்கையைப் படித்து விடுவாரேயானால் உறுப்பினர்கள் தெரிவிக்கிற கருத்துக்கள் அத்தனையும் இங்கே இடம் பெறாமல் போய்விடுகின்றன. இந்த அறிக்கையைப் படிப்பதால் ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாக, ஏற்பட்டுவிட்ட நிகழ்ச்சியிலே எடுத்துக்காட்டப்பட வேண்டிய பல உண்மைகள் அவையிலே வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்துவிடுகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. எனவே, அவையினுடைய நடைமுறையில் அமைச்சர் ஓர் அறிக்கை தருவது அவருடைய உரிமை என்றாலும் கூட அவையினுடைய நடைமுறையில் ஒரு ஒத்தி வைப்பு தீர்மானத்தை கொண்டு வர அனுமதிக்கப்படுவதாக அறிவித்ததற்குப் பின்னால், இடையிலே அமைச்சர் அறிக்கை தருவதென்பது

அந்தப் பிரச்சினையில் அறிக்கை தருவதென்பது அவையினுடைய உரிமையை குறித்த ஒரு நிலையாகும் என்பதை நான் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களுக்கு உதவிகரமான இன்னொரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக 82-வது விதியின் கீழ் ஓர் அறிக்கையை அமைச்சரவர்கள் அவையிலே வைத்தால், அதன்மீது எந்த விவாதமும் கூடாதென்று இருக்கிறது. அறிக்கையை அமைச்சரவர்கள் படித்தவுடன் யாராவது எழுந்து சந்தேகம் கேட்டாலும், அவைத் தலைவர் அதை அனுமதிப்பதில்லை என்பது மரபாகவும், விதியாகவும் இருக்கிறது. இப்பொழுது 82-வது விதியின்படி ஓர் அறிக்கையை அமைச்சரவர்கள் படிக்கிறார் என்றாலும், பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பேச இடமில்லை என்று மறைமுகமாகச் சொல்வதாகத்தான் அர்த்தம். அதையும் தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல. காலையிலே தாங்கள் உறுதியளித்திருக்கிறீர்கள். அவை முன்னவர் அவர்களும் உறுதியளித்திருக்கிறார்கள். இன்று குடந்தை மாணவர் சம்பவத்தைப் பற்றியும், அடுத்த நாள் (திங்கட்கிழமையன்று) சென்னை மாணவர் நிகழ்ச்சிகளைப் பற்றியும் எடுத்துக்கொள்ளலாமென்று கூறப்பட்டுள்ளது. இதற்கிடையில் இந்த அறிக்கை வருவதென்பது நாளை மறுநாள் இந்த அவையிலே பல உறுப்பினர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியதாக இருக்குமென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவத்தின் மீது ஒத்தி வைப்பு தீர்மானங்கள் தரப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு காலையில் அதைப்பற்றி எடுத்துக்கொள்ளலாம் என்ற பிரச்னை வந்தபோது மாண்புமிகு உறுப்பினர்கள் குடந்தை மாணவர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை இன்று எடுத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையிலே நாம் எடுத்துக் கொண்டோம். ஆனால் நேற்று நடைபெற்ற அந்த பிரச்சினையின் மீது கொடுக்கப்பெற்ற ஒத்தி வைப்பு தீர்மானம் இன்றைக்கு வராத நிலைமை உருவாகிவிட்டது என்பது தான் ஏற்பட்டுவிட்ட ஒரு நிலைமை ஆகும். ஆனால் நடைபெற்ற சம்பவத்தின் தொடர் நிகழ்ச்சியாக விரும்பத்தகாத பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடாதென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே தான் நான் அமைச்சர் என்ற முறையிலே ஒரு அறிக்கையைத் தர விரும்புகிறேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர்களுடைய உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்பதோ, அவர்களைப் பேசவிடாமல் தடுக்க வேண்டும் என்பதோ அல்ல. ஆகவே, ஒரு நல்ல நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்காகதான், நாளை தினம் அவை கூடுவதில்லை என்ற காரணத்தினால் தான் ஒரு அறிக்கை



தரவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தில் இதை படிக்கிறேன். அதை எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகின்றது என்ற ஒரு வாதத்தை வைத்து தடுப்பது என்பது அமைச்சருடைய உரிமையைப் பாதிப்பதாகும்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மிக அசம்பாவிதமான நிலைமை எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது, அதற்குள் தடுக்கப்பட வேண்டுமென்ற அமைச்சருடைய அக்கறையையும், ஆர்வத்தையும் நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். ஆகவே உங்களுடைய அறிவிப்பிற்கிணங்க இப்போதே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு அனைவரையும் பேச சொல்லி பிறகு அமைச்சர் பதிலளித்தால் நாளைக்கு எதுவும் நடைபெறாமல் தடுப்பதற்கு நல்ல சூழ்நிலை ஏற்படுமென்று நான் கருதுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை தடுக்க வேண்டுமென்பது தான் நம்முடைய நோக்கமும். ஆகவே உறுப்பினர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களையும், அரசாங்கத் தரப்பிலே சொல்ல வேண்டிய கருத்துக்களையும் எடுத்துக் கொண்டு, இடையிலே இந்தப் பிரச்சினையை, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பொறுத்த வரையில், தாங்கள் ஏற்கனவே ஒரு தீர்ப்பை இங்கே படித்துக் காட்டினீர்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுத்துக்கொள்வதன் மூலம் மேலும் ஒரு வகையான முன்மாதிரியை இந்த அவையில் உருவாக்கியது போல் ஆகிவிடும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற ஆவல் காரணமாக அப்படித் தெரிவித்தாலும், ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போது எடுப்பது என்பது உகந்ததாக ஆகாது என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பொதுவாக, பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுப்பது மரபு. அந்த அடிப்படையில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை கொடுத்து இருக்கிறார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிற காரணத்தால், அதை ஏற்றுக்கொண்டு விட்டதாகப் பொருள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்போல் அந்தப் பிரச்னை ஒரு முக்கியமான பிரச்னை, உடனடியாகத்

தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை. ஆகவே அது குறித்து விவாதிக்க வேண்டும் என்பது தான் அவர்களின் முக்கிய நோக்கம். ஆனால் இன்றுள்ள சூழ்நிலையில், நாளைக்குச் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் இல்லை. நாளை மறுநாள் தான் இதை எடுத்துக்கொள்ள முடியும். அதற்குள் அந்தப் பிரச்னையில் ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களின் அமைதியின் பேரில், ஒரு ஸ்டேட்மெண்ட் என்கிற வகையில் இங்கே ஒரு அறிக்கையைத் தர முன்வந்து இருக்கிறார்கள்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கையில் இருந்த போதிலும், ஒரு பிரச்னையின் முக்கியத்துவம் கருதி மாண்புமிகு பேரவைத் தலைவர் விதிகளின் அடிப்படையில் அறிக்கை தருவதற்கு அனுமதி அளிக்கலாம் என்ற தீர்ப்பைத்தான் தாங்கள் முன்பே இங்கே படித்துக் காட்டினீர்கள். ஆனால் நான் இந்த நேரத்தில் வேண்டிக்கொள்வது, யார் யார் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்களோ அவர்களின் பெயர்களை எல்லாம் சொல்லிவிட்டு, அதற்குப்பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அறிக்கை அளிக்க அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளில் தெளிவாக இருக்கிறது. Under Rule 106,

'Statement may be made by a Minister on a matter of public importance'

திரு. ரா. உமநாத் : அமைச்சர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஸ்டேட்மெண்ட் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லவில்லை. யாரும் சொல்லவில்லை. அவர் எந்தப் பொருள் குறித்து அறிக்கை அளிக்க விரும்புகிறாரோ அந்தப் பொருள் குறித்து ஏற்கனவே இங்கேயுள்ள அங்கத்தினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருப்பதால் அந்தப் பின்னணியில் இங்கே அறிக்கை வைப்பது சரியல்ல. It is meant to defeat the purpose and right of the Members. Our right is suppressed.

இன்னொரு விஷயத்தையும் சொல்லி நான் முடித்து விடுகிறேன். விஷயம் அர்ஜெண்ட்டாக இருப்பதால், நிலைமை சீரடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு, மேலும் நிலைமை மோசமாவதைத் தவிர்க்கும் நோக்கத்தோடு, அதை அமைச்சர் அவர்கள் அளிக்க முன் வருகிறேன் என்று சொல்கிறார்கள். அப்படியானால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏற்



பட்டுள்ள சூழ்நிலையைப் பற்றி இங்கே எத்தனையோ முறை கேட்டும், ஏன் ஸ்டேட்மெண்ட் கொடுக்க அமைச்சர் முன் வரவில்லை? இப்போதுள்ள அந்த ஆவல் அன்றைக்கு எங்கே போயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த ஒரு பிரச்னையிலும் உள்நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது. ஒவ்வொரு உறுப்னருக்கும் அவரவர்கள் கொண்டு வருகிற பிரச்னையில் ஆர்வம் அதிகம் இருக்கும். இன்றுள்ள சூழ்நிலையில் நாட்டில் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்காக அரசு ஒரு அறிக்கை தர முன் வருமானால் அதை அனுமதிப்பது என்பது மரபாக இந்த அவையில் தலைவராக இருந்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : நாளை மறுநாள் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டு விவாதித்த பிறகு, இந்தப் பிரச்னை சம்பந்தமாக அமைச்சர் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், சுமுகமான தீர்வு கண்டதையும் இந்த அவையில் அளிப்பதற்கு உரிமை இருக்கிறது. நேரம் இருக்கிறது. எனவே, ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கு முன்பு இடையில் இந்த அறிக்கை தருவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்ட பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இதற்கிடையில் இந்தப் பிரச்னை மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னையாகவும், சென்னையிலே நடைபெற்ற ஒரு சம்பவமாகவும் இருப்பதால், பொது நன்மையைக் கருதி இந்த அறிக்கை அளிக்க தற்போது அனுமதி அளிப்பதில் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சர் அறிக்கை தருவது என்பது, அரசாங்கத்தினுடைய கருத்தாக அது இருக்கலாம். அரசாங்கத்தினுடைய கருத்து என்று வருகிறபோது, அந்த கருத்தை எல்லா வகையிலும் ஏற்றுக்கொள்வதாகவும் இருக்கலாம் :; ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகவும் அது இருக்கலாம். ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்தை அமைச்சர் அறிக்கை வாயிலாக இந்த அவையிலே வைப்பதாக இருந்தால், அந்தக் கருத்தை மறுத்து சுட்டிக்காட்ட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக இந்தக் கருத்து வருவதாக இருந்தால், அரசாங்கத்தினுடைய கருத்தும், உறுப்பினர்களுடைய கருத்தும்—இந்த இரண்டு கருத்துக்களும் அதிலே இடம்பெற வாய்ப்பு உண்டு. அமைச்சருடைய அறிக்கை என்று வரும்போது இந்த இரண்டு கருத்துக்களுக்கும் இடமில்லாமல் போய்விடுகிறது.

[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கை தந்த பிறகு கூட நாளை மறுநாள் நீங்கள் கருத்து சொல்லலாம்.

திரு. க. அன்பழகன் : இந்த அறிக்கையிலே கருத்து சொல்ல முடியாது. சட்டமன்றம் என்று இருக்கின்ற இந்த அமைப்பில் சில வரன்முறைகளுக்கு உட்பட்டுத்தான் அமைச்சர்களும், உறுப்பினர்களும் செயல்பட முடியும். இவ்வளவு ஆர்வம் காட்டும் அமைச்சரவர்கள் காலையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளச் செய்திருக்கலாம். உறுப்பினர்களும் அதிலே கருத்தைச் சொல்லியிருக்கலாம். ஆனால் அமைச்சர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வலியுறுத்தவில்லை ; நாங்களும் சொல்லவில்லை. காலையிலே அந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தால், அது இங்கே விவாதத்திற்கு உட்பட்டிருக்கும். அப்படிச் செய்யாமல் இருந்துவிட்டு, இப்போது அறிக்கை வாயிலாக கருத்தை வெளியிடுவதாக இருந்தால் அது இங்கே உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையை தகர்க்கக்கூடியதாக இருக்கும் ; உரிமையை சிதைக்கக்கூடியதாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படாமல் இருக்க, உறுப்பினர்கள் உரிமையைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, விதி 106, மூன்றாவது பிரிவில்,

"A Minister desiring to make a statement under sub-rule (1) shall intimate in advance the date on which the statement is proposed to be made and also send a copy of the statement in advance to the Secretary for being placed before the Speaker".

என்று இருக்கிறது. இந்த விதியின்படி நடைபெற்றிருக்குமானால் நீங்களே அறிவித்திருப்பீர்கள். இது பற்றி அமைச்சர் ஸ்டேட்மென்ட் படிக்க இருக்கிறார் ; முன் கூட்டியே அனுமதி பெற்று இருக்கிறார் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் வரும்போதே சொல்லியிருப்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எதிர்க்கட்சித் தலைவர் இப்படி அனுமானிக்கக் கூடாது. அமைச்சர். வந்து கேட்டு, நான் அறிவிக்கலாம் என்று சொல்லியிருக்கிறேன். நாட்டு நன்மையைக் கருதி, இந்த அறிக்கையை அனுமதிக்கலாம். நாடாளுமன்றத்தில் இது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : நாங்களும் நாட்டு நன்மையைக் கருதிதான் அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தோம்.



1981 பிப்ரவரி 7]

THE HON THIRU S. RAMACHANDRAN : It is the question of your powers.

THIRU A RAHMANKHAN: No. No.

THE HON THIRU S. RAMACHANDRAN : I will finish. Adjournment Motions are pending before you. The Speaker has given a ruling in the morning that it will be taken up subsequently. Now the Hon Minister has come out with a statement. The Speaker has allowed it quoting the ruling that when the Adjournment motions were pending before the House that the Hon. Minister can make a statement. The Speaker has got such powers to allow the Ministery to make a statement.

THIRU A RAHMANKHAN : Where is the power ?

THE HON THIRU S. RAMACHANDRAN : This is the ruling which the Hon. Speaker has quoted now.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, நாளையே இதை ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் எடுத்துக்கொள்ளலாமே.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நாட்டிலே இருக்கிற முக்கியமான பிரச்சனை என்று சொன்னார்கள்; மறுக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமை நடந்துவிட்டது, அதற்கு என்ன பரிகாரம் என்பதை எடுத்துச் சொல்வதற்காக' எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அறிக்கை கொடுப்பதாகச் சொல்லியிருந்தால் இன்று காலையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கும் போதே நீங்கள் சொல்லியிருக்கலாம். (மணி யடிக்கப்பட்டது) தயவுசெய்து கொஞ்சம் அனுமதியுங்கள். பின்னால்தான் கிளைமாக்ஸ் வைக்கிறேன்.

[பிற்பகல் 12-40]

தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் 'தரப் போகிறேன்' என்று உங்களிடத்திலே காலையிலேயே சொல்லி இருக்கலாம். அதைக் கேட்ட பின் தாங்களும் இப்படி அமைச்சரவர்கள் அறிக்கை வைக்கப்போகின்ற காரணத்தால் இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று சொல்லி இருக்கலாம். ஆனால் அவ்வளவும் சொல்லிவிட்ட பிறகு இடையில் இந்த நேரத்தில் பார்த்து 'நான் அறிக்கை வைக்கப் போகிறேன்' என்று சொன்னால் எப்படி ? அரசாங்கத்திலே இருந்து அறிக்கை வைத்து விட்டுப் போய்விடுவார்கள், ஆனால் அங்கத்தினர்களுக்கு உள்ள உரிமை மறுக்கப்படுகின்றது.

[திரு. துரைமுருகன்]



அடுத்து இந்த அவைக்குச் சொந்தமாக்கப்பட்டுவிட்ட ஒன்
றிலே அமைச்சரவர்கள் இடையிலே நுழைய தாங்கள் அனு
மதிக்கக் கூடாது.

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு நாளைக்கு ஒரு
ஒத்திவைப்புத்தீர்மானம் தான் எடுத்துக் கொள்ள முடியும் என்ற
நிலை இருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் அவை முன்னவரோ
அவை முன்னவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற
ஒருவரோ எழுந்து அந்த நிலைக்கு விதிவிலக்கு கோரி அதன்படி
அந்த விதியைத் தளர்த்தி இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானத்
தையும் எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற மரபு இந்த அவை
யிலே நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

இவ்வளவு அவசரமான ஒன்று என்கின்றபோது குடந்தை
நிகழ்ச்சியை மட்டும் எடுத்துக்கொண்டு சென்னை நிகழ்ச்சியை
எடுத்துக்கொள்ளத் தாங்கள் தவறியது ஏன்? அப்படித் தவறி
விட்டுவிட்டதோடு மாத்திரமல்லாமல் திங்கட்கிழமை அது
எடுத்துக்கொள்ளப்படும் என்ற உறுதிமொழியையும் அளித்து
விட்ட பிறகு இப்போது திடீரென்று என்ன அவசரம் வந்தது?

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் சொல்வது உண்மைக்கு
மாறானது. அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தங்களுக்கு
முன்னாலே பெண்டிங்கிலே இருக்கின்றது என்று சொன்னார்
கள். அது பெண்டிங்கிலே இல்லை. இங்கே கொண்டு வரப்
பட்டு, அவை முன்னவர் அவர்கள் தான் முன்மொழிந்தார்கள்.
முதலிலே கும்பகோணம் பிரச்சினை வந்ததால் அதை முதலாவது
எடுத்துக்கொள்வோம் இதை இரண்டாவது எடுத்துக்கொள்
வோம் என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னதை நீங்கள்
ஏற்றுக்கொண்டீர்கள். ஆகவே அது பெண்டிங்கிலே இல்லை.
அது சபையினுடைய சொத்தாக மாறிவிட்டது. ஆகவே மாண்பு
மிகு அமைச்சரவர்கள் கூறுவது உண்மைக்கு பொருத்தமுடைய
தல்ல. (குறுக்கீடு).... அப்படி அவர்கள் அறிக்கை கொடுக்க
வேண்டும் என்றாலும் வேறொரு விதியைப் பயன்படுத்தி ஒரு
மணி நேர விவாதத்துக்கு தாங்கள் ஏற்பாடு செய்யலாம். அப்
போது அவசரப் பொது முக்கியத்துவம் என்ற வகையிலே உறுப்
பினர்களும் பங்குகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும். அமைச்ச
ரவர்களும் அறிக்கை வைக்கலாம். ஆகவே ஒரு மணி நேர விவா
தத்திற்கு தாங்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதுவும் இல்லாமல் போனால் உறுப்பினர்களின்
உரிமை நிச்சயமாகப் பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் தலைவரவர்களே,
தாங்கள் எந்த முடிவு வேண்டுமானாலும் எடுக்கலாம். அதிலே
நான் குறுக்கிடவில்லை ஆனால் மாண்புமிகு திரு. சங்கரய்யா
அவர்கள் சொன்னதற்காக ஒரு விளக்கத்தை நான் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

When a member rose on a point of order
and stated that while notice of an adjournment motion
on a particular matter has been given even then it is not taken
up. Notice of adjournment motion has been given but not taken up
for discussion. The Chair has every right to allow the Minister to
make a statement under Rule 82. Nothing prevents the powers of
the Chair. It was never taken up at all. (interruptions).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர்
என்ற முறையிலே எனக்கும் சில உரிமைகள் இருக்கின்றன. அதன்
படி செயல்பட விடுங்கள்.

THIRU R. UMANATH : It should not result in demolishing the
"Urimaigal" of an Hon. Member.

**Mr. Speaker :** I am not going to demolish your "Urimaigal".

THIRU R. UMANATH : Speaker is Speaker. I can give umpteen
rulings. The Speaker is not above the House or the Master of the House.
He is part of the House only. He is subject to the framework of the
rules and rights of the Members. The motion was taken up by you.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மட்டும் தலையிடாமல்
இருந்திருந்தால் அந்த மோஷன் இன்றைக்கு டிஸ்கஷனுக்கு
வந்திருக்கும். ஆகவே நாளைக்கு அதை எடுத்துக்கொள்ள
லாம் என்று முடிவாகிவிட்டது. ரூலிங்கை மதிக்க வேண்டும்.
என்று சொல்லக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
இதை அடுத்த நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற உங்
களது ரூலிங்கை அவர் கடைப்பிடிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU S. RAMACHANRAN : The Hon. Speaker
can change his ruling and he can permit the Minister to make
a statement.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இருக்கின்ற நிலைமையைக் கருதித்
தான் அறிக்கை தரவேண்டும் என்று நாங்கள் அமைச்சர்கள்

என்ற முறையில் விரும்புகிறோம். ஆகவே யாருடைய உரிமையையும் பறிப்பதற்காக நாங்கள் இங்கே அமைச்சர் பொறுப்பை வகிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட பேசும் போது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும் பிறகு அவைக்குத தெரிவித்துக் கொள்ளலாம்'' என்று சொன்னார்கள். பேரவை நடந்துக் கொண்டு இருக்கும்போது, பேரவையில் அரசு எடுக்க இருக்கிற நடவடிக்கையை அறிவிக்க வேண்டாமா? அவையிலுள்ள உறுப்பினர்களை மதிக்கவில்லை என்கிற பிரச்னை பின்னால் வரக்கூடாது. உறுப்பினர்களை நாங்கள் மதிக்கிறோம், அவர்களுக்குச் சொல்லி விட்டுத்தான் செய்கிறோம் என்பதன் காரணமாகத்தான், இந்த அறிக்கையை பேரவையில் அளிக்க அனுமதி கேட்டேன். (குறுக்கீடு) அரசாங்கத்தின் நிலையை விளக்கிக் கொண்டிருக்கிறேன். பின்னால் இந்த அவையை நீங்கள் மதிக்கவில்லை என்கிற வாதம் உருவாவதை தவிர்ப்பதற்குத் தான் இந்த வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர வேறு அல்ல.

திரு. என். சங்கரய்யா : அப்படி என்றால் பேரவைத் தலைவர் அவர்களே, அவர் உரிமையின்படி இன்று செய்யலாம். நாளை மறுதினம் உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் செய்ய அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் தவறான ஒரு அனுமானத்தின் அடிப்படையிலேயே விவாதத்தை வளர்த்துக் கொண்டு போகக் கூடாது. காலையிலே 2, 3 பிரச்னைகள் எழுந்தன. இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன என்று சொன்ன போது இரண்டையும் எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள். ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுத்துக் கொள்ள முடியும், நம் விதிகளில் அப்படித்தான் இருக்கிறது என்று கூறிய பின் குடந்தையைப் பற்றிய தீர்மானம் முன்னதாக வந்ததால் அதை எடுத்துக் கொள்ளலாம் என்றார்கள். எடுத்தாகிவிட்டது. நாம் திங்கள் அன்று எடுப்பதாக இருந்த பிரச்னையின் மீது அரசு ஒரு நடவடிக்கை எடுத்துக் கொள்ள விரும்புகிறது. அதை அவை முன் படிக்க விரும்புகிறார். நாட்டு மக்களின் நன்மையைக் கருதித்தான் அறிக்கையை படிக்க அனுமதி கோருகிறார். ஏற்கனவே இப்படி நடைபெற்றிருப்பதற்கு முன் உதாரணங்க்ள் இருக்கின்றன. பாராளுமன்றத்திலும் நடைபெற்றிருக்கிறது. நானே இந்த சட்டமன்றத்தில் அமைச்சராக இருந்த போதுகூட நடைபெற்றிருக்கிறது ...........





*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அறிக்கை எப்படி இருக்கும் என்று தெரியாமலேயே விவாதித்துக் கொண்டு இருக்கிறோம். ஒரு வேளை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதன் நகலை கொடுத்திருப்பார்கள். இங்கே அளிக்கப்படுகின்ற அறிக்கை நாட்டுக்கு நல்லது என்ற விளைவிற்கு பதிலாக நிலைமை வேறு திசைக்கு மாறிப்போய் வேறு பல விரும்பத் தகாத நிகழ்ச்சிகளை எல்லாம் ஏற்படுத்தக் கூடுமானால், அப்படி நடைபெறாமல் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு இம்மாமன்றத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் உண்டு. அந்த உரிமையைக் காப்பாற்றுகிற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படித்த பிறகு, அதன் மீது எழும் சந்தேகங்களை விளக்கிக் கொள்வதற்கும், இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டும்— வேண்டாம் என்று சொல்வதற்கும் எங்களுக்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்படியும் அதன்மீது ஓர் விவாதம் இருந்தாக வேண்டும் என்று நினைக்கிறார்கள் போலும். அமைச்சர் அளிக்கும் அறிக்கையின் மீது விவாதிக்க நம் விதிகளில் இடம் இல்லை.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ அரசாங்கத் தரப்பிலிருந்து வரக்கூடிய அறிக்கை நாட்டுக்கு நன்மை தரக்கூடிய வகையிலே அமையும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எதிர்க் கட்சியிலே இருக்கிற நாங்களும் நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டித்தான் இங்கே வந்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எந்த எண்ணத்தின் அடிப்படையிலும் பேசவில்லை. அறிக்கையின் நகல் என்னிடம் தரப்பட்டிருக்கிறது. அதை படித்து விட்டுத்தான் சொல்கிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. க. அன்பழகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தாங்கள் அந்த அறிக்கையைப் படித்திருக்கலாம். ஆனால் அது நாட்டுக்கு நன்மை செய்யக்கூடியது தான் என்ற கருத்தை தாங்கள் சொல்கிற போது தாங்களும் ஒரு பார்ட்டியாக ஆகிவிடுவீர்கள். தாங்கள் சபாநாயகர். அந்த மேலான இடத்தை நான் மதிப்பவன். ஆனால் தாங்கள் சொன்ன வார்த்தை கருத்து ஒரு பக்க சார்புடையதாக ஆகிவிட நேரிடும். எவ்வளவு நல்ல அறிக்கையாக இருந்தாலும் கருத்து மாறுபாடு வர இடமுண்டு ...........

[1981 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா வாதங்களுக்கும் இரண்டு பக்கம் உண்டு என்பதை நீண்ட நாட்களாக நான் அறிந்தவன்.

THIRU R. UMANATH: In page 338 of the Practice and Procedure of Parliament, a Minister who desires to make statement has to intimate in advance the date on which he proposes to make the statement. The intimation is required to be sent, as far as possible, at least, one day in advance so that the item may be included in the list of business.

அது இங்கே செய்யப்படவில்லை. அது நம்பர் 1. நம்பர் 2 என்னவென்றால், ஸ்டேட்மென்ட் அவர்கள் செய்கிறார்கள். அதில் கேள்வி கேட்க உறுப்பினர்களுக்கு வாய்ப்பில்லை.

In page 339, instead of asking questions then and there it is open to Members to raise discussion on a Minister's statement by tabling a suitable notice. When the statement is on an important matter—Minister said on an important matter—discussion may be allowed on the same day on which the statement is made.

M. Speaker In page 338 a Minister has a right to make a policy statement at any time. (interruption) I am telling you that in urgent cases, a Minister proposes .............. (interruption).

அரசாங்கம் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்க உரிமை பெற்றது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். நாளை ஞாயிற்றுக்கிழமை, ஆகவே அவை இல்லை. இது நாளை மறுநாள்தான் வரும். அதற்கு முன்னால் இது சம்பந்தமாக ஒரு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம். அரசு எடுத்துக் கொள்ள இருக்கிற நடவடிக்கை பற்றி பேரவை நடந்து கொண்டிருக்கும்போது தெரிவிக்க வேண்டாமா என்று நாளை உறுப்பினர்கள் கேட்க இடம் அளிக்கக்கூடாது என்ற எண்ணத்தில் ஒரு அறிக்கை கொண்டு வந்து சமர்ப்பிக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்). எல்லோரும் உட்காருங்கள். இங்கே இருந்தாலும் அங்கே இருந்தாலும் ஒவ்வொரு செயலும் எல்லோருக்கும் தெரியும். எல்லோரும் ஆட்சியில் உள்ளவர்களோடு தொடர்பு உடையவர்கள்தான். எல்லோருக்கும் தெரியும். நாட்டு மக்களுக்கு நல்லது என்ற வகையில் அறிக்கை அளிக்க அரசாங்கத்தை அனுமதிப்பது எல்லா மாநிலங்களிலும் கடைப்பிடித்து வரும் மரபு.



1981 பிப்ரவரி 7]

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதை கல்வி அமைச்சர் ஏற்றுக் கொண்டார் போல் தெரிகிறது. நாட்டுக்கு நன்மை, மாணவர்கள் பிரச் னையை சுமுகமாக தீர்க்க, சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்ற, இந்த அரசு எந்த நடவடிக்கை எடுத்தாலும், அந்த நல்லவைகளை வரவேற்கத்தான் போகிறோம். எனவே, இந்த அறிக்கையிலே என்ன சொல்லப் போகிறீர்கள்? நடவடிக்கையை எடுத்துவிட்டு, நாளை மறுநாள் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு பதில் அளிப்பது முறையாகும். இப்போது ஒத்திவைப்புத் தீர் மானம் அவையின் சொத்தாக மாறிவிட்டது. நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அறிக்கை வைப்பதைத்தான் நாங்கள் மறுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. நடவடிக்கை எடுத்த பிறகு, ஏன் இப்படி நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்கக் கூடாது.

8. அரசினர் சட்டமுன்வடிவு — தொடர்ச்சி.

வரி செலுத்துவ த மறுக்குமாறு அல்லது தள்ளிப் பே டும ற தாண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ் நாடு 1981 ஆம் ஆண்டு ட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேர வ சட்டமுன்வடிவு எண் 11/1981) —தொ டர்ச்சி.

* திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அவையின் முன்னால் இருக்கின்ற வரி கொடுக்க மறுப்போர் அல்லது தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய காரியங்களைச் செய்பவர்கள்மீது தண்டனை அளிக்கக் கூடிய இந்த மசோதாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கின்ற நாங்கள், அதற்குண்டான காரணங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தச் சட்டத்திலே நில வரி, செஸ், கூட்டுறவுக் கடன், குத்தகை பாக்கி போன்றவைகளைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டாலும் கூட, அவர்களுக்கும் 5 வருடங்கள் தண்டனை, 5,000 ரூபாய் அபராதம் என்றும், அதே மாதிரி 3,000 ரூபாய்க்கு குறையாமல், 2 ஆண்டுகள் தண்டனைக்குக் குறையாமல் தண் டனை கொடுக்கப்படும் என்றும் ஒரு பயங்கரமான அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம், ஏன் இதை ஒரு கறுப்புச் சட்டம் என்றே சொல்லக்கூடிய அளவிற்கு, ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை நினைக் கும் போது, கடந்த காலத்திலே கொண்டு வரப்பட்ட மிசாச் சட்டத்தை விட மோசமான ஒரு சட்டம் என்பதை இந்தச் சட்டத்தைப் படித்துப் பார்க்கும்போது தெரிகிறது. ஆகவே, இந்த சட்டத்தின்படி தண்டனை கொடுக்க வேண்டுமென்று

சொன்னால், இதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்
பட்டால், இந்த அரசாங்கத்தையே, 2, 3 தடவைகள் தண்டித்து
இருக்க வேண்டும். 1977–78-லே கூட குத்தகை பாக்கி செலுத்து
வதிலே இருந்தும், கூட்டுறவுக் கடன்கள் தள்ளிவைக்கப்பட
வேண்டுமென்றும் இந்த அரசாங்கமே தீர்மானத்தை நிறைவேற்றி
இருக்கிறது. அப்படிப்பட்ட சலுகைகளை இந்த அரசாங்கமே
அளித்திருக்கிறது.

குத்தகையைத் தள்ளி வைக்கவேண்டுமென்று கேட்பதும்,
கடனை ஒத்தி வைக்க வேண்டுமென்றும், பின்னால் தவணை
களிலே வசூல் செய்யலாம் என்று சொன்னாலும் கூட குற்றம்
என்ற அளவிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.
இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர்
உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பதில் கூறுகின்ற
காலத்தில், பல விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். விவ
சாயப் போராட்டம் தொடக்கக் காலத்திலே இருந்து, அதன்
தொடர்ச்சியாக வந்திருக்கின்ற பிரச்னைகள் பற்றியும், இந்தப்
பிரச்னைகள் எப்படி கடந்த காலத்திலே உருவாகிக் கொண்டு
வந்திருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம் சொன்னார்கள்.
ஆகவே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக இன்று மின்சார
கட்டணங்கள் வசூல் செய்வதற்கு பலவிதமான வகைகளிலே,
3 மாதங்களுக்கு இவ்வளவு தொகை என்று டிபாசிட் கொடுத்
தாலும், அந்தந்த மாதங்களுக்குரிய பில்களைக் கட்டவில்லை
என்று சொன்னால், மின்சாரத்தைத் துண்டிப்பது போன்ற
சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அதே மாதிரியாக, கூட்டுறவு
சங்கங்களிலே கடன் கொடுக்கின்ற நேரத்திலே, அதற்கு வேண்டிய
விதிகளின் அடிப்படையிலே ஆதாரங்களைப் பெற்றுக் கொண்டு,
கடன் கொடுக்கப்படுகின்றது. அந்தக் கடனைச் செலுத்தத்
தவறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அவர்கள் பொருள்களை
ஜப்தி செய்வது போன்ற ஏனைய சட்டங்களும் இருக்கின்றன.
இவைகள் எல்லாம் இருந்தும், இந்த நியாயமான கோரிக்கையை
கூட சொல்லக்கூடிய இந்த உரிமைகளை பறிக்கக்கூடிய இந்தச்
சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வருகின்றது என்று
சொன்னால், அரசாங்கம் ஏதோ பயந்து, மக்கள் பூராவும்
நமக்கு எதிராகப் போய்விட்டார்கள் என்று சொல்லக் கூடிய
வகையிலே, ஒரு ஜனநாயகம் இல்லாத அந்நிய ஆட்சியாளர்
கொண்டு வரப்படுகின்ற சட்டம்போல் இந்தச் சட்டம் இருக்
கின்றது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**[பிற்பகல் 1–00]**

இந்த வரிகொடா இயக்கம் என்பது இன்று நேற்று ஏற்பட்ட
தல்ல. ஆங்கிலேயர் காலத்தில், அதற்கு முன்னால் மன்னர்கள்
ஆட்சி காலத்தில் கூட இருந்தது. ஆறில் ஒரு பங்கு வரி கட்ட
முடியவில்லை என்று சொல்லி விவசாயிகள் பல கிளர்ச்சிகளை



நடத்தி இருக்கிறார்கள். அரசாங்கமும் நியாயம் என்று ஏற்றுக்
கொண்டு பல வரிகளைத் தள்ளியிருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்
சிக் காலத்தில் வரி அநியாயமாகப் போட்ட காலத்தில், அர
சாங்கம் வசூல் செய்கிற நேரத்தில் அதைக் கட்ட முடியாத
மக்கள் ஒன்றாகச் சேர்ந்து கட்ட முடியாது என்று சொல்லுகிற
நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. எப்படி தொழிலாளர்களுக்கு
நாங்கள் வேலை செய்யமாட்டோம். ஸ்டிரைக் செய்ய உரிமை
இருக்கிறது என்று சொல்ல உரிமை இருக்கிறதோ, அதே போன்று
விவசாயிகளுக்கும் அந்த உரிமை இருக்கிறது. அரசு அழைத்துப்
பேசி முடிவு செய்யவில்லை என்று சொன்னால், உண்மையான
நிவாரணம் கிடைக்கவில்லை என்று சொன்னால், விவசாயிகள்
வரிகொடுக்கமாட்டோம் என்று சொல்லும்போது அதற்கு ஆதர
வான முறையில் இருக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. பலாத்
கார முறையை நாங்கள் ஆதரிக்கவில்லை. எங்கள் கோரிக்கை
ஏற்றுக் கொள்ளுகிற வரை வரி கொடுக்கமாட்டோம் என்று சொல்
வது எந்த வகையில் தவறு என்று தெரியவில்லை. பிரச்சினை
யை நியாயமாகப் பேசித் தீர்க்கவேண்டுமே தவிர, கடுமையான
சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளைப் பயமுறுத்துவது
நியாயம் இல்லை.

மின்சார கட்டணத்தைச் செலுத்துவதைப் பொறுத்தவரை
முதலமைச்சர் அவர்கள் எல்லா விவசாய சங்கங்களையும் கலந்து
பேசினார்கள். இன்றைக்கு பெரும்பகுதி விவசாயிகள் மின்சாரக்
கட்டணத்தைக் கட்டுகிறார்கள். கடன் சம்பந்தமான விஷயங்
களானாலும், மற்ற விஷயங்களானாலும் கட்டவில்லை என்று
சொன்னாலும், காரணம் என்ன என்று சம்பந்தப்பட்ட விவ
சாயிகளை அழைத்துப் பேசி அதுசம்பந்தமாக முடிவுக்கு வந்
தால் விவசாயிகள் கட்டுவதில் எந்த விதமான ஆட்சேபணையும்
இருக்காது.

அரசாங்கம் என்ன மக்களின் செல்வாக்கை இழந்து விட்டதா?
இல்லையே. பலாத்காரமாக கட்டாயமாக அடக்குமுறை மூல
மாக வரி, கடன், இவைகளை வசூலிக்க எண்ணுவது சரியல்ல.
மகாகவி பாரதியார் சொன்னது போல் ''இம் என்றால் சிறை
வாசம், ஏன் என்றால் வனவாசம், என்று இருக்கக் கூடிய முறை
யில் இந்தச் சட்டம் இருக்கிறது.

இந்த வருஷம் விளைச்சல் இல்லை. ஆகவே, கூட்டுறவுச்
கடன்களைக் கட்ட முடியவில்லை அந்த ஆண்டுக்கு ஒத்தி
வைக்கவேண்டுமென்று கேட்டாலே தவறு, அப்படிச் சொல்லு
வதே ஐந்தாண்டு சிறைத் தண்டனைக்கான குற்றம் என்ற
வகையிலே சட்டம் இருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய
திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள். இதுவரையில்
ஆட்சியில் இருந்தவர்கள் யாரும் இப்படி ஒரு சட்டத்தைக்
கொண்டு வரவில்லை. விவசாய மக்கள் நியாயத்தை ஒப்புக்
கொள்வார்கள். கட்ட வேண்டாம் என்று சொல்லுகிறார்கள்

என்பதற்காகக் கட்டாமல் இருக்கமாட்டார்கள். 1 பிளஸ் 1
என்று சொன்னார்கள். மீட்டர் வாடகையைக் குறைத்தார்கள்.
உடனே அவர்கள் கட்டுகிறார்களா இல்லையா? ஆகவே இது
சம்பந்தமாகவெல்லாம் அவர்களுடன் பேசி நியாயமான முடிவு
கண்டால் தாராளமாக ஒப்புக் கொள்வார்கள், கட்டுவார்கள்.

யாரையோ நினைத்துக்கொண்டு விவசாயிகள் மீது பயங்கர
மான அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய
அவசியம் இல்லை. முற்போக்கான சட்டங்களை எல்லாம்
கொண்டு வந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இப்படி ஒரு
மோசமான கறுப்புச் சட்டத்தை, பயங்கரமான சட்டத்தைக்
கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் இதைத்
திரும்பப் பெற்றுக் கொள்ளவேண்டும். சட்டப் புத்தகத்தில்
இப்படி ஒரு கறுப்புச் சட்டத்தை ஏற்றி களங்கத்தை ஏற்படுத்த
வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். சைகை காட்டி
னாலே குற்றமாம். சைகை காட்டினார் என்று யார் சொல்லு
வது? போலீஸ்காரர்கள் போடுகிற கேஸ் எந்த ஆட்சியாக
இருந்தாலும் எதிராக இருப்பவர்கள் மீதுதான் போடுவார்கள்.
நான்-பெயிலபிள் செக்ஷன் கேஸ்தான் அவர்கள் போடுவார்கள்.
அவர்களிடத்தில் இந்தச் சட்டத்தைக் கொடுத்தால் என்ன ஆகும்

வறட்சி ஏற்பட்டுள்ளது கடன் வசூலை ஒத்திவைக்க வேண்டு
மென இந்த மாதிரி ஒரு தீர்மானத்தைப்போட்டு எங்களுக்கு
இவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்று சொன்னால்கூட உடனே
வழக்குப் போட்டுவிடலாம் இந்தச்சட்டத்தைப் பயன்படுத்திப்
செஸ் போன்ற வரிகள், ஸ்தல ஸ்தாபனங்கள் சரியாகச் செயல்
படவில்லை என்பதைப் போன்ற காரியங்கள்பற்றி, அரசாங்
கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கோ அல்லது அந்தக்
காரியங்களைச் சரியாக செய்யவைக்கவோ வரி கொடுக்க
மாட்டோம் என்று சொன்னால் அவர்கள் மீது இந்த பயங்கர
மான பாணத்தை, அடக்குமுறையைப் பயன்படுத்தக்கூடிய
ஆபத்தும் இருக்கிறது.

குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றோ பாக்கியை
ஒத்திவைக்க வேண்டுமென்றோ கேட்டாலும் குற்றம், என்ன
அர்த்தம்? விவசாயிகள் இந்த வருஷம் விளையவில்லை
என்றால், அந்த நேரத்திலே—முன்னாலே கர்ணம், கிராம
அதிகாரிகள் இருந்தார்கள்—இப்போது ரெவின்யூ அதிகாரிகள்
தான் இருக்கிறார்கள், அவர்களைக் கேட்கிறபோது அவர்கள்
விளைந்திருக்கிறது என்று சொன்னால் அதைத்தான் கேட்பீர்
கள், விவசாயிகள் சொல்வதை ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.
அவர்கள் அதைப்பற்றிச் சொன்னால் சிறை, அபராதம் போடக்
கூடிய நிலைமை இந்தச் சட்டத்தினால் ஏற்படுகிறது.



விவசாயிகள் தவறாகப் போகக்கூடிய ஆட்கள் இல்லை.
விவசாயிகள் தவறாகப் போகக்கூடிய குறைகளை நியாயமாக
அவர்கள் தங்கள் கோரிக்கைகளை பேரம் இருக்கிறது என்று சொல்
எடுத்துச் சொல்வதற்கு என்ன கோரிக்கை
ஙுங்கள். அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய ஸ்ட்ரைக் செய்
களைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது, ஸ்ட்ரைக்
வதற்கு உரிமை இருக்கிறது. தொழிலாளர்களுக்கு
செய்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் விவசாயிகள் என்ன
செய்ய முடியும்? ஸ்ட்ரைக் செய்ய மாட்டார்கள், காரணம்
அவர்கள் தொழிலைச் செய்யாமல் இருந்தால் கஷ்டமும், நஷ்ட
டமும் தான் ஏற்படும். அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க
சில காரியங்களைச் செய்யவேண்டுமென்று சொல்வதற்கு விவ
சாயிகளின் கஷ்டங்களை கவனிக்கவேண்டுமென்று கேட்பதற்கு
இந்த முறையை விட வேறு எந்த முறையைப் பயன்படுத்த முடி
யும். இது முன் காலத்திலிருந்து இருந்து இருக்கிறது, ஆங்கி
லேயர் ஆட்சியின்போதே இருந்தது, மகாத்மா காந்தி
அடிகள் விவசாயிகளுக்காக வரிகொடா இயக்கத்தை தலைமை
தாங்கி பர்தோலியி நடத்தியிருக்கிறார்கள். 1966-ஆம் ஆண்டு
காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கூட வரி கொடா இயக்கம்
நடைபெற்றது. அதற்குப் பிறகு அரசாங்கமே ஒப்புக்கொண்டு
பலவரிகளைத் தள்ளுபடி செய்திருக்கிறது. விவசாயிகளின்
கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு நீங்கள் பல வரிகளை நீக்கி
யிருக்கிறீர்கள். அவர்களுடைய கோரிக்கைகளில் நியாயம் என்
பதை நீங்களே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அரசாங்கமே அவர்
களுடைய சிலகோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது ஆகவே
அவர்கள் கேட்பதற்கு உரிமை இருக்கிறது அதிலேநியாயம் இருக்க
லாம்அதைச் சொல்வதற்குக்கூட முடியாமல் இந்தச் சட்டம்
செய்துவிடும். விவசாயிகளுடைய கோரிக்கைகளை அது சம்பந்தப்
பட்டவர்களை அழைத்துப் பேசி தான் முடிவு செய்யவேண்டும்.
திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது இந்த அரசாங்கத்திற்கு
நியாயமாகக் கட்டவேண்டிய வரியைக் கொடுக்கவேண்டும், உங்
களுடைய கோரிக்கைகளை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு
இருக்கிறது என்று வாதத் திறமையின் காரணமாக, பேச்சுத்
திறமையின் மூலமாக மக்களிடம் எடுத்துச் சொல்லலாம், நாங்கள்
சொல்கிறோம் கேட்கிறார்கள். என்றால் திடீரென்று எங்
களுக்கு செல்வாக்கு வந்துவிடவில்லை, நீங்களும் சொல்ல
லாம். நியாயமாக இருந்தால் அவர்கள் கேட்பார்களே. மக்
களை நம்பாமல் ஜனநாயகத்தை மதிக்காமல் அடக்குமுறை
மூலமாக அவர்களுடைய உரிமைகளை மறுக்கக்கூடிய நிலை
மையிலே இங்கு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டம் ஆபத்
தானது மட்டுமல்ல, ஜனநாயக நாட்டிலே எதுவுமே பேசமுடி
யாது என்ற நிலைமை வந்துவிடும், கோரிக்கைகளை ஏற்றுக்
கொள்ளமாட்டோம் ஆனால் வரியைக் கட்டவேண்டுமென்
றால் எப்படி ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் பேசுவது அநி
யாயம், இது தான் நியாயம் என்று நீங்கள் சொல்கிறீர்கள்.

[பிற்பகல் 1—10]

அது மட்டுமல்ல, இன்றைக்கு வரி வசூல் செய்வதற்கோ அல்லது வரிவசூல் செய்யப் போகும் அதிகாரிகளைத் தடுக்கிறார்கள் என்றாலோ அதற்கெல்லாம் பாதுகாப்பு அளிப்பதற்கும், அப்படிச் செய்கின்ற காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அப்படியெல்லாம் இருக்கும்பொழுது இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வருவது சரியா? மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சொன்னது மாதிரி இதுவரையில் யாருமே போடாத சட்டத்தைப் போடுவானேன், இதுவரையில் வசூலாகாமல் போய்விட்டதா? இதுவரைக்கும் இம்மாதிரி போராட்டங்கள் எத்தனையோ நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வந்தது கிடையாது. இது விவசாயிகளுக்கு மிகப்பெரிய பாதகத்தை ஏற்படுத்தும். விவசாயிகளை பாதிப்பது மட்டுமல்ல; நகர்ப்புறங்களிலே அவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக, அநியாய வரி என்று சொல்லி நாங்கள் தர மாட்டோம் என்று சொன்னாலே அது பெரிய குற்றமாகக் கருதப்படும். இப்படி நினைத்தபடியெல்லாம் யார் பேரிலும், எப்பொழுது வேண்டுமானாலும், இச்சட்டத்தின் மூலம் வழக்குத் தொடரலாம். ஆகவே, இப்படியொரு மோசமான கறுப்புச் சட்டத்தை நம்முடைய காலத்திலே கொண்டு வந்து களங்கத்தை ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். வாஸ்தவத்திலேயே நம்முடைய அமைச்சரவர்கள் பல முற்போக்கான சட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். 75—25 வாரம், 4,800 ரூபாய் வருமானம் வரக்கூடிய சிறிய விவசாயிகளுக்கு கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற சட்டமெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதுகாப்பெல்லம் அளிக்கக்கூடிய சட்டங்களைக் கொண்டு வந்த அவர்கள் இப்படியொரு மோசமான, சாதாரண மக்களும் தங்களுடைய உரிமையைப்பற்றிப் பேச முடியாத ஒரு அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் அது மிகமிக வருந்தத் தக்கது. ஆகவே, அதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் எங்களுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வற்புறுத்தி, இப்பொழுதாவது அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான அவசரச்சட்டத்தை முறைப்படுத்த கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





பொதுவாக, அவசரச்சட்டத்தைப் பொறுத்தவரையில், அவசரச்சட்டத்தின் மூலம்தான் ஆட்சியை நடத்த முடியுமென்ற நிலையை அது மத்திய அரசானாலும் சரி அல்லது மாநில அரசானாலும் சரி எடுப்பதை எங்கள் கட்சி ஆதரிக்கவில்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவசரச் சட்டத்தைப்பொறுத்தவரையில், அது எந்தச் சந்தர்ப்பத்தில், எந்தச் சூழ்நிலையில், எந்த உணர்வோடு கொண்டு வரப்பட்டது என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். ஆகவே, அந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நாங்கள் சந்தேகிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டம் அமல் நடத்தப் படுகின்றபொழுது ஏற்படக்கூடிய விளைவுகளைச் சிந்திக்கும்போது தமிழ்நாட்டில் தவறான முன்னுதாரணத்தை உண்டாக்கிவிடக்கூடாது என்பதுதான் எங்கள் கவலை என்பதை நான் கூறிக்கொள்கிறேன். ஏனென்றால், சென்ற காலத்திலெல்லாம் சட்டங்களை அமல் நடத்துவதிலே அதிகாரிகளினுடைய போக்கினால் ஆட்சியிலுள்ளவர்களுக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏற்பட்டது என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம் என்பதால்தான் இதை நான் சொல்கிறேன். சட்டத்தைப் போட்டுவிட்டால் அதை அமல் நடத்துகின்ற பொறுப்பு அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது. ஆனால் அதிகாரிகள் அதை எப்படிக் கையாளுகிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆகவேதான், இந்த அவசரச் சட்டத்தை அமல் செய்யும்போது தமிழ்நாட்டில் அது தவறான முன்னுதாரணமாக ஆகிவிடக்கூடாது என்ற கவலையிலேதான் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரிச்செலுத்துவதை மறுப்பது என்பது இரண்டு வகைப்படும். ஒன்று, தங்களுடைய அரசியல் சுயநலத்திற்காக, நியாயமற்ற முறையில் வன்முறையைத் தூண்டிவிட்டு ஒரு ஆட்சியை முடக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது ஒரு ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்பதற்காகவோ திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற முறை ஒன்று. ஆனால் அதே நேரத்தில் மற்றொன்று இருக்கிறது. தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி, தங்களுடைய அடிப்படையான தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, அதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் ஆட்சியில் இருப்பவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்குக் கையாள்கின்ற முறையும் 'மறுப்பு' என்பதுதான். ஆகவே, நான் முன்னாலே சொன்னவர்களையும், பின்னாலே சொன்னவர்களையும், ஆக இந்த இரண்டு பேர்களையும் ஒரே தரத்தில் தாக்கும் இந்தச் சட்டம் நியாயமானதுதானா என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில், வரி கொடுப்பதைத் தள்ளிப் போடுமாறு வேண்டுதலே குற்றம் என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக ஒன்றை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் நல்ல சட்டங்களைச் எல்லாம் கொண்டுவந்திருக்கிறீர்கள். 5 ஏக்கர்களுக்கு குறைவாக நிலம் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்குக் கடன் ரத்து என்று சொல்லியிருக்கிறீர்கள் ஆனால் அதே நேரத்தில் எனது தொகுதி திருப்புவனம் பகுதியில் விவசாயிகளிலே ஒரு பகுதியினராக கொடிக்கால் விவசாயிகளுக்கு அந்தச் சலுகை போய்ச் சேரவில்லை. கொடிக்கால் விவசாயிகள் என்றால் அவர்கள் நிலச் சொந்தக்காரர்கள் அல்ல; பத்து, இருபது பேர் சேர்ந்து நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, அதிலே விவசாயம் செய்து அதில் மூன்று வருடங்கள் தொடர்ந்து பாடுபட்டால்தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற பலனை அடைய முடியும்.

அவர்கள் விவசாயம் செய்த இரண்டாவது ஆண்டில்தான் பலனைப் பெறுகிறார்கள். இரண்டாவது ஆண்டில் அவர்களுக்குப் பலன் கிடைக்க வில்லையென்று சொன்னால், அல்லது வெள்ளத்தால், புயலால் பாதிப்பு ஏற்பட்டால், அவர்கள் முழுமையாக பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு நிலம் சொந்தம் கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு சமீபத்தில் அரசாங்கம் அறிவித்த சலுகைகள் போய்ச் சேரவில்லையென்ற ஒரு நிலை உள்ளதை நான் அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால், அதற்கான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல. அப்படி பாதிக்கப்பட்டுள்ள கொடிக்கால் விவசாயிகளுக்கு இன்றைக்கு அவசரஅவசரமாக ஜப்தி நோட்டீஸ்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களைப் பார்த்து நாங்கள் பேசிவிட்டு, அரசோடு பேசுகிறோம் நீங்கள் அவசரப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டு வந்து, அரசுக்கு சொன்னால் கூட, அப்படிப்பட்ட நல்ல கோரிக்கைகளை வைத்தால் அவர்கள் வரி கட்டாதவர்களை, கடன் கட்டாதவர்களை, நிறுத்தி வைக்கச் சொல்கிறார்கள், தள்ளிப் போடச் சொல்கிறார்கள் என்று சொல்லி, எங்களைக் கூட இந்தச் சட்டம் பயமுறுத்துகிற அளவுக்கு இருக்கிறது. வரி கொடுப்பதை மறுப்பதையும் தள்ளிப் போடு என்று கூறுவதையும், ஒன்றாக பாவித்து தண்டனை வழங்கும் இந்தச் சட்டம் இருக்க வேண்டுமா என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு. இன்றைக்குப் பல சந்தர்ப்பங்களிலே நாம் பார்க்க முடிகிறது. சட்டமன்றத்திலே அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

முதலமைச்சர் சொல்லுகிறார், சில கோரிக்கைகளை நிச்சயமாக நாங்கள் பரிசிலனை செய்வோம், நடவடிக்கை எடுப்போம், விவசாயிகள் சொத்துக்களை ஜப்தி செய்ய





மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், கிராமப் பகுதியிலே பார்ப்போமானால், அதற்கு நேர் மாறாக அதிகாரிகள் ஜப்தி செய்து கொண்டிருப்பதை நாம் பார்க்க முடிகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களிலே அரசினுடைய கவனத்திற்கு இதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பின்னால், அந்தக் குறிப்பிட்ட பகுதியிலே இருக்கிற எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு, அதன் காரணமாக அமைச்சர்கள் வேறு நடவடிக்கை எடுத்தால், அது நிறுத்தப்படுகிறது. ஆகவே, ஆட்சியிலிருப்பவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெறவேண்டுமென்பதற்காகவோ, அல்லது ஆட்சியாளர்கள் தங்களைத தவறானவர்களாக கருதிவிடக்கூடாது என்பதற்காகவோ, இவர்கள் ஒன்று சொன்னால், அதை இரண்டாகப் பிரித்துக் கொண்டு செயல்படுகின்ற அதிகாரிகள் இருக்கிற காலம் இது என்பதை மறந்து விடக் கூடாது. ஆகவே, அப்படிப்பட்ட சட்டத்தை எந்த முறையில் அமுலாக்கப் போகிறோம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையிலே இந்தச் சட்டத்திலே தண்டனை மிக அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ரூ. 5,000 அபராதம் 5 வருஷ சிறை என்று சொல்லுவது, தமிழ்நாட்டிலேயே இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான, ஒரு கடுமையான தண்டனை விதிக்கக்கூடிய சட்டத்தை நாம் இதுவரை கொண்டு வரவில்லையென்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு வரி செலுத்துவதைத் தடுக்கின்றவர்கள் அல்லது கொடுக்க மறுக்கின்றவர்கள் அல்லது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும் போது அதைத் தடுத்து நிறுத்த முயற்சிப்பது, அரசாங்க அதிகாரிகளை வேலை செய்ய விடாமல் தடுப்பதுபோன்ற குற்றத்தைச்சாட்டி, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே, இதற்காக எற்கனவே சட்டம் இருக்கிறபொழுது, ஒரு விசேஷமான சட்டம் கொண்டு வந்து இந்தக் கடுமையான தண்டனை விதிப்பது அவசியம்தானா என்பனத மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1-20]

திரு. ஏ. சாகுல் ஹமீது: மண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, எங்கள் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக இந்தக் கருப்புச் சட்டத்தை வாபஸ் பெறும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய அரசு கொறடா அவர்கள் உதாரணம் சொன்ன கூர் தீட்டிய அரிவாளைக் கொண்டு விவசாயிகள் மீது இன்றைக்குப் பாய்ச்ச வேண்டாமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த விவசாயிகள் பிரச்சினையிலே எவ்வளவு ஒரு மோசமான கருப்புச் சட்டத்தை உபயோகப்படுத்தி, ஒரு அடக்கு முறையை உருவாக்குச் சந்தர்ப்பத்தை

இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே விவ சாயிகள் தங்களுடைய கோரிக்கை எடுத்துச் சொல்ல முடியாத அளவிற்கு, மோசமான அளவுக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன் விவசாயிகள் என்ன கூறினாலும் என்ன ஊர்வலம் நடத்தினாலும் அதனை அடக்கு முறையிலே அடக்க அரசு முயற்சிக்கிறது. அதி காரிகளுடைய சூழ்ச்சிதான் இதற்குக் காரணம். அதே நேரம் திலே இந்த வரிகொடாத இயக்கத்திற்கு இந்த அரசு அதிகாரிகள் தான் காரணம் என்று கூறிக்கொண்டு இந்தக் கருப்புச் சட்டம் பாதகமான சட்டம். அதே நேரத்திலே விவசாயிகள் உரிமை களைப் பறிப்பதோடு அரசியல் கட்சிகளையும் வஞ்சம் தீர்ப்பதற் யாக அவர்கள் இந்தக் கோரிக்கையையும் எழுப்புவதை மறுப் பதற்காக வந்துள்ள இந்தக் கருப்புச் சட்டத்தை இந்த அரசு வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எங்கள் கட்சியின் சார்பாக இக்கருத்தைத் தெரிவித்துக்கொண்டு பேச சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1980-ம் ஆண்டு வரி செலுத்துவதை மறுக்கு மாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதை தடுப்பதற் கான ஒரு அவசரச் சட்டத்தை விவசாயிகளின் மீது அக்கறை உள்ளதாக சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய ஒரு அரசு, பெரும் பகுதியான விவசாயப் பெருமக்களின் மத்தியிலே வாக்குறுதி களைப் பெற்று, அவர்களுடைய வாக்குகளைப் பெற்று, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய ஒரு அரசு, விவசாயிகளுக்கு விரோ தமாக விவசாயிகளின் அடிப்படை உரிமைகளை பறிக்கின்ற வகையிலே விவசாயிகளுக்கு எதிராக, அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடுகிற கறுப்புச் சட்டத்தை கொண்டு வந்திருக் கிறது. இந்த சட்டத்தை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, விவசாயிகளின் நன்மைக்காக, சமுதாயத்தின் நன்மைக்காக ஜனநாயக உரிமைகள் பாது காக்கப்படவேண்டுமென்ற காரணத்திற்காக நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

இங்கே, சட்டம் கொண்டு வருவதற்கான காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அண்மையிலே சில கிளர்ச்சிகள் நடத்தினார்கள். அப்படி கிளர்ச்சி நடத்தியதன் காரணமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு வரவேண்டிய வருமானம், அதைப் போலவே, அரசுக்கு வரவேண்டிய ரெவின்யூ, வருமானம், அரசுக்கு வேண்டிய வரிகள் தமிழக மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய பாக்கிகள். கூட்டுறவு சங்கங்களுக்கு வர வேண்டிய பாக்கிகள் இவைகள் எல்லாம் வசூல் செய்வதில் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. இவைகள் வசூல் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று



கேட்டால் விவசாய சங்கத்தைச் சேர்ந்த சிலர் தலைமை தாங்கி கிளர்ச்சிகளை தூண்டிவிட்டதனால்; அதனால் அரசாங்கம் வசூல் செய்ய முடியவில்லை என்று சட்டத்திலேயே ஒரு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்போலவே, இரண்டாவதாக ஒரு காரணம் சொல்லியிருக்கிறார்கள். சர்க்காருக்கு செலுத்த வேண்டிய வரியை அதைப்போல அரசு நிர்வாகங்களுக்குச் சேரவேண்டிய வருமானங்களை வசூலிக்க அரசு அதிகாரிகள் போனால் வன்முறையைப் பயன்படுத்தி அரசு அதிகாரிகளை தாக்குகிற முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அவைகளை எல்லாம் தடுப்பதற்காகத்தான் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே, முதலிலே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இது மாதிரி, இந்தச் சட்டத்திலே கூறியுள்ளது போன்று தூண்டி விட்டதாக குற்றம் சுமத்தப்படுமானால் "ரிகரஸ் இம்ப்ரிசன் மெண்ட்" ஐந்தாண்டுகளுக்கும், ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் என்றும் பீனல் செக்ஷனில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது கூட நான் சொன்னேன். ஏற்கனவே, பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. அரசு அதிகாரி களை யாராவது வன்முறையில் ஈடுபட்டு தாக்க ஆரம்பிப்பார் களேயானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டமிருக் கிறது. கோட் ஆப் கிரிமினல் பிரொசிஜர், 1973 இருக்கிறது. அதில் அதை வாசித்து காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

I.P.C. 353: Whoever assaults or uses criminal force to any person being a public servant in the execution of his duty as such public servant or with intent to prevent or deter that person from discharging his duty as such public servant, or in consequence of anything done, or attempted to be done by such person in the lawful discharge of his duty as such public servant shall be punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both.

இந்தியன் பினல் மெக்காலே அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தியன் பினல் கோடில் அரசு ஊழியர்கள் தாக்கப்படுவார்களேயானால், தாக்கு பவர்களின் மீது நடவடிக்கை எடுக்க வழி வகை இருக்கிறது.

திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் சார், வேறு சட்டம் இருக்கிறபோது இது தேவையில்லை என்று, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார் கள். இந்திய அரசுக்கு எதிராகவும் இந்திய அரசின் செக்யூரிட்டிக்கு எதிராகவும் ஈடுபடுபவர்கள் மீது ஐ.பி.சி. 124 (எ) இருக்கும்போது, நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் பாராளுமன்றத்தில் வந்த போது, இந்தக் கருத்தை பாராளு மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தெரிவிக்கவில்லையே, ஏன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினைகளை எல்லாம் பொதுக்கூட்டத்திலே விவாதியுங்கள். சட்டத்தைப் பற்றி மட்டும் இங்கே பேசுங்கள்.

**திரு. துரைமுருகன் :** திரு. மணிமாறன் அவர்கள் பெருமநல்லூர், திருத்தணி துப்பாக்கிப் பிரயோகம் பற்றியெல்லாம். பேசினார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது அவர்களுக்கு அனுமதி அளித்ததுபோல், திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் பேச அனுமதி அளிக்கவேண்டும்.

**திரு. ஆர். மணிமாறன் :** அரசு ஊழியர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அதனால்தான் அரசு ஊழியர்கள் எந்த முறையில் அங்கெல்லாம் தாக்கப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட அதைக் குறிப்பிட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட் பற்றி ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே சட்டங்கள் இருந்த போதிலும், நேஷனல் செக்யூரிட்டி ஆக்டின் கீழே கைது செய்யப் பட்டால்தான், சமூக விரோதிகள் ஜாமீனில் வராமல் இருக்க முடியும். இந்தியாவில் ஆங்காங்கு வகுப்புக் கலவரங்கள், அஸ்ஸாம் போன்ற பகுதிகளில் வகுப்புக் கலவரங்கள் சமூக விரோதிகளால் நடத்தப்படுவது அதிகமாக இருக்கிது என்ற காரணத்தால், ஏற்கனவே இருக்கக்கூடிய இந்தியன் பீனல் கோட் படி அவர்களைக் கைது செய்தால் அவர்களை அதிக நாட்கள் கைது செய்து வைத்து இருக்க முடியாது. மேலும், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் அந்த நிலைமைகள் சீர்செய்யப்படும் வரையில், கொஞ்ச காலத்திற்குத்தான் இந்தச் சட்டம் அமலில் இருக்கும் என்ற வாக்குறுதியை பாராளுமன்றத்தில் அளித்ததால், அந்த கன்டிஷன் அடிப்படையில்தான் நாங்கள் அதற்கு ஆதரவு அளித்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தச் சட்டம் சட்ட விரோதமானது, என்று கண்டித்துவிட்டு, நாட்டில் உள்ள அசாதாரணமான நிலையின் காரணமாகவும் மத்திய உள் துறை அமைச்சர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் ஆதரவு அளித்து இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அதிகாரிகள் தாக்கப்பட்டால், என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது இந்தியன் பீனல் கோடில் இருக்கிறது. அதைப்போலவே, மானுயுவல் ஆப் ரெவின்யூ ரெக்கவரி என்கிற சட்டத்திலும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பல சட்டங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் விளக்கிக்கொண்டு இருப்பதற்கு நேரம் இல்லை. இந்தச் சட்ட முன்வடிவின் மீது மட்டும் கருத்துச் சொன்னால் போதுமானது.



**திரு. அ. ரகுமான்கான் :** நான் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். ரெவின்யூ ரெகவரி ஆக்டில் ஏற்கனவே அர்ரியர்ஸ் கலெக்ட் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இம்மூலவயில் ப்ராபர்ட்டீஸ் ஜப்தி செய்யலாம், ப்ராசிக்யூஷன் ப்ரொசீடிங்ஸ் எடுக்கலாம் என்று இருக்கிறது. அதைப் போலவே, மின் கட்டணங்களைச் செலுத்தவில்லையென்றால், எலெக்டிரிசிடி ஆக்டின் கீழ் நடவடிக்கை எடுக்கவும், சர்வீஸ் டிஸ்கனெக்ஷன் செய்யும் வழி இருக்கிறது. அப்படியிருந்தும் கூட புதிதாக இந்தச் சட்டம் கொண்டு வருவது சரியல்ல.

வன்முறையாளர்களை தண்டிக்கவும், வன்முறைச் செயல்களைத் தடுப்பதற்கும் இந்தச் சட்டம் வழிவகை செய்யும் என்று சொல்லுகிறீர்கள் வன்முறை செய்தவர்களை தண்டிக்க என்ன நடவடிக்கையை நீங்கள் இதுவரையில் எடுத்தீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் ஆகிறது. சட்டத்தின் நோக்கத்தைப் பற்றி மட்டும் பேசவேண்டும். அதில் இருந்து "டிவியேட்" செய்து பேசவேண்டாம். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** நான் முடித்து விடுகிறேன். வன்முறையைப் பொறுத்தவரையில், அதற்கு விளக்கம் தர முடியாது. வன்முறையைத் தூண்டுபவர்களுக்கு தண்டனை என்று பொதுவாகச் சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. யார் வன்முறையைத் தூண்டுபவர்கள்? உங்களுக்குப் பிடிக்காதவர்களை வன்முறை என்கிற வளையத்திற்குள் கொண்டு வந்து தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் உள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை இந்திரா அம்மையார் கலைத்தபோது ஒரு ஊர்வலம் நடத்தப்பட்டது. (மணியடிக்கப்பட்டது). நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படியே சொல்லி அதிக நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். இன்றைக்கு எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், முஸ்லீம் லீக் உள்பட—தங்களுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். இப்போது, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பேசுவார்கள்.

சபையின் முன் அனுமதியோடு, அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[பிற்பகல் 1-30]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை

எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும், இந்திய மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் இந்த அரசு
நல்ல சட்டங்களை எல்லாம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்
கிறது ; விவசாயிகளுக்கு பல நன்மைகளை செய்திருக்கிறது ;
பல கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறது என்றெல்லாம்
சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. எந்த அரசும் செய்
யாத பல நல்ல காரியங்களை செய்திருப்பதாக இந்திய கம்
யூனிஸ்ட் கட்சித் தலைவர் இங்கே தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள்
பேசும்போது விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற அரசு என்று
சொல்லி, நன்மை செய்கின்ற அரசு இப்படிப்பட்ட சட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால்
உண்மையில் விவசாயிகளுக்கு நன்மை செய்கிற அரசா இல்லையா
என்பதை கடந்த கால சரித்திரம்தான் நாட்டு மக்களுக்கு
எடுத்துக்காட்டும். அது மட்டுமல்ல. இருக்கின்ற நிலைமைகளை
எடுத்துச் சொல்வதானால் எந்த அரசும் செய்யாத நல்ல
காரியங்களை இந்த அரசு விவசாயிகளுக்கு செய்திருக்கிறது என்
பதற்கு பல உதாரணங்களை உங்களிடம் என்னால் சொல்ல
முடியும்.

அதே நேரத்தில் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்,
ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கிற அரசு இன்றைக்கு
யார், யாருக்கு எப்படி, எப்படி நடந்துகொள்ள வேண்டும்
என்றால், இன்றைக்கு ஜனநாயகப்படி எல்லோருக்கும் பாது
காப்பு கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் பாதுகாப்பு
கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது இன்றைக்கு விவ
சாயிகள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்றால் 50 இலட்
சத்திற்கு அதிகமாக இருக்கிறார்கள். இந்த 50 இலட்சத்திற்கும்
அதிகமாக இருக்கிற விவசாயிகளில் யார், யார் வரி கட்ட முன்
வருகிறார்கள், யார், யார் முன் வரவில்லை என்பதை பார்க்கும்
போது மைனாரிட்டி, மெஜாரிட்டி இருசாராருக்கும் பாதுகாப்பு
கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருக்கிறது.
மெஜாரிட்டி என்று சொல்லுகின்ற பெரும்பான்மையோரிடமிருந்து
சிறுபான்மையோரை காப்பாற்றுவதற்கும் இந்த அரசுக்கு
கடமை இருக்கிறது ; அதைப் போல மைனாரிட்டி என்று சொல்லு
கின்ற சிறுபான்மையோரிடமிருந்து பெரும்பான்மையோரை காப்
பாற்றுவதற்கும் இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. அந்த
அடிப்படையிலே இன்றைக்கு எண்ணிப் பார்க்கும்போது 50
இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளில் பெரும் விவசாயிகள்
8 இலட்சம் பேர்கள்தான். ஆனால் இன்றைக்கு சிறு விவசாயி
கள் எல்லாம் வரி கொடுப்பதற்கு முன்வருகிற நேரத்தில் அவர்
களை தடுத்து நிறுத்தி, அதனால் சங்கடப்படுவது யார் ? பெரிய
விவசாயிகள் பணம் கட்டாவிட்டால், ஆயிரக்கணக்கில் சேர்ந்து



விட்டாலும் அவர்களால் கட்ட முடியும். ஆனால் சிறிய விவ
சாயிகளை கட்ட வேண்டாம் என்று சொல்லி, அவர்களுக்கு
சமுதாய கட்டுப்பாடு வைத்து, கட்டாமல் தடுத்து நிறுத்தி,
அதனால் 100, 200, 300 ரூபாய் கட்ட வேண்டியவர்கள் 1,000
ரூபாய் 2,000 ரூபாய் என்று வரும்போது கட்டமுடியாமல் பின்
னால் சங்கடப்படுகிறார்கள். அவர்களைக் காப்பாற்றுகிற
கடமை இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தை மட்டும் வைத்துக்
கொண்டு இந்த அரசு இதைச் செய்கிறது என்று நீங்கள் பேசு
வதை விட்டுவிட்டு, கடந்த காலத்தில் இந்த அரசு எப்படி,
எப்படி சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவந்து, எப்படி எப்படி
எல்லாம் நிறைவேற்றியது ; கடந்த காலத்தில் விவசாயிகளுக்கு
என்னென்ன நன்மைகளைச் செய்தது என்பதை எல்லாம் நீங்கள்
எண்ணிப் பார்க்க வேண்டும்.

நேற்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே பேசுகின்ற
போது விவசாயிகளுக்கு நாங்கள் என்னென்ன நன்மைகளைச்
செய்திருக்கிறோம், சலுகைகள் செய்திருக்கிறோம் என்பதை
எல்லாம் சொன்னார்கள். விவசாயிகளுக்கு சலுகை செய்வது
என்கின்ற வகையில் 42 கோடி ரூபாய் தான் செலவு செய்ய இருந்
தோம் ஆனால் அது 72 கோடி ரூபாய்க்குபோய்க்கொண்டிருக்கின்றது
என்று சொன்னார்கள். அப்படியானால் இந்த அரசு விவசாயி
களுக்கு நன்மை செய்கின்ற அரசா இல்லையா என்பதை நீங்கள்
எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு.
அழகர்சாமி அவர்கள் பேசுகின்ற போது யாரும் கொண்டுவராத
இந்த சட்டத்தை இந்தச் அரசுதான் கொண்டு வந்திருக்கின்றது
என்று சொன்னார்கள். என்னென்ன காரியங்களை இந்த அரசு
செய்த பிறகு வேறு வழியில்லாமல் இந்த சட்டத்தைக் கொண்டு
வந்திருக்கின்றது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கி
றேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்தனையோ முறை புயல்
அடித்தது, வெள்ளம் வந்தது. ஆனால் அவற்றினால் 50 சத
வீதம் வரை பாழடைந்தாலே அவர்களுக்கெல்லாம் தண்ணீர்
தீர்வையைத் தள்ளிப்போட வேண்டும் என்று இந்த அரசுதான்
அறிவித்திருக்கின்றது. ஆனால் இதற்கு முன்பிருந்த சட்டம்
எப்படி இருந்தது என்றால் 2 அணா அல்லது 13 பைசா அதாவது
2½ கலம் ஒரு மாவுக்கு என்று இருந்தது. ஆனால் அது இப்
போது 10 கலம் என்று ஆக்கப்பட்டு அந்த அளவிலே சலுகை
தரப்படுகின்றது என்பது உங்களுக்குத் தெரியும். அது மட்டு
மல்ல முன்பு 2 அணா அல்லது 13 பைசா என்று இருந்ததை
37 பைசா அல்லது 50 சதவீதம் என்ற அளவுக்கு நஷ்டம் வந்தா
லும் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டத்தைக்
கொண்டு வந்தது இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். காய்கறித் தோட்டம் திராட்சை, வாழை, வெற்றிலை போன்ற பயிர்களுக்கெல்லாம் இந்த அரசு நன்மை செய்திருக்கின்றது.

அடுத்து ஒன்றைச் சொன்னால் இது செத்த கடன் என்று சொல்வார்கள். செத்த கடன் என்று சொல்லப்படுகின்ற தக்கா விக் கடனை முன்பு வேறு எந்த அரசும் ரத்து செய்யவில்லை. இந்த அரசு வந்த பிறகு தான் தக்காவிக் கடனை ரத்து செய்து இருக்கின்றது. முதலில் 5 கோடியே 42 இலட்ச ரூபாயும், இரண்டாவது முறையாக 20 கோடியே 60 இலட்சம் ரூபாயும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்றைய தினம் மொத்தமாக நன்மை அடைந்த விவசாயிகள் 9 இலட்சத்து 15 ஆயிரம் பேர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுக் கடனைப் பொறுத்த வரையில் குறுகியக் காலக் கடனை மத்திய காலக் கடனாக ஆக்கி அதாவது இரண்டு ஆண்டுகளிலிருந்து ஆறு ஆண்டு வரையிலும் கட்டலாம் என்று இந்த அரசு அறிவித்திருக்கின்றது.

அடுத்து ரிசர்வ் பேங்குக்கும் இந்த அரசுதான் அவர்களுக்காக ஜாமீன் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதாவது விவசாயிகள் கட்டாவிட்டால் அரசுதான் கட்ட வேண்டும். அந்த வகையில் ஜாமீன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அடுத்து சிறிய விவசாயிகளுக்குச் செய்த நன்மையைப் பொறுத்த வரையில் 42 கோடி என்பது 50 கோடியாகி பிறகு அது 73 கோடியாக ஆகிவிட்டது என்று தமிழக முதல்வர் அவர்கள் நேற்றுச்சொன்னார்கள். ஆனால் அதன் மூலம் நன்மை அடைந்தவர்கள் 4 இலட்சத்து 56 ஆயிரம் பேர்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து வரு கின்ற 23 கோடி என்பதைப் பொறுத்த வரையில் நன்மை நன்மை அடைந்தவர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கை எல்லாம் சொன்னால் இன்றைக்கு விவசாயிகளுக்கு நன்மை செய்கின்றது இந்த அரசு என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். மேலும் விவசாயிகளை மற்றவர்களிடத்திலே இருந்து காப்பாற்ற வேண் டிய பொறுப்பும் இந்த அரசுக்கு இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1–40]

அதேபோல்தான் இன்றைக்கு உங்களுக்கு மின் வாரியத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், 16 காசு மின் கட்டணம் என்று இருந்ததை, சிறிய விவசாயிகளுக்கு 12 காசு என்றும், பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்றும் இன்றைக்கு கொண்டு வரப் பெற்றிருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை நம் மாநிலத்திற்கு வாங்குகிறபோது 1975-ஆம் ஆண்டு 9 பைசா வுக்கு வாங்கினார்கள். இன்றைக்கு 28 பைசாவிற்கு வாங்கு கிறோம். 28 பைசா என்று வாங்குவது மட்டும் அல்ல, அந்த



மின்சாரம், பம்பு செட்டுக்கு கொண்டு போகிறபோது ஒரு யூனிட் டுக்கு மொத்தம் 45 பைசா ஆகிறது. ஆக இன்றைக்கு மாநில அரசு சிறிய விவசாயிகளுக்கு 12 பைசா என்றும் பெரிய விவ சாயிகளுக்கு 14 பைசா என்றும் கொடுக்கிறது. இப்படி வாங்கி நஷ்டத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி நஷ்டப்பட்டுக் கொண்டு அதை நாங்கள் செய்து வரு கிறபோது யாருக்கோ பயந்துக் கொண்டுதான் அரசு இந்தக் காரியத்தை செய்கிறது என்று பேசினார்கள். யாருக்கோ பயந்து அல்ல. யாரிடமும் சிறு விவசாயிகள் ஏமாந்துவிடக் கூடாது அவர்கள் காப்பாற்றப்படவேண்டுமே என்பதற்காகவும், காப் பாற்றுவது என்பது நம்முடைய ஜனநாயக முறையிலே தேர்ந் தெடுக்கப்பெற்ற ஒரு அரசினுடைய பொறுப்பு என்பதற்காக வும் தான் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு மணிமாறன் அவர்கள் சொல்கிற போது கூட சொன்னார்கள். மிக கடுமை யாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எப்படி இருந்தாலும் வெளியிலே என்ன நடக்கிறது என்று நான் உங் களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும் என்று சொன்னால், சில துண்டு நோட்டீஸ்கள் வினியோகிக்கப் பெறுகின்றன. என்ன வென்று, ''அதிகார வர்க்கமே—என்று அரசை அழைத்து, விவ சாயிகளைப் பிரித்து ஆளும் சூழ்ச்சியோடுதான் தமிழக அரசு 60 கோடி ரூபாயை ரத்து செய்திருப்பதாக சொல்கிறது.— ஆனால் இந்தப் பணத்தை ரத்து செய்வதாக சட்டமன்றத்தில் சொன்னபோது, இதற்கான நிதி ஆதாரம் காட்டப்பெற்றதா? என்று கேட்டார்கள். அப்படி நிதி ஆதாரம் கூட காட்டப்பெற முடியாத நிலையில் 60 கோடி ரூபாய் கடனை ரத்து செய்திருக்கிற போது, விவசாயிகளை பிரித்தாளும் சூழ்ச்சி'' என்று நோட்டீஸ்கள் அச்சடிக்கப்பெறுகின்றன. அதிலே மேலும், ''60 கோடி ரூபாய்க்குச் சலுகை என்பது வெறும் கண் துடைப்பு சலுகை. இதனை சங்கம் ஏற்கவே இல்லை. அதனால் விவசாயிகள் எந்தவித கட்டணமும் கட்டப்போவது இல்லை. கட்டணம் வசூலிக்க வந்தால், முயன் றால், இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு விவசாயிகள் பொறுப் பல்ல.''

இதனை நிச்சயமாக சொல்கிறேன்—உணர்ந்து சொல்கிறேன்— சிறு விவசாயிகள் செய்திருக்க மாட்டார்கள். இது மட்டுமல்ல. அரசு அதிகாரிகளுக்கு கடிதம் மூலமாக எழுதியிருக்கிறார்கள். யாரும் வரக்கூடாது மின் கட்டணத்தையோ, வரி பாக்கியை யோ வசூல் செய்ய—என்று. பேர் எல்லாம் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன். விவசாயிகளின் தலைவர் தாசில்தாருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அதன் நகலை எல்லா அரசு அதி காரிகளுக்கும் அனுப்பியிருக்கிறார். 'நாங்கள் 9 அம்ச திட்டத் தை அமுல் படுத்தியிருக்கிறோம். நாங்கள் எந்த வரியையும் தரமாட்டோம். மின் கட்டணம் செலுத்தமாட்டோம். இவை

களை வசூல் செய்ய வந்தால், இதனால் ஏற்படுகிற விளைவுகளுக்கு நாங்கள் ஜவாப்தாரி அல்ல'' என்று எழுதியிருக்கிறார்கள். தாசில்தாருக்கு மட்டுமல்ல, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள். எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்ல, ஆளுநருக்கும் எழுதியிருக்கிறார்கள். இவைகளில் எல்லாம் ஒரே மாதிரிதான் குறிப்பிடப்பெற்றிருக்கின்றன. 'அரசு கடன் நிலவரி, வீட்டு வரி, மின் கட்டணம், கூட்டுறவு கடன் இவைகளையெல்லாம் யாரும் வசூலிக்க வரக்கூடாது, வந்தால் ஏற்படுகிற விளைவுகளுக்கு நாங்கள் காரணம் அல்ல' என்று எழுதியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் கடிதங்கள் எழுதினால் வேறு என்ன செய்வது என்பதை நீங்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்

அதேபோல இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆராய்ச்சி மணி கூட இருந்தது. அது பத்திரிகையிலே வந்த செய்தி. பத்திரிகையிலே வந்த செய்திகளை சொல்லக் கூடாது என்று சொல்வார்கள் ஆனால் அந்தச் செய்தியை இதுவரை யாரும் மறுக்கவில்லை. அங்கே ஆராய்ச்சி மணி கட்டப்பெற்றிருக்கும், அரசு அதிகாரிகள் யாராவது வரி வசூலுக்கு வந்தால் உடனே யாராவது மணி அடிப்பார்கள். அந்த மணி அடிக்கப்பெறும்—எல்லோரும் அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வார்கள் என்று செய்தி வந்திருக்கிறது.

அதை யாரும் இதுவரையில் மறுக்கவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த அரசு மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நாமக்கல்லில் 14—8—1980 அன்று பேசப்படுகிறது. ''காவல் நிலையத்திற்கு செல்கிறபோது தனியாகச் செல்லக் கூடாது. இருபது பேர்களாவது செல்லவேண்டும்'' என்று அதிலே பேசியிருக்கிறார்கள். அதேபோல் இங்கே சொன்னார்கள். ப்ரெஞ்ச் புரட்சிபோல், ரஷ்யப் புரட்சிபோல் நமக்கும், தமிழ்நாடு விவசாயிகள் தங்கள் உரிமையைப் பெற இதையெல்லாம் செய்ய தயாராயிருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இதைச் சொல்வதால், பேசி வருவதால், இந்த அரசாங்கம் பயந்து விட்டு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று எண்ண வேண்டாம். ஆனால் சிறிய விவசாயிகள், பெரும்பாலான விவசாயிகள் இப்படியெல்லாம் செய்தித்தாள்களில் வருகிறபோது அவர்களை அவர்கள் காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

வேறு ஒரு தலைவர் பேசினார். நாமக்கல்லில், தமிழ்நாட்டிலுள்ள எல்லா விவசாயிகளுக்கும் கடைசிப் பைசா கடன் தள்ளுபடியாகும் வரை எனக்கு ஓய்வே கிடையாது என்று பேசுகிறார். தமிழ்நாடு விவசாயிகள் அனைவருக்கும் மின்சாரம்



அவர்களுடைய மோட்டாருக்கு நேரடியாக மீட்டர் பொருத்தாமல் கொடுக்கவேண்டும் என்று கூறினார்கள். அதுமட்டுமல்ல, தமிழ்நாடு விவசாயச் சங்கத்தினர் கட்டண பாக்கியையோ அரசுக் கடன்களையோ திருப்பிசெலுத்தக்கூடாது என்று சொன்னார்கள் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் கடன் பாக்கிகளை வசூலிப்பதில் ஈடுபடுமானால் தமிழ்நாடு விவசாயச் சங்கம் தற்போதுள்ள தமிழக அரசை பதவியிலிருந்து தூக்கியெறிந்துவிடும் என்று பேசுகிறார்கள். ஆனால் தூக்கியெறிந்துவிடும் என்று தெளிவுடன் பயந்துவிடவில்லை. தூக்கியெறியும் என்று சொன்னவுடன் சாதாரண விவசாயிகள் என்ன எண்ணுவார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. அவர்களால் போடப்பட்ட சுவரொட்டிகள் போட்டோக்கள் எல்லாம் என்னிடம் வைத்திருக்கிறேன். இவைகளைப்பற்றியெல்லாம் நீண்ட நேரம் உங்களிடம் சொல்லாவிட்டாலும் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் விவசாயிகளைக் காப்பாற்றவேண்டும் அல்லது, அவர்களைக் காப்பாற்றுவதற்காக இன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது என்பதை உங்களிடம் சொல்லும் அதே நேரத்தில் அரசு மற்ற நிறுவனங்களுக்கு வருகிற பணத்தை அல்லது வரவேண்டிய பணத்தை வசூலிக்கிறபோது அரசாங்க அதிகாரிகள் மற்றவர்களைக் காப்பாற்றாவிட்டால் அவர்கள் வசூல் செய்ய போகமுடியாது, இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இங்கே பேசுகிறபோது இருக்கிற சட்டத்தை ஏன் பயன்படுத்தக் கூடாதா என்று கேட்டார்கள். இப்போதிருக்கிற சட்டத்தில் இந்தியன் பீனல் கோடில் 124 (4) (எ) என்று கருதுகிறேன், வரி கொடுக்காதே என்று யாராவது பொது மக்களைத் தூண்டினால் அரசாங்கத்திற்கு விரோதமானது அல்லது பங்கம் விளைவிக்கக் கூடிய செயல் என்று தற்போதுள்ள இந்திய குற்றவியல் சட்டத்தில் பிரிவு 124 (எ) படி தண்டனை வழங்க இயலாது என்று நீதிமன்றம் இதற்கு முன்னாலே சொல்லியிருக்கிறது. சொல்லியிருப்பது மட்டுமல்ல. இன்றைக்கு இந்தச் சட்டத்தை நாம் கொண்டுவருகிறபோது கத்தியைச் சொன்னார்கள், அரிவாளைச் சொன்னார்கள். கத்தி பயங்கரமானதுதான். ஆனால் அது பயங்கரமானது என்பதற்காக கத்தியை தூக்கி எறிவதில்லை. துப்பாக்கியால் சுட்டால் ஆள் இறந்துவிடுவான்: ஆனால் துப்பாக்கி இல்லாமல் இருந்துவிடுவதில்லை. துப்பாக்கியும் இருக்கும் கத்தியும் இருக்கும். ஆனால் தேவைப்படும்போது, அதைப் பயன்படுத்துவது என்றால் அதை யார் பயன்படுத்துகிறார்கள். எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத்தான் எண்ணி இன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. கத்தி இருக்கத்தான் செய்கிறது. சட்டமும் இருக்கத்தான் செய்கிறது. துப்பாக்கியும் இருக்கிறது நாட்டில். எடுத்தவுடனே நாம் துப்பாக்கியை எடுத்துச் சுடுவதில்லை. ஆனால் இன்றிருக்கிற அரசு விவசாயிகளுக்கு,

[திரு எஸ். டி. சோமசுந்தரம்] [1981 பிப்ரவரி 7

ஏழை எளியவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற அரசாங்கம் என்
பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் காரணமாகத்தான்
நேற்று தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள்
போகிறபோது 42 கோடி என்பது 73 கோடியாக ரூபாய்க்கு போய்க்
கொண்டிருக்கிறது, இன்னும் எவ்வளவோ நன்மைகளை செய்
கிறோம் என்று சொன்னார்கள். இவைகளை எல்லாம் எண்
ணிப் பார்க்கிறபோது நன்மைகள் எல்லாம் செய்து கொண்டிருக்
கிற அரசு ஏன் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறது என்
றால் யாரைப் பாதுகாப்பதற்கு என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும். யாரையும் எடுத்த உடனே தண்டித்துவிட
முடியாது. ஆனால் இருக்கிற சட்டத்தில் குற்றவாளிகள் என்று
நிரூபிக்கிற பொறுப்பு சட்டத்தைக் கொண்டுவருகிறவர்களுக்கு,
அரசுக்கு இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரி
யும். ஆகவே விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற சட்
டம் தான் இது என்பதை உங்களுக்கெல்லாம் தெரிவித்து,
இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[பிற்பகல் 1—50].

திரு. கு. பா. பழனியப்பன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லா
ததால் அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன்
திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய தீர்மானம் பேரவை
யின் முடிவிற்கு விடப்பெற்றது, தோல்வியுற்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :பேரவை முன்னுள்ள கேள்வி.
''வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடு
மாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981-ஆம்
ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்
வடிவு எண். 11/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற
வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று. சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப் பெற்றது.

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி—''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக
ஆக்கப் பெறவேண்டும்.''



1981 பிப்ரவரி] 7

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே,
நான் கீழ்க்கண்ட திருத்தங்களை மொழிகிறேன்—

பிரிவு 3—''அடையாளங்கள் மூலமாகவோ, பார்வைக்குப்
புலப்படுகிற முறைகளிலோ, மற்றபடியோ'' என்ற வார்த்தை
களை நீக்கிவிடவும்.

பிரிவு 3 (a) (1)— அரசுக்கு என்ற வார்த்தைக்குப் பின் வரு
கிற, ''யாதொரு உள்ளாட்சி மன்றத்திற்கு'' என்ற வார்த்தை
களை நீக்கிவிடவும்.

பிரிவு 3 (?) (1)-ல், ''அல்லது வேளாண்மை நிலத்தின் மீதான
குத்தகைத் தொகை அல்லது அந்த குத்தகைத் தொகையுடன்
வசூலிக்கத்தக்க யாதொரு தொகையைச் செலுத்துவதை மறுக்கு
மாறு அல்லது தள்ளிப் போடுமாறு'' என்ற வார்த்தைகளை
நீக்கிவிடவும்.

பிரிவு 3 (B) (b) ஐந்தாண்டு வரை கடுங்காவல் தண்டனை
யும் ''ஐயாயிரம் ரூபாய் வரை அபராத தண்டனையும்'' என்
பதற்குப் பதிலாக, ''ஐந்நூறு ரூபாய் வரை அபராதம்'' என்று
திருத்தி அமைக்கவும்; அதற்குப் பின் ''ஆனால்'' என்ற வார்த்தை
யிலிருந்து ''இருக்கக்கூடாது'' என்ற வார்த்தை வரை நீக்கி
விடவும்.

பிரிவு 3 முழுவதிலும் ''அல்லது தள்ளிப் போடுமாறு'' என்ற
வார்த்தைகள் வரும் இடங்களில் எல்லாம் மேற்படி வார்த்தை
களை நீக்கவும்.

பிரிவு (3) B (b)-க்கு பிறகு (c) என்ற பிரிவாக பின்வரு
வதைச் சேர்க்கவும்.

''ஆயினும் இச்சட்டத்தின்கீழ் வழக்கு தொடரப்படுவதற்கு
முன்னால் ஒவ்வொரு நேர்விலும் மாநில அரசின் முன் அனுமதி
பெறப்பட வேண்டும்.

திருத்தங்கள் முறைப்படி வழிமொழியப் பெற்றன.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி
யுற்றன.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர்களின் திருத்தம் பேரவையின் 100 (2) விதியின்கீழ் தள்ளுபடி செய்யப்படுகிறது.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, இலாகாவிலிருந்து எனக்கு ஒன்றும் தகவல் அப்படிக் கொடுக்கப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ' An amendment may not be moved which has merely the effect of a negative vote "
என்று விதி இருக்கிறது.

பிரிவு 4 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 5 முதல் 7 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, '' நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை ''

வரி செலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1981) நிறைவேற்றப் பெற வேண்டும்'' என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றது.

திருவாளர்கள் என். சங்கரய்யா, சோ. அழகர்சாமி வி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு கோரினர்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று வாக்குகள் எண்ணிக்கணிக்கப் பெற்றன. (மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

| | | |
|---|---|---|
| ஆதரித்தோர் | .. .. | 100 |
| எதிர்த்தோர் | .. .. | 48 |
| நடுநிலை வகித்தோர் | .. .. | எவருமில்லை. |



தீர்மானத்திற்கு ஆதரவாக 52 வாக்குகள் அதிகமாகக் கிடைத்துள்ளதால் தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. சட்ட முன்வடிவு நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது.

[பிற்பகல் 2-00]

ஆதரித்தோர்.

1. திரு. இரா. மணிமாறன்
2. திரு. பி. எச். பாண்டியன்
3. திரு. சி. வே. வேலப்பன்
4. திரு. வி. வி. சுவாமிநாதன்
5. திரு. பி. முசிறிப்புத்தன்
6. திரு. ச. அங்குசாமி
7. திரு. கே. எம். அப்துல்ரசாக்
8. திரு. எஸ். அரங்கநாதன்
9. திரு. இரா. அருணாசலம்
10. திரு. தி. அன்பழகன்
11. திரு. மே. அ. இராசகுமார்
12. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
13. திரு. த. இராமசாமி
14. திரு. இ. இராமசுப்பிரமணியம்
15. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
16. திரு. எஸ். டி. உகம்சந்த்
17. திரு. கே. ஆர். கணபதி
18. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.
19. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
20. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
21. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
22. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்

ஆதரித்தோர்—தொடர்ச்சி

23. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
24. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி
25. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்
26. திரு. இ. கணேசன்
27. திரு. சி. கணேசன்
28. திரு. கா. வே. கந்தசாமி
29. திரு. பி. கந்தசாமி
30. திரு. சோ. கலிதீர்த்தான்
31. திரு. பெ. கலியமூர்த்தி
32. திரு. அ. கலையரசன்
33. திரு. கா. கோ. கிருஷ்ணசாமி
34. திரு. சா. கிருஷ்ணமூர்த்தி
35. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
36. திரு. என். குப்புசாமி
37. திரு. கே. குப்புசாமி
38. திரு. செ. குப்புசாமி
39. திரு. ப. குருசாமி
40. திரு. எம். குருசாமி என்கிற அண்ணாதாசன்
41. திரு. சி. கோபால்
42. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
43. திரு. எம். ஆர். கோவேந்தன்
44. திரு. கோவைத்தம்பி
45. திரு. ஆர். சக்கரபாணி
46. திரு. இரா. சண்முகம்
47. திரு. ஏ. சி. சண்முகம்
48. திரு. சீ. சிவப்பிரகாசம்
49. திரு. மு. சிவபெருமாள்



ஆதரித்தோர்—தொடர்ச்சி

50. திரு. என். சின்னசாமி
51. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
52. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
53. திரு. க. இரா. சின்னராசு
54. திரு. எம். சின்னராஜ்
55. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
56. திரு. மா. சுப்பிரமணியன்
57. செல்வி வி. விசயலட்சுமி
58. திரு. ஜி. கே. சுப்பிரமணியன்
59. திரு. கு. அ. செங்கோட்டையன்
60. திரு. செ. செம்மலை
61. திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி
62. திரு. ஏ. எம். சேதுராமன்
63. திரு. கே. சௌந்திரராசன்
64. திரு. ஏ. தங்கராசு
65. திரு. ஆர். தவசி
66. திரு. ப. தனபால்
67. திரு. இரா. தாமரைக்கனி
68. திரு. பெ. திருமாறன்
69. திரு. திருமான்
70. திரு. கே. உச்சி
71. திரு. பி. துரைராஜ்
72. திரு. கே. பி. நாச்சிமுத்து
73. திரு. பி. ஜி. நாராயணன்
74. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்
75. திரு. சு. பழனிசாமி
76. திரு. ச. பாலகிருஷ்ணன்

ஆதரித்தோர்—தொடர்ச்சி

77. திரு. வி. பாலகிருஷ்ணன்
78. திரு. க. பாலசுப்பிரமணியன்
79. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
80. திரு. எம். பிச்சை.
81. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
82. திரு. ஏ. பெரியசாமி
83. திரு. என். பெருமாள்
84. திரு. எம். எஸ். மாணிக்கம்
85. திரு. த. மாரிமுத்து
86. திரு. சு. முத்துகிருஷ்ணன்.
87. திரு. இரா. முத்தையா
88. திரு. இரா. சா. முனிரத்தினம்
89. திரு. ஜி. மூர்த்தி
90. திரு. எம். கே. ராஜமாணிக்கம்
91. திரு. மி. வின்சென்ட்
92. திரு. என். விஜயபாலன்
93. திரு. த. வீராசாமி
94. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
95. திரு. ஆ. வெள்ளைச்சாமி
96. திரு. க. ரங்கசாமி
97. திரு. எஸ். ஜகத்ரட்சகன்
98. திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்
99. திரு. வே. இரா. ஜெயராமன்
100. திரு. மு. ஜான் வின்சென்ட்

எதிர்த்தோர்.

1. திரு. சோ. அழகர்சாமி
2. திரு. இரா. கருப்பையா
3. திரு. பொ. உத்திராபதி
4. திரு. பொ. விஜயராகவன்
5. திரு. ஏ. சாகுல் ஹமீது
6. திரு. தி. கா. நல்லப்பன்
7. திரு. எஸ். என். இராமசாமி



எதிர்த்தோர்—தொடர்ச்சி.

8. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
9. திரு. என். பழனிவேல்
10. திரு. டி. மணி
11. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
12. திரு. ஏ. டி. கருப்பையா
13. திரு. கே. நாராயணசாமி
14. திரு. மு. அப்பாதுரை
15. திரு. ப. தீர்த்தராமன்
16. டாக்டர் மு. கருணாநிதி
17. திரு. க. அன்பழகன்
18. திரு. நா. சுந்தரராஜ்
19. திரு. என். சங்கரய்யா
20. திரு. ரா. உமாநாத்
21. திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்
22. திரு. எல். இளையபெருமாள்
23. திரு. கு. ரமணி
24. திரு. என். வரதராஜன்
25. திரு. ரா. கிருஷ்ணன்
26. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரா[illegible]
27. திரு. இல. பலராமன்
28. திரு. [illegible] ஆர். சுந்தரம்
29. திரு. எம். செல்லமுத்து
30. திரு. ரா. பெரியசாமி
31. திருமதி தா. இராசாம்பாள்
32. திரு. வே. இராஜசேகரன்
33. திரு. என். முத்துவேல்
34. திரு. கே. கல்லன்
35. திரு. பம்மல் நல்லதம்பி
36. திரு. எஸ். சிவராமன்
37. திரு. பாபு ஜனார்த்தனன்
38. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி
39. திரு. ஜே. எஸ். இராசு
40. திரு. பெ. சு. திருவேங்கடம்

எதிர்த்தோர்—தொடர்ச்சி. [1981 பிப்ரவரி 7

41. திரு. துரை முருகன்
42. திரு. அ. செல்வராசன்
43. திரு. அ. ரகுமான்கான்
44. திரு. ஏ. டி. குலசேகர்
45. திரு. து. புருஷோத்தமன்
46. திரு. ப. பொன்னுரங்கம்
47. திரு. மு. அரங்கநாதன்
48. திரு. மு. ப. முனுசாமி

நடுநிலை வகித்தோர் எவருமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9—2—1981 அன்று காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—14 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

195. பருத்தியைப் பொறுத்தவரையில், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர், செங்கம், திருவண்ணாமலை, போளூர் ஆகிய வட்டங்களை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 5-11-1980ம் தேதியிடப்பெற்ற 2175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

196. பென்னாகரம் அங்காடிக்கு அறிக்கையிடப் பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பதற்கு என்று தருமபுரி அங்காடியின் அறிக்கையிடப்பட்ட பகுதியிலிருந்து 126 கிராமங்களை நீக்குவது குறித்து, வேளாண்மைத் துறையின் 27-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2276 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



197. பொச்சம்பள்ளி அங்காடிக்கு அறிக்கையிடப்பெற்ற அங்காடிப் பகுதியாக சில கிராமங்களை அறிவிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 28-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2286 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

36. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கால் நடை நோய்கள் (திருத்த) சட்டமுன் வடிவின் நகலும், இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 14/1981).

37. 1974–75, மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை.

JD
V 2 11, 3) (481)
N 81-113 1
128171